ஓ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

214

சைவ சமயாசாரியர் மூவர்

அருளிச்செய்த

தேவார அடங்கன்முறை

(பண் அடைவு)

தென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியரும்

'சிந்தாந்தம்' பத்திராசிரியருமாயிய

திருவாளர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்

அவர்களால்

பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து

செப்பஞ்செய்து,

அமரம்பேடு

இரங்கசாமி முதலியார் அண்டு சன்ஸ்

பூம்கள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

விலை] 1928 [ரூபா 12

சிவமயம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

பதிக அட்டவணை

(முதற்றிருமுறை.)

பதிகப்பெயர்	பக்கம்
பண்-நட்டபாடை.	
திருப்பிரமபுரம்	1
திருப்புகலூர்	2
திருவலிதாயம்	4
ஸ்ரீபுகலியுங்-திருவீழிமிழலையும்விஞ்வுரை	5
திருக்காட்டுப்பள்ளி	6
திரும்முருகலுங்-திருச்செங்காட்டங்குடியும் விஞ்வுரை	8
திருஞ்ளாறுங்-திருஆலவாயும் விஞ்வுரை	9
திருஆவூர்ப்பசுபதீச்சரம்	11
திருவேணுபுரம்	12
திருஅண்ணமலை	14
திருவீழிமிழலை	15
திருமுதுகுன்றம்	16
திருவியலூர்	18
திருக்கொடுங்குன்றம்	19
திருநெய்த்தானம்	21
திருப்புன்னமங்கைதிருஆலந்துறை	22
திருஇடும்பாவனம்	24
திருநின்றியூர்	25
திருக்கழுமலம்-திருவிராகம்	26
திருவீழிமிழலை-திருவிராகம்	28
திருச்சிவபுரம்-திருவிராகம்	29
திருமறைக்காடு-திருவிராகம்	31
பண்-தக்கராகம்.	
திருக்கோலக்கா	32
கோழி	33
திருச்செம்பொன்பள்ளி	35
திருப்புத்தூர்	36
திருப்பன்கூர்	38
திருச்சோற்றுத்துறை	39
திருநறையூர்ச்சித்தீச்சரம்	40
ஸ்ரீபுகலி	42
திருக்குரங்கணின்முட்டம்	43
திருஇடைமருது	45
திருஅன்பிலாலந்துறை	46
சோழி	47
திருவீழிமிழலை	48
திருஐயாறு	49
திருப்பனையூர்	50
திருமயிலாடுதுறை	51
திருவேட்களம்	52
திருவாழ்கொளிபுத்தூர்	53
திருப்பாம்புரம்	55
திருப்பேணுபெருந்துறை	56
திருக்கற்குடி	58
திருப்பாச்சிலாச்சிராமம்-முயலகன் நீர்த்தது	59
திருப்பழையனூர்-திருஆலங்காடு	61
திருஅதிகைவீரட்டானம்	62
பண்-பழந்தக்கராகம்.	
திருச்சிரபுரம்	64
திருச்சேய்ஞலூர்	65
திருஞ்ளாறு	66
திருவலிவலம்	68
திருச்சோபுரம்	69
திருகெடுகளம்	71
திருமுதுகுன்றம்	72
திருஓத்தூராண்மை பெண்மையானது	74
திருமாற்பேறு	75
திருப்பாற்றுறை	77
திருவேற்காடு	77
திருக்கச்சிஏகம்	77
திருத்தூங்கானைமாடம்	78
திருத்தோணிபுரம்	80
திருச்செங்காட்டங்குடி	81
திருக்கோளிலி	82
பண்-தக்கேசி.	
திருப்பிரமபுரம்-பல்பெயர்ப்பத்து	84
திருப்பூவணம்	85
காலிரிப்பூம்பட்டினத்துப் பல்லவ னீச்சரம்	87
திருச்சண்பைநகர்	88
திருப்பழனம்	89
ஸ்ரீகயிலாயம்	91
திருஅண்ணமலை	92
திருஈங்கோய்மலை	93
திருநறையூர்ச்சித்தீச்சரம்	95

பதிகப்பெயர்	பக்கம்
திருக்குடந்தைக்காரோணம்	96
திருக்காஞ்ஞர்	97
திருப்புறவம்	99
பண்-குறிஞ்சி.	
திருவெங்குரு	100
திருஇலம்பையங்கோட்டூர்	102
திருஅச்சிறுபாக்கம்	103
திருஇடைச்சுரம்	105
திருக்கழுமலம்	107
கோயில்	108
கோழி	110
திருவீழிமிழலை	110
திருஅம்பர்மாகாளம்	112
திருக்கடவூரைக்காரோணம்	113
திருநல்லம்	115
திருநல்லூர்	116
திருவடுகூர்	117
திருஆப்பனூர்	119
திருஏருக்கத்தம்புலியூர்	120
திருவிருக்குக்குறள்.	
திருப்பிரமபுரம்	122
திருஆரூர்	122
திருவீழிமிழலை	123
திருமுதுகுன்றம்	124
திருஆலவாய்	125
திருஇடைமருது	126
திருஅன்னியூர்	126
திருப்புறவம்	127
திருச்சிராப்பள்ளி	129
திருக்குற்றாலம்	130
திருப்பரங்குன்றம்	131
திருக்கண்ணார்கோயில்	133
கோழி	134
திருக்கழுக்குன்றம்	136
ஸ்ரீபுகலி	137

பதிகப்பெயர்	பக்கம்
திருஆரூர்	138
திருஊறல்	140
திருக்கொடிமாடச்செங்குன்றூர்	141
திருப்பாதாளீச்சுரம்	142
திருச்சிரபுரம்	144
திருவிடைமருதூர்	144
திருக்கடைமுடி	146
திருச்சிவபுரம்	147
திருவல்லம்	148
திருமாற்பேறு	149
திருஇராமனதீச்சரம்	151
திருநீலகண்டம்	152
திருப்பிரமபுரம்	153
திருப்பரப்பதம்	155
திருக்கள்ளில்	156
திருவிராகம்.	
திருவையாறு	158
திருவிடைமருதூர்	159
திருவிடைமருதூர்	160
திருவல்லிவலம்	162
திருவீழிமிழலை	163
திருச்சிவபுரம்	164
திருக்கழுமலம்-திருத்தாளச்சத்தி	166
கோழி-திருஏகபாதம்	168
திருவெழுகூற்றிருக்கை	169
பண்-மேகராகக்குறிஞ்சி.	
திருக்கழுமலம்	170
திருவையாறு	172
திருமுதுகுன்றம்	173
திருவீழிமிழலை	174
திருவேகம்பம்	176
திருப்பறியலூர்-வீரட்டம்	177
திருப்பராயத்துறை	178
பண்-யாழ்மூரி.	
திருத்தருமபுரம்	179



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி

(இரண்டாந்திருமுறை.)

பதிகப்பெயர்	பக்கம்
பண்-இந்தளம்.	
திருப்பூந்தராய்	182
திருவலஞ்சுழி	183
திருத்தெளிச்சேரி	184
திருவான்மியூர்	186
திருவானைகாப்பதம்	187
திருவையாறு	189
திருவாஞ்சியம்	190
திருச்சிக்கல்	191
திருமழபாடி	193
திருமயிலைக்குடி	194
கோழி	196
திருவேணுபம்பம்	197
திருக்கோழம்பம்	198
திருவெண்ணி	200
திருக்கானாட்டுமுள்ளூர்	201
திருமணஞ்சேரி	202
திருவேணுபுரம்	204
திருமருகல்-விடங்கநீர்த்த திருப்பதிகம்	205
திருவெஃகா	206
திருஆரூர்த்தூங்கானை மாடம்	207
திருத்துருத்திப்பாலை	209
திருக்குடவாயில்	210
திருவானைக்கா	211
திருநாகேச்சரம்	213
திருப்புகலி	214
திருவெல்வாயில்	215
திருஇராலீச்சுரப்பதம்	216
திருக்கழுக்குன்றம்-திருஆளிலை	217
திருப்புகலி-திருவிராகம்	218
திருப்பூம்பயம்-திருவிராகம்	219
திருக்கருப்பறியலூர்-திருவிராகம்	220
திருவையாறு-திருவிராகம்	222
திருநள்ளாறு-திருவிராகம்	223
திருப்பழனம்-திருவிராகம்	224
திருக்குரங்காடுதுறை	226
திருஇரும்பூளை-விளவரை	227
திருமறைக்காடு-கதவடைக்கப்பாடியது	228
திருச்சாய்க்காடு	230
திருவேட்டக்குடி	231
பண்-சீகாமரம்.	
திருப்பிரமபுரம்	232
திருச்சாய்க்காடு	234
திருக்கடவூர்	235
திருப்புள்ளிருக்குவேளூர்	236
திருஆமாத்தூர்	238
திருக்கைச்சினம்	239
திருநாலூர்த்திருமயானம்	240
திருமயிலாப்பூர்-பூம்பாவைத்திருப் பதிகம்	242
திருவெண்காடு	243
கோழி	245
திருஆமாத்தூர்	246
திருக்களர்	247
திருக்கோட்டாறு	249
திருப்புறவார்-பனங்காட்டூர்	250
பண்-காந்தாரம்.	
ஸ்ரீபுகலி	251
திருத்தலைச்சங்காடு	253
திருவிடைமருது	254
திருகல்லூர்	255
திருக்குடவாயில்	257
கோழி	258
திருப்பாசூர்	259
திருவெண்காடு	261
திருமீயச்சூர்	262
அரிசிற்கரைத்திருப்புத்தூர்	263
திருமுதுகுன்றம்	265
திருப்பிரமபுரம்	266
திருவாலவாய்-திருநீற்றுப்பதிகம்	267
திருப்பெரும்புலியூர்	269
திருக்கடம்பூர்	270
திருப்பாண்டிக்கொடுமுடி	271
திருச்சக்கரமாற்று	273
திருக்குரும்பலா	274
திருநணு	276
திருச்சக்கரமாற்று	277
திருக்கோமூத்தீரி	278
கோழி	280
திருஅகத்தியான்பள்ளி	281
திருஅறையணிநல்லூர்	283
திருவீழிமிழலை	284
திருவாரூர்	285
திருக்கடவூர்மயானம்	287
திருவேணுபுரம்	288
திருத்தேவூர்	289
பண்-பியந்தைக்காந்தாரம்.	
திருக்கொச்சைவயம்	291

பதிகப்பெயர்	பக்கம்
திருகனிபள்ளி-பாலெகெய்தல் பாடியருளியது	292
வேயுறுதோளி	293
திருநாரையூர்	295
திருநறையூர்	296
திருமுல்லைவாயில்	297
திருக்கொச்சைவயம்	299
திருநெல்வாயில்திருஅரத்துறை	300
திருமறைக்காடு	301
திருப்புகலூர்-வர்த்தமானீச்சரம்	303
திருத்தெக்கூர்	304
திருவாழ்கொளிபுத்தூர்	305
திருஅரைசிலி	307
ஸ்ரீகோழி	308
பண்-நட்டராகம்.	
ஸ்ரீகோழி-திருவிராகம்	309
திருத்தருத்தி-திருவிராகம்	311
திருக்கோடிகா-திருவிராகம்	312
திருக்கோவலூர்வீரட்டம்-திருவிராகம்	313
திருவாரூர்-திருவிராகம்	315
திருச்சிரபுரம்	316

பதிகப்பெயர்	பக்கம்
திருஅம்பர்த்திருமாகாளம்	317
திருக்கடிக்குளம்	319
திருக்கீழ்வேளூர்	320
திருவலஞ்சுழி	322
திருக்கேதீச்சரம்	323
திருவிற்குடிவீரட்டானம்	324
திருக்கோட்டூர்	326
திருமாந்துறை	327
திருவாய்மூர்	328
திருஆடானை	330
பண்-செவ்வழி.	
சீகாழி	331
திருக்கேதாரம்	332
திருப்புகலூர்	333
திருக்கடவூரைக்காரோணம்	335
திருஇரும்பைமாகாளம்	336
திருத்திலதைப்பதி-மதிமுத்தம்	337
திருநாகேச்சரம்	339
திருமூக்கீச்சரம்	340
திருப்பாதிரிப்புலியூர்	341
ஸ்ரீபுகலி	343

Sarpha Ganapathi

(மூன்றாந்திருமுறை.)

பதிகப்பெயர்	பக்கம்
பண்-காந்தாரபஞ்சமம்.	
கோயில்	345
திருப்பூந்தராய்	346
ஸ்ரீபுகலி-நாலடிமேல்வைப்பு	347
திருவாடுதுறை-நாலடிமேல்வைப்பு	348
திருப்பூந்தராய்-ஈரடிமேல்வைப்பு	350
திருக்கொள்ளம்பூதூர்-ஈரடிமேல் வைப்பு	351
திருப்புகலி	352
திருக்கடவூர்த்திருவீரட்டம்	354
திருவீழிமிழலை	355
திருவிராமேச்சரம்	356
திருப்புன்வாயில்	358
திருக்கோட்டாறு	359
திருப்பூந்தராய்	360
திருப்பைஞ்ஞீலி	362
திருவெண்காடு	363
திருக்கொள்ளிக்காடு	364
திருவிசயமங்கை	366
திருவைகன்மாடக்கோயில்	367
திரு அம்பர்ப்பெருந்திருக்கோயில்	368
திருப்பூவணம்	370
திருக்ருக்குடி	371
திருப்பஞ்சாக்கரப்பதிகம்	373
திருவிற்கோலம்	374
பண்-கொல்லி.	
திருக்கழுமலம்	375
திருந்துதேவன்குடி	377
திருக்கானப்பேர்	378
திருச்சக்கரப்பள்ளி	379
திருமழபாடி	381
மேலைத்திருக்காட்டுப்பள்ளி	382
திருஅரதைப்பெரும்பாழி	384
திருமயேந்திரப்பள்ளி	385
திருவடகம்	386
திருஉசாத்தானம்	388
திருமுதுகுன்றம்	389
திருத்தென்குடித்திட்டை	390
திருக்காளத்தி	392
திருப்பிரமபுரம்	393
திருக்கண்டியூர்-திருவீரட்டம்	394
திருவாலவாய்	395
தனித்திருவிருக்குக்குறள்	396
திருவேகம்பம்திருவிருக்குக்குறள்	397
திருச்சிற்றேமம்	398

பதிகப்பெயர்	பக்கம்
பண்-கௌசிகம்.	
சோழி	399
திருக்கழிப்பாலை	400
திருவாரூர்	402
திருக்குருகாவூர்	403
திருவாலவாய்	404
திருமழபாடி	406
நமச்சிவாயத்திருப்பதிகம்	407
திருத்தண்டலைநீணெறி	408
திருவாலவாய்	409
திருவாலவாய்-திருவிராகம்	411
திருவானைக்கா-திருவிராகம்	412
திருப்பாசுரம்	413
திருவான்மியூர்	415
பண்-பஞ்சமம்.	
திருப்பிரமபுரம்	416
திருவொற்றியூர்	417
திருச்சாத்தமங்கை	419
திருக்குடமூக்கு	420
திருவக்கரை	421
திருவெண்ணெை	423
திருப்பனந்தாள்	424
திருச்செங்காட்டங்குடி	426
திருப்பெருவேளூர்	427
திருக்கச்சிநெறிக்காரைக்காடு	428
திருவேட்டக்குடி	430
பண்-சாதாரி.	
திருப்பிரமபுரம்-வழிமொழிதிருவிராகம்	431
ஸ்ரீகயிலாயம்-திருவிராகம்	433
திருக்காளத்தி-திருவிராகம்	434
திருமயிலாடுதுறை-திருவிராகம்	435
திருவைகா-திருவிராகம்	437
திருமாகறல்-திருவிராகம்	438
திருப்பட்டீச்சரம்-திருவிராகம்	439
திருத்தேவூர்-திருவிராகம்	441
திருச்சண்பைநகர்-திருவிராகம்	442
திருவேதவனம்-திருவிராகம்	443
திருமாணிகுழி-திருவிராகம்	445
திருவேதிகுடி-திருவிராகம்	446
திருக்கோகரணம்-திருவிராகம்	447
திருவீழிமிழலை-திருவிராகம்	449
திருத்தோணிபுரம்-திருவிராகம்	450
திருஅவளிவணல்லூர்-திருவிராகம்	451
திருநல்லூர்-திருவிராகம்	453
திருப்புறவம்-திருவிராகம்	454

பதிகப்பெயர்	பக்கம்
திருவீழிமிழலை-திருவிராகம்	456
திருச்சேறை-திருவிராகம்	457
திருஎள்ளாறு-திருவிராகம்	458
திருவிளமர்-திருவிராகம்	460
திருக்கொச்சைவயம்	461
திருத்தருத்தியுந்-திருவேள்விக்குடியும்	463
திருவடகுரங்காடுதுறை	464
திருநெல்வேலி	465
திருஅம்பர்மாகாளம்	467
திருவெங்குருத்திருமுக்கால்	468
திருஇன்னம்பர்-திருமுக்கால்	469
திருநெல்லெண்ணெய்-திருமுக்கால்	471
திருச்சிறுகுடி-திருமுக்கால்	472
திருவீழிமிழலை-திருமுக்கால்	473
திருமுதுகுன்றம்-திருமுக்கால்	475
பண்-பழம்பஞ்சுரம்.	
திருத்தோணிபுரம்	476
திருஇராமேச்சரம்	477
திருநாரையூர்	478
திருவலம்புரம்	479
திருப்பருதியமம்	481
திருக்கலிக்காமூர்	482
திருவலஞ்சுழி	484

பதிகப்பெயர்	பக்கம்
திருநாரையூர்	485
திருவாலவாய் நாலடிமேல்வைப்பு	486
திருக்கயிலாயமும்-திருவாரூனைக்காவுந் திருமயேந்திரமும்-திருவாரூருவ்-கூடச்சதுக்கம்	488
திருப்பிரமபுரம்-ஈரடி	489
திருவீழிமிழலை-ஈரடி	490
திருப்பல்லவனீச்சரம்-ஈரடி	491
திருக்கழுமலம்-திருஇயமகம்	492
திருவேகம்பம்-திருஇயமகம்	493
திருவாலவாய்-திருஇயமகம்	494
திருவீழிமிழலை-திருஇயமகம்	496
ஸ்ரீகாழி-திருமாலைமாற்று	497
பண்-புறநீர்மை.	
திருக்கழுமலம்	498
திருவீழிமிழலை	499
திருவாலவாய்	501
திருப்பந்தணநல்லூர்	502
திருஓமாம்புலியூர்	503
திருக்கோணமாமலை	504
பண்-அந்தாளிக்குறிஞ்சி.	
திருவெள்ளடை	505
திருநல்லூர்ப்பெருமணம்	506

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமுறை வரலாறு

புண்ணியபூமியாகிய பரதகண்டத்தில் சோழமண்டலத்திலே, பிறக்க முத்திதருந் தலமாகிய திருவாரூரின்கண் கல்வி அறிவு ஒழுக்கத்தினும், குருலிங்க சங்கமபத்தியினுஞ்சிறந்த அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் பரம கருணைநிதியாகிய தியாகேசருடைய திருவருளினாலே வைதிகமார்க்க முஞ் சைவமார்க்கமும் தழைத்தோங்கச் செங்கோல் நடாத்தி வருங்காலத்தில், அவர் சபைக்கு எழுந்தருளிவருஞ் சிவனடியார்கள், மூவர்தேவாரத் திருப்பதிகங்களுள், ஒவ்வொன்று ஒதக்கேட்டு, ஆனந்தபரவசராய் அத்தேவாரத்திருமுறையை எங்குந்தேடி, அகப்படாமையால் மனத்தயரம் கொண்டிருந்தனர்.

அப்போது, திருநாரையூரென்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசைசெய்யும் ஆதிசைவரொருநாள் ஊருக்குப்போக, அவர் சற்புத்திரராகிய நம்பியாண்டார்நம்பி என்னும் சிறுபிள்ளை பொல்லாப்பிள்ளையாருக்கு அபிஷேக முதலியனவெல்லாஞ் செய்து, நைவேத்தியத்தை அவர் திருமுன் வைத்து, திருவமுது செய்தருளும்படி பிரார்த்தித்தார். பொல்லாப்பிள்ளையார் திருவமுது செய்யாதிருப்பக்கண்டு, நம்பியாண்டார்நம்பி மனம் வெம்பி, "அடியேன் நிவேதித்ததைத் திருவமுது செய்யாததென்னை" என்று சொல்லிக்கொண்டு, தமது தலையைக் கல்லிலே மோதப்புகுந்தார். உடனே பொல்லாப்பிள்ளையார் "நம்பி பொறு" என்று தடுத்து, அங்கைவேத்திய முழுதையுங் திருவமுது செய்தருளி அவருக்கு ஆசிரியராய் வேதமுதலிய கலைகளெல்லாவற்றையும் ஓதுவிக்க, நம்பியாண்டார்நம்பி மனமகிழ்ந்து நாடோறும் ஓதுவாராகி, அப்பிள்ளையார் மேலே "திருவிரட்டைமணிமாலை" பாடியருளினர்.

அதனைங்கதி அபயகுலசேகர சோழமகாராஜா கேள்வியுற்று மனமகிழ்ந்து, திருநாரையூரை யடைந்து, நம்பியாண்டார் நம்பியுடைய திருவடிகளை வணங்கி, சுவாமீ, இங்கு கொண்டுவந்திருக்கிற பழமார்க்க முதலியவற்றைப் பொல்லாப்பிள்ளையாருக்கு நிவேதித்தல்வேண்டும் என்று பிரார்த்திக்க, நம்பி, பொல்லாப்பிள்ளையாரை வணங்கி, அவைகளெல்லாவற்றையும் நாற்சுத்திசெய்து படைக்க, பொல்லாப்பிள்ளையார் தமது துதிக்கையை நீட்டி அவைகளெல்லாவற்றையுந் திருவமுது செய்தருளினர்.

அதுகண்ட சோழமகாராஜா மனமகிழ்ந்து, நம்பியாண்டார் நம்பியை வணங்கி, சுவாமி, கமயகுரவர் மூவர்கள் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய

தேவாரத்திருமுறையும், திருத்தொண்டர்களுடைய சரித்திரமும் பூவுலகத்தில் விளங்கல்வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார். உடனே நம்பியாண்டார்நம்பி திருவுளமகிழ்ந்து, திருக்கோயிலினுள்ளே புகுந்து, பொல்லாப் பிள்ளையாரை வணங்கி, தேவாரத்திருமுறைகள் இருக்குமிடத்தையும் திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் அடியேனுக்கு அருளிச்செய்தல் வேண்டும் என்று பிரார்த்திக்க, பிள்ளையார் சிதம்பரத்தில் கனகசபைக்குப் புறக்கடையின் பக்கத்து அறையினுள்ளே தேவாரத்திருமுறைகள் இருக்கின்றன என்று அருளிச்செய்து, திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் திருவாய்மலர்ந்தருளினர்.

நம்பியாண்டார் நம்பி அதைச் சோழமகாராஜாவிடத்து தெரிவித்து இருவரும் சிதம்பரத்தை யடைந்து, சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து, சபாநாயகரைத் தரிசித்து வணங்கினர்கள். நம்பியாண்டார்நம்பி சபாநாயகர் மீது "கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம்" பாடியருளினர். பின்பு சோழ மகாராஜா தில்லைவாழந்தணர்களை நோக்கி, பொல்லாப்பிள்ளையார் அருளிச்செய்ததைச் சொல்லித் தேவாரங்களை எடுத்தல்வேண்டும் என்றார். தில்லை வாழந்தணர்கள் அத்திருமுறைகளை வைத்தருளிய மூவர்களும் எழுந்தருளி வந்தால் அறைதிறக்கும் என்றார்கள். சோழமகாராஜா நடேசருக்கும், மூவருக்கும் அபிஷேகஞ்செய்வித்து மூவரைக் கனகசபையை வலஞ்செய்வித்துத் திருமுறைகள் இருக்கும் அறையினெதிரே கொணர்வித்து நிறுத்திக்கொண்டு, தில்லைவாழந்தணர்களை நோக்கி, சமயகுரவர்கள் மூவரும் எழுந்தருளி வந்தவிட்டார்கள். இனி அறையைத் திறக்கலாமே என்றார். தில்லைவாழந்தணர்கள் சோழமகாராஜாவுடைய புத்தியை வியந்து, அறையைத்திறக்க அதமதிசெய்தார்கள்.

சோழமகாராஜா சமயகுரவர் மூவருடைய கையடையாளமுடைய திருக்கதவைத்திறந்து, திருமுறைகளைப் புறத்திலே கொணர்வித்து, அவற்றுள் அளவில்லாத திருவேடுகள் பழுதாயிருக்கக்கண்டு, கண்ணீர்வாரச் சோகித்துநின்றார். அப்பொழுது எல்லாருங் கேட்கச் சிவபெருமானது திருவருளினாலே "தேவாரத் திருப்பதிகங்களிலே இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை மாத்திரம் வைத்துவிட்டு, மற்றவைகளைச் செல்லுமண் மூடச் செய்தோம்" என்று ஓரசரீரிவாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று. அது கேட்டலும், சோழமகாராஜா மனக்கவலை தீர்ந்து, திருவருளே வியந்து ஆடிப்பாடி, நம்பியாண்டார்நம்பியை வணங்கி, சுவாமி! தேவார முதலிய அருட்பாக்களெல்லாவற்றையும் திருமுறையாக வகுத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்.

நம்பியாண்டார்நம்பி அதற்குடன்பட்டு, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த

தேவாரத் திருப்பதிகங்களே ஒரு திருமுறையாகவும் ஆக ஏழு திருமுறைகளாக வகுத்தருளி, மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னு மிரண்டையும் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் முதலிய ஈயன்மார் ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பா முதலிய இருபத்தொன்பது திருப்பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலநாயனர் அருளிச்செய்த திருமந்திரத்தைப் பத்தாந்திருமுறையாகவும், திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரமுதலிய திவ்யப்பிரபந்தங்களைப் பதினொராந் திருமுறையாகவும் வகுத்தருளினர்.

இங்ஙனந் திருமுறைவகுப்பு முற்றியபின்பு, நம்பியாண்டார்நம்பி தமக்குப் பொல்லாப்பிள்ளையார் உபதேசித்தருளிய திருத்தொண்டத் தொகையை முதனூலாகக்கொண்டு, அறுபத்துமூன்று தனியடியாரும், ஒன்பது தொகையடியாருமாகிய திருத்தொண்டர்களுடைய திருத்தொண்டையும், அதனால் அவர்கள்பெற்ற பேற்றையும் கலித்துறைத் திருவந்தாதியாக அருளிச்செய்தார். பின்பு திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் மீது ஆறுபிரபந்தங்களும், திருநாவுக்கரசுநாயனர்மீது திருவேகாதசமாலையும் ஆகத் தாம்பாடியருளிய பத்துத் திவ்வியப்பிரபந்தங்களையும் சோழமகாராஜாவினுடைய வேண்டுகோளின்படி பதினொராந் திருமுறையில் சேர்த்தருளினர்.

பின் நம்பியாண்டார்நம்பியும், சோழமகாராஜாவுந் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு பெருமையாலே, திருவெருக்கத்தம்புலியூரை அடைந்து, திருக்கோயிலே வலஞ்செய்து சிவபெருமானை வணங்கி, தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவை அருளிச்செய்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது எல்லாருங்கேட்க ஆகாயத்தில் "அன்பர்களே! திருநீலகண்டப் பெரும்பாணர் மரபிலே பிறந்த பெண்ணெருத்திக்குப் பண்களை அருளிச்செய்தோம்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. உடனே நம்பியாண்டார்நம்பியும், சோழமகாராசாவும், அவளை அழைத்து, அவளிடத்தே பண்களைக் கேட்டு மனமகிழ்ந்தார்கள். அதன்பின் "இவளைக் கனகசபைக்குமுன் கொண்டுபோய்த் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுக்கக்கடவீர்கள்" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. அது கேட்டலும், நம்பியாண்டார்நம்பியும், சோழமகாராசாவும் அவ்வாறே அவளை அழைத்துக்கொண்டு சிதம்பரத்தை அடைந்து, கனகசபைக்குமுன் சென்று, தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுத்தார்கள்.

அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் பதினொரு திருமுறைகளையும் செப்பேடுசெய்து, தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்தனர்.

நம்பியாண்டார் நம்பியினாலும், திருமுறைகண்ட அபயகுலசேகர சோழமகாராஜாவினாலும் சைவத் திருநெறித் தமிழ்த்திருமுறை பதினொன்றும் தமிழ்நாடெங்கும் பரந்தன. அதனால் உயர்வொப்பிலாத சற்சமயமாகிய சைவசமயம் எங்கும் தழைத்தோங்கிற்று.

ஆதியில் உள்ள தேவாரத் திருப்பதிகத்தொகை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்			கசு000
திருநாவுக்கரசுநாயனர்			சுக000
சுந்தரமூர்த்திநாயனர்	...	...	ருஎ000
			ஆக க-லட்சத்து உ000.

இப்போது உள்ள தேவாரத் திருப்பதிகத்தொகை.

ஸ்தலப்பதிகம். பொதுப்பதிகம். இரண்டின்ரெகை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்	ருஎஅ	,எ	ருஅடி
திருநாவுக்கரசுநாயனர்	உஎச	ருஎ	ருகீக
சுந்தரமூர்த்திநாயனர்	கூசு	ச	க00
	எசஅ	சஅ	எகூசு

இத்தேவாரத் திருப்பதிகங்கள் எழுநூற்றுத் தொண்ணூற்றுமும் அடங்கிய திருமுறை அடங்கன்முறை எனப்படும்.

கல்வி அறிவு ஒழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலயமுனிவர் அவ்வடங்கன்முறையினது மகிமையையும், அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ்செய்யின் முத்திசித்திக்கு மென்பதனையும் அறிந்து, தாம் அப்படிப் பாராயணஞ்செய்ய ஆசைகொண்டார். அது நிறை வேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை அடைந்து, கனக சபையின்கண்ணே ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரை வணங்கி, தமதகருத்து முற்றுப்பெறும்பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அப்பொழுது சபாநாதருடைய திருவருளிலுலே, "சிவாலயமுனிவனே, நீ பொதியமலையிலிருக்கின்ற அகத்தியமுனிவனிடத்துப் போவாயாயின், உன் கருத்து நிறைவேறும்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அதுகேட்டு சிவாலயமுனிவர் மனமகிழ்ந்து, சபாநாதரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, பொதியமலையை அடைந்து, அகத்தியமகாமுனிவரைச் சிந்தித்து, மூன்றுவருஷகாலம் அருந்தவஞ்செய்தார். அகத்தியமகாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறை முழுதையும் அவருக்குப்போதித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களே எடுத்துத் தெரிட்டி, இவைகளே நாடோறும் பாராயணஞ் செய்பவர்கள் அடங்கன்முறை முழுதையும் பாராயணஞ்செய்பவர்களாவார்கள் என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். சிவாலயமுனிவர் அப்படியே அவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ் செய்திருந்து சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகளின் சரித்திரக் குறிப்பு.

க. இவர் கழுமலம், காழி, கொச்சைவயம், சண்பை, சிபுரம், தோணி புரம், பிரமபுரம், புகலி, புறவம், பூந்தராய், வெங்குரு, வேணுபுரம் என்னும் பன்னிரண்டு பெயர்களையுடைய சீர்காழிப்பதியில், பிராமணகுலத்தில் கவுணிய கோத்திரத்தில், திருவாதிரை நட்சத்திரத்தில் அவதரித்து கசு-வய தளவு இப்புவியின்கண் இருந்து ஓர் வைகாசிமாதத்தில் மூலநட்சத்திரத்தில் முத்தியடைந்தனர்.

உ. இவர் தகப்பனார் பெயர்:—சிவபாத விருதயர்.

ஊ. தாயார் பெயர்:—பகவதியார்.

சு. இவருடைய வேறு திருநாமங்களாக நூலிற் பயின்று வருமவை:—க-அருந்தமிழ்ஆகரர், உ-ஆளுடையபிள்ளையார், ஊ-கழுமலக்கோன், சு-கவுணியன், நி-கவுணியர்கோன், சூ-காழியர்கோன், எ-சண்பையர்கோன், அ-சிரபுரச்செம்மல், கூ-ஞானத்தலைவர், கஉ-ஞானபோனகர், கக-தோணிபுரத்தோன்றலார், கஉ-பரசமயகோளரி, கஊ-பாலறுவாயர், கசு-பிள்ளையார், கநி-புகலிவாணர், கசூ-பூந்தராய்வேந்தர், கஎ-முத்தமிழ்விரகர்.

நி. இவர்நடந்த அற்புதங்களாவன:—(க)சீர்காழியில் இவரது மூன்றுவது வயதில் இவருக்குப் பரமசிவனும், பார்வதிதேவியும் பிரசன்னமாகி ஞானப்பால் ஊட்டினர்கள். அதுமுதல் இவர் அநேக சிவஸ்தலங்களுக்குச் சென்று தேவாரப்பதிகங்கள் பாடியருளினர்.

(உ) திருக்கோலக்காவில் சிவபெருமான் இவருக்கு பொற்றாளம் கொடுத்தருளினர்.

(ஊ) திரு அரத்துறையில் சிவபெருமான் இவருக்கு முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களும் கொடுத்தருளினர்.

(சு) திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் என்னும் அரசனது புத்திரிக்குக் கண்டிருந்த முயலகன் என்னும் குமரகண்டவலியை இவர் பரமசிவத்தின்மேல் பதிகம்பாடி தீர்த்தருளினர்.

(நி) திருக்கொடிமாடச் செங்குன்றூரில் இவருடைய பரிஜனங்களுக்கும் அவ்வூரில் இருந்தவர்களுக்கும் கண்ட கனிர்ச்சுரத்தை சிவபெருமான் மேல் பதிகம்பாடி தீர்த்தருளினர்.

(சு) திருப்பட்டீச்சரத்தில் சிவபெருமான் இவருக்குச் சிவபூதங்களால் முத்துப்பந்தல் இடுவித்தனர்.

(எ) திருவாவடுதுறையில் இவரை இவர் தகப்பனாரான சிவபாத விருதயர் யாகஞ்செய்யப் பொருள்கேட்க, இவர் பரமசிவத்தைவேண்ட, பரம

சிவன் இவருக்கு எடுக்க எடுக்கக் குறையாத பொன்முடிச்சு ஒன்றைக் கொடுத்தருளினர்.

(அ) திருமருகலில் சர்ப்பத்தால் கடிக்கப்பெற்று இறந்த ஓர்வணிகனைப் பரமசிவத்தின்மேல் பதிகமோதி உயிர்ப்பித்தனர்.

(கூ) திருவீழிமிழலையில் பஞ்சகாலத்தால் யாவரும் வருந்த, சிவனடியார்கள் வருந்தாவண்ணம் இவருக்குப் பரமசிவன் பொருளுதவி செய்தருளினர்.

(கo) திருமறைக்காட்டில் வேதம் பூசித்து மூடிப்போன கதவைத் திறக்கவும் மூடவுமாய் இருக்கும்படி செய்தருளினர்.

(கக) மதுரையில் சமணமதம் அதிகரித்து அப்போதிருந்த அரசனுகிய கூன்பாண்டிய ராஜனும் அதை அநுசரிக்க அதுகண்ட ராஜபத்தினியாகிய மங்கையர்க்கரசியும், மந்திரியாகிய குலச்சிறைநாயனாரும் அரசனைத் திருத்தி மாறு இவரைவேண்டி வரவழைக்க இவர் மதுரைக்குச்சென்று ஒரு மடத்தில் தங்கினர். இதையறிந்த சமணர்களில் சிலர் இவர் மடத்தில் தீ இட அதுகண்ட இவர் இத்தீ அரசனைப்பற்றக் கடவது என்று சபித்தனர். அது அவ்வாறே அரசன் மேனியில் சுரரோயாய்மூள, அதைத்தீர்க்க சமணர்களுடைய மந்திரதந்திர அவுஷதங்களால் முடியாமற்போக அதைத் தீர்க்கும்படி அரசன் பத்தினியும், மந்திரியும் இவரைவேண்ட இவர்சென்று திருநீற்றுப்பதிகமோதி அவ்வியாதியைத் தீர்த்தருளினர். அரசனது கூனும் நிமிர்ந்தது, பின்பு சமணர்கள் தங்கள் உண்மைப்பொருளை ஒரு ஏட்டில் எழுதி தீயில் இட அது எரிந்து சாம்பலாய்விட்டது. பிள்ளையார் "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் தொடக்கத்தையுடைய திருநள்ளாற்றுப் பதிகத்தை ஒரு ஏட்டில் எழுதி தீயில் இட அது வேகாமல் இருந்தது. பின்பு சமணர்கள் தங்கள் உண்மைப்பொருளை ஒரு ஏட்டில் எழுதி வைகையில் இட அவ்வேடு வெள்ளம் சென்றவழியே சென்றது. பிள்ளையார் "வாழ்க வந்தணர்" என்னும் தொடக்கத்தையுடைய பதிகத்தை ஒரு ஏட்டில் எழுதி வைகையில்விட அவ்வேடு வெள்ளத்தின் எதிர்சென்று திருவேடகம் என்னும் தலத்திருவில் கரைசேர்ந்தது. இவ்வற்புதங்களைக்கண்ட அரசனும் ஏனைச்சமணரும் சைவசமயிகள் ஆனர்கள்.

(கஉ) திருக்கொள்ளம்பூதூருக்குச் செல்லும்வழியில் ஆற்றில் வெள்ளம் பாய அங்கிருந்த ஓடத்தில் அடியார்களும் இவரும் ஏறிக்கொண்டு "கொட்ட மேகமழும்" என்னும் தொடக்கத்தையுடைய பதிகமோத, ஓடம் அவ் வெள்ளத்திலும் ஆற்றைக்கடந்து மறுகரை சேர்ந்தது.

(கங) திருத்தளிச்சேரிக்குப் போகும்வழியில் போதிமங்கை என்னும் நகரமத்தில் வசித்துக்கொண்டிருந்த பௌத்தர்களில் ஒருவனுகிய புத்தநந்தி என்பவன் இவரையும், அடியார்களையும் தடுத்தனன். அடியார்களுள் ஒருவராகிய சம்பந்த சரணலயர் என்பவர் "புத்தர்சமணர் கழுக்கையர்" என்னும் தொடக்கத்தையுடைய பதிகமோத, புத்தநந்தியின் தலைமேல் இடி-

வீழ்ந்து அவன் இறந்தனன். இவ்வற்புதத்தைக் கண்டு பௌத்தர்களும் சைவராயினர்.

(கச) திருவோத்தூரில் இவர் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கி யருளினர்.

(கஞ) திருமயிலையில் சிவநேசச்செட்டியார் இவருக்கு விவாகஞ்செய்து கொடுக்க உத்தேசித்திருந்த பூம்பாவை என்னும் பெயருடைய அவர் புத்திரி, சர்ப்பத்தால் தீண்டப்பெற்று இறக்க அந்த அம்மானைத் தகனஞ்செய்து அந்தச்சாம்பலை அஸ்திகளுடன் வைத்திருந்து இவரிடம் ஒப்புவிக்க, இவர் "மட்டிட்டபுன்னையங்கானன் மடமயிலை" என்னும் தொடக்கத்தையுடைய பதிக மோதி அச்சாம்பரையும் அஸ்திகளையும் பெண்ணாக வுயிர்ப்பித்தனர்.

(கசு) பூந்துருத்திக்குச் செல்லும் வழியில் இவர் இவர்ந்து செல்லும் முத்துச்சிவிகையைத் திருநாவுக்கரசுநாயனர் கொஞ்சதூரம் தாங்கிச்சென்றனர். இதையறிந்து பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி இருவரும் ஒரு வரையொருவர் வணங்கி மகிழ்ந்தனர்.

(கஎ) நல்லூரில் நம்பியாண்டார் நம்பியின் புத்திரியை இவர் விவாகம் செய்துகொண்டு அவ்வூரின்கண் உள்ள பெருமணம் என்னும் சிவசந்நிதிக்குட் சென்று சிவனைத் தரிசிக்கும்போது தோன்றிய சோதியில் இவருடைய அடியார்களும், பந்தக்களும், மித்திரர்களும் முன் பிரவேசிக்கப் பின்பு இவரும் தம்பதி சமேதராய் அச்சோதியிற் கலந்தருளினர்.

. கூ. இவர்காலத்தில் இருந்த இதர நாயன்மார்களாவன:—க-திருநாவுக்கரசுநாயனர், உ-கின்றசீர் நெடுமாற நாயனாராகிய கூன்பாண்டியன், ரூ-மங்கையர்க்கரசியார், சு-குலச்சிறைநாயனர், நி-திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனர், சு-சிறுத்தொண்டநாயனர், எ-முருகநாயனர், அ-திருநீலகண்டநாயனர், கூ-குங்கிலியக்கலயநாயனர், கo-கலிப்பகைநாயனர், கக-அப்பூதிநாயனர்.

ஏ. இவரை வழிபட்டு முத்தியடைந்த அடியார்களாவன:—க-திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனர், உ-கின்றசீர் நெடுமாறநாயனர், ரூ-மங்கையர்க்கரசியார், சு-குலச்சிறைநாயனர், நி-மற்றும் இவரது திருக்கூட்டத்தாரும்.

அ. சம்பந்தரால் பாடப்பட்ட தேவாரப்பதிகங்கள் கசுo000

அவைகளில் செல்லரிக்கப்பட்டனபோக

இப்போது உள்ள பதிகங்கள். கூஅச

கூ. இவர் கலியுகத்தில் சுமார் நூறாகஉ-வது வருடத்தில் இருந்ததாகச் சிலர் குறித்திருக்கின்றனர்.

உ-திருநாவுக்கரசு சுவாமிகளின் சரித்திரக் குறிப்பு.

க. இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் அவதரித்து புக-வயதளவு இப்புவியின்கண் இருந்து ஓர் சித்திரைமாதத்தில் சதய நட்சத்திரத்தில் முத்தியடைந்தனர்.

உ. இவர் தகப்பனார் பெயர்:—புகழனார்.

ங. தாயார் பெயர்:—மாதினியார்.

ச. தமக்கையார் பெயர்:—திலதவதியார்.

ஞ. இவருடைய வேறு திருநாமங்களாவன:—க-மருணீக்கியார் உ-தருமசேனர் (இது இவர் சமண் சமயத்தில் இருந்தபோது பெற்றிருந்தது) ங-நாவுக்கரசு (இது திருவதிகை வீரட்டானத்தில் இவர், சுவாமியைப் பதிக மோதித் துதிக்கும்பொழுது, பரமசிவத்தால் இவருக்கு இடப்பட்ட பெயர்) ச-சொல்லரசு ஞ-வாக்கின் மன்னர் சு-அப்பர் (இது இவருக்குத் திருஞான சம்பந்த சுவாமிகளால் இடப்பட்டது) எ-தாண்டக வேந்து அ-தாண்டகச் சதிரர் (இவ்விரண்டு பெயர்களும் இவர் தாண்டகங்களே மிகுதியாகப்பாடின மையால் சேக்கிழார் சுவாமிகளால் இடப்பட்டவை.)

சு. இவரால் நடந்த அற்புதங்களாவன:—(க)இவர் எச்சமயம் உண்மையானதென்று அறியாது சமண்சமயத்தை அதுசரித்திருப்பதைச் சைவ சமயத்தை வதித்திருந்த இவர் தமக்கை திலதவதியார் கண்டு இவரைச் சைவ சமயத்தராகத் திருத்தி ஆட்கொள்ள வேணுமென்று திருவதிகை வீரட்டானேசுவரரை வேண்ட அவர் இவருக்கு சூலநோயை உண்டுபண்ண, அதை தீர்த்துக்கொள்ள இவரது சமண்சமயத்தின் மந்திரதந்திர அவஷ்தங்களால் முடியாது அங்நோய் அதிகரிக்க அந்நோயைத் தீர்க்கும்படி இவர் தமது தமக்கையைப் வேண்டிக்கொண்டனர். அந்த அம்மாள் இவருக்கு பஞ்சாட்சரம் ஒதி விபூதிகொடுத்துத் தரித்துக்கொள்ளச்செய்து இவரை வீரட்டானேசுவரர் சந்நிதானத்திற்கு அழைத்துக் கொண்டுபோனவுடன் இவருக்கு சுவாமிமேல் பதிகம் ஒத ஞானம்பிறந்து "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னும் தொடக்கத்தையுடைய பதிகம் ஒதி, சுவாமியை துதித்தவுடன் இவர் சூலநோய் நீங்கக்கண்டு அன்முமுதல் இவர் சைவசமயத்தராய் பல சிவஸ்தலங்களுக்குச் சென்று, சிவபெருமான்மேல் பதிகமோதி வழிபாடுசெய்து கொண்டிருந்தனர். இதுகண்ட சமணர்கள் இவர்மேல் பொறுமைகொண்டு சமண் சமயத்தை அதுசரித்திருந்த பல்லவராசனிடம் சொல்லி க-இவரை ஏழுகாள் நீற்றரையில் இட்டும் உ-பாலுடன் விடம்கலந்து இவருக்கு உண்பித்தும் ங-இவரைக் கொல்லும்படி மதயானையைத் தூண்டியும் ச-இவரைக் கருங்கல்லோடு சேர்த்துக்கட்டி நடுக்கடலில் விட்டும் இவரைக்கொல்ல எத்தனிக்க இவர் க-நீற்றறைவேகாமலும் உ-விஷத்தால் இறவாமலும் ங-யானையால் கொல்லப்படாமலும் இருக்கவும் ச-கருங்கல்லோடு மிதக்கவுங்கண்டு பல்லவராஜன் சைவனுகிக் குணதரவீச்சர மென்னும் சிவாலயப் பிரதிஷ்டை செய்தனன், சமண்சமயம் சிதலமாயிற்று.

(உ) திருத்தூங்காணை மாடத்தில் சூலத்துடன் விடையிலச்சினையைச் சிவபெருமான் அருளால் இவர் தோளிற்றரிக்கப் பெற்றனர்.

(ஊ) திருநல்லூரில் சிவபெருமான் தமது திருவடியை இவர் சிரசில் சூட்டினர்.

(எ) திங்களூரில் அப்பூதியடிகள் தாயனாது புத்திரராகிய மூத்த திருநாவுக்கரசு என்பவர் சர்ப்பத்தால் தீண்டப்பெற்று இறக்க அவரை இவர் உயிர்ப்பித்தனர்.

(ஏ) திருவீழிமிழலையில் சிவபெருமானுல் இவருக்குக் கொடுக்கப்பெற்ற படிக்காசைச்கொண்டு பஞ்சத்தை நீக்கினர்.

(ஐ) திருமறைக்காட்டில் வேதம்பூசித்து மூடிப்போன கதவைப் பதிக மோதித் திறப்பித்தனர்.

(ஒ) திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் மார்க்கத்தில் இவர் பசியால் வருந்துவதைச் சிவபெருமானறிந்து தாம் ஒரு பிராமண வேடங்கொண்டு வந்து இவருக்குக் கட்டமுதுகொடுத்து இவரது பசியைத்தணிவித்து ஒருகுளத்தையும் சோலையையும் உண்டுபண்ணி, இவரை அக்குளத்தில் நீருருந்தும்படியாகவும் அச்சோலையில் இளைப்பாரும்படியாகவும் செய்தருளினர்.

(ஓ) இவர் கயிலாயதரிசனஞ்செய்யும் அபிப்பிராயத்தோடு காசியைக் கடந்து வெகுதூரஞ் சென்றுகொண்டிருக்கும்போது சிவபெருமான் ஒரு பிராமண வேடத்தோடு இவர் எதிர்சென்று இவர்களுத்தை வினவ, இவர் அதைத்தெரிவிக்க அவர் இவருக்கு ஒரு குளத்தைக்காட்டி அதில் இவரை முழுகச்சொல்ல, இவர் அவ்வாறே முழுகி நீரினின்றும் எழுந்திருக்கும்போது தாம் திருவையாற்றுத் திருக்குளக்கரையினின்றும் புறப்பட்டுக் கயிலாய தரிசனஞ் செய்தார். பின்பு கயிலாயத் தோற்றமாறி ஆலயமாய் இருக்கக் கண்டார்.

(ஔ) திருப்பூந்துருத்தியில் திருஞானசம்பந்தர் வருவதை இவரறிந்து எதிர்சென்று அவர் இவர்க்குவரும் முத்தச்சிவிகையைத் தமது தோள்கொடுத்துத் தாங்கிச்சென்றனர். இதைச் சம்பந்தர் அறிந்து, சிவிகையினின்றும் இழிந்து இருவரும் ஒருவரையொருவர் வணங்கி மகிழ்ந்தனர்.

(க0) திருப்புகலூரில் இவர் உழவாரப் பணிசெய்துக்கொண்டிருக்குநாளில் இவர் செதுக்குமிடமெல்லாம் பொன்னும் ரவரத்தினங்களும் சிவபெருமான் அருளால் உண்டாக அவைகளை மண்ணுகவும் கல்லாகவும் மதித்து பொய்கையில் எறிந்துவிட்டனர். பின்னும் சிவபெருமான் இவரை மயக்கும்படி சம்பாஸ்திரீகளை அனுப்ப இவரை மயக்கமுடியாமல் அவர்கள் வெட்கிப் போயினர்.

அத்திருப்புகலூரிலேயே இவர் முத்தியடைந்தனர்.

எ. இவரை வழிபட்டு முத்தியடைந்தவர்களாவன:—க-அப்பூதியடிகளும் அவருடைய திருக்குமாரர்களும் உ-மற்றுமுள்ள இவரது திருக்கூட்டத்தாரும்.

அ அப்பரால் பாடப்பட்ட தேவாரப்பதிகங்கள். சகூ,000

அவைகளில் செல்லரிக்கப்பட்டனபோக இப்போது உள்ளன. கூகஉ

கூ. இவர் பூர்வஜென்மத்தில் வாதேசர் என்னும் மூனிவனுயிருந்தவர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சரித்திரக் குறிப்பு.

க. இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் பிராமணகுலத்தில் ஆதிசைவர்கள் பிரிவில் அவதரித்து கஅ-வயதளவு இவ்வுலகிலிருந்து ஓர் ஆடி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் முத்தியடைந்தனர்.

உ. இவர் தகப்பனுர்பெயர்:—சடையனுர்.

சு. தாயார்பெயர்:—இசை ஞானியார்.

ச. பத்தினிமார்கள் பெயர்:—க-பரவை நாய்ச்சியார், உ-சங்கிலி நாய்ச்சியார்.

ஞ. இவருடைய வேறு திருநாமங்களாவன:—க-நம்பியாரூரர் உ-ஆரூரன் சு-வன்றொண்டன் (இது இவருக்குப் பரமசிவனுல் திருவெண்ணெய் நல்லூரில் அருளப்பெற்றது) ச-தம்பிரான்தோழன் (இது இவருக்குப் பரமசிவனுல் திருவாரூரில் அருளப்பெற்றது, ஞ-சிங்கடியப்பன் சு-வன்பகையப்பன் (இவ்விருபெயர்களும் கோட்புலி நாயனுரின் புத்திரிகளாகிய சிங்கடியாரையும் வனப்பகையாரையும் இவர் தன் புத்திரிகள்போல் பாவித்ததால் இவருக்கிவரே வைத்துக்கொண்ட பெயர்களாம்) எ-நாவலர்கோன் அ-சேரமான்றேழர் (இது கொடுங்கோ ஞரிலிருந்த சேரமான் பெருமாணுயனுர் இவரது பக்தி விசேஷத்தைப் பரமசிவனுல் உணர்ந்து இவருக்கு நண்பராயினமையின் உண்டாயிற்று.)

சு. இவரால் நடந்த அற்புதங்களாவன:—

(க) இவர் பரவையாரையும், சங்கிலியாரையும் விவாகஞ்செய்து கொள்வதற்குமுன் இவருக்குப் புத்தூரில் சடங்கவியாரின் புத்திரியை விவாகஞ் செய்துவைக்க, மணச்சடங்குகள் நடந்துகொண்டிருக்கும்வேளையில் பரமசிவன் ஓர் விருத்தாப்பிய பிராமணவடிவத்தோடு மணவாசலுட்சென்று சபையாரைநோக்கி எனக்கும் நம்பியாரூருருக்கும் ஓர் வழக்குளதென்று உரைத்தனர். சபையோர் அது யாதெனவினவ அதற்கு அவர் நம்பியாரூரர் எனது அடிமை என்பதுதான் என்று விடையளித்து அதற்குச்சாட்சியாக ஒரு ஓலையில் எழுதப்பட்டிருந்த முறிச்சீட்டையும் அவர்களுக்குக் காண்பித்தனர். நம்பியாரூரர் இவர் யாரோ பித்தர் என்றுசொல்லி அவ்வோலையை அவ்வேதிய ரிடத்தினின்றும் பறித்துக் கிழித்தெறிந்தனர். சபையாரும் இதை இன்ன தென்று உணராமாட்டாமற்றிகைத்து அவ்வேதியரை உமது ஊர் யாதென வினவினர். அதற்கு அவர் நான் இருப்பது திருவெண்ணெய்நல்லூர். இப்போது கிழித்தெரியப்பட்டது ஈகலோலை அசல்மூறிச்சீட்டு அவ்விடத்திலுளது வாருங்கள் ரூபிக்கிறேன் என்று அவர்கள் எல்லோரையும் திருவெண்ணெய் நல்லூருக்கழைத்துப்போய், தாம் சொன்னவண்ணம் ரூபித்தனர். பிறகு நம்பியாரூரரும் சபையோரும்; இவ்வூரில் உமது மாளிகை எதுவென வின

அதற்கு அவர் வாருங்கள் காட்டுகிறேன் என்று சொல்லிச்சென்றனர். அவர் பின்செல்ல அவர் அருள்தூறைச் சங்கிதியுட்பிரவேசித்து மறைந்தனர். அதை கண்டயாவரும் திகைத்தனர். அப்போது பரமசிவன் நம்பியாரூருக்கு ரிஷபவாகனரூடராய்க் காட்சிகொடுத்து பூர்வஜென்மக்கியானம் வரப்பண்ணி அவ்வயோதிகப் பிராமணர் பரமசிவனென உணர்த்தித் தன்னைப்பாட 'பித்தா' என்று அடியெடுத்துக் கொடுத்தருளினர். அதுமுதல் நம்பியாரூரர் பலசிவஸ்தலங்கட்குஞ் சென்று தேவாரப்பாடல்களால் பரமசிவத்தைத் துதித்து வந்தனர். சடங்கவியின் புத்திரியார் விவாகம் தவிர்த்ததால் சுந்தரமூர்த்தி நாயனாரையே தியானித்துக்கொண்டிருந்து சிலகாலஞ் சென்றபின் முத்தியடைந்தனர்.

(உ) திருவதிகையில் இவர் சிரசின்மீது பரமசிவன் தனது பாதத்தைச் சூட்டினர்.

(ஊ) திருவாரூரில் இவருக்குப் பரமசிவன் நாம் உனக்குத் தோழனனே மென்று உரைத்தருளினர். அதுமுதல் இவருக்குத் தம்பிரான் தோழன் எனப்பெயர் உளதாயிற்று இவ்வூரில் இவரும் ஓர் உருத்திரக்கணிகையின் புத்திரியான பரவையாரும் ஒருவரையொருவர் மணம்புணர ஆசைகொண்டு அவ்வாசையை நிறைவேற்றும்படி இருவரும் பரமசிவத்தை வேண்ட அவர் அவ்வூராருக்குச் சொற்பனத்தில் ஆக்கியாபிக்க அவர்கள் அவ்வாறே இவ்விரு வருக்கும் விவாகஞ்செய்து வைத்தார்கள். பின்னும் ஒருநாள் பரமசிவம் இவருக்கு தரிசனந்தந்து 'தில்லைவாழந்தணர்' என அடியெடுத்துக்கொடுத்து அத் திருத்தொண்டத் தொகையை இவரால் பாடுவித்தனர்.

(எ) திருக்கோளிலியில் இவர்பதிகமோதிச் சிவனே வேண்ட, குண்டை நூரில் குண்டையூர்கிழார் இவருக்குக்கொடுத்த நெல்மலையைத் திருவாரூரில் பரவையார் வீட்டிற்போய்ச் சேரும்படி சிவன் அருளினர்.

(ஏ) திருப்புகலூரில் பரவையாருக்காக இவர் பரமசிவத்தைப் பொன் வேண்டி தித்திரைசெய்ய, தலைமீன்மீழ் வைத்துக்கொண்ட செங்கற்களெல் லாம் பரமசிவம் பொன்னாக்கி வைத்தனர்.

(ஐ) திருப்பாச்சிலாச்சிராமத்தில் இவர் பொன்வேண்டி பரமசிவத்தின் மேல் பதிகமோதி பொற்குவைபெற்றனர்.

(ஒ) திருமுதுகுன்றத்துக்கு இவர் செல்லும் வழியில் பரமசிவன் ஓர் பிராமண வடிவங்கொண்டு இவரைத் திருக்கூடலை யாற்றூருக்கு அழைத்துப் போய், பதிகம் பாடுவித்துக் கொண்டனர்.

(ஓ) திருமுதுகுன்றத்தில் சுவாமியைப் பொன்வேண்டித் துதிக்கப் பரமசிவம் இவருக்கு பன்னீராயிரம் பொன் கொடுத்தருளினர். அப்பொன் திருவாரூருக்குப் போய்ச்சேரும்படி செய்யவேண்டுமென்று கடவுளே இவர் மறுபடியும் வணங்கப் பரமசிவன் அப்பொன்னை மணிமுத்தாநதியில் புகவிட் டால் அது திருவாரூர்க் குளத்தில்போய்ச்சேரும் அவ்விடத்தில் எடுத்துக்

கொள்ளலாம் என்று அசரீரியாய் சொல்லியருளினர். இவர் அவ்வாறே செய்து அப்பொன்னைப் பரவையாருக்குச் சேர்ப்பித்தனர்.

(ஈ) திருக்குருகாவூருக்கு இவர்செல்லும் வழியில் இவருக்கும் அடியார்களுக்கும் பரமசிவம் பிராமண வேடத்தோடு பந்தரும் கட்டமுதும் இட்டு பசிதாகங்களையும் இனைப்பையும் தீர்த்தருளினர்.

(கஎ) திருக்கச்சூரிலும் இவருக்கும் அடியார்களுக்கும் பரமசிவன் பிராமணவேடத்தோடு அன்னம் யாசகம்பண்ணிக் கொணர்ந்து பசியாற்றினர்.

(கஏ) திருஒண காந்தன்தளியிலும் இவர் பரமசிவத்தைப் பொன்வேண்டிப் பெற்றனர்.

(கஐ) திருவொற்றியூரில் ஞாயிறுகிழார் என்னும் வேளாளருக்குப் புத்திரியாகிய சங்கிலியாரை இவர் மணக்க விரும்பிப்பரமசிவத்தை அந்த அம்மானிடம் தூதனுப்பி இசைவித்து மகிழமரத்தடியில் அந்த அம்மானைப் பிரிவதில்லையென்று சுவாமிக்கு எதிரில் சபதஞ் செய்துகொடுத்து மணம்புரிந்தனர்.

(கஙு) பின்பு இவர் சபதத்தைத் தவறி சங்கிலியாரைப்பிரிந்து திருவாரூருக்குப்போக உத்தேசித்துத் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டினவுடனிரண்டு கண்களும் தெரியாமல் குருடராயினர். பின்புசிலர் கையைப்பற்றிக் கொண்டு வெண்பாக்கஞ் சென்று சிவனைத்துதிக்க இவருக்கு அத்தலத்தில் பரமசிவம் ஊன்றுகோல் அளித்தனர். அதைக்கொண்டு கச்சிஏகம் சென்று கடவுளைத்துதிக்க அவ்விடத்தில் இடக்கண் தெரியப்பெற்றனர். திருவாரூரில் வலது கண்ணும் தெரியப்பெற்றனர்.

(கச) திருவாரூரில் சுந்தரர் சங்கிலிநாய்ச்சியாரை மணந்ததால் பிணங்கி இருந்த பரவைநாய்ச்சியாரின் பிணக்கை பரமசிவன் தூதுசென்று தீர்த்தனர்.

(கசு) இவர் பரமசிவத்தை தூதனுப்பியது தகாதகாரியமென்று திருப்பெரு மங்கலத்திலிருந்த ஏயர்கோன் கலிக்காமநாயனார் இவர்மேற் கோபங் கொண்டிருத்தலை இவர் பரமசிவனுக்கறிவிக்க அவர் கலிக்காமநாயனருக்கு சூலநோய் உண்டுபண்ணி அது சுந்தரால்தீரும்தென்று அவருக்குச் சொல்ல, அவர் சுந்தரால் அந்நோயை நிவர்த்தித்துக்கொள்ள உடன்படாதிருந்தும் பரமசிவம் சுந்தரரை அவரிடம் அனுப்ப சுந்தரர் வருவதையறிந்து கலிக்காமநாயனர் உடைவாளினால் தன்வயிற்றைக் கிழித்துக்கொண்டிறந்து கிடக்க அதைப்பார்த்து, சுந்தரரும் தன்வயிற்றைக் கிழித்துக்கொள்ள எத்தனிக்கையில் பரமசிவம் கலிக்காமநாயனரை உயிர்ப்பித்தனர். உடனே இருவரும் ஒருவரையொருவர் வணங்கி மகிழ்ந்தனர்.

(கஙு) திருநாகைக்காரோணத்தில் இவர் பரமசிவன்மேல் பதிகம்பாடி, பொன்னும், நவரத்தினமும், ஆபரணங்களும், வஸ்திரங்களும், குதிரைகளும், உடைவாளும், பரமசிவம் இவருக் கருளப்பெற்றனர்.

(கஎ) திருக்கண்டி யூரினின்றும் இவரும் சேரமான் பெருமாணயனரும் காவேரிக்கு வடகரையில் இருக்கும் திருவையாற்றைத் தரிசிக்க விரும்பிப்போகையில் காவேரி அதிகப் பெருக்கா யிருந்ததால் அதைத் தாண்டுவது கடினமாகத் தோற்றினவளவில் இவர் பரமசிவன்மேல் பதிகமோத பிரவாகமானது இருபிளவாய்ப் பிரிந்து இவருக்கும் அடியார்களுக்கும் வழிவிட்டது.

(கஅ) திருமுருகன் பூண்டியில் சுவாமிமேல் பதிகமோதி, சேரமான் பெருமாணயனரால் இவருக்குக் கொடுக்கப்பெற்று, வரும்வழியில் சிவபூத கணங்களாகிய கள்ளர்களால் பறித்துக்கொள்ளப்பட்ட திரவியத்தை மீண்டும் பெற்றனர்.

(கக) திருப்புக்கொளியூரில் இவர் முதலையால் விழுங்கப்பட்ட பிராமணப்பிள்ளையை மறுபடியும் அம்முதலை கக்கும்படிசெய்து உயிர்ப்பித்தனர்.

(உ0) திருவஞ்சைக்களத்தில் பரமசிவத்தால் அனுப்பப்பட்ட வெள்ளையானையின்மீது இவர்த்துசென்று கைலையை அடைந்து முன்போலவே சிவனடியார்களுள் ஒருவராகிய ஆலாலசுந்தரர் ஆயினர்.

எ. சுந்தரர் பரவையார், சங்கிலியார் இவர்களுடைய பூர்வ ஜென்ம வித்தாந்தம்:—

கயிலாயத்தில் சிவனடியார்களுள் ஒருவராகிய ஆலாலசுந்தரர் என்பவர் பரமசிவனுக்குத் தரிப்பிக்கும்பொருட்டு பூக்கொய்ய நந்தவனத்துட்செல்ல அங்கு பார்வதீதேவியின் சேடியர்களாகிய கமலினிஎன்பவரும், அனிந்திதை என்பவரும் புக்கொய்யவர, அவர்கள்மேல் இவர் மோகங்கொண்டதையும் அவர்களும் இவர்மேல் மோகங்கொண்டதையும் பரமசிவனறிந்து இவர்கள் மூவரையும் பூமியில் மனிதராகப்பிறந்து இவர்கள் மோகங்களைத் தீர்த்துக்கொள்ளும்படிச் சபித்தனர். ஆகையின் ஆலாலசுந்தரர், சுந்தரமூர்த்திசுவாமிகளாவும், கமலினி பரவையாராகவும், அனிந்திதை சங்கிலியாராகவும் இப்புவியின்கண் பிறந்தனர்.

அ. இவர்காலத்தில் இருந்த இதரநாயன்மார்களாவன:—க-கோட்புலி நாயனர் உ-ஏயர்கோன் கலிக்காமநாயனர் ங-சேரமான் பெருமாணயனர் ச-விறன்மிண்டநாயனர் ஞ-பெருமிழலைக் குறும்பநாயனர்.

கூ. இவரை வழிபட்டு முத்தியடைந்த அடியார்களாவன:—க-பெருமிழலைக்குறும்பநாயனர் உ-சேரமான் பெருமாணயனர் ங-மற்றுமுள்ள இவர் திருக்கூட்டத்தினர்.

க0. சுந்தரரால் பாடப்பட்ட தேவாரப்பதிகங்கள் ஙஎ,000

அவைகளுள் செல்லரிக்கப் பட்டவைபோக இப்போது உள்ள பதிகங்கள். க00

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த

திருவாலங்காடு

மூத்த திருப்பதிகம்.

பண்–நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிநரம்பெழுந்தகுண்டுகண்வெண்பற்சூழிவயிற்றுப்
பங்கிவெந்திருபற்கணீண்டுபரடியர்நீள்சுணைக்காலோர்பெண்பேய்
தங்கியலறியுலறுகாட்டிற்றுழ்சடையெட்டுத்திசையும்வீசி
யங்கங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (க)

கள்ளிக்கவட்டிடைக்காலீநீட்டிக்கடைக்கொள்ளிவாங்கிமசித்தமையை
வீள்ளவெழுதிலெடுவெடென்னநக்குவெகுண்டுவிலங்குகாட்டிற்
முள்ளித்துடித்தச்சுடுபிணத்தீச்சுட்டிடமூற்றுஞ்சுளிந்தசூழ்கி
யள்ளியவிக்கின்றுடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (உ)

வாகைவிரிந்துவெண்ணெற்றெலிப்பமயங்கிருள்கூர்நடுநாளையாங்கே
கூகையோடாண்டலைபரடவாந்தைகோடதன்மேற்குதித்தோடவீசி
யீகைபட்சதொடர்கள்ளிநீழலீமமிடுசுடுகாட்டகத்தே
யாகங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (ங)

குண்டிலோமிக்குழிச்சோற்றைவாங்கிக்குறுநரிதின்னவதனேமுன்னே
கண்டிலோமென்றுகனன்றுபேய்கள்கையடித்தேரடிங்காடரங்கா
மண்டிலகின்றங்குளாலமிட்டுமட்டித்துவீசியெடுத்தபாத
மண்டமூறுமிமிர்ந்தாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (ச)

வீழுதுணித்தைவீழுங்கவிட்டுவெண்டலைமாலைவிரவிப்பூட்டிக்
கழுதுதன்பிள்ளையைக்காளியென்றுபேரிட்டுச்சீருடைத்தாய்வளர்த்துப்
புழுதிதுடைத்தமுலைகொடுத்துப்போயினதாயைவரவுகாணு
தழுதுறங்கும்புறங்காட்டிலாடுமப்பனிடந்திருவாலங்காடே. (ஞ)

சுழலுமழல்விழிக்கொள்ளிவாய்ப்பேய்சூழ்ந்துதணங்கையிட்டோடியாடித்
தழலுளெரியும்பிணத்தைவாங்கித்தான்றடித்தின்றணங்காடுகாட்டிற்
கழலொலியோசைச்சிலம்பொலிப்பக்காலுயர்வட்டணையிட்டுநட்ட
மழலுமிழ்ந்தோரிகதிக்கவாடுமப்பனிடந்திருவாலங்காடே. (ரு)

பட்டடிநெட்டுகிர்ப்பாறுகாற்பேய்பருந்தொடுகூகைக்கண்டையாந்தை
குட்டியிடமுட்டைகூகைபேய்கள்குறுநரிசென்றணங்காடுகாட்டிற்
பிட்டடித்துப்புறங்காட்டிலிட்டபிணத்தினேப்போகப்புட்டியாங்கே
யட்டமேபாயகின்றுடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (எ)

நாடுநகருந்திரிந்துசென்றுநன்னெறிநாடிநயந்தவரை
மூடிமுதுபிணத்திட்டமாடேமுன்னியபேய்க்கணஞ்சூழச்சூழக்
காடுங்கடலுமலையுமண்ணும்விண்ணுஞ்சுழலவனல்கையேந்தி
யாடுமரவப்புயங்கனெங்களப்பனிடந்திருவாலங்காடே. (அ)

அத்தங்கைக்கிள்ளைவிளரிதாதமுழையிளியோசைபண்கெழுமப்பாடிச்
சச்சரிகோக்கரைதக்கையோடுதகுணிச்சந்துந்தும்பிதாளம்வீணை
மத்தளங்கரடிகைவன்கைமென்றோற்றமருங்குடமுழாமொந்தைவாசித்
தத்தனமைவினோடாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (சு)

புந்திகலங்கிமதிமயங்கியிறந்தவரைப்புறங்காட்டிலிட்டுச்
சந்தியில்வைத்தக்கடமைசெய்துதசுகவரிட்டசெந்தீவிளக்கா
மூந்தியமரர்முழவினோசைதிசைகதுவச்சிலம்பார்க்கவார்க்க
வந்தியின்மாநடமாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (கo)

ஒப்பிணையில்லவன்பேய்கள்கூடியொன்றினையொன்றடித்தொக்கலித்துப்
பப்பிணையிட்டுப்பகண்டைபாடப்பாடிருந்தங்கரியாழமைப்ப
வப்பணையணிதிருவாலங்காட்டுளடிகளீச்செடிதலைக்காரைக்கார்பேய்
செப்பியசெந்தமிழ்பத்தும்வல்லார்சிவகதிசேர்ந்தின்பமெய்துவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

மூத்ததிருப்பதிகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைகூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசோர்ந்தகுடர்க்கவ்வப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோல்விழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனுடுமே. (க)

நிணந்தாவுருகிநிலந்தானேப்பநெடும்பற்சுழிகட்பேய்
தணங்கையெறிந்தசூலமூகோக்கிச்சுடலைவலித்தெங்குங்
கணங்கள்கூடிப்பிணங்கண்மார்க்கவிழ்த்தமகத்தவர
யணங்குகாட்டிலனல்கையேற்கியழகனுடுமே. (உ)

புட்கள்பொதுத்தபுலால்வெண்டலையைப்புறமேநரிகவ்வவ்
வட்கென்றழைப்பவாந்தைவீசவருகேசிறுகூகை
யுட்கவிழிக்கவூமன்வெருட்டவோரிக்கித்தெங்குஞ்
பிட்கநட்டம்பேணுமிறைவனெயரும்பெருங்காடே. (ஙு)

முள்ளிதீந்தமுளரிகருகிமூளைசொரிந்தக்குக்
கள்ளிவற்றிவெள்ளில்பிறங்குகடுவெங்காட்டுள்ளே

புள்ளியுழைமான்றேருலொன்றுடுத்துப்புலித்தோல்பியற்கிட்டுப்
பள்ளியிடமுமதுவேயாகப்பரமனுடமே. (சு)

செத்தபிணத்தைத்தெளியாதொருபேய்சென்றுவிரல்சுட்டிக்
கத்தியுமிக்கனல்விட்டெரிந்தகடக்கப்பாய்ந்துபோய்ப்
பற்றல்வயிற்றைப்பதைக்கமோதிப்பலபேயிரிந்தோடப்
பித்தவேடங்கொண்டுநட்டம்பெருமானுடமே. (டு)

வாளாக்கிளரவேவாளெயிற்றுவண்ணச்சிறுகூகை
மூளைத்தலையும்பிணமும்விழுங்கிமுரலுமுதுகாட்டிற்
றூளிப்பனியினிலேபோன்மயிர்கடழல்வாயழல்கட்பேய்
கூளிக்கணங்கள்குழலோடியம்பக்குழகனுடமே. (சு)

தொந்திக்கிடந்தசுடலைதடலிதுகரும்புழுக்கின்றிச்
சிக்கித்திருந்தங்குறங்குஞ்சிறுபேய்சிரமப்படுகாட்டின்
முந்தியமசர்முழவினேசைமுறைமைவழுவாமே
யந்திநிருத்தமனல்கையேந்தியழகனுடமே. (எ)

வேய்களோங்கிவெண்முத்துதிரும்வெடிகொள்சுடலையு
ளோயுமுருவிலுலறுகூந்தலலறுபகுவாய
பேய்கள்கூடிப்பிணங்கண்மாந்தியணங்குபெருங்காட்டின்
மாயனேடமேலியான்மகளுமருண்டுநோக்குமே. (அ)

கடுவனுகளுங்கழைசூழ்பெர்தும்பிற்கழுகும்பேயுமா
யிடுவெண்டலையுமீமப்புகையுமெழுந்தபெருங்காட்டிற்
கொடுவெண்மழுவும்பிறையுந்தும்பக்கொள்ளென்றிசைபாடப்
படுவெண்டுடியும்பறையுங்கறங்கப்பரமனுடமே. (கூ)

குண்டைவயிற்றுக்குறியசிறியகெடியபிறங்கற்பே
யிண்டுபடர்ந்தவிருள்சூழ்மயானத்தெரிவாயெயிற்றுப்பேய்
குண்டுகுழவித்தழுவவெருட்டிக்கொள்ளென்றிசைபாட
மிண்டிமிளிர்ந்தசடைகடாழலிமலனுடமே. (கo)

சூடுமதியஞ்சடைமேலுடையார்சுழல்வர்திருநட்ட
மாடுமரவமரையிலார்த்தவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநர்சமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

அம்மையார் அருளிச்செய்த திருவாலங்காடு

மூத்ததிருப்பதிகம்

முற்றிற்று.



சிவமயம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள்.

முதற்றிருமுறை.

1. * திருப்பிரமபுரம்–பண்–நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

1 தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வன்
னேடுடையமலரான்முனாள்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (க)

2 முற்றலாமையினாகமோடேனமூளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (உ)

3 நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்ளேசாரவெண்ணுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (ங)

4 விண்மகிழ்ந்தம்மதிளெய்ததமன்றியிளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்தபலிதேரியவன்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (ச)

5 ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூரும்மிவனென்ன
வருமையாகவுரைசெய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (ஞ)

* திருப்பிரமபுர மென்பது சீர்காழி.

6 மறைகலந்தவொலிபாடலொடாடல்ராகிமழுவேந்தி
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழில்கீழ்பெருஞ்சோலைக்கதிர்சித்தப்
பிறைகலந்தபிரமாபுரமேலியபெம்மானிவனன்றே. (சு)

7 சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசிச்சதிர்வெய்தி
யுடைமுயங்குமரவோடுழிதந்தென்னுள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழிசூழ்குளிர்கானல்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேலியபெம்மானிவனன்றே. (எ)

8 வியரிலங்குவரையுந்தியதோள்வீரம்வீசவித்த
வயரிலங்கையரையன்வலிசெற்றென்னுள்ளங்கவர்கள்வன்
முயரிலங்குமுலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேலியபெம்மானிவனன்றே. (அ)

9 தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானு
நீணுதல்செய்தொழியநிமிர்ந்தானென்னுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மம்மகளிர்ம்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேலியபெம்மானிவனன்றே. (சு)

10 புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறுநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தென்னுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேலியபெம்மானிவனன்றே. (கo)

11 அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையுலர்மேய
பெருநெறியபிரமாபுரமேலியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்தணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரமபுரீசர், தேவியார்-திருநிலாயகி.

திருத்தோணியில் வீற்றிருப்பவர் தோணியப்பர்.

---

2 திருப்புகலூர்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

1 குறிகலந்தவிசைபாடலினனசையாலிவ்வுலகெல்லா
நெறிகலந்ததொருசீர்மையனெருதேறும்பலிபேணி
முறிகலந்ததொருதாலரைமேலுடையானிடமொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில்சூழ்ந்தயலேபுயலாரும்புகலூரே. (க)

13 காதிலங்குகுழையன்னிழைசேர்திருமார்பன்னெருபாகம்
மாதிலங்குதிருமேனியினன்கருமாலினனியாடை
மீதிலங்கவணிந்தானிமையோர்தொழமேவும்மிடஞ்சோலைப்
போதிலங்குதையால்வரிவண்டிசைபாடும்புகலூரே. (உ)

14 பண்ணிலாவுமறைபாடலினனிறைசேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடையான்பெரியார்கழலென்றுந்தொழுதேத்த
வுண்ணிலாவியவர்சிந்தையுணீங்காவொருவற்கிடமென்பர்
முண்ணிலாவும்மடியார்குடிமைத்தொழில்மல்கும்புகலூரே. (ஊ)

15 நீரின்மல்குசடையன்விடையன்னடையார்தம்மரண்மூன்றுஞ்
சீரின்மல்குமிலையெரிலையாக * மூனிந்தனலுகுய்யச்
காரின்மல்குகடனஞ்சமதுண்டகடவுள்ளிடமென்ப
ரூரின்மல்கிவளர்செம்மையினலுயர்வெய்தும்புகலூரே. (எ)

16 செய்யமேனிவெளியபொடிப்பூசுவர்சேரும்மடியார்மேற்
பையரவின்றவினையாற்றுவர்போற்றிசைத்தென்றும்பணிவாரை
மெய்யரவின்றபெருமானுறையும்மிடமென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத்தார்பிரியாதபொருந்தும்புகலூரே. (ஏ)

17 கழலினேசைசிலம்பின்னெலியோசைகலிக்கப்பயில்கானிற்
குழலினேசைகுறட்பாரிடம்போற்றக்குனித்தாரிடமென்பர்
விழவினேசைமுரன்றியர்மிடையுற்றுவிரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினேசைமுந்நீரயர்வெய்தமுழங்கும்புகலூரே. (ஐ)

18 வெள்ளமார்ந்தமிளிர்செஞ்சடைதன்மேல்விளங்கும்மதிசூடி
யுள்ளமார்ந்தவடியார்தொழுதேத்தவகக்கும்மருள்தந்தெங்
கள்ளமார்ந்தகழியப்பழிதீர்த்தகடவுட்கிடமென்பர்
புள்ளீயார்ந்தவயலின்வீளைவால்வளமல்கும்புகலூரே. (ஒ)

19 தென்னிலங்கையரையன்வரைபற்றியெடுத்தான்முடிதிண்டோள்
தன்னிலங்குவிரலானெரிவித்திசைகேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடையான்மடமாதொடுமேவும்மிடமென்பர்
பொன்னிலங்குமணிமாளிகைமேன்மதிதோயும்புகலூரே. (அ)

20 நாகம்வைத்தமுடியானடிகைதொழுதேத்தும்மடியார்க
ளாகம்வைத்தபெருமான்பிரமன்ஞெடுமாலுந்தொழுதேத்த
வேகம்வைத்தவெரியாய்மிகவோங்கியவெம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழிலின்னிழலான்மதவாரும்புகலூரே. (கூ)

21 செய்தவத்தார்மிகுதேரர்கள்சாக்கியர்செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழியைத்தவிர்வார்கள்கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மலரும்புனலுங்கொடுதூவித்தொழுதெய்த
மெய்தவத்தின்முயல்வாருயர்வானகமெய்தும்புகலூரே. (கo)

* மூனிந்தானலுகுய்ய என்றும் பாடம்.

22 புற்றில்வாழுமரவம்மரையார்த்தவன்மேவும்புகலூரைக்
கற்றுநல்லவர்காழியுள்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
பற்றியென்றம்பிசைபாடியமாந்தர்பரமனடிசேர்ந்து
குற்றமின்றிக்குறைபாடொழியாப்புகழோங்கிப்பொலிவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்–அக்கினீசுவரர், தேவியார்–கருந்தார்க்குழலியம்மை.

---

3. திருவலிதாயம்–பண்–நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

23 பத்தரோடுபலரும்பொலியம்மலர்ங்கைப்புனல்தூவி
யொத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே. (க)

24 படையிலங்குகரமெட்டுடையான்படிறுகக்கனலேந்திக்
கடையிலங்குமனையிற்பலிகொண்டுணுங்கள்வன்னுறைகோயில்
மடையிலங்குபொழிலின்னிழல்வாய்மதுவீசுமவலிதாய
மடையின்றவடியார்க்கடையாவினையல்லற்றுயர்தானே. (உ)

25 ஐயனெய்யணியன்பிணியில்லவரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடையேந்தவல்லான்றிருமாதோடுறைகோயில்
வையம்வந்தபணியப்பிணிதீர்த்துயர்கின்றவலிதாய
மூய்யும்வண்ணந்நினைமின்னீனந்தாலவினை தீருங்கலமாமே. (ஊ)

26 ஒற்றையேறதடையானடமாடியோர்பூதப்படைசூழப்
புற்றினுகமரையார்த்தழல்கின்றவெம்பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுலகத்தொளிமல்கிடவுள்ளும்வலிதாயம்
பற்றிவாழும்மதுவேசரணுவதுபாடும்மடியார்க்கே. (எ)

27 புத்தியொன்றிநினைவார்வினையாயினதீரப்பொருளாய
வத்தியன்னதொருபேரொளியான மர்கோயிலையலெங்கு
மந்திவந்துகடுவன்னெடுகூடிவணங்கும்வலிதாயஞ்
சித்தியாதவர்தம்மும்மெய்துயர்தீர்தலெளிதன்றே. (ஏ)

28 ஊனியன்றதலையிற்பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்
கானியன்றகரியின்னுரிபோர்த்தழல்கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறையைவைத்தவெம்மாதிமகிழும்வலிதாயந்
தேனியன்றநறும்பூமலர்கொண்டுநின்றேத்தத்தெளிவாமே. (ஐ)

29 தண்ணிறைந்தவிழியினன்னுலால்வருகாமனுயிர்வீட்டிப்
பெண்ணிறைந்தவொருபால்மகிழ்வெய்தியபெம்மானுறைகோயில்

மண்ணிறைந்தபுகழ்கொண்டடியார்கள் வணங்கும்வலிதாயத்
தண்ணிறைந்தபெருமான்கழலேத்தநம்முண்மைக்கதியாமே. (எ)

30 கடலினஞ்சமமுதுண்டிமையோர்தொழுதேத்தநடமாடி
யடலிலங்கையரையன்வலிசெற்றருளம்மானமர்கோயில்
மடலிலங்குகமுகின்பலிவின்மதுவிம்மும்வலிதாய
முடலிலங்குமுயிருள்ளளவுந்தொழவுள்ளத்துயர்போமே. (அ)

31 பெரியமேருவரையேகிலியாமலைவுற்றுரெயில்மூன்று
மெரியவெய்தவொருவன்னிருவர்க்கறிவொண்ணுவடிவாகு
மெரியதாகியுறவேர்ங்கியவன்வலிதாயந்தொழுதேத்த
வுரியராகவுடையார்பெரியாரெனவுள்ளும்முலகோரே. (கூ)

32 ஆசியார்மொழியாரமண்சாக்கியரல்லாதவர்கூடி
யேசியீரமிலராய்மொழிசெய்தவர்சொல்லப்பொருளென்னேல்
வாசிதீரவடியார்க்கருள்செய்துவளர்ந்தான்வலிதாயம்*
பேசுமார்வமுடையாரடியாரெனப்பேணும்பெரியோரே. (கo)

33 வண்டுவைகுமணமல்கியசோலைவளருமவலிதாயத்
தண்டவாணனடியுள்குதலாலருமாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுள்ஞானசம்பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டில் பாடியென வழங்கப்பட்டிருகின்றது.
சுவாமிபெயர்-வலிதாயநாதர், தேவியார்-தாயம்மை

---

4 ஸ்ரீ புகலியும்-திருவீழிமிழலையும்.

வி ஞ வ ரை.

பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மைம்மருபூங்குழற்கற்றைதுற்றவாணுதல்மான்விழிமங்கையோடும்
பொய்ம்மொழியாமறையோர்களேத்தப்புகலிகிலாவியபுண்ணியனே
யெம்மிறையேயிமையாதமுக்கணீசவெனேசவிதென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழிநான்மறையோர்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே. (க)

கழன்மல்குபாந்தோடம்மானமுற்றில்கற்றவர்சிற்பிடைக்கன்னிமார்கள்
பொழின்மல்குகிள்ளையைச்சொற்பயிற்றும்புகலிகிலாவியபுண்ணியனே
யெழின்மலரோன்சிரமேந்தியுண்டோரின்புறசெல்வமிதென்கொல்சொல்லாய்
மிழலையுள்வேதியரேத்திவாழ்த்தவிண்ணிழிகோயில்விரும்பியதே (உ)

கன்னியராடல்கலந்துமிக்கதுகவாடைகலந்துதுங்கப்
பொன்னியல்மாடநெருங்குசெல்வப்புகலிகிலாவியபுண்ணியனே

இன்னிசையாழ்மொழியாளோர்பாகத்தெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
மின்னியலுண்ணிடையார்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே. (சு)

நாகபணர்திகழல்குல்மல்குநன்னுதன்மான்விழிமங்கையோடும்
பூகவனம்பொழில்சூழ்தவர்தண்புகலிகிலாவியபுண்ணியனே
ஏகபெருந்தகையாயபெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
மேகமுரிஞ்செயில்சூழ்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே (சி)

சந்தளிறேறுதடங்கொள்கொங்கைத்தையலோடுந்தளராதவாய்மைப்
புந்தியினன்மறையோர்களேத்தும்புகலிகிலாவியபுண்ணியனே
எந்தமையாளுடையீசவெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
வெந்தவெண்ணீறணிவார்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே. (டு)

சங்கொலியிப்பிசுறுமகரந்தாங்கிரிந்துதரங்கமேன்மேற்
பொங்கொலிநீர்சுமந்தோங்குசெம்மைப்புகலிகிலாவியபுண்ணியனே [லாய்
எங்கள்பிராணிமையோர்கள்பெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்
வெங்கதிர்தோய்பொழில்சூழ்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே. (சு)

காமனெரிப்பிழம்பாகநோக்கிக்காம்பனதோளியொடுங்கலந்து
பூமருநான்முகன்போல்வரேத்தப்புகலிகிலாவியபுண்ணியனே
ஈமவனத்தெரியாட்டுகந்தவெம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
வீமருதண்பொழில்சூழ்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே (எ)

இலங்கையர்வெற்தொழில்வாய்த்ததிண்டோளிற்றலைவில்விரலொற்றியைந்து
புலங்களீக்கட்டவர்போற்றலந்தண்புகலிகிலாவியபுண்ணியனே
இலங்கெரியேந்தினின்றெல்லியாடுமெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
விலங்கலொண்மாளிகைசூழ்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே. (அ)

செறிமுளரித்தவிசேறியாமுஞ்செற்றதில்வீற்றிருந்தானுமற்றைப்
பொறியரவத்தணையானுங்காணப்புகலிகிலாவியபுண்ணியனே
நெறிமுழுவோடியாழ்மான்கையின்றியிருந்தபிராணிதுவென்கொல்சொல்லாய்
வெறிகமழ்பூம்பொழில்சூழ்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே. (கூ)

பத்தர்கணம்பணிந்தேத்தவாய்த்தபான்மையதன்றியும்பல்சமணும்
புத்தருகின்றலர்தூற்றவந்தண்புகலிகிலாவியபுண்ணியனே
வித்தவத்தேரர்க்குமிலக்காய்கின்றவெம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
மித்தகர்வாழ்பொழில்சூழ்மிழலேவிண்ணிழிகோயில்விரும்பியதே. (கo)

விண்ணிழிகோயில்விரும்பிமேவும்மித்தகமென்கொலிதென்றுசொல்லிப்
புண்ணியனேப்புகலிக்கிலாவுபூங்கொடியோடிருந்தானேப்போற்றி
நண்ணியகீர்த்திஞானசம்பந்தன்மறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணியல்பாடல்வல்லார்களிற்தப்பரொடுவிண்பரிபாலகரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இவ்விரண்டுஞ் சோழநாட்டிலுள்ளவை. புகலி என்பது-சீகாழிக்கொருபெயர்.
வீழிமிழலையில் சுவாமிபெயர்-வீழியழகர், தேவியார்-சுந்தரகுசாம்பிகை.

९ திருக்காட்டுப்பள்ளி-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

செய்யருகேபுனல்பாயவோங்கிச்செங்கயல்பாயச்சிலமலர்த்தேன்
கையருகேகனிவாழையீன்றகானலொலிங்கமழ்காட்டுப்பள்ளி
பையருகேயழல்வாய்வைவாயப்பாம்பணையான்பணித்தோளிபாக
மெய்யருகேயுடையானுள்கிவிண்டவரேறுவர்மேலுலகே. (க, உ)

திரைகளெல்லாமலருஞ்சுமந்துசெழுமணிமுத்தொடுபொன்வரன்றிக்
கரைகளெல்லாமணிசேர்ந்துரிஞ்சிக்காவிரிகால்பொருகாட்டுப்பள்ளி
யுரைகளெல்லாமுணர்வெய்திநல்லவுத்தமராயுயர்ந்தாருலகி
லரவமெல்லாமரையார்த்தசெல்வர்க்காட்செயவல்லலறக்கலாமே. (ஙு)

தேனுடையான்வண்ணப்போர்வையினுஞ்சுண்ணவெண்ணீறுதைந்திலங்கு
நானுடையானிமையோர்பெருமானுண்ணநிவால்வழிபாடுசெய்யுங்
காலுடையான்கரிதாயகண்டன்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளி
மேலுடையானிமையாதமுக்கண்மின்னிடையாளொடும்வேண்டினானே. (ச)

சலசலசந்தகிலோடுமுந்திச்சந்தனமேகரைசார்த்தியெங்கும்
பலபலவாய்த்தலையார்த்தமண்டிப்பரப்பந்திழிகாவிரிப்பாங்கரின்வாய்க்
கலகலகின்றதிருங்கழலான்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளிச்
சொலவல்லதொண்டர்களேத்தநின்றருளும்வல்லான்கழல்சொல்லுவோமே. ()

தளையவிழ்தண்ணிறநீலநெய்தல்தாமரைசெங்கழுநீருமெல்லாங்
களையவிழுங்குழலார்கடியக்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளித்
தளைபயிலுங்குழலியாழ்முரலத்துன்னியவின்னிசையாற்றுதைந்த
வளைபயில்பாம்பரையார்த்தசெல்வர்க்காட்செயவல்லலறக்கலாமே. (சு)

மூடிகையினுற்றெருடுமோட்டுழவர்முன்கைத்தருக்கைக்கரும்பின்கட்டி
கடிகையினுலெறிகாட்டுப்பள்ளிகாதல்செய்தான்கரிதாயகண்டன்
பொடியணிமேனியினுனையுள்கிப்போதொடுநீர்சுமந்தேத்திமுன்னின்
றடிகையினுற்றொழவல்லதொண்டராருமீனையத்தராத்தாட்செய்வாரே. (எ)

பிறையுடையான்பெரியோர்கள்பெம்மான்பெய்கழலுடைறும்பெணியேத்த
மறையுடையான்மழுவாளுண்டையான்வார்தருமால்கடனஞ்சமுண்ட
கறையுடையான்கனலாடுகண்ணுற்சாமனிக்காய்ந்தவன்காட்டுப்பள்ளி
சூறையுடையான்குருட்டூதச்செல்வன்குரைகழலேகைகள்கூப்பினேமே. (அ)

செற்றவர்தம்மரணம்மவற்றைச்செவ்வழல்வாயெரியூட்டினான்றன்
கற்றவர்தாந்தொழுதேத்தநின்றருள்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளி
யுற்றவர்தாமுணர்வெய்திநல்லவும்பருள்ளார்தொழுதேத்தநின்ற
பெற்றமருங்பெருமானேயல்லால்பேசுவதும்மற்றோர்பேச்சிலேமே. (கூ)

ஒண்டுவரார் துகிலாடைமெய்போர்த்துச்சிகொளாமையுண்டேய்துரைக்குங்
குண்டர்களோட்டரைக்கூறையில்லார்கூறுவதாங்குணமல்லகண்டீ
ரண்டமறையவன் மாலுங்காணுவரியினுமுணைகாட்டுப்பள்ளி
வண்டமரும்மலர்க்கொன்றைமாலேவர்சடையான்கழல்வாழ்த்துவோமே. (கo)

பொன்னியல்தாமரைநீலநெய்தல்போதுகளாற்பொலிவெய்துபொய்கைக்
கன்னியர்தாங்குடைகாட்டுப்பள்ளிக்காதலனேக்கடற்காழியர்கோன்
முன்னியவின்னிசையாற்றுதைத்துசொல்லியஞானசம்பந்தனல்ல
தன்னிசையாற்சொன்னமாலேபத்துந்தாங்கவல்லார்புகழ்தாங்குவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இதுவுஞ் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-ஆரணியச்சுந்தர், தேவியார்-அகிலாண்டநாயகியம்மை
ஆடு பதிகம்-டு.

---

6 திருமருகலும்-திருச்செங்காட்டங்குடியும்.

வி ரு வு ரை.

பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமும்வேதமுமோதுநாவலர்தண்ணாளுமடிபரவ
மங்குல்மதிதவழ்மாடவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செங்கயலார்புனற்செல்வமல்குசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
சங்குல்வினங்கெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (க)

செய்தவஞ்மூவெரிகாவலோம்புநேர்புரிநூல்மறையாளரேத்த
மைதவழ்மாடமலிந்தவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செய்தவநான்மறையோர்களேத்துஞ்சீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கைதவழ்கூரெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (உ)

தோலொடுநூலிழைசேர்ந்தமார்பர்தொகுமறையோர்கள்வளர்த்தசெந்தீ
மால்புகைபோய்விம்முமாடவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
சேல்புல்குதண்வயற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கால்புல்குபைங்கழலார்க்கவாடுங்கணபதீச்சரங்காமுறவே. (கூ)

நாமருகேள்வியர்வேள்வியோவாகான்மறையோர்வழிபாடுசெய்ய
மாமருவும்மணிக்கோயில்மேயமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
தேமருபூம்பொழிற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
காமருசீர்மகிழ்ந்தெல்லியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (ச)

பாடல்முழவும்விழவுமோவாப்பன்மறையோரவர்தாம்பரவ
மாடநெடுங்கொடிவிண்டடவுமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
சேடகமாமலர்ச்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
காடகமேயிடமாகவாடுங்கணபதீச்சரங்காமுறவே. (ஞ)

புனையழலோம்புகையந்தணுளர்பொன்னடிநாடொறும்போற்றிசைப்ப
மனைகெழுமாடமலிந்தவீதிமருகல்விலாவியமைந்தசொல்லாய்
இனைகெழுதண்வயற்சேலுகளுந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கனைகெழுரெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (எ)

பூண்டங்குமார்பினிலங்கைவேந்தன்பொன்னெடுந்தோள்வரையாலடர்த்து
மாண்டங்குநூல்மறையோர்பரவமருகல்விலாவியமைந்தசொல்லாய்
சேண்டங்குமாமலர்ச்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
காண்டங்குதோள்பெயர்த்தெல்லியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (அ)

அந்தமுமாதியுநான்முகனுமரவணையானுமறிவரிய
மந்திரவேதங்களோதுநாவர்மருகல்விலாவியமைந்தசொல்லாய்
செந்தமிழோர்கள்பரவியேத்தஞ்சீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கந்தமகிற்புகையேகமழுங்கணபதீச்சரங்காமுறவே. (கூ)

இலைமருதேயழகாகநாளுமிடுதவர்க்காயொடுசுக்குத்தின்னு
நிலையமண்டோரைநீங்கின்றுநிதரல்லார்தொழுமாமருகல்
மலைமகள்தோள்புணர்வாயருளாய்மாசில்செங்காட்டங்குடியதனுட்
கலைமல்குதோலுடுத்தெல்லியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (கo)

நாலுங்குலக்கமுதோங்குகாழிஞானசம்பந்தனலந்திகழு
மாலின்மதிதவழ்மாடமோங்குமருகலின்மற்றதன்மேல்மொழிந்த
சேலுங்கயலுந்திரைத்தகண்ணார்சீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
சூலம்வல்லான்கழலேத்துபாடல்சொல்லவல்லார்வினையில்லையாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இவைகளுஞ் சோழநாட்டிலுள்ளவை.

திருமருகலில் சுவாமிபெயர்-மாணிக்கவண்ணர், தேவியார்-வண்டுவார்குழலி.

திருச்செங்காட்டங்குடியில் சுவாமிபெயர்-கணபதீசுவரர்,

தேவியார்-திருக்குழல்நாயகி.

---

7 திருநள்ளாறுந்-திருஆலவாயும்.

வி ஞ வு ரை.

பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாடகமெல்லடிப்பாவையோடும்படுபினக்காடிடம்பற்றிநின்று
நாடகமாடுநள்ளாறுடையநம்பெருமானீதுவென்கொல்சொல்லாய்
சூடகமுன்கைமடந்தைமார்கள்தூவணவரொடுந்தொழுதேத்திவாழ்த்த
வாடகமாடநெருங்குகூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (க)

6 திங்களம்போதுஞ்செழும்புனலுஞ்செஞ்சடைமாட்டயல்வைத்தகந்து
நங்கள்மகிழ்நள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
பொங்கிளமென்முலையார்களோடும்புனமயிலாடகிலாமுனீர்க்கு
மங்களகக்சுதைமாடக்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (உ)

7 தண்ணறுமத்தமுங்கூவிளமும்வெண்டலைமாலையுந்தாங்கியார்க்கு
ணண்ணலரியநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
புண்ணியவாணருமாதவரும்புகுந்துடனேத்தப்புனையிழையா
ரண்ணலின்பாடலெடுக்குங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (ஊ)

8 பூவினில்வாசம்புனலிற்பொற்புப்புதுவிரைச்சாந்தினிணைத்தோடு
நாவினிற்பாடனள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
தேவர்கள்தானவர்சித்தர்விச்சாதரர்கணத்தோடுஞ்சிறந்துபொங்கி
* யாவினிலந்தகந்தாட்டுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (எ)

9 செம்பொன்செய்மாலையும்வாசிகையுந்திருந்துசுரையுமலியும்பாட்டு
நம்பும்பெருமைநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
உம்பருநாகருலகுகந்தானுமொலிகடல்சூழ்ந்தவுலகத்தோரும்
அம்புதநால்களாணீடுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (ரு)

10 பாகமுந்தேவியையவைத்தக்கொண்டுபைவிரிதத்திப்பரியபேழ்வாய்
நாகமும்பூண்டநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
போகமுநின்னினைமனத்தவைத்துப்புண்ணியர்நண்ணும்புனர்வுபூண்ட
வாகமுடையவர்சேருங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (சு)

11 கோவணவாடையுநீறுபூச்சுங்கொடுமழுவேந்தலுஞ்செஞ்சடையு
நாவணப்பாட்டுநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
பூவணமேனியினேயமாதர்பொன்னுமணியுங்கொழித்தெடுத்து
ஆவணவீதியிலாடுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (எ)

12 இலங்கையிராவணன்வெற்பெடுக்கவெழில்விரலூன்றியிசைவிரும்பி
நலங்கொளச்சேர்ந்தநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
புலன்கழேச்செற்றுப்பொறியைநீக்கிப்புந்தியிலுறினீச்சந்திசெய்யு
மலங்கனல்லார்களமருங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (அ)

13 பணியுடைமாலுமலரினேனும்பன்றியும்வென்றிப்பறவையாயு
நணுகலரியநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
மணியொளிசங்கொலியோடுமற்றைமாமுரைகின்ஞலியென்றுமோவா
தணிகிளர்வேந்தர்புகுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (கூ)

14 தடுக்குடைக்கையருஞ்சாக்கியருஞ்சாதியில்நீங்கியவத்தவத்தர்
நடுக்குறுகின்றநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லா
யெடுக்கும்விழவுந்நன்னுள்விழவுமிரும்பலியின்பிணெடுத்திசையு
மடுக்கும்பெருமைசேர்மாடக்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (க0)

* ஆலினிலந்த-புஞ்சகவ்வியம்.

75 அன்புடையாணையரணக்கூடலாலவாய்மேவியதென்கொலென்று
நன்பொனேகாதணேகள்ளாற்றணேயம்பெறப்போற்றிநலங்குலாவு
பொன்புடைசூழ்தருமாடக்காழிப்பூசுரன்ஞானசம்பந்தன்சொன்ன
வின்புடைப்பாடல்கள்பத்தும்வல்லாரிமையவரேத்தவிருப்பர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநள்ளாறு-சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தெர்ப்பாரணியேசுவரர், தேவியார்-போகமார்த்தபூண்முலையம்மை.

---

8 திரு ஆவூர்ப்பசுபதீச்சரம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

76 புண்ணியர்பூதியர்பூதகாதர்புடைபடுவார்தம்மனத்தார்தங்கட்
கண்ணியரென்றென்றுகாதலாளர்கைதொழுதேத்தவிருந்தவூராம்
விண்ணுயர்மாளிகைமாடவீதிவிரைகமழ்சோலைசூலாவியெங்கும்
பண்ணியல்பாடலறாதவாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (க)

77 முத்தியர்மூப்பிலராப்பிலுள்ளார்முக்கணர்தக்கன்றன்வேள்விசாடு
முத்தியரென்றென்றடியரேத்தமையணங்கொடிருந்தவூராந்
தொத்தியலும்பொழில்மாடுவண்டுதைதந்தெங்குந்தூமதுப்பாயக்கோயிற்
பத்திசைபாடலறாதவாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (உ)

78 பொங்கிவரும்புனல்சென்னிவைத்தார்போம்வழிவந்திழிவேற்றமானு
ரிங்குயர்ஞானத்தர்வானேரேத்துமிறையவரின்றுமிருந்தவூராந்
தெங்குயர்சோலைசேராசைசாலிதிளைக்கும்வீளைவயல்சேரும்பொய்கைப்
பங்கயமங்கையிரும்புமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (ஊ)

79 தேவியோர்கூறினரேறதேறுஞ்செலவினர்கல்குரவெண்ணீர்க்கு
மாவியரந்தணர்கல்லதீர்க்குமப்பனரங்கேயமர்ந்தவூராம்
பூவியலும்பொழில்வாசம்வீசப்புரிகுழலார்சுவடொற்றிமுற்றப்
பாவியல்பாடலறாதவாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (எ)

80 இந்தணையுஞ்சடையார்விடையாரிப்பிறப்பெண்ணியறுக்கவல்லார்
வந்தணைந்தின்னிசைபாடுவோர்ப்பால்மன்னினர்மன்னியிருந்தவூரஞ்
சொந்தணையுங்குழலார்விழவிற்கூட்டமிடையிடைசேரும்வீதிப்
பந்தணையும்விரலார்தமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (ஏ)

81 குற்றமறத்தார்குணத்தினுள்ளார்கும்பிடுவார்தமக்கன்புசெய்வா
சொற்றையிடையினர்கெற்றிக்கண்ணுறுபதியாகுஞ்செறிகொள்மாடஞ்
சுற்றியவாசலின்மாதர்விழாச்சொற்கவிபாடுநிதானநல்கப்
பற்றியகையினர்வாழுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (ஐ)

நீறுடையார்நெடுமால்வணங்குநிமிர்சடையார்நினைவார்தமுள்ளங்
கூறுடையாருடைக்கோவணத்தார்குவலயமேத்தவிருந்தவூராந்
தாறுடைவாழையிற்கூழைமந்திதருகனியுண்டுமீண்டிட்டினத்தைப்
பாறிடப்பாய்ந்துபயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (எ)

வெண்டலைமாலிவிரவிப்பூண்டமெய்யுடையார்விறலாரரக்கன்
வண்டமர்பூமுடிசெற்றுகந்தமைந்தரிடம்வளமோங்கியெங்கும்
கண்டலர்சிந்தைக்கருத்தின்மிக்கார்கதியருளென்றுகையாரக்கூப்பிப்
பண்டலர்கொண்டுபயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (அ)

மாலுமயனும்வணங்கிநேடமற்றவருக்கெரியாகிநீண்ட
சீலமறிவரிதாகிநின்றசெம்மையினரெவர்சேருமூராங்
கோலவிழாவினரங்கத்தேறிக்கொடியிடைமாதர்கள்மைந்தரோடும்
பாலெனவேமொழிந்தேத்துமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (கூ)

பின்னியதாழ்சடையார்பிதற்றும்பேதையராஞ்சமணசாக்கியர்கள்
தன்னியலுமுரைகொள்ளகில்லாச்சைவரிடந்தளவேலுசோலைத்
துன்னியமாதருமைந்தர்தாமுஞ்சூழ்மயிடைமூழ்கித்தொடர்ந்தசிந்தைப்
பன்னியபாடல்பயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (கூ)

எண்டிசையாரும்வணங்கியேத்துமெம்பெருமானெயிலில்கொளாவூர்ப்
பண்டுரியார்சிலர்தொண்டர்போற்றும்பசுபதீச்சரத்தாதிதன்மேற்
கண்டல்கள்மிண்டியகானற்காழிக்கவுணியன்ஞானசம்பந்தன்சொன்ன
கொண்டினிதாவிசைபாடியாடிக்கூடுமவருடையார்கள்வானே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பசுபதீச்சுரர், தேவியார்-மங்களநாயகியம்மை.

ஏ திருவேணுபுரம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

எ1 வண்டார்குழலரிவையொடும்பிரியாவகைபாகம்
பெண்டான்மிகவாளன்பிறைச்சென்னிப்பெருமானூர்
தண்டாமரைமலராளுறைதவளக்நெடுமாடம்
விண்டாங்குவபோலும்மிகுவேணுபுரமதுவே. (க)

எ2 படைப்புந்நிலையிறுதிப்பயன்பருமையொடுநேர்மை
கிடைப்பல்கணமுடையான்கிறிபூதப்படையானூர்
* குடைப்பாளையின்கமுகின்னெடுபுன்னைமலர்நாற்றம்
விடைத்தேவருதென்றல்மிகுவேணுபுரமதுவே. (உ)

எ3 கடந்தாங்கியகரியையவர்வெருவவுரிபோர்த்துப்
படந்தாங்கியவரவக்குழைப்பரமேட்டிதன்பழவூர்

* புடைப்பாளை என்றும் பாடம்.

நடந்தாங்கியகடையார்நலபவளத்துவர்வாய்மேல்
விடந்தாங்கியகண்ணுர்பயில்வேணுபுரமதுவே. (ரு)

90 தக்கன்றனசிரமொன்றினையரிவித்தவன்றனக்கு
மிக்கவ்வரமருள்செய்தவெம்விண்ணோர்பெருமானூர்
பக்கம்பலமயிலாடிடமேகம்முழவதிர
மிக்கம்மதவண்டார்பொழில்வேணுபுரமதுவே. (ச)

91 தானவிதவுருவாய்நமையாள்வானணுகாதார்
வானர்திரிபுரமூன்றெரியுண்ணச்சிலைதொட்டான்
றேனர்ந்தெழுகதலிக்கனியுண்பான்றிகழ்மஞ்தி
மேனெக்கிண்றிரங்கும்பொழில்வேணுபுரமதுவே. (ஙி)

92 மண்ணோர்களும்விண்ணோர்களும்வெருவிமிகவஞ்சக்
கண்ணுர்சலமூடிக்கடலோங்கவ்வுயர்ந்தானூர்
தண்ணுர்நறுங்கமலம்மலர்சாயவ்வீளவாளே
விண்ணோர் * துதிகொள்ளும்வியன்வேணுபுரமதுவே. (சு-எ)

93 மலியான்மகளஞ்சவ்வரையெடுத்தவ்வலியரக்கன்
தலைதோளவைநெரியச்சரணுகிர்வைத்தவன்றன்னூர்
கலையாரெடுசுருதித்தொகைகற்றோர்மிகுசூட்டம்
விலையாயினசொற்றேர்தருவேணுபுரமதுவே. (அ)

94 வயமுண்டவமாலும்மடிகாணுதலமாக்கும்
பயனியபிரமன்படுதலையேற்கியபரனூர்
கயமேவியசங்கந்தருகழிவிட்டியர்செல்நெல்
வயன்மேவிவந்துறங்கும்பொழில்வேணுபுரமதுவே. (கூ)

95 மாசேறியவுடலாரமண் † கழுக்கள்ளொடுதேரர்
தேசேறியபாதம்வணங்காமைத்தெரியானூர்
தூசேறியவல்குற்றுடியிடையார்துணைமுலையார்
வீசேறியபுருவத்தவர்வேணுபுரமதுவே. (கo)

96 வேதத்தொலியானம்மிகுவேணுபுரந்தன்னைப்
பாதத்தினின்மனம்வைத்தெழுபந்தன்றனபாட
லேதத்தினையில்லாவிவைபத்தும்மிசைவல்லார்
கேதத்தினையில்லார்சிவகெதியைப்பெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வேணுபுரம்-என்பது சோழிக்கொருபெயர்.

---

* விண்ணோர் குதிகொள்ளும் என்றும் பாடம். † குழுக்கள் என்றும் பாடம்.

⑩ திரு அண்ணாமலை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

97 உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலோம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (க)

98 தேமாங்கனிகடுவன்கொளவீடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுதுண்டுளிசிதற
வாமாம்பிணையுணையும்பொழிலண்ணாமலையண்ணல்
பூமான்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (உ)

99 பீலிம்மயில்பெடையோடுறைபொழில்சூழ்கழைமுத்தஞ்
சூலிம்மணிதரைமேனிறைசொரியும்விரிசார
லாலிம்மழைதவழும்பொழிலண்ணாமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரனபுகழே. (ங)

100 உதிரும்மயிரிடுவெண்டலைகலனுவுலகெல்லா
மெதிரும்பலியுணலாகவுமெருதேறுவதல்லால்
முதிருஞ்சடையிளவெண்பிறைமுடிமேல்கொளவடிமே
லதிருங்கழலடிகட்கிடமண்ணாமலையதுவே. (ச)

101 மரவஞ்சிலைதரளம்மிகுமணியுந்துவெள்ளருவி
யரவஞ்செயமுரவம்படுமண்ணாமலையண்ண
லுரவஞ்சடையுலவும்புனலுனதுமோரார்
குரவங்கமழ்நறுமென்குழலுமைபுல்குதல்குணமே. (ஞ)

102 பெருகும்புனலண்ணாமலைபிறைசேர்கடல்நஞ்சைப்
பருகுந்தனி துணிவார்பொடியணிவாரதுபருகிக்
கருகும்மிடறுடையார்கமழ்சடையார்கழல்பரவி
யுருகும்மனமுடையார்தமக்குறநோயடையாவே. (ஃ)

103 கரிகாலனகுடர்கொள்வனகழுகாடியகாட்டில்
நரியாடியநகுவெண்டலையுதையுண்டவையுருள
வெரியாடியவிறைவர்க்கிடமினவண்டிசைமுரல
வரியாடியகண்ணாலெமண்ணாமலையதுவே. (எ)

104 ஒளிறுபுலியதளாடையனுமையஞ்சுதல்பொருட்டாற்
பிளிறுகுரல்மதவாரணவதனம்பிடித்துரித்து
வெளிறுபடவிலையாடியவிகிர்தன்னிராவணனை
யளிறுபடவடர்த்தானிடமண்ணாமலையதுவே. (அ)

105 விளவார்கனிபடநூறியகடல்வண்ணனும்வேதக்
கிளர்தாமரைமலர்மேலுறைகேடில்புகழோனு
மளவாவணமழலாகியவண்ணமலையண்ணல்
தளர்ராமுலைமுறுவல்லுமைதலைவன்னடிசரணே. (கூ)

106 வேர்வன்துறமாசூர்தரவெயிலின்றுழல்வாரு
மார்வம்புதைமலிசீவரமறையாவருவாரு
மாரம்பர்தமுரைகொள்ளன்மினண்ணுமலையண்ணல்
கூர்வெண்மழுப்படையானலகழல்சேர்வதுகுணமே. (கo)

107 வெம்புர்தியகதிரோனெளிவிலரும்விரிசார
லம்புர்திமுவெயிலெய்தவனண்ணுமலையதனைக்
கொம்புர்துவருயிலாலுவருளிர்காழியுள்ஞான
சம்பர்தனதமிழ்வல்லவரடிபேணுதல்தவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது நகொட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அருணசலேசுவரர், தேவியார்-உண்ணமுலையம்மை.

ஆ பதிகம்-கo.

11f திருவீழிமிழலை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

108 சடையார்புனலுடையாளெருசரிகோவணமுடையான்
படையார்மழுவுடையான்பலபூதப்படையுடையான்
மடமான்விழியுமைமாதிடமுடையாளெனையுடையான்
விடையார்கொடியுடையானிடம்வீழிம்மிழலையே. (க)

109 சுரும்முதலொன்றுயிருபெண்ணுண்குணமூன்றுய்
மாறுமறைநான்காய்வருபூதம்மவையைந்தா
யாறுச்சுவையேழோசையொடெட்டுத்திசைதானாய்
வேறுயுடனானிடம்வீழிம்மிழலையே. (உ)

110 வம்மின்னடிமீர்காண்மலரிட்டுத்தொழுதய்ய
வும்மன்பினெடும்மன்புசெய்தீசனுறைகோயில்
மும்மென்றிசைமுரல்வண்டுகள்கொண்டித்திசையெங்கும்
விம்மும்பொழில்சூழ்தண்வயல்வீழிம்மிழலையே. (ங)

111 பண்ணும்பதமேழும்பலவோசைத்தமிழ்வையு
முண்ணின்றதொர்சுவையும்முறுதாளத்தொலிபலவு
மண்ணும்புனலுயிரும்வருகாற்றுள்சுடர்மூன்றும்
விண்ணும்முழுதானானிடம்வீழிம்மிழலையே. (ச)

112 ஆயாதனசமயம்பலவறியாதவர்சொற்றியின்
றூயானவனுயிர்கட்குமுன்றலையானவன்மறைமுத்
தீயானவன்சிவனெம்மிறைசெல்வத்திருவாரூர்
மேயானவனுறையும்மிடம்வீழிம்மிழலையே. (நி)

113 கல்லானிழற்கீழாயிடர்காவாயெனவானே
றெல்லாமொருதேராயயன்மறைபூட்டிநின்றுய்ப்ப
வல்வாயெரிகாற்றீர்க்கரிகோல்வாசுகிநாண்கல்
வில்லாலெயிலெய்தானிடம்வீழிம்மிழலையே. (சு)

114 கரத்தால்மலிசிரத்தான்கரியுரித்தாயதோர்படத்தான்
புரத்தார்பொடிபடத்தண்டிபணிமூவர்கட்கோவா
வரத்தான்மிகவளித்தானிடம்வளர்புன்னைமுத்தரும்பி
விரைத்தாதுபொன்மணியீன்றணிவீழிம்மிழலையே. (எ)

115 முன்னிற்பவரில்லாமுரணக்கன்வடதயிலை
தன்னைப்பிடித்தெடுத்தான்முடிதடந்தோளிறவூன்றிப்
பின்னைப்பணிந்தேத்தப்பெருவாள்பேரொடுகொடுத்த
மின்னிற்பொலிசடையானிடம்வீழிம்மிழலையே. (அ)

116 பண்டேழுலகுண்டானவைகண்டானுமுன்னறியா
வொண்டீயுருவானனுறைகோயில்நிறைபொய்கை
வண்டாமரைமலர்மேன்மடவன்னன்னடைபயில
வெண்டாமரைசென்றாதிர்வீழிம்மிழலையே. (கூ)

117 மசங்கற்சமண்மண்டைக்கையர்குண்டக்குணமிலிகள்
சிங்கும்பிறப்பறுத்தானிடமிருந்தேனகளித்திரைத்துப்
பசும்பொற்கிளிகளிமஞ்ஞைகளொளிகொண்டெழுபகலோன்
விசும்பைப்பொலிவிக்கும்பொழில்வீழிம்மிழலையே. (க0)

118 வீழிம்மிழலைம்மேலையவினிர்தன்றணிவிரைசேர்
காழிந்நகர்க்கலிஞானசம்பந்தன்றமிழ்பத்தும்
யாழின்னிசைவல்லார்சொலக்கேட்டாரவரெல்லா
மூழின் * வலிவினீபோயிடவுயர்வானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

19ஆ † திருமுதுகுன்றம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

119 மத்தாவரைநிறுவிக்கடல்கடைந்தவிடமுண்ட
தொத்தார்தருமணிநீண்முடிச்சுடர்வண்ணனிடமாங்
கொத்தார்மலர்குளிர்சந்தகிலொளிர்குங்குமங்கொண்டு
முத்தாறுவந்தடிவீழ்தருமுதுகுன்றடைவோமே. (க)

* ஊழின்மலி என்றும் பாடம். † திருமுதுகுன்றம் – விருத்தாசலம்.

120 தழையார்வடவியவீ தனிற்றவமேபுரிசைவ
னிழையாரிடைமடவாளொடுமினிதாவுறையிடமா
மழைவானிடைமுழவவ்வெழில்வளர்வாளுகிரெரிகண்
முழைவாளரிகுமிறும்முயர்முதுகுன்றடைவோமே. (உ)

121 வினையாததொர்பரிசில்வருபசுபாசவேதனையொண்
டனையாயின தவிரவ்வருள்கலிவன்ன துசார்வாங்
கனையார்தருகதிராயிரமுடையவ்வவனேடும்
முனைமாமதிதவழும்முயர்முதுகுன்றடைவோமே. (ஊ)

122 சுரர்மாதவர்தொகுகின்னரரவரோதொலிவில்லா
ரரரரினபன்முனிவர்தொழவிருந்தானிடநலமா
ரரைசார்வரவணிபொற்கலனவைகொண்டுபண்ணளு
முரைசார்வருமணமொய்ம்புடைமுதுகுன்றடைவோமே. (எ)

123 அறையார்கழலந்தன்றனையின்மூவிலையழகார்
கறையார்கெடுவேலின்மிசையேற்றுனிடங்கருதில்
மறையாயினபலசொல்லியொண்மலர்சாந்தவைகொண்டு
முறையால்மிகுமுனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (ஏ)

124 ஏவார்சிலையெயினன்னுருவாகியெழில்விசயற்
கோவாதவின்னருள்செய்தவெம்மொருவற்கிடமுலகிற்
சாவாதவர்பிறவாதவர்தவமேமிகவுடையார்
மூவாதபன்முனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (ஐ)

125 தழல்சேர்தருதிருமேனியர்சசிசேர்சடைமுடிய *
மழமால்விடைமிகவேறியமறையோனுறைகோயில்
விழவோடொலிமிகுமங்கையர்தகுமாடசசாலை
முழவோடிசைநடமு † ஞ்செயுமுதுகுன்றடைவோமே. (ஒ)

126 செதுவாய்மைகள்கருதிவ்வரையெடுத்ததிறலரக்கன்
கதுவாய்கள்பத்தலறியிடக்கண்டானுறைகோயின்
மதுவாயசெங்காந்தண்மலர்கிறையக்குறை ‡ யில்லா
முதுவேய்கண்முத்தந்திரும்பொழில்முதுகுன்றடைவோமே. (அ)

127 இயலாடியபிரமன்னரியிருவர்க்கறிவரிய
செயலாடியதீயாருருவாகியெழுசெல்வன்
புயலாடுவண்பொழில்சூழ்புனற்படப்பைத்தடத்தருகே
முயலோடவெண்கயல்பாய்தருமுதுகுன்றடைவோமே. (கூ)

128 அருகரொடுபுத்தரவரறியாவரன்மலியான்
மருகன்வருமிடபக்கொடியுடையானிடமலரார்
கருகுகுழன்மடவார்கடிகுறிஞ்சியதபாடி
முருகன்னதுபெருமைகர்முதுகுன்றடைவோமே. (கஅ)

* முடியர் என்றும் பாடம். † நடமுன் செயும் என்றும் பாடம்.
‡ குறைவில்லா என்றும் பாடம்.

129 முகில்சேர்தருமுதுகுன்றுடையாளினம்மிகுதொல்சீர்ப்
புகலிந்நகர்மறைஞானசம்பந்தன்னுரைசெய்த
நிகரில்லனதமிழ்மாலைகளிசையோடிவைபத்தும்
பகரும்மடியவர்கட்கிடர்பரவம்மடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது-இதுவேவிருத்தாசலம்.
சுவாமிபெயர்-பழமலைநாதர், தேவியார்-பெரியநாயகியம்மை.

13 திருவியலூர்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

130 குரவங்கமழ்குறுமென்குழலரிவையவள்வெருவப்
பொருவெங்கரிபடவென்றதனிரிவையுடலணிவோ
னரவம்மலிபுனலும்மிளமதியுந்நகுதலையும்
விரவுஞ்சடையடிகட்கிடம்விரிநீர்வியலூரே. (க)

131 ஏரூர்தருமொருவன்பலவுருவன்னிலையானை
ஞரூர்தருசடையன்னனலுருவன்புலியுடையான்
மாரூர்புரமெரியச்சிலைவளைவித்தவன்மடவாள்
வீரூர்தரின்றுனிடம்விரிநீர்வியலூரே. (உ)

132 செம்மென்சடையவைதாழ்வுறமடவார்மனைதோறும்
பெய்ம்மின்பலியெனநின்றிசைபகர்வாரவரிடமா
மும்மென்றெழுமருவித்திரள்வரைபற்றிடவுரைமேல்
விம்மும்பொழில்கெழுவும்வயல்விரிநீர்வியலூரே. (ங)

133 அடைவாகியவடியார்தொழவலரோன்றலையதனின்
மடவாரிடுபலிவந்துணலுடையானவனிடமாங்
கடையார்தரவகிலார்கழைமுத்தந்திரைசிந்தி
மிடையார்பொழில்புடைசூழ்தருவிரிநீர்வியலூரே. (சு)

134 எண்ணூர்தருபயனையனவனுய்மிகுலையாய்ப்
பண்ணூர்தருமறையாயுயர்பொருளாயிறையவனுய்க்
கண்ணூர்தருமூருவாகியகடவுள்ளிடமெனலாம்
விண்ணேரொடுமண்ணேர்தொழுவிரிநீர்வியலூரே. (எ)

135 வசைவிற்கொடுவருவேடுவனவனுய்நிலையறிவான்
றிசையும்றவர்காணச்செருமலைவானிலையவணை
யசையப்பொருதசையாவணமவனுக்குயர்படைகள்
விசையற்கருள்செய்தானிடம்விரிநீர்வியலூரே. (சு)

136 மானேரவுடையானிரவுடையான்பகல்நட்ட
மூனேர்தருமுயிராயுயர்விசையான்மின்பொருள்கள்

தானகிய தலைவன்னென நினைவாரவரிடமா
மேனடியர்விண்ணோர்தொழும்விரிநீர்வியலூரே. (எ)

137 பொருவாரெனக்கெதிராரெனப்பொருப்பையெடுத்தான்றன்
கருமால்வரைகரந்தோளுரங்கதிர்நீண்முடிநெரிந்து
சிரமாயினகதறச்செறிகழல்சேர்திருவடியின்
விரலாலடர்வித்தானிடம்விரிநீர்வியலூரே. (அ)

138 வளம்பட்டலர்மலர்மேலயன்மாலும்மொருவகையா
லளம்பட்டறிவொண்ணுவகையழலாகியவண்ண
லொளம்பட்டெழுதழல்தூணதனடிவேயொருவுருவம்
விளம்பட்டருள்செய்தானிடம்விரிநீர்வியலூரே. (கூ)

139 தடுக்காடுடன்மறைப்பாரவர்தவர்சீவரமூடிப்
பிடக்கேயுரைசெய்வாரொடுபேணுர்நமர்பெரியோர்
கடற்சேர்தருவிடமுண்டமுதமரர்க்கருள்செய்த
விடைச்சேர்தருகொடியானிடம்விரிநீர்வியலூரே. (கo)

140 விளங்கும்பிறைசடைமேலுடையிகிர்தன்வியலூரைத்
தளங்கொண்டதொர்புகலித்தகுதமிழ்ஞானசம்பந்தன்
முளங்கில்தமிழ்பரவித்தொழுமடியாரவரென்றும்
விளங்கும்புகழதனெய்துவர்விண்ணும்முடையாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-யோகாநந்தேசுவரர், தேவியார்-சவுந்தர * நாயகியம்மை.

---

14 திருக்கொடிங்குன்றம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

141 வானிற்பொலிவெய்தும்மழைமேகங்கிழித்தோடிக்
கூனற்பிறைசேருங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
ஆனிற்பொலிவைந்தும்மமர்ந்தாடியுலகேத்தத்
தேனிற்பொலிமொழியாளொடுமேயான்திருநகரே. (க)

142 மயில்புல்குதண்பெடையோடனலும்வளர்சாரற்
குயிலின்னிசைபாடுங்குளிர்சேரிலக்கொடுங்குன்றம்
அயில்வேல்மலிநெடுவெஞ்சுடர்னலேந்திநின்றாடி
யெயின்முன்படவெய்தானவன்மேயவெழிலகரே. (உ)

143 மிளிரும்மணிபைம்பொன்னெடிவிரைமாமலருந்திக்
குளிரும்புனல்பாயுங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
இளிர்தங்கையொடிளவெண்மதிகெழுவுஞ்சடைதன்மேல்
வளர்கொன்றையுமதமத்தமும்வைத்தான்வளநகரே. (ங)

* சாந்தநாயகியம்மை என்றும் பாடம்.

144 பருமாமதகரியோடரியிழியும்வீரிசாரற்
குருமாமணிபொன்னோடிழியருவிக்கொடுங்குன்றம்
பொருமாவெயில்வரைவிற்றருகூணியிற்பொடிசெய்த
பெருமானவனுமையாளொடுமேவும்பெருநகரே. (சு)

145 மேகத்திடிகுரல்வன்றெழவெருவிவ்வரையிழியுங்
கூகைக்குலமோடித்திரிசாரற்கொடுங்குன்றக்
நாகத்தொடுமிளவெண்பிறைசூடிந்நலமங்கை
பாகத்தவனிமையோர்தொழுமேவும்பழநகரே. (நு)

146 கைம்மாமதகரியின்னினமிடியின்குரலதிரக்
கொய்ம்மாமலர்ச்சோலைபுகமண்டுங்கொடுங்குன்றம்
அம்மானெனவுள்கித்தொழுவார்கட்கருள்செய்யும்
பெம்மானவனிமையோர்தொழுமேவும்பெருநகரே. (சூ)

147 மரவத்தொடுமணமாதவிமல்வல்லதுவிண்ட
குரவத்தொடுவிரவும்பொழில்சூழ்தண்கொடுங்குன்றம்
அரவத்தொடுமிளவெண்பிறைவிரவும்மலர்க்கொன்றை
நிரவச்சடைமுடிமேலுடன்வைத்தானெடுநகரே. (எ)

148 மூட்டாமுதுகரியின்னினமுதுவேய்கூளமுனிந்து
குட்டாச்சுனையவைமண்டிநின்றுடுங்கொடுங்குன்றம்
ஓட்டாவரக்கன்றோண்முடியொருபஃதவையுடனே
பிட்டானவனுமையாளொடுமேவும்பெருநகரே. (அ)

149 அறையும்மரிகுரலோசையையஞ்சியடுமானை
குறையும்மனமாகிம்முழைவைகுங்கொடுங்குன்றம்
மறையும்மவையுடையனெனநெடியானெனவிவர்க
ளிறையும்மறிவொண்ணுதவன்மேயவெழினகரே. (சூ)

150 மத்தக்களிறுளிவ்வரவஞ்சிம்மலிதன்னைக்
குத்திப்பெருமுழைதன்னிடைவைகுங்கொடுங்குன்றம்
புத்தரொடுபொல்லாமனச்சமணர்புறங்கூறப்
பத்தர்க்கருள்செய்தானவன்மேயபழநகரே. (கo)

151 கூனற்பிறைசடைமேன்மிகவுடையான்கொடுங்குன்றை
கானற்கழுமலமாநகர்த்தலிவன்னலதவுணி
ஞானத்துயர்சம்பந்தனலங்கொள்தமிழ்வல்லா
ரூனத்தொடுதுயர்தீர்ந்துலகேத்துமெழிலோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கொடுங்குன் † றேசுவரர், தேவியார்-‡ அமுதவல்லியம்மை.

---

† கொடுங்குன்றீசர் என்றும் பாடம். ‡ குயிலமுதநாயகி என்றும் பாடம்.

15 திருநெய்த்தானம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

152 மையாடியகண்டன்மலைமகள்பாகமதுடையான்
கையீடியகேடில்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியசுவலீரம்மலர்கயனத்தவளோடுங்
கெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. (க)

153 பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறைய்ம்புனலரவும்படுசடையெம்பெருமானூ
ரறையும்புனல்வருகாவிரியலைசேர்வடகுரைமேல்
நிறையும்புனைமடவார்பயில்நெய்த்தானமெனீரே. (உ)

154 பேயாயினபாடப்பெருகடமாடியபெருமான்
வேயாயினதோளிக்கொருபாகம்மிகவுடையான்
தாயாகியவுலகங்களினிலேபேறுசெய்தலிவன்
னேயாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. (ங)

155 சுடுநீறணியண்ணல்சுடர்சூலம்மனலேந்தி
நடுகள்ளிருணடமாடியநம்பன்னுறையிடமாங்
கடுவாளிளவரவாடுமிழ்கடனஞ்சமதுண்டா
னெடுவாளிகள்சூதிகொள்ளுயர்நெய்த்தானமெனீரே. (ச)

158 துகராரமொடேலம்மணிசெம்பொன்னுரையுந்திப்
பகராவருபுனல்காவிரிபரவிப்பணிந்தேத்துந்
திகரான்மணலிடுதன் * கரைதிகழ்வாயநெய்த்தான
நகரானடியேத்தநமைநடலேபடையாவே. (ஙி)

157 விடையார்கொடியுடையெவ்வணல்வீசுதார்வெளேயெலும்பும்
உடையார்நமமாலீச்சடையுடையாரவர்மேய
புடையேபுனல்பாயும்வயல்பொழில்சூழ் † தனைநத்தானம்
மடையாதவரென்றும்மமருலகம்மடையாரே. (சு)

158 நிழலார்வயல்கமழ்சோலைகணிறைதின்றநெய்த்தானத்
தழலானவனனலங்கையிலேந்தியழகாய
கழலானடிநாளுங்கழலாதேவிடலின்றித்
தொழலாரவர்நாளுந்துயரின்றித்தொழுவாரே. (எ)

159 அறையார்கடலிலங்கைக்கிறையணிசேர்கயிலாய
பிறையாரமுனெடுத்தானிருபதுதோளுறவூன்றி
நிறையார்புனனெய்த்தானநன்னிகழ்சேவடிபரவக்
கறையார்கதிர்வாளீந்தவர்கழலேத்துதல்கதியே. (அ)

* தண்கரை என்றும் பாடம். † சூழ்ந்த நெய்த்தானம் என்றும் பாடம்.

160 கோலம்முடிகெடுமாலொடுகொய்தாமரையானுஞ்
சீலம்மறிவரிதாயொளிதிகழ்வாயநெய்த்தானங்
காலம்பெறமலர்நீரவைதூவித்தொழுதேத்தும்
ஞாலம்புகழடியாருடனுறுநோய்கலியாவே. (கூ)

161 மத்தம்மலிசித்தத்திறைமதியில்லவர்சமணர்
புத்தரவர்சொன்னம்மொழிபொருளாகினையேன்மி
னித்தம்பயினிமலன்னுறைநெய்த்தானமதேத்துஞ்
சித்தம்முடையடியாருடல்செறுநோயடையாவே. (கo)

162 தலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
கிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானநினிகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வன்னடிசேர்வர்சிவகதியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நெய்யாடியப்பர், தேவியார்-வாலாம்பிகையம்மை.

ஆ பதிகம்-கடு.

---

16 திருப்புள்ளமங்கை-திரு ஆலந்துறை-
பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

163 பாலுந்தயிரளாயினபரமன்பிரமன்ருன்
போலுந்திறலவர்வாழ்தருபொழில்சூழ்புளமங்கைக்
காலன்றிறலறச்சாடியகடவுள்ளிடங்கருதி
லாலந்துறைதொழுவார்தமையடையாவினைதானே. (க)

164 மலியான்மகள்கணவன்மலிகடல்சூழ்தருதன்மைப்
புலியாயினகளைவானிடம்பொழில்சூழ்புளமங்கைக்
கலியால்மலிமறையோரவர்கருதித்தொழுதேத்த
அலியார்புனல்வருகாவிரியாலந்துறையதுவே. (உ)

165 கறையார்மிடறுடையான்கமழ்கொன்றைச்சடைமுடிமேற்
பொறையார்தருகங்கைப்புனலுடையான்புளமங்கை
சிறையார்தருகளிவண்டறைபொழில்சூழ்திருவாலந்
துறையானவனறையார்கழல்தொழுமின்றுதிசெய்தே. (கூ)

166 தணியார்மதியரவின்னெடுவைத்தானிடமொய்த்தெம்
பணியாயவனடியார்தொழுதேத்தும்புளமங்கை

மணியார்தருகனகம்மலைவயிரத்திரளோடும்
மணியார்மணலணிகாவிரியாலந்துறையதுவே (ச)

167 மெய்த்தன்னுறும்வினைதீர்வகைதொழுமின்செழுமலரின்
கொத்தின்னெடுசந்தரகில்கொணர்காவிரிக்கரைமேற்
பொத்தின்னிடையாந்தைபலபாடும்புளமங்கை
யத்தன்னமையாள்வாணிடமாலந்துறையதுவே. (ஙி)

168 மன்னுனவனுலகிற்கொருமழையானவன்பிழையில்
பொன்னுனவன்முதலானவன்பொழில்சூழ்புளமங்கை
யென்னுனவனிசையானவனினைகாயிறின்சோதி
யன்னுனவனுறையும்மிடமாலந்துறையதுவே. (சு)

169 முடியார்தருசடைமேன்முளியிளவெண்மதிசூடிப்
பொடியாடியதிருமேனியர்பொழில்சூழ்புளமங்கைக்
கடியார்மலர்புனல்கொண்டுதன்கழலேதொழுதேத்தும்
மடியார்தமக்கினியானிடமாலந்துறையதுவே. (எ)

170 இலங்கைம்மன்னன்முடிதோளிறவெழிலார்திருவிரலால்
லிலங்கல்லிடையடர்த்தானிடம்வேதம்பயின்றேத்திப்
புலன்கள்தமைவென்றூர்புகழவர்வாழ்புளமங்கை
யலங்கன்மலிசடையானிடமாலந்துறையதுவே. (அ)

171 செறியார்தருவெள்ளைத்திருநீற்றின்றிருமுண்டப்
பொறியார்தருபுரிநூல்வன்மார்பன்புளமங்கை
வெறியார்தருகமலத்தயன்மாலுந்தினைநாடி
யறியாவகைநின்றனிடமாலந்துறையதுவே. (கூ)

172 நீதியறியாதாரமண்கையரொடுமண்டைப்
போதியவரோதும்முரைகொள்ளார்புளமங்கை
யாதியவர்கோயில்திருவாலந்துறைதொழுமின்
சாதிம்மிகுவானேர்தொழுதன்மைபெறலாமே. (கo)

173 பொங்கின்னிடைத்தேனுறியபொழில்சூழ்புளமங்கை
யங்கண்புனல்வருகாவிரியாலந்துறையானைக்
கங்தம்மலிகமழ்காழியுட்கலிஞானசம்பந்தன்
சந்தம்மலிபாடல்சொலியாடத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பசுபதிநாயகர், தேவியார்-பால் * வளைநாயகியம்மை.

---

* பல்வளைநாயகியம்மை என்றும் பாடம்.

17 திருஇடும்பாவனம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

174 மனமார்தருமடவாரொடுமகிழ்மைந்தர்கண்மலர்தூய்த்
தனமார்தருசங்கக்கடல்வங்கத்திரளுந்திச்
சினமார்தருதிறல்வாளெயிற்றரக்கன்மிருகுன்றி
லினமாதவரிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (க)

175 மலையார்தருமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
நிலையார்தருநிமலன்வலிநிலவும்புகழொளிசேர்
கலையார்தருபுலவோரவர்காவன்மிருகுன்றில்
இலையார்தருபொழில்சூழ்தருமிடும்பாவனமிதுவே. (உ)

176 சிலம்மிருகித்தத்தவர்சிந்தித்தெழுமெங்தை
ஞாலம்மிருகடல்சூழ்தருமூலகத்தவர்நலமார்
கோலம்மிருமலர்மென்மூலைமடவார்மிருகுன்றில்
ஏலங்கமழ்பொழில்சூழ்தருமிடும்பாவனமிதுவே. (ங)

177 பொழிலார்தருசுலைவாழைகளெழிலார்திகழ்போழ்தின்
தொழிலான்மிருதொண்டரவர்தொழுதாடியமுன்றில்
குழலார்தருமலர்மென்மூலைமடவார்மிருகுன்றில்
எழிலார்தருமிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (ச)

178 பந்தார்விரலுமையாளொருபங்கர்கங்கைமுடிமேற்
செந்தாமரைமலர்மல்கியசெழுநீர்வயற்கரைமேற்
கொந்தார்மலர்புன்னைமகிழ்குரவங்கமழ்குன்றில்
எந்தாயெனவிருந்தானிடமிடும்பாவனமிதுவே. (ஞ)

179 நெறிநீர்மையர்நீள்வானவர்நினையுங்நினைவாகி
யறிநீர்மையிலெய்தும்மவர்க்கறியும்மறிவருளிக்
குறிநீர்மையர்கு * ளமார்தருமணமார்தருகுன்றில்
எறிநீர்வயல்புடைசூழ்தருமிடும்பாவனமிதுவே. (ஃ)

180 நீறேறியதிருமேனியர்நிலவும்மூலகெல்லாம்
பாறேறியபடுவெண்டலைகையிற்பலிவாங்கக்
கூறேறியமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
யேறேறியவிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (எ)

181 தேரார்தருதிகழ்வாளெயிற்றரக்கன்சிவன்மலையை
யோராதெடுத்தார்த்தான்முடியொருபஃதலைகெரித்துக்
கூரார்தருகொலிவாளொடுகுணநாமமுங்கொடுத்த
வீரார்தருமிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (அ)

* குணமார்தரும் என்னும் பாடம்.

182 பொருளார்தருமறையோர்புகழ்விருத்தர்பொலிமலிசீர்த்
தெருளார்தருசிந்தையொடுசந்தம்மலர்பலதூய்
மருளார்தருமாயன்னையன்காணர்மயலெய்த
விருளார்தருகண்டர்க்கிடமிடும்பாவனமிதுவே. (கூ)

183 தடுக்கையுடனிடுக்கித்தலைபறித்துச்சம*ண்டப்பர்
உடுக்கைபலதுவர்க்கூறைகளுடம்பிட்டுழல்வாரும்
மடுக்கண்மலர்வயல்சேர்செந்நெல்மலிநீர்மலர்க்கரைமேல்
இடுக்கண்பலகளேவாணிடமிடும்பாவனமிதுவே. (கo)

184 கொடியார்நெடுமாடக்குன்றஞரிற்கரைக்கோல
விடியார்கடலடிவீழ்தருமிடும்பாவனத்திறையை
யடியாயுமந்தணர்காழியுளணிஞானசம்பந்தன்
படியார்சொன்னபாடல்செலப்பறையும்வினைதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சற்குணநாதர், தேவியார்-மங்களநாயகியம்மை.

18 திருநின்றியூர்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

185 சூலப்† படைசுண்ணப்பொடிசாத்‡ தஞ்சுடுநீறு
பாலம்மதிபவளச்சடைமுடிமேலதுபண்டைக்
காலன்வலிகாலின்னெடுபோக்கிக்கடிகமழுந்
நீலம்மலர்ப்பொய்கைநின்றியூரின்னிலையோர்க்கே. (க)

186 அச்சம்மிலர்பாவம்மிலர்கேடும்மிலரடியார்
நிச்சம்முமுனோயும்மிலர்தாமுன்நின்றியூரில்
நச்சும்மிடறுடையார்நறுங்கொன்றைநயந்தார் § நாம்
பச்சம்முடையடிகள்திருப்பாதம்பணிவாரே. (உ)

187 பறையின்னெலிசங்கின்னெலிபாங்காரவுமார
அறையும்மொலியெங்கும்மவையறிவாரவர்தம்மை
நிறையும்புனல்சடைமேலுடையடிகணின்றியூரில்
உறையும்மிறையல்லதெனதுள்ளம்முணராதே. (ரு)

188 பூண்டவ்வரைமார்பிற்புரிநூலன்விரிகொன்றை
யீண்டவ்வதனேடும்மொருபாலம்மதியதனைத்
தீண்டும்பொழில்சூழ்ந்தநிருநின்றியூரதனில்
ஆண்டகழல்தொழிலல்லதுவறியாரவரறிவே. (ச)

* சமணடப்பர் என்றும் பாடம். ‡ சாந்தஞ்சுடுநீறு என்றும் பாடம்.
† சூலம்படை என்றும் பாடம். § நயந்தாரு என்றும் பாடம்.

189 குழலின்னிசைவண்டின்னிசைகண்டுகுயில்கூவுங்
நிழலின்னெழில்தாழ்ந்தபொழில்சூழ்ந்தநின்றியூரில்
அழலின்வலனங்கையது * வெய்தியனலாடுங்
கழலின்னெலியாடும்புரிகடவுள்களேகண்ணே. (டு)

190 மூவல்முறுவல்வெண்ணகையுடையாளொருபாகஞ்
சாரன்மதியதனேடுடன்சலவஞ்சடைவைத்த
வீரன்மலியழகார்பொழின்மிடையுந்திருநின்றி
யூரன்கழலல்லாதெனதுள்ளமுணராதே. (சு)

191 பற்றியொருதலேகையினிலேந்திப்பலிதேரும்
பெற்றியதுவாகித்திரிதேவர்பெருமானூர்
சுற்றியொருவேங்கையதளோடும்பிறைசூடுந்
நெற்றியொருகண்ணூர்நின்றியூரின்னிலையாரே. (எ,அ)

192 நல்லமலர்மேலானெடுஞாலம்மதுவண்டான்
அல்லலெனவாவாவெனநின்றும்மறிவரிய
நெல்லின்பொழில்சூழ்ந்தநின்றியூரின்னிலையாரெஞ்
செல்வரடியல்லாதெனசிந்தையுணராதே. (கூ)

193 நெறியில்வருபேராவகைகினீயாகினீவொன்றை
யறிவில்சமணுதருரைகேட்டுமயராதே
நெறியில்லவர்குறிகண்ணினீயாதேநின்றியூரின்
மறியேந்தியகையானடிவாழ்த்தும்மதுவாழ்த்தே. (கo)

194 குன்றமதுவெடுத்தானுடல்தோளுநெரிவாக
நின்றங்கொருவிரலாலுறவைத்தானின்றியூரை
நன்றூர்தருபுகலித்தமிழ்ஞானமிருபந்தன்
குன்றுத்தமிழ்சொல்லக்குறையின்றிநிறைபுகழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-லட்சுமிபீசுவரர், தேவியார்-உலகநாயகியம்மை.

---

19 திருக்கழுமலம்-திருவிராகம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

195 பிறையணிபடர்சடைமுடியிடைபெருகியபுனலுடையவனிறை
யிறையணிவளையிணைமுலையவளிணைவனதெழிலுடையிடவகை
கறையணிபொழினிறைவயலணிகழுமலமமர்கனலுருவின
னறையணிமலர்நறவிரைபுல்குநலமலிகழல்தொழுமருவுமே. (க)

* ஏந்தி என்றும் பாடம்.

பிணிபடுகடல்பிறவிகளறலெளிதுளதுபெருகியதிரை
அணிபடுகழுமலமினிதமரனுருவினனவிர்சடைமிசை
தணிபடுகதிர்வளரிளமதிபுனலுயிமைதலைவனிறை
மணிபடுகறைமிடறனிலமலிகழலிணைதொழுமருவுமே. (உ)

வரியுறுபுலிய தளுடையினன்வளர்பிறையொளிகிளர்கதிர்பொதி
விரியுறுசடைவிரைபுறைபொழில்விழுவெலிமலிகழுமலமம
ரெரியுறுகிறவிறைவனதடியிரவொடுபகல்பரவுவர்தம
தெரியுறுவினைசெறிகதிர்முனியிருள்கெடநனிகினைவெய்துமதே. (ஊ)

வினைகெடமனநினைவதுமுடிபெறினிதொழுதெழுகுலமதி
புனைகொடியிடைபொருடகுபடுகளிறின துரிபுதையுடலினன்
மனைகுடவயிறுடையனசிலவருகுறள்படையுடையவன்மலி
கனைகடலடைகழுமலமமர்கதிர்மதியினனதிர்கழல்களே. (எ)

தலைமதிபுனல்விடவரவினைதலைமையதொருசடையிடையுட
னிலைமருவவோரிடமருளினனிழன்மழுவினேடழல்கணையினன்
மலைமருவியசிலதனின் மதிளெரியுணமன மருவினனல
கலைமருவியபுறவணிதருகழுமலமினிதமர்தலைவனே. (ஙி)

வரைபொருதிழியருவிகள்பலபருகொருகடல்வரிமணலிடை
கரைபொருதிரையொலிகெழுமியகழுமலமமர்கனலுருவின
னரைபொருபுலிய தளுடையினனடியிணைதொழவருவினையெனு
முரைபொடிபடவுறுதுயர்கெடவுயருலகெய்தலொர்தலைமையே. (சு)

முதிருறுகதிர்வளரிளமதிசடையினொருநிறைதலைதனி
லுதிருறுமயிர்பிணிதவிர்தசையுடைபுலிய தளிடையிருள்கடி
கதிருறுசுடரொளிகெழுமியகழுமலமமர்முழுமலிபடை
யதிருறுகழலடிகளதடிதொழுமறிவலதறிவதியமே. (ஞ)

கடலெனநிறநெடுமுடியவனடுதிறல்தெறவடிசரணென
வடனிறைபடையருளியபுகழரவசையினனணிகிளர்பிறை
விடநிறைமிடறுடையவன்விரிசடையவன்விடையுடையவனுமை
யுடனுறைபதிகடன்மறுகுடையுயர்கழுமலவியனகரதே. (அ)

கொழுமலருறைபதியுடையவனெடியவனெனவிவர்களுமவன்
விழுமையையளவறிகிலரிறைவிரைபுணர்பொழிலணிவிழவமர்
கழுமலமமர்கனலுருவினனடியிணைதொழுமவருவினை
யெழுமையுமிலகிலவகைதனிலெளிதிமையவர்வியனுலகமே. (கூ)

அமையன துவரிழுகிய துகிலனியுடையினரமணுருவர்கள்
சமையமுமொருபொருளெனுமவைசலநெறியனவறவுரைகளு
மிமையவர்தொழுகழுமலமமரிறைவனதடிபரவுவர்தமை
நமையலவினைநலனடைதலிலுயர்நெறிநனிநணுகுவர்களே. (கo)

பெருகியதமிழ்விரகினன் மலிபெயரவனுறைபிணர்திரையொடு
கருகியநிறவிரிகடலடைகழுமலமுறைவிடமெனநனி
பெருகியசிவனடிபரவியபிணைமொழியனவொருபதமுடன்
மருவியமனமுடையவர்மதியுடையவர்விதியுடையவர்களே. (கச)

திருச்சிற்றம்பலம்.

கழுமலம் என்பது-சீகாழிக்கொருபெயர்.

ஊ திருவீழிமிழலை-திருவிராகம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தடகிலவியமலிகிறுவியோர்தழலுமிழ்தருபடவரவுகொ
டடலசுரரோடமரர்களலைகடல்கடைவுழியெழுமிகுசின
விடமடைதருமிடறுடையவன்விடமிசைவருமவனுறைபதி
திடமலிதருமறைமுறையுணர்மறையவர்நிறைதிருமிழலையே. (க)

தரையொடிவிதலகலிதருதகுதிறலுறுசலதரன
வரையனதலிவிசையொடுவருதிகிரியையரிபெறவருளின
னுரைமலிதருசுரநதிமதிபொதிசடையவனுறைபதிமிகு
திரைமலிகடன்மணலணிதருபெறுதிடர்வளர்திருமிழலையே. (உ)

மலிமகடணியிகழ்வுதசெய்தமதியுறுசிறுமனவனதுயர்
தலியினெழலுருவனகரமறமுனிவுசெய்தவனுறைபதி
கலிநிலவியபுலவர்களிடர்கடீர்தருகொடைபயில்பவர்மிகு
சிலிமலிமதிள்புடைதழுவியதிகழ்பொழில்வளர்திருமிழலையே. (ஊ)

மருவலர்புரமெரியினின்மடிதரவொருகணைசெலுறுவிய
பெருவலியினனலமலிதருகரனுரமிகுபிணமமர்வன்
விருளிடையடையுறவொடுநடவிசையுறுபரனினிதுறைபதி
தெருவினில்வருபெருவிழவொலிமலிதரவளர்திருமிழலையே. (எ)

அணிபெறுவடமரகிழலினிலமர்வொடுமடியிணையிருவர்கள்
பணிதரவறநெறிமறையொடுமருளியபரனுறைவிடமொளி
மணிபொருவருமரகதநிலமலிபுனலணிதருவயலணி
திணிபொழில்தருமணமதுதுகரபுதமுரல்திருமிழலையே. (ஏ)

வசையறுவலிவன சரவருவதுகொடுகிணைவருதவமுயல்
விசையன திறன்மலிமகளறிவுறுதிறலமர்மிடல்கொடுசெய்து
அசைவிலபடையருள்புரிதருமவனுறைபதியமிகுதரு
திசையினின்மலர்குலவியசெறிபொழின்மலிதருதிருமிழலையே. (ஐ)

நலமலிதருமறைமொழியொடுநதியுறுபுனல்புகையொளிமுதன்
மலரவைகொடுவழிபடுதிறன்மறையவனுயிரதுகொளவரு

சலமலிதருமறலிதனுயிர்கெடவுதைசெய்தவரனுறைபதி
* திலதமிதெனவுலகுகள்புகழ்தருபொழிலணிதிருமிழலையே. (எ)

அரனுறைதிருகயிலையைநிலைகுலைவுதுசெய்ததசமுகன
கரமிருபதுநெரிதரவிரல்நிறுவியகழலடியுடையவன்
வரன்முறையுலகவைதருமலர்வளர்மறையவன்வழிலழுவிய
சிரமதுகொடுபலிதிரிதருசிவனுறைபதிதிருமிழலையே. (அ)

அயனெடுமெழிலமர்மலர்மகள்மகிழ்கணனளவிடவொளியவோர்
பயமுறுவகைதழல்கிகழ்வதோர்படியுருவதுவரவரன்முறை
சயசயவெனமிகுதிசையெளியுருவியவனுறைபதி
செயகிலவியமதிண்மதியதுவழ்தரவுயர்திருமிழலையே. (கூ)

இகழுருவொடுபிறதலைகொடுமிழிதொழின்மலிசமண்மிரகினர்
திகழ்துவருடையுடல்பொதிவர்கெடவடியவர்மிகவருளிய
புகழுடையிறையுறைபதிபுனலணிகடல்புடைதழுவியபுவி
திகழ்சுரர்தருநிகழ்கொடையினர்செறிவொடுதிகழ்திருமிழலையே. (கo)

சினமலிகரியுரிசெய்தசிவனுறைதருதிருமிழலையைமிகு
தனமனர்சிரபுரநகரிறைதமிழ்விசன துரையொருப தி
மனமகிழ்வொடுபயில்பவரெழின்மலர்மகள்கலைமகள்சயமக
ளினமலிபுகழ்மகளிசைதரவிருநிலனிடையினி தமர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

21 திருச்சிவபுரம்-திருவிராகம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புவம்வளிகனல்புனல்புவி †கலையுரைமறைதிரிகுணமமர்நெறி 217
திவமலிதருசுரர்முதலியர்திகழ்தருமுயிரவையவைதம
பவமலிதொழிலதுகினைவொடுபதுமகன்மலரதுமருவிய
சிவனதுசிவபுரகினைபவர்செழுநிலனினில்கிலைபெறுவரே. (க)

மலைபலவளர்தருபுவியிடைமறைதருவழிமலிமனிதர்கள் 218
நிலைமலிசுரர்முதலுலகுகணிலைபெறுவகைகினைவொடுமிகு
மலைகடனடுவறிதுயிலமரியுருவியல்பரனுறைபதி
சிலைமலிமதின்சிவபுரகினைபவர்திருமகளொடுதிகழ்வரே. (உ)

பழுதிலகடல்புடைதழுவியபடிமுதலியவுலகுகண்மலி 219
குழுவியசுரர்பிறர்மனிதர்கள்குலமலிதருமுயிரவையவை
முழுவதுமழிவகைகினைவொடுமுத ‡லுருவியவரனுறைபதி
செழுமணியணிசிவபுரநகர்தொழுமவர்புகழ்மிகுமுலகிலே. (ரு)

* திலகமிதென என்றும் பாடம். † கலேபுரை என்றும் பாடம்.
‡ உருவியல்பரனுறைபதி என்றும் பாடம்.

நறைமலிதருமளறெடுமுகைநகுமலர்புகைமிகுவளரொளி
நிறைப்புனல்கொடுதணிநினைவொடுநியதமும்வழிபடுமடியவர்
குறைவிலபதமணிதரவருள்குணமுடையிறையுறைவன பதி
சிறைபுனலமர்சிவபுரமதுநினைபவர்செயமகடலிலரே. (சு)

சினமலியறுபகைமிகுபொறிசிதைதருவகைவளரிறுமிய
மனனுணர்வொடுமலர்மிசையெழுதருபொருணியதமுமுணர்பவர்
தனதெழிலுருவதுகொடுவடைதருபரனுறைவதுநகர்மதிள்
கனமருவியசிவபுரநினைபவர்கலிமகடரநிகழ்வரே. (டு)

சுருதிகள்பலநலமுதல்கலைதகளறுவகைபயில்வொடுமிகு
உருவியலுலகவைபுகழ்தரவழியொழுகுமெயுறுபொறியொழி
யருதவமுயல்பவர்தனதடியடைவகைநினையரனுறைபதி
திருவளர்சிவபுரநினைபவர்திகழ்குலகிலனிடரிகழுமே. (சூ)

கதமிகுகருவுருவ்வாடு † வுகிரிடைவடவரைகணகணவென
மதமிகுநெடுமுகனமர்வனமதிதிகழெயிறதனுதிமிசை
யிதமமர்புவியதுநிறுவியவெழிலிரிவழிபடவருள்செய்த
பதமுடையவனமர்சிவபுரநினைபவர்நிலவுவர்படியிலே. (எ)

அசைவுறுதவமுயல்வினிலயனருளினில்வருவலிகொடுசிவ
னிசைகயிலையையெழுதருவகையிருபதுகரமவரிறுவிய
நிசிசரன்முடியுடைதரவொருவிரல்பணிகொளுமவனுறைபதி
திசைமலிசிவபுரநினைபவர்தெழிலினினிகழ்வுடையரே. (அ)

அடன்மலிபடையரியயனெடுமறிவரியதோரழன் மலிதரு
சுடருருவொடுநிகழ்தரவர்வெருவொடுதிகிதுசெயவெதிர்
விடமலிகளறுதலமர்கணதுடையுருவெளிபடுமவனகர்
திடமலிபொழிலெழில்சிவபுரநினைபவர்வழிபுரிதிகழுமே. (கூ)

குணமறிவுகணிலையிலபொருளுரைமருவியபொருள்களுமில
திணமெனுமவரொடுசெதமதிமிகுசமணருமலிதமதுதகை
யுணலுடையவருணர்வருபரனுறைதருபதியுலகினில்நல
கணமருவியசிவபுரநினைபவரெழிலுருவுடையவர்களே. (கo)

திகழ்சிவபுரநகர்மருவியசிவனடியிணைபணிசிரபுர
நகரிறைதமிழ்விரகன துரைநலமலியொருபதுகவில்பவர்
நிகழ்குலநிலநிறைதிருவுருநிகரிலகொடைமிகுசயமகள்
புகழ்புனிவளர்வழியடிமையின்மிகைபுனர்தரநலமிகுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–பிரம்புரிநாயகர், தேவியார்–பெரியநாயகியம்மை.

ஆறாம் பதிகம்–உக.

---

* உகிரிடவட என்றும் பாடம்.

22 திருமறைக்காடு-திருவிராகம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சிலைதனை நடுவிடை நிறுவியோர் சின மலியர வதுகொடு திவி
தலமலிசுரரசுரர்களொலிசலசலகடல்கடைவுழிமிகு
கொலைமலிவிடமெழவவருடல்குலைதரவதுதகர்பவனெழின்
மலைமலிமதிள்புடைதழுவியமறைவன மமர்தருபரமனே. (க)

கரமுதலியவவயவமவைகடுவிடவரவதுகொடுவரு
வரன்முறையணிதருமவனடல்வலிமிகுபுலியதளுடையின
னிரவலர்துயர்கெடுவகைகினியிமையவர்புரமெழில்பெறவளர்
மரகிகர்கொடை மனிதர்கள்பயின் மறைவன மமர்தருபரமனே. (உ)

இழைவளர்தருமுலைமலைகளினிதறைதருமெழிலுருவினன்
முழையினின்மிகுதுயிலுறுமரிமுகிவொடுமெழுமளரியொடெழு
கழைதகர்தருகரியிரிதருகயிலையின் மலிபவனிருளுற
மழைதவழ்தருபொழிலிலவியமறைவன மமர்தருபரமனே. (ங)

நலமிகுதிருவிதழியின்மலர்நகுதலையொடுகனகியின்முகை
பலசுரநதிபடவரவொடமதிபொதிசடைமுடியினன்மிகு
தலநிலவியமனிதர்களொடுதவமுயல்தருமுனிவர்[illegible]ம
மலமறுவகைமனகினை தருமறைவன மமர்தருபரமனே. (ச)

கதிமலிகளிறதுபிளிறிடவுரிசெய்தவதிருணுயர்பசு
பதியதன்மிசைவருபசுபதிபல்கலியவைமுறைமுறையுணர்
விதிய்றிதருநெறியமர்முனிகணனெடுமிருதவமுயல்தரு
மதிநிபுணர்கள்வழிபடவளர்மறைவன மமர்தருபரமனே. (ஞ)

கறைமலிதிரிசிகைபடையடல்கனமழுவெழுதரவெறிமறி
முறைமுறையொலிதமருகமுடைதலைமுகிழ்மலிகணிவடமுக
முறைதருகரனுல்கினிலுயரொளிபெறுவகைகினைவொடுமலர்
மறையவன்மறைவழிவழிபடுமறைவன மமர்தருபரமனே. (சு)

இருகிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரிய தமிரு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனின மலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவன மமர்தருபரமனே. (எ)

சனம்வெருவுறவருதசமுகனெருபதுமுடியொடுமிருபது
கணமருவியபுயகெரிவகைகழலடியிலொர்விரனிறுவின
னினமலிகணகிசிசரன்மகிழ்வுறவருள்செய்தகருணையனென
மனமகிழ்வொடுமறைமுறையுணர்மறைவன மமர்தருபரமனே. (அ)

6 அணிமலர்மகடலைமகனயனறிவரியதொர்பரிசினிலெரி
திணிதருதிரளுருவளர்தரவவர்வெருவுறலொடுததிசெய்து
பணியுறவெளியுருவியபரனவனுரைமலிகடல்திரளெழு
மணிவளரொளிவெயின்மிகுதருமறைவனமமர்தருபரமனே. (கூ)

7 இயல்வழிதரவிதுசெலவுறவினமயிலிறகுறுதழையொடு
செயன்மருவியசிறுகடமுடியடைகையர்தலைபறிசெய்ததவ
முயல்பவர்தவர்படமூடல்பொதிபவரறிவருபரனவனணி
வயலினில்வளவளமருவியமறைவனமமர்தருபரமனே. (கூ)

வசையறுமலர்மகணிலவியமறைவனமமர்பரமனிணிணை
பசைவொடுமிகுகலிபலபயில்புலவர்கள்புகழ்வழிவளர்தரு
விசையமர்கமுமலநகரிறைதமிழ்விரகனதரையியல்வல
விசைமலிதமிழொருபதும்வலவவருலகினிலெழில்பெறுவரே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் – ம்றைக்காட்டீசுரர், தேவியார்–யாழைப்பழித்தமொழியம்மை.

---

23 திருக்கோலக்கா-பண்-தக்கராகம்.



திருச்சிற்றம்பலம்.

2.39 மடையில்வாளைபாயமாதரார்
குடையும்பொய்கைக்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பற்பூச்சுங்கீ
ழுடையுங்கொண்டுவருவமென்கொலோ. (க)

2.40 பெண்டான்பாகமாகப்பிறைச்சென்னிக்
கொண்டான்கோலக்காவுகோயிலாக்
கண்டான்பாதங்கையாற்கூப்பவே
யுண்டானஞ்சையுலகமுய்யவே. (உ)

2.41 பூணற்பொறிகொளரவம்புன்சடைக்
கோணற்பிறையன்குழகன்கோலக்கா
மாணப்பாடிமறைவல்லானீயே
பேணப்பறையும்பிணிகளானவே. (ங)

2.42 தழுக்கொள்பாவந்தளரவேண்டுவீர்
மழுக்கொள்செல்வன்மறிசேரங்கையான்
குழுக்கொள்பூதப்படையான்கோலக்கா
விழுக்காவண்ணமேத்திவாழ்மினே. (ச)

2.3 மயிலார்சாயன்மாதோர்பாகமா
வெயிலார்சாயவெரித்தவெந்தைதன்
குயிலார்சோலைக்கோலக்காவையே
பயிலாநிற்கப்பறையும்பாவமே. (இ)

2.4 வெடிகொள்வீணையைவீட்டவேண்டுவீர்
கடிகொள்கொன்றைகலந்தசென்னியான்
கொடிகொள்விழவார்கோலக்காவுளெம்
மடிகள்பாதமடைந்துவாழ்மினே. (ஈ)

2.5 நிழலார்சோலைநீலவண்டினங்
குழலார்பண்செய்கோலக்காவுளான்
கழலான்மொய்த்தபாதங்கைகளாற்
றொழலார்பக்கற்றுயரமில்லையே. (உ)

2.6 எறியார்கடல்சூழிலங்கைக்கோன்றன்னை
முறியார்தடக்கையடர்த்தமூர்த்திதன்
குறியார்பண்செய்கோலக்காவையே
நெறியாற்றொழுவார்வினைகணீங்குமே. (ஊ)

2.7 நாற்றமலர்மேலயனுநாகத்தி
லாற்றலரீமேலவனுங்காண்கிலாக்
கூற்றமுதைத்தகுழகன்கோலக்கா
வேற்றன்பாதமேத்திவாழ்மினே. (எ)

2.8 பெற்றமாசுபிறக்குஞ்சமணரு
முற்றதுவர்தோயுருவிலாளருங்
குற்றநெறியார்கொள்ளார்கோலக்காப்
பற்றிப்பரவப்பறையும்பாவமே (ஏ0)

2.9 கலங்கொள்காழிஞானசம்பந்தன்
குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையா
ருலங்கொள்வீனேபோயோங்கிவாழ்வரே. (ஏஉ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சத்தபுரீசர், தேவியார்-ஓசைகொடுத்தநாயகியம்மை.

---

24 தோழி-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

2.50 பூவார்கொன்றைப்புரிபுன்சடையீர்
காவாயெனின்றேத்தங்காழியார்
மேவார்புரமூன்றட்டாரவர்போலாம்
பாவாரின்சொற்பயிலும்பரமரே. (க)

251 எந்தையென்றங்கிமையோர்புகுந்தீண்டிக்
கந்தமாலைகொடுசேர்காழியார்
வெந்தநீற்றர்விமலரவர்போலா
மந்திரட்டமாடுமடிகளே. (உ)

252 தேனேவென்றமொழியாளொருபாகங்
கானமான்கைக்கொண்டகாழியார்
வானமோங்குகோயிலவர்போலா
மானவின்பமாடுமடிகளே. (ஊ)

253 மாணவென்றிக்காலன்மடியவே
காணமாணிக்களித்தகாழியார்
நாணர்வாளிதொட்டாரவர்போலாம்
பேணர்புரங்களட்டபெருமானே. (சு)

254 மாடேயோதமெறியவயற்செந்நெற்
காடேறிச்சங்கினங்காழியார்
வாடாமலராள்பங்கரவர்போலா
மேடார்புரமூன்றெரித்தவிறைவரே. (டு)

255 கொங்குசெருந்திகொன்றைமலர்கூடக்
கங்கைபுனைந்தசடையார்காழியா
ரங்கணரவமாட்டுமவர்போலாஞ்
செங்கணரக்கர்புரத்தையெரித்தாரே. (அ)

256 கொல்லிவிடைமூன்பூதங்குனித்தாடுங்
கல்லவடத்தையுகப்பார்காழியர
ல்லவிடத்துதடந்தாரவர்பேரலாம்
பல்லவிடத்தும்பயிலும்பரமரே. (எ)

257 எடுத்தவரக்கனெரியவிரலூன்றிக்
கடுத்தமுரியவடர்த்தார்காழியா
ரெடுத்தபாடற்கிரங்குமவர்போலாம்
பொடிக்கொணீறுபூசும்புனிதரே. (அ)

258 ஆற்றலுடையவரியும்பிரமனுந்
தோற்றங்காணவென்றிக்காழியா
ரேற்றமேறங்கேறுமவர்போலாங்
கூற்றமழகக்குமைத்தகுழகரே. (கூ)

259 பெருக்கப்பிதற்றுஞ்சமணர்சாக்கியர்
கரக்கும்முரையையிட்டார்காழியர
ரிருக்கின்மலிந்தவிறைவரவர்போலா
மருப்பின்மூலியாள்பங்கத்தையரே. (கo)

260 காராரவயல்சூழ்காழிக்கோன்றன்னைச்
சீராரஞானசம்பந்தன்சொன்ன
பாராரர்புகழப்பரவவல்லவ
ரேராரர்வானத்தினிதாவிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

25. திருச்செம்பொன்பள்ளி-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

261 மருவார்குழலிமாதோர்பாகமாய்த்
திருவார்செம்பொன்பள்ளிமேவிய
கருவார்கண்டத்தீசன்கழல்களே
மருவாதவர்மேன்மன்னும்பாவமே. (க)

262 வாரார்கொங்கைமாதோர்பாகமாய்ச்
சீரார்செம்பொன்பள்ளிமேவிய
வேரார்புரிபுன்சடையெம்மீசனைச்
சேராதவர்மேற்சேரும்வினைகளே. (உ)

263 வரையார்சந்தோடகிலும்வருபொன்னித்
திரையார்செம்பொன்பள்ளிமேவிய
நரையார்விடையொன்றூருகம்பனே
யுரையாதவர்மேலொழியாவூனமே. (ங)

264 மழுவாளேந்திமாதோர்பாகமாய்ச்
செழுவார்செம்பொன்பள்ளிமேவிய
வெழிலார்புரிபுன்சடையெம்மிறைவனைத்
தொழுவார்தம்மேற்றுயரமில்லையே. (ச)

265 மலையார்மகளோடுடனுய்மதிளெய்த
சிலையார்செம்பொன்பள்ளியரனையே
யிலையார்மலர்கொண்டெல்லிநண்பகல்
நிலையாவணங்கநில்லாவினைகளே. (ஞ)

266 அறையார்புனலோடகிலும்வருபொன்னிச்
சிறையார்செம்பொன்பள்ளிமேவிய
கறையார்கண்டத்தீசன்கழல்களே
நிறையால்வணங்கநில்லாவினைகளே. (ஙு)

267 பையாரரவேரல்குலாளொடுஞ்
செய்யார்செம்பொன்பள்ளிமேவிய
கையார்சூலமேந்துகடவுளே
மெய்யால்வணங்கமேவாவினைகளே. (எ)

268 வானுந்திங்கள்வளர்புன்சடைவைத்துத்
தேனுர்செம்பொன்பள்ளிமேவிய
வூனுர்தலையிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
யானுன்கழலேயடைந்துவாழ்மினே. (அ)

269 காரார்வண்ணன்கனகமணியானுங்
தேராரார்செம்பொன்பள்ளிமேவிய
நீராரார்நிமிர்புன்சடையெங்கிமலனீ
யோராதவர்மேலொழியாவூனமே. (சு)

270 மாசாருடம்பர்மண்டைத்தேரரும்
பேசாவண்ணம்பேசித்திரியவே
தேசார்செம்பொன்பள்ளிமேவிய
வீசாவென்னகில்லாவிடர்களே. (கo)

271 நறவார்புகலிஞானசம்பந்தன்
செறுவார்செம்பொன்பள்ளிமேயானைப்
பெறுமாறிசையாற்பாடலிவைபத்து
முறுமாசொல்லவோங்கிவாழ்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சொர்ணபுரீசர், தேவியார்-சுகந்தவனநாயகியம்மை.

---

26 திருப்புத்தூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

272 வெங்கள்விம்மூவெறியார்பொழிற்சேரலர்
திங்களோடுதினைக்குந்திருப்புத்தூர்
கங்கைதங்குமுடியாரவர்போலு
மெங்களுச்சியுறையுமிறையாரே. (க)

273 வேனல்விம்முவெறியார்பொழிற்சோலைத்
தேனும்வண்டுந்தினைக்குந்திருப்புத்தூ
ரூனமின்றியுறைவாரவர்போலு
மேனமுள்ளுமெயிறும்புனைவாரே. (உ)

274 பாங்குநல்லவரிவண்டிசைபாடத்
தேங்கொள்கொன்றைதினைக்குந்திருப்புத்தூ
ரோங்குகோயிலுறைவாரவர்போலுக்
தாங்குதிங்கடவழ்புன்சடையாரே. (ரு)

275 நாறவிண்டமுமாமலர்கவ்வித்
தேறல்வண்டுதினைக்குந்திருப்புத்தூ

ரூறல்வாழ்க்கையுடையாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (ச)

276 இசைவிளங்குமெழில்சூழ்நியல்பாகத்
திசைவிளங்குபொழில்சூழ்திருப்புத்தூர்ப்
பசைவிளங்கப்படித்தாரவர்போலும்
வசைவிளங்கும்வடிசேர்துதலாரே. (ரி)

277 வெண்ணிறத்தவிரையோடலருந்தித்
தெண்ணிறத்தபுனல்பாய்திருப்புத்தூ
ரொண்ணிறத்தவொளியாரவர்போலும்
வெண்ணிறத்தவிடைசேர்கொடியாரே. (சு)

278 நெய்தலாம்பல்கழுநீர்மலர்ந்தெங்குஞ்
செய்கள்மல்குசிவனூர்திருப்புத்தூர்த்
தையல்பாகமகிழ்த்தாரவர்போலு
மையுணஞ்சமருவுமிடற்றாரே. (எ)

279 கருக்கமெல்லாங்கமழும்பொழிற்சோலைத்
திருக்கொள்செம்மைவிழவார்திருப்புத்தூ
ரிருக்கவல்லவிறைவரவர்போலு
மரக்கனெல்கவிரலாலடர்த்தாரே. (அ)

280 மருவியெங்கும்வளருமடமஞ்ஞை
தெருவுதோறுந்தினைக்குந்திருப்புத்தூர்ப்
பெருகிவாழும்பெருமானவன்போலும்
பிரமன்மாலுமறியாப்பெரியோனே. (சு)

281 கூறைபோர்க்குந்தொழிலாரமணர்கூறல்
தேறல்வேண்டாதெளிமின்திருப்புத்தூ
ராறுநான்குமமர்ந்தாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (கo)

282 நல்லகேள்விஞானசம்பந்தன்
செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று
மல்லல்தீருமவலமடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-புத்தூரீசர், தேவியார்-சிவகாமியம்மை.

ஆ பதிகம்-உக.

27 திருப்புன்கூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

283 மூந்திநின் றவினை களவைபோகச்
சிந்திநெஞ்சேசிவனூர் திருப்புன்கூ
ரந்தமில்லாவடிகளவர்போலுங்
கந்தமல்குகமழ்புன்சடையாரே. (க)

284 மூவராயமுதல்வர்முறையாலே
தேவரெல்லாம்வணங்குந்திருப்புன்கூ
ராவரென்னுமடிகளவர்போலு
மேவினல்லாரெயில்மூன்றெரித்தாரே. (உ)

285 பங்கயங்கள்மலரும்பழனத்தச்
செங்கயல்கள்திளைக்குந்திருப்புன்கூர்க்
கங்கைதங்குசடையாரவர்போலு
மெங்களுச்சியுறையும்மிறையாரே. (ங)

286 கரையுலாவுகதிர்மாமணிமுத்தந்
திரையுலாவுவயல்சூழ்திருப்புன்கூ
ருரையினல்லபெருமானவர்போலும்
விரையினல்லமலர்ச்சேவடியாரே. (ச)

287 பவளவண்ணப்பரிசார்திருமேனி
திகழும்வண்ணமுறையுந்திருப்புன்கூ
ரழகரென்னுமடிகளவர்போலும்
புகழுநின்றபுரிபுன்சடையாரே. (ஞ)

288 தெரிந்திலங்குகழுநீர்வயற்செந்நெல்
திருந்தின்றவயல்சூழ்திருப்புன்கூர்ப்
பொருந்தின்றவடிகளவர்போலும்
விரிந்திலங்குசடைவெண்பிறையாரே. (ரு)

289 பாரும்விண்ணும்பரவித்தொழுதேத்துந்
தேர்கொள்வீதிவிழவார்திருப்புன்கூ
ராரரின்றவடிகளவர்போலும்
கூரின்றவெயின்மூன்றெரித்தாரே. (எ)

290 மலையதனருடையமனின்மூன்றுஞ்
சிலையதனலெரித்தார்திருப்புன்கூர்த்
தலைவர்வல்லரக்கன்றருக்கினை
மலையதனலடர்த்தமகிழ்ந்தாரே. (அ)

291 நாடவல்லமலராலுமராலுமாய்த்
தேடகின்றருறையுந்திருப்புன்கூ
ராடவல்லவடிகளவர்போலும்
பாடலாடல்பயிலும்பரமரே. (கூ)

292 குண்டுமுற்றிக்கூறையின்றியே
பிண்டமுண்ணும்பிராந்தர்சொற்கொளேல்
வண்டுபாடமலர்ச்சிருப்புன்கூர்க்
கண்டுதொழுமின்கபாலிவேடமே. (கo)

293 மாடமல்குமதில்சூழ்காழிமன்
சேடர்செல்வருறையுந்திருப்புன்கூர்
நாடவல்லஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பரவிவாழ்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சிவலோகநாதர், தேவியார்-சொக்கநாயகியம்மை.

---

28 திருச்சோற்றுத்துறை-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

294 செப்பமெஞ்சேரெறிகொள்சிற்றின்பந்
துப்பனென்னைதருளேதுணையாக
வொப்பரொப்பர்பெருமானெளிவெண்ணீற்
றப்பர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (க)

295 பாலுநெய்யுந்தயிரும்பயின்றாடித்
தோலுநூலுந்துதைந்தவரைமார்பர்
மாலுஞ்சோலேபுடைசூழ்மடமஞ்ஞை
யாலுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (உ)

296 செய்யர்செய்யசடையர்விடையூர்வர்
கையிலேவலர்கழலர்கரிகாடர்
தையலாரேர்பாகமாயவெம்
மையர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ங)

297 பிணிகொளாக்கையொழியப்பிறப்புளீர்
துணிகொள்போரார்தளங்குமுழுவாளர்
மணிகொள்கண்டர்மேயவார்பொழி
லணிகொள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ச)

298 பிறையும்மரவும்புனலுஞ்சடைவைத்து
மறையுமோதிமயானமிடமாக

வுறையுஞ்செல்வமுடையார்காஷிரி
யறையுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே (டு)

298 துடிகளோடுமுழவம்விம்மவே
பொடிகொள்பூசிப்புறங்காடரங்காகப்
படிகொள்பாணிபாடல்பயின்றாடி
மடிகள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (சு)

300 சாடிக்காலன்மாளத்தலைமாலை
சூடிமிக்குச்சுவண்டாய்வருவார்தாம்
பாடியாடிப்பரவுவாருள்ளத்
தாடிசோற்றுத்துறைசென்றடைவோமே. (எ)

301 பெண்ணேர்பாகமுடையார்பிறைச்சென்னிக்
கண்ணேர்பாகங்கலந்ததுதலினு
ரெண்ணுதரக்கனெடுக்கவூன்றிய
வண்ணல்சோற்றுத்துறைசென்றடைவோமே. (அ)

302 தொழுவாரிருவர்துயரநீங்கவே
யழலாயோங்கியருள்கள்செய்தவன்
விழவார்மறுகில்விதியால்மிக்கவெம்
மொழிலார்சோற்றுத்துறைசென்றடைவோமே. (கூ)

303 * கோதுசாற்றித்திரிவாரமணருண்ட
சோதுமோத்தையுணராதெழுகெஞ்சே
நீதிகின்றுநினைவார்வேடமா
மாதிசோற்றுத்துறைசென்றடைவோமே. (கo)

304 அந்தண்சோற்றுத்துறையெம்மாதியைச்
சிந்தைசெய்பினடியீராயினீர்
சந்தம்பரவுஞானசம்பந்தன்
வந்தவாறேபுணர்தல்வழிபாடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தொலையாச்செல்வர், தேவியார்-ஒப்பிலாம்பிகையம்மை.

---

29 திருநறையூர்ச்சித்தீச்சரம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

305 ஊருலாவுபலிகொண்டுலகேத்த
நீருலாவுநிமிர்புன்சடையண்ணல்
சீருலாவுமறையோர்நறையூரிற்
சேருஞ்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (க)

* போதுசாற்றி என்றும் பாடம்.

306 காடுநாடுங்கலக்கப்பலிகண்ணி
யோடுங்கங்கையொளிர்புன்சடைதாழ்
வீடுமாகமறையோர்நறையூரில்
நீடுஞ்சித்தீச்சரமேநினைநெஞ்சே. (உ)

307 கல்வியாளர்கனகமழன்மேனி
புல்குகங்கைபுரிபுன்சடையானூர்
மல்குதிங்கட்பொழில்சூழ்நறையூரிற்
செல்வர்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (ங.)

308 நீடவல்லகிமிர்புன்சடைதாழ
வாடவல்லவடிகளிடமாகும்
பாடல்வண்டுபயிலுநறையூரிற்
சேடர்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (ச)

309 உம்பராலுமுலகினவராலுக்
தம்பெருமையளத்தற்கரியானூர்
நண்புலாவுமறையோர்நறையூரிற்
செம்பொன்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (ஞ)

310 கூருலாவுபடையான்விடையேறிப்
போருலாவுமழுவானனலாடி
பேருலாவுபெருமானறையூரிற்
சேருஞ்சித்தீச்சரமேயிடமாமே. (ஈ)

311 * அன்றிகின்றவவுணர்புரமெய்த
வென்றிவில்லிமலன்விரும்புமூர்
மன்றில்வாசமணமார்நறையூரிற்
சென்றுசித்தீச்சரமேதெளிநெஞ்சே. (எ)

312 அரக்கனுண்மையழியவரைதன்னல்
நெருக்கவூன்றுமம்விரலான்விரும்புமூர்
பரக்குங்கீர்த்தியுடையார்நறையூரிற்
றிருக்கொள்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (அ)

313 ஆழியானுமலரினுறைவானு
மூழிகாடியுணராவ்திரிந்தமேற்
சூழுநேடவெரியாமொருவன்சீர்
நீழல்சித்தீச்சரமேநினைநெஞ்சே. (கூ)

314 மெய்யின்மாசர்விரிதுண்டுகிலினர்
கையிலுண்டுகழுமுமுரைகொள்ளே
லுய்யவேண்டிலிறைவனறையூரிற்
செய்யுஞ்சித்தீச்சரமேதவமாமே. (கூ)

* அன்றிகின்ற-பகைத்தகின்ற.

315 மெய்த்தலாவுமறையோர்நறையூரிற்
சித்தன்சித்தீச்சரத்தையுயர்காழி
யத்தன்பாதமணிஞானசம்பந்தன்
பத்தும்பாடப்பறையும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சித்தநாதேசர், தேவியார்-அழகாம்பிகையம்மை.

---

30 ஸ்ரீபுகலி-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

316 ஐதியசய்வினையாய்வினைவின்பயனுகிக்
கொதியாவருகூற்றையுதைத்தவர்சேரும்
பதியாவதுபங்கயநின்றலரத்தேன்
பொதியார்பொழில்சூழ்புகலிந்நகர்தானே. (க)

317 ஒன்னுர்புரமூன்றுமெரித்தவொருவன்
மின்னிடையாளொடுங்கூடியவேடந்
தன்னிலுறைவாவதுதண்கடல்சூழ்ந்த
பொன்னிர்வயற்பூம்புகலிந்நகர்தானே. (உ)

318 வலியின்மதிசெஞ்சடைவைத்தமணுளன்
புலியின்னதள்கொண்டரையார்த்தபுனிதன்
மலியும்பதிமாமறையோர்நிறைந்தீண்டிப்
பொலியும்புனற்பூம்புகலிந்நகர்தானே. (ஊ)

319 கயலார்தடங்கண்ணியொடும்மெருதேறி
யயலார்கடையிற்பலிகொண்டவழக
னியலாலுறையும்மிடமெண்டிசையோர்க்கும்
புயலார்கடற்பூம்புகலிந்நகர்தானே. (எ)

320 காதார்கனபொற்குழைதோடதிலங்கத்
தாதார்மலர்தண்சடையேறமுடித்து
* நாதானுறையும்மிடமாவதுநாளும்
போதார்பொழிற்பூம்புகலிந்நகர்தானே. (ஏ)

321 வலமார்படைமான்மழுவேந்திபமைந்தன்
கலமார்கடனஞ்சமுதுண்டகருத்தன்
குலமார்பதிகொன்றைகள்பொன்சொரியத்தேன்
புலமார்வயற்பூம்புகலிந்நகர்தானே. (ஐ)

---

* நாதன்-நாதான் என நீண்டது.

321 கறுத்தான் கனலால்மதிள்மூன்றையும்வேவச்
செறுத்தான்றிகழும்கடனஞ்சமுதாக
வறுத்தானயன்றன்சிரமைந்திலுமொன்றைப்
பொறுத்தானிடம்பூம்புகலிந்நகர்தானே. (எ)

322 தொழிலான்மிகுதொண்டர்கள்தோத்திரஞ்சொல்ல
வெழிலார்வரையாலன்றரக்கனைச்செற்ற
கழலானறையும்மிடங்கண்டல்கண்மிண்டிப்
பொழிலான்மலிபூம்புகலிந்நகர்தானே. (அ)

323 மாண்டார்சுடலைப்பொடிப்பூசியமானத்
தீண்டாநடமாடியவேந்தன்றன்மேனி
நீண்டானிருவர்க்கெரியாயரவாரம்
பூண்டானகர்பூம்புகலிந்நகர்தானே. (கூ)

324 உடையார்துகிலின்போர்த்தழல்வார்சமண்கையர்
றடையாதனசொல்லுவராதர்களோத்தைக்
கிடையாதவன்றன்னகர்நன்மலிபூகம்
புடையார்தருபூம்புகலிந்நகர்தானே. (கo)

325 இரைக்கும்புனல்செஞ்சடைவைத்தவெம்மான்றன்
புரைக்கும்பொழிற்பூம்புகலிந்நகர்தன்மே
லுரைக்குந்தமிழ்ஞானசம்பந்தனணிமாலை
வரைக்குந்தொழில்வல்லவர்கல்லவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

31 திருக்குரங்கணின்முட்டம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

327 விழுநீர்மழுவாட்படையண்ணல்விளங்குங்
கழுநீர்குவளைம்மலரக்கயல்பாயுங்
கொழுநீர்வயல்சூழ்ந்தகுரங்கணின்முட்டந்
தொழுநீர்மையர்தீதறுதன்பமிலரே. (க)

328 விடைசேர்கொடியண்ணல்விளங்குயர்மாடக்
கடைசேர்கருமென்குழல்தொங்கியகாட்டிற்
குடையரர்புனல்மல்குகுரங்கணின்முட்ட
முடையானெனையாளுடையெந்தைபிரானே. (உ)

329 சூலப்படையான்விடையான்சுடுநீற்றன்
காலன்றனையாருயிர்வவ்வியகாலன்
கோலப்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டத்
தேலங்கமழ்புன்சடையெந்தைபிரானே. (ஙூ)

330 வாடாவிரிகொன்றைவலத்தொருகாதிற்
றோடார்குழையானலபாலனநோக்கி
கூடாதனசெய்தகுரங்கணின்முட்ட
மாடாவருவாரவரன்புடையாரே. (சி)

331 இறையார்வளையாளோர்பாகத்தடக்கிக்
கறையார்மிடற்றுன்சரிகீறியகையான்
குறையார்மதிசூடிகுரங்கணின்முட்டத்
துறைவானெமையாளுடையெண்சுடரானே. (நி)

332 பலவும்பயனுள்ளனபற்றுமொழிந்தோங்
கலவம்மயில்காமுறுபேடையோடாடிக்
குலவும்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டங்
நிலவும்பெருமானடிநித்தல்நினைந்தே. (சு)

333 மாடார்மலர்க்கொன்றைவளர்சடைவைத்துத்
தோடார்குழைதானொருகாதிலிலங்கக்
கூடார்மதிளெய்துகுரங்கணின்முட்டத்
தாடாரரவம்மரையார்த்தமர்வானே. (எ)

334 மையார்கிறமேனியரக்கர்தங்கோனை
யுய்யாவகையாலடர்த்தின்னருள்செய்த
கொய்யார்மலர்சூடிகுரங்கணின்முட்டங்
கையாற்றொழுவார்வினைகாண்டலரிதே. (அ)

335 வெறியார்மலர்த்தாமரையானுமாலு
மறியாதசைசேர்த்தவோராரழலாகுங்
குறியாளிமிர்ந்தான்றன்குரங்கணின்முட்டங்
நெறியாற்றொழுவார்வினைநிற்கிலாவே. (கூ)

336 கழுவார்துவராடைகலந்தமெய்போர்க்கும்
வழுவாச்சமண்சாக்கியர்வாக்கவைகொள்ளேல்
குழுமின்சடையண்ல்குரங்கணின்முட்டத்
தெழில்வெண்பிறையானடிசேர்வதியல்வே. (கo)

337 கல்லார்மதிட்காழிஞானசம்பந்தன்
கொல்லார்மழுவேந்திகுரங்கணின்முட்டஞ்
சொல்லார்தமிழ்மாலைசெவிக்கினிதாக
வல்லார்க்கெனிதாம்பிறவாவகைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வாலீசுவரர், தேவியார்-இறையார்வளையம்மை.

ஆஉ பதிகம்-உக.

32. திரு இடைமருது-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

338 ஓடேகலனுண்பதுமூரிடுபிச்சை
கூடேயிடமாவதுகல்லாணிழற்கீழ்
வாடாமுலைமங்கையுந்தானுமகிழ்ந்
தீடாவுறைகின்றவிடைமருதீதோ. (க)

339 தடங்கொண்டதோர்தாமரைப்பொன்முடிதன்மேற்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சுமந்தாட்டப்
படங்கொண்டதோர்பாம்பரையார்த்தபரம
னிடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ. (உ)

340 வெண்கோவணங்கொண்டொருவெண்டலையேந்தி
யங்கோல்வளையாளையோர்பாகமமர்ந்து
பொங்காவருகாவிரிக்கோலக்கரைமே
லெங்கோனுறைகின்றவிடைமருதீதோ. (ங)

341 அந்தம்மறியாதவருங்கலமுந்திக்
கந்தங்கமழ்காவிரிக்கோலக்கரைமேல்
வெந்தபொடிப்பூசியவேதமுதல்வ -
னெந்தையுறைகின்றவிடைமருதீதோ. (ச)

342 வாசங்கமழ்மாமலர்ச்சோலையில்வண்டே
தேசம்புகுந்தீண்டியோர்செம்மையுடைத்தாய்ப்
பூசம்புகுந்தாடப்பொலிந்தழகாய
வீசனுறைகின்றவிடைமருதீதோ. (ஞ)

343 வன்புற்றிளநாகமசைத்தழகாக
வென்பிற்பலமாலையும்பூண்டெருதேறி
யன்பிற்பிரியாதவளோடுமுடனு
யின்புற்றிருந்தான்றனிடைமருதீதோ. (ஃ)

344 தேக்குந்திமிலும்பலவுஞ்சுமந்தந்திப்
போக்கிப்புறம்பூசலடிப்பவருமா
லார்க்குந்திரைக்காவிரிக்கோலக்கரைமே
லேற்கவிருந்தான்றனிடைமருதீதோ. (எ)

345 பூவார்குழலாரகில்கொண்டுபுகைப்ப
வோவாதடியாரடிப்புள்குளிர்ந்தேத்த
வாவாவரக்கன்றனீய்ச்றற்றலழித்த
வேவார்சிலையான்றனிடைமருதீதோ. (அ)

346 முற்றுமதோர்பான்மதிசூடுமுதல்வ
னற்றுமரையாளுமால்கயந்தேத்தப்
பொற்றேளியுந்தானும்பொலிந்தழகாக
வெற்றேயுறைகின்றவிடைமருதீதோ. (சு)

347 சிறுதேரருஞ்சிலசமணும்புறங்கூற
நெறியேபலபத்தர்கள்கைதொழுதேத்த
வெறியாவருகாவிரிக்கோலக்கரைமே
லெறியார்மழுவாளனிடைமருதீதோ. (கo)

348 கண்ணார்கமழ்காழியுண்ஞானசம்பந்த
னெண்ணார்புகழெந்தையிடைமருதின்மேற்
பண்ணேடிசைபாடியபத்தும்வல்லார்கள்
விண்ணேருலகத்தினில்வீற்றிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மருதீசர், தேவியார்-நலமுலோயிலயம்மை.

---

33 திரு அன்பிலாலந்துறை-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

349 கணைநீடெரிமாலரவம்வரைவில்லா
லிணையாவெயின்மூன்றுமெரித்தவிறைவர்
பிணையாமயிலுங்குயில்சேர்மடவன்ன
மணையும்பொழிலன்பிலாலந்துறையாரே. (க)

350 சடையார்சதிரன்முதிராமதிசூடி
விடையார்கொடியொன்றுடையெந்தைவிமலன்
கிடையாரொலியோத்தரவத்திசைக்கிள்ளை
படையார்பொழிலன்பிலாலந்துறையாரே. (உ)

351 ஊரும்மரவஞ்சடைமேலுறவைத்துப்
பாரும்பலிகொண்டொலிபாடும்பரமர்
நீருண்கயலும்வயல்வாளைவராலோ
டாரும்புனலன்பிலாலந்துறையாரே. (ங)

352 பிறையும்மரவுமுறவைத்தமுடிமேல்
நறையுண்டெழுவன்னியுமன்னுசடையார்
மறையும்பலவேதியரோதவெளிசென்
றுறையும்புனலன்பிலாலந்துறையாரே. (ச)

353 நீடும்புனற்கங்கையுந்தங்குமுடிமேற்
கூடும்மலையாளொருபாகமமர்ந்தார்
மாடும்முழவம்மதிரம்மடமாத
ராடும்பதியன்பிலாலந்துறையாரே. (நி)

354 நீரூர்திருமேனியரூனமிலார்பா
ஓரூர்சுவையாகியவும்பர்பெருமான்
வேரூரகிலும்மிருசந்தனமுந்தி
யாரூர்வயலன்பிலாலந்துறையாரே. (சு)

355 செடியார்தலையிற்பலிகொண்டினிதுண்ட
படியார்பரமன்பரமேட்டிதன்சீரைக்
கடியார்மலரும்புனல்தூவினின்றேத்த
மடியார்தொழுமன்பிலாலந்துறையாரே. (எ)

356 விடத்தார்திகழுமிடற்றன்னடமாடி
படத்தாரரவம்விரவுஞ்சடையாதி
கொடித்தேரிலங்கைக்குலக்கோன்வரையார
வடர்த்தாரருளன்பிலாலந்துறையாரே. (அ)

357 வணங்கிம்மலர்மேலயனுநெடுமாலும்
பிணங்கியறிகின்றிலர்மற்றும்பெருமை
சுணங்கும்முகத்தம்முமையாளொருபாக
மணங்குந்திகழுன்பிலாலந்துறையாரே. (கூ)

358 தறியார்துகில்போர்த்துழல்வார்சமண்கையர்
நெறியாரவுணாகிலேகேடினர்நித்தல்
வெறியார்மலர்கொண்டடிவீழும்வரை
யறிவாரவரன்பிலாலந்துறையாரே. (கo)

359 அரவார்புனலன்பிலாலந்துறைதன்மேற்
கரவாதவர்காழியர்ஞானசம்பந்தன்
பரவார்தமிழ்பத்திசைபாடவல்லார்போய்
விரவாருவர்வானிடைவீடெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சத்திவாதீசர், தேவியார்-சவுந்தராயகியம்மை.

---

34 சீகாழி-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அடலேறமருங்கொடியண்ணல், மடலார்குழலாளொடுமன்னுங் 360
கடலார்புடைசூழ்தருகாழி, தொடர்வாரவர்தூநெறியாரே. (க)

திரையார்புனல்சூடியசெல்வன், வரையார்மகளோடுமகிழ்ந்தான்
கரையார்புனல்சூழ்தருகாழி, நிரையார்மலர்தூவுமினின்றே. (உ)

இடியார்குரலேறுடையெந்தை, துடியாரிடையாளொடுதன்னுங்
கடியார்பொழில்சூழ்தருகாழி, யடியாரறியாரவலம்மே. (ஙூ)

ஒளியார்விடமுண்டவொருவன், னளியார்குழன்மங்கையொடன்பாய்
களியார்பொழில்சூழ்தருகாழி, யெளிதாமதுகண்டவரின்பே. (ச)

பனியார்மலரார்தருபாதன், முனிதானுமையோடுமுயங்கிக்
கனியார்பொழில்சூழ்தருகாழி, யினிதாமதுகண்டவரீடே. (ஞ)

கொலையார்தருசூற்றமுதைத்து, மலையான்மகளோடுமகிழ்ந்தான்
கலையார்தொழுதேத்தியகாழி, தலையாற்றொழுவார்தலையாரே. (சு)

திருவார்சிலையாலெயிலெய்து, உருவாருமையோடுடனானன்
கருவார்பொழில்சூழ்தருகாழி, மருவாதவர்வான்மருவாரே. (எ)

அரக்கன்வலியொல்கவடர்த்து, வரைக்குமகளோடுமகிழ்ந்தான்
சுரக்கும்புனல்சூழ்தருகாழி, நிரக்குமலர்தூவநிணைந்தே. (அ)

இருவர்க்கெரியாகிமிர்ந்தார, னிருவிற்பெரியாளொடுசேருங்
கருநற்பரவைகமழ்காழி, மருவப்பிரியும்வினைமாய்ந்தே. (கூ)

சமண்சாக்கியர்தாமலர்தூற்ற, வமைந்தானுமையோடுடனன்பாய்க்
கமழ்ந்தார்பொழில்சூழ்தருகாழி, சுமந்தார்மலர்தூவுதல்தொண்டே. (கூ)

நலமாகியஞானசம்பந்தன், கலமார்கடல்சூழ்தருகாழி
நிலையாகநினைந்தவர்பாடல், வலராகனவர்வானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

35 திருவீழிமிழலை-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரையார்விரிகோவணவாடை, நரையார்விடையூர்தியர்தான்
விரையார்பொழில்வீழிம்மிழலை, யுரையாலுணர்வாருயர்வாரே. (க)

பூணதல்புரிபுன்சடைதன்மேற், கீணதல்லொருகங்கைகரந்தான்
வீணையில்லவர்வீழிம்மிழலை, நிணவில்லவர்நெஞ்சமுநெஞ்சே. (உ)

அழுவல்லவராடியும்பாடி, யெழுவல்லவரெந்தையடிமேல்
விழுவல்லவர்வீழிம்மிழலை, தொழுவல்லவர்நல்லவர்தொண்டே. (ஙூ)

உரவம்புரிபுன்சடைதன்மே, லரவம்மரையார்த்தவழகன்
விரவும்பொழில்வீழிம்மிழலை, பரவும்மடியாரடியாரே. (ச)

கரிதாகியநஞ்சணிகண்டன், வரிதாகியவண்டறைகொன்றை
விரிதார்பொழில்வீழிம்மிழலை, யுரிதாகினைவாருயர்வாரே. (ஞ)

சடையார்பிறையான்சரிபூதப், படையான்கொடிமேலதோர்பைங்கண் 3
விடையானுறைவீழிம்மிழலே, யடைவாரடியாரவர்தாமே. (சு)

செறியார்கழலுஞ்சிலம்பார்க்க, நெறியார்குழலாளொடுநின்றுண்
வெறியார்பொழில்வீழிம்மிழலே, யறிவாரவலம்மறியாரே. (எ)

உளையாவலியெல்கவரக்கன், வளையாவிரலூன்றியமைந்தன் 3
விளையார்வயல்வீழிம்மிழலே, யுளையாவருவாரடியாரே. (அ)

மருள்செய்திருவர்மயலாக, வருள்செய்தவனரைழலாகி
வெருள்செய்தவன்வீழிம்மிழலே, தெருள்செய்தவர்தீவினைதேர்வே. (கூ)

துளங்குநெறியாரவர்தொன்மை, வளங்கொள்ளன்மின்புல்லமண்டேரை 3
விளங்கும்பொழில்வீழிம்மிழலே, யுளங்கொள்பவர்தம்வினையோய்வே. (கo)

நளிர்காழியுண்ஞானசம்பந்தன், குளிரார்சடையானடிகூற
மிளிரார்பொழில்வீழிம்மிழலே, யிளர்பாடல்வல்லார்க்கில்லைகேடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

36 திரு ஐயாறு–பண்–தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கலையார்மதியோடுமரவும், நிலையார்சடையாரிடமாகும்
மலையாரமுமாமணிசுந்தோ, டலையார்புனல்சேருமையாறே. (க)

மதியொன்றியகொன்றைவடத்தன், மதியொன்றவுதைத்தவர்வாழ்வும்
மதியின்னெடுசேர்கொடிமாடம், மதியம்பயில்கின்றவையாறே. (உ)

கொக்கின்னிறகின்னெடுவெண்ணி, புக்கசடையார்க்கிடமாகுந்
திக்கின்னிசைதேவர்வணங்கும், அக்கின்னரையாரத்தியாறே. (ங)

நிறைகொண்டபுரம்மவைநின்தக், கறைகொண்டவர்காதல்செய்கோயில் 3
மறைகொண்டகலவ்வானவர்தம்மி, லறையும்மொலிசேருமையாறே. (ச)

உமையாளொருபாகமதாகச், சமையாரவர்சார்விடமாகும்
மமையாருடல்சேர்தரமுத்தம், மமையாவருமந்தணையாறே. (ஞ)

தலையின்றொடைமாலையணிந்து, கலைகொண்டதோர்கையினர்சேர்வ
நிலைகொண்டமனத்தவர்நித்தம், மலர்கொண்டுவணங்குமையாறே. (சு)

வரமொன்றியமாமலர்போன்றன், சிரமொன்றையறுத்தவர்சேர்வாம்
வரைநின்றிழிவார்தருபொன்னி, யரவங்கொடுசேருமையாறே. (எ)

வரையொன்றதெடுத்தவரக்கன், சிரமங்கெரித்தவர்சேர்வு
மீரையின்மலர்மேதகுபொன்னித், திரைதன்னெடுசேருமையாறே. (அ)

* சங்கத்தயனுமறியாமைப், பொங்குஞ்சுடரானவர்கோயில்
கொங்கிற்பொலியும்புனல்கொண்டு, அங்கிக்கெதிர்காட்டுமையாறே. (சு)

அவராடையர்தோலுடையார்கள், கவர்வாய்மொழிகாதல்செய்யாதே
தவராசர்கடாமரையானே, டவர்தாமணியத்தியாறே. (கo)

கலியார்கலிக்காழியர்மன்னன், னலமார்தருஞானசம்பந்தன்
னலியார்புனல்சூழுமையாற்றைச், சொலுமாலைவல்லார்துயர்வீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செம்பொன்சோதீசுரர், தேவியார்-அறம்வளர்த்தாயகியம்மை.

---

37 திருப்பனையூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

3 அரவச்சடைமேல்மதிமத்தம், விரவிப்பொலிகின்றவனூராம்
நிரவிப்பலதொண்டர்கணஞ்சூழ், பரவிப்பொலியும்பனையூரே. (க)

4 எண்ணெண்றிகிணைந்தவர்தம்பா, லுண்ணின்றுமகிழ்ந்தவனூராங்
கண்ணின்றெழுசோலையில்வண்டு, பண்ணின்றெலிசெய்பனையூரே. (உ)

5 அலரும்மெறிசெஞ்சடைதன்மேல், மலரும்பிறையொன்றுடையானூர்
சிலரென்றுமிருந்தடிபேணப், பலரும்பரவும்பனையூரே. (ங)

6 இடியார்கடனஞ்சமுதுண்டு, பொடியாடியமேனியினனூர்
படியார்தொழமன்னவரேத்தப், படியார்பணியும்பனையூரே. (சு)

7 அறையார்கழல்மேலரவாட, விறையார்பலிதேர்ந்தவனூராம்
பொறையார்மிகுசீர்விழமல்கப், பறையாரொலிசெய்பனையூரே. (ஙி)

8 அணியார்தொழவல்லவரேத்த, மணியார்மிடறொன்றுடையானூர்
தணியார்மலர்கொண்டிருபோதும், பணிவார்பயிலும்பனையூரே. (சு)

9 அடையாதவர்மூவெயில்சீறும், விடையான்விறலார்கரியின்றோ
லுடையானவ † னெண்பலபூதப், படையானவனூர்பனையூரே. (எ)

10 இலகும்முடிபத்துடையானை, யலல்கண்டருள்செய்தவெம்மண்ண
லுலகில்லுயிர்நீர்நிலமற்றும், பலகண்டலனூர்பனையூரே. (அ)

11 வரமுன்னிமகிழ்ந்தெழுவீரர்கள், சிரமுன்னடிதாழவணங்கும்
பிரமன்னெடுமாலறியாத, பரமன்னுறையும்பனையூரே. (சு)

12 அழி ‡ வல்லமணரொடுதேரர், மொழிவல்லனசொல்லியபோதும்
மிழிவில்லதோர்செம்மையினூர், பழியில்லவர்சேர்பனையூரே. (கo)

* சங்கக்கயனும் என்றும் பாடம். † உடையானவனெண்பலபூத என்றும் பாடம்.
‡ அழிவில்லமணரீதொடுதேரர் என்றும் பாடம்.

பாரார்விடை † யான்பணியூர்மேற், சீரார்தமிழ்ஞானசம்பந்தன் 4-
ஞராதசொன்மாலைகள்பத்தும், மூரூர்நினைவாருயர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சவுந்தரேசர், தேவியார்-பெரியநாயகியம்மை.

---

38 திருமயிலாடுதுறை-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கரவின்றிநன்மாமலர்கொண்டே, யிரவும்பகலுந்தொழுவார்கள்
சிரமொன்றியசெஞ்சடையார்வாழ்வ், வரமாமயிலாடுதுறையே. (க)

உரவெங்கரியின்னுரிபோர்த்த, பரமன்னுறையும்பதியென்பர்
குரவஞ்சுரபுன்னையும்வன்னி, மருவும்மயிலாடுதுறையே. (உ)

ஊனத்திருணீங்கிடவேண்டில், ஞானப்பொருள்கொண்டடிபேணுந்
தேனெய்த்தினியானமருஞ்சேர், வானம்மயிலாடுதுறையே. (ங)

அஞ்சொண்புலனுமவைசெற்ற, மைஞ்சன்மயிலாடுதுறையை
நெஞ்சொன்றிநினைந்தெழுவார்மேற், றுஞ்சும்பிணியாயினதானே. (ச)

‡ கணியார்மதிசெஞ்சடையான்றன், னணியார்ந்தவருக்கருளென்றும்
பிணியாயினதீர்த்தருள்செய்யும், மணியான்மயிலாடுதுறையே. (ஞ)

தெரண்டரிசைபாடியுங்கூடிக், கண்டுதுதிசெய்யுள்ளூராம்
பண்டும்பலவேதியரோத, வண்டார்மயிலாடுதுறையே. (ட)

அணங்கோடொருபாகமமர்ந்து, இணங்கியருள்செய்தவனூராம்
துணங்கும்புரிதூலர்கள்கூடி, வணங்கும்மயிலாடுதுறையே. (ண)

சிரங்கையினிலேந்தியிரந்த, பரங்கொள்பரமேட்டிவரையா
லரங்கவ்வரக்கன்வலிசெற்ற, வரங்கொண்மயிலாடுதுறையே. (அ)

ஞாலத்தைநகர்ந்தவன்றானும், கோலத்தயனும்மறியாத
சீலத்தவனூர்சிலர்கூடி, மாலேத்தீர்மயிலாடுதுறையே. (கூ)

நின்றுண்சமணுநெடுந்தேரர், றொன்றும்மறியாமையுயர்ந்த
வென்றியருளாமவனூராம், மன்றன்மயிலாடுதுறையே. (க0)

நயர்காழியுள்ஞானசம்பந்தன், மயில்தீர்மயிலாடுதுறைமேற்
செயலாலுரைசெய்தனபத்தும், மூயர்வாமிவையுற்றுணர்வார்க்கே. (கச)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மாயூரநாதர், தேவியார்-அஞ்சலுநாயகியம்மை.

---

† விடையார் என்றும் பாடம். ‡ தணியார் என்றும் பாடம்.

39 திருவேட்களம்-பண்-தக்கராகம்.



திருச்சிற்றம்பலம்.

அந்தமுமாதியுமாகியவண்ணலராழலங்கையமர்ந்திலங்கு
மந்தமுழவமியம்பமலைகள்காணின்முடிச்
சந்தமிலங்குசுலைகண்கைதண்மதியம்மயலேதகும்ப
வெந்தவெண்ணீறுமெய்பூசும்வேட்களநன்னகராரே. (க)

சடைதனைத்தாழ்தலுமேறமுடித்துச்சங்க * வெண்டோடுசெரிந்திலங்கப்
புடைதனிற்பாரிடஞ்சூழப்போதருமாறிவர்போல்வா
ருடைதனினல்விதற்கோவணவாடையுண்பதுமூரிடுபிச்சைவெள்ளே
விடைதனேயூர்திநயக்தார்வேட்களநன்னகராரே. (உ)

பூதமும்பல்கணமும்புடைசூழப்பூமியும்விண்ணுமுடன்பொருந்தச்
சீதமும்வெம்மையுமாகிச்சிரொடுநின்றவெஞ்செல்வ
ரோதமுங்கானலுஞ்சூழ்தருவேலியுள்ளங்கலந்திசையாலெழுந்த
வேதமும்வேள்வியுமோவாவேட்களநன்னகராரே. (ஊ)

அரைபுல்குமைந்தலையாடலரவமையவெண்கோவணத்தோடசைத்து
வரைபுல்குமார்பிலோராமைவாங்கியணிந்தவர்தாந்
திரைபுல்குதெண்கடறண்கழியோதந்தேனலங்கானலில்வண்டுபண்செய்ய
விரைபுல்குபைம்பொழில்சூழ்ந்தவேட்களநன்னகராரே. (எ)

பண்ணுமுவண்டறைகொன்றையலங்கல்பால்புரைநீறுவெண்ணூல்கிடந்த
பெண்ணுமுமார்பினர்பேணுர்மும்மதிளெய்தபெருமான்
கண்ணுறுகெற்றிகலந்தவெண்டிங்கட்கண்ணியர்விண்ணவர்கைதொழுதேத்தும்
வெண்ணிலமால்விடையண்ணல்வேட்களநன்னகராரே. (ஏ)

கறிவளர்சுன்றமெடுத்தவன்காதற்கண்கவரங்கணியோனுடலம்
பொறிவளராரழலுண்ணப்பொங்கியபூதபுராணர்
மறிவளரங்கையர்மங்கையோர்பங்கர்மைஞ்சிறமானுரித்தோலுடையாடை
வெறிவளர்கொன்றையந்தாரார்வேட்களநன்னகராரே. (ஐ)

மண்பொடிக்கொண்டெரித்தேரர்சுடலைமாமலைவேந்தன்மகள்மகிழ்
நண்பொடிச்சேரரின்முடிகொய்யன்செய்யலுகந்தார்
கண்பொடிவெண்டலையோடுகையேற்றிக்காலனிக்காலால்கடந்துகந்தார்
வெண்பொடிச்சேர்திருமார்பர்வேட்களநன்னகராரே. (ஒ)

ஆழ்தருமால்கடனஞ்சினையுண்டாராமுதமமரர்க்கருளிச்
சூழ்தருபம்பரையார்த்துச்சுற்றுமோடொண்மழுவேந்தித்
தாழ்தருபுன்சடையொன்றினைவாங்கித்தண்மதியம்மயலேதகும்ப
வீழ்தருகங்கைகரந்தார்வேட்களநன்னகராரே. (அ)

* சங்கவெண்டோடு என்றும் பாடம்.

திருவொளிகாணியபேதுறுகின்றதிசைமுகனுந்திசைமேலளந்த 4
கருவரையேந்தியமாலுங்கைதொழுகின்றதுமல்லா
லருவரையொல்கவெடுத்தவரக்கனுடெழிற்றோள்களாழத்தழுந்த
வெருவுறவூன்றியபெம்மான்வேட்களநன்னகராரே. (சு)

அத்தமண்டோய்துவராரமண்குண்டர்யாதுமல்லாவுரையேயுரைத்துப் 4
பொய்த்தவீம்பேசுவதல்லாற்புறனுரையாதொன்றுங்கொள்ளேல்
முத்தனவெண்முறுவல்லுமையஞ்சமூரிவல்லாணையினீருரிபோர்த்த
வித்தகவேதமுதல்வர்வேட்களநன்னகராரே. (கo)

விண்ணியல்மாடம்விளங்கொளிவீதிவெண்கொடியெங்கும்விரிந்திலங்க 4
நண்ணியசீரவர்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
பெண்ணினல்லாளொருபாகமமர்ந்தபேணியவேட்களமேன்மொழிந்த
பண்ணியல்பாடல்வல்லார்கள்பழியொடுபாவமிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பாசுபதேசுவரர், தேவியார்-கல்லநாயகியம்மை.

ஆறு பதிகம் – ருக.

---

40 திருவாழ் * கொளிபுத்தூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக் 4
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலகூறி
வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றுருவடிகாண்போம். (க)

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தையம் 4
புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையேறிப்புகழ
வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்வோம். (உ)

பூணெடுநாகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி 4
யூணிடுபிச்சையுரையுமுண்டியென்றுபலகூறி
வாணெடுங்கண்ணுமைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாணிழல்சார்வோம். (ங)

தாரிடுகொன்றையோர்வெண்மதிகங்கைதாழ்சடைமேலவைசூடி 4
யூரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபலகூறி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
காரிடுமாமலர்தூவிக்கறைமிடற்றுருவடிகாண்போம். (ச)

* திருவாளொளிபுத்தூர் என்றும் பாடம்.

கனமலர்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழையோடு
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி
வனமுலைமாமலைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூ
ரினமலரேய்ந்தனதூவியெம்பெருமானடிசேர்வோம். (ரு)

அலைவளர்நாகமசைத்தனலாடியலர்மிசையந்தணனுச்சி
கலைதலையிற்பலிகொள்ளுங்கருத்தனேகள்வனேயென்ன
வளை * பொலிமுன்கைமடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தலையவிழ்மாமலர்தூவித்தலைவனதாளிணைசார்வோம். (கூ)

அடர்செவிவேழத்தினீருரிபோர்த்தழிதலையங்கையிலேந்தி
யுடலிடுபிச்சையோடையமுண்டியென்றுபலகூறி
மடல்நெடுமாமலர்க்கண்ணியோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தடமலராயினதூவித்தலைவனதாணிழல்சார்வோம். (எ)

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனுளிர்கடகக்கையடர்த்து
வயலிடுபிச்சையோடையமார்தலையென்றடிபோற்றி
வயல்விரிநீலநெடுங்கணிபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சயவிரிமாமலர்தூவித்தாழ்சடையானடிசார்வோம். (அ)

4 கரியவனுன்முகன்கைதாழுதேத்தக்காணலுஞ்சாரலுமாகா
வெரியுருவாகியூரையமிடுபலியுண்ணியென்றேத்தி
வரியரவல்குன்மடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரிமலராயினதூவிவிகிர்தனசேவடிசேர்வோம். (கூ)

5 குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினர்புறங்கூற
வெண்டலைபிற்பலிகொண்டல்விரும்பியீதென்றுவிளம்பி,
வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கள்மாமலர்தூவத்தோன்றநின்றுனடிசேர்வோம். (கo)

6 கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைஞானவின்றமிழ்ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதல்லெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்—மாணிக்கவண்ணவீசுரர், தேவியார்-வண்டார்பூங்குழலம்மை.

---

* வளையொலி என்னும் பாடம்.

४। திருப்பாம்புரம்-பண்-தக்கராகம்.

திருச்சித்தம்பலம்.

சீரணிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்தசெல்வர்
வாரணிவனமுலைமங்கையோர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர்
காரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தருநான்மறையாளர்பாம்புரநன்னகராரே. (க)

கொக்கிறகோடுகூவிளமத்தங்கொன்றையொடுருக்கணிசடைய
ரக்கினுடனாமமூண்டழகாகவனலதுவாடுமெமடிகண்
மிக்கசுல்வேதவேள்வியுளெங்கும்விண்ணவர்விரைமலர்தூவப்
பக்கம்பல்பூதம்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே. (உ)

துன்னலினுடையுமித்ததன்மேலோர்சுறைநல்லரவதுசுற்றிப்
பின்னுவார்சடைகடாழவிட்டாடிப்பித்தராய்த்திரியுமெம்பெருமான்
மன்னுமாமலர்கமிடகாளுமாமலியாட்டியுந்தாமும்
பன்னுநான்மறைகள்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே. (ங)

துஞ்சுநாடுறுதுதோற்றமுமில்லாச்சுடர்விடுசோதியெம்பெருமா
னஞ்சுசேர்கண்டமுடையவென்னுதர்நள்ளிருணடஞ்செயுநம்பர்
மஞ்சுதோய்சோலைமாமயிலாடமாடமாளிகைதன்மேலெழிப்
பஞ்சுசேர்மெல்லடிப்பாவையர்பயிலும்பாம்புரநன்னகராரே. (ச)

நதியதனையலேருதலைமாலைநான்மதிசடைமிசையணிந்து
கதியதுவாகக்காளிமுன்காணக்கானிடைநடஞ்செய்தகருத்தர்
விதிப்துவழுவாவேதியர்வேள்விசெய்தவரோத்தொலியோவாப்
பதியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரநன்னகராரே. (ரு)

ஒதிநன்குணர்வார்க்குணர்வுடையொருவரொளிதிகழுருவஞ்சேரொருவர்
மாதினையிடமாவைத்தவெம்வள்ளல்மான்மறியேந்தியமைந்தர்
ஆதிரையருளென்றமரர்கள்பணியவலகடல்கடையவன்றெழுந்த
பாதிவெண்பிறைசடைவைத்தவெம்பரமர்பாம்புரநன்னகராரே. (சு)

மாலினுக்கன்றுசக்கரமீந்தமலரவற்கொருமுகமொழித்தே
ஆலின்கீழறமோர்நால்வருக்கருளியனலதுவாடுமெம்மடிகள்
காலனைக்காய்ந்துதங்கழலடியாற்காமனைப்பொடிபடநோக்கிப்
பாலனுக்கருள்கள்செய்தவெம்மடிகள்பாம்புரநன்னகராரே. (எ)

விடைத்தவல்லரக்கன்வெற்பினையெடுக்கமெல்லியதிருவிரலூன்றி
யடர்த்தவன்றனக்கருள்செய்தவடிகளனலதுவாடுமெம்மண்ணல்
மடக்கொடியவர்கள்வருபுனலரவம்வந்திழியரிலின்றலைமேற்
படப்பையிற்கொணர்ந்துபருமணிசிதறும்பாம்புரநன்னகராரே. (அ)

கடிபடுகமலத்தயனெடுமாலுங்காதலோடடிமுடிதேடச்
செடிபடுவினைகள் தீர்த்தருள்செய்யுந்தீவணரெம்முடைச்செல்வர்
முடியுடையமரர்முனிகணத்தவர்கள்முறைமுறையடிபணிந்தேத்தப்
படியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரநன்னகராரே. (கூ)

குண்டர்சாக்கியருங்குணமிலாதாருங்குற்றுவிட்டுடுக்கையர்தாமுங்
கண்டவாறுரைத்தக்கல்நிமிர்த்தண்ணுங்கையர்தாமுள்ளவாறறியார்
வண்டுசேர்குழலிமலைமகணடுங்கவாரணமுரிசெய்துபோர்த்தார்
பண்டுநான்செய்தபாவங்கள்தீர்ப்பார்பாம்புரநன்னகராரே. (கo)

பார்மலிந்தோங்கிப்பருமதிள்சூழ்ந்தபாம்புரநன்னகராரைக்
கார்மலிந்தழகார்கழனிசூழ்மாடக்காழிமலமுதுதிக்கவுணி
ஞாமலிந்தோங்குஞான மறைஞானசம்பந்தன்செந்தமிழ்வல்லார்
சீர்மலிந்தழகார்செல்வமதோங்கிச்சிவனடிநண்ணுவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–பாம்பு * ரேசர், தேவியார்–வண் ‡டமர்பூங்குழலம்மை.

---

42 திருப்பேணுபெருந்துறை–பண்–தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பைம்மாநாகம்பன்மலர்க்கொன்றைபன்றிவெண்கொம்பொன்றுபூண்டு
செம்மாந்தையம்பெய்கென்றுசொல்லிச்செய்தொழில்பேணியோர்செல்வ
ரம்மானேக்கியந்தளிர்மேனியரிவையோர்பாகமமர்ந்த
பெம்மானல்லியந்தொல்புகழாளர்பேணுபெருந்துறையாரே. (க)

மூவருமாகியிருவருமாகிமுதல்வனுமாய்நின்றமூர்த்தி
பாவங்கடீர்தரநல்வினைநல்கிப்பல்கணநின்றுபணியச்
சாவமதாகியமால்வரைகொண்டுதண்மதிள்மூன்றுமெரித்த
தேவர்கள்தேவரெம்பெருமானர்தீதில்பெருந்துறையாரே. (உ)

செய்பூங்கொன்றைசுரிவளமாலைசென்னியுட்சேர்புனல்சேர்த்திக்
கொய்பூங்கோதைமாதுமைபாகங்கூடியோர்பீடுடைவேடர்
மைபோனறுகணிகுலைவாழைக்காய்குலையிற்கமுகினீப
பெய்பூம்பாளைபாய்ந்திழிதேறல்பில்குபெருந்துறையாரே. (ஊ)

நிலனெடுவானுநீரொடுதீயும்வார்புவுமாகியேரைந்து
புலனெடுவென்றுபொய்ம்மைகடீர்த்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
கலனெடுதீங்குந்தானலதென்றிரந்தெழுசிந்தையராகி
மலனெடுமாசுமில்லவர்வாழும்பல்குபெருந்துறையாரே. (ச)

---

* பாம்புரகாதர் என்றும் பாடம். † வண்டார் பூங்குழலி என்றும் பாடம்.

பணிவாயுள்ளநன்கெழுநாவின்பத்தர்கள்பத்திமைசெய்யத்
துணியார்தங்களுள்ளமிலதசுமடர்கள்சோதிப்பரியா
ரணியார்நீலமாகியகண்டரிசிலுருஞ்சுகரைமேல்
மணிவாய்நீலம்வாய்கமழ்தேதல்மல்குபெருந்துறையாரே. (ஙி)

எண்ணூர்தங்கள்மும்மதிள்வேலவேலவங்காட்டியவெந்தை
விண்ணோர்சீரார்தன்னருள்செய்தவித்தகர்வேதமுதல்வர்
பண்ணூர்பாடலாடலறாதபசுபதியீசனூர்பாகம்
பெண்ணுணையவர்சடையண்ணல்பேணுபெருந்துறையாரே. (சு)

விழையாருள்ளநன்கெழுநாவில்வினைகெடவேதமாறங்கம்
பிழையாவண்ணம்பண்ணியவாற்றாற்பெரியோரேத்தும்பெருமான்
றழையார்மாவின்றழ்கனியுந்தித்தண் * அரிசில்படைசூழ்ந்த
குழையார்சோலைமென்னடையன்னங்கூடுபெருந்துறையாரே. (எ)

பொன்னங்கானல்வெண்டிரைசூழ்ந்தபொருகடல்வேலியிலங்கை
மன்னனெல்கமால்வரையூன்றிமாமுரணகுமுன்தோளு
முன்னவைவாட்டிப்பின்னருள்செய்தமூவிலைவேலுடைமூர்த்தி
யன்னங்கன்னிப்பேடையோடாடியணவுபெருந்துறையாரே. (அ)

புள்வாய்போழ்ந்தமாநிலங்கிண்டபொருகடல்வண்ணனும்பூவி
னுள்வாயல்லிமேலுறைவானுமுணர்வரியாளுமைகேள்வன்
முள்வாய்தாளின்றுமரைமொட்டின்முகமலரக்கயல்பாயக்
கள்வாய்நீலங்கண்மலரேய்க்குங்காமர்பெருந்துறையாரே. (கூ)

குண்டுக்தேருங்கூறைகளேந்துங்கூப்பிலர்செப்பிலராகி
மிண்டும்மிண்டர்மிண்டவைகண்டுமிண்டுசெயாதவிரும்புந்
தண்டும்பாம்பும்வெண்டலைசூலந்தாங்கியதவர்தலைவர்
வண்டுந்தேனும்வாழ்பொழிற்சோலைமல்குபெருந்துறையாரே. (கo)

கடையார்மாடநன்கெழுவீதிக்கழுமலவூரன்கலந்த
நடையாரின்சொல்ஞானசம்பந்தனல்லபெருந்துறைமேய
படையார்சூலம்வல்லவன்பாதம்பரியபத்திவைவல்ல
ருடையாராகியுள்ளமுமான்றியுலகினில்மன்னுவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வெளாந்தாதர், தேவியார்-மலையரசியம்மை.

---

* அரிசில் என்பது ஒரு நதி. அது அரிசொல்ல வந்ததினால் அரிசொல் நதியென்று
கும்பகோணப் புராணத்திற் சொல்லப்படுகின்றது.

43 திருக்கற்குடி-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

459 வடந்திகழ்மென்முலையாளோப்பாகமதாகமகித்துத்
தடந்திரைசேர்புனல்மாதைத்தாழ்சடைவைத்தசதுர
நிடந்திகழ்முப்புரிநூலர்துன்பமோடின்பமதெல்லாங்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (க)

460 அங்கமோராறுடைவேள்வியானவருமறைநான்கும்
பங்கமில்பாடலோடாடல்பாணிபயின்றபடிறர்
சங்கமதார்குமாதர்தங்கையில்மைந்தர்கள்தாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. (உ)

461 நீரகலந்தருசென்னிநீடியமத்தமும்வைத்துத்
தாரகையின்னெளிசூழ்ந்ததண்மதிசூடியசைவர்
போரகலந்தருவேடர்புனத்திடையிட்டவிறகிற்
காரகிலின்புகையும்முங்கற்குடிமாமலையாரே. (ங)

462 ஒருங்களிநீயிறைவாவென்றும்பர்களோலமிடக்கண்
டிருங்களமாரவிடத்தையின்னமுதுண்ணியவீசர்
மருங்களியார்பிடிவாயில்வாழ்வெதிரின்மூலவாரிக்
கருங்களியானைகொடுக்குங்கற்குடிமாமலையாரே. (ச)

463 போர்மலிதிண்சிலைகொண்டுபூதகணம்புடைசூழப்
பார்மலிவேடுருவாகிப்பண்டொருவர்க்கருள்செய்தா
ரேர்மலிசேழல்லினைத்தவிண்ணெளியாமணியெங்கும்
கார்மலிவேடர்குவிக்குங்கற்குடிமாமலையாரே. (ஞ)

464 உலந்தவரென்பதணிந்தேபூரிடுபிச்சையராகி
லிலங்கல்வில்வெங்கனலாலேமூவெயில்வேவமுனிந்தார்
நலந்தருசிந்தையராகிநாமலிமாலியினூலே
கலந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (ட)

465 மானிடமார்தருகையர்மாமழுவாருமவலத்தா
ரூனிடையார்தலையோட்டிலுண்கலனாகவகந்தார்
தேனிடையார்தருசந்தின்றிண்சிறையால்தினைவித்திக்
கானிடைவேடர்விளைக்குங்கற்குடிமாமலையாரே. (ஏ)

466 வாளமர்வீரனீன்தவிராவணன்மாமலையின்கீழ்த்
தோளமர்வன்றலைகுன்றத்தொல்விரலூன்றுதிணைவர்
தாளமர்வேய்தலைப்பற்றித்தாழ்கரிவிட்டவிசைபோய்க்
காளமதார்முகில்கீறுங்கற்குடிமாமலையாரே. (அ)

தண்டமர்தாமரையானுந்தாவியும்மண்ணேயளந்து
கொண்டவனும்மறிவொண்ணுக்கொள்கையர்வெள்விடையூர்வர்
வண்டிசையாயினபாடநீடியவார்பொழினீழற்
கண்டமர்மாமயிலாடுங்கற்குடிமாமலையாரே. (கூ)

மூத்தவராடையினுருமூசு * கருப்பொடியாரு
நாத்தவர்பொய்ம்மொழியார்கணயமிலராமதிவைத்தா
ரேத்தியபத்தர்கள்சித்தர்நைஞ்சவவரிடரெல்லாங்
காத்தவர்காமருசோலைக்கற்குடிமாமலையாரே. (கo)

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-முத்தீசர், தேவியார்-அஞ்சனகுயிமமை.

---

44 திருப்பாச்சிலாச்சிராமம்-முயலகன்றீர்த்தது-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள்துளங்கிவிளங்கச்சுடர்ச்சடைசுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழவாரிடமும்பலிதேர்வ
ரணிவளர்கோலமெனாஞ்செய்துபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே. (க)

கலைபுனைமானுரிதோலுடையாடைகனல்சுடராலிவர்கண்கள்
தலையணிசென்னியர்தாரணிமார்பர்தம்மடிகள்விவரென்ன
அலைபுனல்சூழ்ம்பொழில்சூழ்ந்தபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
விலைபுனைவேலரோவேழையைவாடவிடர்செய்ததோரிவரீடே. (உ)

வெஞ்சுடராடுவர்தஞ்சிருண்மாலேவேண்டுவர்பூண்பதுவெண்ணூல்
நஞ்சடைகண்டர்நெஞ்சிடமாகநண்ணுவர்நம்மைநயந்து
மஞ்சடைமாளிகைசூழ்தருபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோபைந்தொடிவர்டச்சிதைசெய்வதோவிவர்சிரே. (ஊ)

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்கனல்தருதூமதிகண்ணி
புனமலர்மாலையணிந்தழகாயபுரிதர்கொலாமிவரென்ன
வனமலிவண்பொழில்சூழ்தருபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மனமலிமைந்தரொமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே. (எ)

* மூசு கடுப்பொடி என்றும் பாடம்.

மாந்தர்தம்பால்நறுநெய்மகிழ்ந்தாடிவளர்சடைமேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல்தாளமோர்வீணைமுதிரவோர்வாய்முரிபாடி
யாந்தவிழிச்சிறுபூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
சாந்தணிமார்பரோதையலேவாடச்சதுர்செய்வதோவிவர்சார்வே. (டு)

நீறுமெய்பூசிநிறைசடைதாழநெற்றிக்கண்ணுற்றுநோக்கி
யாறதுசூடியாடரவாட்டியையிரிற்கோவணவாடை
பாறருமேனியர்பூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
வேறதுவேறியரேழையைவாடவிடர்செய்வதோவிவரீடே. (சு)

பொங்கிளநாகமொரேகவடத்தோடாமைவெண்ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலைபுனைந்தழகாயகுழகர்கொலாமிவரென்ன
வங்கிளமங்கையோர்பங்கினர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
சங்கொளிவண்ணரொதாழ்குழல்வாடச்சதிர்செய்வதோவிவர்சார்வே. (எ)

ஏவலத்தால்விசயற்கருள்செய்தெயிராவணனையீடழித்து
மூவரிலும்முதலாய்நடுவாயமூர்த்தியையன்றிமொழியாள்
யாவர்களும்பரவும்மெழிற்பாச்சிலாச்சிராமத்தறைகின்ற
தேவர்கள்தேவரோசேயிழைவாடச்சிதைசெய்வதோவிவர்சார்வே. (அ)

மேலதுதான்முகனெய்தியதில்லைக்கீழதுசேவடிதன்னை
நீலதுவண்ணனுமெய்தியதில்லையெனவிவர்நின்றதுமல்லா
லாலதுமாமிதேதாய்பொழிற்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
பாலதுவண்ணரோபைந்தொடிவாடப்பழிசெய்வதோவிவர்பண்பே. (சூ)

காணெடுகூடியசாயினரேனுருகுவரவரிருபோது
மூணெடுகூடியவுட்குந்தகையாருரைகளைகொள்வேண்டா
வாணெடுபெண்வடிவாயினபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
பூணெடுமார்பரோபூங்கொடிவாடப்புனைசெய்வதோவிவர்பொற்பே. (கo)

அகமலியன்பொடுதொண்டர்வணங்கபாச்சிராமத்துறைகின்ற
புகைமலிமாலைபுனைந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

முயலகன்-என்பது ஒருவித வலிநோய், இது ஒரு ராசன் மகளுக்குக் கண்டிருந்து இந்தத் திருப்பதிகமோதி யருளினவளவில் தீர்ந்தது.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மாற்றறிவரதர், தேவியார்-பாலசுந்தராம்பிகையம்மை.

ஆ. பதிகம்-சை.

45 திருப்பழையனூர்-திரு ஆலங்காடி-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

481 துஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னினிவிப்பாருமூனேட்பாய்
வஞ்சப்படுத்தொருத்திவாணாள்கொள்ளும்வகைகேட்
டஞ்சும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (க)

482 கேடும்பிறவியுமாக்கினருங்கேடிலா
வீடுமாநெறியினம்பினரெம்விகிர்தனர்
காடுஞ்சுடலையுங்கைக்கொண்டல்லிற்கணப்பேயோ
டாடும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (உ)

483 கந்தங்கமழ்கொன்றைக்கண்ணிசூடிகனலாடி
வெந்தபொடிநீற்றைவிளங்கப்பூசும்விகிர்தனர்
கொந்தண்பொழிற்சோலையரவிற்ரேன்றிக்கொடல்பூத்
தந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ங)

484 பாலவெண்மதிசென்னிபடரச்சூடிப்பழியோராக்
காலனுயிர்செற்றகாலனுகருத்தனர்
கோலம்பொழிற்சோலைப்பெடையோடாடிமடமஞ்ஞை
யாலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ச)

485 ஈர்க்கும்புனல்சூடியிளவெண்டிங்கள்முதிரவே
பார்க்குமரவம்பூண்டாடிவேடம்பயின்றருங்
கார்க்கொள்கொடிமுல்லைகுருந்தமேறிக்கருந்தேன்மொய்த்
தார்க்கும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ஞ)

486 பறையுஞ்சிறுகுழலும்யாழும்பூதம்பயிற்றவே
மறையும்பலபாடியமராகத்துறையுமைந்தனர்
பிறையும்பெரும்புனல்சேர்சடையினரும்பேடைவண்
டுறையும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ட)

487 தூணங்குமறைபாடியாடிவேடம்பயின்றருந்
தினங்குமலைமகளேர்திருகுருன்றியைசந்தரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர்வைகவேத்தும்வாழ்த்துங்கேட்
டணங்கும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (எ)

488 கணையும்வரிசிலையுமெரியுங்கூடிக்கவர்ந்துண்ண
வினையிலெயில்மூன்றுமெரித்திட்டரசம்பிறைவனர்
பிணையுஞ்சிறுமறியுங்கலையுமெல்லாங்கங்குல்சேர்ந்
தணையும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (அ)

489 கவிழமலிதளரக்கடகக்கையாலெடுத்தான்றேர்ள்
பவழதுணிவிரலாற்பையவூன்றிப்பரிந்தாருந்
தவழுங்கொடிமுல்லைபுறவஞ்சேராநவம்பூத்
தவிழும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கூ)

490 பகலுமிரவுஞ்சேர்பண்பினுருநண்போரா
திகலுமிருவர்க்குமெரியாய்த்தோன்றிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடுவல்லார்க்கென்றுந்தியபோ
யகலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கo)

491 போழமபலபேசிப்போதுசாற்றித்திரிவாரும்
வேழம்வருமளவும்வெயிலேதற்றித்திரிவாரும்
கேழல்வீணபோகக்கேட்பிப்பாருங்கேடிலா
வாழ்வர்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கக)

492 சாந்தங்கமழ்மறுகிற்சண்பைஞானசம்பந்த
னுந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளை
வேந்தனருளாலேவிரித்தபாடலிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந்தீர்த்தமாகச்சேர்வாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஊர்த்தாண்டவேசுரர், தேவியார்-வண்டார்குழலியம்மை.

---

46 திரு அதிகைவீரட்டானம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

493 குண்டைக்குறட்பூதங்குழுமவனலேந்திக்
கெண்டைப்பிறழ்தெண்ணீர்க்கெடிலவடபக்கம்
வண்டுமருள்பாடவளர்பொன்விரிகொன்றை
யிண்டதொடையலானுடும்வீரட்டானத்தே. (க)

494 அரும்புங்குரும்பையுமலைத்தமென்கொங்கைக்
கரும்பின்மொழியாளோடுடன்கையனலல்வீசிச்
சுரும்புண்விரிகொன்றைச்சுடர்பொற்சடைதாழ
விரும்புமதிகையுளாடும்வீரட்டானத்தே. (உ)

495 ஆடலழனக்மரைக்கிட்டசைத்தாடப்
பாடல்மறைவல்லான்படுதம்பலிபெயர்வான்
மாடமுகட்டின்மேல்மதிதோயதிகையுள்
வேடம்பலவல்லானுடும்வீரட்டானத்தே. (கூ)

495 எண்ணெரியிலெய்தானிறைவனனலேந்தி
மண்ணர்முழவதிரமுதிராமதிசூடிப்
பண்ணர்மறைபாடப்பரமனதிகையுள்
விண்ணோர்பரவநின்றுடும்வீரட்டானத்தே. (ச)

497 கரிபுன்புறமாயகழிந்தாரிடுகாட்டிற்
றிரிநின்றெருகையாற்றிருவாமதிகையு
ளெரியேந்தியபெருமானெரிபுன்சடைதாழ
விரியும்புனல்சூடியாடும்வீரட்டானத்தே. (ஞ)

498 துளங்குஞ்சுடரங்கைத்துதையவினையாடி
யிளங்கொம்பனசாயலுமையோடிசைபாடி
வளங்கொள்புனல்சூழ்ந்தவயலாரதிகையுள்
விளங்கும்பிறைசூடியாடும்வீரட்டானத்தே. (சு)

499 பாதம்பலரேத்தப்பரமன்பரமேட்டி
பூதம்புடைசூழப்புலித்தோலுடையாகக்
கீதமுமைபாடக்கெடிலவடபக்கம்
வேதமுதல்வனின்றுடும்வீரட்டானத்தே. (எ)

500 கல்லார்வரையரக்கன்றடந்தோள்கவின்வாட
வொல்லையடர்த்தவனுக்கருள்செய்ததிகையுட்
பல்லார்பகுவாயகுவெண்டலைசூடி
வில்லாலெயிலெய்தானுடும்வீரட்டானத்தே. (அ)

501 கெடியானனமுகனுநிமிர்ந்தானைக்காண்கிலார்
பொடியாடுமார்பானைப்புரிநூலுடையானைக்
கடியார்கமழ்நீலம்மலருமதிகையுள்
வெடியார்தலையேந்தியாடும்வீரட்டானத்தே. (கூ)

502 அரையோடலர்பிண்டிமருவிக்குண்டிகை
சுரையோடனேந்தியுடைவிட்டுழல்வார்க
ளுரையோடுரையொவ்வாதுமையோடனுகி
விரைதோயலர்தாராரனுடும்வீரட்டானத்தே. (கo)

503 ஞாழல்கமழ்காழிஞானசம்பந்தன்
வேழம்பொருதெண்ணீரதிகைவீரட்டானத்துச்
சூழுங்கழலானச்சொன்னதமிழ்மாலை
வாழுந்தணையாகநினைவார்வினையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நெடுநொட்டில்-கெடிலநதிக்கு வடபக்கத்திலிருக்கின்றது.

திரிபுரவிசயஞ்செய்த வீரட்டானம்.

சுவாமிபெயர்-அதிகைநாதர், வீரட்டானேசுவரர், தேவியார்-திருவதிகைநாயகி.

47 திருச்சிரபுரம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பல்லடைந்தவெண்டலையிற்பலிகொள்வதன்றியும்போய்
வில்லடைந்தபுருவநல்லாள்மேனியில்வைத்ததென்னே
சொல்லடைந்ததொன்மறையோடங்கமலெல்லாஞ்
செல்லடைந்தசெல்வர்வாழுஞ்சிரபுரமேயவனே. (க)

கொல்லேமுல்லேநகையினுளோர்கூறதுவன்றியும்போ
யல்லல்வாழ்க்கைப்பலிகொண்டுண்ணுமாதரவென்னைகொலாஞ்
சொல்லநீண்டபெருமையாளர்தொல்கலைகற்றுவல்லார்
செல்லநீண்டசெல்வமல்குசிரபுரமேயவனே. (உ)

நீரடைந்தசடையின்மேலோர்நிகழ்மதியன்றியும்போ
யூரடைந்தவேறதேறியுண்பலிகொள்வதென்னே
காரடைந்தசோலைசூழ்ந்தகாமரம்வண்டிசைப்பச்
சீரடைந்தசெல்வமோங்குசிரபுரமேயவனே. (ங)

கையடைந்தமானினோடுகாரரவன்றியும்போய்
மெய்யடைந்தவேட்கையோடுமெல்லியல்வைத்ததென்னே
கையடைந்தகூளகாகச்செங்கழுநீர்மலர்கள்
செய்யடைந்தவயல்கள்சூழ்ந்தசிரபுரமேயவனே. (ச)

புரமெரித்தபெற்றியோடும்போர்மதயானைதன்னைக்
கரமெடுத்துத்தோலுரித்தகாரணமாவதென்னே
மரமுரித்ததோலுடுத்தமாதவர்தேவரோடுஞ்
சிரமெடுத்தகைகள்கூப்புஞ்சிரபுரமேயவனே. (ஞ)

கண்ணுமூன்றுமுடையதன்கையினில்வெம்மழுவும்
பண்ணுமூன்றுவீணையோடுபாம்புடன்வைத்ததென்னே
எண்ணுமூன்றுகனலுமோம்பியெழுமையும்விழுமியராய்த்
திண்ணமூன்றுவேள்வியாளர்சிரபுரமேயவனே. (ட)

குறைபடாதவேட்கையோடுகோல்வளையாளொருபாற்
பொறைபடாதவின்பமோடுபுணர்தருமெய்ம்மையென்னே
இறைபடாதமென்முலையார்மாளிகைமேலிருந்து
சிறைபடாதபாடலோங்குசிரபுரமேயவனே. (எ)

மலையெடுத்தவரக்கனஞ்சவொருவிரலால்
நிலையடித்தகொள்கையானேநின்மலனேயினவார்
தலையடித்தசொற்பயில்வார்மேதகுவீதிதோறுஞ்
சிலையெடுத்ததோளினானேசிரபுரமேயவனே. (அ)

மாலினேடுமலரிஞனும்வந் தவர்காணு தது 5/1
சாலுமஞ்சப்பண்ணிரீண்டதத்துவமேயதென்னே
நாலுவேதமோதலார்கள்நந் தூணையென்றிறைஞ்சச்
சேலுமேயுங்கழனிசூழ்ந்தசிரபுரமேயவனே. (கூ)

புத்தரோடுசமணர்சொற்கள்புறனுரையென்றிருக்கும் 5/3
பத்தர்வந்துபணியவைத்தபான்மையதென்னைகொலாம்
மத்தயானையுரியும்போர்த்துமங்கையொடும்முடனே
சித்தர்வந்துபணியுஞ்செல்வச்சிரபுரமேயவனே. (கூ)

தெங்குரீண்டசோலைசூழ்ந்தசிரபுரமேயவனே 5/4
யங்கரீண்டமறைகள்வல்லவணிகொள்சம்பந்தனுரை
பங்கரீங்கப்பாடவல்லபத்தர்கள்பாரிதன்மேற்
சங்கமோடுரீடிவாழ்வர்தன்மையினுலவரே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

சிரபுரமென்பதஞ் – சோழிக்கொருபெயர்.

---

48 திருச்சேய்ஞலூர்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நூலடைந்தகொள்கையாலேதுன்னடிகூடுதற்கு 5/5
மாலடைந்தநால்வர்கேட்கநல்கியநல்லறத்தை
யாலடைந்தீழல்மேவியருமறைசொன்னதென்னே
சேலடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. (க)

நீறடைந்தமேனியின்கணேரிழையாளொருபாற் 5/6
கூறடைந்தகொள்கையன்றிக்கோலவளர்சடைமே
லாறடைந்ததிங்கள்சூடியரவமணிந்ததென்னே
சேறடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. (உ)

ஊனடைந்தவெண்டலையிஞேடுபலிதிரிந்து 5/7
கானடைந்தபேய்களோடுபூதங்கலந்துடனே
மானடைந்தநோக்கிகாணமனிந்தெரியாடலென்னே
தேனடைந்தசோலைசூழ்குசேய்ஞலூர்மேயவனே. (கூ)

வீணடைந்தமும்மதிளும்விண்மலியாவரவி 5/8
ணுணடைந்தவெஞ்சரத்தால்கல்லெரியூட்டலென்னே
பாணடைந்தவண்டுபாடும்பைம்பொழில்சூழ்ந்தழகார்
சேணடைந்தமாடமல்குசேய்ஞலூர்மேயவனே. (ச)

பேயடைந்தகாடிடமாப்பேணுவதன்றியும்போய் 5/9
வேயடைந்ததோளியஞ்சவேழமுரித்ததென்னே
வாயடைந்தநான்மறையாறங்கமோடைவேள்வி
தீயடைந்தசெங்கையாளர்சேய்ஞலூர்மேயவனே. (ஞ)

520 காடடைந்தவேனமொன்றின்காரணமாகிவந்து
வேடடைந்தவேடனுகிவிசயனுடெய்ததென்னே
கோடடைந்தமால்களிற்றுக்கோச்செங்கணற்கருள்செய்
சேடடைந்தசெல்வர்வாழுஞ்சேய்ஞலூர்மேயவனே. (சு)

521 பிரடைந்தபாலதாட்டப்பேணுதவன்றுதை
வேரடைந்துபாய்ந்ததாலேவேர்தடிந்தான்றனக்குத்
தாரடைந்தமாலேசூட்டித்தலைமைவகுத்ததென்னே
சீரடைந்தகோயில்மல்குசேய்ஞலூர்மேயவனே. (எ)

522 மாவடைந்ததேரரக்கன்வலிதொலைவித்தவன்ற
னுவடைந்தபாடல்கேட்டுநயந்தருள்செய்ததென்னே
பூவடைந்தநான்முகன்போற்பூசுரர்போற்றிசெய்யுஞ்
சேவடைந்தலூர்தியானேசேய்ஞலூர்மேயவனே. (அ)

523 காரடைந்தவண்ணனுடுகனகமனியானும்
பாரிடந்தும்விண்பறந்தும்பாதமுடிகாணர்
சீரடைந்துவந்துபோற்றச்சென்றருள்செய்ததென்னே
தேரடைந்தமாமறுகிற்சேய்ஞலூர்மேயவனே. (கூ)

524 மாசடைந்தமேனியாருமனக்கிரியாதகஞ்சி
நேசடைந்தலுணிஞருநேசமிலாதென்னே
வீசடைந்ததோகையாட்டிரைகமழும்பொழில்வாய்
தேசடைந்தவண்டுபாடுஞ்சேய்ஞலூர்மேயவனே. (கo)

525 சேயடைந்தசேய்ஞலூரிற்செல்வன்சீர்பரவித்
தோயடைந்ததண்வயல்சூழ்தோணிபுரத்தலிவன்
சாயடைந்தஞானமல்குசம்பந்தனின்னுரைகள்
வாயடைந்துபாடவல்லார்வானுலகாள்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

" சோழநாட்டில் – சுப்பிரமணியசுவாமியினு லுண்டான தலம்.
சுவாமிபெயர் – சத்தகிரீசுவரர், தேவியார் – சகிதேவிநாயகியம்மை.

---

49 திருநள்ளாறு-பண்-பழந்தக்கராகம்.

பச்சைத்திருப்பதிகம்.

இது–சமணர்கள் வாதின்பொருட்டுத் தீயிலிட்டபோது வேகாதிருந்தது.

திருச்சிற்றம்பலம்.

526 போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தகம்பெருமான்மேயதுநள்ளாறே. (க)

527 தோடுடையகாதுடையன்றோலுடையன்தொலியாப்
பீடுடையபோர்விடையன்பெண்ணுமோர்பாலுடைய
னேடுடையமேலுலகோடேழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம்பெருமான்மேயதுள்ளாறே. (உ)

528 ஆன்முறையாலாற்றவெண்ணீறுடியணியிழையோர்
பான்முறையால்வைத்தபாதம்பத்தர்பணிக்தேத்த
மான்மறியும்வெண்மழுவுஞ்சூலமும்பற்றியகை
நான்மறையானம்பெருமான்மேயதுள்ளாறே. (ங)

529 புல்கவல்லவார்சடைமேற்பூம்புனல்பெய்தயலே
மல்கவல்லகொன்றைமாலைமதியோடன்சூடிப்
பல்கவல்லதொண்டர்தம்பொற்பாதநிழற்சேர
நல்கவல்லநம்பெருமான்மேயதுள்ளாறே. (ச)

530 ஏறுதாங்கியூர்திபேணியேர்கொளிளமதிய
மாறுதாங்குஞ்சென்னிமேலோராடரவஞ்சூடி
நீறுதாங்கிறால்கிடந்தமார்பினிரைகொன்றை
நாறுதாங்குநம்பெருமான்மேயதுள்ளாறே. (ஞ)

531 திங்களுச்சிமேல்விளங்குந்தேவனிமையோர்க
ளெங்களுச்சியெம்பிறைவனென்றடியேயிறைஞ்சத்
தங்களுச்சியால்வணங்குந்தன்னடியார்கட்கெல்லா
நங்களுச்சிநம்பெருமான்மேயதுள்ளாறே. (சு)

532 வெஞ்சுடர்த்தீயங்கையேக்திவிண்கொள்முழவதிர
வஞ்சிடத்தோராடல்பாடல்பேணுவதன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர்திங்கள்சூடித்திகழ்தருகண்டத்துள்ளே
நஞ்சடைந்தநம்பெருமான்மேயதுள்ளாறே. (எ)

533 சிட்டமார்ந்தமும்மதிலுஞ்சிலவரைதீயம்பினுற்
சுட்டுமாட்டிச்சுண்ணவெண்ணீறுவதன்றியும்போய்ப்
பட்டமார்ந்தசென்னிமேலோர்பான்மதியஞ்சூடி
நட்டமர்ந்நம்பெருமான்மேயதுள்ளாறே. (அ)

534 உண்ணலாகாநஞ்சுகண்டத்துண்டுடனேயொடுக்கி
யண்ணலாகாவண்ணனீழலாரழல்போலுருவ
மெண்ணலாகாவுள்வீனையென்றெள்கவலித்திருவர்
நண்ணலாகாநம்பெருமான்மேயதுள்ளாறே. (கூ)

535 மாசுமெய்யர்மண்டைத்தேரர்குண்டர்குணமிலிகள்
பேசும்பேச்சைமெய்யென்றெண்ணியர்நெறிசெல்லன்மின்
மூசுவண்டார்கொன்றைசூடிமும்மதிலுந்முடனே
நாசஞ்செய்தநம்பெருமான்மேயதுள்ளாறே. (கo)

536 தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லா
ருண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ள–சப்த தியாகர்தலங்களிலொன்று.

சுவாமிபெயர்–தெர்ப்பாரணியர், தேவியார்–போகமார்த்தபூண்முலையம்மை.

ஆறு பதிகம்–சகக.

---

50 திருவலிவலம்–பண்–பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

537 ஒல்லையாறியுள்ளமொன்றிக்கள்ளமொழிந்துவெய்ய
சொல்லையாறித்தூய்மைசெய்துகாமவினையகற்றி
நல்லவாறேயுன்றனுமனாவினவின்றேத்த
வல்லவாறேவந்துநல்காய்வலிவலமேயவனே. (க)

538 இயங்குகின்றவிரவிதிங்கள்மற்றுநற்றேவரெல்லாம்
பயங்களாலேபற்றிநின்பாற்சித்தந்தெளிகின்றிலர்
தயங்குசோதிசாமவேதாகாமனீக்காய்ந்தவனே
மயங்குகின்றேன்வந்துநல்காய்வலிவலமேயவனே. (உ)

539 பெண்டிர்மக்கள்சுற்றமென்னும்பேதைப்பெருங்கடலில்
வீண்டுபண்டேவாழுமாட்டேன்வேதனோய்நலியக்
கண்டுகண்டேயுன்றனுமங்காதலிக்கின்றதுள்ளம்
வண்டுகிண்டிப்பாடுஞ்சோலைவலிவலமேயவனே. (ங)

540 மெய்யராகிப்பொய்ம்மைநீக்கிவேதனையைத்துறந்து
செய்யராகுஞ்சிந்தையானேதேவர்குலக்கொழுந்தே
கையனையேனுன்றனுமம்நாளுநயிற்றுகின்றேன்
வையமுன்னேவந்துநல்காய்வலிவலமேயவனே. (ச)

541 தஞ்சும்போதந்துற்றும்போதுஞ்சொல்லுவனுன்றிற்மே
தஞ்சமில்லாத்தேவர்வந்துன்றுளிணைக்கீழ்ப்பணிய
நஞ்சையுண்டாய்க்கென்செய்கேனேனாளுநினைந்தடியேன்
வஞ்சமுண்டென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (ஞ)

542 புரிசடையாய்புண்ணியனேகண்ணலார்மூவெயிலு
மெரியவெய்தாயெம்பெருமானென்றிமையோர்பரவுங்
கரியுரியாய்காலகாலாநீலமணிமிடற்று
வரியரவாவந்துநல்காய்வலிவலமேயவனே. (ரு)

543 தாயுநீயேதந்தைநீயேசங்கரனேயடியே
ஞயுகின்பாலன்புசெய்வானுதரிக்கின்றதுள்ள
மாயமாயகாயந்தன்னுளேவர்நின்றெருறலொட்டார்
மாயமேயென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (எ)

544 நீரொடுங்குஞ்செஞ்சடையாய்நின்னுடையபொன்மலையை
வேரொடும்பீழ்ந்தேந்தலுற்றவேந்தனிராவணனைத்
தேரொடும்போய்வீழ்ந்தலறத்திருவிரலாலடர்த்த
வாரொடுங்குங்கொங்கைபங்காவலிவலமேயவனே. (அ)

545 ஆதியாயநான்முகனுமாலுமறிவரிய
சோதியானேநீதியில்லேன்சொல்லுவதுன்றிறமே
யோதிநாளுமுன்னியேத்துமென்னினைவினையவலம்
வாதியாமேவன்றுதல்காய்வலிவலமேயவனே. (கூ)

546 * பொதியிலானேபூவணத்தாய்பொன்றிகழுங்கயிலைப்
பதியிலானேபத்தர்சித்தம்பற்றுவிடாதவனே
நிதியிலாதார்வெஞ்சமணர்சாக்கியரென்றிவர்கள்
மதியிலாதாரென்செய்வாரோவலிவலமேயவனே. (கo)

547 வன்னிகொன்றைமத்தஞ்சூடும்வலிவலமேயவனைப்
பொன்னிநாடன்புகலிவேந்தன்ஞானசம்பந்தன்சொன்ன
பன்னுபாடல்பத்தும்வல்லார்மெய்த்தவத்தோர்விரும்பு
மன்னுஞ்சோதியீசனேடமன்னியிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மனத்துணைநாதர், தேவியார்—வாளையங்கண்ணியம்மை.

---

51 திருச்சோபுரம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

548 வெங்கணானையீருரிவைபோர்த்துவிளங்குமொழி
மங்கைபாகமம்மைத்துகந்தமாண்பதுவென்னைகொலாங்
கங்கையோடுதிங்கள்சூடிக்கடிகமழுங்கொன்றைத்
தொங்கலானேதூயநீற்றுச்சோபுரமேயவனே. (க)

---

* பொதியில்-என்பது பொதிகைமலை அதி வைப்புத்தலங்களிலொன்று. திக்கூர் பிடாஜர் கோவந்தபுத்தூர் குருக்கேத்திரம் பொதியமலை தேனூர் என்னுஞ் செய்யுளா
• னுணர்க.

549 விடையமர்ந்துவெம்மழுவொன்றேந்திவிரிந்திலங்கு
சடையொடுங்கத்தண்புனலைத்தாங்கியதென்னீகொலாங்
கடையுயர்ந்தமும்மதிளுங்காய்ந்தனுள்ளழூந்தத்
தொடைநிகழ்ந்தவெஞ்சிலையாய்சோபுரமேயவனே. (உ)

550 தீயராயவல்லரக்கர்செந்தழலுள்ளழூந்தச்
சாயவெய்துவானவரைத்தாங்கியதென்னீகொலாம்
பாயும்வெள்ளியேற்றையேறிப்பாய்புலித்தோலுடுத்த
தூயவெள்ளீற்றினனேசோபுரமேயவனே. (ஊ)

551 பல்லிலோடுகையிலேந்திப்பல்கடையும்பலிதேர்ந்
தல்லல்வாழ்க்கைமேலதானவாதரவென்னீகொலாம்
வில்லிலென்றநுண்புருவவேனெடுங்கண்ணியொடுந்
தொல்லைபூழியாகின்றுய்சோபுரமேயவனே. (எ)

552 ஈற்றமிக்கொன்றைதுன்றுசெஞ்சடைமேல்மதிய
மேற்றமாகவைத்துகந்தகாரணமென்னீகொலா
மூற்றமிக்ககாலன்றன்னையொல்கவுதைத்தருளித்
தோற்றமீறுமாகின்றுய்சோபுரமேயவனே. (ஏ)

553 கொன்னவின்றமூவிலைவேற்கூர்மழுவாட்படையன்
பொன்னேவென்றகொன்றைமாலைசூடுமொற்பென்னீகொலா
மன்னமன்னமென்னடையாள்பாகமமர்ந்தஐசேர்
தன்னவண்ணவாடையினுஞ்சோபுரமேயவனே. (ஐ)

554 குற்றமின்மையுண்மைநீயென்றுன்னடியார்பணிவார்
கற்றல்கேள்விஞானமானகாரணமென்னீகொலாம்
வற்றலாமைவாளரவம்பூண்டயன்வெண்டலையிற்
றுற்றலானகொள்கையானசேரபுரமேயவனே. (ஒ)

555 விலங்கலொன்றுவெஞ்சிலையாக்கொண்டுவிறலரக்கர்
குலங்கள்வாழ்மூரெரித்தகொள்கையிதென்னீகொலா
மிலங்கைமன்னுவாளவுணர்கோனெழில்விரலாற்
றுலங்கவூன்றிவைத்துகந்தாய்சோபுரமேயவனே. (ஓ)

556 விடங்கொணகமல்வரையைச்சுற்றிவிரிதிரைநீர்
கடைந்தஞ்சையுண்டுகந்தகாரணமென்னீகொலா
மிடந்தமண்ணீயுண்டமாலுமின்மலர்மேலயனுந்
தொடர்ந்தமுன்னங்காணமாட்டாச்சோபுரமேயவனே. (ஔ)

557 புத்தரோடுபுன்சமணர்பொய்யுரையேயுரைத்துப்
பித்தராக்கண்டுகந்தபெற்றிமையென்னீகொலா
மத்தயானையீருரிவைபோர்த்துவளர்சடைமேற்
றுத்திநாகஞ்சூடினனேசோபுரமேயவனே. (கo)

558 சோலைமிக்கதண்வயல்சூழ்சோபுரமேயவனீச்
சீலமிக்கதொல்புகழார்சிரபுரக்கோனலத்தால்
ஞாலமிக்கதண்ட மிழாள்ஞானசம்பந்தன்சொன்ன
கோலமிக்கமாலேவல்லார்கூடுவர்வானுலகே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுகொட்டியுள்ளது.

சுவாமிபெயர்-சோபுரநாதர்,1தேவியார்-சோபுரநாயகியம்மை.

---

52 திருநெடுங்களம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

559 மறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேயென்றுன்னப்பெரினல்லாற்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினுயர்ந்த
நிறையுடையாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (க)

560 கனைத்தெழுந்தவெண்டிரைசூழ்கடலிடைநஞ்சுதன்னை
நினைத்தனையாமிடற்றில்வைத்தநிருத்தியதேவநின்னை
மனத்தகத்தேதார்பாடலாடல்பேணியிராப்பகலு
நினைத்தெழுவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (உ)

561 நின்னடியேவழிபடுவானிமலாநினைக்கருத
வென்னடியாணுயிரைவவ்வேலென்றடற்கூற்றுதைத்த
பொன்னடியேபரவிநாளும்பூவொடுநீர்சுமக்கு
நின்னடியாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (ஊ)

562 மலைபுரிந்தமன்னவன்றன்மகனையோர்பால்மகிழ்ந்தா
யலைபுரிந்தகங்கைதங்குமகிர்சடையாரூரா
தலைபுரிந்தபலிமகிழ்வாய்தலைவகின்றுணிழற்கீழ்
நிலைபுரிந்தாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (எ)

563 பாங்கினல்லார்படிமஞ்செய்வார்பாரிடமும்பலிசேரத்
தூங்கிநல்லார்பாடலோடுதொழுகழலேவணங்கித்
தாங்கிநில்லாவன்பினோடுதலைவகின்றுணிழற்கீழ்
நீங்கிநில்லாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (ஏ)

564 விருத்தனுமிப்பாலனுமிவ்வேதமோர்நான்குணர்ந்து
கருத்தனுமிக்கங்கையாளைக்கமழ்சடைமேற்கரந்தாய்
யருத்தனுயவாதிதேவனடியினேபரவு
நிருத்தர்தேரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (ஐ)

565 கூறுகொண்டாய்மூன்றுமொன்றுக்கூட்டியோர்வெங்கணையால்
மாறுகொண்டார்புரமெரித்தமன்னவனேகொடிமே
லேறுகொண்டாய்சாந்தமீதென்றெம்பெருமானணிந்த
நீறுகொண்டாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (எ)

566 குன்றினுச்சிமேல்விளங்குங்கொடிமதிள்சூழிலங்கை
யன்றிகின்றவரக்கர்கோனையருவரைக்கீழடர்த்தாய்
யென்றுநல்லவாய்மொழியாலேத்தியிராப்பகலு
நின்றுதொழாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (அ)

567 வேழவெண்கொம்பொசித்தமாலும்விளங்கியகான்முகனுஞ்
சூழவெங்குநேடவாங்கோர்சோதியுளாகினின்றாய்
கேழல்வெண்கொம்பணிந்தபெம்மான்கேடிலாப்பொன்னடியி
னீழல்வாழ்வாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (கூ)

568 வெஞ்சொற்றஞ்சொலாக்கிகின்றவேடமிலாச்சமணுந்
தஞ்சமில்லாச்சாக்கியருந்தத்துவமொன்றறியார்
துஞ்சலில்லாவாய்மொழியாற்றேத்திநினைந்தடியே
நெஞ்சில்வைப்பாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (கo)

569 நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுரக்கோனலத்தால்
நாடவல்லபனுவன்மாலைஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்தும்பாடவல்லார்பாவம்பறையுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஸ்தியசுந்தரர், தேவியார்-ஒப்பிலாநாயகியம்மை.

---

53 திருமுதுகுன்றம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

570 தேவராயுமசுரராயுஞ்சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும்விண்ணெரிகால்நீரு
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே. (க)

571 பற்றுமாகிவானுளோர்க்குப்பல்கதிரோன்மதிபா
லெற்றுநீர்நீக்காலுமேலிவ்விண்ணியமானனெடு
மற்றுமாதோர்பல்லுயிராய்மாலயனும்மறைகள்
முற்றுமாகிவேறுமானுன்மேயதுமுதுகுன்றே. (உ)

572 வாரிமாகம்வைகுதிங்கள்வாளரவஞ்சூடி
நாரிபாகமயன்தூமேல்நான்முகன்றன்றலையிற்
சீரிதாகப்பலிகொள்செல்வன்செற்றலுந்தோன்றியதோர்
மூரிநாகத்தரிவைபோர்த்தான்மேயதுமுதுகுன்றே. (ங)

573 பாடுவாருக்கருளுமெங்தைபனிமுதுபௌவமுந்நீர்
நீடுபாருமுழுதுமோடியண்டர்நிலைகெடலும்
நாடுதானுமுடுமோடிஞாலமுநான்முகனு
மூடுகாண்மூடும்வெள்ளத்துயர்ந்ததுமுதுகுன்றே. (ச)

574 வழங்குதிங்கள்வன்னிமத்தமாசணமீசணவிச்
செழுங்கல்வேந்தன்செல்விகாணத்தேவர்நிசைவணங்கத்
தழங்குமொந்தைதக்கைமிக்கபேய்க்கணம்பூதஞ்சூழ
முழங்குசெந்தீயேந்தியாடிமேயதுமுதுகுன்றே. (ஞ)

575 சுழித்தகங்கைதேய்த்ததிங்கட்டொல்லார்கஸ்லிதழி
சழித்தசென்னிச்சைவவேடர்தானீசத்தம்புலனும்
அழித்தசிங்தையன்தணைளர்க்கறம்பொருளின்பம்வீடு
மொழித்தவாயான்முக்கணனதிமேயதுமுதுகுன்றே. (சு-எ)

576 மயங்குமாயம்வல்லராகிவானினெடுநீரு
மியங்குவோருக்கிறைவனுயவீரவணன்றேணெரித்த
புயங்கராகமாநடத்தன்புணர்மூலமாதுமையாள்
முயங்குமார்பன்முனிவரேத்தமேயதுமுதுகுன்றே. (அ)

577 ஞாலமுண்டமாலுமற்றைநான்முகனும்மறியாக்
கோலமுண்டார்ந்தைகொள்ளாராயினுங்கொய்மலராலேலவிண்டைகட்டிநாமமிசையவெப்போதுமேத்த
மூலமுண்டீற்றாவாயான்மேயதுமுதுகுன்றே. (கூ)

578 உறிகொள்கையர்சீவரத்தருண்டுழல்மிண்டர்சொல்லே
நெறிகளென்னினீவுறுதேதித்தலுங்கைதொழுமின்
மறிகொள்கையன்வங்கமுந்நீர்பொங்குவிடத்தையுண்ட
முறிகொள்மேனிமங்கைபங்கன்மேயதுமுதுகுன்றே. (கo)

579 மொய்த்துவானோர்பல்கணங்கள்வணங்குமுதுகுன்றைப்
பித்தர்வேடம்பெருமையென்னும்பிரம்புரத்தலிவன். (கக)

திருச்சிற்றம்பலம்.

இது திருமுறையைக் கண்டெடுக்கும்போது செல்லேறிச் தெலமாகிய பதிகங்களிலொன்று. திருமுறைகண்டபுராணத்திற் காண்க.

54 திருஓத்தூராண்பணைபெண்பணையான-து-
பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந்தாயனகொண்டுநின்பொன்னடி, யேத்தாதாரில்லையெண்ணுங்கா
லோத்தூர்மேயவொளிமழுவாளங்கை, கூத்தீரும்மகுணங்களே. (க)

இடையீர்போகாவிளமுலையாளையோர், புடையீரேபுள்ளிமானுரி
யுடையீரேயும்மையேத்துதுமோத்தூர்ச், சடையீரேயுமதாளே. (உ)

உள்வேர்போலநொடிமையினர்திறங், கொள்வீரல்குலோர்கோவண
மொள்வாழைக்கனிதேன்சொரியோத்தூர்க், கள்வீரேயுமகாதலே. (ங)

தோட்டிரேதத்தியைத்தலைநாகத்தை, யாட்டிரேயடியார்வினை
யோட்டிரேயும்மையேத்துதுமோத்தூர், நாட்டிரேயருணல்குமே. (ச)

குழையார்காதீர்கொடுமழுவாட்படை, யுழையாள்வீர்திருவோத்தூர்
பிழையாவண்ணங்கள்பாடிநின்றுவா, ரழையாமேயருணல்குமே. (ஞ)

மிக்கார்வந்துவிரும்பிப்பலியிடத், தக்கார்தம்மடியீர்களென்
றுட்காதாருளரோதிருவோத்தூர், நக்கீரேயருணல்குமே. (ட)

தாதார்கொன்றைதயங்குமுடியுடை, நாதாவென்றுநலம்புகழ்ந்
தோதாதாருளரோதிருவோத்தூர், நாதீரேயருணல்குமே. (எ)

என்றுனிம்மலியென்றவரக்கனை, வென்றுர்போலும்விரலினு
லொன்றுர்மும்மதிலெய்தவனேத்தூ, ரென்றுர்மேல்வினையேகுமே. (அ)

நன்றுநான்மறையாளெடுமாமுமாய்ச், சென்றுர்போலுந்திசையெலா
மொன்றுயொள்ளெரியாய்மிகவோத்தூர், நின்றீரேயுமைநேடியே. (கூ)

காரமண்கலிங்கத்துவராடையர், தேரர்சொல்லைவதேறன்மி
னீரம்பாலெயிலெய்தவனேத்தூர்ச், சீரவன்கழல்சேர்மினே. (கஎ)

குரும்பையாண்பனியின்குலையோத்தூ, ரரும்புகொன்றையடிகளைப்
பெரும்புகலியுள்ஞானசம்பந்தன்சொல், விரும்புவார்வினைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதாரதர், தேவியார்-இளமுலைநாயகியம்மை.

---

55 திருமாற்பேறு-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊறியார்தருநஞ்சினையுண்டுமை, நீறுசேர்திருமேனியர்
சேறுசேர்வயற்றென்றிருமாற்பேற்றின், மாறிலாமணிகண்டரே. (க)

தொடையார்மாமலர்கொண்டிருபோதும்மையடைவாராமடிகள்ளன
மடையார்நீர்மல்குமன்னியமாற்பே, யுடையீரேயுமையுள்கியே. (உ)

பையாருமரவங்கொடுவாட்டிய, கையானென்றுவணங்குவர் 593
மையார்நஞ்சுண்டுமாற்பேற்றிருக்கின்ற, வையாகின்னடியார்களே. (கூ)

சாலமாமலர்கொண்டுசரணென்று, மேலையார்கள்விரும்புவர் 594
மாலினர்வழிபாடுசெய்மாற்பேற்று, நீலமார்கண்டகின்னீயே. (சு)

மாறிலாமணியேயென்றுவானவ, ரேறவேமிகவேத்துவர் 595
கூறனேகுலவுந்திருமாற்பேற்றி, னீறனேயென்றுகின்னீயே. (ஞ)

உரையாதாரில்லையொன்றுகின்றன்மையைப், பரவாதாரில்லைநாள்களும் 596
திரையார்பாலியின்றென்கரைமாற்பேற், றுரையானேயருணல்கிடே. (சூ-எ)

அரசளிக்குமரக்கனவன்றனை, யுரைகெடுத்தவனெல்கிட 597
வரமிருத்தவெம்மாற்பேற்றடிகளைப், பரவிடக்கெடும்பாவமே. (அ)

இருவர்தேவருந்தேடித்திரிந்ததி, லொருவராலறிவுண்டிலன் 598
மருவுநீள்கழன்மாற்பேற்றடிகளைப், பரவுவார்வினைபாறுமே. (கூ)

தூசுபோர்த்தழல்வார்கையிற்றுற்றுணு, நீசர்தம்முரைகொள்ளேலுங் 599
தேசமல்கியதென்றிருமாற்பேற், றீசனென்றெடுத்தேத்துமே. (கo)

மன்னிமாலொடுசோமன்பணிசெயு, மன்னுமாற்பேற்றடிகளை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்சொற், பன்னவேவினைபாறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–மால்வணங்குமீசர், தேவியார்–கருணாநாயகியம்மை.

ஆ பதிகம்–ஓஓ.

---

56 திருப்பாற்றுறை–பண்–பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

601 காரார்கொன்றைகலந்தமுடியினர்
சீரார்சிந்தைசெலச்செய்தார்
பாரார்நாளும்பரவியபாற்றுறை
யாராராதிமுதல்வரே. (க)

602 நல்லாருமவர்தீயரெனப்படுஞ்
சொல்லார்நன்மலர்சூடினர்.
பல்லார்வெண்டலைச்செல்வரெம்பாற்றுறை
யெல்லாருந்தொழுமீசரே. (உ)

603 விண்ணார்திங்கள்விளங்குதலின
ரெண்ணூர்வந்தெனைழில்கொண்டார்
பண்ணூர்வண்டினம்பாடல்செய்பாற்றுறை
யுண்ணுஞ்ஞுமுறைவரே. (கூ)

604 பூவுந்திங்கள்புனைந்தமுடியின
ரேவினல்லாரெயிலெய்தார்
பாவந்தீர்புனன்மல்கியபாற்றுறை
யோவென்கிந்தையொருவரே. (சு)

605 மாகந்தோய்மதிசூடிமகிழ்ந்தென
தாகம்பொன்னிறமாக்கினர்
பாகம்பெண்ணுமுடையவர்பாற்றுறை
நாகம்பூண்டுநயவரே. (டு)

606 போதுபொன்றிகழ்கொன்றைபுனைமுடி
நாதர்வந்தெனலங்கொண்டார்
பாதந்தொண்டர்பரவியபாற்றுறை
வேதமோதும்விகிர்தரே. (சூ)

607 வாடல்வெண்டலைசூடினர்மால்விடை
கோடல்செய்தருநிப்பினர்
பாடல்வண்டினம்பண்செயும்பாற்றுறை
யாடல்நாகமசைத்தாரே. (எ)

608 வெவ்வமேனியசாய்வெள்ளநீற்றின
ரெவ்வஞ்செய்தனெழில்கொண்டார்
பவ்வநஞ்சடைகண்டரெம்பாற்றுறை
மவ்வல்சூடியமைந்தரே. (அ)

609 ஏனமன்னமுமானவருக்கெரி
யானவண்ணத்தெமண்ணலார்
பானலம்மலர்வின்மியபாற்றுறை
வானவெண்பிறைமைந்தரே. (கூ)

610 வெந்தநீற்றினர்வேலினர்நூலினர்
வந்தெனன்னலம்வவ்வினர்
பைந்தண்மாதவிசூழ்தருபாற்றுறை
மைந்தர்தாமோர்மணுளரே. (கo)

611 பத்தர்மன்னியபாற்றுறைமேவிய
பத்துநூறுபெயரினைப்
பத்தன்ஞானசம்பந்தனதின்றமிழ்
பத்தும்பாடிப்பரவுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமூலநாதர், தேவியார்-மோகாம்பிகையம்மை.

57 திருவேற்காடு-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவளெளி, வெள்ளியானுறைவேற்கா (க)
டுள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினிற், றெள்ளியாரவர்தேவரே.

ஆடல்காமனீசத்தளவில்லதோர், வேடங்கொண்டவன்வேற்காடு (உ)
பாடியும்பணிந்தாரிவ்வுலகினிற், சேடராகியசெல்வரே.

பூதம்பாடப்புறங்காட்டிடையாடி, வேதவித்தகன்வேற்காடு (ரு)
போதுசாந்தும்புகையுங்கொடுத்தவர்க், கேதமெய்துதலில்லையே.

ஆழ்க்கடலெனக்கங்கைகரந்தவன், வீழ்சடையினன்வேற்காடு (ச)
தாழ்வுடைமனத்தாற்பணிக்தேத்திடப், பாழ்படும்மவர்பாவமே.

காட்டினூடமயர்த்திடக்காலனே, வீட்டினனுறைவேற்காடு (ஞி)
பாட்டினாற்பணிக்தேத்திடவல்லவ, ரோட்டினர்வினையொல்லையே.

தோலினூடைமேவவல்லான்சுடர், வேலினனுறைவேற்காடு (சு)
நூலினாற்பணிக்தேத்திடவல்லவர், மாலினர்வினைமாயுமே.

மல்லன்மும்மதின்மாய்தரவெய்ததோர், வில்லினனுறைவேற்காடு (எ)
சொல்லவல்லசுருங்காமனத்தவர், செல்லவல்லவர்திக்கமே.

மூலவெண்மதிரூடுமுடியுடை, வீரன்மேவியவேற்காடு (அ)
வாரமாய்வழிபாடுகினைந்தவர், சேர்வர்செய்கழறிண்ணமே.

பரக்கினர்படுவெண்டலையிற்பலி, விரக்கினனுறைவேற்காட்டே (கூ)
ரரக்கனண்மையடரப்பட்டானிறை, நெருக்கினனினியினே.

மாறிலாமலராளனுமாலவன், வேறலானுறைவேற்கா (கo)
டூறிலர்மொழியேமொழியாவெழில், கூறினர்க்கில்லைகுற்றமே.

விண்டமாம்பொழில்சூழ்தருவேற்காடு, கண்டுரும்பன்கழல்பேணிச் (கக)
சண்பைஞானசம்பந்தனசெந்தமிழ், கொண்டுபாடக்குணமாமே.

திருச்சிற்றம்பலம்.

தொண்டைகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேற்காட்டீசுவரர், தேவியார்-வேற்கண்ணியம்மை.

58 திருக்கரவீரம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியும்நம்வினையுள்ளனவாசற, வரிகொள்மாமணிபோற்கண்டங் (க)
சுரியவன்றிகழுங்கரவீரத்தெம், பெரியவன்கழல்பேணுவே.

தங்குமேவினைதாழ்சடைமேலவன், திங்களோடுடன்சூடிய (உ)
கங்கையான்றிகழுங்கரவீரத்தெஞ், சங்கரன்கழல்சாரவே.

ஏதம்வந்தடையாவினிநல்லன, பூதம்பல்படையாக்கிய
காதலான்றிகழுங்கரவீரத்தெம், நாதன்பாதநணுகவே. (ந)

பறையுநும்வினையுள்ளனபாழ்படப், மறையுமாமணிபோல்கண்டங்
கறையவன்றிகழுங்கரவீரத்தெம், பிறையவன்கழலேத்தவே. (ச)

பண்ணினார்மறைபாடலனுடலன், விண்ணினார்மதிளெய்தமுக்
கண்ணினானுறையுங்கரவீரத்தை, நண்ணுவார்வினைநாசமே. (ங)

நிழலினார்மதிசூடினனீள்சடை, யழலினானலேந்திய
கழலினானுறையுங்கரவீரத்தைத், தொழவல்லார்க்கில்லைதுக்கமே. (ஞ)

வண்டர்மும்மதிண்மாய்தரவெய்தவ, னண்டரஞரழல்போலொளி
கண்டனுருறையுங்கரவீரத்துத், தொண்டர்மேற்றுயர்தூரமே. (எ)

புனலிலங்கையர்கோன்முடிபத்திறச், சினவலாண்மைசெகுத்தவன்
கனலவனுறைகின்றகரவீர, மெனவல்லார்க்கிடரில்லையே. (அ)

வெள்ளத்தாமரையானெடுமாலுமாய்த், தெள்ளத்தீத்திரளாகிய
கள்ளத்தானுறையுங்கரவீரத்தை, யுள்ளத்தான்வினையோயுமே. (கூ)

செடியமெனுடுசீவரத்தாரவர், கொடியவெவ்வுரைகொள்ளன்மின்
கடியவன்னுறைகின்றகரவீரத், தடியவர்க்கில்லையல்லவே. (கo)

வீடிலான்வினைங்குங்கரவீரத்தெஞ், சேடன்மேற்கசிவாற்றமிழ்
நாடிஞானசம்பந்தனசொல்லிவை, பாடுவார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் – கரவீரேசுவரர், தேவியார் – பிரத்தியக்ஷமின்னுமம்மை.

---

59 திருத்தூங்காணைமாடம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒடுங்கும்பிணிபிறவிகெடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவ
மடங்குமிடங்கருதிநின்றீரெல்லாமடிகளடிநிழற்கீழாளாம்வண்ணங்
கிடங்குமதிளுஞ்சுலாவியெங்குங்கெழுமணிகடோறுமறையின்னெலி
தொடங்குங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணைமாட்டந்தொழுமின்களே. (க)

பிணிநீரசாதல்பிறத்தலிவையிரியப்பிரியாததெபெரின்பத்தோ
டணிநீரமேலுலகமெய்தல்லறிலறியின்குறைவில்லையானேறுடை
மணிநீலகண்டமுடையபிரான்மலைமகளுந்தானுமகிழ்ந்துவாழுந்
துணிநீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணைமாடந்தொழுமின்களே. (உ)

சாகாலுமவ்வாழ்நாளுந்தோற்றமிவைசலிப்பாயவாழ்க்கையொழியத்தவ
மாமாற்றியாதலமந்தரியர்த்தங்குறைவில்லையானேறுடைப்

பூமாணலங்கலிலங்குகொன்றைபுனல்பொதிந்தபுன்சடையினனுறையுர்
தூமாண்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணீமாடந்தொழுமின்களே. (கூ)

ஊன்றுமிப்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவ
மான்றுமனங்கருதிநின்றீரெல்லாமனந்திரிந்துமண்ணின்மயங்காதுதீர்
மூன்றுமதிளெய்தமூவாச்சிலைமுதல்வர்க்கிடம்போலுமுகிழ்நெய்கொடி
தோன்றுங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணீமாடந்தொழுமின்களே. (ச)

மயதீர்மையில்லாததோற்றம்மிவைமரணத்தொடொத்தழியுமாறுதலால்
வியதீரமேலுகமெய்தலுறின்மிக்கொன்றும்வேண்டாவிமலனிட
முயர்தீரவோங்கியநாமங்களாலோவாதுநாளுமடிபரவல்செய்
துயர்தீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணீமாடந்தொழுமின்களே. (டு)

பன்னீர்மைகுன்றிச்செவிகேட்பில்படர்நோக்கிற்கண்பவளந்நிற
நன்னீர்மைகுன்றித்திரைதோலொடுகரைதோன்றுங்காலநமக்காதன்முன் [ந்
பொன்னீர்மைதுன்றப்புறந்தோன்றுநற்புனல்பொதிந்தபுன்சடையினனுறையு
தொன்னீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணீமாடந்தொழுமின்களே. ()

இறையூண்டுகளோடிடுக்கணெய்தியிழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
நிறையூணைநிருதநின்றீரெல்லாநீள்கழலோளுநினைமின்சென்னிப்
பிறைசூழலங்கலிலங்குகொன்றைபிணையும்பெருமான்பிரியாதநீர்த்
தறைசூழ்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணீமாடந்தொழுமின்களே. (எ)

பல்வீழ்ந்தாதாத்தளர்ந்துமெய்யில்வாடிப்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
மில்சூழிடங்கருதிநின்றீரெல்லாமிறையேபிரியாதெழுந்துபோதுங்
கல்சூழரக்கன்கதறச்செய்தான்காதலியுந்தானுங்கருதிவாழுந்
தொல்சீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணீமாடந்தொழுமின்களே. (அ)

நோயும்பிணியுமருந்தியபரமுதருகருடையவாழ்க்கையொழியத்தவம்
வாயுமனங்கருதிநின்றீரெல்லாமலர்மிசையானுமுகனுமண்ணும்விண்ணுந்
தாயவடியளந்தான்காணமாட்டாத்தலைவர்க்கிடம்போலுந்தண்சோலைவிண்
டோயுங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணீமாடந்தொழுமின்களே. (கூ)

பகடுர்பகிரலியநோய்வருதலாற்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
முகடுர்மயிர்கடிந்தசெய்கையாருமூடுதுவராடையருநாடிச்சொன்ன [மூர்
திகடீர்ந்தபொய் மொழிகடேறவேண்டாதிருந் திழையுந்தானும் பொருந்திவா
துகடீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணீமாடந்தொழுமின்களே. (கo)

மண்ணுர்முழவதிருமாடவீதிவியற்காழிஞானசம்பந்தனல்ல
பெண்ணுடத்துப்பெருங்கோயில்சேர்பிறையுரிஞ்சுந்தூங்காணீமாடமேயான்
கண்ணுர்கழல்பரவுபாடல்பத்துங்கருத்தணரக்கற்றுருங்கேட்டாரும்போய்
விண்ணுருலகத்துமேவிவாழும்விதியதுவேயாகும்வினைமரயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ருகோட்டியுள்ளது.

சுவாமிபெயர்-சுடர்க்கொழுந்தீசர், தேவியார்-கடந்தைநாயகியம்மை.

60 திருத்தோணிபுரம்-பண்-பழந்தக்கராகம்.



திருச்சிற்றம்பலம்.

6க5 வண்டரங்கப்புனற்கமலமதமாந்திப்பெடையினெடு
மொண்டரங்கவிசைபாடுமளியரசேயொளிமதியத்
தண்டரங்கப்பூண்மார்பர்திருத்தோணிபுரத்தறையும்
பண்டரங்கர்க்கென்னிலைமைபரிந்தொருகால்பகராயே. (க)

6க6 எறிசுறவங்கழிக்கானலிளங்குருகேயென்பயலை
யறிவுருதொழிவதுவுமருவினையின்பயனன்றே
செறிசிறுர்பதமோதுந்திருத்தோணிபுரத்தறையும்
வெறிகிறுர்மலர்க்கண்ணிவேதியர்க்குவிளம்பாயே. (உ)

6க7 பண்பழனக்கோட்டகத்துவாட்டமிலாச்செஞ்சூட்டுக்
கண்பகத்தின்வரணமேகடினையேனுறுபயலை
செண்பகஞ்சேர்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்தறையும்
பண்பனுக்கென்பரிசுரைத்தாற்பழியாமோமொழியாயே. (ங)

6க8 காண்டகையசெங்காலொண்கழிநாராய்காதலாற்
நரையார்விடையானுகவிலுஞ்சம்பந்த
னுரையார்தமிழ்மாலைபாடுமவரெல்லாங்
கரையாவுருவாகிக்கலிவானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–காயாரோகணேசுவரர், தேவியார்–நீலாயதாக்ஷியம்மை.

४ ९. திருநல்லம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லாலினிழல்மேயகறைசேர்கண்டாவென் ४९.
றெல்லாமொழியாலுமிமையோர்தொழுதேத்த
வில்லாலரண்மூன்றும்வெந்தழிவெய்த
நல்லானமையாள்வானல்லங்ஙகரானே. (க)

தக்கன்பெருவேள்வித்தன்னிலமரைத் ४९ உ
துக்கம்பலசெய்துசுடர்பொற்சடைதாழக்
கொக்கின்னிறகோடுகுளிர்வெண்பிறைசூடு
நக்கனமையாள்வானல்லங்ஙகரானே. (உ)

அந்திமதியோடுமரவச்சடைதாழ ४९ ७
முந்தியனலேந்திமுதுகாட்டெரியாடிச்
சிந்தித்தெழவல்லார்தீராவினைதீர்க்கு
நந்திநமையாள்வானல்லங்ஙகரானே. (ங)

குளிரும்மதிசூடிக்கொன்றைச்சடைதாழ ४९ ८
மிளிரும்மரவோடுவெண்ணூல்திகழ்மார்பிற்
றளிருந்திகழ்மேனித்தையல்பாகமாய்
நளிரும்வயல்சூழ்ந்தல்லங்ஙகரானே. (ச)

மணியார்திகழ்கண்டம்முடையான்மலர்மல்கு ४९ ९
பிணிவார்சடையெந்தைபெருமான்கழல்பேணித்
துணிவார்மலர்கொண்டுதொண்டர்தொழுதேத்த
நணியானமையாள்வானல்லங்ஙகரானே. (ஞ)

✓ வாசம்மலர்மல்குமலையான்மகளோடு ४९०
பூசுஞ்சுடுநீறுபுனைந்தான்விரிகொன்றை
யீசனெனவுள்ளியெழுவார்வினைகட்கு
நாசனமையாள்வானல்லங்ஙகரானே. (ஞ)

அங்கோல்வளைமங்கைகாணவனலேந்திக் ४९२
கொங்கார்நறுங்கொன்றைசூடிக்குழகாக
வெங்காடிடமாகவெந்தீவினையாடு
நங்கோனமையாள்வானல்லங்ஙகரானே. (எ)

பெண்ணார்திருமேனிப்பெருமான்பிறைமல்கு ४९३
கண்ணார்நுதலினனகயிலைகிளர்த்தினி
லெண்ணாதெடுத்தானிறையேயிரலூன்றி
நண்ணார்புரமெய்தானல்லங்ஙகரானே. (அ)

9 93 நாகத்தணையானுங்களிர்மாமலரானும்
போகத்தியல்பினுற்பொலியவழகாரு
மாகத்தவளோடுமமர்ந்தங்கழகாரு
நாகம்மரையார்த்தானல்லங்நகரானே. (கூ)

9 94 குறியில்சமணுங்குண்டர்வண்டேர
றறிவில்லுரைகேட்டங்கவமேகழியாதே
பொறிகொள்ளரவார்த்தான்பொல்லாவினை தீர்க்கு
நறைகொள்பொழில்சூழ்ந்தநல்லங்நகரானே. (கo)

9 95 நலமார்மறையோர்வாழ்நல்லங்நகர்மேய
கொலைசேர்மழுவானைக்கொச்சையமர்ந்தோங்கு
தலமார்தமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
கலைகளிவைவல்லார்கவலைகழிவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-உமாமகேசுவரர், தேவியார்-மங்களநாயகியம்மை.

---

96 திருநல்லூர்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

9 96 கொட்டும்பறைசீராழ்குழுமவனலேந்தி
நட்டம்பயின்றாடுநல்லூர்ப்பெருமானை
முட்டின்றிருபோதுமுனியாதெழுந்தன்பு
பட்டமனத்தார்களறியார்பாவமே. (க)

9 97 ஏறிலெருதேறுமெழிலாயிழையோடும்
வேறுமுடனுமாம்விகிர்தரவரென்ன
நாறும்மலர்ப்பொய்கைநல்லூர்ப்பெருமானைக்
கூறுமடியார்கட்குடையாகுற்றமே. (உ)

9 98 சூடுமிளந்திங்கட்சுடர்பொற்சடைதாழ
வோடுண்கலனைகவ்வுரிடுபிச்சை
நாடுநெறியானைநல்லூர்ப்பெருமானைப்
பாடுமடியார்கட்கடையாபாவமே. (ங)

9 99 நீத்தநெறியானைநீங்காத்தவத்தானை
நாத்தநெறியானைநல்லூர்ப்பெருமானைக்
காத்தநெறியானைக்கைகூப்பித்தொழு
தேத்தமடியார்கட்கில்லையிடர்தானே. (ச)

9 100 ஆகத்துமைகேள்வனரவச்சடைதாழ
நாகமசைத்தானைநல்லூர்ப்பெருமானைத்

தாகம்புகுந்தண்மித்தாள்கள்தொழுந்தொண்டர்
போகமனத்தராய்ப்புகழத்திரிவாரே. (இ)

கொல்லுங்களியானையுரிபோர்த்துமையஞ்ச 98
நல்லநெறியானநல்லூர்ப்பெருமானைச்
செல்லுநெறியானச்சேர்ந்தாரிடர்தீரச்
செழுஞ்மடியார்களறியார்துக்கமே. (சு)

எங்கள்பெருமானியமையோர்தொழுதேத்து 98
நங்கள்பெருமானநல்லூர்பிரிவில்லா
தங்கைதலைக்கேற்றியாளென்றடிமீழற்
றங்குமனத்தார்கள்தடுமாற்றறுப்பாரே. (எ)

காமனெழில்வாட்டிக்கடல்சூழிலங்கைக்கோ 99
ணகமிறுத்தானநல்லூர்ப்பெருமானை
யேமமனத்தராயிகழாதெழுந்தொண்டர்
தீபமனத்தார்களறியார்தீயவே. (அ)

வண்மலராலும்வையமளந்தாலு 99
நண்ணலரியானநல்லூர்ப்பெருமானைத்
தண்ணமலர்தூவித்தாள்கள்தொழுதேத்த
வெண்ணுமடியார்கட்கில்லையிடுக்கணே. (கூ)

பிச்சக்குடைநீழற்சமணர்சாக்கியர் 99
நிச்சமலர்தூற்றநின்றபெருமானை
நச்சுமிடற்றானநல்லூர்ப்பெருமானை
யெச்சமடியர்கட்கில்லையிடர்தானே. (கo)

தண்ணம்புனற்காழிஞானசம்பந்த 9
னண்ணும்புனல்வேலிநல்லூர்ப்பெருமானை
வண்ணம்புனமாலைவைகலேத்துவார்
விண்ணுநிலனுமாய்விளங்கும்புகழாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பெரியாண்டேசுவரர், தேவியார்-திரிபுரசுந்தரியம்மை.

---

87 திருவதிகைவீரட்டானம்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுடுகூரெரிமாலையணிவர்சுடர்வேலர் 9
கொடுகூர்மழுவரொன்றுடையார்விடையூர்வர்
கடுகூர்பசிதாமங்கவலைபிணியில்லார்
வடுகூர்புனல்சூழ்ந்தவதிகைவீரடிகளே. (க)

938 பாலுநறுநெய்புந்தியிரும்பயின்முடி
யேலுஞ்சுடுநீறுமென்புமொளிமல்கக்
கோலம்பொழிற்சோலைக்கூடிமடவன்ன
மாலும்வடகூரிலாடுமடிகளே. (உ)

939 சூடுமிளந்திங்கட்சுடர்பொற்சடைதன்மே
லோடுங்கலியானையுரிபோர்த்துமையஞ்ச
வேடுமலர்மோந்தங்கெழிலார்வரிவண்டு
பாடும்வடகூரிலாடுமடிகளே. (ஊ)

940 துவரும்புரிசையுந்துதைந்தமணிமாடங்
கவரவெரியோட்டிக்கடியமதிளெய்தார்
கவருமணிகொல்லைக்கடியமுல்லைநல்லார்
பவரும்வடகூரிலாடுமடிகளே. (எ)

941 துணியாருடையாடைதன்னியரைதன்மேற்
றுணியாவழனைகந்தரியாவகைவைத்தார்
பணியாரடியார்கள்பலரும்பயின்றேத்த
வணியார்வடகூரிலாடுமடிகளே. (ஏ)

942 தளருங்கொடியன்னுடன்னூடனுங்கிக்
கிளருமரவாட்டிக்கிளருமுடிமேலோர்
வளரும்பிறைசூடிவரிவண்டிசைபாட
வொளிரும்வடகூரிலாடுமடிகளே. (ஐ)

943 நெடியர்சிறிதாயகரம்பாமதிசூடு
முடியர்விடையூர்வர்கொடியர்மொழிகொள்ளார்
கடியதொழிற்காலன்மடியவுதைகொண்ட
வடியர்வடகூரிலாடுமடிகளே. (ஒ)

944 பிறையுநெடுநீரும்பிரியாமுடியினர்
மறையும்பலபாடியமானத்துறைவாரும்
பறையுமதிர்குழலும்போலப்பலவண்டார்ங
கறையும்வடகூரிலாடுமடிகளே. (ஓ)

945 சந்தமலர்வேய்ந்தசடையின்னிடைவிம்மு
கந்தமிகுதிங்கட்கிந்துக்திர்மாலை
வந்துநயந்தெம்மைநன்றுமருள்செய்வா
ரந்தண்வடகூரிலாடுமடிகளே. (ஔ)

946 திருமாலடிவீழத்திகைநரன்முகுந்ய
பெருமானுணர்வில்லாப்பெருமானெடுமுடிசேர்
செருமால்விடையூருஞ்செம்மான்றிசைவில்லா
வருமாவடகூரிலாடுமடிகளே. (க0)

படிநேர்ன் பவையாவர் பழியில்புகழான 947
கடிநாணிகழ்சோலைகமழ்வடகூரைப்
படியானசிந்தைமொழியார்சம்பந்த
னடிஞானம்வல்லாரடிசேர்வார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஈரொட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–வடதேசுவரர், தேவியார்–வடிவகிர்க்கண்ணியம்மை.

ஆ பதிகம்–அ.

---

४४ திரு ஆப்பனூர்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முற்றுஞ்சடைமுடிமேன்முதிராவிளம்பிறைய 948
ஞெற்றைப்படவரவமதுகொண்டரைக்கணிக்தான்
செற்றமில்சீராணைத்திருவாப்பனூராணைப்
பற்றுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (க)

குரவங்கமழ்குழலாள்குடிகொண்டுகின்றுவிண்ணோர் 949
விரவுந்திருமேனிவிளங்கும்வியெயிற்றி
னரவமணிக்தானையணியாப்பனூராணைப்
பரவுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (உ)

முருகுவிரிகுழலார்மனங்கொளனங்கனுமுன் 950
பெரிதுமுனிக்துகந்தான்பெருமான்பெருங்காட்டி
னரவமணிக்தானையணியாப்பனூராணைப்
பரவுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ஊ)

பிணியும்பிறப்பறுப்பான்பெருமான்பெருங்காட்டிற் 951
றுணியினுடைதாழ்சுடரேந்தியாடுவா
னணியும்புனலானையணியாப்பனூராணைப்
பணியுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (எ)

தகரமணியருவித்தடமால்வரைசிலையா 952
ஈகரமொருமூன்றுமலங்குன்றவென்றுகந்தான்
அகரமுதலானையணியாப்பனூராணைப்
பகருமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ஏ)

ஓடுக்திரிபுரங்களுடனேயுலந்தவியக்
காடதிடமாகக்கனல்கொண்டுகின்றிரவி
லாடுக்தொழிலானையணியாப்பனூராணைப்
பாடுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ஐ)

954 இயலும்விடையேறியெரிகொண்மழுவீசிக்
கயலினீணக்கண்ணொருபால்கலந்தாட
வியலுமிசையானெழிலரப்பனூரானைப்
பயிலுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (எ)

955 கருக்குமணிமிடறன்கதகாக்கச்சையினு
னுருக்குமடியவரையொளிவெண்பிறைசூடி
யரக்கன்றிறலழித்தானணியாப்பனூரானைப்
பருக்குமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (அ)

956 கண்ணன்கடிக்கமலமலர்மேலினிதுறையு
மண்ணற்களப்பரிதாய்கின்றங்கடியார்மே
லெண்ணில்வினைகளேவானெழிலரப்பனூரானைப்
பண்ணின்னிசைபகர்வார்வினைபற்றறுப்பாரே. (கூ)

957 செய்கலிங்கத்தரைசிறுதட்டையார்கள்
பொய்யர்புறங்கூறப்புரிதவடியாரை
யையமகற்றுவானணியாப்பனூரானைப்
பையவினைந்தெழுவார்வினைபற்றறுப்பாரே. (கo)

958 அந்தண்புனல்வைகையணியாப்பனூர்மேய
சந்தமலர்க்கொன்றைசடைமேலுடையானை
நந்தியடிபரவுநலஞானசம்பந்தன்
சந்தமிவைவல்லார்தடுமாற்றறுப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆப்பனூரீசுவரர், தேவியார்-அம்பிகையம்மை.

---

89 திரு எருக்கத்தம்புலியூர்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

959 படையார்தருபூதப்படைதாருரிபோர்வை
யுடையானுமையோடுமுடனுயிடங்கைச்
சடையானெருக்கத்தம்புலியூர்த்தகுகோயில்
விடையானடியேத்தமேவாவினைதானே. (க)

960 இலையார்தருசூலப்படையெம்பெருமானுய்
நிலையார்மதிண்மூன்றுநீறுய்விழவெய்த
சிலையானெருக்கத்தம்புலியூர்த்திகழ்கோயிற்
கலையானடியேத்தக்கருதாவினைதானே. (உ)

961 விண்ணோர்பெருமானேவிகிர்தாவிடையூர்தி
பெண்ணுணலியாகும்பித்தாபிறைசூடி

வெண்ணெருக்கத்தம்புலியூருறைகின்ற
வண்ணவெனவல்லார்க்கடையாவினை தானே. (கூ)

அரையார்தருநாகமணிவானலர்மாலை
விரையார்தருகொன்றையுடையான்விடையேறி
வரையானெருக்கத்தம்புலியூர்மகிழ்கின்ற
திரையார்சடையானேச்சேரத்திருவாமே. (எ)

வீரூர்முலையாளைப்பாகமிகவைத்துச்
சீரூவருகாலன்சினத்தையழிவித்தா
னேரூனெருக்கத்தம்புலியூரிறையானே
வேரூநினைவாரைவிரும்பாவினை தானே. (நி)

நகுவெண்டலையேற்கிநாளுமிதம்பாடிப்
புகுவானயம்பெய்யப்புலித்தோல்பியற்கிட்டுத்
தகுவானெருக்கத்தம்புலியூர்த்தகைத்தங்கே
தொகுவான்கழலேத்தத்தொடராவினை தானே. (சு-எ)

ஆவாவெனவரக்கனலறவடர்த்திட்டுத்
தேவாவெனவருளார்செல்வங்கொடுத்திட்ட
கோவேயெருக்கத்தம்புலியூர்மிகுகோயிற்
றேவேயெனவல்லல்தீர்தல்திடமாமே. (அ)

மறையானெடுமால்காண்பரியான்மழுவேந்தி
நிறையாமதிசூடிநிகழ்முத்தின்னெறித்தே
யிறையானெருக்கத்தம்புலியூரிடங்கொண்ட
கறையார்மிடற்றானேக்கருதக்கெடும்வினையே. (கூ)

புத்தாருகர்தம்பொய்கள்புறம்போக்கிச்
சுத்திதரித்துறையுஞ்சோதியுமையோடு
நித்தனெருக்கத்தம்புலியூர்நிகழ்வாய
வத்தனறவன்றன்னடியேயடைவோமே. (கo)

ஏராரெருக்கத்தம்புலியூருறைவானைச்
சீராரிகழ்காழித்திருவார்சம்பந்த
னாராவருந்தமிழ்மாலியிவைவல்லார்
பாராரவரேத்தப்படிவானுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஒரு பதிகம் ஒன்பது பாடல்களை உடையது.

சுவாமிபெயர்-நீலகண்டேசுரர், தேவியார்-நீலமலர்க்கண்ணம்மை.

ஏ0 திருப்பிரமபுரம்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

969 அரணியுள்குவீர், பிரமனூருளெம்
பரணியேமனம், பரவியுய்ம்மினே. (க)

970 காணவுள்குவீர், வேணுநற்புரத்
தாணுவின்கழல், பேணியுய்ம்மினே. (உ)

971 நாதனென்பிர்காள், காதலொண்புக
ழாதிபாதமே, யோதியுய்ம்மினே. (ங)

972 அங்கமாதுசேர், பங்கமாயவன்
வெங்குருமன்னு, மெங்களீசனே. (ச)

973 வாணிலாச்சடைத், தோணிவண்புரத்
தாணிநற்பொனைக், காணுமின்களே. (ஞ)

974 பாந்தளார்சடைப், பூந்தராய்மன்னு
மேந்துகொங்கையாள், வேந்தனென்பரே. (ரு)

975 கரியகண்டனைச், சிரபுரத்துளெம்
மரசைநாடொறும், பரவியுய்ம்மினே. (எ)

976 நறவமார்பொழிற், புறவநற்பதி
யிறைவனுமமே, மறவனெஞ்சமே. (அ)

977 தென்றிலரக்கனைக், குன்றிற்சண்பைம
னன்றுநெரித்தவர், நின்றுநினைமினே. (கூ)

978 அயனுமாலுமாய், முயலுங்காழியான்
பெயல்வையெய்திநின், றியலுமுள்ளமே. (க0)

979 தேரரமணரைச், சேர்வில்கொச்சைமன்
னேரில்கழனிநீர், தோருமுள்ளமே. (கக)

980 தொழுமனத்தவர், கழுமலத்துறை
பழுதில்சம்பந்தன், மொழிகள்பத்துமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.
பிரமபுரமென்பது-சீகாழி.

ஏ1 திருஆரூர்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

981 சித்தந்தெளிவீர்கா, ளத்தனூருரைப்
பத்திமலர்தூவ, முத்தியாகுமே. (க)

982 பிறவியறுப்பீர்கா, ளறவனூரரை
மறவாதேத்துமின், துறவியாகுமே. (உ)

தன்பந்துடைப்பீர்கா, ளன்பணியாரூர்
நன்பொன்மலர்தூவ, வின்பமாகுமே. (கூ)

உய்யதுறுவீர்கா, ளேயனூரைக்
கையினற்றொழ, கையும்வீனை தானே. (ச)

பிண்டமறப்பீர்கா, ளண்டனூரைக்
கண்டுமலர்தூவ, விண்டுவினீபோமே. (ஞ)

பாசமறப்பீர்கா, ளீசனணியாரூர்
வாசமலர்தூவ, நேசமாகுமே. (ஙு)

வெய்யவினீதீர, வையனணியாரூர்
செய்யமலர்தூவ, வையமுமதாமே. (எ)

அரக்கனண்மையை, நெருக்கினனூர்
கரத்தினற்றொழத், திருத்தமாகுமே. (அ)

தள்ளுமிருவர்க்கும், வள்ளலாரூரை
யுள்ளுமவர்தம்மேல், விள்ளும்வினை தானே. (கூ)

கடுக்கொள்சீவரை, யடக்கினனூரு
ரெடுத்தவாழ்த்தவர்ர், விடுப்பர்வேட்கையே. (கo)

சீரூர்சம்பந்த, னூரைச்சொன்ன
பாரூர்பாடலார், பேராரின்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வன்மீகநாதர், தேவியார்-அல்லியங்கோதையம்மை.

---

72 திருவீழிமிழலை-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாசிதீரவே, காசுநல்குவீர்
மாசின்மிழலையீ, ரேசலில்லையே. (க)

இறைவராயினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்காயினை, முறைமைநல்குமே. (உ)

செய்யமேனியீர், மெய்கொண்மிழலையீர்
பைகொளரவினீ, ருய்யநல்குமே. (ஙு)

நீறுபூசினீ, ரேறதேறினீர்
கூறுமிழலையீர், பேறுமருளுமே. (ச)

காமன்வேவவோர், தூமக்கண்ணினீர்
நாமமிழலையீர், சேமநல்குமே. (ஞ)

1947 பிணிகொள்சடையினீர், மணிகொண்மிடறினீ
ரணிகொண்மிழலையீர், பணிகொண்டருளுமே. (சு)

1948 மங்கைபங்கினீர், துங்கமிழலையீர்
கங்கைமுடியினீர், சங்கைதவிர்மினே. (எ)

1949 அரக்கனெரிதர, விரக்கமெய்தினீர்
பரக்குமிழலையீர், கரக்கைதவிர்மினே. (அ)

1950 அயனுமாலுமாய், முயலுமுடியினீ
ரியலுமிழலையீர், பயனுமருளுமே. (கூ)

1951 பறிகொள்தலையினு, ரறிவதறிகிலார்
வெறிகொண்மிழலையீர், பிறிவதரியதே. (கo)

1952 காழிமாநகர், வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேற், மூழுமொழிகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது படிக்காசுசுவாமியருளியபோது வட்டக்கீர ஒதியது.

---

93 திருமுதுகுன்றம்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1953 நின்றுமலர்தூவி, யின்றுமுதுகுன்றை
நன்றுமேத்துவீர்க், கென்றுமின்பமே. (க)

1954 அத்தன்முதுகுன்றைப், பத்தியாகிநீர்
நித்தமேத்துவீர்க், குய்த்தல்செல்வமே. (உ)

1955 ஐயன்முதுகுன்றைப், பொய்கள்கெடநின்று
கைகள்கூப்புவீர், வையமுமதாமே. (ங)

1956 ஈசன்முதுகுன்றை, நேசமாகிநீர்
வாசமலர்தூவப், பாசவினைபோமே. (ச)

1957 மணியார்முதுகுன்றைப், பணிவாரவர்கண்டீர்
பிணியாயினகெட்டுத், தணிவாருலகிலே. (ஞ)

1958 மொய்யார்முதுகுன்றி, லெய்யாவெனவல்லார்
பொய்யாரிரவோர்க்குச், செய்யாளணியாளே. (சு)

1959 விடையான்முதுகுன்றை, யிடையாதேத்துவார்
படையாயினசூழ, வுடையாருலகமே. (எ)

1960 பத்துத்தலையானைக், கத்தவிரலூன்று
மத்தன்முதுகுன்றை, மொய்த்துப்பணிமினே. (அ)

இருவரறியாத, வொருவன்முதுகுன்றை 194
யுருகினீனவார்கள், பெருகினிகழ்வோரே. (கூ)
தேரரமணருஞ், சேரும்வகையில்லான் 195
நேரின்முதுகுன்றை, நீர்கின்றுள்குமே. (கo)
கின்றுமுதுகுன்றை, நன்றுசம்பந்த 196
ஞொன்றுமுரைவல்லா, ரென்றுமுயர்வோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

94 திரு ஆலவாய்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற்ற், முலவாயிலான்
பாலதாயினுர், ஞாலமாள்வரே. (க)
ஞாலமேமுழுமா, மாலவாயிலார்
சீலமேசொலீர், காலன்வீடவே. (உ)
ஆலநீழலா, ராலவாயிலார்
காலகாலனுர், பாலதாமினே. (கூ)
அந்தமில்புக, ழெந்தையாலவாய்
பந்தியார்கழல், சிந்தைசெய்ம்மினே. (ச)
ஆடலேற்றினன், கூடலாலவாய்
பாடியேமனம், நாடிவாழ்மினே. (டு)
அண்ணலாலவாய், நண்ணினன்றனை
யெண்ணியேதொழத், தின்னமின்பமே. (சு)
அம்பொனலவாய், நம்பனர்கழல்
நம்பிவாழ்பவர், துன்பம்வீடுமே. (எ)
அரக்கனர்வலி, நெருக்கனலவா
யுரைக்குமுள்ளத்தார்க், கிரக்கமுண்மையே. (அ)
அருவனலவாய், மருவினன்றனை
யிருவரேத்தநின், றுருவமோங்குமே. (கூ)
ஆரநாகமாஞ், சீரனலவாய்த்
தேரமண்செற்ற, வீரனென்பரே. (கo)
அடிகளாலவாய்ப், படிகொள்சம்பந்தன்
முடிவிலின்றமிழ், செடிகணீக்குமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இதுவே மதுரை.

சுவாமிபெயர்-சொக்கநாதசுவாமி, தேவியார்-மீனாக்ஷியம்மை.

---

95 திருஇடைமருது-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1091 தோடொர்காதினன், பாடுமறையினன்
காடுபேணினின், றாடுமருதனே. (க)

1092 கருதார்புரமெய்வ, ரெருதேயினிதூர்வர்
மருதேயிடமாகும், விருதாம்வினைதீர்ப்பே. (உ)

1093 எண்ணுமடியார்க, ளண்ணன்மருதரைப்
பண்ணின்மொழிசொல்ல, விண்ணுந்தமதாமே. (ங)

1094 விரியார்சடைமேனி, யெரியார்மருதரைத்
தரியாதேத்துவார், பெரியாருலகிலே. (ச)

1095 பந்தவிடையேறு, மெந்தைமருதரைச்
சிந்தைசெய்பவர், புந்திநல்லோரே. (ஞ)

1096 கழலுஞ்சிலம்பார்க்கு, மெழிலார்மருதரைத்
தொழலேபேணுவார்க், குழலும்வினைபோமே. (ரு)

1097 பிறையார்சடையண்ணல், மறையார்மருதரை
நிறையாணினைபவர், குறையாரின்பமே. (எ)

1098 எடுத்தான்புயந்தன்னை, யடுத்தார்மருதரைத்
தொடுத்தார்மலர்சூட்ட, விடுத்தார்வேட்கையே. (அ)

1099 இருவர்க்கெரியாய, வுருவமருதரைப்
பரவியேத்துவார், மருவிவாழ்வரே. (கூ)

1100 நின்றுண்சமண்டேர, ரென்றுமருதரை
யன்றியுரைசொல்ல, நன்றுமொழியாரே. (கo)

1101 கருதுசம்பந்தன், மருதரடிபாடிப்
பெருகுதமிழ்சொல்லப், பொருதவினைபோமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

96 திரு அன்னியூர்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1102 மன்னியூருறை, சென்னியார்பிறை
யன்னியூரமர், மன்னுசோதியே. (க)

1103 பழகுந்தொண்டர்வம், மழகனன்னியூர்க்
குழகன்சேவடி, தொழுதுவாழ்மினே. (உ)

1104 நீதிபேணுவீ, ரரியன்னியூர்ச்
சோதிநாமமே, யோதியுய்ம்மினே. (ங)

பத்தராயினீ, ரத்தரன்னியூர்ச்
சித்தர்தாடொழ, முத்தாவதே. (சு)

நிறைவுவேண்டுவீ, ரறவனன்னியூர்
மறையுளான்கழற், குறவுசெய்ம்மினே. (டு)

இன்பம்வேண்டுவீ, ரன்பனன்னியூர்
நன்பொனென்னுமி, னும்பராகவே. (சு)

அந்தணளர்தந், தந்தையன்னியூ
ரெந்தையேயெனப், பந்தரீங்குமே. (எ)

தூர்த்தனீச்செற்ற, நீர்த்தனன்னியூர்
ஆத்தமாவடைந், தேத்தியுய்ம்மினே. (அ)

இருவர்நாடிய, வரவனன்னியூர்
பரவுவார்விண்ணுக், கொருவராவரே. (கூ)

குண்டர்தேரருக், கண்டனன்னியூர்த்
தொண்டுளார்வினை, விண்டுபோகுமே. (கo)

பூந்தராய்ப்பந்த, னுய்ந்தபாடலால்
வேந்தனன்னியூர், சேர்ந்துவாழ்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆபத்சகாயர், தேவியார்-பெரியநாயகியம்மை.

ஆ பதிகம்-கூ.

97 திருப்புறவம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எய்யாவென்றித்தானவரூர்மூன்றெரிசெய்த
மையார்கண்டன்மாதுமைவைகுந்திருமேனிச்
செய்யான்வெண்ணீறணிவான்றிகழ்பொற்பதிபோலும்
பொய்யாநாவினந்தணர்வாழும்புறவம்மே. (க)

மாதொருபாலுமாலொருபாலுமகிழ்கின்ற
நாதனென்றேத்துநம்பான்வைகுங்நகர்போலும்
மாதவிமேயவண்டிசைபாடமயிலாடப்
போதலர்செம்பொன்புன்னைபொலிக்கும்புறவம்மே. (உ)

வற்றாநதியுமதியும்பொதியுஞ்சடைமேலே
புற்றாடரவின்படமாடவுமிப்புவனிக்கோர்
பற்றாயினிமின் பலியென்றடைவார்பதிபோலும்
பொற்றாமரையின்பொய்கைலாவும்புறவம்மே. (ரு)

1050 தன்னூர்புரமும்பிரமன்சிரமுந்தணிசெய்து
மின்னுர்சடைமேலரவும்மதியுஞ்சூடீயாடப்
பன்னுளிடுமின்பலியென்றடைவார்பதிபோலும்
பொன்னுர்புரிநூலந்தணர்வாழும்புறவம்மே. (ச)

1051 தேவாவரனேசரணென்றிமையோர்திசைதோறுங்
காவாயென்றுவந்தடையக்கார்விடமுண்டு
பாவார்மறையும்பயில்வோருறையும்பதிபோலும்
பூவார்கோலச்சோலைசுலாவும்புறவம்மே. (ரு)

1052 கற்றறிவெய்திக்காமன்முன்னுகம்முகவெல்லா
மற்றரனேநின்னடிசரணென்னுமடியோர்க்குப்
பற்றதுவாயபாசுபதன்சேர்பதியென்பர்
பொற்றிகழ்மாடத்தொளிகணிலாவும்புறவம்மே. (சு)

1053 எண்டிசையோரஞ்சிடுவகைகார்சேர்வரையென்னக்
கொண்டெழுகோலமுகில்போற்பெரியகரிதன்னீப்
பண்டுரிசெய்தோன்பாவனைசெய்யும்பதியென்பர்
புண்டரிகத்தோன்போன்மறையோர்சேர்புறவம்மே. (எ)

1054 பரக்குந்தொல்சீர்த்தேவர்கள்சேனைப்பௌவத்தைத்
தரக்குஞ்செந்தீப்போலமர்செய்புந்தொழின்மேவு
மரக்கன்றிண்டோளழித்தானக்காலத்திற்
புரக்கும்வேந்தன்சேர்தருமூதூர்புறவம்மே. (அ)

1055 மீத்திகழண்டந்தயனேடுமிகுமாலு
மூர்த்தியைநாடிக்காணவொணாதமுயல்விட்டாங்
கேத்தவெளிப்பாடெய்தியவன்றனிடமென்பர்
பூத்திகழ்சோலைத்தென்றலுலாவும்புறவம்மே. (கூ)

1056 வையகநீர்தீவாயுவும்விண்ணும்முதலானன்
மெய்யலதோராவுண்டிலையென்றேகின்றேதங்
கையினிலுண்போர்காணவொணாதானகரென்பர்
பொய்யகமில்லாப்பூசுரர்வாழும்புறவம்மே. (கo)

1057 பொன்னியன்மாடப்புரிசைநிலாவும்புறவத்து
மன்னியவீசன்சேவடிநாளும்பணிகின்ற
தன்னியல்பில்லாச்சண்பையர்கோன்சீர்ச்சம்பந்த
னின்னிசையீரைந்தேத்தவல்லோர்கட்கிடர்போமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

98 திருச்சிராப்பள்ளி-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத்தியதிலானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாததிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிரும்மே. (க)

கைம்மகவேந்திக்கடிவனெடிடிக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாவீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே. (உ)

மந்தம்முழவம்மழலேதும்பவரைமீழல்
செந்தண்புனமுஞ்சுனையுஞ்சூழ்ந்தசிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள்சடைமேலுடையார்வீடையூரு
மெந்தம்மடிகளடியார்க்கல்லலில்லையே. (கூ)

தூறைமல்குசாரற்சுனைமல்குநீலத்திடைவைகிச்
சிறைமல்குவண்டுந்தும்பியும்பாடுஞ்சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன்கனலெரியாடுங்கடவுள்ளெம்
பிறைமல்குசென்னியுடையவனெங்கள்பெருமானே. (ச)

கொலைவரையாதகொள்கையர்தங்கண்மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச்செற்றனரேறுஞ்சிராப்பள்ளித்
தலைவரைகளுந்தலைவரல்லாமையுரைப்பீர்கா
னிலைவரைநீலமுண்டதும்வெள்ளைநிறமாமே. (ஞ)

வெய்யதணசாரல்வீரிகிறவேங்கைத்தண்போது
செய்யபொன்சேருஞ்சிராப்பள்ளிமேயசெல்வனர்
தையலொர்பாகமகிழ்வர்நஞ்சுண்பர்தலையோட்டி
லேயமுங்கொள்வராரிவர்செய்கையறிவாரே. (சு)

வேயுயர்சாரற்கருவிரலூகம்விளையாடுஞ்
சேயுயர்கோயிற்சிராப்பள்ளிமேவசெல்வனர்
பேயுயர்கொள்ளிகைவிளக்காகப்பெருமானர்
தீயுகந்தாடிருக்குறிப்பாயிற்றுகாதே. (ஊ)

மலைமல்குதோளன்வலிகெடவூன்றிமலரோன்றன்
தலைகலனுகப்பலிதிரிந்தண்பர்பழியோரார்
சொலவலவேதஞ்சொலவலதேஞ்சொல்லுங்கால்
சிலவலபோலுஞ்சிராப்பள்ளிச்சேடர்செய்கையே. (அ)

1084 அரப்பள்ளியானுமலருறைவானுமறியாமைக்
கரப்புள்ளிநாடிக்கண்டிலரேனுங்கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேயவார்சடைச்செல்வர்மணிதோ
மிரப்புள்ளீரும்மையேதிலர்கண்டாலிகழாரே. (கூ)

1085 நாணுதடைநீத்தோர்களுங்கஞ்சிநாட்காலே
பூணுப்பகலுண்டோதுவோர்களுரைக்குஞ்சொற்
பேணுதுறுசீர்பெறுதுமென்பிரெம்பெருமானர்
சேணுர்கோயில்சிராப்பள்ளிசென்றுசேர்மினே. (கo)

1086 தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தாயுமானேசுவரர், தேவியார்-மட்டுவார்குழலம்மை.

---

99 திருக்குற்றாலம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1087 வம்பார்குன்றநீடியசாரல்வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக்கோலவண்டியாழ்செய்குற்றால
மம்பானெய்யோடாடலமர்ந்தானலர்கொன்றை
நம்பான்மேயநன்னகர்போலுநமரங்காள். (க)

1088 பொடிகள்பூசித்தொண்டர்பின்செல்லப்புகழ்விம்மக்
கொடிகளேறுநாள்விழமல்குகுற்றாலங்
கடிகொள்கொன்றைகூவிளமாலைகாதல்செய்
படிகண்மேயநன்னகர்போலுமடியீர்காள். (உ)

1089 செல்வமல்குசெண்பகம்வேங்கைசென்றேறிக்
கொல்லைமுல்லைமெல்லரும்பீனுங்குற்றாலம்
வில்லினெல்கமும்மதிலெய்தவிண்ணோர்போக
நல்குநம்பானன்னகர்போலுநமரங்காள். (ஊ)

1090 பக்கம்வாழைப்பாய்கனியோடுபலவின்றேன்
கொக்கின்கோட்டுப்பைங்கனிதூங்குங்குற்றால
மக்கும்பரம்புமாமையும்பூண்டோரனலேந்தி
நக்கன்மேயநன்னகர்போலுநமரங்காள். (எ)

1091 மலையார்சாரன்மகவுடன்வந்தமடமந்தி
குலையார்வாழைத்தீங்கனிமாந்துங்குற்றால

மிலையார்சூலமேக்தியகையானெயிலெய்த
சிலையான்மேயகன்னகர்போலுஞ்சிறுதொண்டீர். (கு)

மைம்மாகீலக்கண்ணியர்சாரன்மணிவாரிக் /0ச
கொய்ம்மாவேன வுண்கிளியோப்புங்குற்றுலங்
கைம்மாவேழத்தீருரிபோர்த்தகடவுள்ளெம்
பெம்மான்மேயகன்னகர்போலும்பெரியீர்காள். (சு)

நீலகெய்தல்தண்சுனைசூழ்ந்தகீள்சோலைக் /0க
கீகாலமஞ்ஞைபேடையொடாடுங்குற்றுலங்
காலன்றன்னைக்காலாற்காய்ந்தகடவுள்ளெஞ்
சூலபாணிநன்னகர்போலுந்தொழுவீர்காள். (எ)

போதும்பொன்னுமுந்தியருவிபுடைசூழக் /0
கூதன்மாரிதண்டுளிதூங்குங்குற்றுல
மூதூரிலங்கைமுட்டியகோனிமிறைசெய்த
நாதன்மேயநன்னகர்பேர்லுநமந்காள். (அ)

அரவின்வாயின்முள்ளெயிறேய்ப்பவரும்பீன்று /0
சூரவம்பாவைமுருகமர்சோலைக்குற்றுலம்
பிரமனூடுமாலறியாதபெருமையெம்
பரமன்மேயநன்னகர்போலும்பணிவீர்காள். (கூ)

பெருந்தண்சாரல்வாழ்சிறைவண்டுபெடைபுல்லிக் /0
சுருந்தம்மேறிச்செவ்வழிபாடுங்குற்றுல
மிருந்துண்டேருகின்றுண்சமணுமெடுத்தார்ப்ப
வருந்தண்மேயநன்னகர்போலுமடியீர்காள். (கo)

மாடவீதிவருபுனற்காழியார்மன்னன் /0
கோடலீன்றகொழுமுனைகூம்புங்குற்றுல
நாடவல்லஞானமிழ்ஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பாடநம்பாவம்பறையுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-குறும்பலாவீசுவரர், தேவியார் - குழல்வாய்மொழியம்மை.

/00 திருப்பரங்குன்றம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீடலர்சோதிவெண்பிறையோடுநிரைசொன்றைச் /0 ஙி
சூடலனந்திச்சுடரெரியேந்திச்சுடுகானில்
லாடலனஞ்சொலணியிழையாளோருபாகம்
பாடலன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே. (க)

10 4 அங்கமொராறுமருமறைநான்குமருள்செய்து
பொங்குவெண்ணூலும்பொடியணிமார்பிற்பொலிவித்துத்
திங்களும்பாம்புந்திகழ்சடைவைத்தோர்தேன்மொழி
பங்கினன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே. (உ)

10 5 நீரிடங்கொண்டகிடிர்சடைதன்மேனிரைகொன்றைச்
சீரிடங்கொண்டவெம்மிறைபோலுஞ்சேய்தாய
வோருடம்புள்ளேயுமையொருபாகமுடனுகிப்
பாரிடம்பாடலினிதுறைகோயில்பரங்குன்றே. (ஊ)

10 6 வளர்பூங்கோங்கமாதவியோடுமல்லிகைக்
குளிர்பூஞ்சாரல்வண்டறைசோலைப்பரங்குன்றந்
தளிர்போன்மேனித்தையனல்லாளோடொருபாகம்
நளிர்பூங்கொன்றைசூடினன்மேயநகர்தானே. (எ)

10 7 பொன்னியல்கொன்றைபொறிகிளர்நாகம்புரிசடைத்
துன்னியசோதியாகியவீசன்றிறன்மறை
பன்னியபாடலாடலன்மேயபரங்குன்றை
யுன்னியசிந்தையுடையவர்க்கில்லையுறுநோயே. (ஏ)

10 8 கடைகெடுமாடக்கடியரண்மூன்றுங்கனன்மூழ்கத்
தொடைகளில்லின்றவில்லினனந்திச்சுடுகானில்
புடைகளில்பூதம்பாடலின்றாடும்பொருசூலப்
படைகளில்வான்றனன்னகர்போலும்பரங்குன்றே. (ஐ)

10 9 அயிலுடைவேலோரனல்புல்குகையினம்பொன்ற
லெயில்படவெய்தவெம்மிறைமேவலிடம்போலு
மயில்பெடைபுல்கிமாநடமாடும்வளர்சோலைப்
பயில்பெடைவண்டுபாடலறாதபரங்குன்றே. (ஒ)

10 10 மைத்தகுமேனிவாளரக்கன்றன்மகுடங்கள்
பத்தினிண்டோளிருபதுஞ்செற்றன்பரங்குன்றைச்
சித்தமதொன்றிச்செய்கழலுன்னிச்சிவனென்று
நித்தலுமேத்தத்தொல்வினைநம்மேனில்லாவே. (அ)

10 11 முக்தியிவ்வையந்தாவியமாலுமொய்யொளி
யுந்தியில்வந்திகழ்மறையீந்தவுரோனுஞ்
சிந்தையினுள்ளுந்தெரிவரிதாகித்திகழ்சோதி
பந்தியலங்கைமங்கையொர்பங்கன்பரங்குன்றே. (கூ)

10 12 குண்டாய்முற்றுங்திரியார்கூறைமெய்போர்த்து
மிண்டாய்மிண்டர்பேசியபேச்சுமெய்யல்ல
பண்டானீழுண்மேவியவீசன்பரங்குன்றைத்
தொண்டாயேத்தத்தொல்வினைநம்மேனில்லாவே. (கூ)

தடமலிபொய்கைச்சண்பைமன்ஞானசம்பந்தன்
படமலிநாகமரைக்கசைத்தான்றன்பரங்குன்றைத்
தொடைமலிபாடல்பத்தும்வல்லார்தக்துயர்போகி
விடமலிகண்டனருள்பெறுந்தன்மைவிக்கோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–பரங்கிரிநாதர், தேவியார்-ஆவுடைநாயகியம்மை.

⁄0⁄ திருக்கண்ணார்கோயில்–பண்–குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தண்ணார்திங்கட்பொங்கரவந்தாழ்புனல்சூடிப்
பெண்ணாணியபேரருளாளன்பிரியாத
கண்ணார்கோயில்கைதொழுவோர்கட்கிடர்பாவம்
நண்ணாவாகுல்வினையாயநணுகும்மே. (க)

கந்தமர்சந்தங்காரகிலுந்தண்கதிர்முத்தும்
வந்தமர்தெண்ணீர்மண்ணிவளஞ்சேர்வயன்மண்டிக்
கொந்தலர்சோலைக்கோகிலமாடக்குளிர்வண்டு
செந்திசைபாடுஞ்சீர்திகழ்கண்ணார்கோயிலே. (உ)

பல்லியல்பாணிப்பாரிடமேத்தப்படுகானி
னெல்லிநெடுஞ்செய்யிசனெம்மான்றன்னிடமென்பர்
கொல்லியின்முல்லைமல்லிகைமௌவற்கொடிபின்னிக்
கல்லியலிஞ்சிமஞ்சமர்கண்ணார்கோயிலே. (ங)

தருவளர்கானந்தங்கியதுங்கப்பெருவேழம்
மருவளர்கோதையஞ்சவுரித்தமறைநால்வர்க்
குருவளராலநீழலமர்ந்திருந்துரைசெய்தார்
கருவளர்கண்ணார்கோயிலடைந்தோர்கற்றோரே. (ச)

மறுமாணுருவாய்மற்றிணையின்றிவானேரைச்
செறுமாவலிபாற்சென்றுலகெல்லாமளவிட்ட
குறுமாணுருவன்றற்குறியாகக்கொண்டாடுங்
கறுமாகண்டன்மேயதுகண்ணார்கோயிலே. (ஞ)

விண்ணவருக்காய்வேலையுணஞ்சம்மிருப்பாக
வுண்ணவனைத்தேவர்க்குமுதீந்தெவ்வுலகிற்குங்
கண்ணவனைக்கண்ணார்திகழ்கோயிற்கனிதன்னை
நண்ணவல்லோர்கட்கில்லைநமன்பாடலையே. (ட)

முன்னெருகாலத்திந்திரனுற்றமுனிசாபம்
பின்னெருநாளவ்விண்ணவரேத்தப்பெயர்வெய்தித்

தன்னருளாற்கண்ணுதிரமீர்தோன்சார்பென்பர்
கன்னியர்நாளுந்துன்னமர்க்கண்ணூர்கோயிலே. (எ)

1096 பெருக்கெண்ணுதபேதையரக்கன்வரைக்கீழா
னெருக்குண்ணுத்தன்னீள்கழனெஞ்சினீன்றேத்த
முருக்குண்ணுதோர்மொய்கதிர்வாடேர்முன்னீந்த
திருக்கண்ணுரென்பார்சிவலோகஞ்சேர்வாரே. (அ)

1097 செங்கமலப்போதிற்றிகழ்செல்வன்றிருமாலு
மங்கமலக்கண்ணேக்கரும்வண்ணத்தழலானன்
தங்கமலக்கண்ணூர்திகழ்கோயில்தமதுள்ளத்
தங்கமலத்தொடேத்திடவண்டத்தமர்வாரே. (கூ)

1098 தாறிடுபெண்ணேத்தட்டுடையாருந்தாமுண்ணுஞ்
சோறுடையார்சொற்றேறன்மின்வெண்ணூல்சேர்மார்ப
னேறுடையன்பரனென்பணிவாளீள்சடைமேலோ
ராறுடையண்ணல்சேர்வதுகண்ணூர்கோயிலே. (கo)

1099 காமருகண்ணூர்கோயிலாளாணக்கடல்சூழ்ந்த
பூமருசேலேப்பொன்னியன்மாடப்புகலிக்கோ
னேமருதொன்மைத்தன்மையுண்ஞானசம்பந்தன்
பாமருபாடல்பத்தும்வல்லார்மேற்பழிபோமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கண்ணுயிரேசுவரர், தேவியார்-முருகுவளர்கோதையம்மை.

ஆறு பதிகம்-கoக.

1092 சீகாழி-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1100 உரவார்கலியின்கவிதைப்புலவர்க்கொருநாளுங்
கரவாவண்கைக்கற்றவர்சேருங்கலிக்காழி
யரவாரரையாவவுணர்புரமூன்றெரிசெய்த
சரவாவென்பார்தத்துவஞானத்தலையாரே. (க)

1101 மொய்சேர்வண்டுண்மும்மதநால்வாய்முரண்வேழக்
கைபோல்வாழைதாய்குலையீனுங்கலிக்காழி
மைசேர்கண்டத்தெண்டோண்முக்கண்மறையோனே
யையாவென்பார்க்கல்லலகளானவடையாவே. (உ)

1102 இளகக்கமலத்தீன்களியங்குங்கழிசூழ்க்
களகப்புரிசைக்கவினிர்சாருங்கலிக்காழி

யளகத்திருநன் னுதலிபங்காவரனேயென்
னுளகப்பாடுமடியார்க்குறுநோயடையாவே. (கூ)

எண்ணூர்முத்தமீன் முமரகதம்போற்காய்த்துக்
கண்ணூர்கமுகுபவளம்பழுக்குங்கலிக்காழிப்
பெண்ணேர்பாகாபித்தாபிரானேயென்பார்க்கு
நண்ணுவினைகணொடாறுமின் பநணுகும்மே (சு)

மழையார்சாரற்செம்புனல்வந்தங்கடிவருடக்
கழையார்கரும்புகண்வளர்சோலைக்கலிக்காழி
யுழையார்கரவாவுமையாள்கணவாவொளிர்சங்கக்
குழையாவென்றுகூறவல்லார்கள்குணவோரே. (டு)

குறியார்திரைகள்வரைகணின்றுங்கோட்டாறு
கறியார்கழிசம்பிரசங்கொடுக்குங்கலிக்காழி
வெறியார்கொன்றைச்சடையர்விடையாவென்பாரை
யறியாவினைகளருநோய்பாவமடையாவே. (சுஎ)

உலங்கொள்சங்கத்தார்கலியோதத்ததையுண்டு
கலங்கள்வந்துகார்வயலேறுங்கலிக்காழி
யிலங்கைமன்னன்றன்னையிடர்கண்டருள்செய்த
சலங்கொள்சென்னிமன்னவென்னத்தவமாமே. (அ)

ஆவிக்கமலத்தன்னமியங்குங்கழிசூழக்
காவிக்கண்ணூர்மங்கலமோவாக்கலிக்காழிப்
பூவிற்றேன்றும்புத்தேளொடுமாலவன்றானு
மேவிப்பரவுமரசேயென்னவினைபோமே. (கூ)

மலையார்மாடமீடியெரிஞ்சிமஞ்சாருங்
கலையார்மதியஞ்சேர்தருமந்தண்கலிக்காழித்
தலைவாசமணர்சாக்கியர்க்கென்றுமறிவொண்ணு
நிலையாயென்னத்தொல்வினையாயகில்லாவே. (கஅ)

வடிகொள்வாவிச்செங்கழுநீரிற்கொங்கார்படிக்
கடிகொடென்றன்முன்றினில்வைகுங்கலிக்காழி
யடிகடம்மையர்தமின்ஞானசம்பந்தன்
படிகொள்பாடல்வல்லவர்தம்மேற்பழிபோமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

1682 தோடுடையானொருகாதிற்றாயகுழைதாழ
வேடுடையான்றலைகலைகவிர்தண்ணும்
நாடுடையானள்ளிருளேமநடமாடுங்
காடுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (க)

1683 கேணவல்லான்கேழல்வெண்கொம்புகுளாமை
பூணவல்லான்புரிசடைமேலொர்புனல்கொன்றை
பேணவல்லான்பெண்மகடன்னோடொருபாகங்
காணவல்லான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (உ)

1684 தேனகத்தார்வண்டதுவுண்டதிகழ்கொன்றை
தானகத்தார்தண்மதிசூடித்தலைமேலோர்
வானகத்தார்வையகத்தார்கடொழுதேத்துங்
கானகத்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (ங)

1685 தூணியல்செய்தான்றாயவண்டியாழ்செய்சுடர்க்கொன்றை
பிணியல்செய்தான்பெண்ணினல்லாளோருபாக
மிணியல்செய்யாவிலங்கெயின்மூன்றுமெரியுண்ணக்
கணியல்செய்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (ச)

1686 பையுடையபாம்பொடுதீறுபயில்கின்ற
மெய்யுடையான்வெண்பிறைசூடிவிரிகொன்றை
மையுடையமாமிடற்றண்ணன்மறிசேர்ந்த
கையுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (ஞ)

1687 வெள்ளமெல்லாம்விரிசடைமேலோர்விரிகொன்றை
கொள்ளவல்லான்குரைகழலேத்துஞ்சிறுத்தொண்ட
ருள்ளமெல்லாமுள்கிநின்றுங்கேயுடனுங்
கள்ளம்வல்லான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (ரு-எ)

1688 ஆதல்செய்தானரக்கர்தங்கோனையருவரையி
னேதல்செய்தானெடிவரையின்கண்விரலூன்றிப்
பேர்தல்செய்தான்பெண்மகடன்னெடொருபாகங்
காதல்செய்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (ஏ)

1689 இடந்தபெம்மானேனமதாயுமனமாயும்
தொடர்ந்தபெம்மான்றாமதிசூடிவரையார்தம்
மடந்தைபெம்மான்வரர்கழலோச்சிக்காலனைக்
கடந்தபெம்மான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (கூ)

தேயகின்றன் றிரிபுரங்கங்கைசடைமேலே
பாயகின்றன் பலர்புகழ்ந்தேத்தவுலகெல்லாஞ்
சாயகின்றன்வன் சமணர்குண்டர்சாக்கியர்
காயகின்றன்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (கo)

கண்ணுதலான்காதல்செய்கோயில்கழுக்குன்றை
நண்ணியசீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலே
பண்ணியல்பாற்பாடியபத்தமிவைவல்லார்
புண்ணியராய்விண்ணவரோடும்புகுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதகிரீசுவரர், தேவியார்-பெண்ணினல்லாளம்மை.

---

١٥٤ ஸ்ரீபுகலி-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஆடலரவசைத்தானருமாமறைதான்விரித்தான் கொன்றை
சூடியசெஞ்சடையான்சுடுகாடமர்ந்தபிரா
னேடவிழ்மாமலியாளொருபாகமமர்ந்தடியா ரேத்த
வாடியவெம்மிறையூர்புகலிப்பதியாமே. (க)

ஏலமலிகுழலாரிசைபாடியெழுந்தருளாற் சென்று
சோலைமலிசுனையிற்குடைந்தாடித்துதிசெய்ய
வாலமலிபுகைபோயண்டர்வானத்தைமூடிகின்று நல்ல
மாலையதுசெய்யும்புகலிப்பதியாமே. (உ)

ஆறணிசெஞ்சடையானழகார்புரமூன்றுமன்று வேவ
நீறணியாகவைத்தநிமிர்புன்சடையெம்மிறைவன்
பாறணிவெண்டலையிற்பகலேபலியென்றுவந்து நின்ற
வேறணிகோலத்தினுன்விரும்பும்புகலியதே. (ஙு)

வெள்ளமதுசடைமேற்கரந்தான்விரவார்புரங்கண் மூன்றுங்
கொள்ளவெரிமடுத்தான்குறைவின்றியுறைகோயி
லள்ளலிளீனகழனியழகார்விரைத்தாமரைமே லன்னம்
புள்ளினம்வைகியெழும்புகலிப்பதிதானே. (ச)

சூடுமதிச்சடைமேற்சுரும்பார்மலர்க்கொன்றைதுன்ற நட்ட
மாடுமமரர்பிரானழகாருமையோடுமூடன்
வேடுபடநடந்தவிகிர்தன்குணம்பரவித் தொண்டர்
பாடவினிதுறையும்புகலிப்பதியாமே. (ஞ)

மைந்தணிசோலியின்வாய்மதுப்பாய்வரிவண்டினங்கள் வந்து
நந்திசைபாடநடம்பயில்கின்றநம்பனிட

மந்திசெய்மந்திரத்தாலடியார்கள்பரவியெழ விரும்பு
புந்திசெய்நான்மறையோர்புகலிப்பதிதானே. (சு)

1028 மங்கையோர்கூறுகந்தமழுவாளன்வார்சடைமேற் றிங்கள்
கங்கைதனைக்கரந்தகறைக்கண்டன்கருதுமிடஞ்
செங்கயல்வார்கழனிதிகழும்புகலிதனைச் சென்றுத
மங்கையினற்றெழுவாரவலம்மதியாரே. (எ)

1029 வல்லியதுண்ணிடையாளுமையாள்விருப்பனவ ணண்ணு
நல்லிடமென்றியானலியும்விறலரக்கன்
பல்லொடுதோணெரியவிரலூன்றிப்பாடலுமே கைவா
ளொல்லையருள்புரிந்தானுறையும்புகலியதே. (அ)

1030 தாதலர்தாமரைமேலயனுந்திருமாலுந் தேடி
யோதியுங்காண்பரியவுமைகோனுறையுமிடம்
மாதவிவான்வகுளமலர்ந்தெங்கும்விரைதோய வாய்ந்த
போதலர்சோலைகள்சூழ்புகலிப்பதிதானே. (சூ)

1031 வெந்துவர்மேனியினர்விரிகோவணநீத்தார் சொல்லும்
அந்தரஞானமெல்லாமவையோர்பொருளென்னேல்
வந்தெதிரும்புரமூன்றெரித்தானுறைகோயில் வாய்ந்த
புந்தியினர்பயிலும்புகலிப்பதிதானே. (கo)

1032 வேதமோர்கீதமுணர்வாணர்தொழுதேத்தமிகு வாசப்
போதணிப்போன்மறையோர்பயிலும்புகலிதன்னுள்
நாதனைஞானமிகுசம்பந்தன்றமிழ்மாலை நரவி
லோதவல்லாருலகிலுறுநோய்களோவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

105 திருஆரூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1033 பாடலனன்மறையன்படிபட்டகோலத்தன் றிங்கள்
சூடலன்மூவிலையசூலம்வலனேந்திக்
கூடலர்மூவெயிலுமெரியுண்ணக்கூரெரிகொண் டெல்லி
யாடலனுரையனூரமர்ந்தானே. (க)

1034 சோலையில்வண்டினங்கள்சுரும்போடிசைமுரலச் சூழ்ந்த
வாலியின்வெம்புகைபோய்முகிறோயுமாரூரில்
பாலொடுநெய்தயிரும்பயின்றாடும்பரமேட்டி பாதந்
காலையுமாலையும்போய்ப்பணிதல்கருமமே. (உ)

1035 உள்ளமோரிச்சையினுலுகந்தேத்தித்தொழுமின்றொண்டீர் மெய்யே
கள்ளமொழிந்திடுமின்கரவர் திருபொழுதம்

வெள்ளமோர்வார்சடைமேற்கரந்திட்டவெள்ளேற்றுன் மேய
வள்ளலகன்கழனியாரூரடைவோமே. (ஙூ)

வெந்தூறுவெண்மழுவாட்படையான்மணிமிடற்று னரையி
னீன்தலையாடரவமசைத்தானணியாரூர்ப்
பைந்தளிர்க்கொன்றையந்தார்ப்பரமன்னடிபரவப் பாவம்
நைந்தறும்வந்தணையுநாடொறுநல்லனவே. (சு)

வீடுபிறப்பெளிதாமதனினவுதிரேல் வெய்ய
காடிடமாகநின்றுகனலேந்திக்கைவீசி
யாடுமவிர்சடையானவன்மேயவாரூரைச் சென்று
பாடுதல்கைதொழுதல்பணிதல்கருமமே. (டு)

கங்கையோர்வார்சடைமேற்கரந்தான்கிளிமழலைக் கேடில்
மங்கையோர்கூறுடையான்மறையான்மழுவேந்து
மங்கையினனடியேபரவியவன்மேய வாரூர்
தங்கையினுற்றெழுவார்தடுமாற்றறுப்பாரே. (சு)

நீறணிமேனியனுய்நிரம்பாமதிசூடி ணீண்ட
வாறணிவார்சடையானுரினிதமர்ந்தான்
சேறணிமாமலர்மேம்பிரமன்சிரமரிந்த செங்க
ணேறணிவெல்கொடியானவனெம்பெருமானே. (எ-அ)

வல்லியந்தோலுடையான்வளர்திங்கட்கண்ணியினன் வாய்த்த
நல்லியனன்முகத்தோன்றலியின்னறவேற்று
னல்லியங்கோதைதன்னேயாகத்தமர்ந்தருளி யாரூர்ப்
புல்லியபுண்ணியனீனத்தொழுவாரும்புண்ணியரே. (கூ)

செந்துவராடையினருடைவிட்டுநின்றுழல்வார் சொன்ன
வித்திரஞாலமொழிந்தின்புறவேண்டுதிரே
லந்தரமூவெயிலுமரணம்மெரியூட்டி யாரூர்த்
தந்திரமாவுடையானவனெந்தலைமையனே. (கo)

நல்லபுனற்புகலித்தமிழ்ஞானசம்பந்த னல்ல
வல்லிமலர்க்கழனியாரூரமர்ந்தானை
வல்லதோரிசையினுல்வழிபாடிவைப்பதும் வாய்க்கச்
சொல்லுதல்கேட்டல்வல்லார்தன்பந்தமைப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

100 திருஊறல்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1143 மாறிலவுணரரணம்மவைமாயவோர்வெங்கணையா லன்று
நீறெழவெய்தவெங்கணிமலனிடம்வினவிற்
றேறலிரும்பொழிலுந்திகழ்செங்கயல்பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊறலமர்ந்தபிராஞலியார்கழலுள்குதுமே. (க)

1144 மத்தமதக்கரியைமலையான்மகளஞ்சவன்று கையான்
மெத்தவுரித்தவெங்கள்விமலன்விரும்புமிடங்
தொத்தலரும்பொழில்சூழ்வயல்சேர்ந்தொளிர்நீலநாளுந் நயன
மொத்தலருங்கழனித்திருவூறலேயுள்குதுமே. (உ)

1145 ஏனமருப்பினெடுமெழிலாமையும்பூண்டழகார் நன்றுங்
கானமர்மான்மறிக்கைக்கடவுள்கருதுமிடம்
வானமதிதடவும்வளர்சோலைகள்சூழ்ந்தழகார் நம்மை
யூனமறுத்தபிரான்றிருவூறலேயுள்குதுமே. (ங)

1146 கெய்யணிமூவிலைவேனிறைவெண்மழுவும்மனலு மன்று
கையணிகொள்கையினன்கடவுள்ளிடம்வினவின்
மையணிகண்மடவாரவர்தாம்பலர்வந்திறைஞ்சமன்னி நம்மை
யுய்யும்வகைபுரிந்தான்றிருவூறலேயுள்குதுமே. (ச)

1147 எண்டிசையோர்மகிழவெழின்மாலையும்போனகமும் பண்டு
சண்டிதொழவளித்தானவன்றுமிடம்வினவிற்
கொண்டல்கடல்குபொழிற்குளிர்பொய்கைகள்சூழ்ந்து நஞ்சை
யுண்டபிரானமருந்திருவூறலேயுள்குதுமே. (ஞ-சு-ள)

1148 கறுத்தமனத்தினெடுங்கடுங்காலன்வக்தெய்ததனுங் கலங்கி
மறுக்குமாணிக்கருளமகிழ்தானிடம்வினவிற்
செறுத்தெழுவாளரக்கன்சிரந்தோளுமெய்யுந்நெரிய வன்று
ஒறுத்தருள்செய்தபிரான்றிருவூறலேயுள்குதுமே. (அ)

1149 நீரின்மிசைத்துயின்றோனிறைநான்முகனும்மறியா தன்று
தேரும்வகைநிமிர்ந்தானவன்சேருமிடம்வினவிற்
பாரின்மிசையடியார்பலர்வந்திறைஞ்சமகிழ்ந்தாக
மூருமரவசைத்தான்றிருவூறலேயுள்குதுமே. (கூ)

1150 பொன்னியல்சிவரத்தார்புரித்தட்டையர்மோட்டமணர் குண்ட
ரென்னுமிவர்க்கருளாவீசனிடம்வினவிற்
றென்னெனவண்டினங்கள்செறியார்பொழில்சூழ்ந்தழகார் தன்னை
புன்னவினைகெடுப்பான்றிருவூறலேயுள்குதுமே. (கூ0)

கோடலிரும்புறவிற்கொடிமாடக்கொச்சையர்மன் மெச்ச
வோடுபுனல்சடைமேற்கரந்தான்றிருவூறல்
நாடலரும்புகழான்மிகுஞானசம்பந்தன்சொன்ன நல்ல
பாடல்கள்பத்தும்வல்லார்பரலோகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது தக்கோலமென வழங்குகின்றது.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-உமாபதீசுவரர், தேவியார்-உமையம்மை.

---

107 திருக்கொடிமாடச்செங்குன்றூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீறணிந்துவிரிதூறிகழ்மார்பினல்ல
பந்தணவும்விரலாளொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
வந்தணனீத்தொழுவாரவலமறப்பாரே. (க)

அலைமலிதண்புனலோடரவஞ்சடைக்கணிந்தாக
மலைமகள்கூறுடையான்மலையாளிவளாழைக்
குலைமலிதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
தலைமகனீத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (உ)

பாலனநீறுபுனைதிகழ்மார்பிற்பல்வளைக்கை நல்ல
வேலமலர்க்குழலாளொருபாகமமர்ந்தருளிக்
கோலமலர்ப்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் மல்கு
நீலநன்மாமிடற்றண்ணலேத்தநினையே. (ங)

வாருறுகொங்கைநல்லமடவார்திகழ்மார்பிணங்கு
காருறுகொன்றையொடுங்கதகாம்பூண்டருளிச்
சீருறுமந்தணர்வாழ்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
நீருறுசெஞ்சடையான்கழலேத்தநினையே. (ச)

பொன்றிகழ்மாமையொடுபுரிதூறிகழ்மார்பினல்ல
பன்றியின்கொம்பணிந்துபவளத்தோளியோர்பாகமாகக்
குன்றனமாளிகைசூழ்கொடிமாடச்செங்குன்றூர் வானின்
மின்றிகழ்செஞ்சடையான்கழலேத்தன்மெய்ப்பொருளே. (ஞ)

ஏங்கியமூவிலைநற்சூலமொருகையன் சென்னி
தாங்கியகங்கையொடுமதியஞ்சடைக்கணிந்து
கோங்கணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் வாய்ந்த
பாங்கனதாடொழுவார்வினையாயபற்றறுமே. (ஈ)

1098 நீடலர்கொன்றையொடுநிமிர்புன்சடைதாழ வெள்ளை
வாடலுடைதலையிற்பலிகொள்ளும்வாழ்க்கையனுய்க்
கோடல்வளம்புறவிற்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
சேடனதாள்தொழுவார்வினையாயதேயுமே. (எ)

1099 மத்தநன்மாமலரும்மதியும்வளர்கொன்றையுடன் முன்று
தொத்தலர்செஞ்சடைமேற்றுதையவுடன்சூடிக்
கொத்தலர்தண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் மேய
தத்துவனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (அ)

1100 செம்பொனின்மேனியனும்பிரமன்றிருமாலுக்தேட நின்ற
வம்பவளத்திரள்போலொளியாயவாதிபிரான்
கொம்பணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் மேய
நம்பனதாடொழுவார்வினையாயநாசமே. (கூ)

1101 போதியர்பிண்டியரென்றிவர்கள்புறங்கூறும் பொய்ந்நூ
லோதியகட்டுரைகேட்டுழல்வீர்வரிக்குயில்கள்
கோதியதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
வேதியனைத்தொழுதும்வினையானவீடுமே. (கo)

1102 அலைமலிதண்புனல்சூழ்தழகார்புகலிந்கர் பேணுந்
தலைமகனுகிநின்றதமிழ்ஞானசம்பந்தன்
கொலைமலிமூவிலையான்கொடிமாடச்செங்குன்றூ ரேத்து
நலமலிபாடல்வல்லார்வினையானநாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது திருச்செங்கோடு என வழங்குகின்றது.

சுவாமிபெயர்-அர்த்தநாரீசுவரர், தேவியார்-அர்த்தநாரீசுவரி.

ஆ பதிகம்-கoஎ.

---

108 திருப்பாதாளீச்சரம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்:

1103 மின்னியல்செஞ்சடைமேல்விளங்கும்மதிமத்தமொடு நல்ல
பொன்னியல்கொன்றையினுன்புனல்சூடிப்பொற்பமரு
மன்னமனநடையாளொருபாகத்தமர்ந்தருளி நாளும்
பன்னியபாடலினுறைகோயில்பாதாளே. (க)

1104 நீடலர்கொன்றையொடுநிரம்பாமதிசூடி வெள்ளைத்
தோடமர்காதினல்லகுழையான்சுடுநீற்று
டரவம்பெருகவனலேந்திக்கைவீசி வேதம்
பாடலினலினியாளுறைகோயில்பாதாளே. (உ)

நாகமும்வான்மதியுநலமல்குசெஞ்சடையான் சாமம்
போகநல்வில்வரையாற்புரமூன்றெரித்துகந்தான்
றேகைகன்மாமயில்போல்வளர்சாயற்றாமொழியைக் கூடப்
பாகமும்வைத்துகந்தானுறைகோயில்பாதாளே. (ங)

அங்கமுநான்மறையுமருள்செய்தழகார்ந்த வஞ்சொன்
மங்கையோர்கூறுடையான்மறையோனுறைகோயில்
செங்கயனின்முகளுஞ்செறுவிற்றிகழ்கின்ற சோதிப்
பங்கயநின்றலரும்வயல்சூழ்ந்தபாதாளே. (ச)

பேய்பலவுந்நிலவப்பெருங்காடரங்காகவுன்னி நின்று
தியொடுமான்மறியுமழுவுந்திகழ்வித்துத்
தேய்பிறையும்மரவுஞ்சொலிகொன்றைச்சடைதன்மேற் சேரப்
பாய்புனலும்முடையானுறைகோயில்பாதாளே. (ஞ)

கண்ணமர்நெற்றியினுங்கமழ்கொன்றைச்சடைதன்மே னின்றும்
விண்ணியன்மாமதியுமுடன்வைத்தவன்விரும்பும்
பெண்ணமர்மேனியினுன்பெருங்காடரங்காக வாடும்
பண்ணியல்பாடலினுறைகோயில்பாதாளே. (சு)

விண்டலர்மத்தமொடுமிளிரும்மிளகாகம்வன்னி திகழ்
வண்டலர்கொன்றைகுமதிபுல்குவார்சடையான்
விண்டலர்தம்புரமூன்றெரிசெய்தரைவேதநான்கு மவை
பண்டிசைபாடலினுறைகோயில்பாதாளே. (எ)

மல்கியதண்ணிடையாளுமைங்கைமறுகவன் முகையாற்
றெல்லைமலையெடுத்தவரக்கன்றலைதோணெரித்தான்
கொல்லைவிடையுகந்தான்குளிர்திங்கள்சடைக்க ணிக்தோனலி
பல்லிசைபாடலினுறைகோயில்பாதாளே. (அ)

தாமரைமேலயனுமரியுந்தமதாள்வீழ்யாற் றேடிக்
காமனைவீடுவித்தான்கழல்காண்பிலராயகன்றூர்
பூமருவுங்குழலாளுமைங்கைபொருந்தியிட்ட நல்ல
பாமருவுங்குணத்தானுறைகோயில்பாதாளே. (கூ)

காலையிலுண்பவருஞ்சமண்கையருங்கட்டுரை விட்டன்
ஞ்லவிடந்தகர்ந்தானவன்றன்னடியேபரவி
மாலையில்வண்டினங்கண்மதுவுண்டிசைமுரல வாய்த்த
பாலையாழ்ப்பாட்டுகந்தானுறைகோயில்பாதாளே. (கo)

பன்மலர்வைகுபொழில்புடைசூழ்ந்தபாதாளேச் சேரப்
பொன்னியன்மாடமல்குபுகலிக்கர்மன்னன்
றன்னெளிமிக்குயர்ந்ததமிழ்ஞானசம்பந்தன் சொன்ன
வின்னிசைபத்தும்வல்லாரெழில்வானத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

109 திருச்சிரபுரம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாருறுவனமுலைமங்கைபங்க, னீருறுசடைமுடிநிமலனிடங்
காருறுகடிபொழில்சூழ்ந்தழகார், சீருறுவளவயற்சிரபுரமே. (க)

அங்கமொடருமறையருள்புரிந்தான், றிங்களொடரவணிதிகழ்முடியன்
மங்கையொடினிதுறைவளருகரஞ், செங்கயன்மிளிர்வயற்சிரபுரமே. (உ)

பரிந்தவன்பன்முடியமரர்க்காகித், திரிந்தவர்புரமவைதீயின்வேவ
வரிந்தவெஞ்சிலைபிடித்ததிசரத்தைத், தெரிந்தவன்வளருகர்சிரபுரமே. (ங)

நீறணிமேனியனீண்மதியோ, டாறணிசடையினனணியிழையோர்
கூறணிந்தினிதுறைகுளிர்நகரஞ், சேறணிவளவயற்சிரபுரமே. (ச)

அருந்திறலவுணர்களரணழியச், சரந்துரந்தெரிசெய்தசங்கரனூர்
குருந்தொடுகொடிவிடுமாதவிக, டிருந்தியபுறவணிசிரபுரமே. (ஞ)

கலையவன்மறையவன்காற்றெடுதீ, மலையவன்விண்ணெடுமண்ணுமவன்
கொலையவன்கொடிமதில்கூட்டழித்த, சிலையவன்வளருகர்சிரபுரமே. (சு)

வானமர்மதியொடுமத்தஞ்சூடித், தானவர்புரமெய்தசைவனிடங்
கானமர்மடமயில்பெடைபயிலுந், தேனமர்பொழிலணிசிரபுரமே. (எ)

மறுத்தவர்திரிபுரமாய்ந்தழியக், கறுத்தவன்காரரக்கன்முடிதோ
ளிறுத்தவனிருஞ்சினக்காலணமுன், செறுத்தவன்வளருகர்சிரபுரமே. (அ)

வண்ணநன்மலருறைமறையவனுங், கண்ணனுங்கழுறெழுக்கனவுருவாய்
விண்ணுறவோங்கியவிமலனிடங், திண்ணநன்மதிலணிசிரபுரமே. (கூ)

வெற்றரையுழல்பவர்விரிதுகிலார், கற்றிரைதவுரைபுறனுரைக்கப்
பற்றலர்திரிபுரமூன்றுமம்வேவச், செற்றவன்வளருகர்சிரபுரமே. (கo)

அருமறைஞானசம்பந்தனந்தண், சிரபுரநகருறைசிவனடியைப்
பரவியசெந்தமிழ்பத்துமம்வல்லார், திருவொடுபுகழ்மல்குதேசினரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

110 திருவிடைமருதூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1485 மருத்தவன்வானவர்தானவர்க்கும்
பெருத்தகைபிறவினெடிதவுமாஞ்
னருத்தவமுனிவரொடானினிழற்கீ
ழிருத்தவன்வளருகரிடைமருதே. (க)

1486 தோற்றவன்கேடவன் றுணைமுலையாள்
கூற்றவன்கொல்புலித்தோலசைத்த
நீற்றவனிறைபுனனீள்சடைமே
லேற்றவன்வளநகரிடைமருதே. (உ)

1487 படையுடைமழுவினன் பால்வெண்ணீற்ற
னடைகவிலேற்றினன்ஞாலமெல்லா
முடைதலையிடுபலிகொண்டுழல்வா
னிடைமருதினிதுறையெம்மிறையே. (ஊ)

1488 பணைமுலையுமையொருபங்கனெனன்னர்
தணைமதிண்மூன்றையுஞ்சுடரின்மூழ்கக்
கணைதுரந்தடுதிறற்காலற்செற்ற
விணையிலிவளநகரிடைமருதே. (எ)

1489 பொழிலவன்புயலவன்புயலியக்குந்
தொழிலவன்றுயரவன்றுயரகற்றுங்
கழலவன்கரியுரிபோர்த்துகந்த
வெழிலவன்வளநகரிடைமருதே. (ஏ)

1490 நிறையவன்புனலொடுமதியும்வைத்த
பொறையவன்புகழவன்புகழுநின்ற
மறையவன்மறிகடனஞ்சையுண்ட
விறையவன்வளநகரிடைமருதே. (ஐ)

1491 நனிவளர்மதியொடுநாகம்வைத்த
பனிமலர்க்கொன்றையம்படர்சடையன்
முனிவரொடமரர்கண்முறைவணங்க
வினிதுறைவளநகரிடைமருதே. (ஒ)

1492 தருக்கினவரக்கனதாளுந்தோளு
நெரித்தவனெடுங்கைமாமதகரியன்
றுரித்தவனெனன்னலர்புரங்கண்மூன்று
மெரித்தவன்வளநகரிடைமருதே. (ஓ)

1493 பெரியவன்பெண்ணினெடாணுமானன்
வரியரவணிமறிகடற்றுயின்ற
கரியவனலரவன்காண்பரிய
வெரியவன்வளநகரிடைமருதே. (ஔ)

1494 ஒக்கையில்சமணுடுதேரர்சொன்ன
புக்கியுரையவைபொருள்கொளாதே
யந்தணர் * ஒத்தினோடரவமோவ
வெந்தைதன்வளநகரிடைமருதே. (கஅ)

* ஒத்து என்பது வேதம்.

195 இலைமலிபொழிலிடைமருதிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
பலமிகுதமிழிவைபத்தும்வல்லா
ருலகுறுபுகழினெடோங்குவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

111 திருக்கடைமுடி-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அருத்தனீயறவனீயமுதனீநீர், விருத்தனீப்பாலனீவினவுதிரே
லொருத்தனீயல்லதிங்குலகமேத்தும், கருத்தவன்வளநகர்கடைமுடியே. (க)

திரைபொருதிருமுடிதிங்கள்விம்மு, மரைபொருபுலியதளடிகளிடந்
திரையொடுதரைபொருதெண்சுனீர், கரைபொருவளநகர்கடைமுடியே. (உ)

ஆலிளமதியிளைரவுகங்கை, கோலவெண்ணீற்றனீத்தொழுதிறைஞ்சி
யேலகன்மலரொடுவிரைகமழும், காலனவளநகர்கடைமுடியே. (ங)

கொய்யணிநறுமலர்க்கொன்றையன்தார், மையணிமிடறுடைமறையவனூர்
பையணியரவொடுமான்மழுவாட், கையணிபவனிடங்கடைமுடியே. (ச)

மறையவனுலகவன்மாயமவன், பிறையவன்புனலவனனலுமவ
னிறையவனெனவுலகேத்துங்கண்டம், கறையவன்வளநகர்கடைமுடியே. (ஞ)

படவரவேரல்குற்பல்வளைக்கை, மடவரலாளையொர்பாகம்வைத்தக்
குடதிசைமதியதுசூடுசென்னிக், கடவுடன்வளநகர்கடைமுடியே. (சு)

பொடிபுல்குமார்பினிற்புரிபுல்குநூல், லடிபுல்குபைங்கழலடிகளிடங்
கொடிபுல்குமலரொடுகுளிர்சுனீர், கடிபுல்குவளநகர்கடைமுடியே. (எ)

நோதல்செய்தரக்கனீநோக்கழியச், சாதல்செய்தவனடிசரணெனலு
மாதரவருள்செய்தவடிகளவர், காதல்செய்வளநகர்கடைமுடியே. (அ)

அடிமுடிகாண்கிலரோரிருவர், புடைபுல்கியருளென்றுபோற்றிசைப்பச்
சடையிடைப்புனல்வைத்தசதுரனிடங், கடைமுடியதனயல்காவிரியே. (கூ)

மண்ணுதல்பறித்தலுமாயமிவை, பெண்ணியகாலவையின்பமல்ல
வொண்ணுதலுமையையொர்பாகம்வைத்த, கண்ணுதல்வளநகர்கடைமுடியே.

பொன்றிகழ்காவிரிப்பொருபுனல்சீர், சென்றடைகடைமுடிச்சிவனடியை
நன்றுணர்ஞானசம்பந்தன்சொன்ன, வின்றமிழிவைசொலவின்பமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கடைமுடிமீசுவரர், தேவியார்-அபிராமியம்பிகை.

---

112 திருச்சிவபுரம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1 இன்குரலிசைகெழும்யாழ்முரலத்
தன்கரமருவியசதுரனகர்
பொன்கரையொருபழங்காவிரியின்
றென்கரைமருவியசிவபுரமே. (க)

2 அன்றடற்காலனைப்பாலனுக்காய்ப்
பொன்றிடவுதைசெய்தபுனிதனகர்
வென்றிகொளெயிற்றுவெண்பன்றிமுன்னட்
சென்றடிவீழ்தருசிவபுரமே. (உ)

3 மலைமகண்மறுகிடமதகரியைக்
கொலைமல்கவுரிசெய்தகுழகனக
ரலைமல்கும் * அரிசிலினதனயலே
சிலைமல்குமதிளணிசிவபுரமே. (ங)

4 மண்புனலனலொடுமாருதமும்
விண்புணருவியவிகிர்தனகர்
பண்புணருரல்வழிவண்டுகிண்டிச்
செண்பகமலர்பொழிற்சிவபுரமே. (ச)

5 வீறுநன்குடையவண்மேனிபாகங்
கூறுநன்குடையவன்குளிர்நகர்தா
ணுறுநன்குரலிரிவண்டுகிண்டித்
தேறலுண்டெழுதருசிவபுரமே. (ஞ)

6 மாறெதிர்வருதிரிபுரமெரித்து
நீறதுவாக்கியநிமலனகர்
நாறுடைநடுபவருழவரொடுஞ்
சேறுடைவயலணிசிவபுரமே. (சு)

7 ஆவிலைந்தமர்ந்தவனரிவையொடு
மேவிநன்னிருந்ததொர்வியனகர்தான்
பூவில்வண்டமர்தருபொய்கையன்னச்
சேவறன்பெடைபுல்குசிவபுரமே. (எ)

8 எழின்மலையெடுத்தவல்லிராவணன்றன்
முழுவலியடக்கியமுதல்வனகர்
விழுவினிலெடுத்தவெண்கொடிமிடைந்து
செழுமுகிலிடுக்கும்வண்சிவபுரமே. (அ)

* அரிசில் என்பது ஒருநதி.

1095 சங்களவியகையன்சதுர்முகனு
மங்களவறிவரியவனகர்தான்
கங்குலும்பறவைகள்சுமுகுதொழுஞ்
செங்கனிநகர்தருசிவபுரமே. (கூ)

1096 மண்டையிற்குண்டிகைமாசுதரு
மிண்டரைவிலக்கியவிமலனகர்
பண்டமர்தருபழங்காவிரியின்
றெண்டிரைபொருதெழுசிவபுரமே. (கo)

1097 சிவனுறைதருசிவபுரநகரைக்
கவுணியர்குலபதிகாழியர்கோன்
றவமல்குதமிழிவைசொல்லவல்லார்
நவமொடுசிவகதிநண்ணுவரே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

---

113 திருவல்லம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1098 எரித்தவன்மும்புரமெரியின்மூழ்கத்
தரித்தவன்கங்கையைத்தாழ்சடைமேல்
விரித்தவன்வேதங்கள்வேறுவேறு
தெரித்தவனுறைவிடந்திருவல்லமே. (க)

1099 தாயவனுலகுக்குத்தன்னெப்பிலாத்
தூயவன்மாமதிசூடியெல்லா
மாயவனமரர்க்குமுனிவர்கட்குஞ்
சேயவனுறைவிடந்திருவல்லமே. (உ)

1100 பார்த்தவன்காமனீப்பண்பழியப்
போர்த்தவன்போதகத்தின்னுரிவை
யார்த்தவனுன்முகன்றலையையன்று
சேர்த்தவனுறைவிடந்திருவல்லமே. (கூ)

1101 கொய்தவம்மலரடிகூடுவார்தம்
மைதவழ்திருமகள்வணங்கவைத்துப்
பெய்தவன்பெருமழைபுலகமுய்யச்
செய்தவனுறைவிடந்திருவல்லமே. (ச)

1102 சார்ந்தவர்க்கின்பங்கடழைக்கும்வண்ணம்
நேர்ந்தவனேரிழையோடுங்கூடித்
தேர்ந்தவர்தேடுவார்தேடச்செய்தே
சேர்ந்தவனுறைவிடந்திருவல்லமே. (ஞ)

1223 பதைத்தெழுகாலனைப்பாதமொன்று
ஓதைத்தெழுமாமுனிக்குண்மைகின்று
விதிர்த்தெழுதக்கன்றன்வேள்வியன்று
சிதைத்தவனுறைவிடந்திருவல்லமே. (சு-எ)

1224 இகழ்ந்தருவரையினையெடுக்கலுற்றுங்
ககழ்ந்தவல்லரக்கனையடர்த்தபாதம்
நிகழ்ந்தவர்நேடுவார்நேடச்செய்தே
திகழ்ந்தவனுறைவிடந்திருவல்லமே. (அ)

1225 பெரியவன்சிறியவர்சிந்தைசெய்ய
வரியவனருமறையங்கமானைன்
கரியவனொன்முகன்காணவொண்ணத்
தெரியவன்வளநகர்திருவல்லமே. (கூ)

1226 அன்றியவமணர்கள்சாக்கியர்கள்
குன்றியவறவுரைகூருவண்ணம்
வென்றவன்புலனைந்தும்விளங்கவெங்குஞ்
சென்றவனுறைவிடந்திருவல்லமே. (கo)

1227 சுற்றவர்திருவல்லங்கண்டுசென்று
நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
குற்றமில்செந்தமிழ்கூறவல்லார்
பற்றுவரீசன்பொற்பாதங்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வல்லநாதர், தேவியார்-வல்லாம்பிகையம்மை.

---

114 திருமாற்பேறு-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1228 குருந்தவன்குருகவன்கூர்மையுவன்
பெருந்தகைபெண்ணவனுணவன்
கருந்தடமலர்க்கண்ணிகாதல்செய்யும்
மருந்தவன்வளநகர்மாற்பேறே. (க)

1229 பாறணிவெண்டலைகையிலேந்தி
வேறணிபலிகொளும்வேட்கையனுய்
நீறணிந்துமையொருபாகம்வைத்த
மாறிலிவளநகர்மாற்பேறே. (உ)

1189 கருவுடையாருலகங்கள்வேவச்
செருவிடையேறியுஞ்சென்றுநின்
றுருவுடையாளுமையாளுந்தானும்
மருவியவளநகர்மாற்பேறே. (கூ)

1190 தலையவன்றலையணிமாலைபூண்டு
கொலைநவில்கூற்றினைக்கொன்றுகந்தான்
கலைநவின்றுன்கயிலாயமென்னும்
மலையவன்வளநகர்மாற்பேறே. (சு)

1191 துறையவன்றொழிலவன்றொல்லையிர்க்கும்
பிறையணிசடைமுடிப்பெண்ணொர்பாகன்
கறையணிமிடற்றண்ணல்காலற்செற்ற
மறையவன்வளநகர்மாற்பேறே. (ஙு)

1192 பெண்ணினல்லாளோர்பாகம்வைத்துக்
கண்ணினூற்காமனைக்காய்ந்தவன்றன்
விண்ணவர்தானவர்முனிவரொடு
மண்ணவர்வணங்குநன்மாற்பேறே. (சுஎ)

1193 தீதிலாமலியெடுத்தவ்வரக்க
னீதியல்வேதநீதங்கள்பாட
வாதியாலுகியவண்ணலெங்கண்
மாதிதன்வளநகர்மாற்பேறே. (அ)

1194 செய்யதண்டாமரைக்கண்ணனெடுங்
கொய்யணிநறுமலர்மேலயனு
மையனன்சேவடியதனையுள்க
மையல்செய்வளநகர்மாற்பேறே. (கூ)

1195 குளித்துணவமணர்குண்டாக்கரென்றுங்
களித்துநன்கழலடிகாணலுற்றூர்
மூளைத்தவெண்மதியினொடரவஞ்சென்னி
வளைத்தவன்வளநகர்மாற்பேறே. (கo)

1196 அந்தமின்ஞானசம்பந்தனல்ல
செந்திசைபாடல்செய்மாற்பேற்றைச்
சந்தமின்றமிழ்கள்கொண்டேத்தவல்லா
ரெந்தைதன்கழலடியெய்துவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

115 திரு இராமனதீச்சரம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1236 சங்கொளிர்முன்கையர்தம்மிடையே
யங்கிடபலிகொளுமவன்கோபப்
பொங்கரவாடலோன்புவனியோங்க
வெங்குமனிராமனதீச்சரமே. (க)

1237 சந்தனமலரணிதாழ்சடையன்
றந்தமதத்தவன்முதையோதான்
னந்தமில்பாடலோனழகனல்ல
வெந்தவனிராமனதீச்சரமே. (உ)

1238 தழைமயிலேறவன்முதையோதான்
மழைபொழிசடையவன்மன்னுகாதிற்
குழையதுலிலங்கியகோலமார்பி
னிழையவனிராமனதீச்சரமே. (ரு)

1239 சத்தியுளாதியோர்தையல்பங்கன்
முத்தியதாகியமூர்த்தியோதா
னத்தியகையினிலழகுசூலம்
வைத்தவனிராமனதீச்சரமே. (ச)

1240 தாழ்ந்தகுழற்சடைமுடியதன்மேற்
றோய்ந்தவிளம்பிறைதுளங்குசென்னிப்
பாய்ந்தகங்கையொடுபடவரவ
மேய்ந்தவனிராமனதீச்சரமே. (நி)

1241 சரிகுழலிலங்கியதையல்காணும்
பெரியவன்காளிதன்பெரியகூத்தை
யரியவனுடலோனங்கையேந்து
மெரியவனிராமனதீச்சரமே. (கூ)

1242 மாறிலாமாதொருபங்கன்மேனி
நீறதுவாடலோனீள்சடைமே
லாறதுசூடுவானழகன்விடை
யேறவனிராமனதீச்சரமே. (எ)

1243 தடவரையரக்கனீடத்தலைகெரித்தோன்
படவரவாட்டியபடர்சடைய
னடமதுவாடலானன்மறைக்கு
மிடமவனிராமனதீச்சரமே. (அ)

1224 தன மணிதையறன் பாகன் றன்னீ
யன மணியயனணிமுடியுங்காணன்
பன மணிவரவரி பாதங்காணு
னின மணியிராமனதீச்சரமே. (கூ)

1225 தறிபோலாஞ்சமணர்சாக்கியர்சொற்கொளே
லறிவோராஞமமறிந்துரைமின்
மறிகையோன்றன்முடிமணியரக்கங்கை
யெறிபவனிராமனதீச்சரமே. (கo)

1226 தேன்மலர்க்கொன்றையோன்
முந்தமக்கூனமன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சிதலமானபதிகங்களிலொன்று.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-இராமநாதேசுவரர், தேவியார்-சரிவார்குழலியம்மை.

---

116 திரு நீலகண்டம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1227 அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீ
ருய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறுதிருநீலகண்டம். (க)

1228 காவினையிட்டுங்குளம்பலதொட்டுங்கனிமனத்தா
லேவினையாலெயின்மூன்றெரித்திரென்றிருபொழுதும்
பூவினைக்கொய்துமலரடிபோற்றுதுநாமடியோம்
தீவினைவந்தெமைத்தீண்டப்பெறுதிருநீலகண்டம். (உ)

1229 முலைத்தடமுழ்கியபோகங்களுமற்றெவையுமெல்லாம்
விலைத்தலையாவணங்கொண்டெமையாண்டவிரிசடையீ
ரிலைத்தலைச்சூலமுந்தண்டுமழுவுமிவையுடையீர்
சிலைத்தெமைத்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ங)

1230 விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரே
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோந்
திண்ணியதீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ச)

1231 மற்றிணையில்லாமலைதிரண்டன்னதிண்டோளுடையீர்
கிற்றெமையாட்கொண்டுகேளாதொழிவதுந்தன்மைகொல்லோ

சொற்றுணைவாழ்க்கைதுறந்துன்திருவடியேயடைந்தோம்
செற்றெமைத்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ஞ்)

மறக்குமனத்தினைமாற்றியெம்மாவியைவற்புறுத்திப் 1254
பிறப்பில்பெருமான்றிருத்தடிக்கீழ்ப்பிழையாதவண்ணம்
பறித்தமலர்கொடுவந்துமையேத்தும்பணிபடியோம்
சிறப்பிலித்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (சு-எ)

கருவைக்கழித்திட்டுவாழ்க்கைகடிந்துங்கழலடிக்கே 1255
யுருகிமலர்கொடுவந்துமையேத்துதுமாடியோம்
செருவிலரக்கனைச்சீரிலடர்த்தருள்செய்தவரே
திருவிலித்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (அ)

நாற்றமலர்பிசைநான்முகனுரணன்வாதுசெய்து 1256
தோற்றமுடையவடியுமுடியுந்தொடர்வரியீர்
தோற்றினுந்தோற்றுந்தொழுதுவணங்குதுமாடியோம்
சிற்றமதாம்வினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (கூ)

சாக்கியப்பட்டுஞ்சமணுருவாகியுடையொழிந்தும் 1254
பாக்கியமின்றியிருதலைப்போகமும்பற்றும்விட்டார்
பூக்கமழ்கொன்றைப்புரிசடையீரடிபோற்றுகின்றேம்
தீக்குழித்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (கo)

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவா 1258
னிறந்தபிறவியுண்டாகிலிமையவர்கோனடிக்கட்
டிறம்பயின்ஞானசம்பந்தனசெந்தமிழ்பத்தும்வல்லார்
நிறைந்தவுலகினில்வானவர்கோனுடங்கூடுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது திருக்கொடிமாடச் செங்குன்றூரில் அடியார்களுக்குக்கண்ட சுரப்பிணிநீங்க வோதியருளியது.

---

117 திருப்பிரமபுரம்–மொழிமாற்று–பண்–வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம். 1259

காடதணிகலங்காரரவம்பதிகாலனைற்
றோடதணிகுவர்சுந்தரக்காதினிற்றாச்சிலம்பர்
வேடதணிவர்விசயற்குருவம்வில்லுங்கொடுப்பர்
பீடதணிமணிமாடப்பிரமபுரத்தாரே. (க)

கற்றைச்சடையதகங்கணமுன்கையிற்றிங்கள்கங்கை 1259
பற்றித்தருமப்புரம்பார்படைத்தோன்றலீசுட்டதுபண்
டெற்றித்துப்பாம்பையணிந்ததகூற்றையெழில்விளங்கும்
வெற்றிச்சிலம்பதில்வேணுபுரத்தெங்கள்வேதியரே. (உ)

கூவிளங்கையதுபேரிசடைமுடிக்கூட்டக்கத
தூவிளங்கும்பொடிப்பூண்டதுபூசிற்றுத்தித்திகாக
மேவிளங்குந்தலாரீயும்பாகமுரித்தனரின்
பூவிளஞ்சோலைப்புகலியுண்மேவியபுண்ணியரே. (கூ)

உரித்ததுபாம்பையுடன்பிசையிட்டதோரொண்களிற்றை
யெரித்ததொராமையையின்புறப்பூண்டதுமுப்புரத்தைச்
செருத்ததுசூலத்தையேந்திற்றுத்தக்கணவேள்விபன்னூல்
விரித்தவர்வாழ்தருவெங்குருவில்வீற்றிருந்தவரே. (சு)

கொட்டுவரக்கரையார்ப்பதுதக்கைகுறுந்தாளன
விட்டுவர்பூதங்கலப்பிலரின்புகழென்புலவின்
மட்டுவருந்தழல்சூடுவர்மத்தமுமேந்துவர்வான்
றொட்டுவருங்கொடித்தோணிபுரத்துறைசுந்தரரே. (நு)

சாத்துவர்பாசந்தடக்கையிலேந்துவர்கோவணந்தங்
கூத்தவர்கச்சக்குலவிகின்றுடுவர்கொக்கிறகும்
பேர்த்தவர்பல்படைபேயவைசூடுவர்பேரெழிலார்
பூத்தவர்கைதொழுபூந்தராய்மேவியபுண்ணியரே. (சூ)

காலதகங்கைகற்றைச்சடையுள்ளாற்கழல்சிலம்பு
மாலதுவேந்தன்மழுவதுபாகம்வளர்கொழுங்கோட்
டாலதுவூர்வரட்லேற்றிருப்பரணிமணிநீர்ச்
சேலதுகண்ணியொர்பங்கர்சிரபுரமேயவரே. (எ)

நெருப்புருவெள்விடைமேனியரேறுவர்நெற்றியின்கண்
மருப்புறுவன்கண்ணர்தாதையைக்காட்டுவர்மாமுருகன்
விருப்புறுபாம்புக்குமெய்த்தந்தையார்விறன்மாதவர்வாழ்
பொருப்புறுமாளிகைத்தென்புறவத்தணிபுண்ணியரே. (அ)

இலங்கைத்தலைவனீயேந்திற்றித்தகீலியின்ஞட்
கலங்கியகூற்றுயிர்பெற்றதுமாணிகுமைபெற்றது
கலங்கிளர்மொந்தையினுடுவர்கொட்டுவர்காட்டகத்துச்
சலங்கிளர்வாழ்வயற்சண்பையுண்மேவியதத்துவரே. (கூ)

அடியினைகண்டிலன்றுமரையோன்மான்முடிகண்டிலன்
கொடியணியும்புலியேறுகந்தேறுவர்தோலுடுப்பர்
பிடிபணியுந்தடையாள்வெற்பிருப்பதோர்கூடையர்
கடியணியும்பொழிற்காழியுண்மேயகறைக்கண்டரே. (கஅ)

கையதுவெண்குழைகாதசூலமமணர்புத்த
ரெய்துவர்தம்மையடியவரெய்தாரோரேனக்கொம்பு
மெய்திகழ்கோவணம்பூண்பதுடுப்பதுமேதகைய
கொய்தலர்பூம்பொழிற்கொச்சையுண்மேவியகொற்றவரே. (கக)

1249

கல்லுயர்கமுமலவிஞ்சியுண்மேவியகடவுடன்னி
நல்லுரைஞானசம்பந்தன்ஞாநத்தமிழ்நன்குணரச்
சொல்லிடல்கேட்டல்வல்லோர்தொல்லைவானவர்தங்களொடுஞ்
செல்குவர்சீரருளாற்பெறலாஞ்சிவலோகமேத. (கூ)

திருச்சிற்றம்பலம்.

---

116 திருப்பருப்பதம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

1241

சுடுமணியுமிழ்நாகஞ்சூழ்தரவரைக்கசைத்தா
னிடுமணியெழிலானையேறலனெருதேறி
விடமணிமிடறுடையான்மேவியநெடுங்கோட்டுப்
படுமணிவிடுசுடரார்பருப்பதம்பரவுதுமே. (க)

1242

நோய்புல்குதோறிரையநரைவருதுகருடம்பி
னீபுல்குதோற்றமெல்லாநினையுள்குமடநெஞ்சே
வாய்புல்குதோத்திரத்தால்வலஞ்செய்துதலைவணங்கிப்
பாய்புலித்தோலுடையான்பருப்பதம்பரவுதுமே. (உ)

1243

தனியுறுதயர்தீரத்தோன்றியோர்நல்வினையா
லினியுறுபயனதலிரண்டுறமனம்வையேல்
கனியுறுமாமரமேறிக்கருமுசக்கழையுகளும்
பனியுறுகதிர்மதியான்பருப்பதம்பரவுதுமே. (ங)

1244

கொங்கணிகுழற்கொன்றைத்தொங்கலன்குளிர்சடையா
னெங்ஙணேயுகலின்றுனெனவருளீசனிட
மெங்கணேவரிசிலையானங்கணியழகழித்த
பைங்கண்வெள்ளேறுடையான்பருப்பதம்பரவுதுமே. (ச)

1245

தூறைபலசுனைமூழ்கித்தூமலர்சுமந்தேறி
மாறையொலிவாய்மொழியால்வானவர்மகிழ்ந்தேத்தச்
சிறையொலிகிளிபயிலுந்தேனினமொலியோவாப்
பாறைபடுவிளங்கருவிப்பருப்பதம்பரவுதுமே. (ஙு)

1246

சுவாமிபெயர்-நவநீதநாதர், தேவியார்-வேனெடுங்கண்ணியம்மை.

45 திருமழபாடி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கனையும்வல்வினையஞ்சனெஞ்சேகருதார்புர
மூனையும்பூசல்செய்தானயர்மால்வரைநல்லிலா
வனையவெஞ்சரம்வாங்கியெய்தான்மதத்தம்பிவண்
டனையுங்கொன்றையன்தார்மழபாடியுள்ளண்ணலே. (க)

காச்சிலாதபொன்னெக்குங்கனவயிரத்திர
ளாச்சிலாதபளிங்கினனஞ்சுமுடியுடை
பேச்சினலுமக்காவதென்பேதைகாள்பேணுமின்
வாச்சமாலிகைசூழ்ழமழபாடியைவாழ்த்துமே. (உ)

உரங்கெடுப்பவனும்பர்களாயவர்தங்களைப்
பரங்கெடுப்பவனஞ்சையுண்டுபகலோன்றனை
முரண்கெடுப்பவன்மூப்புரந்தீயெழச்சென்றமுன்
வரங்கொடுப்பவன்மாமழபாடியுள்வள்ளலே. (ங)

பள்ளமார்சடையிற்புடையேயடையப்புனல்
வெள்ளமாதரித்தான்விடையேறியவேதியன்
வள்ளன்மாமழபாடியுண்மேயமருந்தினை
யுள்ளமாதரிபின்வினையாயினவோயவே. (ச)

தேனுலாமலர்கொண்டுமெய்த்தேவர்கள்சித்தர்கள்
பானெயஞ்சுடனுட்டமுன்னடியபால்வணன்
வானகாடர்கள்கைதொழுமாமழபாடியெய்
கோனைநாடொறுங்கும்பிடவேகுறிகூடுமே. (ஞ)

தெரிந்தவன்புரமூன்றுடன்மாட்டியசேவகன்
பரிந்துகைதொழுவாரவர்தம்மனம்பாவினன்
வரிந்தவெஞ்சிலையொன்றுடையான்மழபாடியைப்
புரிந்துகைதொழுமின்வினையாயினபோகுமே. (ட)

கந்தவார்குழலாளுமைதன்னெருகூறுடை
யெந்தையானிமையாதமுக்கண்ணினெம்பிரான்

மைந்தன்வார்பொழில்சூழ்மழபாடிமருந்தினைச்
சிந்தியாவெழுவார்வினையாயினதேயுமே. (எ)

இரக்கமொன்றுமிலானிறையான்றிருமாமலை
யுரக்கையாலெடுத்தான்றனதொண்முடிபத்திற
விரற்றலைந்நிறுவியுமையாளொடுமேயவன்
வரத்தைதையேகொடுக்கும்மழபாடியுள்வள்ளலே. (அ)

ஆலமுண்டமுதம்மமரர்க்கருளண்ணலார்
காலனுருயிர்வீட்டியமாமணிகண்டனார்
சாலநல்லடியார்தவத்தார்களுஞ்சார்விட
மாலயன்வணங்கும்மழபாடியெம்மைமன்னனே. (கூ)

கலியின்வல்லமனுங்கருஞ்சாக்கியப்பேய்களு
நலியுநாள்கெடுத்தாண்டவெண்ணைதனூர்வாழ்பதி
பலியும்பாட்டொடுபண்முழவும்பலவோசையு
மலியுமாமழபாடியையாழ்த்திவணங்குமே. (கூ)

மலியுமாளிகைசூழ்மழபாடியுள்வள்ளலைக்
கலிசெய்மாமதில்சூழ்கடற்காழிக்கவுணியன். (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–வச்சிரத்தம்பேசுவரர், தேவியார்-அழ்காம்பிகையம்மை.

---

146 திருமங்கலக்குடி–பண்–இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரினூர்மணியும்மகில்சந்துஞ்செறிவ்ரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரின்மாமுனிவன்னெடுங்கைகொடுநீர்தனைப்
பூரித்தாட்டியர்ச்சிக்கவிருந்தபுராணனே. (க)

பணங்கொளாடரவல்குனல்லார்பயின்றேத்தவே
மணங்கொண்மாமயிலாலும்பொழில்சூழ்மங்கலக்குடி
யிணங்கிலாமறையோனிமையோர்தொழுதேத்திட
வுணங்கினேடிருந்தானடியேசரணுகுமே. (உ)

கருங்கையானையினீருரிபோர்த்திடுகள்வனூர்
மருங்கெலாமணமார்பொழில்சூழ்மங்கலக்குடி
யரும்புசேர்மலர்க்கொன்றையினனடியன்பொடு
விரும்பியேத்தவல்லார்வினையாயினவீடுமே. (கூ)

பறையினேடொலிபாடலுமாடலும்பாரிட
மறையினேடியன்மல்கிடுவார்மங்கலக்குடிக்

குறைவிலாநிறைவேகுணமில்குணமேயென்று
முறையினுல்வணங்கும்மவர்முன்னெறிகாண்பரே. (சு)

ஆனிலங்கிளரைந்துமவிர்முடியாடியோர்
மானிலங்கையினுனமணமார்மங்கலக்குடி
பூனில்வெண்டலைக்கையுடையானுயர்பரமே
ஞானமாகநின்றேத்தவல்லார்வினைநாசமே. (நி)

தேனுமாயமுதாகிநின்றுன்றெளிந்தையுள்
வூனுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடிக்
கோனைநாடொறுமேத்திக்குணங்கொடுகூறுவா
ரூனமானவைபோயறுமுய்யும்வகையதே (சு)

வேள்படுத்திடுகண்ணினன்மேருவில்லாகவே
வாளரக்கர்புரமெரித்தான்மங்கலக்குடி
யாளுமாதிப்பிரானடிகளடைந்தேத்தவே
கோளுநாளவைபோயறுங்குற்றமில்லார்களே. (எ)

பொலியுமால்வரைபுக்கெடுத்தான்புகழ்ந்தேத்திட
வலியும்வாளொடுநாள்கொடுத்தான்மங்கலக்குடிப்
புலியினுடையினுனடியேத்திடும்புண்ணியர்
மலியும்வானுலகம்புவல்லவர்காண்மினே. (அ)

ஞாலமுன்படைத்தானளிர்மாமலர்மேலயன்
மாலுங்காணவொணவெரியான்மங்கலக்குடி
யேலவார்குழலாளொருபாகமிடங்கொடு
கோலமாகிநின்றுன்குணங்கூறுங்குணமதே. (கூ)

மெய்யின்மாசினர்மேனிவிரிதுகிலாடையர்
பொய்யைவிட்டிடும்புண்ணியர்சேர்மங்கலக்குடிச்
செய்யமேனிச்செழும்புனற்கங்கைசெறிசடை
யையன்சேவடியேத்தவல்லார்க்கழகாகுமே. (கo)

மந்தமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
வெந்தையையெழிலார்பொழிற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திஞானசம்பந்தன்சொன்
முந்தியேத்தவல்லாரிமையோர்முதலாவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-புராணவரதேசுவரர், தேவியார் - மங்களநாயகியம்மை.

ஆ பதிகம்-கo.

147 சீகாழி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நல்லானைநான்மறையோடியலாறங்கம்
வல்லானைவல்லவர்பான்மலிந்தோங்கிய
சொல்லானைத்தொன்மதிற்காழியேகோயிலா
மில்லானையேத்தநின்றூர்க்குளதின்பமே. (க)

நம்மானமாற்றிநமக்கருளாய்நின்ற
பெம்மானைப்பேயுடனுடல்புரிந்தானை
யம்மானையந்தணர்சேருமணிகாழி
யெம்மானையேத்தவல்லார்க்கிடரில்லையே. (உ)

அருந்தானையன்புசெய்தேத்தகில்லார்பாற்
பொருந்தானைப்பொய்யடிமைத்தொழில்செய்வாருள்
விருந்தானவேதியரோதிமிடைகாழி
பிருந்தானையேத்தும்மினும்வினையேகவே. (ங)

புற்றாரணப்புற்றரவம்மரையின்மிசைச்
சுற்றாரணத்தொண்டுசெய்வாரவர்தம்மொடு
மற்றாரணையந்தணர்காழியமர்கோயில்
பற்றாரணப்பற்றிநின்றூர்க்கில்லைபாவமே. (ச)

நெதியானைநெஞ்சிடங்கொள்ளகினைவார்தம்
விதியானைவிண்ணவர்தாம்வியந்தேத்திய
கதியானைக்காருலவும்பொழிற்காழியாம்
பதியானைப்பாடுமினும்வினைபாறவே. (ஞ)

செப்பானமென்முலையாளைத்திகழ்மேனி
வைப்பானைவார்கழலேத்திநினைவார்த
மொப்பானையோதமுலாவுகடற்காழி
மெய்ப்பானைமேவியமாந்தர்மெய்யர்தாரே. (ட)

துன்பானைத்துன்பமழித்தருளாக்கிய
வின்பானையேழிசையின்னிலைபேணுவா
ரன்பானையணிபொழிற்காழிநகர்மேய
நம்பானைநண்ணவல்லார்வினைநாசமே. (ண)

குன்றானைக்குன்றெடுத்தான்புயநாலைந்தும்
வென்றானைமென்மலராளொடுமாறேட
நின்றானைநேரிழையாளொடுங்காழியு
ணன்றானைநம்பெருமானைநணுகுமே. (அ)

சாவாயும்வா துசெய்சாவகர்சாக்கியர்
மேவாதசொல்லைவிகேட்டுவெகுளேன்மின்
பூவாயகொன்றையினீனப்புனற்காழிக்
கோவாயகொள்கையினனடிகூறுமே. (கூ-கo)

கழியார்சீரோதமல்குங்கடற்காழியு
ளெழியாதுகோயில்கொண்டானையுகந்துள்ளித்
தழியார்சொன்ஞானசம்பந்தன்றமிழார
மொழிவார்கண்மூவுலகும்பெறுவார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

/4ல் திருவேகம்பம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறையானீமாசிலாப்புன்சடைமல்குவெண்
பிறையானப்பெண்ணெடாணுகியபெம்மானீ
யிறையானீயேகொள்கச்சித்திருவேகம்பத்
துறைவானீயல்லதுள்காதெனதுள்ளமே. (க)

கொச்சியேவன்னிகொன்றைமதிகூவிள
முச்சியேபுனல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பமேபகறைக்கண்டனீ
நச்சியேதொழுமினும்மேல்வினைகையுமே. (உ)

பாராருமுழவமொந்தைகுழலியாழொலி
சீராலேபாடலாடல்சிதைவில்லதோ
ரேராரூங்கச்சியேகம்பனீயெம்மானைச்
சேராதாரின்பமாயர்நெறிசேராரே. (கூ)

குன்றேய்க்குநெடுவெண்மாடக்கொடிகூடிப்போய்
மின்றேய்க்குமுகில்கடோயும்வியன்கச்சியுண்
மன்றேய்க்குமல்குசீரான்மலியேகம்பஞ்
சென்றேய்க்குஞ்சிந்தையார்மேல்வினைசேராவே. (ச)

சடையானீத்தலைகையேற்றிப்பலிதருவார்தம்
கடையேபோய்மூன்றுங்கொண்டான்கலிக்கச்சியுட்
புடையேபொன்மலருங்கம்பைக்கரையேகம்ப
முடையானீயல்லதுள்காதெனதுள்ளமே. (ஞ)

மழுவாளோடெழில்கொள்சூலப்படைவல்லார்தம்
கெழுவாளோரிமையாருச்சியுமையாள்கங்கை
வழுவாமேமல்குசீரால்வளரேகம்பன்
தொழுவாரேவிழுமியார்மேல்வினைதுன்னுவே. (கூ)

விண் ணுளார்மறைகள்வே தம்விரித்தோ துவார்
கண் ணுளார்கழலின் வெல்வார்கரிகாலனே
நண் ணுவாரெழில்கொள்கச்சிநகரேகம்பத்
தண் ணலாரடுகின் றவலங்காரமே. (எ)

தூயானேத்தூயவாயம்மறையோ தியர்
வாயானேவாளரக்கன்வலிவாட்டிய
நீயானேத்தித்திகச்சித்திருவேகம்ப
மேயானேமேவுவாரென்றலேமேலாரே. (அ)

நாகம்பூணேறதேறனறுங்கொன்றைதார்
பாகம்பெண்பலியுமேற்பர்மறைபாடுவ
ரேகம்பமேவியாடுமிறையிருவர்க்கு
மாகம்பமறியும்வண்ணத்தவனல்லனே. (கூ)

போதியார்பிண்டியாரென்றிவர்பொய்ந்நூலே
வாதியாவம்மினம்மாவெனுங்கச்சியு
ளாதியார்மேவியாடுந்திருவேகம்ப
நீதியாற்றொழுமினும்மேல்வினைநில்லாவே. (ரு)

அந்தண்பூங்கச்சியேகம்பனீயம்மானைக்
கந்தண்பூங்காழியூரன்கலிக்கோவையாற்
சந்தமேபாடவல்லதமிழ்ஞானசம்
பந்தன்சொற்பாடியாடக்கெடும்பாவமே. (ங)

திருச்சிற்றம்பலம்.

---

149 திருக்கோழம்பம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீற்றானேநீள்சடைமேனிறைவுள்ளதோ
ராற்றானேயழகமர்மென்மூலையாளேயேசர்
கூற்றானேக்குளிர்பொழிற்கோழம்பமேவிய
வேற்றானேயேத்துமினும்மிடரேகவே. (க)

மையானகண்டனேமான்மறியேந்திய
கையானேக்கடிபொழிற்கோழம்பமேவிய
செய்யானேத்தேனெய்பாலுந்திகழ்ந்தாடிய
மெய்யானேமேவுவார்மேல்வினைமேவாவே. (உ)

ஏதனேயேதமிலாவிமையோர்தொழும்
வேதனேவெண்குழைதேர்ந்துவிளங்கிய
காதனேக்கடிபொழிற்கோழம்பமேவிய
நாதனேயேத்துமினும்வினைநையவே. (ங)

சடையானைத்தண்மலரான்சிரமேந்திய
விடையானைவேதமும்வேள்வியுமாயநன்
குடையானைக்குளிர்பொழில்சூழ்திருக்கோழம்ப
முடையானையுள்குமினுள்ளங்குளிரவே. (ச)

காராணைக்கடிகமழ்கொன்றையம்போதணி
தாரானைத்தையலோர்பான்மகிழ்ந்தோங்கிய
சீராணைச்செறிபொழிற்கோழம்பமேவிய
சூராணையேத்துமினும்மிடரொல்கவே. (தி)

பண்டாலினிழலானைப்பரஞ்சோதியை
விண்டார்கடம்புரமூன்றுடனேவேவக்
கண்டானைக்கடிகமழ்கோழம்பங்கோயிலாக்
கொண்டானைக்கூறுமினுள்ளங்குளிரவே. (சு)

செல்லானைச்சுடுகணையாற்புரமூன்றெய்த
வில்லானைவேதமும்வேள்வியுமானானைக்
கொல்லானையுரியானைக்கோழம்பமேவிய
நல்லானையேத்துமினும்மிடர்கையவே. (எ)

விற்றானைவல்லரக்கர்விறல்வேர்தனைக்
குற்றானைத்திருவிரலாற்கொடுங்காலனைச்
செற்றானைச்சீர்திகழுந்திருக்கோழம்பம்
பற்றானைப்பற்றுவார்மேல்வினைபற்றுவே. (அ)

நெடியானுடையனறியாவகைநின்றதோர்
படியானைப்பண்டரங்கவேடம்பயின்றானைக்
கடியாருங்கோழம்பமேவியவெள்ளேற்றின்
கொடியானைக்கூறுமினுள்ளங்குளிரவே. (கூ)

புத்தருந்தோகையம்பீலிகொள்பொய்ம்மொழிப்
பித்தரும்பேசுவபேச்சல்லபீடைக்
கொத்தலர்தண்பொழிற்கோழம்பமேவிய
வத்தனையேத்துமினல்லலறுக்கவே. (கo)

தண்புனலோங்குதண்ணந்தராய்மாகர்
நண்புடைஞானசம்பந்தனம்பானுறை
வீண்பொழிற்கோழம்பமேவியபத்திவை
பண்கொளப்பாடவல்லார்க்கில்லைப்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோகுலேசுவரர், தேவியார்-சவுந்தரியம்மை.

150 திருவெண்ணி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையாணைச்சந்திரனேடுசெங்கண்ணரா
வுடையாணையுடைதலையிற்பலிகொண்டுரும்
விடையாணைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியை
யுடையாணையல்லதுள்காதெனதுள்ளமே. (க)

சோதியைச்சுண்ணவெண்ணீறணிந்திட்டவெம்
மாதியையாதியுமந்தமுமில்லாத
வேதியைவேதியர்தாந்தொழும்வெண்ணியி
னீதியைனியவல்லார்வினைநில்லாவே. (உ)

கனிதனைக்கனிந்தவரைக்கலந்தாட்கொள்ளு
முனிதனைமூவுலகுக்கொருமூர்த்தியை
நனிதனைநல்லவர்தாந்தொழும்வெண்ணியி
லினிதனையேத்துவதேதமிலாதாரே. (ங)

மூத்தானைமூவுலகுக்கொருமூர்த்தியாய்க்
காத்தானைக்கனிந்தவரைக்கலந்தாளாக
யார்த்தானையழகமர்வெண்ணியம்மான்றன்னை
யேத்தாதாரென்செய்வாரேழையப்பேய்களே. (ச)

நீராணைநிறைபுனல்சூழ்தருநீள்கொன்றைத்
தாராணைத்தையலோர்பாகமுடையானைச்
சீராணைத்திகழ்தருவெண்ணியமர்ந்துறை
பூராணையுள்கவல்லார்வினையோயுமே. (ஞ)

மூத்தினைமுழுவயிரத்திரண்மாணிக்கத்
தொத்தினைத்தளக்கமில்லாதவிளக்காய
வித்தினைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியி
லத்தனையடையவல்லார்க்கில்லையல்லலே. (சு)

காய்ந்தானைக்காமனையுஞ்செறுகாலனைப்
பாய்ந்தானைப்பரியகைமாவுரித்தோன்மெய்யின்
மேய்ந்தானைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியி
னீந்தானைநினையவல்லார்வினைநில்லாவே. (எ)

மறுத்தானைமாமலையைமதியாதேறடிச்
செறுத்தானைத்தேவழியத்திகழ்தேரண்முடி
யிறுத்தானையெழிலமர்வெண்ணியெம்மானெனப்
பொறுத்தானைப்போற்றுவாராற்றலுடையாரே. (அ)

மண்ணினைவானவரோடுமனிதர்க்குங்
கண்ணினைக்கண்ணனுகரன்முகனுங்காண்

விண்ணினே விண்ணவர் தாந்தொழும்வெண்ணியி
லண்ணலேயடையவல்லார்க்கில்லையல்லலே. (கூ)

குண்டருங்குணமிலாச்சமணசாக்கிய
மிண்டர்கண்மிண்டவைகேட்டுவெகுளன்மின்
விண்டவர்தம்புரமெய்தவன்வெண்ணியிற்
றெண்டாராயேத்தவல்லார்தயர்தோன்றுவே. (கo)

மருவாருமல்குகாழித்திகழ்சம்பந்தன்
றிருவாருந்திகழ்தருவெண்ணியமர்ந்தானே
யுருவாருமொண்டமிழ்மாலையிவைவல்லார்
பொருவாகப்புக்கிருப்பார்புவலோகத்தே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வெண்ணிநாயகர், தேவியார்-அழகியநாயகியம்மை.

15/ திருக்காறுயில்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீரானேநீள்சடைமேலொருநிரைகொன்றைத்
தாராலேதாமரைமேலயன்முன்றெழுஞ்
சீராளேசீர்திகழுந்திருக்காறுயி
லூராளேயென்பவரூனமிலாதாரே. (க)

மதியானேவரியரவோடுன்மத்தஞ்சேர்
விதியானேவிதியுடைவேதியர்தாந்தொழு
நெதியானேநீர்வயல்சூழ்திருக்காறுயிற்
பதியானேயென்பவர்பாவமிலாதாரே. (உ)

விண்ணானேவிண்ணவரேத்திவிரும்புஞ்சீர்
மண்ணானேமண்ணிடைவாழுமுயிர்க்கெல்லாங்
கண்ணானேகடிபொழில்சூழ்திருக்காறுயி
லெண்ணானேயென்பவரேதமிலாதாரே. (கூ)

தாயானேதத்தையுமாகியதன்மைக
ளாயானேயாயகலன்பர்க்கணியானே
சேயானேசீர்திகழுந்திருக்காறுயின்
மேயானேயென்பவர்மேல்வினைமேவாவே. (ச)

கலியானேகலிமலிசெம்பொற்கயிலாய
மலியானேமலிபவர்மும்மதின்மாய்வித்த
சிலையானேசீர்திகழுந்திருக்காறுயி
னிலையானேயென்பவர்மேல்வினைநில்லாவே. (ஞ)

ஆற்றுனேயாறணிசெஞ்சடையாடர
வேற்றுனேயேழுலகும்மிமையோர்களும்
போற்றுனேபொழிறிகழுந்திருக்காறுயி
னீற்றுனேயென்பவர்மேல்வினைநில்லாவே. (சு)

சேர்த்தானேதீவினைதேய்த்தறத்தேவர்க
ளேத்தானேயேத்துநன்மாமுனிவர்க்கிடர்
காத்தானேகார்வயல்சூழ்திருக்காறுயி
லார்த்தானேயென்பவர்மேல்வினையாடாவே. (எ)

கடுத்தானேகாலனைக்காலாற்கயிலாய
மெடுத்தானேயேதமாகம்முனிவர்க்கிடர்
கெடுத்தானேகேழ்கிளருந்திருக்காறுயி
லடுத்தானேயென்பவர்மேல்வினையாடாவே. (அ)

பிறையானேபேணியபாடலோடின்னிசை
மறையானேமாலொடுநான்முகன்காணுத
விறையானேயெழிறிகழுந்திருக்காறுயி
லுறைவானேயென்பவர்மேல்வினையோடுமே (கூ)

செடியாரும்புன்சமண்சீவரத்தார்களும்
படியாரும்பாவிகள்பேச்சுப்பயனில்லை
கடியாரும்பூம்பொழில்சூழ்திருக்காறுயில்
குடியாருங்கொள்கையினர்க்கில்லைகுற்றமே. (கo)

ஏய்ந்தசீரெழிறிகழுந்திருக்காறுயி
லாய்ந்தசீரானடியேத்தியருள்பெற்ற
பாய்ந்தநீர்க்காழியுள்ஞானசம்பந்தன்சொல்
வாய்ந்தவாறேத்துவார்வானுலகாள்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கண்ணுயிரநாதர், தேவியார்-கயிலாயநாயகியம்மை.

ஆ பதிகம்-கஅ.

---

152 திருமணஞ்சேரி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஆயிலாருமம்பதனற்புரமூன்றெய்து
குயிலாருமென்மொழியாளொருகூறுகி
மயிலாருமல்கியசோலைமணஞ்சேரி
பயில்வானேப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே (க)

விதியானே விண்ணவர் தாந்தொழுதேத்திய
நெதியானே நீள்சடைமேனிகழ்வித்தவான்
மதியானே வண்பொழில்சூழ்ந்தமணஞ்சேரிப்
பதியானைப்பாடவல்லார்வினை பாறுமே. (உ)

எய்ப்பானுர்க்கின் புறுதேனளித்தூறிய
விப்புராலாயென்னேயுமாளவுரியானே
வைப்பான மாடங்கள்சூழ்ந்தமணஞ்சேரி
மெய்ப்பானேமேலினுர்வினைவீடுமே. (கூ)

விடையானே மேலுலகேழுமிப்பாரெலா
முடையானே யூழிதோறாழியுளதாய
படையானைப்பண்ணிசைபாடுமணஞ்சேரி
யடைவானேயடையவல்லார்க்கில்லையல்லலே. (ச)

எறியார்பூங்கொன்றையினேடிளமத்தம்
வெறியாருஞ்செஞ்சடையாரமிலைத்தானே
மறியாருங்கங்கையுடையானே மணஞ்சேரிச்
செறிவானைச்செப்பவல்லார்க்கிடர்சேராவே. (ஞ)

மொழியானேமூன்ஞெருநான்மறையாறங்கம்
பழியாமைபண்ணிசையான பகர்வானே
வழியானேவானவரேத்துமணஞ்சேரி
யிழியாமையேத்தவல்லார்க்கெய்துமின்பமே. (சு)

எண்ணேனெண்ணமர்சிரமையோர்கட்குக்
கண்ணேனக்கண்ணெருமூன்றுமுடையானே
மண்ணேமாவயல்சூழ்ந்தமணஞ்சேரிப்
பெண்ணேனப்பேசகின்ருர்பெரியோர்களே. (எ)

எடுத்தானே யெழின்முடியெட்டுமிரண்டுந்தோள்
கெடுத்தானக்கேடிலாச்செம்மையுடையானே
மடுத்தாரவண்டிசைபாடுமணஞ்சேரி
பிடித்தாரப்பேணவல்லார்பெரியோர்களே. (அ)

சொல்லானத்தோற்றங்கண்டானுெடுமாலுங்
கல்லானக்கற்றனசொல்லித்தொழுதேங்க
வல்லார்ன்மாதவரேத்துமணஞ்சேரி
யெல்லாமாமெம்பெருமான்கழலேத்துமே. (கூ)

சற்றேயுந்தாமறிவில்சமணசாக்கியர்
சொற்றேயும்வண்ணமொர்செம்மையுடையானே
வற்றாதவாவிகள்சூழ்ந்தமணஞ்சேரி
பற்றாகவாழ்பவர்மேல்வினை பற்றாவே. (கo)

கண்ணருங்காழியர்கோன்கருத்தார்வித்த
தண்ணர்சீர்ஞானசம்பந்தன்தமிழ்மாலை
மண்ணருமாவயல்சூழ்ந்தமணஞ்சேரி
பண்ணரப்பாடவல்லார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்—மணவாளநாயகர், தேவியார்-யாழ்மொழியம்மை.

---

153 திருவேணுபுரம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நிலவும்புனலுந்நிறைவாளரவு, மிலகுஞ்சடையார்க்கிடமாமெழிலா
ருலவும்வயலுக்கொளியார்முத்தம், விலகுங்கடலார்வேணுபுரமே. (க)

அரவார்காலன்னமையார்நிரடோட், குரவார்குழலாளொருகூறனிடங்
கரவாதகொடைக்கலந்தாரவர்க்கு, விரவாகவல்லார்வேணுபுரமே. (உ)

ஆகம்மழகாயவடான்வெருவ, நாகமுரிபோர்த்தவனண்ணுமிடம்
போகந்தருசீர்வயல்சூழ்பொழில்கண், மேகந்தவழும்வேணுபுரமே. (ங)

காசக்கடலில்விடமுண்டகண்டத், தீசர்க்கிடமாவதுவின்னறவ
வாசக்கமலத்தனம்வன்றிரைகள், வீசத்துயிலும்வேணுபுரமே. (ச)

அரையார்கலிசொன்மென்னடையை, யுரையாவுகந்தானுறையுமிட
நிரையார்கமுகின்னிகழ்பாளையுடை, விரையார்பொழில்சூழ்வேணுபுரமே. (ஞ)

ஒளிரும்பிறையுமுறுகுவிளவின், தளிருஞ்சடைமேலுடையானிடமா
களிரும்புனலின்னலசெங்கயல்கண், மிளிரும்வயல்சூழ்வேணுபுரமே. (ரு)

ஏவம்படைவேந்தனிராவணனே, யாவென்றலறவடர்த்தானிடமாந்
தாவும்மறிமானெடுதண்மதிய, மேவும்பொழில்சூழ்வேணுபுரமே. (எ-அ)

கண்ணன்கடிமாமலர்ற்றிகழு, மண்ணலிருவரறியாவிறையூர்
வண்ணச்சுதைமாளிகைமேற்கொடிகள், விண்ணிற்றிகழும்வேணுபுரமே. (சு)

போகம்மறியார்துவர்போர்த்தழல்வா, ராகம்மறியாவடியாரிறையூர்
மூகம்மறிவார்கலிமுத்தமிழ்நூன், மீகம்மறிவார்வேணுபுரமே. (கo)

கலமார்கடல்போல்வளமார்தருகற், புலமார்தருவேணுபுரத்திறையை
நலமார்தருஞானசம்பந்தன்சொன்ன, குலமார்தமிழ்கூறுவர்கூர்மையரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

/54திருமருகல்-விடந்தீர்த்ததிருப்பதிகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமால்
மடையார்குவளீ மலரும்மருக
னுடையாய்தகுமோவிவளுண்மெலிவே. (க)

சிந்தாயெனுமால்சிவனேயெனுமான்
முந்தாயெனுமான்முதல்வாவெனுமால்
கொந்தார்குவளீ குலவும்மருக
லெந்தாய்தகுமோவிவளேசறவே. (உ)

அறையார்கழனும்மழல்வாயரவம்
பிறையார்சடையுமுடையாய்பெரிய
மறையார்மருகன்மகிழ்வாயிவளீ
யிறையார்வளீகொண்டெழில்வவ்வினையே. (ங)

ஒலிநீர்சடையிற்கரந்தாயுலகம்
பலிநீதிரிவாய்பழியில்புகழாய்
மலிநீர்மருகன்மகிழ்வாயிவளீ
மெலிநீர்மையளாக்கவும்வேண்டினியே. (ச)

தணிநீலவண்ணம்முகிழ்ரென்றியண்ண
மணிநீலகண்டமுடையாய்மருகற்
கணிநீலவண்டார்குழலாளிவடன்
னணிநீலவொண்கண்ணயர்வாக்கினையே. (ஞ)

பலரும்பரவப்படுவாய்சடைமேன்
மலரும்பிறையொன்றுடையாய்மருகற்
புலருந்தினையுந்துயிலாள்புடைபோந்
தலரும்படுமோவடியாளிவளே. (ட)

வழுவாள்பெருமான்கழல்வாழ்கவெனு
வெழுவார்வினைவாளிரவும்பகலு
மழுவாளுடையாய்மருகற்பெருமான்
றெழுவாளிவளைத்துயராக்கினையே. (எ)

இலங்கைக்கிறைவன்விலங்கலெடுப்பத்
தலங்கல்விரலூன்றலுந்தோன்றலனெய்
வலங்கொண்மதில்சூழ்மருகற்பெருமா
னலங்கல்லிவளையராக்கினையே. (அ)

எரியார்சடையும்மடியும்மிருவர்
தெரியாததோர்தீத்திரளாயவனே

மரியார்பிரியாமருகற்பெருமா
னரியாளிவளேயயர்வாக்கினையே. (சு)

அறிவில்சமணும்மலர்சாக்கியருங்
நெறியல்லனசெய்தனர்நின்முழல்வார்
மறியேந்துகையாய்மருகற்பெருமா
னெறியார்குழலிநிறைநீக்கினையே. (க0)

வயஞானம்வல்லார்மருகற்பெருமா
னுயர்ஞானமுணர்ந்தடியுள்குதலா
லியன்ஞானசம்பந்தனபாடல்வல்லார்
வியன்ஞாலமெல்லாம்விளங்கும்புகழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

155 திருநெல்லிக்கா-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

அறத்தாலுயிர்காவலமர்ந்தருளி
மறத்தான்மதின்மூன்றுடன்மாண்பழித்த
திறத்தாற்றெரிவெய்தியதீவெண்டிங்க
ணிறத்தானெல்லிக்காவுணிலாயவனே. (க)

பதிதானிடுகாடுபைங்கொன்றைதொங்கன்
மதிதானதுசூடியமைந்தனுந்தான்
விதிதான்வினைதான்விழுப்பம்பயக்கு
நெதிதானெல்லிக்காவுணிலாயவனே. (உ)

நலந்தானவனன்முகன்றன்றலையைக்
கலந்தானதுகொண்டகபாலியுந்தான்
புலந்தான்புகழாலெரிவிண்புகமூழ்
நிலந்தானெல்லிக்காவுணிலாயவனே. (கூ)

தலைதானதுவேந்தியதம்மடிகள்
கலைதான்றிரிகாட்டிடநாடிடமா
மலைதானெடுத்தான்மதின்மூன்றுடைய
நிலைதானெல்லிக்காவுணிலாயவனே. (சு)

தவந்தான்கதிதான்மதிவார்சடைமே
லுவந்தான்சுறவேந்தனுருவழியச்
சிவந்தான்செயச்செய்தசெறுத்தலகி
னிவந்தானெல்லிக்காவுணிலாயவனே. (ஙி)

வெறியார்கொன்றையந்தார்விரும்பி
மறியார்மலைமங்கைமகிழ்ந்தவன்றன்

குறியார்குறிகொண்டவர்போய்க்குழுகுந்
நெறியானெல்லிக்காவுணிலாயவனே. (சு)

பிறைதான்சடைசேர்த்தியவெந்தைபெம்மா
னிறைதானிறவாக்கயிலேமலையான்
மறைதான்புனலொண்மதிமல்குசென்னி
நிறைதானெல்லிக்காவுணிலாயவனே. (எ)

மறைத்தான்பிணிமாதொருபாகந்தன்னை
நிறைத்தான்வரையாலரக்கன்மிகையைக்
குறைத்தான்சடைமேற்குளிர்கோல்வளையை
நிறைத்தானெல்லிக்காவுணிலாயவனே. (அ)

தழுமுமரையான்வையந்தாயவனுங்
கழுமுன்முடிகாணியாணெரிரும்
மழுமுன்டியார்க்கருள்நாய்ப்பயக்கு
நிழுமுனெல்லிக்காவுணிலாயவனே. (கூ)

கனத்தார்திரைமாண்டழற்கான்றநஞ்சை
யெனத்தாவெனவாங்கியதுண்டகண்டன்
மனத்தார்சமண்சாக்கியர்மாண்பழிய
நினைத்தானெல்லிக்காவுணிலாயவனே. (கo)

புகரோதுமிலாதபுத்தேளுலகி
னிகராநெல்லிக்காவுணிலாயவனை
நகராநலஞானசம்பந்தன்சொன்ன
பகர்வாரவர்பாவமிலாதவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நெல்லிவனேசுவரர், தேவியார்-மங்களாம்பிகையம்மை.

---

156 திருஅழுந்தூர்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொழுமாறுவல்லார்துயர்தீரநின்ற
தெழுமாறுவல்லாரிசைபாடலிம்மி
பழுமாறுவல்லாரழுந்தைமறையோர்
வழிபாடுசெய்மாமடமன்னினையே. (க)

கடலேறியநஞ்சமுதுண்டவனே
யுடலேயுயிரேயுணர்வேயெழிலே
யடலேறுடையாயழுந்தைமறையோர்
விடலேதொழுமாமடமேவினையே. (உ)

கழிகாடலனேகனலாடலினாய்
பழிபாடிலனேயனவேபயிலும்

மழிபாடிலராயமூர்த்தைமறையோர்
வழிபாடுசெய்மாமடமன்னினீனே. (கூ)

வானேமலேயேயென்மன்னுயிரே
தானேதொழுவார்தொழுதாண்மணியே
யானேசிவனேயமூர்த்தையவரெம்
மானேயெனமாமட மன்னினீனே. (ச)

அலேயார்புனல்சூழமூர்த்தைப்பெருமா
னிலேயார்மறியுந்நிறைவெண்மழுவும்
மிலேயார்படையும்மிவையேத்தசெல்வ
நிலேயாவதுகொள்கெனநீகினீனே. (ஞ)

நறவார்தலேயின்னயவாவுலகிற்
பிறவாதவனேபிணியில்லவனே
யறையார்கழலாயமூர்த்தைமறையோர்
மறவாதெழமாமட மன்னினீனே. (சு)

தடுமாறுவல்லாய்தலேவாமதியஞ்
சுடுமாறுவல்லாய்சுடரார்சடையில்
லடுமாறுவல்லாயமூர்த்தைமறையோர்
நெடுமாநகர்கைதொழுகின்றனீனே. (எ)

பெரியாய்சிறியாய்பிறையாய்மிடறு
கரியாய்கரிகாடுயர்வீடுடையா
யரியாயெளியாயமூர்த்தைமறையோர்
வெரியார்தொழுமாமடமேவினீனே. (அ)

மணிநீண்முடியான்மலேயையரக்கன்
றணியாதெடுத்தானுடல்கெரித்த
வணியார்விரலாயமூர்த்தைமறையோர்
மணிமாமடமன்னியிருந்தனீனே. (கூ)

முடிஞார்சடையாய்முனகாளிருவர்
நெடியான்மலரானிகழ்வாலிவர்க
ளடிமேலறியாவரமூர்த்தைமறையோர்
படியாற்றெழுமாமடம்பற்றினீனே. (க0)

அருஞானம்வல்லாரமூர்த்தைமறையோர்
பெருஞானமுடைப்பெருமானவனைத்
திருஞானசம்பந்தனசெந்தமிழ்க
ளுருஞானமுண்டாமுணர்ந்தார்தமக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதபுரீசுவரர், தேவியார்-சவுந்தராம்பிகையம்மை.

தேரழுந்தூரென்பதுமிதுவே.

157 திருக்கழிப்பாலை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புனலாடியபுன்சடையாயரண
மனலாகவிழித்தவனேயழகார்
கனலாடலினுய்கழிப்பாலையுளா
யுனவார்கழல்கைதொழுதுள்ளுதுமே. (க)

துணையாகவோர்தூவளமாதினையும்
பிணையாகவுகந்தவனேயிறைவா
கணையாலெயிலெய்கழிப்பாலையுளா
யிணையார்கழலேத்தவிடர்கெடுமே. (உ)

நெடியாய்குறியாய்நிமிர்புன்சடையின்
முடியாய்சுடுவெண்பொடிமுற்றணிவாய்
கடியார்பொழில்சூழ்கழிப்பாலையுளா
யடியார்க்கடையாவவலம்மலையே. (ங)

எளியாயரியாய்நிலநீரொடுதீ
வளிகாயமெனவெளிமன்னியதூ
வொளியாயுனையேதொழுதன்னவர்க்
களியாய்கழிப்பாலையமர்ந்தவனே. (ச)

நடநண்ணியோர்நாகமசைத்தவனே
விடநண்ணியதூமிடறுவிகிர்தா
கடனண்ணுகழிப்பதிகாவலனே
யுடனண்ணிவணங்குவனுன்னடியே. (ஞ)

பிறையார்சடையாய்பெரியாய்பெரிய
மறையார்தருவாய்மையினுயுலகிற்
கறையார்பொழில்சூழ்கழிப்பாலையுளா
யிறையார்கழலேத்தவிடர்கெடுமே. (ரு)

முதிருஞ்சடையின்முடிமேல்விளங்குங்
கதிர்வெண்பிறையாய்கழிப்பாலையுளா
யெதிர்கொண்மொழியாலிரந்தேத்தமவர்க்
கதிரும்வினையாயினவாசறுமே. (எ)

எரியார்கணையாலெயிலெய்தவனே
விரியார்தருவீழ்சடையாயிறைவிற்
கரிகாடலினுய்கழிப்பாலையுளா
யுரிதாகிவணங்குவனுன்னடியே. (அ)

நலநாரணனுன்முகனண்ணுறக்
கனலானவனேகழிப்பாலையுளா

யுனவர்கழலேதொழுதன்னுமவர்க்
கிலவாம்விணை தானெயிலெய்தவனே. (கூ)

தவர்கொண்டதொழிற்சமண்வேடரொடுங்
குவர்கொண்டனர்துண்டுகிலாடையரு
மிவர்கொண்டனவிட்டடிகளுறையு
முவர்கொண்டகழிப்பதியுள்குதுமே. (கo)

கழியார்பதிகாவலனீப்புகலிப்
பழியாமறைஞானசம்பந்தனசொல்
வழிபாடிலைகொண்டடிவாழ்த்தவல்லார்
கெழியாரிமையோரொடுகேடிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பால்வண்ணநாதர், தேவியார்-வேதநாயகியம்மை.

ஆ பதிகம்-உக.

---

158 திருக்குடவாயில்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திகழுந்திருமாலொடுநான்முகனும்
புகழும்பெருமானடியார்புகல
மிகிழும்பெருமான்குடவாயின்மன்னி
நிகழும்பெருங்கோயினிலாயவனே. (க)

ஒடுங்கதியும்மதியோடரகஞ்
சூடுஞ்சடையான்விடைதொல்கொடிமேற்
கூடுங்குழகன்குடவாயிறனி
னீடும்பெருங்கோயினிலாயவனே. (உ)

கலையான்மறையான்கனலேந்துகையான்
மலையாளவள்பாகமகிழ்ந்தபிரான்
கொலையார்சிலையான்குடவாயிறனி
னிலையார்பெருங்கோயினிலாயவனே. (ங)

சுலவுஞ்சடையான்சுடுகாடிடமா
நலமென்முலையாணகைசெய்யுகடங்
குலவுங்குழகன்குடவாயிறனி
னிலவும்பெருங்கோயினிலாயவனே. (ச)

என்றன்னுளமேவியிருந்தபிரான்
கன்றன்மணிபோன்மிடறன்கயிலைக்

குன்றன்குழகன்குடவாயிறனி
னின்றபெருங்கோயினிலாயவனே. (இ)

அலைசேர்புனலனலன்னமலன்
றலைசேர்பலியன்சதுரன்விதிருங்
கொலைசேர்படையன்குடவாயிறனி
னிலைசேர்பெருங்கோயினிலாயவனே. (ஈ)

அறையார்கழலன்னமலன்னியலிற்
புறையாழ்முழவும்மறைபாடநடங்
குறையாவழகன்குடவாயிறனி
னிறையார்பெருங்கோயினிலாயவனே. (உ)

வரையார்திரடோளரக்கன்மடியவ்
வரையாரவோர்கால்விரல்வைத்தபிரான்
வரையார்மதில்சூழ்குடவாயின்மன்னும்
வரையார்பெருங்கோயின்மகிழ்ந்தவனே. (ஊ)

பொன்னெப்பவனும்புயலொப்பவனுந்
தன்னெப்பறியாத்தழலாய்நிமிர்ந்தான்
கொன்னற்படையான்குடவாயிறனின்
மன்னும்பெருங்கோயின்மகிழ்ந்தவனே. (எ)

வெயிலின்னிலையார்விரிபோர்வையினர்
பயிலும்முரையேபகர்பாவிகள்பாற்
குயிலன்குழகன்குடவாயிறனி
னுயரும்பெருங்கோயிலுயர்ந்தவனே. (ஏ)

கடவாய்மலிநீர்குடவாயிறனி
னெடுமாபெருங்கோயினிலாயவனைத்
தடமார்புகலித்தமிழார்விரகன்
வடமார்தமிழ்வல்லவர்நல்லவரே. (ஐ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோணேசுவரர், தேவியார்-பெரியநாயகியம்மை.

---

154 திருவானைக்கா-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மழையார்மிடறுமழுவாளுடையா
யுழையார்கரவாவுமையாள்கணவா
விழவாரும்வெண்ணவலின்மேவியவெம்
மழகாவெனுமாயிழையாளவளே. (க)

கொலையார்கரியின்னுரிமூடியனே ۷
மலையார்சிலையாவலீவித்தவனே
வியையாலெனையாளும்வெண்ணவுளாய்
நிலையாவருளாயெனுநேரிழையே. (உ)

காலாலுயிர்காலனீவீடுசெய்தாய்
பாலோடுநெய்யாடியபால்வணனே
வேலாடுகையாயெம்வெண்ணவுளாய்
யாலார்நிழலாயெனுமாயிழையே. (ஊ)

சுறவக்கொடிகொண்டவனீறுதுவா
யுறநெற்றிவிழித்தவெமுத்தமனே
விறன்மிக்கசிக்கருள்செய்தவனே
யறமிக்கதுவென்னுமெனுயிழையே. (எ)

செங்கட்பெயர்கொண்டவன்செம்பியர்கோ
னங்கட்கருணைபெரிதாயவனே
வெங்கண்விடையாயெம்வெண்ணவுளா
யங்கத்தயர்வாயினளாயிழையே. (ரு)

குன்றேயமர்வாய்கொலையார்புலியின்
றன்றோலுடையாய்சடையாய்பிறையாய்
வென்றிப்புரமூன்றைவெண்ணவுளே
நின்றியருளாயெனுநேரிழையே. (சூ-எ)

மலையன்றெடுத்தவரக்கன்முடிதோ
டொலையவ்விரலூன்றியதூமழுவா
வியையாலெனையாளும்வெண்ணவுளா
யலசாமனல்காயெனுமாயிழையே. (அ)

திருவார்தருநாரணனுன்முகனு
மருவாவொருவாவழலாய்நிமிர்ந்தாய்
விரையாரும்வெண்ணவுண்மேவியவெம்
மரவாவெனுமாயிழையாளவளே. (கூ)

புத்தர்பலரோடமண்பொய்த்தவர்க
ளொத்தவ்வுரைசொல்லிவையோரகிலார்
மெய்த்தேவர்வணங்கும்வெண்ணவுளா
யத்தாவருளாயெனுமாயிழையே. (கo)

வெண்ணவலமர்ந்துறைவேதியனைக்
கண்ணார்கமழ்காழியர்தந்தலைவன்
பண்ணேடிவைபாடியபத்துமல்லார்
விண்ணேரவரேத்தவிரும்புவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

168 திருநாகேச்சரம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னேர்தருமேனியனே புரியு
மின்னேர்சடையாய்விரிகாவிரியி
னன்னீர்வயனாகேச்சரநகரின்
மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே. (க)

சிறவார்புரமூன்றெரியச்சிலையில்
லுறவார்கணையுய்த்தவனேயுயருந்
நறவார்பொழினாகேச்சரநகரு
ளுறவாவெனவல்வினையாசறுமே. (உ)

கல்லானிழன்மேயவனேகரும்பின்
வில்லானெழில்வேவவிழித்தவனே
நல்லார்தொழுநாகேச்சரநகரிற்
செல்வாவெனவல்வினைதேய்ந்தறுமே. (ங)

நகுவான்மதியோடரவும்புனலுக்
தகுவார்சடையின்முடியாய்தவளந்
நகுவார்பொழினாகேச்சரநகருட்
பகவாவெனவல்வினைபற்றறுமே. (ச)

கலைமான்மறியுங்கனலும்மழுவுங்
நிலையாகியகையினனேநிகழுங்
நலமாகியநாகேச்சரநகருட்
டலைவாவெனவல்வினைதானறுமே. (ஞ)

குரையார்சுழலாடரங்குலவி
வரையான்மகள்காணமகிழ்ந்தவனே
நரையார்விடையேறுநாகேச்சரத்தெ
மரைசேயெனநீங்குமருந்துயரே. (ரு)

முடையார்தருவெண்டலைகொண்டுலகிற்
கடையார்பலிகொண்டுழல்காரணனே
நடையார்தருநாகேச்சரநகருட்
சடையாவெனவல்வினைதானறுமே. (எ)

ஓயாதவரக்கனெடுந்தலற
நீயாரருள்செய்துகிழ்ந்தவனே
வாயாரவழுத்துவர்நாகேச்சரத்
தாயேயெனவல்வினைதானறுமே. (அ)

கெடியானெடுநான்முகனேடலுறச்
சுடுமாலெரியாய்நிமிர்சோதியனே

நடுமாவயனுகேச்சரநகரே
யிடமாவுறைவாயெனவின்புறுமே. (கூ)

மலம்பாவியகையொடுமண்டையுண்
கலம்பாவியர்கட்டுரைவிட்டுலகி
னலம்பாவியநரகேச்சரநகருட்
சிலம்பாவெனத்தீவினைதேய்ந்தறுமே. (கo)

கலமார்கடல்சூழ்தருகாழியர்கோன்
றலமார்தருசெந்தமிழின்விரக
னலமார்தருநரகேச்சரத்தானைச்
சொலன்மாலைகள்சொல்லிலாவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செண்பகாரணியேசுவரர், தேவியார்-குன்றமுலைநாயகியம்மை.

---

16. திருப்புகலி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கலியாழ்கடலோங்குபாருளீர்
கலியாவினையல்லல்போயறுமிக்
கலியார்புரமெய்தவனுறைபு
கலியாநகர்போற்றிவாழ்மினே. (க)

பண்ணியாள்வதோர்பற்றர்பான்மதிக்
கண்ணியார்கமழ்கொன்றைசேர்முடிப்
புண்ணியன்னுறையும்புகலியை
நண்ணுமின்னலமானவேண்டிலே. (உ)

வீசுமின்புகைகாதன்மேதகு
பாசவல்வினைதீர்த்தபண்பினன்
பூசுநீற்றினன்பூம்புகலியைப்
பேசுமின்பெரிதின்பமாகவே. (கூ)

கடிகொள்கூவிளமத்தம்வைத்தவன்
படிகொள்பாரிடம்பேசும்பான்மையன்
பொடிகொண்மேனியன்பூம்புகலியுள்
ளடிகளீயடைந்தன்புசெய்யுமே. (ச)

பாதத்தாரொலிபல்லிலம்பின
னேதத்தார்விடமுண்டவன்படை
பூதத்தான்புகலிந்நகர்தொழ
வேதத்தார்க்கிடமில்லையென்பரே. (ஞ)

மறையினனெலிமல்குவீணைய
னிறையினர்நிமிர்புன்சடையனெம்
பொறையினனுறையும்புகலியை
நிறையினற்றொழுநேசமாகுமே. (சு)

கரவிடைமனத்தாரைக்காண்கிலா
னிரவிடைப்பலிகொள்ளுமெம்மிறை
பொருவிடையுயர்த்தான்புகலியைப்
பரவிடப்பயில்பாவம்பாறுமே. (எ)

அருப்பினர்முலைமங்கைபங்கினன்
விருப்பினனரக்கன்னுரஞ்செகும்
பொருப்பினன்பொழிலார்புகலியு
ளிருப்பினனடியேத்திவாழ்த்துமே. (அ)

மாலுநான்முகன்றனும்வார்கழற்
சிலம்முடிதேடநீண்டெரி
போலுமேனியன்பூம்புகலியுட்
பாலதாடியபண்பனல்லனே. (கூ)

நின்றுதுய்ப்பவர்நீசர்தேரர்சொல்
லொன்றதாகவையாவுணர்வினு
ணின்றவன்னிகழும்புகலியைச்
சென்றுகைதொழச்செல்வமாகுமே. (கo)

புல்லமேறிதன்பூம்புகலியை
நல்லஞானசம்பந்தனவினற்
சொல்லுமாலையீரைந்தும்வல்லவர்க்
கில்லையாம்வினையிருநிலத்தளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

62 திருநெல்வாயில்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புடையினர்புள்ளிகால்பொருக்கிய, மடையினர்மணிநீர்நெல்வாயிலார்
நடையினல்விரற்கோவணக்நயந், தடையினரெமதுச்சியாரே. (க)

வாங்கினர்மதின்மேற்கணவெள்ளங், தாங்கினர்தலையாயதன்மையர்
நீங்குநீர்நெல்வாயிலார்தொழ, வோங்கினரெமதுச்சியாரே. (உ)

நிச்சலேத்தநெல்வாயிலார்தொழ், விச்சையாலுறைவாரெமீசனர்
கச்சையாவதோர்பாம்பினர்கவி, னிச்சையாரெமதுச்சியாரே. (கூ)

மறையினர்மழுவாளினர்மல்கு, பிறையினர்பிறையேய்திலங்கிய
நிறையினர்நெல்வாயிலார்தொழு, மிறைவனரெமதுச்சியாரே. (ச)

விருத்தனுகிவெண்ணீறுபூசிய, கருத்தனுர்கனலாட்டுகந்தவர்
திருத்தனுர்செல்வாயின்மேவிய, வொருத்தனுரெமதுச்சியாரே. (நி)

காரினுர்கொன்றைக்கண்ணியார்மல்கு, பேரினுர்பிறையோடிலங்கிய
நீரினுர்செல்வாயிலார்தொழு, மேரினுரெமதுச்சியாரே. (சு)

ஆதியாரந்தமாயினுர்விலே, கோதியார்மதில்கூட்டழித்தவர்
நீதியார்செல்வாயிலார்மறை, யோதியாரெமதுச்சியாரே. (எ)

பற்றினனரக்கன்கயிலையை, யெற்றினுரொருகால்விரலுற
நெற்றியார்செல்வாயிலார்தொழும், பெற்றியாரெமதுச்சியாரே. (அ)

காடினுர்மணிவண்ணனுன்முகன், கூடினுர்குறுகாதகொள்கையர்
நீடினுர்செல்வாயிலார்தலை, யோடினுரெமதுச்சியாரே. (கூ)

குண்டமண்டுவர்க்கூறைமூடர்சொற், பண்டமாகவையாதபண்பினர்
விண்டயங்குசெல்வாயிலார்நஞ்சை, யுண்டகண்டரெம்முச்சியாரே. (கo)

நெண்பயங்குசெல்வாயிலீசனைச், சண்பைஞானசம்பந்தன்சொல்லிவை
பண்பயன்கொளப்பாடவல்லவர், விண்பயன்கொளும்வேட்கையாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

163 திரு இந்திர நீலபருப்பதம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

குலவுபாரிடம்போற்றவீற்றிருந், திலகுமான்மழுவேந்துமங்கையர்
நிலவுமிந்திரநீலபர்ப்பதத், தலவினனடியுள்கஞல்குமே. (க)

குறைவிலார்மதிசூடியாடல்வண், டுறையுமாமலர்க்கொன்றைசென்னிசே
ரிறைவனிந்திரநீலபர்ப்பதத், துறைவினன்றனையோதியுய்மினே. (உ)

என்பொனென்மணியென்னவேத்துவார், நம்பனுன்மறைபாடுநாவினு
னின்பனிந்திரநீலபர்ப்பதத், தன்பன்பாதமேயடைந்துவாழ்மினே. (ங)

நாசமாம்வினைநன்மைதான்வருந், தேசமார்புகழாயசெம்மையெம்
மீசனிந்திரநீலபர்ப்பதங், கூசிவாழ்த்தகுங்குணமதாகவே. (ச)

மருவுமான்மடமாதொர்பாகமாய்ப், பரவுவார்வினைதீர்த்தபண்பினு
னிரவனிந்திரநீலபர்ப்பதத், தருவிசூடுமடிகள்வண்ணமே. (ஞ)

வெண்ணிலாமதிசூடும்வேணிய, னெண்ணிலார்மதிலெய்தவில்லின
னண்ணலிந்திரநீலபர்ப்பதத், தண்ணிலாவுமொருவனல்லனே. (ஞ)

கொடியவேற்றினர்கூறுதைத்தவர், பொடிகொண்மேனியிற்பூண்டபாம்பினு
ரடிகளிந்திரநீலபர்ப்பத, முடையவாணுகந்தகொள்கையே. (எ)

எடுத்தவல்லரக்கன்கரம்புய, மடர்த்ததோர்விரலானவூணாட்
படுத்தனிந்திரநீலபர்ப்பத, முடித்தலம்முறமுயலுமின்பமே. (அ)

பூவினனெடுமா லும்போற்றுறக், தேவனிக்திரநீலப்பர்ப்பதம்
பாவியாவெழுவரைத்தம்வினை, கோவியாவருங்கொல்லுங்கூற்றமே. (கூ)
கட்டர்குண்டமண்டேரர்சிரிலர், விட்டரிக்திரநீலபர்ப்பத
மெட்டினிணியாததென்கொலோ, சிட்டதாயுறையாதிசிர்களே. (கo)
கந்தமார்பொழில்சூழ்க்தகாழியா, னிக்திரன்றெழுநீலப்பர்ப்பதத்
தந்தமில்லியையேத்தவுஞானசம், பந்தன்பாடல்கொண்டோதிவாழ்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வடதேசத்திலுள்ளது.

சுவாமிபெயர்-நீலாசலநாதர், தேவியார்-நீலாம்பிகையம்மை.

---

164 திருக்கருவூர்த் திருவானிலை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டெலாமலர்தூவியேத்தநஞ், கண்டலாருமியாயதன்மையர்
கண்டனர்கருவூருளானிலை, யண்டனாருளீயுமன்பரே. (க)
நீதியார்நினைக்தாயகான்மறை, யோதியாரொடுங்கூடிலார்குழைக்
காதினர்கருவூருளானிலை, யாதியாரடியார்தமன்பரே. (உ)
விண்ணுலாமதிசூடிவேதமே, பண்ணுளார்பரமாயபண்பினர்
கண்ணுளார்கருவூருளானிலை, யண்ணலாரடியார்க்குநல்லரே. (ங)
முடியர்மும்மதயானையீருரி, பொடியர்பூங்கணேவேளைச்செற்றவர்
கடியுளார்கருவூருளானிலை, யடிகள்யாவையுமாயவீசரே. (ச)
பங்கயம்மலர்ப்பாதர்பாதியோர், மங்கையர்மணிலீலகண்டர்வான்
கங்கையர்கருவூருளானிலை, யங்கையோடரவத்தெமண்ணலே. (ஞ)
தேவர்திங்களும்பாம்புஞ்சென்னியின், மேவர்மும்மதிலெய்தவில்லியர்
காவலர்கருவூருளானிலை, மூவராகியமொய்ம்பரல்லரே. (ரு)
பண்ணினர்படியேற்றர்நீற்றர்மெய்ப், பெண்ணினர்பிறைதாங்குகெற்றியார்
கண்ணினர்கருவூருளானிலை, நண்ணினர்நமையாளுநாதரே. (எ)
கடுத்தவாளரக்கன்சயிலையை, யெடுத்தவன்றலைதோளுந்தாளினை
லடர்த்தவன்கருவூருளானிலை, கொடுத்தவன்னருள்கூத்தனல்லனே. (அ)
உழுதுமாநிலத்தேனமாகிமா, றெழுதுமாமலரோனுங்காண்கிலார்
கழுதினன்கருவூருளானிலை, முழுதுமாகியமூர்த்திபாதமே. (கூ)
புத்தர்புன்சமணர்தம்பொய்யுரைப், பித்தர்பேசியபேச்சைவிட்டுமெய்ப்
பத்தர்சேர்கருவூருளானிலை, யுத்தர்பாதமடைந்துவாழ்மினே. (கo)
கந்தமார்பொழிற்காழிஞானசம், பந்தன்சேர்கருவூருளானிலை
யெந்தையைச்சொன்னபத்துமல்லவர், சிந்தையிற்றுயராயதீர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பசுபதீசுவரர், தேவியார்-திருபாகாயகியம்மை.

ஆஉ பதிகம்—உஅ.

திருச்சிற்றம்பலம்.

முன்னியகலேப்பொருளுமூவுலகில்வாழ்வும்
பன்னியவொருத்தர்பழவூர்வினவின்ஞாலத்
தன்னியிமையோர்கடதிசெய்தமுன்வணங்குஞ்
சென்னியர்விருப்புறுதிருப்புகலியாமே. (க)

வண்டிரைமதிச்சடைமிலைத்தபுனல்சூடிப்
பண்டெரிகையாடுபரமன்பதியதென்பர்
புண்டரிகவாசமதுவீசுமலர்ச்சோலைத்
தெண்டிரைகடற்பொலிதிருப்புகலியாமே. (உ)

பாவணவுசிந்தையவர்பத்தரொடுகூடி
நாவணவுமந்தணன்விரும்பிடமதென்பர்
பூவணவுசோலையிருண்மாலையெதிர்கூரத்
தேவணர்விழாவளர்திருப்புகலியாமே. (ங)

மைதவழுமாமிடறன்மாநடமதாடிக்
கைவளையினொடுகலந்தபதியென்பர்
செய்பணிபெருத்தெழுமுருத்திரர்கள்கூடித்
தெய்வமணிக்குறுதிருப்புகலியாமே. (ச)

முன்னமிருமூன்றுசமயங்களையாகிப்
பின்னையருள்செய்தபிறையாளனுறைகோயில்
புன்னையமலர்ப்பொழில்களக்கினெளிகாட்டச்
செந்நெல்வயலார்தருதிருப்புகலியாமே. (ஞ)

வங்கமலியுங்கடல்விடத்தினைத்தகர்ந்த
வங்கணனருத்திசெய்திருக்குமிடமென்பர்
கொங்கணவியன்பொழிலின்மாசுபனிமூசத்
தெங்கணவுதேன்மலிதிருப்புகலியாமே. (ட)

நல்குரவுமின்பமுநலங்களையாகி
வல்வினைகடீர்த்தருளுமைதனிடமென்பர்
மல்குமடியார்கள்படியாரவிசைபாடிச்
செல்வமறையோருறைதிருப்புகலியாமே. (எ)

பரப்புமுபுகழ்ப்பெருமையாளன்வரைதன்னு
லரக்கனையடர்த்தருளுமண்ணலிடமென்பர்
நெருக்குமுகடற்றிரைகண்முத்தமணிசிந்தச்
செருக்குறுபொழிற்பொலிதிருப்புகலியாமே. (அ)

கோடலொடுகூன்மதிகுலாயசடைதன்மே
லாடரவம்வைத்தருளுமப்பனிருவர்க்குக்

நேடவெரியாகியிருபாலுமடிபேணித்
தேடவுறையுந்கர்திருப்புக்ளியாமே. (சு)

கற்றமணருற்றுலவுதேரருரைசெய்த
குற்றமொழிகொள்கையதிலாதபெருமானூர்
பொற்றெரிடிமடந்தையருமைந்தர்புலீனந்துஞ்
செற்றவர்வனப்புறுதிருப்புகலியாமே. (கo)

செந்தமிழ்பரப்புறுதிருப்புகலிதன்மே
லுந்தமுதலாகிநுவாயபெருமானைப்
பந்தனுரைசெந்தமிழ்கள்பத்துமிசைகூர
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

166 திருப்புறம்பயம்-திருவிராகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறம்பயமலீந்தவர்மதிற்பரிசறுத்தனீ
நிறம்பசுமைசெம்மையொடிசைந்தனதுநீர்மை
திறம்பயனுறும்பொருடெரிந்தணருநால்வர்க்
கறம்பயனுரைத்தனீபுறம்பயமமர்ந்தோய். (க)

விரித்தனீதிருச்சடையரித்தொழுகுவெள்ளந்
தரித்தனீயதன்றியுமிகப்பெரியகாலன்
னெருத்திறவுதைத்தனீயிலங்கிழையொர்பாகம்
பொருத்துதல்கருத்தினீபுறம்பயமமர்ந்தோய். (உ)

விரிந்தனீகுவிந்தனீவிழுங்குயிருமிழ்ந்தனீ
திரிந்தனீருருந்தொசிபெருந்தகையுநீயும்
பிரிந்தனீபுணர்ந்தனீபிணம்புருமயானம்
புரிந்தனீமகிழ்ந்தனீபுறம்பயமமர்ந்தோய். (ஙூ)

வளங்கெழுகடும்புனலொடுஞ்சடையொடுங்கத்
தளங்கமரிளம்பிறைசுமந்ததுவிளங்க
வுளங்கொளவனீதவர்சுடுஞ்சுடலீறு
புளங்கொளவிளங்கினீபுறம்பயமமர்ந்தோய். (ச)

பெரும்பிணிபிறப்பிணிமுதுப்பிலியொர்பாகம்
கரும்பொடுபடுஞ்சொலின்மடந்தையைமகிழ்ந்தோய்
சுரும்புணலரும்பவிழ்திருந்தியெழுகொன்றை
விரும்பினீபுறம்பயமமர்ந்தவிறையோனே. (ஞ)

அனற்படுதடக்கையவரைத்தொழிலசேனு
நினீப்புடைமனத்தவர்வினீப்பகையுநீயே

தனற்படுசுடர்ச்சடைதனிப்பிறையொடொன்ற
புனற்படுகிடக்கையைபுறம்பயமமர்ந்தோய். (சு)

மறத்துறைமழுத்துவர்தவத்தடியருள்ளம்
மறத்துறையொழுத்தன தருட்கிழமைபெற்றேர்
திறத்துளதிறத்தினேமதித்தகலின்றும்
புறத்துளதிறத்தினேபுறம்பயமமர்ந்தோய். (எ)

இலங்கையரிறைஞ்சிறைவிலங்கலின்முழங்க
வுலங்கெழுதடக்கைகளடர்த்திடலுமஞ்சி
வலங்கொளவெழுந்தவனலங்கலினவஞ்சு
புலன்களீவிலங்கினேபுறம்பயமமர்ந்தோய். (அ)

வடங்கெடதடங்குணவிடந்தவிடையல்லிக்
கிடந்தவனிருந்தவனளந்தணரலாகார்
தொடர்ந்தவருடம்பொடுதிமிர்ந்துடன்வணங்கப்
புடங்கருள்செய்தொன்றினேபுறம்பயமமர்ந்தோய். (கூ)

விடக்கொருவர்நன்றெனவிடக்கொருவர்தீதென
வுடற்குடைகளீன்தவருடம்பினேமறைக்கும்
படக்கர்கள்பிடக்குரைப்படுத்தமையெர்ர்பாக
மடக்கினேபுறம்பயமமர்ந்தவுரவோனே. (கூ)

கருங்கழிபொருந்திரைகரைக்குலவுமுத்தந்
தருங்கழுமலத்திறைதமிழ்க்கிழமைஞானன்
சுரும்பவிழ்புறம்பயமமர்ந்ததமிழ்வல்லார்
பெரும்பிணிமருங்கறவொருங்குவர்பிறப்பே. (சக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–சாக்ஷிவரதகர்தர், தேவியார்–கரும்பன்னசொல்லம்மை.

---

167 திருக்கருப்பறியலூர்–திருவிராகம்–பண்–இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சுற்றமொடுபற்றவைதுயக்கறவுறுத்துக்
குற்றமில்குணங்களொடுகூடுமடியார்கண்
மற்றவரைவானவர்தம்வானுலகமேற்றக்
கற்றவனிருப்பதுகருப்பறியலூரே. (க)

வண்டணைசெய்கொன்றையதுவார்சடைகண்மேலே
கொண்டணைசெய்கோலமதுகோளரவினேடும்
விண்டணைசெய்மும்மதிலும்வீழ்தரவோரம்பாற்
கண்டவனிருப்பதுகருப்பறியலூரே. (உ)

வேதமொடுவேதியர்கள்வேள்விமுதலாகப்
போதினெடுபோதுமலர்கொண்டுபுனைகின்ற
நாதனெனநள்ளிருண்முனுடுகுழைதாழுங்
காதவனிருப்பதகருப்பறியலூரே. (க)

மடம்படுமலைக்கிறைவன் மங்கையொருபங்க
னுடம்பினிடக்கருதுகின்றமறையோனைத்
தொடர்ந்தணவுகாலனுயிர்காலவொருகாலாற்
கடந்தவனிருப்பதகருப்பறியலூரே. (ச)

ஒருத்தியுமையோடுமொருபாகமதுவாய
திருத்தனவனீதியவனித்தனெறியாய
விருத்தனவன்வேதமெனவங்கமவையோதுங்
கருத்தவனிருப்பதகருப்பறியலூரே. (ஞ)

விண்ணவர்கள்வெற்பரசுபெற்றமகண்மெய்த்தேன்
பண்ணமருமென்மொழியினூடையணவிப்பா
னெண்ணிவருகாமனுடல்வேவவெரிகாலுங்
கண்ணவனிருப்பதகருப்பறியலூரே. (சு)

ஆதியடியைப்பணியவப்பொடுமலர்ச்சேர்
சோதியொளிநற்புகைவளர்க்குவடுப்குத்
தீதுசெயவந்தவினையுமந்தகனரங்கக்
காதினனிருப்பதகருப்பறியலூரே. (�எ)

வாய்ந்தபுகழ்விண்ணவருமண்ணவருமஞ்சப்
பாய்ந்தமரர்செயுந்தொழிலில்லங்கைகர்வேற்றிற்
கேய்ந்தபயமத்தனையுமிற்றுவிழமேனுட்
காய்ந்தவனிருப்பதகருப்பறியலூரே. (அ)

பாந்தளதிரத்துவருபாய்திரையகங்கை
கரந்தொர்சடைமேன்மிசையுகந்தவனைவைத்து
நிரந்தரநிரந்திருவர்நேடியறியாமற்
கரந்தவனிருப்பதகருப்பறியலூரே. (சூ)

அற்றமறையாவமணாதமிலிபுத்தர்
சொற்றமறியாதவர்கள்சொன்னசொல்லிவிட்டுக்
குற்றமறியாதபெருமான்கொகுடிக்கோயிற்
கற்றெனவிருப்பதகருப்பறியலூரே. (கூ)

நலந்தருபுனற்புகலிஞானசம்பந்தன்
கலந்தவர்கருப்பறியன்மேயகடவுள்மேற்
பலந்தருதமிழ்க்கிளவிபத்துமிவைகற்று
வலந்தருமவர்க்குவினைவாடவெளிதாமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-குற்றம்பொறுத்தநாதர், தேவியார்-கோல்வளையம்மை.

திருச்சிற்றம்பலம்.

திருத்திகழ்மலைச்சிறுமியோடுமிகுதேச
ருருத்திகழெழிற்கயிலைவெற்பிலுறைதற்கே
விருப்புடையவற்புதரிருக்குமிடமோர்
மருத்திகழ்பொழிற்குலவுவண்டிருவையாறே. (க)

கந்தமரவுந்துபகையுந்தலில்விளக்கே
நிந்திரணுணர்ந்துபணியெந்தையிடமெங்குஞ்
சந்தமலியுந்தருமிடைந்தபொழில்சாரா
வந்தவளிநந்தணவுவண்டிருவையாறே. (உ)

கட்டும்வடமெட்டுமுறுவட்டமுழவத்திற்
கொட்டுகரமிட்டவொலிதட்டும்வகைகற்கிக்
கிட்டமிகுட்டமவையிட்டவரிடஞ்சீர்
வட்டமதினுட்டிகழும்வண்டிருவையாறே. (ங)

நண்ணியொர்வடத்தினிழனுல்வர்முனிவர்க்கன்
றெண்ணிலிமறைப்பொருள்விரித்தவரிடஞ்சீர்த்
தண்ணின்மலிசந்தகிலொடுந்திவருபொன்னி
மண்ணின்பிசைவந்தணவுவண்டிருவையாறே. (ச)

வென்றிமிகுதாருகனதாருயிர்மடங்கக்
கன்றிவருகோபமிகுகாளிகதமோவ
ரின்றுநடமாடியிடமேமலர்மேலான்
மன்றன்மலியும்பொழில்கொள்வண்டிருவையாறே. (ஞ)

பூதமொடுபேய்கள்பலபாடநடமாடிப்
பாதமுதல்பையரவுகொண்டணிபெறுத்திக்
கோதையரிடும்பலிகொளும்பரனிடம்பு
மாதவிமணங்கமழும்வண்டிருவையாறே. (ரு)

தன்னுருகுழன்மங்கையுமைநங்கைசுளிவெய்தப்
பின்னொருதவஞ்செய்தழல்பிஞ்ஞகனுமங்கே
யென்னசதியென்றுரைசெயங்கணனிடஞ்சீர்
மன்னுகொடையாளர்பயில்வண்டிருவையாறே. (எ)

இரக்கமில்குணத்தொலகெங்குமலிவெம்போ
ரரக்கன்முடியத்தலைபுயத்தொடுமடங்கத்
தரக்கவிரலிற்சிறிதுவைத்தவரிடஞ்சீர்
வரக்கருணையாளர்பயில்வண்டிருவையாறே. (அ)

பருத்தருவதாகியிணைடைந்தவனொர்பன்றிப்
பெருத்தருவதாயுலகிடந்தவனுமென்றுங்

கருத்தருவொணுவகைகிமிர்ந்தவனிடங்கார்
வருத்துவகைதீர்கொள்பொழில்வண்டிருவையாறே. (சு)

பாக்கியமதொன்றுமில்சமண்பதகர்புத்தர்
சாக்கியர்களென்றுடல்பொதிக்துதிரிவார்தா
கோக்கரியதத்துவனிடம்படியின்மேலான்
மாக்கமுறநீடுபொழில்வண்டிருவையாறே. (கo)

வாசமலியும்பொழில்கொள்வண்டிருவையாற்று
ளீசனெயிற்புகலிமன்னவன்மெய்ஞ்ஞானப்
பூசுரனுரைத்ததமிழ்பத்துமிவைவல்லார்
நேசமலிபத்தரவர்கின்மலனடிக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

169 திருநள்ளாறு–திருவிராகம்–பண்–இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலிகொன்றையரவிர்துளிளவன்னி
மாடலவுசெஞ்சடையெமைத்தனிடமென்பர்
கோடுமலிஞாழல்குரவுமுசரபுன்னை
நாடுமலிவாசமதுவீசியநள்ளாறே. (க)

விண்ணியல்பிறைப்பிளவறைப்புனன்முடித்த
புண்ணியனிருக்குமிடமென்பர்புவிதன்மேற்
பண்ணியநடத்தொடிசைபாடும்டியார்க
ணண்ணியமனத்தின்வழிபாடுசெய்நள்ளாறே. (உ)

வீளங்கிழைமடந்தைமேலமங்கையொருபாகத்
தளங்கொளவிருத்தியவொருத்தனிடமென்பர்
வளங்கெழுவுதீபமொடுதூபமலர்தூவி
நளன்கெழுவிநாளுமவழிபாடுசெய்நள்ளாறே. (ஊ)

கொக்கரவர்கூன்மதியர்கோபர்திருமேனிச்
செக்கரவர்சேருமிடமென்பர்தடமூழ்கிப்
புக்கரவவிஞ்சையரும்விண்ணவருணணி
நக்கரவர்நாமமினவெய்தியநள்ளாறே. (சு)

நெஞ்சமிதுகண்டுகொளுனக்கெனகிணைந்தார்
வஞ்சமதமுத்தருளுமற்றவினைவாளே
ரஞ்சமுதுகாகியவர்கைதொழவெழுந்த
நஞ்சமுதுசெய்தவனிருப்பிடநள்ளாறே. (எ)

பாலனடிபேணவவனுயிர்குறைக்குங்
காலனுடன்மாளமுனுதைத்தவரணாங்

கோலமலர்நீர்க்குடமெடுத்துமறையாளர்
நாலின்வழிநின்றுதொழில்பேணியருள்ளாறே. (சு)

நீதியர்நெடுந்தகையர்நீண்மலையர்பாவை
பாதியர்பரம்பரர்பரம்பரிருக்கை
வேதியர்கள்வேள்வியொழியாதுமறைநாளு
மோதியருளுமமுமுணர்த்திடுகள்ளாறே. (எ)

கடித்துவலரக்கன்முனெருக்கிவரைதன்னை
யெடுத்தவன்முடித்தலைகள்பத்துமிருதோளு
மடர்த்தவர்தமக்கிடமதென்பரளிபாட
நடத்தகலவைத்திரள்கள்வைகியருள்ளாறே. (அ)

உயர்ந்தவனுருக்கொடுதிரிந்துலகமெல்லாம்
பயந்தவனினப்பரியபண்பனிடமென்பர்
வியந்தமரர்மெச்சமலர்மல்குபொழிலெங்கு
நயந்தருமவேதவொலியார்திருள்ளாறே. (சூ)

சிந்தைதிருகற்சமணர்தேரர்தவமென்னும்
பந்தணையறுத்தருளுகின்றபரமன்னூர்
மந்தமுழவன்தருவிழாவொலியும்வேதச்
சந்தம்விரவிப்பொழின்முழங்கியருள்ளாறே. (கo)

ஆடலரவார்சடையனையிழைதனோடுந்
நாடுமலிவெய்திடவிருந்தவனள்ளாற்றை
மாடமலிகாழிவளர்பந்தனதுசெஞ்சொற்
பாடலுடையாரையடையாபழிகளேயே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆம் பதிகம்-உக.

---

170 திருப்பழுவூர்-திருவிராகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மூத்தன்மிருமூவிலைவேலன்விரிநூல
னத்தனெமையாளுடையவண்ணலிடமென்பர்
மைத்தழைபெறும்பொழிலின்வாசமதுவீசப்
பத்தரொடுசித்தர்பயில்கின்றபழுவூரே. (க)

கோடலொடுகோங்கவைகுலாவுமுடிதன்மே
லாடரவம்வைத்தபெருமானதிடமென்பர்
மாடமலிசூளிகையிலேறிமடவார்கள்
பாடலொலிசெய்யமலிகின்றபழுவூரே. (உ)

வாலியபுரத்திலவர்வேவவிழிசெய்த
போலியவொருத்தர்புரிநூலரிடமென்பர்
வேலியின்மிரைக்கமலமன்னமுகமாதர்
பாலெனமிழற்றிகடமாடபழுவூரே. (கூ)

எண்ணுமொருழுத்துமிசையின்கிளவிதேர்வார்
கண்ணுமுதலாயகடவுட்கிடமதென்பர்
மண்ணின்மிசையாடிமலையாளர்தொழுதேத்திப்
புண்ணியனெலிகொண்டுபயில்கின்றபழுவூரே. (சு)

சாதல்புரிவார்சுடலைதன்னிலடமாடு
நாதனமையாளுடையகம்பனிடமென்பர்
வேதமொழிசொல்லிமறையாளரிறைவன்றன்
பாதமவையேத்தநிகழ்கின்றபழுவூரே. (டு)

மேவயருமும்மதிலும்வெந்தழல்வீளித்து
மாவயரவன்முரிசெய்மைந்தனிடமென்பர்
பூவையையடந்தையர்கள்கொண்டுபுகழ்சொல்லிப்
பாவையர்கள்கற்பொடுபொலிந்தபழுவூரே. (சு)

மந்தணமிருந்துபுரிமாமடிதன்வேள்வி
யிந்தவிளையாடுசிவலோகனிடமென்ப
ரந்தணர்களாருதியிலிட்டவகின்மட்டார்
பைந்தொடிநன்மாதர்சுவடொற்றுபழுவூரே. (எ)

உரக்கடல்விடத்தினையிடற்றிலுறவைத்தன்
றரக்கனையடர்த்தருளுமப்பனிடமென்பர்
குரக்கினம்விரைப்பொழிலின்மீதுகனியுண்டு
பரக்குமுபுனர்ச்செய்வினையாடுபழுவூரே. (அ)

நின்றநெடுமாலுமொருகான்முகனுங்கூட
வன்றுதழலாய்நிமிருமாதியிடமென்ப
ரொன்றுமிருமூன்றுமொருநாலுமுணர்வார்கண்
மன்றினிலிருந்துடன்மகிழ்ந்தபழுவூரே. (சூ)

மொட்டையமணுதர்துகின்மூடுவினிதேரர்
முட்டைகண்மொழிந்தமுனிவான்றனிடமென்பர்
மட்டைமலிதாழையிளநீரநிசைபூகம்
பட்டையொடுதாழுவிரிகின்றபழுவூரே. (கo)

அந்தணர்களானமலையாளரவரேத்தும்
பந்தமலிகின்றபழுவூரனையாரச்
சந்தமிகுஞானசம்பந்தனுரைபேணி
வந்தவணமேத்தமவர்வானமுடையாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வடவனநாதர்; தேவியார்-அருந்தவநாயகியம்மை.

17 திருக்குரங்காடுதுறை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பரவக்கெடும்வல்வினை பாரிடஞ்சூழ
விரவிற்புறங்காட்டிடைநின்றெரியாடி
யரவச்சடையந்தணன்மேயவழகார்
குரவப்பொழில்சூழ்குரங்காடுதுறையே. (க)

விண்டார்புரமூன்றுமெரித்தவிமல
னிண்டார்புறங்காட்டிடைநின்றெரியாடி
வண்டார்கருமென்குழலன்மங்கையொர்பாகங்
கொண்டானகர்போல்குரங்காடுதுறையே. (உ)

நிறைவில்புறங்காட்டிடைநேரிழையோடு
மிறைவில்லெரியான்மழுவேந்திநின்றாடி
மறையின்னெலிவானவர்தானவரேத்தும்
குறைவில்லவனூர்குரங்காடுதுறையே. (ங)

விழிக்குந்துதன்மேலொருவெண்பிறைசூடித்
தெழிக்கும்புறங்காட்டிடைச்சேர்ந்தெரியாடிப்
பழிக்கும்பரிசேபலிதேர்ந்தவனூர்பொன்
கொழிக்கும்புனல்சூழ்குரங்காடுதுறையே. (ச)

நீரார்தருமேனியனெற்றியொர்கண்ண
னேரார்கொடியெம்மிறையீண்டெரியாடி
யாரூர்சடையந்தணனுயிழையாளோர்
கூரானகர்போல்குரங்காடுதுறையே. (ஞ)

நளிரும்மலர்க்கொன்றையுநாகமுகந்தைத்
துளிருஞ்சுலவிச்சுடுகாட்டெரியாடி
மிளிரும்மரவார்த்தவன்மேவியகோயில்
குளிரும்புனல்சூழ்குரங்காடுதுறையே. (ட)

பழகும்வினைதீர்ப்பவன்பார்ப்பதியோடும்
முழவங்குழலின்மொந்தைமுழங்கெரியாடும்
மழகன்னயின்மூவிலைவேல்வலனேந்தும்
குழகன்னகர்போல்குரங்காடுதுறையே. (ண)

வரையார்த்தெடுத்தவ்வரக்கன்வலியெல்க
நிரையார்விரலானெரித்திட்டவனூராங்
கரையார்ந்திழிகாவிரிக்கோலக்கரைமேற்
குரையார்பொழில்சூழ்குரங்காடுதுறையே. (அ)

நெடியானொடுநான்முகனுந்நினைவொண்ணாப்
படியாகியபண்டங்கனின்றெரியாடி

செடியார்தலையேந்தியசெங்கண்வெள்ளேற்றின்
கொடியானகர்போல்குரங்காடுதுறையே. (சு)

தவராடையர்வேடமலாச்சமண்கையர்
கவர்வாய்மொழிகாதல்செய்யாதவனூரா
நவையார்மணிபொன்னகில்சந்தனமுந்திக்
குவையார்கரைசேர்குரங்காடுதுறையே. (கo)

நல்லார்பயில்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லேறுடையான்குரங்காடுதுறைமேற்
சொல்லார்தமிழ்மாலைபத்துந்தொழுதேத்த
வல்லாரவர்வானவரோடுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சூலவணக்குநாதர், தேவியார்-அழகுசடைமுடியம்மை.

---

172. திருஇரும்பூளை-விளுவுரை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரார்கழலேதொழுவீரிதுசெப்பீர்
வாரார்முலைமங்கையொடும்முடனே
யேராரிரும்பூளையிடங்கொண்டவீசன்
காரார்கடனஞ்சமுதுண்டகருத்தே. (க)

தொழலார்கழலேதொழுதாண்டார்கள்சொல்லீர்
குழலார்மொழிக்கோல்வளையோடுடனே
யெழிலாரிரும்பூளையிடங்கொண்டவீசன்
கழலுருன்கரிகானிடையாடுகருத்தே. (உ)

அன்பாலடிகைதொழுவீரறியீரே
மின்போன்மருங்குன்மடவாளொடுமேவி
யின்பாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
பொன்போற்சடையிற்புனல்வைத்தபொருளே. (ங)

நச்சித்தொழுவீர்கணமக்கிதுசொல்லீர்
கச்சிப்பொலிகாமக்கொடியுடன்கூடி
யிச்சித்திரும்பூளையிடங்கொண்டவீச
னுச்சித்தலையிற்பலிகொண்டுழலுணே. (ச)

சுற்றார்த்தடியேதொழுவீரிதுசொல்லீர்
நற்றுழ்குழனங்கையொடும்முடனே
யெற்றேயிரும்பூளையிடங்கொண்டவீசன்
புற்றுடரவோடென்புபூண்டபொருளே. (ஞ)

தோடார்மலர்தூய்த்தொழுதாண்டார்கள்சொல்லீர்
சேடார்குழற்சேயிழையோடுடனுகி
யீடாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
காடார்கடுவேடுவனைகருத்தே. (சு-ள)

ஒருக்கும்மனத்தன்பருள்ளீரிதுசொல்லீர்
பருக்கைமதவேழமுரித்தமையோடு
மிருக்கையிரும்பூளையிடங்கொண்டவீச
னரக்கன்னுரந்தீர்த்தருளாக்கியவாறே. (அ)

துயராயினநீங்கித்தொழுந்தொண்டர்கள்சொல்லீர்
கயலார்கருங்கண்ணியொடும்முடனுகி
யியல்பாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
முயல்வாரிருவர்க்கெரியாயியமொய்ம்பே. (சு)

தூணேநன்மலர்தூய்த்தொழுந்தொண்டர்கள்சொல்லீர்
பூணேமென்முலைப்பார்ப்பதியோடுடனுகி
யிணையில்லிரும்பூளையிடங்கொண்டவீச
னணைவில்சமண்சாக்கியமாக்கியவாறே. (கo)

எந்தையிரும்பூளையிடங்கொண்டவீசன்
சந்தம்பயில்சண்பையுண்ஞானசம்பந்தன்
செந்தண்டமிழ்செப்பியபத்திவைவல்லார்
பந்தம்மறுத்தோங்குவர்பான்மையினுலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காசியாரண்ணியேசுவரர், தேவியார்-ஏலவார்குழலம்மை.

---

173 திருமறைக்காடு-கதவடைக்கப்பாடியது-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
விதுநன்கிறைவைத்தருள்செய்தவெனக்குன்
கதவம்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. (க)

சங்கந்தரளம்மலைதான்கரைக்கெற்றும்
வங்கக்கடல்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
மங்கையுமைபாகமுமாகவிதென்கொல்
கங்கைசடைமேலடைவித்தகருத்தே. (உ)

சூரவஞ்சுருக்கத்திகள்புன்னைகண்ஞாழல்
மருவும்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
சிரமும்மலருந்திகழ்செஞ்சடைதன்மே
லரவம்மதியோடடைவித்தவழகே. (ரு)

படர்செம்பவளத்தொடுபன்மலர்முத்தம்
மடலம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
வுடலம்முமைபங்கமதாகியுமென்கொல்
கடனஞ்சமுதாவதுவுண்டகருத்தே. (ச)

வாளேர்மறைமாதவத்தோர்வழிபட்ட
தேனேர்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
வேனேர்தொழுதேத்தவிருந்தரீயென்கொல்
தானேர்கடுவேடுவனைகருத்தே. (ரி)

பலகாலங்கள்வேதங்கள்பாதங்கள்போற்றி
மலரால்வழிபாடுசெய்மாமறைக்காடா
வுலகேமுடையாய்கடைதோறுமுன்னென்கொ
றலேசேர்பலிகொண்டதிலுண்டதுதானே. (சு)

வேலாவலயத்தயலேமிளிர்வெய்துஞ்
சேலார்திருமாமறைக்காட்டுறைசெல்வா
மாலோடயனிந்திரனஞ்சமுனென்கொல்
காலார்சிலைக்காமனைக்காய்ந்தகருத்தே. (எ)

கலங்கொள்கடலோதமுலாவுகரைமேல்
வலங்கொள்பவர்வாழ்த்திசைக்கும்மறைக்காடா
விலங்கையுடையானடர்ப்பட்டிடரெய்த
வலங்கல்விரலூன்றியருள்செய்தவாறே. (அ)

கோனென்றுபல்கோடியுருத்திரர்போற்றுந்
தேனம்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
வேனங்கழுகானவருன்னுமுனென்கொல்
வானந்தலைமண்டியுங்கண்டிலாவாறே. (கூ)

வேதம்பலவோமம்வியந்தடிபோற்ற
வோதம்மூலவும்மறைக்காட்டிறைவா
யேதில்சமண்சாக்கியர்வாக்கிலையென்கொ
லாதரொடுதாமலர்தூற்றியவாறே. (கo)

காழிந்நகரான்கலிஞானசம்பந்தன்
வாழும்மறைக்காடனிவாய்ந்தமித்த
வேழின்னிசைமாலையிரைந்திவைவல்லார்
வாழியுலகோர்தொழவானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

174 திருச்சாய்க்காடு–பண்–இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நித்தலுங்கியமஞ்செய்தூநீர்மலர்தூவிச்
சித்தமொன்றவல்லார்க்கருளுஞ்சிவன்கோயின்
மத்தயானையின்கோடும்வெண்பிறையும்வாரித்
தத்துநீர்ப்பொன்னிசாகரமேவுசாய்க்காடே. (க)

பண்டலைக்கொண்டுபூதங்கள்பாடநின்றுடும்
வெண்டலைக்கருங்காடுறைவேதியன்கோயில்
கொண்டலைத்திகழ்பேரிமுழங்கக்குலாவித்
தண்டலைத்தடமாமயிலாடுசாய்க்காடே. (உ)

நாறுகூவிளநாகிளவெண்மதியத்தோ
டாறுசூடுமமரர்பிரானுறைகோயி
லூறுதேங்கனிமாங்கனியோங்கியசோலைத்
தாறுதண்கதலிப்புதன்மேவுசாய்க்காடே. (ங)

வரங்கள்வண்புகழ்மன்னியவெந்தைமருவார்
புரங்கண்மூன்றும்பொடிபடவெய்தவன்கோயி
லிரங்கலோசையுமீட்டிப்பர்சரக்கொடுமீண்டித்
தரங்கநீள்கழித்தண்கரைவைகுசாய்க்காடே. (ச)

ஏழைமாதர்கடைதோறுமிடுபலிக்கென்று
கூழைவாளரவாட்டும்பிரானுறைகோயின்
மாழையொண்கண்வலீக்கநலீச்சியர்வண்பூங்
தாழைவெண்மடற்கொய்துகொண்டாடுசாய்க்காடே. (ரு)

தங்கவானவர்சூழ்கடைங்கடைபோதி
லங்கொள்நீலலளித்தவெம்மானுறைகோயில்
வங்கமங்கொளிரிப்பியுமுத்தமணியுஞ்
சங்கும்வாரித்தடங்கடலுந்துசாய்க்காடே. (சு)

வேதநாவினர்வெண்பளிங்கின்குழைக்காத
தோதநஞ்சணிகண்டருகந்துறைகோயின்
மாதர்வண்டுதன்காதல்வண்டாடியபுன்னீத்
தாதுகண்டுபொழிலின்மறைந்துசாய்க்காடே. (எ)

இருக்குநீள்வரைபற்றியடர்த்தன்றெடுத்த
வரக்கனுகெரித்தருள்செய்தவன்கோயின்
மருக்குலாவியமல்லிகைசண்பகம்வண்பூ
தருக்குலாவியதண்பொழினீடுசாய்க்காடே. (அ)

மாலினோடயன்காண்டற்கரியவர்வாய்ந்த
வேலையார்விடமுண்டவர்மேவியகோயில்

சேலினேர்விழியார்மயிலாலச்செருக்கி
காலியேகனகும்மலர்கின்றசாய்க்காடே. (கூ)

ஊத்தைவாய்ச்சமண்கையர்கள்சாக்கியர்க்கென்று
மாத்தமாகவறிவரியதாயவன்கோயில்
வாய்த்தமாளிகைசூழ்தருவண்புகார்மாடே
பூத்தவாவிகள்சூழ்ந்துபொலிந்தசாய்க்காடே. (கo)

ஏனையோர்புகழ்ந்தேத்தியவெல்லைதசாய்க்காட்டை
ஞானசம்பந்தன்காழியர்கோனவில்பத்து
மூனமின்றியுரைசெய்யவல்லவர்தாம்போய்
வானநாடினிதாள்வரிம்மானிலத்தோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சாயாவனேசுவரர், தேவியார்-குயிலுவான்மொழியம்மை.

ஆ பதிகம்-கூஅ.

---

175 திருகேடித்திரக்கோவை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லையம்பலம்வல்லம்கல்லம்மலகச்சியுமச்சிறுபாக்கங்கல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணிகடல்சூழ்கழிப்பாலெதென்கோடிபீடார்
நீரூர்வயனின்றியூர்குன்றியூருங்குருகாவையூர்நாரையூர்நீகோனப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்பிதற்றுய்பிறைசூடிதன்பேரிடமே. (க)

அண்ணுமலையீங்கோயுமத்திமுத்தாறகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோண்மபயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும்
பண்ணார்மொழிம்மங்கையோர்பங்குடையான்பரங்குன்றம்பருப்பதம்பேணிகின்றே
யெண்ணையிரவும்பகலுமிம்பைக்கடனீர்தலாய்காரணமே. (உ)

அட்டானமென்றேதியநாலிரண்மெழகனுறைகாவனேத்தும்றைக
ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்குளமூன்றுங்களமஞ்சும்பாடிநான்கு
மட்டார்குழலாண்மலைங்கைபங்கன்மதிக்குமிடமாகியபாழிமூன்றுஞ்
செட்டானவன்பாருரென்றேவிரும்பாயரும்பாவங்களாயினதேய்ந்தறவே. (ஊ)

அறப்பள்ளியதத்தியான்பள்ளிவெள்ளேப்பொடிப்பூசிதீறணிவானமர்காட்டுப்பள்ளி
நெறப்பள்ளிசொராப்பள்ளிசெம்பொன்பள்ளிதிருநனிப்பள்ளிசீர்மகேந்திரத்துப்
பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்வீரும்பும்மிடைப்பள்ளிவண்சக்கரமா
லுறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளியுணராய்மடநெஞ்சமேயுன்னிகின்றே. (ச)

ஆறைவடமாகறலம்பரையாறணியார்பெருவேளூர்வியமர்தெங்கூர்
சேறைதலைபுகலூரகலாதிவைகாதலித்தானவன்சேர்பதியே. (ஙு)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரும்மதிகூர்திருக்கூடலிலாலவாயு
மினவஞ்சொலிலாவிடைமாமருதமிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங்

கனமஞ்சினமால்விடையான்வீரும்புங்சருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலித்தஞ்சமென்றேகினீன்றவமாமலமாயினதானறுமே. (சு)

மாட்டேர்மடப்பாச்சிலாச்சிராமம்முண்டீச்சரம்வாதவூர்வாரணாசி
காட்டேர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங்கடலொற்றியூர்மற்றுறையூரவையும்
கோட்டேர்திருவாமாத்தூர்கோழம்பமுங்கொடுங்கோவலூர்திருக்குணவாயில்.

குலாவுதிங்கட்சடையான்குளிருந்பருதியமம்
போற்றாரடியார்வழிபாடொழியாத்தென்புறம்பயம்பூவணம்பூழியூருங்
காற்றார்வரையன்றெடுத்தான்முடிதோணெரித்தானுறைகோயிலென்றென்றுகேருதே.

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருகனெடுவாயில்குறும்பலாநீடுதிரு
நற்குன்றம்வலம்புரநாகேச்சுரநளிர்சேலியுஞ்சேணமாகாளம்வாய்மூர்
கற்குன்றமொன்றேந்திமழைதடுத்தகடல்வண்ணனுமாமலரோனுங்காணாச்
சொற்கென்றுந்தொலிவிலாதானுறையுங்குடமூக்கென்றுசொல்விக்குலாவுமினே. (கூ)

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்குருந்தங்குடிதேவன்குடிமருவு
மத்தங்குடிதண்டிகுவண்குடியுமலம்புஞ்சலந்தன்சடைவைத்துகந்த
நித்தன்னிமலனுமையோடுங்கூடநெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன்சமணர்நெடும்பொய்களேவிட்டுநினைந்தய்ம்மினே. (கo)

அம்மானையருந்தவமாகினின்றவமரர்பெருமான்பதியானவனிக் [ன்ன
கொம்மாமலர்ச்சேலிகுலாவுகொச்சைக் கிறைவன்சிவஞானசம்பந்தன்சொ
விம்மாலியீரைந்துமிருநிலத்திலிரவும்பகலுங்கினைந்தேத்திநின்று
விம்மாவெருவாவிரும்பும்மடியார்விதியார்பிரியார்சிவன்சேவடிக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இ-வதில், இரண்டு சரணமும், எ-வதில், மூன்று சரணமும், அ-வதில், இரண்டரை சரணமும் இருக்கின்றன.

குன்றியூர்-இடைப்பள்ளி-மாட்டேர்-வாதவூர்-வாரணாசி-கோட்டேர்-குணவாயில்-நெற்குன்றம்-நற்குன்றம்-நெடுவாயில்-உஞ்சேனைமாகாளம்-குத்தங்குடி - குருந்தேவன்குடி-மத்தங்குடி-திருவண்குடி-இவைகட்குத் தனித்தனி தேவாரமில்லாமையால் வைப்புத்தல மென்று சொல்லப்படும்.

---

178 திருப்பிரமபுரம்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

எம்பிரானெனக்கமுதமாவானுந்தன்னடைந்தார்
தம்பிரானுவானுந்தழலேந்துகையானுங்
கம்பமாகரியுரித்தகாபாலிகனைக்கண்டன்
வம்புலாம்பொழிற்பிரமபுரத்துறையும்வானவனே. (க)

தாமென்றுமனந்தளராத்தகுதியராயுலகத்துக்
காமென்றுசரண்புகுந்தார்தமைக்காக்குங்கருணையினுஞ்

னெனென்றுமறைபயில்வார்பிரமபுரத்துறைகின்ற
காமன்றனுடலெரியக்கனல்சேர்த்தகண்ணனே. (உ)

நன்னெஞ்சேயுணியிர்காலனம்பெருமான்றிருவடியே
யுன்னஞ்செய்திருகண்டாயுய்வதினைவேண்டுதியே
லன்னஞ்சேர்பிரமபுரத்தரமுதையெப்போதும்
பன்னுஞ்சீர்வாயதுவேபார்க்கண்ணேபரிந்திடவே. (ஊ)

சாநாளின்றிம்மனமேசங்கைதீர்த்தவிர்ப்பிக்குங்
கோளுளுந்திருவடிக்கேகொழும்லர்தூவித்தினையுந்
தேனுளும்பொழிற்பிரமபுரத்துறையுந்தீவண்ணனை
நானாளுநன்னியமஞ்செய்தவன்சீர்நவின்றேற்த்தே. (எ)

கண்ணுதலான்வெண்ணீற்றுன்கமழ்சடையான்விடையேறி
பெண்ணிதமாமுருவத்தான்பிஞ்ஞகன்பேர்பலவுடையான்
விண்ணுதலாய்த்தோன்றியசீர்ப்பிரமபுரந்தொழுதும்பி
யெண்ணுதலாஞ்செல்வத்தையியல்பாகவறிந்தோமே. (ஏ)

எங்கேனுமியாதாகிப்பிறந்திடினுந்தன்னடியார்க்
கிங்கேயென்றருள்புரியுமெம்பெருமானெருதேறிக்
கொங்கேயுமலர்ச்சோலைக்குளிர்பிரமபுரத்துறையுஞ்
சங்கேயொத்தொளிர்மேனிச்சங்கரன்றன்மைகளே. (கூ)

சிலையதுவெஞ்சிலையாகத்திரிபுரமூன்றெரிசெய்த
வீலைதனவேற்றடக்கையனேக்கிழைபாரெருகூற
னிலைபுனல்சூழ்பிரமபுரத்தருமணியையடிபணிந்தா
னிலையுடையபெருஞ்செல்வமீடுமிழ்பெறலாமே. (எ)

எரித்தமயிர்வாளரக்கன்வெற்பெடுக்கத்தோளொடுதா
ணெரித்தருளுஞ்சிவமூர்த்திநீணிற்தமேனியினு
னுரித்தவரித்தோலுடையானுறைபிரமபுரத்தன்னைத்
தரித்தமனமெப்போதும்பெறுவார்தாந்தக்காரே. (அ)

கரியானுகான்முகனுங்காணமைக்கனலுருவா
யரியானும்பரமேட்டியரவஞ்சேரகலத்தான்
றெரியாதானிருந்துறையுந்திகழ்பிரமபுரஞ்சேர
வுரியார்தாமேழுலகுமுடனுளவுரியாரே. (கூ)

உடையிலார்சீவரத்தார்தன்பெருமையுணர்வரியான்
முடையிலரார்வெண்டலைக்கைமூர்த்தியார்திருவுருவன்
பெடையிலார்வண்டாடும்பொழிற்பிரமபுரத்துறையுஞ்
சடையிலார்வெண்பிறையான்றுன்பணிவார்தக்காரே. (கம)

தன்னடைந்தார்க்கின்புங்கடருவானேத்தத்தவனைக்
கன்னடைந்தம்திற்பிரமபுரத்துறையுங்காவலனை
முன்னடைந்தான்சம்பந்தன்மொழிபத்துமிவைவல்லார்
பொன்னடைந்தார்போகங்கள்பலவடைந்தார்புண்ணியரே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

177 திருச்சாய்க்காடு-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமீனியார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்றுள்சார்ந்தாரே. (க)

போய்க்காடேமறைந்துறைதல்புரிந்தானும்பூம்புகார்ச்
சாய்க்காடேபதியாகவுடையானும்விடையானும்
வாய்க்காடுமுதுமரமேமியடமாகவந்தடைந்த
பேய்க்காடல்புரிந்தானும்பெரியோர்கள்பெருமானே. (உ)

நீராளுநன்னெஞ்சேநினைகண்டாயாரறிவார்
சாராளும்வாழ்நாளுஞ்சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூராளுந்தலைசுமப்பப்புகழ்நாமஞ்செவிகேட்ப
நாராளுநவின்றேத்தப்பெறலாமேநல்வீனையே. (ங)

கட்டலர்த்தமலர்தூவிக்கைதொழுமின்பொன்னியன்ற
தட்டலர்த்தபுஞ்செருந்திகோங்கமருந்தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்ததடந்தாழைமுருகுயிர்க்குங்காவிரிப்பூம்
பட்டினத்துச்சாய்க்காட்டெம்பரமேட்டிபரதமே. (ச)

கோங்கன்னகுவிமுலையாள்கொழும்பணைத்தோட்கொடியிடையைப்
பாங்கென்னவைத்துகந்தான்பட்சடைமேற்பான்மதியந்
தாங்கினூன்பூம்புகார்ச்சாய்க்காட்டான்றுணிழற்கீ
ழோங்கினுரோங்கினுரெனவுரைக்குமுலகமே. (ஞ)

சாந்தாகநீறணிந்தான்சாய்க்காட்டான்காமனீமுன்
றீந்தாகமெரிகொளுவச்செற்றுகந்தான்றிருமுடிமே
லோய்ந்தாரமதிசூடியொளிதிக்முமலைமகடோ
டோய்ந்தாகம்பாகமாவுடையானும்விடையானே. (ட)

மங்குறுய்மணிமாடமதிதவழுநெடுவீதிச்
சங்கெலாங்கரைபொருதுதிரைபுலம்புஞ்சாய்க்காட்டான்
கொங்குலாவிவண்டினிசைபாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச்சுவர்க்கங்கள்பொருளலவே. (எ)

தொடலரியதொருகணையாற்புரமூன்றுமெரியுண்ணப்
படவரவத்தெழிலாரம்பூண்டான்பண்டரக்கனீயுக்
கடவரையாற்றடவரைத்தோளூன்றினூன்சாய்க்காட்டை
யிடவகையாலடைவோமென்றெண்ணுவார்க்கிட்டரிலையே. (அ)

வையரீரேற்றுணுமலருறையுகான்முகனு
மையன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை

தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானே
தெய்வமாப்பேணுதார்தெளிவுடைமைதேறுமே. (சு)

குறங்காட்டுநால்விரற்கோவணத்துக்கோலோவிப்போ
யறங்காட்டுஞ்சமணருஞ்சாக்கியருமலர்தூற்றுந்
திறங்காட்டல்கேளாதேதெளிவுடையீர்சென்றடைமின்
புறங்காட்டிலாடலான்பூம்புகார்ச்சாய்க்காடே (கo)

நொம்பைந்துபுடைத்தொல்குநூபுரஞ்சேர்மெல்லடியா
ரம்பந்தும்வரிக்கழலுமரவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்றமிழ்பகர்ந்தசாய்க்காட்டுப்பத்தினீயு
மெம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

178 திருஆக்கூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

அக்கிருந்தவாரமுமாடரவுமாமையுக்
தொக்கிருந்தமார்பினன்றேலுடையான்வெண்ணீற்றன்
புக்கிருந்தவெல்கோயில்பொய்யிலாமெய்ந்நெறிக்கே
தக்கிருந்தாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (க)

நீராரவார்சடையானீறுடையாடையுடையான்
காராரர்பூங்கொன்றையினன்காதலித்தவெல்கோயில்
கூராரல்வாய்நிறையக்கொண்டயலேகோட்டகத்திற்
றாராமல்காக்கூரிற்றான்றோன்றிமாடமே. (உ)

வாளார்கண்செந்துவர்வாய்மாமலையான்றன்மடந்தை
தோளார்கம்பாகமாப்புல்கினன்றெல்கோயில்
வேளாளரென்றவர்கள்வள்ளலன்மையான்பிக்கிருக்குத்
தாளாளராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (ரு)

கொங்குசேர்தண்கொன்றைமாலையினன்கூற்றடரப்
பொங்கினன்பொங்கொளிசேர்வெண்ணீற்றன்பூங்கோயி
லங்கமாறேழுமருமறைகளோவேள்வி
தங்கினராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (சு)

வீக்கினனுடரவம்வீக்கழித்தார்வெண்டலையென்
பாக்கினன்பலகலன்கள்தரித்துப்பாடலம்பெ
ணாக்கினன்றெல்கோயிலாம்பலம்பூம்பொய்கைபுடைத்
தாக்கினராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (டு)

பண்ணெளிசேர்ந்தான்மறையான்பாடலினோடாடலினன்
கண்ணெளிசேர்ந்நற்றியினன்காதலித்தவெல்கோயில்

விண்ணெளிசேர்மாமதியந்தீண்டியக்கால்வெண்மாடந்
தண்ணெளிசேராக்கூரிற்றருன்றேன்றிமாடமே. (சு)

வீங்கினார்மும்மதிலும்வில்வரையால்வெந்தலைய
வாங்கினார்வானவர்கள்வந்திறைஞ்சுந்தோல்கோயில்
பாங்கினார்நான்மறையோடாறங்கம்பலகலீக
டாங்கினராக்கூரிற்றருன்றேன்றிமாடமே. (எ)

கன்னெடியகுன்றெடுத்தான்றேளடரக்காழ்ந்றி
யின்னருளாலாட்கொண்டவெம்பெருமான்றெல்கோயில்
பொன்னடிக்கேநாடோறும்பூவோடுநீர்சுமக்குந்
தன்னடியாராக்கூரிற்றருன்றேன்றிமாடமே. (அ)

நன்மையராநாரணனுநான்முகனுங்காண்பரிய
தொன்மையான்றேற்றங்கேடில்லாதான்றெல்கோயி
லின்மையாற்சென்றிரந்தார்க்கில்லையென்னுநீர்துவக்குந்
தன்மையராக்கூரிற்றருன்றேன்றிமாடமே. (கூ)

நாமருவுபுண்மைகவிற்றச்சமண்டேரர்
பூமருவுகொன்றையினன்புக்கமருந்தொல்கோயில்
சேண்மருவுபங்கயத்தச்செங்கழுநீர்பைங்குவளை
தாமருவுமாக்கூரிற்றருன்றேன்றிமாடமே. (கo)

ஆடலமர்ந்தாணையாக்கூரிற்றருன்றேன்றி
மாடமமர்ந்தாணைமாடஞ்சேர்தண்காழி
நாடற்கரியசீர்ஞானசம்பந்தன்சொற்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சுயம்புநாதேசுவரர், தேவியார் – கட்கநேத்திரவம்மை.

---

179 திருப்புள்ளிருக்குவேளூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தந்கதிர்மதிய
மூள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானுறையுமிடங்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானுர்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே. (க)

தையலாளொருபாகஞ்சடைமேலாளவளோடு
மையற்தேர்ந்தழல்வாளேநந்தணுறையுமிட
மெய்சொல்லாவிராவணனேமேலோடியிடழித்துப்
பொய்சொல்லாதுயிர்போனுள்புள்ளிருக்குவேளூரே. (உ)

வாசகலஞ்செய்திமையோர்நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானரினிதாகவுறையுமிடம்
யோசனேபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான்புள்ளிருக்குவேளூரே. (சு)

மாகாயம்பெரியதொருமானுரிதோலுடையாடை
யேகாயமிட்டுகந்தவெரியாடியுறையுமிட
மாகாயந்தேரோடுமிராவணனையமரின்கட்
போகாமேபொருதழித்தான்புள்ளிருக்குவேளூரே. (ச)

கீதத்தைமிகப்பாடுமடியார்கள்குடியாகப்
பாதத்தைத்தொழுகின்றபரஞ்சோதியுமிடம்
வேதத்தின்மந்திரத்தால்வெண்மணலேசிவமாகப்
போதத்தால்வழிபட்டான்புள்ளிருக்குவேளூரே. (ரு)

திறங்கொண்டவடியார்மேற்றீவினைநோய்வாராமே
யறங்கொண்டுசிவதன்மமுரைத்தபிரானமருமிட
மறங்கொண்டங்கிராவணன்றன்வலிகருதிவந்தானைப்
புறங்கண்டசடாயென்பான்புள்ளிருக்குவேளூரே. (சு)

அத்தியினீருரிமூடிலழகாகவனலேந்திப்
பித்தரைப்போல்பலிதிரியும்பெருமானர்பேணுமிடம்
பத்தியினல்வழிபட்டுப்பலகாலந்தவஞ்செய்து
புத்தியொன்றவைத்திருந்தான்புள்ளிருக்குவேளூரே. (எ)

பண்ணெண்றவிசைபாடுமடியார்கள்குடியாக
மண்ணின்றிவிண்கொடுக்குமணிகண்டன்மருவுமிட
மெண்ணின்றிமுக்கோடிவாளுளதுடையாளைப்
புண்ணெண்றப்பொருதழித்தான்புள்ளிருக்குவேளூரே. (அ)

வேதித்தார்புரமூன்றுமெவ்வங்கணையால்வெந்தவியச்
சாதித்தவில்லாளிகண்ணுளன்சாருமிட
மாதித்தன்மகனென்னவகன்ஞாலத்தவரோடும்
போதித்தசடாயென்பான்புள்ளிருக்குவேளூரே. (கூ)

கடுத்துவருங்கங்கைதனைக்கமழ்சடையொன்றுடாமே
தடுத்தவரெம்பெருமானர்தாமினிதாயுறையுமிடம்
விடைத்துவருமிலங்கைக்கோன்மலங்கச்சென்றிராமற்காப்
புடைத்தவனைப்பொருதழித்தான்புள்ளிருக்குவேளூரே. (கo)

செடியாயவுடம்பீர்ப்பான்றீவினைக்கோர்மருந்தாவான்
பொடியார்திக்கடிமைசெய்தபுள்ளிருக்குவேளூரைக்
கடியார்ந்தபொழிற்காழிக்கவுணியன்சம்பந்தன்சொன்
மடியாதுசொல்லவல்லார்க்கில்லையாமுயிறப்பே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

தன்னம்பெய்கோவணமுந்தோலுமுடையாடை
பின்னஞ்சடைமேலோர்பிள்ளைமதிசூடி
யன்னஞ்சேர்தண்கானலாமாத்தூரம்மான்றன்
பெருன்னங்கழல்பரவாப்பொக்கமும்பொக்கமே. (க)

கைம்மாவின்றோல்போர்த்தகாபாலிவானுலகின்
மும்மாமதிலெய்தான்முக்கணன்பேர்பாடி
யம்மாமலர்ச்சோலையாமாத்தூரம்மானெம்
பெம்மானென்றேத்தாதார்பேயரிற்பேயரே. (உ)

பாம்பரைச்சாத்தியோர்பண்டரங்கன்விண்டதோர்
தேம்பலிளமதியஞ்சூடியசென்னியா
னும்பலம்பூம்பொய்கையாமாத்தூரம்மான்றன்
சாம்பலகலத்தார்சார்பல்லாற்சார்பிலமே. (ங)

கோணுகப்பேரல்குற்கோல்வளைக்கைமாதராள்
பூணுகம்பாகமாப்புல்கியவளோடு
மாணுகங்காதல்செயாமாத்தூரம்மானைக்
காணுதகண்ணெல்லாங்காணுதகண்களே. (ச)

பாடனறிகின்றபைங்கொன்றைத்தண்டாரே
சூடனறிகின்றசுலஞ்சேர்கையினு
னுடனறிகின்றவுமாத்தூரம்மான்றன்
வேடநெறிநில்லாவேடமும்வேடமே. (ஞ)

சாமவரைவில்லாகச்சந்தித்தவெங்கணையாற்
காவன்மதிலெய்தான்கண்ணுடைநெற்றியான்
யாவருஞ்சென்றேத்துமாமாத்தூரம்மானத்
தேவர்தலைவணங்குந்தேவர்க்குந்தேவனே. (ட)

மாறுதவெங்கூற்றைமாற்றிமலைமகளை
வேறுகநில்லாதவேடமேகாட்டினு
னூறுதியாடியமாத்தூரம்மானைக்
கூறுதகாவெல்லாங்கூறுதகாக்களே. (ண)

தாளார்லரக்கன்றோள்சாய்த்ததலைமகன்ற
னாளாதிரையென்றேநம்பன்றனமைத்தா
லாளானுர்சென்றேத்துமாமாத்தூரம்மானைக்
கேளாச்செவியெல்லாங்கேளாச்செவிகளே. (அ)

புள்ளுங்கமலமுங்கைக்கொண்டார்தாமிருவ
ருள்ளுமவன்பெருமையொப்பளக்குந்தன்மையதே
யள்ளல்வினைகழனியாமாத்தூரம்மானெம்
வள்ளல்கழல்பரவாவாழ்க்கையும்வாழ்க்கையே. (கூ)

பிச்சைபிறர்பெய்யப்பின்சாரக்கோசாரக்
கொச்சைபுலாலுறவீருரிவைபோர்த்துகந்தா
னச்சந்தன்மாதேவிக்கீந்தான்றனுமாத்தூர்
நிச்சனினையாதார்நெஞ்சமுநெஞ்சமே. (கo)

ஆடலரவசைத்தவாமாத்தூரம்மானைக்
கோடலிரும்புறவிற்கொச்சைவயத்தலிவ
னுடலரியசிர்ஞானசம்பந்தன்றன்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நகோட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அழகியநாதேசுவரர், தேவியார்-அழகியநாயகியம்மை.

ஆ பதிகம்-சஉ.

/ § /. திருக்கைச்சினம்–பண்–சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

தையலோர்கூறுடையான்றண்மதிசேர்செஞ்சடையான்
மையுலாமணிமிடற்றன்மறைவிளங்குபாடலா
னெய்யுலாமூவிலைவேலேந்திவந்தொளிசேர்
கையுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. (க)

விடமல்குகண்டத்தான்வெள்வளையோர்கூறுடையான்
படமல்குபாம்பரையான்பற்றார்புரமெரித்தா
னடமல்குமாடலினனுன்மறையோர்பாடலினன்
கடமல்குமாவுரியானுறைகோயில்கைச்சினமே. (உ)

பாடலார்நான்மறையான்பங்கொன்றைபாம்பிஞெடுஞ்
சூடலான்வெண்மதியந்துன்றுகர்ந்தையொடு
மாடலானங்கையனலேந்தியாடரவக்
காடலான்மேவியுறைகோயில்கைச்சினமே. (ங)

பண்டமரர்கூடிக்கடைந்தபடுகடனஞ்
சுண்டபிரானென்றிறைஞ்சியும்பர்தொழுதேத்த
விண்டடவர்கடொன்னகரமூன்றுடனேவெந்தவியக்
கண்டபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. (ச)

தேயத்தமலிவெண்பிறையான்செய்யதிருமேனியினன்
வாய்ந்திலங்குவெண்ணீற்றன்மாதினோர்கூறுடையான்

சாய்ந்தமரர்வேண்டத்தடங்கட * னஞ்சுண்டனங்கைக்
காய்ந்தபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. (நி)

மங்கையோர்கூறுடையான்மன்னுமறையினர்ம
னங்கையோர்வெண்டலையானடரவம்பூண்டுகந்தான்
றிங்களொடுபாம்பணிந்தசிரார்திருமுடிமேற்
கங்கையினன்மேவியுறைகோயில்கைச்சினமே. (சு)

வரியரவேநாணகமால்வரையேயில்லாக
வெரிகணையான்முப்புரங்களெய்துதகர்தவெம்பெருமான்
பொருசுடலூடீமப்புறங்காட்டான்போர்த்ததோர்
கரியுரியான்மேவியுறைகோயில்கைச்சினமே. (எ)

போதலவுகொன்றைபுனைந்தான்றிருமுடிமேன்
மாதமையாளஞ்சமலையெடுத்தவளரக்க
னீதியிலுலேத்தகிழ்வித்தினிருடுங்
காதலினன்மேவியுறைகோயில்கைச்சினமே. (அ)

மண்ணினைமுன்சென்றிரந்தமாலுமறையவனு
மெண்ணரியாவண்ணமெரியுருவமாய்பிரான்
பண்ணிசையாலேத்தப்படுவான்றன்னெற்றியின்மேற்
கண்ணுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. (கூ-கo)

தண்வயல்சூழ்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
கண்ணுதலான்மேவியுறைகோயில்கைச்சினத்தைப்
பண்ணிசையாலேத்திப்பயின்றவிவைவல்லார்
விண்ணவராயோங்கியவுலகமாள்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கைச்சினநாதர், தேவியார்-வேள்வியம்மை.

---

182 திருநாலூர்த்திருமயானம்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பாலூருமலைப்பாம்பும்பனிமதியுமத்தமு
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினு
ஞலூர்மயானத்தகம்பான்றனடிநினைந்து
மாலூருஞ்சிந்தையர்பால்வந்தூராமறுபிறப்பே. (ச)

சூடும்பிறைச்சென்னிச்சூழ்காடிடமாக
வாடும்பறைசங்கொலியோடழகாக

* நஞ்சுண்டு-அனங்கை எனப்பிரித்து, அனங்கை என்பதனுக்கு-அனங்கனேயெனப் பொருள் கொள்க.

நாடுஞ்சிறப்போவாநாலூர்மயானத்தைப்
பாடுஞ்சிறப்போர்பாற்பற்றுவாம்பாவமே. (உ)

கல்லானிழன்மேவிக்காமுறுசீர்நால்வர்க்கன்
றெல்லாவறனுரையுமின்னருளாற்சொல்லினு
னல்லார்தொழுதேத்துநாலூர்மயானத்தைச்
சொல்லாதவரெல்லாஞ்செல்லாதார்தொன்னெறிக்கே. (ஊ)

கோலத்தார்கொன்றையான்கொல்புலித்தோலாடையா
னீலத்தார்கண்டத்தானெற்றியோர்கண்ணினான்
ஞாலத்தார்சென்றேத்துநாலூர்மயானத்திற்
சூலத்தானென்பார்பாற்சூழாவாக்தொல்வினையே. (எ)

கறையார்மணிமிடற்றுன்காபாலிகட்டங்கன்
பிறையார்வளர்சடையான்பெண்பாகனண்பாய
நறையார்பொழில்புடைசூழ்நாலூர்மயானத்தெம்
மிறையானென்றேத்துவார்க்கெய்துமாமின்பமே. (ஏ)

கண்ணுர்நுதலான்கனலாடலமரப்
பண்ணுர்மறைபாடியாடும்பரஞ்சோதி
நண்ணுர்புரமெய்தானூலூர்மயானத்தை
நண்ணுதவரெல்லாநண்ணுதார்நன்னெறியே. (ஐ)

கண்பாவுவேகத்தாற்காமனீருமுன்காய்ந்துகந்தான்
பெண்பாவுபாகத்தானுகத்தோலாகத்தா
ணண்பார்குணத்தோர்குணலூர்மயானத்தை
யெண்பாவுசிந்தையார்க்கேலாவிடர்தானே. (ஒ)

பத்துத்தலையோனைப்பாதத்தொருவிரலால்
வைத்துமலையடர்த்துவாளோடுநாள்கொடுத்தா
னத்தினெலியோவாநாலூர்மயானத்தெ
னத்தனடிநினைவார்க்கல்லலடையாவே. (ஓ)

மாலோடுநான்முகனுநேடவளரெரியாய்
மேலோடுகீழ்காணுமேன்மையான்வேதங்க
ணூலோடுமாறங்காநாலூர்மயானத்தெம்
பாலோடுநெய்யாடிபாதம்பணிவோமே. (ஔ)

துன்பாயமாசார்துவராயபோர்வையார்
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனைநண்ணுமின்க
ணண்பார்சிவாயவெனுநாலூர்மயானத்தே
யின்பாயிருந்தானையேத்துவார்க்கின்பமே. (கo)

ஞாலம்புகழ்காழிஞானசம்பந்தன்ரு
ஞலுமறையோதுநாலூர்மயானத்தைச்

சிலம்புகழாற்சிறந்தேத்தவல்லாருக்
கேலும்புகழ்வானத்தின்பாயிருப்பாரே. (சக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பலாசவனேசுவரர், தேவியார்-பெரியநாயகியம்மை.

---

183 திருமயிலாப்பூர்-பூம்பாவைத்திருப்பதிகம்-பண்-சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னெட்டிட்டபண்பிலிருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணுதேபோதியோபூம்பாவாய். (க)

மைப்பயந்தவொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றுன்கபாலீச்சரமமர்ந்தா
னெப்பசியோணவிழாவுமருந்தவர்க
டுய்ப்பனவுங்காணுதேபோதியோபூம்பாவாய். (உ)

வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகிற்
குளக்கில்கபாலீச்சரத்தான்றெல்காத்திகைநாட்
டளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணுதேபோதியோபூம்பாவாய். (ங)

ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தா
ணீதிரைநாள்காணுதேபோதியோபூம்பாவாய். (ச)

மைப்பூசுமொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்றுன்கபாலீச்சரமமர்ந்தா
னெய்ப்பூசுமொண்புழுக்கனேரிழையார்கொண்டாடுந்
தைப்பூசங்காணுதேபோதியோபூம்பாவாய். (ஞ)

மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிச்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணுதேபோதியோபூம்பாவாய். (ட)

மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்
கலிவிழாக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய்பல்குனியுத்திரநா
ளொலிவிழாக்காணுதேபோதியோபூம்பாவாய். (எ)

தண்ணவரக்கன் றோள்சாய்த்தகந்ததாளிஞன்
கண்ணிர்மயிலேக்கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணிர்பதினெண்கணங்கடம்மட்டமிகாட்
கண்ணிரக்காணுதேபோதியோபும்பாவாய். (அ)

நற்றமரைமலர்மேனன்முகனுாரணனு
முற்றுங்குணர்கிலாமூர்த்திதிருவடியைக்
கற்றூர்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றுப்புக்காணுதேபோதியோபும்பாவாய். (கூ)

உரிஞ்சாயவாழ்க்கையமணுடையைப்போர்க்கு
மிருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பாராட்டிற்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரத்தான்றன்
பெருஞ்சாந்திகாணுதேபோதியோபும்பாவாய். (கo)

கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப்பாட்டாகச்சென்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே. (கச)

திருச்சிற்றம்பலம்.

இது-எலும்பு-பெண்ணுகவோதியருளிய பதிகம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கபாலீசுவரர், தேவியார்-கற்பகவல்லியம்மை.

---

194 திருவெண்காடு-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டும்புலவானும்
வெண்காட்டிலுறைவானும்விடைகாட்டுங்கொடியானே. (க)

பேயடையாபிரிவெய்துமபிள்ளேயினேடுள்ளநினே
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினேயாரவர்தம்மைத்தோயாவாந்தீவினேயே. (உ)

மண்ணெடுநீரனல்காலோடாகாயமதியிரவி
யெண்ணில்வருமியமானனிகபரமுமெண்டிசையும்
பெண்ணினெடாண்பெருமையொடுசிறுமையுமாம்பேராளன்
விண்ணவர்கோன்வழிபடவெண்காடிடமாவிரும்பினனே. (ங)

விடமுண்டமிடற்றண்ணல்வெண்காட்டின்றண்புறவின்
மடல்விண்டமுடத்தாழைமலர்நிழலேக்குருகென்று

தடமண்டுதுறைக்கெண்டைதாமரையின்பூமறையக்
கடல்விண்டகதிர்முத்தநகைகாட்டுங்காட்சியதே. (சு)

வேலைமலிதண்கானல்வெண்காட்டான்றிருவடிக்கீழ்
மாலைமலிவண்சாந்தால்வழிபடுநன்மறையவன்றன்
மேலடர்வெங்காலனுயிர்விண்டபிரானரமன்றார்த
ராலமிடற்றனடியாரென்றடரவஞ்சுவதேர. (டு)

தண்மதியும்வெய்யரவுந்தாங்கினன்சடையினுட
னெண்மதியுறுதலுமையோர்கூறுகந்தாணிறைகோயில்
பண்மொழியாலவனமம்பலவோதப்பசுங்கிள்ளை
வெண்முகில்சேர்கரும்பெணேமேல்வீற்றிருக்கும்வெண்காடே. (சு)

சக்கரமாற்கீந்தாணுச்சலந்தரனைப்பிளந்தாணு
மக்கரைமேலசைத்தாணுமடைந்தயிராவதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும்வெண்காடும்மினீதுரக்கு
மூக்குளநன்குடையானுமுக்கணுடையிறையவனே. (எ)

பண்மொய்த்தவின்மொழியாள்பயமெய்தமலையெடுத்த
வுண்மத்தனுரநெரித்தன்றருள்செய்தாணிறைகோயில்
கண்மொய்த்தகருமஞ்ஞைகடமாடக்கடன்முழங்க
விண்மொய்த்தபொழில்விரிவண்டிசைமுரலும்வெண்காடே (அ)

கள்ளார்செங்கமலத்தான்கடற்கிடந்தானெனவிவர்க
ளொள்ளாண்மைகொளற்கோடியுயர்ந்தழற்றிமுணர்வரியான்
வெள்ளாணைதவஞ்செய்யுமேதகுவெண்காட்டானென்
றுள்ளாடியுருக்காருணர்வுடைமையுணரோமே. (சு)

போதியர்கள்பிண்டியர்கண்மிண்டுமொழிபொருளென்னும்
பேதையர்களவர்பிறிமினறிவுடையீரிதுகேண்மின்
வேதியர்கள்விரும்பியசீர்வியன்றிருவெண்காட்டானென்
றோதியவர்யாதுமொருதீதிலரென்றுணருமினே. (க0)

தண்பொழில்சூழ்சண்பையர்கோன்றமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வானிற்பொலியப்புகுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சுவேதாரணியேசுவரர், தேவியார்-பிரமவித்தியாநாயகியம்மை.

185 சீகாழி-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழிமங்கையர்பலர்பாடியாடியவோசைநாடொறுங்
கண்ணினேரயலேபொலியுங்கடற்காழிப்
பெண்ணினேரொருபங்குடைப்பெருமானீயம்பெருமானென்றென்றுன்னு
மண்ணலானடியாரருளாலுங்குறைவிலரே. (க)

மொண்டலம்பியவார்திரைக்கடன்மோதிமீதெதிசங்கவங்கமுங்
கண்டலம்புடைசூழ்வயல்சேர்கலிக்காழி
வண்டலம்பியகொன்றையானடிவாழ்த்தியேத்தியமாந்தர்தம்வினை
விண்டலங்கெனிதாமதனல்விதியாமே. (உ)

நாடெலாமொளியெய்தனல்லவர்நன்றுமேத்திவணங்குவார்பொழிற்
காடெலாமலர்தேன்மிளிக்குங்கடற்காழித்
தோடுலாவியகாதினார்சுரிசங்கவெண்குழையாயென்றென்றுன்னும்
வேடங்கொண்டவர்கள்வினைநீங்கலுற்றாரே. (ங)

மையினார்பொழில்சூழ்நீழலில்வாசமார்மதமல்கநாடொறுங்
கையினார்மலர்கொண்டெழுவார்கலிக்காழி
யையனேயரனேயென்றுதரித்தோதிநீதியுளேநினைப்பவ
ருய்யுமாமுலகில்லுயர்ந்தாரினுள்ளாரே. (ச)

மலிகடுந்திரைமேனிமிர்ந்தெதிர்வந்தவந்தொளிர்சித்திலம்விழக்
கலிகடிந்தகையார்மருவுங்கலிக்காழி
வலியகாலனைவீட்டிமாணிதனின்னுயிரளித்தானைவாழ்த்திட
மெலியுந்தீவினைநோயவைமேவுவர்வீடே. (ஞ)

மற்றுமிவ்வுலகத்துளோர்களும்வானுளோர்களும்வந்துவைகலுங்
கற்றசிந்தையராய்க்கருதுங்கலிக்காழி
நெற்றிமேலமர்கண்ணினானினைந்திருந்திசைபாடுவார்வினை
செற்றமாந்தரெனத்தெளிமின்கள்சிந்தையுளே. (சு)

தானலம்புரைவேதியரொடுதக்கமாதவர்தாந்தொழப்பயில்
கானலின்னிரைசேரவிம்முங்கலிக்காழி
யூனுளாருயிர்வாழ்க்கையாயுறவாகிநின்றவொருவனேயென்
றூனலங்கொடுப்பாரருள்வேந்தராவாரே. (எ)

மைத்தவண்டெழுசோலையாலிகள்சாலிசேர்வயலாரவைகலுங்
கத்துவார்கடல்சென்றுலவுங்கலிக்காழி
யத்தனேயரனேயரக்கனையன்றடர்த்தகந்தாயுகழல்
பத்தராய்ப்பரவும்பயனீங்குஞல்காயே. (அ)

பருமராமொடுதெங்குபைங்கதலிப்பருங்கனியுண்ணமந்திகள்
கருவராலுகளும்வயல்சூழ்கலிக்காழித்

திருவினயகனுயமாலொடுசெய்யமாமலர்ச்செல்வனுகிய
விருவர்காண் பரியானெனவேத்துதலின் பமே. (கூ)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரியாதுவண்டுகிலாடைபோர்த்தவர்
கண்டுசேர்கிலராழகார்கலிக்காழித்
தொண்டைவாயுமையோடுங்கூடியவேடனேசுடலைப்பொடியணி
யண்டவாணனென் பார்க்கடையாவல்லரூனே. (கo)

பெயரெனும்மிவைபன்னிரண்டினுமுண்டெனப்பெயர்பெற்றவூர்திகழ்
கயலுலாம்வயல்சூழ்ந்தழகார்கலிக்காழி
நயனடன்கழலேத்திவாழ்த்தியஞானசம்பந்தன்செந்தமிழ்மூரை
யுயருமாமொழிவாருலகுத்துயர்ந்தாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-சக.

---

186 திரு-ஆமாத்தூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலைநாணராவரிவாளிகூரெரிகாற்றின்மும்மதில்
வென்றபாரெங்குனேவிடையேறும்வேதியனே
தென்றலார்மணிமாடமாளிகைசூளிகைக்கெதிர்நீண்டபெண்ணைமே
லன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே. (க)

பரவிவானவர்தானவர்பலருங்கலங்கிடவந்தகார்விடம்
வெருவவுண்டுகந்தவருளென்கொல்விண்ணவனே
கரவின்மாமணிபொன்கொழித்திழிசந்துகாரகிறந்து * பம்பைநீ
ரருவிவந்தலைக்குமாமாத்தூரம்மானே. (உ)

நீண்டவார்சடைதாழநேரிழைபாடநீறுமெய்பூசிமாலயன்
மாண்டவார்சுடலைநடமாடுமாண்பதுவென்
பூண்டகேழன்மருப்பராவிரிகொன்றைவாள்வரியாமைபூணெனை
வாண்டகராயகனேயாமாத்தூரம்மானே. (ஙு)

சேலினேரனகண்ணிவெண்ணகைமான்விழித்திருமாதைப்பாகம்வைத்
தேதமாதவநீமுயல்கின்றவேடமிதென்
பாலினேர்மொழிமங்கைமார்நடமாடியின்னிசைபாடநீள்பதி
யாலுசூழ்கழனியாமாத்தூரம்மானே. (ச)

தொண்டர்வந்துவணங்கிமாமலர்தூவிநின்கழலேத்துவாரவ
ருண்டியால்வருந்தலிரங்காதெதென்னீகொலாம்
வண்டலார்கழனிக்கலந்துமலர்ந்ததாமரைமாதர்வாண்முக
மண்டவாணர்தொழுமாமாத்தூரம்மானே. (ஞ)

---

* பம்பை என்பது ஒருநதி.

ஓதியாரணமாயநண்பொருளன்றுநால்வர்முன்கேட்கநன்னெறி
நீதியாலறீழலுரைக்கின்றநீர்மையதென்
சோதியேசுடரேசருஞ்சமபரைகொன்றையாய்திருநின்றியூருறை
யாதியேயரனேயாமாத்தூரம்மானே. (சு)

மங்கையாணுதன்மான்மனத்திடைவாடியூடமணங்கமழ்சடைக்
கங்கையாளிருந்தகருத்தாயதென்னைகொலாம்
பங்கயமதுவண்டிவண்டிசைபாடமாமயிலாடவிண்முழ
வங்கையாலதிர்க்குமாமாத்தூரம்மானே. (எ)

நின்றடர்த்திடுமைம்புலன்னிலையாதவண்ணநினைந்தளத்திடை
வென்றடர்த்தொருபான்மடமாதைவீரும்புதலென்
குன்றெடுத்தநிசாசரன்றிரடோளிருபதுதானெரிதர
வன்றடர்த்தகாயாமாத்தூரம்மானே. (அ)

செய்யதாமரைமேலிருந்தவனேமாலடிதேடிணீண்முடி
வெய்யவாரழலாய்நிமிர்ன்றவேற்றுமையென்
றையலாலொடுபிச்சைக்கிச்சையகுதேரலரையார்த்தவேடங்கொண்
டையமேற்றுகாயாமாத்தூரம்மானே. (கூ)

புத்தர்புன்சமணர்பொய்ம்மொழிநூல்பிடித்தலர்தூற்றநின்னடி
பத்தர்பேணநின்றபரமாயபான்மையதென்
முத்தைவென்றமுறுவலாளுமைபங்கனென்றிமையோர்பரவிடு
மத்தனேயரியாயமாத்தூரம்மானே. (கo)

வாடல்வெண்டலைமாலையார்த்தமயங்கிருள்ளெரியேந்திமாநட
மாடன்மேயதென்னென்றுமாத்தூரம்மானைக்
கோடனுகமரும்புபைம்பொழிற்கொச்சையாரிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆமாத்தூர் என்பது பசுக்களுக்குத் தாயகமானவூர் என்றும், ஆமாதாவூர் எனற் பாலது-ஆமாத்தூர் என மருவின்ற தென்றும் பெரியோர்களாற் கேள்வி. ஆ-பசு. சமஸ்கிருதத்தில் – கோமாதருபுரம் எனப்பெயராம்.

---

87 திருக்களர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல்வாவிசூழ்பொழிலீண்டமாவயலீண்டுமாமதிற்
றேரினார்மறுகில்விழாமல்குதிருக்கள
ரூருளாரிடுபிச்சைபேணுமொருவனேயொளிர்செஞ்சடைம்மதி
யாரகின்றவனேயடைந்தார்க்கருளாயே. (க)

தோளினின்மேலொளிநீறுதாங்கியதொண்டர்வந்தடிபோற்றமிண்டிய
தாளினார்வளருந்தவமல்குதிருக்களருள்
வேளினேர்விசயற்கருள்புரிவித்தகாவிரும்பும்மடியரை
யாளுகந்தவனேயடைந்தார்க்கருளாயே. (உ)

பாடவல்லகண்மைந்தரோடுபனிமலர் பலகொண்டுபோற்றிசெய்
சேடர்வாழ்பொழில்சூழ்செழுமாடத்திருக்களரு
ணீடவல்லகிமலனேயடிநிரைகழல்சிலம்பார்க்கமாநட
மாடவல்லவனேயடைந்தார்க்கருளாயே. (சு)

அம்பினேர்தடங்கண்ணினருடளவ்பயின்மாடமாளிகைச்
செம்பொனர்பொழில்சூழ்ந்தழகாயதிருக்களரு
ளெண்புபூண்டதோர்மேனியெம்மிறைவாவீணையடிபோற்றிகின்றவர்க்
கன்புசெய்தவனேயடைந்தார்க்கருளாயே. (ச)

கொங்குலாமலர்ச்சோலைவண்டினங்கிண்டிமாமதுவுண்டிசைசெயத்
தெங்குபைங்கமுகம்புடைசூழ்ந்ததிருக்களருண்
மங்கைதன்னெடுங்கூடியமணவாளனேபிணைகொண்டோர்கைத்தலத்
தங்கையிற்படையாயடைந்தார்க்கருளாயே. (ஞ)

கோலமாமயிலாலக்கொண்டல்கள்சேர்பொழிற்குலவும்வயலிடைச்
சேலிளங்கயலார்புனல்சூழ்ந்ததிருக்களரு
ளீலமேவியகண்டனேகிடர்புன்சடைப்பெருமானெனப்பொலி
யாலநீழலுளாயடைந்தார்க்கருளாயே. (சு)

தம்பலம்மறியாதவர்மதிருங்குமால்வரையாலழலெழத்
திண்பலங்கெடுத்தாய்திகழ்கின்றதிருக்களருள்
வம்பலர்மலர்தூவிகின்னடிவானவர்தொழக்கூத்துகந்தபே
ரம்பலத்துறையாயடைந்தார்க்கருளாயே. (எ)

சுன்றடுத்தகன்மாளிகைக்கொடிமாடமீயெர்கோபுரங்கண்மேற்
சென்றடுத்துயர்வான்மதிதோயுந்திருக்களரு
ணின்றடுத்துயர்மால்வரைத்திரடோளிலெடுத்தான்றனீண்முடி
யன்றடர்த்துகந்தாயடைந்தார்க்கருளாயே. (அ)

பண்ணியாழ்பயில்கின்றமங்கையர்பாடலாடலோடாரவாழ்பதி
தெண்ணிலாமதியம்பொழில்சேருந்திருக்களரு
ளுண்ணிலாவியவொருவனேயிருவர்க்குகின்கழல்காட்சியாரழ
லண்ணலாயவெம்மானடைந்தார்க்கருளாயே. (சு)

பாக்கியம்பலசெய்தபத்தர்கள்பாட்டொடும்பலபணிகள்பேணிய
தீக்கியல்குணத்தார்சிறந்தாருந்திருக்களருள்
வாக்கினன்மறையோதினியமண்டேரர்சொல்லியசொற்களானபொய்
யாக்கினின்றவனேயடைந்தார்க்கருளாயே. (கo)

இந்துவந்தெழுமாடவீதியெழில்கொள்காழிநகர்க்கவுணியன்
செந்தமிழ்மொழியாரவர்சேருந்திருக்களரு
ளந்தியன்னதொர்மேனியரனேயமரர்தம்பெருமானைஞானசம்
பந்தன்சொல்லிவைபத்தும்பாடத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-களர்மூலீசுவரர்; தேவியார்-அழகேசுவரியம்மை.

78 திருக்கோட்டாறு-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கருந்தடங்கண்ணின் மாதராரிசைசெய்யக்காரதிர்ன்றபூம்பொழிற்
குருந்தமாதவியின்விரைமல்குகோட்டாற்றி
லிருந்தவெம்பெருமானேயுள்கியிணையடிதொழுதேத்துமாந்தர்கள்
வருந்துமாறறியார்நெறிசேர்வர்வானுடே. (க)

நின்றுமேய்ந்துநினைந்துமாகரிநீரொடும்மலர்வேண்டிவான்மழை
குன்றினேர்ந்துசுதிப்பணிசெய்புங்கோட்டாற்று
ளென்றுமன்னியவெம்பிரான்கழலேத்திவான ரசாளவல்லவர்
பொன்றுமாறறியார்புகழார்ந்தபுண்ணியரே. (உ)

விரவிநாளும்விழாவிடைப்பொலிதொண்டர்வந்தியச்துபண்செயக்
குரவமாருகிழற்பொழின் மல்குகோட்டாற்றி
லரவமீள்சடையானேயுள்கிநின்றுதரித்துமுனம்புசெய்தடி
பரவுமாறுவல்லார்பழிபற்றறப்பரே. (ஊ)

அம்பினேர்விழிமங்கைமார்பலராடகம்பெறுமாடமாளிகைக்
கொம்பினேர்துகிலின்கொடியாடுகோட்டாற்றி
னம்பனேநடனேநலந்திகழ்நாதனேயென்றுகாதல்செய்தவர்
தம்பினேர்க்தறியார்தடுமாற்றவல்வினையே. (எ)

பழையதம்மடியார்துதிசெயப்பாருளோர்களும்விண்ணுளோர்தொழுக்
குழலுமாமைதவிழாவொலிசெய்புங்கோட்டாற்றிற்
கழலுமம்வண்சிலம்பும்மொலிசெயக்கானிடைக்கணமேத்தவாடிய
வழகனென்றெழுவாரணியாவர்வானவர்க்கே. (இ)

பஞ்சின்மெல்லடிமாதராடவர்பத்தர்சித்தர்கள்பண்புவைகலுங்
கொஞ்சிபின்மொழியாற்றெழின்மல்குகோட்டாற்றின்
மஞ்சனேமணியேமணிமிடற்றண்ணலேயெனவுண்ணெகிழ்ந்தவர்
துஞ்சுமாறறியார்பிறவாரித்தொன்னிலத்தே. (ஈ)

கலவமாமயிலாளோர்பங்கனைக்கண்டுகண்பிசைநீர்நெகிழ்த்திசை
குலவுமாறுவல்லார்குடிகொண்டகோட்டாற்றி
னிலவுமாமதிசேர்சடையுடைன்மலாவெனவுண்ணுவாரவ
ருலவுவானவரினுயர்வாருவதுண்மையதே. (எ)

வண்டலார்வயற்சாலியாலேவளம்பொலிந்திடவார்புனற்றிரை
கொண்டலார்கொணர்க்தங்குலவுந்திகழ்கோட்டாற்றிற்
றெண்டெலாந்துதிசெய்யினற்றொழிலனேகழலாலரக்கனே
மிண்டெலாந்தவிர்த்தென்னுகந்திட்டவெற்றிமையே. (அ)

கருதிவந்தடியார்தொழுதெழக்கண்ணனேடயன்றேடவானியின்
குருதிமெய்கலப்பவுரிகொண்டுகோட்டாற்றில்

விருதினுண் மடமாதுமையும்வியப்பொடுமுமர்கோயின்மேவிவெள்
ளெருதுகந்தவனேயிரங்கியுனதின்னருளே. (கூ)

உடையிலாதுழல்கின்றகுண்டரூமணருந்தவத்தாயசாக்கியர்
கொடையிலார்மகத்தார்குறையாருங்கோட்டாற்றிற்
படையிலார்மழுவேந்தியாடியபண்பனேயிவரென்கொலோநுணை
யடைகிலாதவண்ணமருளாயுன்னடியவர்க்கே. (கo)

கரலனேக்கழலாலுதைத்தொருகாமனேக்கனலாகச்சீறிமெய்
கோலவார்குழலார்குடிகொண்டகோட்டாற்றின்
மூலனேமுடிவொன்றிலாதவெம்முத்தனேப்பயில்பந்தன்சொல்லிய
மாலைபத்தும்வல்லார்க்கெளிதாகும்வானகமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஐராபதேசுவரர், தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

/8ரு திருப்புறவார்-பனங்காட்டூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணமர்ந்தனமும்மதிற்கனிவீழவெங்கணையாலெய்தாய்விரி
பண்ணமர்ந்தொலிசேர்புறவார்பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொருபாகமாகியபிஞ்ஞகாபிறைசேர்நுதலிடைக்
கண்ணமர்ந்தவனேகலந்தார்க்கருளாயே. (க)

நீடல்கோடலலர்வெண்முல்லைநீர்மலர்நிரைத்தாதளஞ்செய்யப்
பாடல்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்த்
தேடியடிலங்கியகாதயன்மின்னுளங்கவெண்குழைதுள்ளநள்ளிரு
ளாடுஞ்சங்கரனேயடைந்தார்க்கருளாயே. (உ)

வானீயுங்கயலும்மிளிர்பொய்கைவார்புனற்கரையருகெலாம்வயற்
பானீயொண்கமுகம்புறவார்பனங்காட்டூர்ப்
பூனீயுந்நறுங்கொன்றையுமதமத்தமும்புனைவாய்கழலிணைத்
தானீயேபரவுந்தவத்தார்க்கருளாயே. (ஊ)

மேய்ந்தினஞ்செந்நெனெல்கதிர்கவ்விமேற்படுகலின்மேதிவைகறை
பாய்ந்ததண்பழனப்புறவார்பனங்காட்டூர்
ராய்ந்தநான்மறைபாடியாடுமடிகளென்றென்றரற்றிநன்மலர்
சாய்ந்தடிபரவுந்தவத்தார்க்கருளாயே. (எ)

செங்கயல்பொடுசேல்செருச்செயச்சீரியாழ்முரறேனினத்தொடு
பங்கயம்மலரும்புறவார்பனங்காட்டூர்க்
கங்கையுமதியுங்கமழ்சடைக்கேண்மையாளொடுங்கூடிமான்மறி
யங்கையாடலென்னேயடியார்க்கருளாயே. (ஙி)

நீரினார்வரைகோலிமால்கடனீடியபொழில்சூழ்துவைகலும்
பாரினார்பிரியாப்புறவார்பனங்காட்டூர்க்
காரினார்மலர்க்கொன்றைதாங்குகடவுளென்றுகைகூப்பிநாடொறுஞ்
சீரினல்வணங்குந்திறத்தார்க்கருளாயே. (சு)

கையரிவையர்மெல்லீரல்லவைகாட்டியும்மலர்க்காந்தளங்குறி
பையராவிரியும்புறவார்பனங்காட்டூர்
மெய்யரிவையோர்பாகமாகவுமேவினுய்கழலேத்திநாடொறும்
பொய்யிலாவடிமைபுரிந்தார்க்கருளாயே. (எ)

தூவியஞ்சிறைமென்னடையனமல்கியொல்கியதூமலர்ப்பொய்கைப்
பாவில்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்
மேவியக்கிலேயரக்கன்றோளடர்த்தவன்பாடல்கேட்டருள்
மேவியெம்பெருமானென்பவர்க்கருளாயே. (அ)

அந்தண்மாதவிப்புன்னைநல்லவேசோகமுமரவிந்தமல்லிகை
பைந்தண்முல்லைகள்சூழ்புறவார்பனங்காட்டூர்
செந்தளிர்முகிழ்வண்ணஞ்சென்றுகைதொழுவார்கரிதாய்நினைந்ததோர்
சந்தமாயவனேதவத்தார்க்கருளாயே. (கூ)

நீணமார்முருகுண்டுவண்டினநீலமாமலர்கவ்விநேரிசை
பாணில்யாழ்முரலும்புறவார்பனங்காட்டூர்
நாணழிந்தழல்வார்சமணருமம்பிலரக்கியருகத்தலை
யூணுரியவனையுகப்பார்க்கருளாயே. (கo)

மையினீர்மணிபோன்மிடற்றணிமாலிலெண்பொடிப்பூசுமார்பணைப்
பையதேன்பொழில்சூழ்புறவார்பனங்காட்டூர்
நையணைப்புகழானகாழியுளாய்ந்தநான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நகரெட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பனங்காட்டீசுவரர், தேவியார்-திருப்புருவமின்னுமம்மை.

---

190 ஸ்ரீபுகலி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையீரடையோர்க்குக்
கருவார்ந்தவானுலகங்காட்டிக்கொடுத்தல்கருத்தானீர்
பொருவார்ந்ததெண்கடலொண்சங்கமீனேக்கும்பூம்புகலித்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (க)

நீரார்ந்தசெஞ்சடையீர்நிரையார்கழல்சேர்பாதத்தீ
சூரார்ந்தசில்பலியீருழைமானுரிதோலாடையீர்

போரார்ந்தெண்டிரைசென்றணையுங்கானற்பூம்புகலிச்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (உ)

அழிமல்குபூம்புனலுமரவுஞ்சடைமேலடைவெய்த
மொழிமல்குமாமறையிர்கறையார்கண்டத்தெண்டோளிர்
பொழின்மல்குவண்டினங்களறையுங்கானற்பூம்புகலி
யெழின்மல்குகோயிலேகோயிலாகவிருந்தீரே. (ங)

கையிலார்ந்தவெண்மழுவொன்றுடையீர்கரியகரியின்ரோன்
மையிலார்ந்தசாயன்மடமங்கைவெருவமெய்போர்த்தீர்
பையிலார்ந்தவேதியர்கள்பதியாய்வினங்கும்பைம்புகலி
யெயிலார்ந்தகோயிலேகோயிலாகவிசைந்தீரே. (ச)

நாவார்ந்தபாடலீராடலரவமரைக்கார்த்தீர்
பாவார்ந்தபல்பொருளின்பயன்களானீரயன்பேணும்
பூவார்ந்தபொய்கைகளும்வயலுஞ்சூழ்ந்தபொழிற்புகலித்
தேவார்ந்தகோயிலேகோயிலாசுத்திகழ்ந்தீரே. (ஞ)

மண்ணார்ந்தமணமுழவந்ததும்பமலியான்மகளென்னும்
பெண்ணார்ந்தமெய்மகிழப்பேணியெரிகொண்டாடினீர்
விண்ணார்ந்தமதியமிடைமாடத்தாரும்வியன்புகலிக்
கண்ணார்ந்தகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (ஞ)

களிபுல்குவல்லவுணரூர்மூன்றெரியக்கணைதொட்டீ
ரளிபுல்குபூமுடியீரமரசேத்தவருள்செய்தீர்
தெளிபுல்குதேனினமுமலருள்விரைசேர்திண்புகலி
யொளிபுல்குகோயிலேகோயிலாகவுகந்தீரே. (ஏ)

பரந்தோங்குபல்புகழ்சேரரக்கர்கோனைவரைக்கீழிட்
டிரந்தோன்றும்பாடல்கேட்டிகவையளித்தீருகவாதார்
புரந்தோன்றுமும்மதிலுமெரியச்செற்றீர்பூம்புகலி
வரந்தோன்றுகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (அ)

சலந்தாங்குதாமரைமேலயனுந்தரணியளந்தானுங்
கலந்தோங்கிவந்திழிந்துங்காணவண்ணக்கனலானீர்
புலந்தாங்கியைம்புலனுஞ்செற்றாரூர்வாழும்பூம்புகலி
நலந்தாங்குகோயிலேகோயில்காகயன்தீரே. (சு)

நெடிதாயவன்சமணுநிறைவொன்றில்லாச்சாக்கியருங்
கடிதாயகட்டுரையாற்சுழறுமேலோர்பொருளானீர்
பொடியாருமேனியினீர்புகலிமறையோர்புரிந்தேத்த
வடிவாருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (கo)

ஒப்பரியபூம்புகலியோங்குகோயின்மேயாரீ
யப்பரிசிற்பதியானவணிகொண்ஞானசம்பந்தன்

செப்பரியதண்டமிழாற்றெரிந்தபாடலிவைவல்லா
ரெப்பரிசிலிடர்நீங்கியிமையோருலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-இசை.

/9/ திருத்தலைச்சங்காடு-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நலச்சங்கவெண்குழைபுந்தோடும்பெய்தோர்நால்வேதஞ்
சொலச்சங்கையில்லாதீர்சுடுகாடல்லாற்கருதாதீர்
குலைச்செங்காயபைங்கமுகின்குளிர்கொள்சோலைக்குயிலாலுந்
தலைச்சங்கைக்கோயிலேகோயிலாகத்தாழ்ந்தீரே. (க)

தூணிமல்குகோவணமுந்தோலுங்காட்டித்தொண்டாண்டீர்
மணிமல்குகண்டத்தீரண்டர்க்கெல்லாமாண்பானீர்
* பிணிமல்குநூன்மார்பர்பெரியோர்வாழுந்தலைச்சங்கை
யணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (உ)

சீர்கொண்டபாடலீர்செங்கண்வெள்ளேறூர்தியீர்
நீர்கொண்டும்பூக்கொண்டுநீங்காத்தொண்டர்கின்றேத்தத்
தார்கொண்டநூன்மார்பர்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
யேர்கொண்டகோயிலேகோயிலாகவிருந்தீரே. (ங)

வேடஞ்சூழ்கொள்கையீர்வேண்டிநீண்டவெண்டிங்க
ளோடஞ்சூழ்கங்கையுமுச்சிவைத்தீர்தலைச்சங்கைக்
கூடஞ்சூழ்மண்டபமுங்குலாயவாசற்கொடித்தோணு
மாடஞ்சூழ்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ச)

சூலஞ்சேர்கையினீர்சுண்ணவெண்ணீறுடலீர்
நீலஞ்சேர்கண்டத்தீர்நீண்டசடைமேனிசேற்றி
ராலஞ்சேர்தண்கானலன்னமன்னுந்தலைச்சங்கைக்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. (ஞ)

நிலநீரொடாகாசமனல்காலாகிநின்றைந்து
புலனீர்மைபுணர்கண்டார்பொக்கஞ்செய்யார்போற்றுவார்
சலநீதலலாதார்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
நலநீரகோயிலேகோயிலாகநயந்தீரே. (ரு)

அடிபுல்குபைங்கழல்களார்ப்பப்பெயர்ந்தோரனலேந்திக்
கொடிபுல்குமென்சாயலுமையோர்பாகங்கூடினீர்
பொடிபுல்குநூன்மார்பர்புரிநூலாளர்தலைச்சங்கைக்
கடிபுல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (எ)

* பிணி-பிணித்தல்.

திரையார்ந்தமாகடல்சூழ்தென்னிலங்கைக்கோமா னை
வரையார்ந்ததோளடரவிரலாலூன்றுமாண்பினீ
ரரையார்ந்தமேகலையீரந்தணளர்தலேச்சங்கை
நிரையார்ந்தகோயிலேகோயிலாகநினைந்தீரே. (அ)

பாயோங்குபாம்பணைமேலானும்பைந்தாமரையானும்
போயோங்கிக்காண்கிலார்புறநின்றேரார்போற்றேவார்
தீயோங்குமறையாளர்திகழுஞ்செல்வத்தலேச்சங்கைச்
சேயோங்குகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (கூ)

அலையாரும்புனலுறந்தவமணர்குண்டர்சாக்கியர்
தொலையாதங்கவர்தூற்றத்தோற்றங்காட்டியாட்கொண்டீர்
தலையானகால்வேதத்தரித்தார்வாழுந்தலேச்சங்கை
நிலையார்ந்தகோயிலேகோயிலாகநின்றீரே. (க0)

நளிரும்புனற்காழிநல்லஞானசம்பந்தன்
குளிருந்தலேச்சங்கையோங்குகோயின்மேயானை
யொளிருமம்பிறையானையுரைத்தபாடலிவைவல்லார்
மிளிருந்திரைசூழ்ந்தவையத்தார்க்குமேலாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–செங்கணையகேசுவரர், தேவியார்–சௌந்தரியம்மை.

---

192 திருவிடைமருது–பண்–காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குநூன்மார்பினீர்பூதப்படையினீர்பூங்கங்கை
தங்குசெஞ்சடையினீர்சூடமவேதமோதினீ
ரெங்குமெழிலார்மறையோர்கண்முறையாலேத்தவிடைமருதின்
மங்குலுரிகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க)

நீரார்ந்தசெஞ்சடையீர்நெற்றித்திருக்கணிசுழ்வித்தீர்
போரார்ந்தவெண்மழுவொன்றுடையீர்பூதம்பாடலீ
ரேரார்ந்தமேகலையாள்பாகங்கொண்டீரிடைமருதிற்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (உ)

அழன்மல்குமங்கையிலேந்திப்பூதமவைபாடச்
சுழன்மல்குமாடலீர்சுடுகாடல்லாற்கருதாதீ
ரெழின்மல்குநான்மறையோர்முறையாலேத்தவிடைமருதிற்
பொழின்மல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (கூ)

பொல்லாப்படிதலையொன்றேந்திப்புறங்காட்டாடலீர்
வில்லாற்புரமூன்றுமெரித்தீர்விடையார்கொடியினீ

செல்லாக்கணங்களுமுறையாலேத்தவிடைமருதிற்
செல்வாய்கோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (சு)

வருந்தியமாதவத்தோர்வானேரேனோர்வந்திண்டிப்
பொருந்தியதைப்பூசமாடியுலகம்பொலிவெய்தத்
திருந்தியநான்மறையோர்சீராலேத்தவிடைமருதிற்
பொருந்தியகோயிலேகோயிலாகப்புக்கீரே. (டு)

சலமல்குசெஞ்சடையீர்சாந்தநீறுபூசினீர்
வலமல்குவெண்மழுவொன்றேந்திமயானத்தாடலீ
நிலமல்குநான்மறையோரினிதாயேத்தவிடைமருதிற்
புலமல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (சு)

புனமல்குகொன்றையீர்புலியினதளீர்பொலிவார்ந்த
சினமல்குமால்விடையீர்செய்யீர்கரியகண்டத்தீ
நினமல்குநான்மறையோரேத்தஞ்சிர்கொளிடைமருதிற்
சனமல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (எ)

சிலையுய்த்தவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திறலரக்கன்
றலைபத்துந்திண்டோளுநெரித்தீர்தையல்பாகத்தீ
ரிலைமொய்த்ததண்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தவிடைமருதி
னிலைமொய்த்தகோயிலேகோயிலாகயமர்ந்தீரே. (அ)

மறைமல்குநான்முகனும்மாலுமறியாவண்ணத்தீர்
கறைமல்குகண்டத்தீர்கபாலமேந்துகையினீ
ரறைமல்குவண்டினங்களாலுஞ்சோலையிடைமருதி
னிறைமல்குகோயிலேகோயிலாகவிருந்தீரே. (கூ)

சின்போர்வைச்சாக்கியருமாசுசேருஞ்சமணருந்
துன்பாயகட்டுரைகள்சொல்லியல்லாற்றவே
யின்பாயவந்தணர்களேத்துமேகொளிடைமருதி
லன்பாயகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (கo)

கல்லின்மணிமாடக்கழுமலத்தார்காலவ
னல்லவருமறையானற்றமிழ்ஞானசம்பந்த
னெல்லியிடைமருதிலேத்துபாடலிவைபத்துஞ்
சொல்லுவார்க்குங்கேட்பார்க்குந்துயரமில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

193 திருநல்லூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமருந்திருமேனியுடையீர்பிறங்குசடைதாழப்
பண்ணமருநான்மறையேபாடியாடல்பயில்கின்றீர்
திண்ணமரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தநல்லூர்
மண்ணமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க)

அலைமல்குதண்புன லும்பிறையுஞ்சூடியங்கையிற்
கொலைமல்குவெண்மழுவுமன லுமேந்துங்கொள்கையீர்
சிலைமல்குவெங்கணேயார்புரமூன்றெரித்தீர்திருநல்லூர்
மலைமல்குகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (உ)

குறைநிரம்பாவெண்மதியஞ்சூடிக்குளிர்புன்சடைதாழப்
பறைகவின்றபாடலோடாடல்பேணிப்பயில்கின்றீர்
சிறைகவின்றதண்புன லும்வயலுஞ்சூழ்ந்ததிருநல்லூர்
மறைகவின்றகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ஊ)

கூனமரும்வெண்பிறையும்புன லுஞ்சூடுங்கொள்கையீர்
மானமருமென்னலீழியாள்பாகமாகுமாண்பினீர்
தேனமரும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வானமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (எ)

நிணங்கவருமூலையுமன லுமேந்திநெறிகுழலா
ளணங்கமரும்பாடலோடாடன்மேவுமழகினீர்
திணங்கவருமாடரவும்பிறையுஞ்சூடித்திருநல்லூர்
மணங்கமழுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ஏ)

கார்மருவுபூங்கொன்றைசூடிக்கமழ்புன்சடைதாழ
வார்மருவுமென்முலையாள்பாகமாகுமாண்பினீர்
தேர்மருவுநெடுவீதிக்கொடிகளாடுந்திருநல்லூ
ரேர்மருவுகோயிலேகோயிலாகவிருந்தீரே. (ஐ)

ஊன்றோயும்வெண்மழுவுமன லுமேந்தியுமைகாண
மீன்றோயுந்திசைநிறையவோங்கியாடும்வேடத்தீர்
தேன்றோயும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வான்றோயுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ஒ)

காதமரும்வெண்குழையீர்கழுத்தவரக்கன்மலியெடுப்ப
மாதமருமென்மொழியாண்மறுகும்வண்ணங்கண்டுகந்தீர்
தீதமராவண்தணர்கள்பரவியேத்துந்திருநல்லூர்
மாதமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ஓ)

போதின்மேலயன்றிருமால்போற்றியும்மைக்காணது
நாதனேயிவனென்றுநயந்தேத்தமகிழ்ந்தளித்தீர்
தீதிலாவண்தணர்கடமூன்றும்புந்திருநல்லூர்
மாதராளவளோடுமன்னுகோயின்மகிழ்ந்தீரே. (ஔ)

பொல்லாதசமணரொடுபுறங்கூறுஞ்சாக்கியரொன்
றல்லாதாரறவுரைவிட்டடியார்கள்போற்றுறைவா
னல்லார்களந்தணர்கணஞ்மேத்துந்திருநல்லூர்
மல்லார்ந்தகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க0)

கொந்தணவும்பொழில்புடைசூழ்கொச்சைமேவுகுலவேந்தன்
செந்தமிழின்சம்பந்தன்சிறைவண்புனல்சூழ்திருநல்லூர்ப்
பந்தணவுமெல்விரலாள்பங்கன்றன்னீப்பயில்பாடல்
இந்தனையாலுரைசெய்வார்சிவலோகஞ்சேர்ந்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

194 திருக்குடவாயில்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கலிவாழுமங்கையீர்கொங்கையாருங்கருங்கூந்த
லலிவாழுஞ்செஞ்சடையிலரவும்பிறையுமமர்வித்தீர்
குலிவாழைகமுகம்பொன்பவளம்பழுக்குங்குடவாயி
னிலிவாழுங்கோயிலேகோயிலாகின்றீரே. (க)

அடியார்ந்தபைங்கழலுஞ்சிலம்புமார்ப்பவங்கையிற்
செடியார்ந்தவெண்டலையொன்றேந்தியுலகம்பலிதேர்வீர்
குடியார்ந்தமாமறையோர்குலாவியேத்துங்குடவாயிற்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. (உ)

கழலார்பூம்பாதத்தீரோதக்கடலில்விடமுண்டன்
றழலாருங்கண்டத்தீரண்டர்போற்றுமளவினீர்
குழலாரவண்டினங்கள்கீதத்தொலிசெய்குடவாயி
னிழலார்ந்தகோயிலேகோயிலாகவிகழ்ந்தீரே. (ஊ)

மறியாருங்கைத்தலத்தீர்மங்கைபாகமாகச்சேர்ந்
தெறியாருமாமழுவுமெரியுமேந்துங்கொள்கையீர்
குறியார்ந்தவண்டினங்கடேன்மிழற்றுங்குடவாயி
னெறியாருங்கோயிலேகோயிலாகவிகழ்ந்தீரே. (எ)

இழைபார்ந்தகோவணமுங்கீளுமெழிலாருடையாகப்
பிழையாதருளம்பெய்தாடல்பாடல்பேணினீர்
குழையாரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தகுடவாயில்
விழவார்ந்தகோயிலேகோயிலாகமிக்கீரே. (ஏ)

ஆரவார்ந்ததிருமேனியானவெண்ணீறுடினீ
ரிரவார்ந்தபெய்பலிகொண்டிமையோரேத்தநஞ்சுண்டீர்
சூரவார்ந்தபூஞ்சோலைவாசம்வீசுங்குடவாயிற்
றிருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (ஐ)

பாடலார்வாய்மொழியீர்பைங்கண்வெள்ளேறூர்தியீ
ராடலார்மாகடத்தீரரிவைபோற்றுமாற்றலீர்
கோடலார்தும்பிமுரன்றிசைபிழற்றுங்குடவாயி
னீடலார்கோயிலேகோயிலாகவிகழ்ந்தீரே. (ஒ)

கொங்கார்ந்தபைங்கமலத்தயனுங்குமளாய்நிமிர்ந்தாலு
மங்காத்துதள்ளாடவழலாய்நிமிர்ந்தீரிலங்கைக்கோன்
றங்காதன்மாமுடியுந்தாளுமடர்த்தீர்குடவாயிற்
பங்கார்ந்தகோயிலேகோயிலாகப்பரிந்தீரே. (அ-கூ)

தூசார்ந்தசாக்கியருந்தூய்மையில்லாச்சமணரு
மேசார்ந்தபுன்மொழிகேத்தெழில்கொண்மாடக்குடவாயி
லாசாரஞ்செய்மறையோராளவிற்குன்றுதடிபோற்றத்
தேசார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (கo)

நளிர்பூந்திரைமல்குகழிஞானசம்பந்தன்
குளிர்பூங்குடவாயிற்கோயின்மேயகோமானை
யொளிர்பூந்தமிழ்மாலையுரைத்தபாடலிவைவல்லார்
தளர்வானதாளெழியத்தகுசீர்வானத்திருப்பாரே. (க்க)

திருச்சிற்றம்பலம்.

---

195 சீகாழி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நலங்கொண்முத்துமணியுமணியுந்திரளோதக்
கலங்கடன்னிற்கொண்டுகரைசேர்கலிக்காழி
வலங்கொண்மழுவொன்றுடையாய்விடையாயெனவேத்தி
யலங்கல்சூட்டவல்லார்க்கடையாவருநோயே. (க)

ஊராருவரிச்சங்கும்வங்கங்கொடுவந்து
காராரோதங்கரைமேலுயர்த்துங்கலிக்காழி
நீரார்சடையாய்நெற்றிக்கண்ணுவென்றென்று
பேராயிரமும்பிதற்றத்தீரும்பிணிதானே. (உ)

வடிகொள்பொழிலின்மழலைவரிவண்டிசைசெய்யக்
கடிகொள்போதிற்றென்றலணையுங்கலிக்காழி
முடிகொள்சடையாய்முதல்வாவென்றுமுயன்றேத்தி
யடிகைதொழுவார்க்கில்லையல்லலவலமே. (ங)

மணிக்கேயேறவளஞ்செய்பவளம்வளர்முத்தங்
கணிக்குங்கட்டுளோதமேறுங்கலிக்காழிப்
பணிக்கைப்பகட்டீருரியாய்பெரியாயெனப்பேணி
நினைக்கவல்லவடியார்நெஞ்சினல்லாரே. (ச)

பருதியயன்கும்பாரிற்சீரார்பணியாலே
கருதிவிண்ணோர்மண்ணோர்விரும்புங்கலிக்காழிச்
சுருதிமறைநான்கானசெம்மைதருவாணக்
கருதியெழுமின்வழுவாவண்ணந்துயர்போமே. (ஞ)

மந்தமருவும்பொழிலெழிலார்மதவுண்டு
கந்தமருவவரிவண்டிசைசெய்கலிக்காழிப்
பந்தநீங்கவருளும்பரனேயெனவேத்திச்
சிந்தைசெய்வார்செம்மைநீங்கா திருப்பாரே. (சு)

புயலார்பூமிநாமமோதிப்புகழ்மல்கக்
கயலார்கண்ணார்பண்ணொலிசெய்கலிக்காழிப்
பயில்வான்றன்னேப்பத்தியாரத்தொழுதேத்த
முயல்வார்தம்மேல்வெம்மைக்கூற்றமுடுகாதே. (எ)

அரக்கன்முடிதோணெரியவடர்த்தானடியார்க்குக்
கரக்கில்லாதருள்செய்பெருமான்கலிக்காழிப்
பரக்கும்புகழான்றன்னேயேத்திப்பணிவார்மேற்
பெருக்குமின்பந்தன்பமானபிணிபோமே. (அ)

மாணுயுலகங்கொண்டமாலுமலரோனுங்
காணவண்ணமெரியாய்நிமிர்ந்தான்கலிக்காழிப்
பூணர்முலையாள்பங்கத்தாணேப்புகழ்ந்தேத்திக்
கோணெருஞ்சமுடையார்க்கில்லைகுற்றமே. (சு)

அஞ்சியல்லன்மொழிந்துதிரிவாரமணர்தர்
கஞ்சிகாலியுண்பார்க்கரியான்கலிக்காழித்
தஞ்சமாயதலைவன்றன்னேநினைவார்க
டுஞ்சலில்லாநல்லவுலகம்பெறுவாரே. (கo)

ஊழியாயபாரிலோங்குமுயர்செல்வக்
காழியீசன்கழலேபேணுஞ்சம்பந்தன்
சூழுமனத்தாலுரைத்ததமிழ்களிவைவல்லார்
வாழிநீங்காவானேருலகின்மகிழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

196 திருப்பாசூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையாரதலியின்பிசையார்செஞ்சொல்லார்
வந்துமாலைவைகும்போழ்தென்மனத்துள்ளார்
மைந்தாமணுளாவென்னமிழ்வாரூர்போலும்
பைந்தண்மாதவிசோலைசூழ்ந்தபாசூரே. (க)

பேரும்பொழுதும்பெயரும்பொழுதும்பெம்மானென்
றூருந்தனேயுமடியாரேத்தவருள்செய்வா
ரூருமரவமுடையார்வாழுமூர்போலும்
பாரின்பிசையார்பாட்டலோவாப்பாசூரே. (உ)

கையாற்றொழுதுதலைசாய்த்துள்ளங்கனிவார்கண்
மெய்யார்குறையுந்துயருந்தீர்க்கும்விகிர்தனூர்

நெய்யாடுதலஞ்சுடையார்நிலாவுமூர்போலும்
பையாய்நாகங்கோடலீனும்பாரூரே. (சு)

பொங்காடரவும்புனலுஞ்சடைமேற்பொலிவெய்தக்
கொங்கார்கொன்றைசூடியெனுள்ளங்குளிர்வித்தார்
தங்காதலியுந்தாமும்வாழுமூர்போலும்
பைங்கான்முல்லைபல்லரும்பீனும்பாரூரே. (சு)

ஆடற்புரியுமைவாயரவொன்றரைச்சாத்தஞ்
சேடச்செல்வச்சிங்தையுளென்றும்பிரியாதார்
வாடற்றலையிற்பலிதேர்கையாரூர்போலும்
பாடற்குயில்கள்பயில்பூஞ்சோலைப்பாரூரே. (நி)

கானின்றகிரக்கனல்வாய்நாகங்கச்சாகத்
தோலொன்றுடையார்விடையார்தம்மைத்தொழுவார்கண்
மால்கொண்டோடமையமீர்ப்பாரூர்போலும்
பால்வெண்மதிதோய்மாடஞ்சூழ்ந்தபாரூரே. (சு)

கண்ணினையிலேகண்ணெனுடையார்கழலுன்னி
யெண்ணுந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ருண்ணின்றுருகவுகவைதருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாரூரே. (எ)

தேசுசுன்றுத்தெண்ணீரிலங்கைக்கோமானைக்
கூசலடர்த்துக்கூர்வாள்கொடுப்பார்தம்மையே
பேசிப்பிதற்றப்பெருமைதருவாரூர்போலும்
பாசித்தடமும்வயலுஞ்சூழ்ந்தபாரூரே. (அ)

நகுவாய்மலர்மேலயனுநாகத்தணையானும்
புகுவாயறியார்புறநின்றேரார்போற்றேவார்
செகுவாயுகுபற்றலீசேர்கையாரூர்போலும்
பகுவாய்காரையாரல்வாரும்பாரூரே. (சு)

தூயவெயினின்முழல்வார்தவர்தோயாடையார்
நாவில்வெய்யசொல்லித்திரிவார்நயமில்லார்
காவல்வேவக்கணையொன்றெய்தானார்போலும்
பாவைக்குரவம்பயில்பூஞ்சோலைப்பாரூரே. (கo)

ஞானமுணர்வான்காழிஞானசம்பந்தன்
றேனும்வண்டுமின்னிசைபாடுந்திருப்பாரூர்க்
கானம்முறைவார்கழல்சேர்பாடலிவைவல்லா
ரூனமிலராயும்பர்வானத்தரைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பாரூர்நாதர், தேவியார்-புகபதிநாயகியம்மை.

ஆ பதிகம்—கo.

197 திருவெண்காடு–பண்–காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உண்டாய்கஞ்சையுமையோர்பங்காவென்றுள்கித்
தொண்டாய்த்திரியுமடியார்தங்கடியரங்க
ளண்டாவண்ணமறப்பாசனைதயூர்போ லும்
வெண்டாமரைமேற்கருவண்டியாழ்செய்வெண்காடே. (க)

நாதனம்மையாள்வானென்றுநவின்றேத்திப்
பாதம்பன்னள்பணியுமடியார்தங்கண்மே
லேதந்தீரவிருந்தான்வாழுமூர்போ லும்
வேதத்தொலியாற்றினிசொற்பயிலும்வெண்காடே. (உ)

தண்முத்தரும்பத்தடமூன்றுடையான்றனையுன்னிக்
கண்முத்தரும்பக்கழற்சேவடிகைதொழுவார்க
ளுண்முத்தரும்பவுவகைதருவாரூர்போ லும்
வெண்முத்தரும்பிப்புனல்வந்தலைக்கும்வெண்காடே. (ங)

நரையார்வந்தூநாளுங்குறுகிநுகாமுன்
னுரையால்வேறுள்குவார்களுள்ளத்தே
கரையாவண்ணங்கண்டான்மேவுமூர்போ லும்
விரையார்கமலத்தன்னமருவும்வெண்காடே. (ச)

பிள்ளைப்பிறையும்புனலுஞ்சூடும்பெம்மானென்
றுள்ளத்துள்ளித்தொழுவார்தங்களுறுநோய்க
டள்ளிப்போகவருளுந்தலைவனூர்போ லும்
வெள்ளைச்சுரிசங்குலவித்திரியும்வெண்காடே. (ஞ)

ஒளிகொண்மேனியுடையாயும்பராளியென்
றளியராகியழுதற்றுமடியார்சுட்
டெளியானமரர்க்கரியான்வாழுமூர்போ லும்
வளியவுருவிலாணவணங்கும்வெண்காடே. (சு)

கோள்வித்தனையகூற்றந்தன்னைக்குறிப்பினுன்
மாள்வித்தவனைமகிழ்ந்தங்கேத்தமாணிக்க
யாள்வித்தமரருலகமளிப்பானூர்போ லும்
வேள்விப்புகையால்வானமிருள்கூர்வெண்காடே. (எ)

வனையார்முன்கைமலையாள்வெருவவரையூன்றி
மூனையார்மதியஞ்சூடியென்றுமுரப்போது
மினையாதேத்தவிருந்தானெந்தையூர்போ லும்
வினையார்கழனிப்பழனஞ்சூழ்ந்தவெண்காடே. (அ)

கரியாரனுகமலமலரான்காணுமை
யெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானென்பார்கட்

குரியாரனமரர்க்கரியான்வாழுமூர்போலும்
விரியார்பொழிலின்வண்டுபாடும்வெண்காடே. (சூ)

பாடும்மடியார்பலருங்கூடிப்பரிந்தேத்த
வாடுமாவமசைத்தபெருமானறிவின்றி
மூடமுடையசமண்சாக்கியர்களுணராத
வேடமுடையபெருமான்பதியாம்வெண்காடே. (சஅ)

விடையார்கொடியான்மேவியுறையும்வெண்காட்டைக்
கடையார்மாடங்கலந்துதோன்றுங்காழியா
னடையாரின்சொன்ஞானசம்பந்தன்றமிழ்வல்லார்க்
கடையாவினைகளமரலோகமாள்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்

198 திருமீயச்சூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரன்றுறத்தமைந்தன்றுதைதன்
மீயச்சூரேதொழுதும்வினையைவீட்டுமே. (சு)

பூவார்சடையின்முடிமேற்புனலரனல்கொள்வார்
நாவார்மறையர்பிறையர்நறவெண்டலையேந்தி
யேவார்மலியேயிலையாச்சுழியம்பெரிவாங்கி
மேவார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (உ)

பொன்னேர்கொன்றைமாமலர்புரளுமகலத்தான்
மின்னேர்சடைகளுடையான்மீயச்சூரானேத்
தன்னேர்பிறரில்லானேத்தலியால்வணங்குவார்க்
கன்னேரிமையோருலகமெய்தற்கரிதன்றே. (ரு)

வேகமதகலியானீரெருவுரிபோர்த்துப்
பாகமுமையோடாகப்படிதம்பலபாட
நாகமரைமேலசைத்தநடமாடியநம்பன்
மேகமுரிஞ்சுபொழில்சூழ்மீயச்சூரானே. (ச)

விடையார்கொடியார்சடைமேல்விளங்கும்பிறைவேடம்
படையார்பூதஞ்சூழப்பாடலாடலார்
பெடையார்வரிவண்டீணையும்பிணைசேர்கொன்றையார்
விடையார்நடையொன்றுடையார்மீயச்சூராரே. (டு)

குளிருஞ்சடைகொண்முடிமேற்கோலமார்கொன்றை
யொளிரும்பிறையொன்றுடையாரெருவண்கைகோடி

நளிரும்மணிசூழ்மாலைநட்டகவினம்பன்
மிளிரும்மரவமுடையான்மீயச்சூரானே. (அ)
நீலவடிவர்மிடறுநெடியர்கிரில்லார்
கோலவடிவுதமதாங்கொள்கையறிவொண்ணூர்
காலர்கழலர்கரியினுரியர்மழுவாளர்
மேலர்மதியர்விதியர்மீயச்சூராரே. (ஈ)
புலியினுரிதோலாடைபூசும்பொடிநீற்ற
ரொலிகொள்புனலோர்சடைமேற்கரந்தாருமையஞ்ச
வலியதிரடோள்வன்கணரக்கர்கோன்றன்னை
மெலியவரைக்கீழடர்த்தார்மீயச்சூராரே. (உ)
காதின்மிளிருங்குழையர்கரியகண்டத்தார்
போதிலவனுமாலுந்தொழப்பொங்கெரியானூர்
கோதிவரிவண்டறையூம்பொய்கைப்புனன்மூழ்கி
மேதிபடியும்வயல்சூழ்மீயச்சூராரே. (ஊ)
கண்டார்நாணும்படியார்கலிங்கமுடைபட்டை
கொண்டோர்சொல்லைக்குறுகாநூயர்தகொள்கையார்
பெண்டாண்பாகமுடையார்பெரியவரைவில்லால்
விண்டார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (கo)
வேடமுடையபெருமானுறையுமீயச்சூர்
நாடும்புகழார்புகலிஞானசம்பந்தன்
பாடலாயதமிழ்மாலைதுமொழிந்தஞ்சி
யாடுமடியாரகல்வானுலகமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-முயற்சிநாதேசுவரர், தேவியார்-சுந்தராயகியம்மை.

(99 அரிசிற்கரைத்திருப்புத்தூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுஞ்சடைமேலிளவெண்டிங்கள்விளங்கவே
தன்னுங்கடனஞ்சிருடோய்கண்டர்தொன்மூதூர்
ரன்னம்படியும்புனலாரரிசிலிலைகொண்டு
பொன்னும்மணியும்பொருதென்கரைமேற்புத்தூரே. (க)
மேவாவசுரர்மேவெயில்வேவமலைவில்லா
லேவாரெரிவெங்கணையர்லெய்தானெய்தமூர்
நாவானைதனமோதிநாடோறும்
பூவானீராற்பூசுசர்போற்றும்புத்தூரே. (உ)
பல்லார்தலைசேர்மாலைசூடிப்பாம்பும்பூண்
டெல்லாவிடமும்வெண்ணீறணிந்தோரேறேறி

கல்லார்மங்கைபங்கரேனுங்காணுங்காற்
பொல்லாரல்லரழகியர்புத்தூர்ப்புனிதரே (ங)

வரியேர்வளையாளரிவையஞ்சவருகின்ற
கரியேருரிவைபோர்த்தகடவுள்கருதுமூ
ரரியேர்கழனிப்பழனஞ்சூழ்ந்தங்கழகாய
பொரியேர்புன்குசொரிபூஞ்சோலைப்புத்தூரே. (ச)

என்போடரவமேனத்தெயிறேடெழிலாமை
மின்போற்புரிநூல்விரவிப்பூண்டமணிமார்ப
ரன்போடுருகுமடியார்க்கன்பரமருமூர்
பொன்போதலர்கோங்கோங்குசோலைப்புத்தூரே. (ஞ)

வள்ளிமுலைதோய்குமரன்முதைவான்றுயும்
வெள்ளிமலைபோல்விடையொன்றுடையான்மேவுமூர்
தெள்ளிவருநீரிசிற்றென்பாற்சிறைவண்டும்
புள்ளுமலியும்பொய்கைசூழ்ந்தபுத்தூரே. (சு)

நிலந்தணீரோடனல்காலிவசும்பினீர்மையான்
மிலந்திசெங்கட்சோழனுக்செய்தானூ
ரலந்தவடியானற்றைக்கன்றேர்காசெய்திப்
புலர்ந்தகாலைமாலைபோற்றும்புத்தூரே. (எ)

இத்தேரகலிம்மலைபேர்ப்பனென்றேந்தும்
பத்தோர்வாயான்வரைக்கீழலறப்பாதந்தான்
வைத்தாரருள்செய்வரதன்மருவுமூரான
புத்தூர்க்காணப்புகுவார்வினைகள்போகுமே. (அ)

மூள்ளார்கமலத்தயன்மான்முடியோடட்டதேட
வொள்ளாரெரியாயுணர்தற்கரியாளூர்போலுங்
கள்ளார்செய்தல்கழுநீராம்பல்கமலங்கள்
புள்ளார்பொய்கைப்பூப்பலதோன்றும்புத்தூரே. (கூ)

கையார்சோகுகவர்குண்டர்களுந்துவருண்ட
மெய்யார்போர்வைமண்டையர்சொல்லுமெய்யல்ல
பொய்யாமொழியாலத்தணர்போற்றும்புத்தூரி
லையாவென்பார்க்கையுறவின்றியழகாமே. (கo)

நறவங்கமழ்பூங்காழிஞானசம்பந்தன்
பொறிகொளரவம்பூண்டானுண்டான்புத்தூர்மேற்
செறிவண்டமிழ்செய்மாலைசெப்பவல்லார்க
ளறவன்கழல்சேர்ந்தன்போடின்பமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழாநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–படிக்காசளித்தலீசுவரர், தேவியார்–அழகம்மை.

200 திருமுதுகுன்றம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

தேவரறியோம்பிழையைப்பொறுப்பாய்பெரியோனே
யாவாவென்றங்கடியார்தங்கட்கருள்செய்வா
யோவாவுவரிகொள்ளவுயர்த்தாயென்றேத்தி
மூவாமுனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றே. (க)

எந்தையிவனென்றிரவிமுதலாவிறைஞ்சுவார்
சிந்தையுள்ளேகோயிலாகத்திகழ்வானே
மந்தியேறியின மாய்மலர்கள்பலகொண்டு
முந்தித்தொழுதவணங்குங்கோயின்முதுகுன்றே. (உ)

நீடுமலரும்புனலுங்கொண்டுநிரந்தரந்
தேடுமடியார்சிந்தையுள்ளேதிகழ்வானைப்
பாடுங்குயிலினயலேயிள்ளைபயின்றேத்த
மூடுஞ்சோலைமுகிறேய்கோயின்முதுகுன்றே. (ஊ)

தெரிந்தவடியார்சிவனேயென்றிசைதோறுங்
குருந்தமலருங்குரவினலருங்கொண்டேத்தி
யிருந்துதினந்தமிரவும்பகலுமேத்துஞ்சீர்
மூரிந்தமேங்தவழுஞ்சோலைமுதுகுன்றே. (எ)

வைத்தநிதியேமணியேயென்றுவருந்தித்தஞ்
சித்தகைந்துசிவனேயென்பார்சிந்தையார்
கொத்தார்சந்தங்குரவும்வாரிக்கொணர்ந்துந்து
முத்தாறுடையமுதல்வர்கோயின்முதுகுன்றே. (ஏ)

வம்பார்கொன்றைவன்னிமத்தமலர்தூவி
நம்பாவென்னகல்லும்பெருமானுறைகோயில்
கொம்பார்குரவுகொகுடிமுல்லைகுவிந்தெங்கு
மொய்ம்பார்சோலைவண்டுபாடுமுதுகுன்றே. (ஐ)

வாசங்கமழும்பொழில்சூழிலங்கைவாழ்வேக்தை
நாசஞ்செய்தநங்கள்பெருமானமர்கோயில்
பூசைசெய்தவடியார்நின்றுபுகழ்ந்தேத்த
மூசிவண்டுபாடுஞ்சோலைமுதுகுன்றே. (அ)

அல்லிமலர்மேலயனுமாலினணையானுஞ்
சொல்லிப்பரவித்தொடரவொண்ணாச்சோதியூர்
கொல்லிவேடர்கூடிநின்றுகும்பிட
முல்லையயலேமுல்லைசெய்யுமுதுகுன்றே. (கூ)

கருகுமூடலார்கஞ்சியுண்டுகடுவேதின்
முருகுசிந்தையில்லார்க்கயலானுறைகோயி

நிருசுலேய்கள்சிறிதேதவனீயச்சிறுமன்தி
முருகின்பணிமேலிருந்துகடஞ்செய்முதுகுன்றே. (கo)

அறையார்கடல்சூழ்தண்காழிச்சம்பந்தன்
முறையான்முனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றைக்
குறையாப்பனுவல்கூடிப்பாடவல்லார்கள்
பிறையார்சடையெம்பெருமான்கழல்கள்பிரியாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

২০/ திருப்பிரமபுரம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணிவேலிலர்போலுங்கபாலந்தரித்திலர்போலு
மறையுகவின்றிலர்போலுமாசுணமார்த்திலர்போலும்
பறையுங்கரத்திலர்போலும்பாசம்பிடித்திலர்போலும்
பிறையுஞ்சடைக்கிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (க)

கூரம்பதுவிலர்போலுங்கொக்கினிறகிலர்போலு
மாரமும்பூண்டிலர்போலுமாமையணிந்திலர்போலுந்
தாருஞ்சடைக்கிலர்போலுஞ்சண்டிக்கருளிலர்போலும்
பேரும்பலவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (உ)

சித்தவடிவிலர்போலுந்தேசுசந்திரிந்திலர்போலுங்
கத்திவருங்கடுங்காளிகதங்கடவிர்த்திலர்போலு
மெய்த்தநவனமிடந்தார்க்காழியளித்திலர்போலும்
பித்தவடிவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (ஊ)

கச்சரவாட்டிலர்போலுகஞ்சமிடற்றிலர்போலுங்
கச்சுகரித்திலர்போலுங்கங்கைதரித்திலர்போலு
மொய்ச்சவன்பேயிலர்போலுமுப்புரமெய்திலர்போலும்
பிச்சையிரந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (எ)

தோடுசெவிக்கிலர்போலுஞ்சூலம்பிடித்திலர்போலு
மாடுதடக்கையலியாணியுரித்திலர்போலு
மோடுகரத்திலர்போலுமொள்ளழல்கையிலர்போலும்
பீடுமிருத்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (ஏ)

வீண்ணவர்கண்டிலர்போலும்வேள்வியழித்திலர்போலு
மண்ணலயன்றலைவீழவன்றுமறுத்திலர்போலும்
வண்ணவெலும்பினொடக்குவடங்கடரித்திலர்போலும்
பெண்ணினமொய்த்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (ஐ)

பன்றியின்கொம்பிலர்போலும்பார்த்தற்கருளிலர்போலுங்
கன்றியகாலனைவீழக்கால்கொடுபாய்திலர்போலுங்

தன்றுபிணஞ்சுடுகாட்டிலாடித்ததைந்திலர்போலும்
பின்றியும்பீடம்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. (எ)

பரசுதரித்திலர்போலும்படஅலூண்டிலர்போலு
மரசனிலங்கையர்கோனையன்றுமடர்த்திலர்போலும்
புரைசெய்புனத்திளமானும்புலியினதளிலர்போலும்
பிரசமலர்ப்பொழில்சூழ்ந்தபிரமபுரமமர்ந்தாரே. (அ)

அடிமுடிமாலயன்றேடவன்றுமளப்பிலர்போலுங்
கடிமலரைங்கணிவேளைக்கனலவிழித்திலர்போலும்
படிமலர்ப்பாலனுக்காகப்பாற்கடலீந்திலர்போலும்
பிடிநடைமாதர்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. (சு)

வெற்றரைச்சீவரத்தார்க்குவெளிப்படநின்றிலர்போலு
மற்றவரானிழனல்வர்க்கறங்களுரைத்திலர்போலு
முற்றவரென்றிலர்போலுமோடுமுடிக்கிலர்போலும்
பெற்றமுமூர்ந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (கo)

பெண்ணுருவாணுருவல்லாப்பிரமபுரநகர்மேய
வண்ணல்செய்யாதனவெல்லாமறிந்துவகைவகையாலே
நண்ணியஞானசம்பந்தனின்றனபத்தும்வல்லார்கள்
விண்ணவரோடினிதாகவீற்றிருப்பாரவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-சுஇ.

---

202 திருவாலவாய்-திரு நீற்றுப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே. (க)

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுண்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தருவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (உ)

முத்திதருவதுநீறுமுனிவாணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (ங)

காணலினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (சு)

பூசலினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசலினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறுவந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (டு)

அருத்தமதாவதுநீறுவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (சு)

எயிலதுவட்டநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபரக்கியமாவதுநீறு
துயிலெத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே. (எ)

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தருவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. (அ)

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
வாலமுதுண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. (கூ)

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதலினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்தும்மாலவாயான்றிருநீறே. (கூ)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவுபூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

203 திருப்பெரும்புலியூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணுமோர் பாகமுடையார் மாலுமோர் பாகமுடையார்
விண்ணுமோர் பாகமுடையார்வே தமுடையவிமலர்
கண்ணுமோர் பாகமுடையார்கங்கைசடையிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே (க)

தன்னுகடற்பவளஞ்சேர்தூயகீண்டதிரடோள்கண்
மின்னுசுடர்க்கொடிபோலுமேனியினொரு * கங்கைக்
கன்னிகளின்புனையோடுகலைமதிமாலைகலந்த
பின்னுசடைப்பெருமானர்பெரும்புலியூர்பிரியாரே. (உ)

கள்ளமிதித்தபாலங்கைதனிலேமிகவேக்கித்
துள்ளமிதித்துநின்றுடுக்தொழிலரெழின்மிகுசெல்வர்
வெள்ளநகுதலைமாலைவிரிசடைமேன்மிளிர்கின்ற
பிள்ளைமதிப்பெருமானர்பெரும்புலியூர்பிரியாரே. (ங)

ஆடலிலையமுடையாரருமறைதாங்கியாதங்கம்
பாடலிலையமுடையார்பன்மையொருமைசெய்தஞ்சு
மூடலிலையமுடையார்யோகெனும்பேரொளிதாங்கிப்
பீடலிலையமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. (ச)

தோடுடையார்குழைக்காதிற்சுடுபெரடியாரனலாடக்
காடுடையரெரிவீசுங்கையுடையார்கடல்சூழ்ந்த
நாடுடையார்பொருளின்பநல்லவைகாளுகயந்த
பீடுடையார்பெருமானர்பெரும்புலியூர்பிரியாரே. (ஞ)

கற்றதறப்பணிசெய்துகாண்டுமென்பாரவர்தங்கண்
மூற்றிதறிதுமென்பார்கண்முதலியர்வேதபுராணர்
மற்றிதறிதுமென்பார்கண்மனத்திடையார்பணிசெய்யப்
பெற்றிபெரிதுமுகப்பார்பெரும்புலியூர்பிரியாரே. (சு)

மறையுடையாரொலிபாடன்மாமலர்ச்சேவடிசேர்வார்
குறையுடையார்குறைதீர்ப்பார்குழகரழகர்நஞ்செல்வர்
கறையுடையார்திகழ்கண்டங்கங்கைசடைபிற்கரந்தார்
பிறையுடையார்சென்னிதன்மேற்பெரும்புலியூர்பிரியாரே. (எ)

உறவியுமின்புருடீருமோங்குதல்வீடெளிதாகித்
துறவியுங்கூட்டமுங்தாட்டித்தன்பமுமின்பமுந்தோற்றி
மறவியெஞ்சிதனைமாற்றிவாழவல்லார்தமக்கென்றும்
பிறவியறுக்கும்பிரானர்பெரும்புலியூர்பிரியாரே. (அ)

சிருடையாரடியார்கள்சேடரொப்பார்சடைசேரு
நீருடையார்பொடிப்பூசுநினைப்புடைபார்விரிகொன்றைத்

* கங்கைக்கன்னிகளின் புனையோடு-என்பதனுக்கு-கங்கையாறுகளாகிய மாலை புடன் எனப்பொருள் தோன்றுகின்றது.

தாருடையார்விடையூர்வார்தலைரக்நூற்றுப்பத்தாய
பேருடையார்பெருமானூர்பெரும்புலியூர்பிரியாரே. (சு)

உரிமையுடையடியார்களுள்ளுறவுள்கவல்லார்கட்
கருமையுடையனகாட்டியருள்செயுமாதிமூதல்வர்
கருணமயுடைநெடுமாலுங்கடிமலரண்ணலுங்காணாப்
பெருமையுடைப்பெருமானூர்பெரும்புலியூர்பிரியாரே. (கo)

பிறைவளருமுடிச்சென்னிப்பெரும்புலியூர்ப்பெருமானே
நறைவளரும்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
மறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தந்துயர்நீங்கி
நிறைவளர்நெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வியாக்கிரபுரீசுவரர், தேவியார்-சுவந்தராம்பிகையம்மை.

---

೭೦೪ திருக்கடம்பூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வானமர்திங்களுரீருமருவியவார்சடையானைத்
தேனமர்கொன்றையினானைத்தேவர்தொழப்படுவானைக்
கானமரும்பிணைபுல்கிக்கலபயிலுங்கடம்பூரிற்
ரூனமர்கொள்கையினானைத்தாடொழவீடெளிதாமே. (க)

அரவினோடாமையும்பூண்டாதகில்வேங்கையதளும்
விரவுந்திருமுடிதன்மேல்வெண்டிங்கள்சூடிவிரும்பிப்
பரவுந்தனிக்கடம்பூரிற்பைங்கண்வெள்ளேற்றண்ணல்பாத
மிரவும்பகலும்பணியவின்பமமக்கதுவாமே. (உ)

* இனிபடுமின்சொலினுர்களிருங்குழன்மேலிசைந்தேறத்
தெனிபடுகொள்கைகலந்ததித்தொழிலார்கடம்பூரி
லொளிதருவெண்பிறைசூடியொண்ணுதலோடனுகிப்
புலியதளாடைபுனைந்தான்பொற்கழல்போற்றுதுநாமே. (ங)

பறையொடுசங்குமியம்பப்பல்கொடிசேர்நெடுமாடங்
கறையுடைவேல்வரிக்கண்ணர்கலியெசேர்கடம்பூரின்
மறையொலிகூடியபாடன்மருவினின்றுடன்மகிழும்
பிறையுடைவார்சடையானைப்பேணவல்லார்பெரியோரே. (ச)

தீவிரியக்கழலார்ப்பச்சேயெரிகொண்டிடுகாட்டின்
னுவிரிகூந்தற்பேய்கணகைகொடியநட்டநவின்றேன்
காவிரிகொன்றைகலந்தகண்ணுதலான்கடம்பூரிற்
பாவிரிபாடல்பயில்வார்பழியெரிபோவமிலாரே. (ஞ)

* இனி-என்பது ஏழிசையிலொன்று.

தண்புனலீள்வயறோறுந்தாமரைமேலனம்வைகக்
கண்புணர்காவில்வண்டேறக்கள்ளவிழுங்கடம்பூரிற்
பெண்புனைகூறுடையாணப்பின்னுசடைப்பெருமானைப்
பண்புனைபாடல்பயில்வார்பாவமிலாதவர்தாமே. (சு)

பலிகெழுசெம்மலர்ச்சாரப்பாடலோடாடலறாத
கலிகெழுவீதிகலந்தகார்வயல்சூழ்கடம்பூரி
லொலிதிசழ்சுங்கைகரந்தாளெண்ணுதலாளுமைகேள்வன்
புலியதளாடையினன்றன்பூணகழல்போற்றல்பொருளே. (எ)

பூம்படுகிற்கயல்பாயப்புள்ளிரியப்புறங்காட்டிற்
காம்படுதோளியர்நாளுங்கண்கவருங்கடம்பூரின்
மேம்படுதேவியோர்பாகமேவியெம்மானெனவாழ்த்தித்
தேம்படுமாமலர்தூவித்திசைதொழத்தீயகெடுமே. (அ)

திருமருமார்பிலவனுந்திகழ்தருமாமலரோனு
மிருவருமாயறிவொண்ணுவெரியுருவாகியவீசன்
கருவரைகாலிலடர்த்தகண்ணுதலான்கடம்பூரின்
மருவியபாடல்பயில்வார்வானுலகம்பெறுவாரே. (கூ)

ஆடைதவிர்த்தறங்காட்டுமவர்களுமந்துவராடைச்
சோடைகணன்னெறிசொல்லார்சொல்லிலுஞ்சொல்லலகண்டீர்
வேடம்பலபலகாட்டும்விகிர்தனம்வேதமுதல்வன்
காடதனிடமாடுங்கண்ணுதலான்கடம்பூரே. (கo)

விடைருவிலுங்கொடியாணவெண்கொடிசேர்நெடுமாடங்
கடைருவிலுங்கடம்பூரிற்காதலினீக்கடற்காழி
நடைருவின்ஞானசம்பந்தனன்மையாலேத்தியபத்தும்
படைருவில்பாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழாகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அமுதகடேசுவரர், தேவியார்-சோதிமின்னம்மை.

---

205 திருப்பாண்டிக்கொடுமுடி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமர்மேனியினருமம்பிறைபுல்குசெஞ்சடையாருங்
கண்ணமர்நெற்றியினருங்கரதமருங்குழையாரு
மெண்ணமருங்குணத்தாருமிமையவரேத்தகின்றருரும்
பண்ணமர்பாடலினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (க)

தீணக்கணிமாமலர்கொண்டுதாடொழுவார்தவர்தங்கள்
வீணப்பகையாயின தீர்க்கும்விண்ணவர்விஞ்சையர்கெஞ்சி

னினைத்தெழுவார் துயர்தீர்ப்பார்நிரைவளை மங்கைகடுங்கப்
பனைக்கைப்பரட்டெரிபோர்த்தார்பாண்டிக்கொடுமுடியாரே. (உ)

சடையமர்கொன்றையினருஞ்சாந்தவெண்ணீறணிதாரும்
புடையமர்பூதத்தினரும்பொறிவிளர்பாம்பசைத்தாரும்
விடையமருங்கொடியாரும்வெண்மழுமூவிலைச்சூலப்
படையமர்கொள்கையினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (ஊ)

நறைவளர்கொன்றையினருஞாலமெல்லாந்தொழுதேத்தக்
கறைவளர்மாமிடற்றருங்காடரங்காக்கனலேந்தி
மறைவளர்பாடலினெடுமண்முழவங்குழனமொக்தை
பறைவளர்பாடலினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (எ)

போகமுமின்பமுமாகிப்போற்றியென்பாரவர்தங்க
ளாகமுறைவிடமாகவமர்ந்தவர்கொன்றையினேடு
நாகமுந்திங்களுஞ்சூடிநன்னுதன்மங்கைதன்மேனிப்
பாகமுகந்தவர்தாமும்பாண்டிக்கொடுமுடியாரே. (ஙி)

கடிபடுகூவிளமத்தங்கமழ்சடைமேலுடையாரும்
பொடிபட்டமுப்புரஞ்செற்றபொருசிலையொன்றுடையாரும்
வடிவுடைமங்கைதன்னேடுமணம்படுகொள்கையினரும்
படிபடுகோலத்தினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (சு)

ஊனமர்வெண்டலையேந்தியுண்பலிக்கென்றுழல்வாருந்
தேனமருமொழிமாதுசேர்திருமேனியினருங்
கானமர்மஞ்ஞைகளாலுங்காவிரிக்கோலக்கரைமேற்
பானலநீறணிவாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (எ)

புரந்தரன்றன்னெடுவானேர்போற்றியென்றேத்தநின்றருளும்
பெருந்திறல்வாளரக்கன்னெடுபேரிடர்செய்தகன்றாருங்
கருந்திரைமாமிடற்றருங்காரகிற்பன்மணியுந்திப்
பரந்திழிகாவிரிப்பாங்கர்ப்பாண்டிக்கொடுமுடியாரே. (ஙி)

திருமகள்காதலினனுந்திகழ்தருமாமலர்மேலோப்
பெருமகனும்வரக்காணப்பேரழலாகியபெம்மான்
மருமலிமென்மலர்ச்சந்துவக்திழிகாவிரிமாடே
பருமணிநீர்த்துறையாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (சு)

புத்தரும்புன்றியிலாதசமணரும்பொய்மொழியல்லான்
மெய்த்தவம்பேசிடமாட்டார்வேடம்பலல்லவற்றாற்
சித்தருந்தேவருங்கூடிச்செழுமலர்நல்லனகொண்டு
பத்தர்கடம்பணிந்தேத்தும்பாண்டிக்கொடுமுடியாரே. (கஅ)

கலமல்குதண்கடல்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
பலமல்குவெண்டலையேந்திப்பாண்டிக்கொடுமுடிதன்னைச்
சொலமல்குபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லார்தயர்தீர்ந்து
நலமல்குசிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கொடுமுடிநாதேசுவரர், தேவியார்-பண்மொழியம்மை.

ஒ0ஒ திருப்பிரமபுரந்-திருச்சக்கரமாற்று-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருப்பெருநீர்த்தோணி
புரமன்னுபூந்தராய்பொன்னஞ்சிரபுரம்புறவஞ்சண்பை
யரன்மன்னுதண்காழிகொச்சைவயமுள்ளிட்டங்காதியாய
பரமனூர்பன்னிரண்டாய்பின்றிருக்கழுமலநாம்பரவுமூரே. (க)

வேணுபுரம்பிரமனூர்புகலிபெருவெங்குருவெள்ளத்தோங்குந்
தோணிபுரம்பூந்தராய்தூநீர்ச்சிரபுரம்புறவங்காழி
கோணியகோட்டாற்றுக்கொச்சைவயஞ்சண்பைகூருஞ்செல்வங்
காணியவையகத்தோரேத்துங்கழுமலநாங்கருதுமூரே. (உ)

புகலிசிரபுரம்வேணுபுரஞ்சண்பைபுறவங்காழி
நிகரில்பிரமபுரங்கொச்சைவயநீர்மேனின்றுமூதூர
ரகலியவெங்குருவோடந்தண்டராய்மர்பெருமாற்கின்பம்
பகருநகர்கல்லகழுமலநாங்கைதொழுதபாடுமூரே. (ஙு)

வெங்குருத்தண்புகலிவேணுபுரஞ்சண்பைவெள்ளங்கொள்ளத்
தொங்கியதோணிபுரம்பூந்தராய்தொகுபிரமபுரந்தொல்காழி
தங்குபொழிற்புறவங்கொச்சைவயந்தூலிபண்டாண்டமூதூர்
கங்கைசடைமுடிமேலேற்றுங்கழுமலநாங்கருதுமூரே. (ச)

தொன்னீரிற்றோணிபுரம்புகலிவெங்குருத்தயர்தீர்காழி
யின்னீரவேணுபுரந்தராய்பிரமனூரெழிலார்சண்பை
நன்னீர்ப்பூம்புறவங்கொச்சைவயஞ்சிலம்பனகராகல்ல
பொன்னீரபுன்சடையான்பூந்தண்கழுமலநம்புகழுமூரே. (ஞ)

தண்ணந்தராய்புகலிதாமரையானூர்சண்பைதலைமுனண்ட
வண்ணனகர்கொச்சைவயங்தண்புறவஞ்சீரணியர்காழி
வின்னியல்சீர்வெங்குருவல்வேணுபுரந்தோணிபுரமேலாலேந்து
கண்ணுதலோன்மேவியநற்கழுமலநாங்கைதொழுதகருதுமூரே. (சு)

சீராரசிபுரமுங்கொச்சைவயஞ்சண்பையொடுபுறவல்ல
வாராத்தராய்பிரமனூர்புகலிவெங்குருவோடந்தண்காழி
யேராரழகுமலமும்வேணுபுரந்தோணிபுரமென்றென்றுள்கிப்
பேராநெடியவனுநான்முகனுங்காண்பரியமெருமானூரே. (எ)

புறவஞ்சிரபுரமுந்தோணிபுரஞ்சண்பையிகுபுகலிகாழி
நறவமிகுசோலைக்கொச்சைவயந்தராய்நான்முகன்றனூர்
வீறலாயவெங்குருவும்வேணுபுரம்விசயன்மேலம்பெய்து
திறலாலரக்கனீச்செற்றுன்றன்கழுமலநாஞ்சேருமூரே. (அ)

சண்பைபிரமபுரந்தண்புகலிவெங்குருநற்காழிசாயாப்
பண்பார்சிரபுரமுங்கொச்சைவயந்தராய்புறவம்பார்மே
ணண்பார்கழுமலஞ்சீர்வேணுபுரந்தோணிபுரநாணிலாத
வெண்பற்சமணரொடுசாக்கியரையவியப்பழித்தவிமலனூரே. (கூ)

செழுமலியபூங்காழிபுறவஞ்சிரபுரஞ்சீர்ப்புகலிசெய்ய
கொழுமலரானன்னகரந்தோணிபுரங்கொச்சைவயஞ்சண்பையாய
வீழுமியசீர்வெங்குருவோடோங்குதராய்வேணுபுரமிகுநன்மாடக்
கழுமலமென்றின்னபெயர்பன்னிரண்டுங்கண்ணுதலான்கருதுமூரே. (கo)

கொச்சைவயம்பிரமனூர்புகலிவெங்குருப்புறவங்காழி
நிச்சல்விழவோவாஈடார்சிரபுரநீள்சண்பைமூதூர்
நச்சினியபூந்தராய்வேணுபுரந்தோணிபுரமாகிநம்மே
லச்சங்கடீர்த்தருளுமம்மான்கழுமலமாமருமூரே. (கக)

காவிமலர்புரையுங்கண்ணுர்கழுமலத்தின்பெயரைகாளும்
பாவியசிர்ப்பன்னிரண்டுநன்னூலாப்பத்திமையாற்பனுவன்மாலே
நாவினலம்புகழ்சீர்நான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
மேவியிசைமொழிவார்விண்ணவரிலெண்ணுதலேவிருப்புளாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

இது பாண்டியராஜனுடைய சுரப்பிணி தீர்க்கச்சென் றருளினத்தி லிருந்தபோது, அந்த ராஜன் சுவாமிகளே நோக்கி, எந்தவூரென்று வினவ, காமின்னவூரென்று திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகம்.

௮7 திருக்குறும்பலா-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

திருந்தமதிசூடித்தெண்ணீர்ச்சடைக்கரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வ
நிருந்தவிடம்வினவிலேலைக்கமழ்சோலையின்வண்டியாழ்செவ்
குருந்தமணராறுங்குறிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (க)

நாட்பலவுஞ்சேர்மதியஞ்சூடிப்பொடியணிந்தநம்பானம்மை
யாட்பலவுந்தானுடையவம்மானிடம்போலுமந்தண்சாரற்
கீட்பலவுங்கீண்டுகிளைகிளையனமந்திபாய்ந்துண்டுவிண்ட
கோட்பலவின்றீங்கனியைமாக்கடுவனுண்டகளுங்குறும்பலாவே. (உ)

வாடற்றலைமாலைசூடிப்புலித்தோல்வலித்துவீக்கி
யாடலரவசைத்தவம்மானிடம்போலுமந்தண்சாரற்
பாடற்பெடைவண்டுபோதலர்த்தத்தாதவிழ்ந்துபசும்பொனுங்கிக்
கோடன்மணங்கமழுங்குறிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (ரு)

பால்வெண்மதிசூடிப்பாகத்தோர்பெண்கலந்தபாடியாடிக்
காலனுடல்கிழியக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பி
னீலமலர்க்குவளைகண்டிறக்கவண்டாற்றுதெடுத்தண்சாரற்
கோலமடமஞ்ஞைபேடையோடாட்டயருங்குறும்பலாவே. (சு)

தலைவாண்மதியங்கதிர்விரியத்தண்புனலைத்தாங்கித்தேவி
முலைபாகங்காதலித்தமூர்த்தியிடம்போலுமுதுவேய்சூழ்ந்த
மலைவாயசும்புபசும்பொன்கொழித்திழியுமல்குசாரற்
குலைவாழைத்தீங்கனியுமாங்கனியுந்தேன்பிலிற்றுங்குறும்பலாவே. (நி)

நீற்றேதுதைந்திலங்குவெண்ணூலர்தண்மதியர்நெற்றிக்கண்ணர்
கூற்றோர்சிதையக்கடந்தாரிடம்போலுங்குளிர்சூழ்வெற்பி
லேற்றேனமேனமிவையோடவைவிரவியிழிபூஞ்சாரற்
கோற்றேனிசைமுரலக்கேளாக்குயில்பயிலுங்குறும்பலாவே. (சு)

பொன்றொத்தகொன்றையும்பிள்ளைமதியும்புனலுஞ்சூடிப்
பின்றொத்தவர்ச்சடையெம்பெருமானிடம்போலும்பியேயந்தாங்கி
மன்றத்தமண்முழவமோங்கிமணிகொழித்துவயிரமுந்திக்
குன்றத்தருவியயலேபுன்றதும்புங்குறும்பலாவே. (எ)

ஏந்திணிதிண்டோளிராவணனைமால்வரைக்கீழடரலூன்றிச்
சாந்தமெனநீறணிந்தசைவரிடம்போலுஞ்சாரற்சாரற்
பூந்தண்முல்லைக்கைக்கொத்திறுத்தமத்தகத்திற்பொலியவேந்திக்
கூந்தற்பிடியுங்களிறுமுடன்வணங்குங்குறும்பலாவே. (அ)

அரவினணையானுநான்முகனுங்காண்பரியவண்ணல்சென்னி
விரவுமதியணிந்தவிகிர்தர்க்கிடம்போலும்விரிபூஞ்சாரன்
மரவமிருகரையுமல்லிகையுஞ்சண்பகமுமலர்ந்தமாந்தக்
குரவமுமுவல்செய்யுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (கூ)

மூடியசேவரத்தர்முன்கூறுண்டேமுதலும்பின்கூறுண்டு
காடிதொடுசமணைக்காய்க்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பி
னீடியவேய்குனியப்பாய்கடுவனிள்களைமேனிருத்தஞ்செய்யக்
கூடியவெடுவெள்குயவிழியாக்கைமறிக்குங்குறும்பலாவே. (கo)

கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ண
னம்பானடிபரவுகான்மறையான்ஞரனசம்பந்தன்சொன்ன
வின்பாயபாடலிவைபத்தும்வல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பாலதீவினைகள்போயகலுநல்வினைகட்டளராவன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–குறும்பலாநாதர், தேவியார்–குழன்மொழியம்மை.

இதுவே–திருக்குற்றாலம்.

ஆ பதிகம்–எக.

திருச்சித்தம்பலம்.

பந்தார்விரன்மடவாள்பாகமாகாகம்பூண்டெருதேறி
யந்தாரரவணிந்தவம்மானிடம்போலுமகந்தண்சாரல்
வந்தார்மடமந்திகூத்தாடவார்பொழிலில்வண்டுபாடச்
செந்தேன்றெளியொளிரத்தேமாக்கனியுதிர்க்குந்திருநணுவே. (க)

நாட்டம்பொலிந்திலங்குநெற்றியினன்மற்றெருகைவீணையேந்தி
மீட்டுந்துயரறுக்குமெம்மானிடம்போலுமிலைசூழ்கானி
லோட்டந்தருமருவிவீழும்விசைகாட்டமுந்துழோசைச்
சேட்டார்மணிகளனியுந்திரைசேர்க்குந்திருநணுவே. (உ)

நன்றுங்கிசைமொழிந்தானுதலாள்பாகமாய்ஞாலமேத்த
மின்றுங்குசெஞ்சடையெம்விகிர்தர்க்கிடம்பேலும்விரைசூழ்வெற்பிற்
குன்றுங்கிவன்றிரைகண்மோதமிலாலுஞ்சாரற்செவ்வி
சென்றுங்கிவானவச்களேத்தியபணியுந்திருநணுவே. (கூ)

கையின்மழுவேந்திக்காலிற்சிலம்பணிந்துகரித்தோல்கொண்டு
மெய்யின்முழுதணிந்தவிகிர்தர்க்கிடம்போலுமிடைந்தவானே
ரையரவெம்பெருமானருளென்றென்றுரதிக்கச்
செய்யகமலம்பொழிதேனளித்தியலுந்திருநணுவே. (ச)

முத்தேர்நகையாளிடமாகத்தன்மார்பில்வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைத்தரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
வத்தேனளியுண்களியாலிசைமுரல்வாலத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்விரைகெடுக்குந்திருநணுவே. (ஞ)

வில்லார்வரையாகமாநாகநாணுகவேடங்கொண்டு
புல்லர்புரமூன்றெரித்தார்கிடம்போலும்புலியுமாலு
மல்லாதசாதிகளுமங்கழன்மேற்கைகூப்பவடியார்கூடிச்
செல்லாவருநெறிக்கேசெல்லவருள்புரியுந்திருநணுவே. (சு)

கானர்களிற்றுரிவைமேன்மூடியாடரவொன்றரைமேற்சாத்தி
பூனூர்தலையோட்டிலானுகந்தான்றானுகந்தகோயிலெங்கு
நானவிதத்தால்விரிதிகணன்னமமெயேத்திவரம்பத்தத்
தேனூர்மலர்கொண்டடியாரடிவணங்குந்திருநணுவே. (எ)

மன்னீரிலங்கையர்தங்கோமான்வலிதொலியவிரலாலூன்றி
முந்நீர்க்கடனஞ்சையுண்டார்க்கிடம்போலுமுனேசேர்சிய
மன்னீர்மைகுன்றியழலால்வலிகுறையவழியுமுன்றிற்
செந்நீர்பரப்பச்சிறந்தகரியொளிக்குந்திருநணுவே. (அ)

மையார்மணிமிடற்றன்மங்கையேர்ப்பங்குடையான்மனைகடோறுங்
கையார்பலியேற்றகள்வனிடம்போலுங்கழல்கணேடிப்

பொய்யாமையையானும்பூமியளந்தானும்போற்றமன்னிச்
செய்யாரெரியாமுருவமுறவணங்குந்திருவணவே. (கூ)

ஆடையொழித்தங்கமணேதிரிந்தண்பாரல்லல்பேசி
மூடுருவமூகந்தாருரையகற்றுமூர்த்திகோமி
லோடுநிதிசேருநிச்திலமுமீசத்தகிலுங்கரையிற்சாரச்
சேடர்சிறந்தேத்தத்தான்றியொளிபெருகுந்திருவனவே. (கo)

கல்வித்தகத்தாற்றிரைசூழ்கடற்காழிக்கவுணிசார்
நல்வித்தகத்தாலினிதணருஞானசம்பந்தனென்று
சொல்வித்தகத்தாலிறைவன்றிருவணவேத்துபாடல்
வல்வித்தகத்தான்மொழிவார்பழியிலரிம்மண்ணின்மேலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமியெயர்-சங்கமுகாதேசுவரர், தேவியார்-வேதமங்கையம்மை.

இது பவானி யென்னும் நதி காவிரிநதியுடன் சேருமிடமாதலால், பவானிகூட லெனப் பெயர் வழங்கப்படுகின்றது.

---

২০৭ திருச்சக்கரமாற்று-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விளங்கியசீர்ப்பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருமேற்சோலே
வளங்கவருந்தோணிபுரம்பூந்தராய்சிரபுரம்வண்புறவமண்மேற்
களங்கமிலூர்சண்பைகமழ்காழியயங்கொச்சைகழுமலமென்றின்ன
விளங்குமரன் றன்னீன்ப்பெற்றிமையவர்தம்பகையெறிவித்திறைவனூரே. (க)

திருவளருங்கழுமலமேகொச்சைதேவேங்திரனூரயனூர்தெய்வத்
தருவளரும்பொழிற்புறவஞ்சிலம்பனூர்காழிதருசண்பையேண்பா
வுருவள்ர்வெங்குருப்புகலியோங்குதராய்தோணிபுரமுயர்த்தேவர்
வெருவவளர்கடல்விடமதுண்டணிகொள்கண்டத்தோன்விருப்பூமரே. (உ)

வாய்த்தபுகழ்மறைவளருந்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்வாழு
ரேய்த்தபுறவந்திகழுஞ்சண்பையெழிற்காழியிறைகொச்சையம்பொன்
வேய்ந்தமிற்கழுமலம்விண்ணோர்பணியமிக்கயனூரமரர்கோனூ
ராய்ந்தகலியார்புகலிவெங்குருவதரனுமமருமூரே. (ங)

மாமலியாள்கணவன்மலிழ்வெங்குருமாப்புகலிதராய்தோணிபுரம்வான்
சேமமதில்புடைதிகழுங்கழுமலமேகொச்சைதேவேந்திரனூர்சீர்ப்
பூமகனூர்பொலிவுடையபுறவம்விறற்சிலம்பனூர்காழிசண்பை
பாமருவுகலியெட்டெட்டுணர்ந்தவற்றின்பயனுகர்வோர்பரவுமூரே. (ச)

* தரைத்தேவர்பணிசண்பைதமிழ்க்காழிலயங்கொச்சைதயங்குபூமேல்
விரைச்சேருங்கழுமலமெய்புணர்ந்தயனூர்விண்ணவர்தங்கோனூர்வெண்றித்
திரைச்சேரும்புனற்புகலிவெங்குருச்செல்வம்பெருகுதோணிபுரஞ்சி
ருரைச்சேர்பூந்தராய்சிலம்பனூர்புறவமுகத்திலுயர்ந்தவூரே. (ஞ)

---

* தரைத்தேவர்-பிராமணர்.

புண்டரிகத்தார்வயல்சூழ்புறவமிருசிரபுரம்பூங்காழிசண்பை
யெண்டிசையோரிறைஞ்சியவெங்குருப்புகலிபூந்தராய்தோணிபுரஞ்சீர்
வண்டமரும்பொழின்மல்குகழுமலநற்கொச்சைவானவர்தங்கோனூ
ரண்டயனூரிவையென்பரருங்கூற்றையுதைத்தகந்தவப்பனூரே. (சு)

வண்மைவள்ர்வரத்தயனூர்வானவர்தங்கோனூர்வண்புகலியிஞ்சி
வெண்மதிசேர்வெங்குருமிக்கோரிறைஞ்சுசண்பையியன்காழிகொச்சை
கண்மகிழுங்கழுமலங்கற்றேர்புசழுந்தோணிபுரம்பூந்தராய்சீர்ப்
பண்மலியுஞ்சிரபுரம்பார்புகழ்புறவம்பால்வண்ணன் பயிலுமூரே. (எ)

மோடியுறங்காக்குமூர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்காழிமூதூர்
நீடியலுஞ்சண்பைகழுமலங்கொச்சைவேணுபுரங்கமலநீடு
கூடியயனூர்வளர்வெங்குருப்புகலிதராய்தோணிபுரங்கூடப்போர்
தேடியயுழலவுணர்பயிறிரிபுரங்கள்செற்றமல்சிலையனூரே. (அ)

இரக்கமுடையிறையவனூர்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்றன்னூர்
நிரக்கவருபுனற்புறவின்றதவத்தயனூர்சீர்த்தேவர்கோனூர்
வரக்கரவாப்புகலிவெங்குருமாசிலாச்சண்பைகாழிகொச்சை
யரக்கன்வீறலழித்தருளிக்கழுமலமந்தணர்வேதமருதவூரே. (கூ)

மேலோதுங்கழுமலமெய்த்தவம்வளருங்கொச்சையிந்திரனூர்மெய்ம்மை
நூலோதுமயனதனூர்நண்ணிவார்குருப்புகலிதராய்தூரீர்மேற்
சேலோடுதோணிபுரங்கிழ்புறவஞ்சிலம்பனூர்செருச்செய்தன்று
மாலோடுமயனறியான்வண்காழிசண்பைமண்ணோர்வாழ்த்துமூரே. (க0)

ஆக்கமர்சீருர்சண்பைகாழியமர்கொச்சைகழுமலமன்பானூ
ரோக்கமுடைத்தோணிபுரம்பூந்தராய்சிரபுரமொண்புறவநண்பார்
பூக்கமலத்தோன்மகிழூர்புரந்தரனூர்புகலிவெங்குருவுமென்பர்
சாக்கியரோடமண்கையர்தாமறியாவகைகின்றுரங்குமூரே. (கக)

அக்கரஞ்சேர்தருமனூர்புகலிதராய்தோணிபுரமணிநீர்ப்பொய்கை
புக்கரஞ்சேர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்புகழ்க்காழிசண்பைதொல்லூர்
மிக்கரஞ்சீர்க்கழுமலமேமகொச்சையயம்வேணுபுரமயனூர்மேலிச்
சக்கரஞ்சீர்த்தமிழ்விரகன்றுன்சொன்னதமிழ்தரிப்போர்தவஞ்செய்தோரே. ()

திருச்சிற்றம்பலம்.

২।০ திருக்கோமூத்திரி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூமகனூர்புத்தேளுக்கிறைவனூர்குறைவிலாப்புகலிபூமேன்
மாமகளூர்வெங்குருநற்றேணிபுரம்பூந்தராய்வாய்ந்தவிஞ்சிச்
சேமமிருசிரபுரஞ்சீர்ப்புறவினிறைபுகழ்ச்சண்பைகாழிகொச்சை
காமனைமுன்காய்ந்ததறக்கண்ணவனூர்கழுமலமர்ந்தருளுமூரே. (க)

கருத்துடையமறையவர்சேர்கழுமலமெய்த்தோணிபுரங்கனகமாட
வருத்திகழ்வெங்குருப்புகலிபோங்குதராயுலகர்ருங்கொச்சைகாழி
திருத்திகழுஞ்சிரபுரன்தேவேந்திரனார்செங்கமலத்தயனூர்தெய்வத்
தருத்திகமும்பொழிற்புறவஞ்சண்பைசடைமுடியண்ணறங்குமூரே. (உ)

ஊர்மதியைக்கதுவுயர்மதிற்சண்பையொளிருவுகாழிகொச்சை
கார்மலியும்பொழில்புடைசூழ்கழுமலமெய்த்தோணிபுரங்கற்றேரேத்துஞ்
சீர்மருவுபூந்தராய்சிரபுரமெய்ப்புறவமயனூர்பூங்கற்பத்
தார்மருவுமிந்திரனூர்புகலிவெங்குருக்கங்கைதரித்தோனூரே. (ஊ)

தரித்தமறையாளர்மிகுவெங்குருச்சீர்த்தோணிபுரந்தரியாரிஞ்சி
யெரித்தவன்சேர்கழுமலமேகொச்சைபூந்தராய்புகலியிமையோர்கோனூர்
தெரித்தபுகழ்ச்சிரபுரஞ்சீர்திகழ்காழிசண்பைசெழும்மறைகளெல்லாம்
விரித்தபுகழ்ப்புறவம்விரைக்கமலத்தோனூருலகில்விளங்குமூரே. (எ)

விளங்கயனூர்பூந்தராய்மிகுசண்பைவேணுபுரமேகமேய்க்கு
மிளங்கமுகம்பொழிற்றேணிபுரங்காழியெழிற்புகலிபுறவமேரார்
வளங்கவரும்வயற்கொச்சைவெங்குருமாச்சிரபுரம்வன்னஞ்சமுண்டு
களங்கமிலிகளத்தவன்சீர்க்கழுமலங்காமனுடல்காய்ந்தோனூரே. (ஏ)

காய்ந்துவருங்காலனேயன் றுதைத்தவனூர்கழுமலமாத்தோணிபுரஞ்சீ
ரேய்ந்தவெங்குருப்புகலியிந்திரனூரிருங்கமலத்தயனூரின்பம்
வாய்ந்தபுறவக்திகழுஞ்சிரபுரம்பூந்தராய்கொச்சைகாழிசண்பை
சேர்ந்தணைமுன்பயந்தலகிற்றேவர்கடம்பகைகெடுத்தோன்றிகழுமூரே. (ஐ)

திகழ்மாடமலிசண்பைபூந்தராய்பிரமனூர்காழிதேசார்
மிகுதோணிபுரந்திகழும்வேணுபுரம்வயங்கொச்சைபுறவம்விண்ணோர்
புகழ்ப்புகலிகழுமலஞ்சீர்ச்சிரபுரம்வெங்குருவெம்போர்மகிடம்செற்று
நிகழ்லிலின்மலன்றன்னடியிணைகள்பணிந்தலகினின்றவுரே. (ஒ)

கின்றமதில்சூழ்தருவெங்குருத்தோணிபுரங்கழுமலவேணுமன்றி
லொன்றுகழுமலங்கொச்சையுயர்காழிசண்பைவளர்புறவமோடி
சென்றுபுறங்காக்குமூர்சிரபுரம்பூந்தராய்புகலிதேவர்கோனூர்
வென்றிமலிபிரமபுரம்பூதங்கடாங்காக்கமிச்சுவுரே. (ஓ)

மிக்ககமலத்தயனூர்விளங்குபுறவஞ்சண்பைகாழிகொச்சை
தொக்கபொழிற்கழுமலத்தூத்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்சேரூர்
மைக்கொள்பொழில்வேணுபுரமதிற்புகலிவெங்குருவல்லரக்கன்றிண்டோ
ளொக்கவிருபதுமுடிகளொருபதுமீடழித்தகந்தவெம்மானூரே. (ஔ)

எம்மான்சேர்வெங்குருச்சீர்ச்சிலம்பனூர்கழுமலநற்புகலியென்றும்
பொய்ம்மாண்பிலோர்புறவங்கொச்சைபுந்தரனூர்நற்றேணிபுரம்போர்க்
கைம்மாவையுரிசெய்தோன்காழியயனூர்தராய்சண்பைகரரின்
மெய்ம்மால்பூமகனுணராவகைதழலாய்விளங்கியவெம்மிறைவனூரே. (கூ)

இறைவனமர்சண்பையெழிற்புறவமயனூரிமையோர்க்கதிபன்சேரூர்
குறைவிலில்புகழ்ப்புகலிவெங்குரூர்த்தோணிபுரங்குணமார்பூந்தராய்நீர்ச்
சிறைமலிநற்சிரபுரஞ்சீர்காழிவளர்கொச்சைசழுமலக்தேகின்றிப்
பறிதலீயோடமண்கையர்சாக்கியர்கள் பரிசறியாவம்மானூரே. (கக)

அம்மான்சேர்சுழுமலமாச்சிரபுரம்வெங்குருக்கொச்சைபுறவமஞ்சீர்
மெய்ம்மானத்தொண்புகலிபிருகாழிதோணிபுரந்தேவர்கோனூ
ரம்மான்மன்னுயர்சண்பைதராயயனூர்வழிமுடக்குமாவின்பாச்ச
ம்மாஞென்றியஞானசம்பந்தன்றமிழ்கற்போர்தக்கோர்தாமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

---

௨ ।। சீகாழி-பண்:காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணியங்குமதிக்கண்ணியான்விரியுஞ்சடைப்
பெண்ணியங்கொடிருமேனியான்பெருமானனற்
கண்ணியங்கொடிருநெற்றியான்கலிக்காழியுண்
மண்ணியங்கொண்மறையாளரேத்துமலர்ப்பாதனே. (க)

வலியகாலனுயிர்வீட்டினுன்மடவாளொடும்
பலிவிரும்பியதோர்கையினுன்பரமேட்டியான்
கலியைவென்றமறையாளர்தங்கலிக்காழியுண்
னலியவந்தவினைதீர்த்துகந்தவெம்நம்பனே. (உ)

சுற்றலாநற்புலித்தோலசைத்தயன்வெண்டலைத்
தற்றலாயதொருகொள்கையான்சுடுநீற்றான்
சுற்றல்கேட்டனுடையார்கள்வாழ்கலிக்காழியுண்
மற்றயங்குதிரடோளெம்மைமன்தனவனல்லனே. (ஊ)

பல்லயங்குதலீயேந்தினுன்படுகானிடை
மல்லயங்குதிரடோள்களாரநடமாடியுங்
கல்லயங்குதிரைசூழ்நீள்கலிக்காழியுட்
டொல்லயங்குபுகழ்பேணுகின்றவுடர்வண்ணனே. (எ)

தூநயங்கொடிருமேனியிற்பொடிப்பூசிப்போய்
நாநயங்கொண்மறையோதிமாதொருபாகமாக்
கானயங்கொள்புனல்வாசமார்கலிக்காழியுட்
டேனயங்கொண்முடியாணைதாடியசெல்வனே. (ஏ)

சுழியிலங்கும்புனற்கங்கையாள்சடைப்பாகவே
மொழியிலங்கும்மடமங்கைபாகமுகந்தவன்
கழியிலங்குங்கடல்சூழ்தண்கலிக்காழியுட்
பழியிலங்குந்தயரொன்றிலாப்பரமேட்டியே. (ஐ)

முடியிலங்கும்முயர்சிந்தையான்முனிவர்தொழ
வடியிலங்குங்கழலார்க்கவேயனலேந்தியும்
கடியிலங்கும்பொழில்சூழ்தண்கலிக்காழியுட்
கொடியிலங்கும்மிடையாளொடுங்குடிகொண்டதே. (எ)

வல்லரக்கன்வரைபேர்க்கவத்தவன்றேரண்முடி
கல்லரக்கிவ்விறல்வாட்டினூன்கலிக்காழியு
ணல்லொருக்கியதோர்சிந்தையார்மலர்தூவவே
தொல்லிருக்கும்மறையேத்துகந்துடன்வாழுமே. (அ)

மருவுநான்மறையோனுமாமணிவண்ணனு
மிருவர்கூடியசைத்தேத்தவேயெரியான்றனூர்
வெருவுகின்றதிரையோதம்வராவியன்முத்தவை
கருவையார்வயற்சங்குசேர்கலிக்காழியே. (கூ)

நன்றியொன்றுமுணராதவன்சமண்சாக்கிய
ரன்றியங்கவர்சொன்னசொல்லைவைகாள்கிலான்
கன்றுமேதியிளங்கானல்வாழ்கலிக்காழியுள்
வென்றிசேர்வியன்தோயில்கொண்டவிடையாளனே. (கo)

கண்ணுமூன்றுமுடையாதிவாழ்கலிக்காழியு
ளண்ணலக்தண்ணருள்பேணிஞானசம்பந்தன்சொல்
வண்ணமூன்றுந்தமிழிற்றெரிந்திசைபாடுவார்
விண்ணுமண்ணுமிவரினறதொல்புகழாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

212 திருஅகத்தியான்பள்ளி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாடியவெண்டலைமாலைசூடிமயங்கிரு
ணீடியர்கொள்ளிவிளக்குமாகவிவந்தெரி
யாடியவெம்பெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினர்கட்கில்லையாம்பாவமே. (க)

துன்னங்கொண்டவுடையான்றுதைந்தவெண்ணீற்றினன்
மன்னுங்கொன்றைமதமத்தஞ்சூடினன்மாநக
ரன்னந்தங்கும்பொழில்சூழகத்தியான்பள்ளியை
யுன்னஞ்செய்தமனத்தார்கடம்வினையோடுமே. (உ)

உடுத்ததுவும்புலித்தோலபலிதிரிந்துண்பதுங்
கடுத்துவந்தகழற்காலன்றன்னையுங்காலினா
லடுத்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
றொடுத்ததுவுஞ்சரமுப்புரந்தகளாகவே. (ங)

காய்ந்ததுவுமன் முகாமலெற்றிக்கண்ணினூற்
பாய்ந்ததுவுங்கழற்காலினப்பண்ணின்மறை
யாய்ந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியா
னேய்ந்ததுவுமிமவான்மகளெருபாகமே. (சு)

போர்த்ததுவுங்கரியின்னுரிபுலித்தோலுடை
கூர்த்ததோர்வெண்மழுவேற்றிக்கோளரவம்மரைக்
கார்த்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
பார்த்ததுவும்மரணம்படரெரிமூழ்கவே. (நி)

தெரிந்ததுவுங்கணியொன்முமுப்புரஞ்சென்முட
னெரிந்ததுவுமுன்னெழிலார்மலருறைவான்றலை
யரிந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
புரிந்ததுவும்முமையாளொர்பாகம்புனைதலே. (சு)

ஓதியெல்லாமுலகுக்கோரொண்பொருளாகிமெய்ச்
சோதியென்றுதொழுவாரவர்துயர்தீர்த்திடு
மாதியெங்கள்பெருமானகத்தியான்பள்ளியை
நீதியினற்றெழுவாரவர்வினைநீங்குமே. (எ)

செறுத்ததுவுந்தக்கன்வேள்வியைத்திருந்தார்புர
மொறுத்ததுவுமொளிமாமலருறைவான்சிர
மறுத்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியா
னிறுத்ததுவுமரக்கன்றன்றோள்களிருபதே. (அ)

சிரமுகல்லமதிமத்தமுந்திகழ்கொன்றையு
மரவமல்குஞ்சடையானகத்தியான்பள்ளியைப்
பிரமனோடுதிருமாலுந்தேடியபெற்றிமை
பரவவல்லாரவர்தங்கண்மேல்வினைபாறுமே. (கூ)

செந்துவராடையினருமெற்றரையேதிரி
புந்தியிலார்களும்பேசும்பேச்சவைபொய்ம்மொழி
யந்தணனெங்கள்பிரானகத்தியான்பள்ளியைச்
சிந்திமினும்வினையானவைசிதைந்தோடுமே. (கo)

ஞாலமல்குந்தமிழ்ஞானசம்பந்தன்மாமயிலாலுஞ்
சோலைபுடைசூழகத்தியான்பள்ளியுட்
சூலநல்லபடையானடிதொழுதேத்திய
மாலைவல்லாரவர்தங்கள்மேல்வினைமாயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–அகத்தீசுவரர், தேவியார்–மங்கைநாயகியம்மை.

ஆ பதிகம்–எசு.

213 திருஅறையணிநல்லூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பிடிஎனற்பெரியோர்களும்பேதைமைகெடத்தீதிலா
வீடினனுயர்ந்தார்களும்வீடிலாரிளவெண்மதி
சூடினார்மறைபாடினார்சுடலீநீறணிந்தாரழ
லாடினரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. (க)

இலையினர்சூலமேறுகந்தேறியேயிமையோர்தொழ
கிலையினலொருகாறுச்சிலையினன் மதிலெய்தவ
னலையினர்புனல்சூடியவண்ணலரறையணிநல்லூர்
தலையினற்றொழுதேதொங்குவார்நீங்குவார்தடுமாற்றமே. (உ)

என்பினர்கனல்சூலத்தாரிலங்குமாமதியுச்சிய
ரன்பினற்பிறங்குஞ்சடைப்பிஞ்ஞகன்பிறப்பிலியென்று
முன்பினர்மூவர்தாந்தொழுமுக்கண்மூர்த்திதன்ருள்களுக்
கன்பினரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. (ங)

விரவுநீறுபொன்மார்பினில்விளங்கப்பூசியவேதிய
ருரவுகஞ்சமுதாகவுண்டுறுதிபேணுவதன்றியு
மரவுநீள்சடைக்கண்ணியாரண்ணலாரறையணிநல்லூர்
பரவுவார்பழிநீங்கிடப்பறையுந்தாஞ்செய்தபாவமே. (ச)

தீயினுர்திகழ்மேனியாய்தேவர்தாந்தொழுதேவனீ
யாயினுய்கொன்றையாயனலங்கையாயறையணிநல்லூர்
மேயினர்தமதொல்வினைவீட்டினுய்வெய்யகாலன்றன்
பாயினுயதிர்கழலினுய்பரமனேயடிபணிவனே. (ஞ)

விரையினர்கொன்றைசூடியும்வேதநாகமும்வீக்கிய
வரையினரறையணிநல்லூரண்ணலாரழகாயதோர்
நரையினர்விடையூர்தியார்நக்கனர்நமக்கும்போதுசே
ருரையினுயர்ந்தார்களுமுரையினுயர்ந்தார்களே. (சு)

வீரமாகியவேதியர்வேகமாகலியானையின்
னீரமாகியவுரிவைபோர்த்தரிவைமேற்சென்றவெம்மிறை
யாரமாகியபாம்பினரண்ணலாரறையணிநல்லூர்
வாரமாய்நினப்பார்கடம்வல்வினையவையாயுமே. (எ)

தக்கனுர்பெருவேள்வியைத்தகர்த்துகந்தவன்ருழ்சடை
முக்கணன்மறைபாடியமுறைமையான்முனிவர்தொழ
வக்கினெடெழிலாமைபூணண்ணலாரறையணிநல்லூர்
நக்கனரவர்சார்வலானல்குசார்விலோகநாங்களே. (அ)

வெய்யநோயிலர்தீதிலார்வெறியராய்ப்பிறர்பின்செலார்
செய்வதேயலங்காரமாமிவையிவைதேறியின்புறி

லையமேற் றுணுந்தொழிலராமண்ணலாரறையணிநல்லூர்ச்
சைவனுரவர்சார்வலால்யாதுஞ்சார்விலோநாங்களே. (கூ)

வாக்கியஞ்சொல்லியாரொடும்வகையலாவகைசெய்யன்மின்
சாக்கியஞ்சமணென்றிவைசாரேலும்மரணம்பொடி
யாக்கியமூவாட்படையண்ணலாரறையணிநல்லூர்ப்
பாக்கியங்குறையுடையீரேற்பறையுமாள்செய்தபாவமே. (கo)

கழியுலாங்கடற்கானல்சூழ்கழுமலமமர்தொல்பதிப்
பழியிலாமறைஞானசம்பந்தனல்லதோர்பண்பினர்
மொழியினுலறையணிநல்லூர்முக்கண்மூர்த்திதன்றொடொழக்
கெழுவினாரவர்தம்மொடுங்கேடில்வாழ்பதிபெறுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அறையணிநாதேசுவரர், தேவியார்-அருள்நாயகியம்மை.

---

2 /4 திருவிளனகர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஒளிரிளம்பிறைசென்னிமேலுடையர்கோவணவாடையர்
குளிரிளம்மழைதவழ்பொழிற்கோலநீர்மல்குகாவிரி
நளிரிளம்புனல்வார்துறைநங்கைகங்கையைநண்ணினர்
மிளிரிளம்பொறியரவினர்மேயதும்விளனகரதே. (க)

அக்கரவ்வணிகலனெனவதனேடார்த்ததோராமைபூண்
டுக்கவர்சுடுநீறணிந்தொளிமல்குபுனற்காவிரிப்
புக்கவர்துயர்கெடுகெண்பூசுவெண்பொடிமேவிய
மிக்கவர்வழிபாடுசெய்விளனகரவர்மேயதே. (உ)

வாளிசேரடங்கார்மதிரெல்லையூறியவம்பின்வேய்த்
தோளிபாகமமர்ந்தவருயர்ந்தகொல்கடனஞ்சுடன்
காளமல்கியகண்டத்தர்கதிர்விரிசுடர்முடியினர்
மீளியேறுகந்தேறினர்மேயதுவிளனகரதே. (ஙூ)

கால்விளங்கெரிகழலினர்கையிலங்கியவேலினர்
நூல்விளங்கியமார்பினர்நோயிலார்பிறப்பும்மிலார்
மால்விளங்கொளிமல்கியமாசிலாமணிமிடறினர்
மேல்விளங்குவெண்பிறையினர்மேயதுவிளனகரதே. (ச)

பன்னினர்மறைபாடினர்பாயசீர்ப்பழங்காவிரித்
தன்னுதண்டுறைமுன்னினர்தூநெறிபெறுவாரெனச்
சென்னிதிங்கணீப்பொங்கராக்கங்கையோடுடன்சேர்த்தினர்
மின்னுபொன்புரிநூலினர்மேயதுவிளனகரதே. (ஞ)

தேவருமமரர்களுந்திசைசுண்மேலுளதெய்வமும்
யாவருமும்மறியாததோர்மதியாற்றழலுருவினர்
மூவருமும்மவரென்னவுமுதல்வருமும்மிவரென்னவு
மேவருமும்பொருளாயினர்மேயதுவிளனகரதே. (சு)

சொற்றருமமறைபாடினர்சுடர்விடுஞ்சடைமுடியினர்
கற்றருவ்வடங்கையினர்காலிரித்துறைகாட்டினர்
மற்றருதிரடோளினர்மாசில்வெண்பொடிப்பூசினர்
வீற்றருமணிமிடறினர்மேயதுவ்விளனகரதே. (எ)

படர்தருஞ்சடைமுடியினர்பைங்கழலடிபரவுவா
ரடர்தரும்பிணிகெடுகெனவருளுவாரரவரையினர்
விடர்தரும்மணிமிடறினர்மின்னுபொன்புரிநூலினர்
மிடறரும்படைமழுவினர்மேயதுவ்விளனகரதே. (அ)

கையிலங்கியவேலினர்தோலினர்கரிகாலினர்
பையிலங்கரவல்குலாள்பாகமாகியபரமனர்
மையிலங்கொளிமல்கியமாசிலாமணிமிடறினர்
மெய்யிலங்குவெண்ணீற்றினர்மேயதுவ்விளனகரதே. (சூ)

உள்ளதன்றனைக்காண்பன்நிழென்றமாமணிவண்ணனும்
உள்ளதன்றனைக்காண்பன்மேலென்றமாமலர்ணணலும்
உள்ளதன்றனைக்கண்டிலாரொளியார்தருஞ்சடைமுடியின்மேல்
உள்ளதன்றனைக்கண்டிலாவொளியார்விளனகர்மேயதே. (கo)

மென்னிறைவண்டியாழ்முரல்விளனகர்த்துறைமேவிய
நன்பிறைதுதலண்ணலேச்சண்பைஞானசம்பந்தன்சீ
ரின்புறுதமிழாற்சொன்னவேத்துவார்வினைநீங்கிப்போய்த்
தன்புறுதுயரம்மிலர்துறெறிபெறுவார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-துறைகாட்டும்வள்ளலார், தேவியார்-தோழியம்மை

2/5 திருவாரூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்ஞாலமொழாப்பஞ்சுதோய்ச்சட்டவண்டு
சிவனதாட்சிந்தியாப்பேதைமார்பேரலமீவெள்கினையே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (க)

தந்தையார்போயினர்தாயரும்போயினர்தாமும்போவார்
கொந்தவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டுபோவர

நெந்தகாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்சே
யந்தணூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (உ)

நிணங்குடர்தோனரம்பென்புசேராக்கைதானிலாயதன்றூற்
குணங்களார்க்கல்லதுகூற்றநீங்காதெனக்குலங்கினியே
வணங்குவார்வானவர்தானவர்வைகலுமணங்கொடேத்து
மணங்கணூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (ஊ)

நீதியால்வாழ்கிலேனாள்செலாநின்றனநித்தனேய்கள்
வாதியாவாதலாளுநாளின்பமேமருவினியே
சாதியார்கின்னரர்தருமனும்வருணர்களேத்துமுக்க
ணாதியாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (எ)

பிறவியால்வருவனகேடிளவாதலாற்பெரியவின்பத்
துறவியார்க்கல்லதுதுன்பநீங்காதெனத்தூங்கினியே
மறவனீமார்க்கமேகண்ணினுய்திர்த்தநீர்மல்குசென்னி
யறவனூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (ஏ)

செடிகணோயாக்கையைம்பாம்பின்வாய்த்தேரைவாய்ச்சிறுபறவைக்
கடிகொள்பூந்தேன்சுவைத்தின்புறலாமென்றுகருதினியே
முடிகளாலவானவர்முன்பணிந்தன்பராயேத்துமுக்க
ணடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (ஐ)

ஏறுமாலியானேயெரிவிகையன்தளகமீச்சேர்ப்பிவட்டில்
மாறிவாழுடம்பினூர்படுவதோர்நடலைக்குமயங்கினியே
மாறிலாவனமுலைமங்கையோர்பங்கினர்மதியம்வைத்த
வாறனூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (ஒ)

என்பினூற்கழிகிரைத்திறைச்சிமண்சுவரெழுந்திதரம்மில்லம்
புன்புலாலுறுதோல்போர்த்துப்பொல்லாமையான்முகடுகொண்டு
முன்பெலாமொன்பதுவாசலார்குரம்பையின்மூழ்கிடர்தே
யன்பனூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (ஓ)

தந்தைதாய்தன்னுடன்தோன்றினூர்புத்திரர்தாரமென்னும்
பந்தநீங்காதவர்க்குய்தியேபோக்கில்லெனப்பற்றினியே
வெந்தநீறுடியாராதியார்சோதியார்வேதகீத
ரெந்தையாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (கூ)

நெடியமால்பிரமனுணீண்டுமண்ணிடந்தின்னநேடிக்காணப்
படியனூர்பவளம்போலுருவனூர்பனிவளர்மலையாள்பாக
வடிவனூர்மதிபொதிசடையனூர்மணியணிகண்டத்தெண்டோ
ளடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (கஅ)

பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூர
னல்லவேதல்லவேசொல்லியஞானசம்பந்தனூர
ரெல்லியம்போதெரியாடுமெம்மீசனீயேத்துபாடல்
சொல்லவேவல்லவர்நீதிலாரோதநீர்வையகத்தே. (கக)

திருச்சிற்றம்பலம்.

216 திருக்கடவூர்மயானம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலியோர்சிலையாவணக்கி
யெரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே. (க)

மங்கைமணந்தமார்பர்மழுவாள்வலனெற்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறுறிச்செல்வஞ்செய்யாவருவா
ரங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே. (உ)

ஈடலிடவமிசையவேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவிபடுதம்பலவும்பயில்வா
ராடலரவமுடையாரவரெம்பெருமானடிகளே. (ரு)

இறைகின்றிலங்குவளையாளினையாளொருபாலுடையார்
மறைகின்றிலங்குமொழியார்மலையார்மனத்தின்மிசையார்
கறைகின்றிலங்குபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைகின்றிலங்குசடையாரவரெம்பெருமானடிகளே. (ச)

வெள்ளையெருத்தின்மிசையார்விரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான்மறியார்சுடர்பொற்சடைகடிலங்கக்
கள்ளருகுவெண்டலையார்கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே. (ஞ)

பொன்றுதிருமணங்கொள்புணர்ந்தொன்றைபுணர்ந்தா
ரொன்றுவெள்ளேறுயர்த்ததுடையாரதுவேயூர்வார்
கன்றுவினைஞ்சூழ்புறவிற்கடவூர்மயானமமர்ந்தார்
பின்றுழ்சடையாரொருவரவரெம்பெருமானடிகளே. (சு)

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையா
ராசைதீரக்கொடுப்பாரவங்கல்லிடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே. (எ)

செற்றவரக்கனலறத்திகழ்சேவடிமெல்விரலாற்
கற்சுன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார்
மற்றொன்றிணையில்வலியமாசில்வெள்ளிமலைபோற்
பெற்றொன்றேறிவருவாரவரெம்பெருமானடிகளே. (அ)

வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமாணிரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்

திருமாலொடுநான்முகனுந்தேர்ந் துங்காணமுனெண்ணப்
பெருமானெனவும்வருவாரவரெம்பெருமானடிகளே. (கூ)

தூயவிடைமேல்வருவார் துன்னருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடலூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரெம்பெருமானடிகளே. (கo)

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
வரவமசைத்தபெருமானகலமறியலாகா
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
யிரவும்பகலும்பரவினினைவார்வினைகளிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரமபுரீசுவரர், தேவியார்-மலர்க்குழல்மின்னம்மை.

---

217 திருவேணுபுரம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூதத்தின்படையினீர்பூங்கொன்றைத்தாரினீர்
சோதத்தினெலியோடுமும்பர்வானவர்புகுந்து
வேதத்தின்னிசைபாடினீரைமலர்கள்சொரிந்தேத்தும்
பாதத்தீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (க)

சுடுகாடுமேவினீர்துன்னம்பெய்கோவணந்தோ
லுடையாயவதுகொண்டீருமையாளையொருபாக
மடையாளமதுகொண்டீரங்கையினிற்பரசுவெலும்
படையாள்வீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (உ)

கங்கைசேர்சடைமுடியீர்காலனைமுன்செற்றுகந்தீர்
திங்களோடிளவரவந்திகழ்சென்னிவைத்துகந்தீர்
மங்கையோர்கூறுடையீர்மறையோர்கணிறைத்தேத்தப்
பங்கயஞ்சேர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (ஊ)

நீர்கொண்டசடைமுடிமேனீண்மதியம்பாம்பினெடு
மேர்கொண்டகொன்றையினெடுழின்மத்தமிலங்கவே
சீர்கொண்டமாளிகைமேற்சேயிழையார்வாழ்த்துரைப்பக்
கார்கொண்டவேணுபுரம்பதியாகக்கலந்தீரே. (எ)

ஆலைசேர்தண்கழனியழகாகநறவுண்டு
சோலைசேர்வண்டினங்களிசைபாடத்துமொழியார்
காலையேபுகுந்திறைஞ்சிக்கைதொழுமெய்மாதினெடும்
பாலையாழ்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (ஏ)

மணிமல்குமால்வரைமேன் மாதினெடுமகிழ்ந்திருந்தீர்
துணிமல்குகோவணத்தீர்சுடுகாட்டிலாட்டுகந்தீர்
பணிமல்குமறையோர்கள் பரிந்திறைஞ்சவேணுபுரத்
தணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (சு)

நீலஞ்சேர்மிடற்றினீர்நீண்டசெஞ்சடையினீர்
கோலஞ்சேர்விடையினீர்கொடுங்காலனைச்செற்றீ
ராலஞ்சேர்கழனியழகார்வேணுபுரமமருங்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. (எ)

இரைமண்டிச்சங்கேறுங்கடல்சூழ்தென்னிலங்கையர்கோன்
விரைமண்டுமுடிநெரியவிரல்வைத்தீர்வரைதன்னிற்
கரைமண்டிப்பேரோதங்கலக்கேறுங்கடற்கவினூர்
விரைமண்டுவேணுபுரமேயமர்ந்துமிக்கீரே. (அ)

தீயோம்புமறைவாணர்க்காதியாந்திசைமுகன்மால்
போயோங்கியிழிந்தாரும்போற்றரியதிருவடியீர்
பாயோங்குமரக்கலங்கள்படுதிரையான்மொத்துண்டு
சேயோங்குவேணுபுரஞ்செழும்பதியாத்திகழ்ந்தீரே. (கூ)

நிலையார்த்தவண்டியினர்நெடுங்குண்டர்சாக்கியர்கள்
புலையானுறவுரையைப்பொற்றுதன்பொன்னடியே
நிலையாகப்பேணினீசரணென்றூர்தமையென்றும்
விலையாகவாட்கொண்டுவேணுபுரம்மேவினையே. (கo-கக)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம்-அக.

௨/௬ திருத்தேவூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணிலாவியமொழியுமைபங்கனெம்பெருமான்
விண்ணில்வானவர்கோன்விமலன்விடையூர்தி
தெண்ணிலாமதிதவழ்தருமாளிகைத்தேவூ
ரண்ணல்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (க)

ஒதிமண்டலத்தோர்முழுதுய்யவெற்பேறு
சோதிவானவன்றுதிசெயமகிழ்ந்தவன்றாரீர்த்
தீதில்பங்கயந்தெரிவையர்முகமலர்தேவூ
ராதிசேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (உ)

மறைகளான்மிகவழிபடுமாணியைக்கொல்வான்
கறுவுகொண்டவக்காலனைக்காய்ந்தவெங்கடவுள்
செறுவில்வாளைகள்சேலவைபொருவயற்றேவூ
ரறவன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (கூ)

மூத்தன்சிலபலிக்கூர்தொறுமுறைமுறைதிரியும்
பித்தன்செஞ்சடைப்பிஞ்ஞகன்றன்னடியார்கள்
இத்தமாளிகைசெழுமதிதவழ்பொழிற்றேவூ
ரத்தன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (சு)

பாடுவாரிசைபலபொருட்பயனுகந்தன்பாற்
கூடுவார்நுணிக்கொண்டதம்பற்றறப்பற்றித்
தேடுவார்பொருளாவனசெறிபொழிற்றேவூ
ராடுவானடியடைந்தனமல்லலொன்றிலமே. (நு)

பொங்குபூண்முலைப்புரிகுழல்வரிவளைப்பொருப்பன்
மங்கைபங்கினன்கங்கையைவளர்சடைவைத்தான்
றிங்கள்சூடியதீநிறக்கடவுடன்றேவூ
ரங்கணன்றனியடைந்தனமல்லலொன்றிலமே. (சூ)

வன்புயத்தவத்தானவர்புரங்களெரியத்
தன்புயத்துறத்தடவரைவளைத்தவன்றக்க
தென்றமிழ்க்கிலதெரிந்தவர்பொருந்தியதேவூ
ரன்பன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (எ)

தருவுயர்ந்தவெற்பெடுத்தவத்தசமுகனெரிந்து
வெருவவூன்றியதிருவிரலெழுத்துவாள்பணித்தான்
றெருவுதோறுநற்றென்றல்வந்தலையியதேவூ
ரரவுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. (அ)

மூன்றிக்கண்ணனுகான்முகனும்மவர்காணு
வென்றைதிண்டிறலிருங்களிறுரித்தவெம்பெருமான்
செந்தினத்திசையறுபதமுரறிருத்தேவூ
ரந்திவண்ணனேயடைந்தனமல்லலொன்றிலமே. (கூ)

பாறுபுத்தருந்தவமணிசமணரும்பலகாள்
கூறுவைத்ததோர்குறியினைப்பிழையெனக்கொண்டு
தேறியிக்கருஞ்செஞ்சடைக்கடவுடன்றேவூ
ராறுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. (கo)

அல்லலின்றிவிண்ணுள்வர்கள்காழியர்க்கதிப
னல்லசெந்தமிழ்வல்லவன்ஞானசம்பந்த
னெல்லியில்புகழ்மல்கியவெழில்வளர்தேவூர்த்
தொல்லைநம்பனைச்சொல்லியபத்தும்வல்லாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தேவகுருநாதர், தேவியார்-மதுரபாஷிணியம்மை.

219 திருக்கொச்சைவயம்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீலநன் மாமிடற்றனிறைவன்சினத்தகெடுமாவுரித்தநிகரில்
சேலனகண்ணிவண்ணமொருகூறுருக்கொடிசுழ்தேவன்மேவுபதிதான்
வேலனகண்ணிமார்கள்வீனேயாடுமோசைவிழுமோசைவேதவொலியின்
சாலநல்வேலியோசைதருமாடவீதிகொடியாடுகொச்சைவயமே. (க)

வின்டியுடையப்பனெப்பினடமாடவல்லவிகிர்த்தருக்கொள்விமலன்
சடையிடைவெள்ளெருக்கமலர்கங்கைகிங்கடகவைத்தசோதிபதிதான்
மடையிடையன்னமெங்குகிறையப்பரந்தகமலத்துவைகும்வயல்சூழ் [மே.
கொண்டையுடைவண்கையாளர்மறையோர்களென்றும்வளர்கின்றகொச்சைவய

படவரவாடுமுன்கையுடையானிடும்பைகளீவிக்குமெங்கள்பரம
னிடமுடைவெண்டலைக்கைபலிகொள்ளுமின்பனிடமாயவேர்கொள்பதிதா
னடமிடமஞ்ஞைவண்டுமதுவுண்டுபாடுகளிர்சோலைகோலுகனகக்
குடமிடிகூடமேறிவளர்பூவைகல்லமறையோதுகொச்சைவயமே. (ங)

எண்டிசைபாலரெங்குமிகலிப்புகுந்தமுயல்வித்தசித்தைமுடுகிப்
பண்டொளிதீபமாலியிடுதூபமோடுபணிவுற்றபாதர்பதிதான்
மண்டியவண்டன்மிண்டிவருநீரபொன்னிவயல்பாயவாளைகுழுமிக்
குண்டகழ்பாயுமோசைபடநீடதென்னவளர்கின்றகொச்சைவயமே. (ச)

பனிவளர்மாமலைக்குமருகன்குபேரனெடுதோழமைக்கொள்பகவ
னினியனவல்லவற்றையினிதாகல்குமிறைவன்னிடங்கொள்பதிதான்
முனிவர்கடொக்குமிக்கமறையோர்களோமம்வளர்தூமமோடியணவிக்
குனிமதிமூடிநீடுமுயர்வான்மறைத்துகிறைகின்றகொச்சைவயமே. (ஞ)

புலியதள்கோவணக்களுடையாடையாகவுடையானினைக்குமளவி
னலிதருமுப்புரங்களெரிசெய்தநாதனமாவிரிந்தநகர்தான்
கலிகெடவந்தணுளர்கலிமேவுசிக்தையுடையார்நிறைந்துவளரப்
பொலிதருமண்டபங்களுயர்மாடவீடேவரைமேவுகொச்சைவயமே. (சு-ஏ)

மழைமுகில்போலுமேனியடல்வாளரக்கன்முடியோடுதோள்கணெரியப்
பிழைகெடமாம்லர்ப்பொனடிவைத்திபேயோடெனுடிமேயபதிதா
னிழைவளர்ல்குன்மாதரிசைபாடியாடலிடுமூசலன்னகமுகின்.
குழைதருகண்ணிவின்னில்வருவார்கடங்களடிதேடுகொச்சைவயமே. (அ)

வண்டமர்பங்கயத்துவளர்வானும்வையமுழுதுண்டமாலுமிகலிக்
கண்டிடவொண்ணுமெனதுகிளறிப்பறக்துமறியாதசோதிபதிதா
னண்டுணராரைசென்றெனடவேயிருந்துவிரைதேரப்போதுமடிவிற்
புண்டரிகங்களோடுகுமுதம்மலர்ந்தவயன்மேவுகொச்சைவயமே. (கூ)

கையினிலுண்டுமேனியுதிர்மாசர்குண்டரிடுசீவரத்திலுடையார்
மெய்யுரையாதவண்ணம்விளையாடவல்லவிகிர்த்தருக்கொள்விமலன்

பையுடைநாகவாயிலெயிறுமிக்கருவம்பயின்றுமலரச்
செய்யினினீலமொட்டுவிரையக்கமழ்ந்தமணநாறுகொச்சைவயமே. (க0)

இறைவனெயொப்பிலாதவொளிமேனியானேயுலகங்களேழுமுடனே
மறைதருவெள்ளமேறிவளர்கோயின்மன்னியினிதாவிருந்தமணியைக்
குறைவிலஞான மேவுகுளிர்பந்தன்வைத்ததமிழ்மாலைபாடுமவர்போ
யறைகழலீசனுலகர்மேவியென்றுமழகாயிருப்பதறிவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

220 திருநனிபள்ளி–பண்–பியந்தைக்காந்தாரம்.
பாலைநெய்தல் பாடியருளியது.

திருச்சிற்றம்பலம்.

காரைகள்கூகைமுல்லைகளவாகையீகைபடர்தொடரிகள்ளிகவினிச்
சூரைகள்பம்மிவிம்முசுடகமர்ந்தசிவன்மேவுசோலைநகர்தான்
றேரைகளாரைசாயமிதிகொள்ளவாளைகுதிகொள்ளவள்ளைதுவள
நாரைகளாரல்வாரவயன்மேதிவைகுநனிபள்ளிபோலுநமர்காள். (க)

சடையிடைபுக்கொடுங்கியுட்டங்குவெள்ளம்வளர்திங்கள்கண்ணியயலே
யிடையிடைவைத்ததொக்குமலர்தொத்துமாலையிறைவன்னிடங்கொள்பதிதா
மடையிடைவாளைபாயமுழிவாய்நெரிந்தமணநாறுநீலமலருந் [ன்
நடையுடையன்னம்வைகுபுனலம்படப்பைநனிபள்ளிபோலுநமர்காள். (உ)

பெறுமலர்கொண்டுதொண்டர்வழிபாடுசெய்யலொழிபாடிலாதபெருமான்
கறுமலர்கண்டமாகவிடமுண்டகாளையிடமாயகாதலகர்தான்
வெறுமலர்தொட்டுவிட்டவிசைபோனகொம்பின்விடுபோதலர்ந்தவிரைசூழ்
நறுமலரல்லிபுல்லியொலிவண்டுறங்குநனிபள்ளிபோலுநமர்காள். (ஊ)

குளிர்தருகங்கைதங்குசடைமாடிலங்குதலைமாலையோடுகுலவி
யொளிர்தருதிங்கள்சூடியுமைபாகமாகவுடையானுகந்தநகர்தான்
குளிர்தருகொம்மலோடுகுயில்பாடல்கேட்டபெடைவண்டுதானுமுரல
நளிர்தருசோலைமாலைநரைகுருகுவைகுநனிபள்ளிபோலுநமர்காள். (எ)

தோடொருகாதனுகியொருகாதிலங்குசுரிசங்கின்றுபுரளக்
காடிடமாகின்றுகனலாடுமெந்தையிடமாயகாதனகர்தான்
வீடுடனெய்துவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்தெளிப்பவிரலா
னூடனுடுசெம்மையொளிவெள்ளமாருநனிபள்ளிபோலுநமர்காள். (ஏ)

மேகமோடோடுதிங்கண்மலராவணிந்தமலையான்மடந்தைமணிபொன்
னாகமோர்பாகமாகவனலாடுமெந்தைபெருமானமர்ந்தநகர்தா
னாகமோடாடுமன்றியுகளுஞ்சிலம்பவகிலுந்தியொண்பொனிடறி
நாகமோடாரம்வாருபுனல்வந்தலைக்குநனிபள்ளிபோலுநமர்காள். (ஐ)

தகைமலி தண்டுகுலமன முமிழுநாகங்கொடுகொட்டிவீணைமுரல
வகைமலிவன்னிகொன்றைமதமத்தம்வைத்தபெருமானுகந்தகர்தான்
புகைமலிகந்தமாலைபூணவர்கள்பூசல்பணிவார்கள்பாடல்பெருகி
* நகைமலிமுத்திலங்குமணல்சூழ்கிடக்கைநனிபள்ளிபோலுமமர்காள். (எ)

வல்லமிகுவாளான்வேலன் வலீவாளெயிற்றமுதியாவரக்கன்வலியோ
டுலமிகுதோள்களொல்கவிரலாலடர்த்தபெருமானுகந்தகர்தா
னிலமிகுசீர்மேமலுங்கிராதமில்லையெனின்றநீதியதனீ
நலமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளிபோலுமமர்காள். (அ)

நிறவருவொன்றுதோன்றியொன்றிறின்றதொருநீர்மைசீர்மைதீனியா
ரறவருவேதனுவனயனேடுமாலுமறியாதவண்ணனகர்தான்
புறவுரிமுல்லைமௌலவல்குளிர்பிண்டிபுன்னைபுனைகொன்றைதுன்றுபொதுளி
நறவிரிபோதுதாதுபுதுவாசநாறுநனிபள்ளிபோலுமமர்காள். (கூ)

அனமிகுசெல்குசோறுகொணர்கென்றுகையிலிடவுண்டுபட்டவமணும்
மன்மிகுகஞ்சிமண்டையதிலுண்டுதொண்டர்குணபின்றிறின்றவடிவும்
மீனமிகுவேதனான்கும்விரிவித்தகரான்விடையானுகந்தகர்தா
னனமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளிபோலுமமர்காள். (கo)

கடல்வரையோதமல்குகழிகானல்பானல்கமழ்காழியென்றுகருதப்
படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியானஞானமுனிவ
னிடுமறையொன்றவத்தர்பியன்மேலிருத்தினிசையாலுரைத்தபனுவ
லடுவிருளாடுமெந்தைநனிபள்ளியுள்கவினெடுதலாணைநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

22. வேயுறுதோளி-பண்-பியந்தைக்காந்தாரம். ✓

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனு
ஞியிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
யாசறநல்லநல்லவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (க)

என்பொடுகொம்பொடாமையிலைமார்பிலங்கவெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலபுனல்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனு
†லொன்பதொடொன்றெடேழுபதினெட்டோடாறுமுடனுயநாள்களவைதா
னன்பொடுநல்லநல்லவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (உ)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்தவுமையோடும்வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனுற்
றிருமகள்கலியதூர்திசெயமாதபூமிதெய்வமான பலவு
மருநெதிநல்லநல்லவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (ஙூ)

---

* பாலே நெய்தல் பாடியது–இந்த கான்காவது சரணத்தால் விளங்குகின்றது. எவ்வாறென்னில், முத்துகள் விளங்கு மணல்சூழ்ந்த நிலமென்றதனுலென்க. பாலே நெய்தல் பாடியதும்–பாம்பழியப் பாடியதும் என்னுந் திருவெண்பாவாலுமுணர்க.

மதிதுதன் மங்கையோடுவடபாலிருந்துமறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனற்
கொதியுறுகாலனங்கிமடுதூதர்கொடுநோய்களான பலவு
மதிருணநல்கலல்லவவைகல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (ச)

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனேடுமிவிடையேறுமெங்கள்பரமன்
முஞ்சிருள் வன்னிகொன் றைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனல்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னுமிகையான பூதமவையு
மஞ்சிடுநல்லநல்லவவைகல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (நி)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாடனேடுமுடனுய்
நாண்மலர்வன்னிகொன்றைநறுமுடிவந்தெனுளமேபுகுந்தவதனற்
கோளரியுழுவையோடுகொலையானகேழல்கொடுநாகமோடுகரடி
யாளரிநல்லகல்லவவைகல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (சு)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாகவிடையேறுசெல்வர்நடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனல்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தும்விளையானவந் துகலியார்
வப்படிநல்லநல்லவவைகல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (எ)

வேள்படவிழிசெய்தன்றவிடைமேலிருந்துமடவாடனேடுமுடனுய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனு
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனேடுமிடறுனவன் துகலியா
வாழ்கடனல்லகல்லவவைகல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (அ)

பலபலவேடமாகும்பரனுரிபாகன் பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனுன்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்வருகாலமான பலவு
மலிகடன்மேருநல்லவவைகல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (கூ)

கொத்தலர்குழலியோடும்விசயற்குநல்குகுணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியினசமுடிமேலணிந்தெனுள மேபுகுந்தவதனற்
புத்தரொடமணவாதிலழிவிக்குமண்ணறிருநீதுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவவைகல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (கo)

தேனமர்பொழில்கொளாலிவளீனசெந்நெறுன்னிவளர்செம்பொனெங்குங்கிகழ
நானமுகனுமியாயபிரமாபுரத்தமறைஞானஞானமுனிவன்
ரூனுறுகோளுநாளுமடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெ
யானசொன்மாலையோதுமடியார்கள்வானிலசாள்வராணைநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தப்பதிகம் பாண்டியராஜனுடைய நாட்டுக்கெழுந்தருளும்போது அருளிச்செய்தது.

† இரண்டாவது தேவாரம்-மூன்றுவது சரணத்தில் பிரயாணத்துக்காகாத கo-நக்ஷத்திரங்களைக் குறித்திருக்கின்றது. விவரம், நக்ஷத்திரங்களில் முதலுற்பத்தி இருத்திகையாம். ஆதலாலதனை முதலாகக் கொண்டு பார்க்கில் கூ-வது நக்ஷத்திரம் பூசம். ஒன்றென்றது-இருத்திகை, எ-ஆயிலிய நக்ஷத்திரம், கஅ-பூராடம் ஆறுமுடனுய நாள்கள் என்றது-மேற்கூறிய ரான்கும் அல்லாத அ-நக்ஷத்திரங்களுமாம். கo-நக்ஷத்திரங்களாவன: பூரம்-பூராடம்-பூரட்டாதி-மகம்-கேட்டை-பரணி-இருத்திகை-சுவாதி-ஆயிலியம்-விசாகம்-ஆதிரை-சித்திரை-என்பவைகளாம்.

ஃஃஃ திருநாரையூர்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உரையினில்வந்தபாவமுணர்கோய்களும்மசெயமீங்குருற்றமுலகில்
வரையினிலாமைசெய்தவலைதீரும்வண்ணமிகவேத்திநித்தனினைமின்
வரைசிலையாசவன்முமதின்மூன்றெரித்தவளர்கங்குனங்கைவெருவத்
திரையொலிகஞ்சமுண்டசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (க)

ஊனடைகின்றகுற்றமுதலாகியுற்றபிணிகோயொருங்குமுயரும்
வானடைகின்றவெள்ளமதிசூடுசென்னிவிதியானவேதவிகிர்தன்
கானிடையாடியூதப்படையானியங்குலிடையாளிலங்குமுடிமேற்
றேனடைவண்டுபாடுசடையண்ணண்ணுறைதிருநாரையூர்கைதொழுவே. (உ)

ஊரிடைகின்றுவாமுமுயிர்செற்றகாலன்றுயருற்றதீங்குவிரவிப்
பாரிடைமெள்ளவந்துபழியுற்றவார்த்தையொழியுற்றவண்ணமகலும்
பேரிடையன்றுமூன்றுமதிலெய்தஞான்றுபகழ்வானுளோர்கள்புணருந்
தேரிடைகின்றவெந்தைபெருமானிருந்ததிருநாரையூர்கைதொழுவே. (ங)

தீயுறவாயவாக்கையதுபற்றிவாழும்வினைசெற்றவுற்றவுலகின்
றூயுறுதன்மையாயதலிவன்றனுமகிமையாகவின்றுமருவும்
பேயுறவாயகானிடமாடிகோலவிடமுண்டகண்டன்முடிமேற்
றேய்பிறைவைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (ச)

வசையபராதமாயவுரோதநீங்குந்தவமாயதன்மைவருமாண்
மிசையவராதியாயதிருமார்விலங்குவிரிநூலர்விண்ணுலகினு
மிசையவராசிசொல்லவிமையோர்களேத்தியமையாதகாதலொடுசேர்
தினசயவர்போற்றுகின்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (ஞ)

உறைவளரூனிலாயவுயிர்கிற்கும்வண்ணமுணர்வார்ச்சுமுண்மையுலகிற்
குறைவுளவாகின்றகுறைதீர்க்குமெஞ்சினிறைவாற்றுகேசம்வளரு
மறைவளர்நாவன்மாவினுரிபோர்த்தமெய்யனரவார்த்தவண்ணல்கழலே
றிறைவளர்தேவர்கொண்டினருள்பேணுகின்றதிருநாரையூர்கைதொழுவே. (சு)

தனம்வருநன்மையாருந்தருதிக்குழுந்துவருதிக்குழுன்றவுடலி
னினம்வளரைவர்செய்யும்வினையங்கள்செற்றுறுதினைவொன்றுசிந்தைபெருகு
முனமொருகாலமூன்றுபுரம்வெந்தமங்கச்சரமுன்றெரிந்தவுணர்
தினமொருகாலுமித்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (எ)

உருவரைகின்றநாளிலுயிர்சொள்ளுங்கூற்றனியஞ்சுமாதலுறநீர்
மருமலர்தூவியென்றும்வழிபடுசெய்யும்மிழிபாடிலாதகடலி
னருவரைசூழ்லங்கையரையன்றன்வீரமழியத்தடக்கைமுடிக
டிருவிரல்வைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (அ)

வேறுயர்வாழ்வுதன்மையினுதக்கமிக்கபகைதீர்க்குமேயவுடலிற்
றேறியசிந்தைவாய்மைதெளிவிக்கின்றகரவைக்கரந்துகிழுஞ்

சேறுயர்பூவின்மேயபெருமானுமற்றைத்திருமாலுநேடவெரியாய்ச்
சிறியசெம்மையாருசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (கூ)

மிடைபடுதுன்பமின்பமுளதாக்குமுள்ளம்வெளியாக்குமுன்னியுணரும்
படையொருகையிலேந்திப்பலிகொள்ளும்வண்ணமொலிபாடியாடிபெருமை
யுடையினிலிட்டுளோருமுடல்போர்த்துளோருமுரைமாயும்வண்ணமழியச்
செடிபடலைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவே. (கo)

எரியொருவண்ணமாயவுருவாணியெந்தைபெருமானியுள்கிநினையார்
திரிபுரமன்றுசெற்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவரின்
பொருபுனல்சூழ்ந்தகாழிமறைஞானபந்தனுரைமாலைப்துமொழிவார்
திருவளர்செம்மையாயிருள்பேறுமிக்கதுளதென்பர்செம்மையினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் – அசு.

---

223 திருநறையூர்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நேரியனுகுமல்லனெருபாலுமேனியரியான்முனையவொளியா
னீரியல்நாலுமாகிநிறைவானுமாகியுறுதியுமாயநிமல
னூரியல்பிச்சைபேணியுலகங்களேத்தநலகண்டம்பண்டுசுடலை
நாரியோர்பாகமாகநடமாடவல்லநறையூரினம்பனவனே. (க)

இடமையிலன்னசாயன்மடமங்கைதன்கையெதிர்நாணிபூணவரையிற்
கடமையிலம்புகோத்துவெயில்செற்றுகந்திவ்மரர்க்களித்ததலைவன்
மடமையூர்திதாதையெனநின்றுதொண்டர்மனநின்றமைந்தன்மருவுக்
நடமையிலாலநீடுகுயில்கூவுசோலைநறையூரினம்பனவனே. (உ)

சூடகமுன்கைமங்கையொருபாகமாகவருள்காரணங்கள்வருவா
னீடகமானநோக்கியிடுபிச்சைகொண்டுபடுபிச்சர்நின்றுபரவத்
தோடகமாயோர்காதுமொருகாலங்குழைதாழவேழவுரிய
னுடகமாடவாடிமடவார்கள்பாடுநறையூரினம்பனவனே. (ங)

சாயனன்மாதோர்பாகன்விதியாயசோதிதியாகநின்றகடவுள்
ளாயகமென்னுள்வந்தவருளாயசெல்வனிருளாயகண்டனவனித்
தாயெனநின்றுகந்ததலிவன்விரும்புமலியின்கண்வந்துதொழுவார்
நாயதனென்றிறைஞ்சுமறையோர்கள்பேணுநறையூரினம்பனவனே. (ச)

நெடிபடுமெய்யமையகிறைசோலைசுற்றிநிகழம்பலத்தினடுவே
யதிர்படவாடவல்லவமர்க்கொருத்தனமர்சுற்றமாயவிறைவன்
மதிபடுசென்னிமன்னுசடைதாழவந்தவிடையேறியில்பலிகொள்வா
னதிபடவுந்திவந்தவயல்வானேபாயநறையூரினம்பனவனே. (ஞ)

கணிகையோர்சென்னிமன்னுமதுவன்னிகொன்றைமலர்தன்றுசெஞ்சடையினுன்
பணிகையின்முன்னிலங்கவருவேடமன்னுபலவாகிநின்றபரமன்
னணியவேதவோசையிகலங்கமாறின்பொருளானவாதியருளா
னணியதொண்டர்கூடிமலர்தூவியேத்துதறையூரினம்பனவனே. (சு)

ஒளிர்தருநின்றமேனியுருவெங்குமங்கமவையாரவாடலரவம்
மிளிர்தருகையிலங்கவனலேந்தியாடும்விகிர்தன்விடங்கொண்மிடறன்
மூளிதருசோலையாலிதொழின்மேவவேதமெழிலாரவென்றியருளுங்
களிர்மதிசேருமாடமட்வர்களாருகறையூரினம்பனவனே. (எ)

அடலெருதேறுகந்தவதிருங்கழற்கமளிதிருஞ்சிலம்பொடிசையச்
கடலிடைநஞ்சமுண்டுகனிவுற்றகண்டன்முனிவுற்றிலங்கையரைய
னுடலொடுதோளனீத்துமுடிபத்திறுத்தமிசைகேட்டிரங்கியொருவா
ணட்லைகடர்த்தருள்கிறையாளவல்லகறையூரினம்பனவனே. (அ)

குலமலர்மேலினுனுமிருமாயனுமெதிர்கூடிநேடிகினீவுற்
றிலபலவெய்தொணுமையெரியாயுயர்ந்தபெரியானிலங்குசடையன்
சிலபலதொண்டர்கின்றுபெருமைகள்பேசவருமைத்திகழ்ந்தபொழிலின்
னலமலர்சிந்தவாசமணநாறுவீதிறையூரினம்பனவனே. (கூ)

தவருறுகின்றவாடையுடல்போர்த்துழன்றவுலர்தாமுமல்லசமனுங்
கவருறுசிந்தையாளருரைதீத்தகந்தபெருமான்பிறங்குசடையன்
றவமலிபத்தர்சித்தர்மறையாளர்பேணமுறைமாதர்பாடிமருவுக்
கவமணிதன்றுகோயிலொளிபொன்செய்மாடருறையூரினம்பனவனே. (கo)

கானலிலாவியோதமெதிர்மல்குகாழிமிகுபக்தன்முந்தியுணர
ஞானமுலாவுசிந்தையடிவைத்தகந்தருறையூரினம்பனவனீ
யீனமிலாதவண்ணமிசையாலுரைத்ததமிழ்மாலைபத்துமிணைவார்
வானநிலாவவல்லர்நிலமெங்குநின்றுவழிபாடுசெய்யுமிகவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

224 திருமுல்லைவாயில்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

தளிமண்டியுண்டுநிறம்வக்கண்டனடமன்னுதுன்னுசுடரோ
னெளிமண்டியும்பருலகங்கடந்தவமைபங்கனெங்களரனூர்
களிமண்டுசோலைகழனிக்கலந்தகமலங்கடங்குமதவிற்
றெளிமண்டியுண்டுசிறைவண்டுபாடுந்திருமுல்லைவாயிலதுவே. (க)

பருவத்தில்வந்துப்யனுற்றபண்பனயனைப்படைத்தபரம
னரவத்தொடங்கமலைகட்டியெங்குமரலிக்கின்றவரஹா
ருருவத்தின்மிக்கவொளிர்சங்கோடிப்பியவையோதமோதவெருவித்
தெருவத்தில்வந்துசெழுமுத்தலைக்கொடிருமுல்லைவாயிலதுவே. (உ)

வாராதகாடன்வருவார்தம்மில்லினுருமெல்கிகாளுமுருகில்
லாராதவின்பனகலாதவன்பனருண்மேவிகின்றவரணூர்
யேராதசோதிபிரியாதமார்பினலர்மேவுபேதைபிரியா
டீராதகாதனெதிநேராடீடுதிருமுல்லைவாயிலிதுவே. (கூ)

ஒன்றொன்றொடொன்றுமொருநூறன்கொடைத்துமிருமூன்றொடேழுமுடனு
யன்றின்றேடொன்றுமறிவானவர்க்குமறியாமைகின்றவரணூர்
குன்றொன்றொடொன்றுநூலையொன்றொடொன்றுகொடியொன்றொடொன்றுகுழுமிச்
சென்றொன்றொடொன்றுசெறிவாய்கிறைந்ததிருமுல்லைவாயிலிதுவே. (சு)

கொம்பன்னமின்னினிடையாளோர்கூறன்விடைகாளுமேறுகுழகர்
ணம்பன்னெமன்பன்மறைநாவன்வானின்மதியேறுசென்னியரனூ
ரம்பன்னவொண்கணவராடரங்கினணிகோபுரங்களழகார்
செம்பொன்னசெல்வித்தருமாடநீடுதிருமுல்லைவாயிலிதுவே. (நி)

ஊனேறுவேலினுருவேறுகண்ணியொளியேறுகொண்டவொருவ
னூனேறுதேறியழகேறுநீறனரவேறுபூணுமவனூர்
மானேறுகொல்லைமயிலேறிவந்தருயிலேறுசோலைமருவித்
தேனேறுமாவின்வளமேறியாடுதிருமுல்லைவாயிலிதுவே. (சு)

செஞ்சாரநீடுகினவரைமூடுவினெதையகின்றகிமல
னஞ்சாடுசென்னியரவாடுகையனனலாடுமேனியரனூர்
மஞ்சாருமாடமணிதோறுமையமுளதென்றுவைகிவரினுஞ்
செஞ்சாலிநெல்லின்வளர்சோறளிக்கொடிருமுல்லைவாயிலிதுவே. (எ)

வரைவன்தெடுத்தவலிவாளரக்கன்முடிபத்துமிற்றுநெரிய
வுரைவன்தபொன்னினுருவன்தமேனியுமைபங்கனெங்கள்பரனூர்
வரைவன்தசந்தோடகிலுந்திவந்துமிளிர்கின்றபொன்னிவடபாற்
றிரைவன்துவந்துசெறிதேறலாடுதிருமுல்லைவாயிலிதுவே. (அ)

மேலோடிநீடுவிளையாடன்மேவுவிரிநூலன்வேதமுதல்வன்
பாலாடுமேனிகரியானுமுனனியவர்தேடகின்றபரனூர்
காலாடிநீலமலர்தன்றிகின்றகதிரேறுசெந்நெல்வயலிற்
சேலோடவாளைகுதிகொள்ளமல்குதிருமுல்லைவாயிலிதுவே. (கூ)

பனைமல்குதிண்கைமதமாவுரித்தபரமண்ணகம்பனடியே
நினைவன்னசிந்தையடையாததேரமண்மாயகின்றவரணூர்
வனமல்குகுதைவகுளங்கலெங்குமுகிளங்கலெங்குநெரியச்
சினைமல்குபுன்னைதிகழ்வாசகாறுதிருமுல்லைவாயிலிதுவே. (கo)

அணிகொண்டகோதையவணன்றுமெத்தவருள்செய்தவெங்கைமருவார்
திணிகொண்டமூன்றுபுரமெய்தவில்லிதிருமுல்லைவாயிலிதன்மேற்
றுணிகொண்டசிந்தையவர்காழிஞானபிகுபந்தனெண்டமிழ்களி
னணிகொண்டபத்தமிசைபாடுபத்தரல்வானமாள்வர்மிகவே. (கக)

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - முல்லைவனநாதர், தேவியார் - கோதையம்மை.

225 திருக்கொச்சைவயம்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

அறையும்பூம்புனலோடுமாடரவச்சடைதன்மேற்
பிறையுஞ்சூடுவர்மார்பிற்பெண்ணெருபாகமமர்ந்தார்
மறையினெல்லொலிபோவாமந்திரவேள்வியுறுத
குறைவிலந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. (க)

சுண்ணத்தர்தோலொடுநூல்சேர்மார்பினர்துன்னியபூதக்
சுண்ணத்தர்வெங்கனலேந்திக்கங்குளின்றுடுவர்கேடி
லெண்ணத்தர்கேள்விநல்வேள்வியுறுதவர்மாலெரியோம்பும்
வண்ணத்தவந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. (உ)

பாலியன்னவெண்ணீறுபூசுவர்பல்சடைதாழ
மாலையாடுவர்கீதமாமறைபாடுதன்மகிழ்வர்
வேலைமால்கடலோதம்வெண்டிரைகரைமிசைவீளங்குங்
கோலமாமணிசிந்துங்கொச்சைவயமமர்ந்தாரே. (ங)

கடிகொள்கூவிளமத்தங்கமழ்சடைநெடுமுடிக்கணிவர்
பொடிகள்பூசியமார்பிற்புனைவர்நன்மங்கையோர்பங்கர்
கடிகொணீடொலிசங்கினெலியொடுகலியொலிதுதைந்து
கொடிகளோங்கியமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (ச)

ஆடன்மாமதியுடையாராயினபாரிடஞ்சூழ
வாடல்வெண்டலையேந்திவையகமிடுபலிக்குழல்வ
ராடன்மாமடமஞ்ஞையணிதிகழ்பேடையோடாடிக்
கூடுதண்பொழில்சூழ்ந்தகொச்சைவயமமர்ந்தாரே. (ஞ)

மண்டுநங்கையுமரவுமல்கியவளர்சடைதன்மேற்
றுண்டவெண்பிறையணிவர்தொல்வரைவில்லதுவாக
வீண்டதானவராணமம்வெவ்வழலெரிகொளவிடைமேற்
கொண்டகோலமதுடையர்கொச்சைவயமமர்ந்தாரே. (சு-எ)

அன்றவானிழலமர்ந்துவறவுரைகால்வர்க்கருளிப்
பொன்றினூர்தலையோட்டிலுண்பதுபொருகடலிலங்கை
வென்றிவேந்தனையல்லலுன்றியவிரலினர்வான்றோய்
குன்றமன்னபொன்மாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (அ)

சீர்கொண்மாமலராளுஞ்செங்கண்மாலென்றிவரேத்த
வேர்கொள்வெவ்வழலாகியெங்குமுறகிமிர்ந்தாரும்
பார்கொள்விண்ணழல்காளீர்ப்பண்பினர்பான்மொழியோடுங்
கூர்கொள்வேல்வலனேந்திக்கொச்சைவயமமர்ந்தாரே. (கூ)

குண்டர்வண்டுவராடைபோர்த்ததோர்கொள்கையினர்கண்
மிண்டர்பேசியபேச்சுமெய்யல்லமெய்ணிகண்டன்

பண்டைகம்வினை தீர்க்கும்பண்பினரொண்கொடியோடுங்
கொண்டல்சேர்மணிமாடக்கொச்சையமமர்ந்தாரே. (கo)

கொந்தணிபொழில்சூழ்ந்தகொச்சையமாகர்மேய
வந்தணனடியேத்துமருமறைஞானசம்பந்தன்
சந்தமார்தழகாயதண்டமிழ்மாலைவல்லோர்போய்
முந்திவானவரோடும்புகவல்முனினெடவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

2.26 திருநெல்வாயில் திருஅரத்துறை-பண்-பியந்தைக் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லால்சென்றுகைகூடுவதன்றுற்
கந்தமாமலருந்திக்கும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (சு)

ஈரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச்சித்தர்கடொழச்செல்வதன்றுல்
வாரிமாமலருந்திவருபுனனிவாமல்குகரைமே
லாருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (உ)

* பிணிகலந்தபுன்சடைமேற்பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்தசெய்யாதபாவிகடொழச்செல்வதன்றுன்
மணிகலந்தபொன்னுந்திவருபுனனிவாமல்குகரைமே
லணிகலந்தநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ரு)

தன்னவாடையொன்றுடுத்துத்தூயவெண்ணீற்றினராகி
யுன்னினைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றுற்
பொன்னுமாமணியுந்திப்பொருபுனனிவாமல்குகரைமே
லன்னமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ச).

வெருகுரிஞ்சுவெங்காட்டிலாடியவிமலனென்றுள்கி
யுருகினைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றுன்
முருகுரிஞ்சுபூஞ்சோலைமொய்ம்மலர்சுமந்திழிநிவாவந்
தருகுரிஞ்சுநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ஞ)

உரவுநீர்ச்சடைக்கரந்தவொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவினைபவர்க்கல்லாற்பரிந்துகைகூடுவதன்றுற்
குரவுநீடியசோலைக்குளிர்புனனிவாமல்குகரைமே
லரவமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (சு)

* பிணி-கட்டுதல்.

நீலமாமணிமிடற்றுநீறணிசிவனெனப்பேணுஞ்
சீலமாந்தர்கட்கல்லாற்சென்றுகைகூடுவதன்றுற்
கோலமாமலருந்திக்குளிர்புனனிவாமல்குகரைமே
லாலுஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (எ)

செழுந்தண்மால்வரையெடுத்தசெருவலியிராவணனலை
வழுந்தவூன்றியவிரலான்போற்றியென்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக்குளிர்புனனிவாமல்குகரைமே
லழுந்துஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (அ)

நுணங்குநூலையன்மாலுமிருவருநேரக்கரியானே
வணங்கிநைபவர்க்கல்லால்வந்துகைகூடுவதன்றுன்
மணங்கமழ்ந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகரைமே
லணங்குஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (கூ)

சாக்கியப்படுவாருஞ்சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்படகில்லாப்பாவிகடொழச்செல்வதன்றுற்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப்பொருபுனனிவாமல்குகரைமே
லார்க்குஞ்சோலைசெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (கo)

கறையினர்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்த
னறையும்பூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளே
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமார்ந்தம்மினேபோய்ப்
பறையுமையுறவில்லைபாட்டிவைபத்தும்வல்லார்க்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கோட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அரத்துறைநாதர், தேவியார்-ஆனந்தநாயகியம்மை.
நிவா வென்பது ஒருநதி-புனல்-நிவாவெனப் பதம்பிரிக்க.
இது முத்துச்சிவிகை-முத்துச்சின்ன முதலியவை பெற்றபோதருளிச்செய்தது.

227 திருமறைக்காடு-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தங்
கங்குலாரிருள்போழுங்கலிமறைக்காட்டமர்ந்தார்தாந்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனு
மெங்குமெங்கள்பிரானுர்புகழலதிகழ்பழியிலரே. (க)

கூனிளம்பிறைசூடிக்கொடுவரித்தோலுடையாடை
யானிலங்கிளைரைத்துமாடிவர்பூண்பதுமரவங்
கானலங்கழியோதங்கரையொடுகதிர்மணிதருந்தம்பத்
தேனலங்கமழ்சோலைத்திருமறைக்காடமர்ந்தாரே. (உ)

நுண்ணிதாய்வெளிதாகிநால்விடன் றிலங்குபொன்மார்பிற்
பண்ணியாழெனமுரலும்பனிமொழியுமையொருபாகன்

முண்ணிதாயவெள்ளருவிசலசலநுரைமணிதும்பக்
கண்ணிதானுமோர்பிறையார்கலிமறைக்காடமர்ந்தாரே. (கூ)

ஏழைவெண்குருகயலேயிளம்பெடைதனதெனக்கருதித்
தாழைவெண்மடற்புல்குந்தண்மறைக்காடமர்ந்தார்தா
மாழையங்கயலொண்கண்மலைமகள்கணவனதடியின்
னீழலேசரணுகினீனபவர்வினைநலிவிலரே. (ச)

அரவம்வீக்கியவரையுமதிர்கழறமுவியவடியும்
பரவராஞ்செய்தபாவம்பறைதவருளுவர்பதிதான்
மரவமீடியர்சோலைமழலைவண்டியாழ்செயுமறைக்காட்
டிரவுமெல்லியும்பகலுமேத்துதல்குணமெனலாமே. (ஞ)

பல்லிலோடுகையேந்திப்பாடியுமாடியும்பலிதே
ரல்லல்வாழ்க்கையரேனுமழகியதறிவரெம்மடிகள்
புல்லமேமுவர்பூதம்புடைசெலவுழிதர்வர்க்கிடமா
மல்குவெண்டிரையோதமாமறைக்காடதுதானே. (சு)

நாகந்தான்கயிறுகளிர்வரையதற்குமத்தாகப்
பாகந்தேவரோடசுரர்படுகடலளறெழக்கடைய
வேகஞ்செழவாங்கேவெருவொடுமிரிந்தெங்குமோட
வாகந்தன்னில்வைத்தமிர்தமாக்குவித்தான்மறைக்காடே. (எ)

தக்கன்வேள்வியைத்தகர்த்தோன்றனதொருபெருமையையோரான்
மிக்குமேற்சென்றுமலையையெடுத்தலுமலைமகணடுங்க
நக்குத்தன்றிருவிரலாலூன்றலுநடுநடுத்தரக்கன்
பிறைவனெங்கள் பெருமானிடம்போலிரும்பைதனுண்
மறைகள்வல்லார் வணங்கித்தொழுகின்றமாகாளமே. (அ)

பொங்குசெங்கண்ணரவும்மதியும்புரிபுன்சடைத்
தங்கவைத்தபெருமானெனதின்றவர்தாழ்விட
மெங்குமிச்சையமர்ந்தானிடம்போலிரும்பைதனுண்
மங்குலோயும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. (எ)

நட்டத்தோடுரியாடுகானத்தெரியாடுவா
னட்டமூர்த்தியழல்போலுருவன்னழகாகவே
யிட்டமாகவிருக்கும்மிடம்போலிரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்துபணிவார்பிணிதீர்க்குமாகாளமே. (அ)

அட்டகாலன்றனவவ்வினைனவ்வரக்கன்முடி
யொட்டுமற்றுமிருபத்திரண்டும்மிறலுன்றிரு
னிட்டமாகவிருப்பானவன்போலிரும்பைதனுண்
மட்டுவார்ந்தபொழில்சூழ்ந்தெழிலாருமாகாளமே. (கூ)

அரவமார்த்தன்றனலங்கையேந்தியடியும்முடி
பிரமன்மாலும்மறியாமைமின்றபெரியோனிடங்
குரவமரும்பொழிற்குயில்கள்சேரும்மிரும்பைதனுண்
மருவிவானோர்மறையோர்தொழுகின்றமாகாளமே. (கo)

எந்தையெம்மானிடமெழில்கொள்சோலையிரும்பைதனுண்
மந்தமாயபொழில்சூழ்ந்தழகாருமாகாளத்தி
லந்தமில்லாவனலாடுவானீயணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடவல்லார்பழிபோகுமே. (கக)

திருச்சிற்றம்பலம்

தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-மாகாளேசுவரர், தேவியார்-குயிலம்மை.

---

254 திருத்திலதைப்பதி-மதிமுத்தம்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

பொடிகள்பூசிப்பலதொண்டர்கூடிப்புலர்காலையே
யடிகளாரத்தொழுதேத்தநின்றவழகன்னிடங்
கொடிகளோங்கிக்குலவும்வீழவார்தில்லைதைப்பதி
வடிகொள்சோலைம்மலிமணங்கமழும்மதிமுத்தமே. (க)

தொண்டர்மிண்டிப்புகைவிம்முசார்துங்கமழ்தூணையால்
கொண்டுகண்டார்குறிப்புணர்கின்றகுழகன்னிடம்
தெண்டிரைப்பூம்புனலரிசில்சூழ்ந்தநிலைதைப்பதி
வண்டுகொண்டுற்றிசையபிஞ்சோலைமதிமுத்தமே. (உ)

அட்டலேறுயர்த்தகரந்தானடியாரமார்தொழக்
கடலுணஞ்சமமுதாகவுண்டகடவுள்விடங்

திடலுடங்கச்செழுங்கழனிசூழ்ந்ததிலைதைப்பதி
மடலுள்வாழைக்கனிதேன்பிலிற்றுமதிமுத்தமே. (ஈ)

கங்கைதிங்கள்வன்னிதுன்னெருக்கினொடுகூவிளம்
வெங்கணாகம்விரிசடையில்வைத்தவிகிர்தன்னிடஞ்
செங்கயல்பாய்புனலரிசில்சூழ்ந்ததிலைதைப்பதி
மங்குறீயும்பொழில்சூழ்ந்தழகார்மதிமுத்தமே. (உ)

புரவியேழும்மணிபூண்டியங்குங்கொடித்தேரினன்
பரவிகின்றுவழிபாடுசெய்யும்பரமேட்டியூர்
விரவினாழல்விரிகோங்குவேங்கைசுரபுன்னைகண்
மரவமல்வன்மலருந்திலைதைப்பதிமுத்தமே. (ஊ)

வீண்ணர்வேதம்விரித்தோதவல்லாரொருபாகமும்
பெண்ணரெண்ணுரெயில்செற்றுகந்தபெருமானிடன்
தெண்ணிலாவின்னெளிதீண்டுசோலைத்திலைதைப்பதி
மண்ணுளார்வந்தருள்பேணிகின்றமதிமுத்தமே. (ரு)

ஆறுசூடியடையார்புரஞ்செற்றவர்பொற்றிருடி
கூறுசேருமுருவர்க்கிடமாவதுகுறுங்காற்
றேறலாரும்பொழில்சூழ்ந்தழகார்திலைதைப்பதி
மாறிலாவண்புனலரிசில்சூழ்ந்தமதிமுத்தமே. (எ)

கடித்துவந்தகனன்மேனியிலுன்கருவரைதனை
யெடித்தவன்றன்முடிதோளடர்த்தார்க்கிடமாவது
புடைக்கொள்பூகத்திளம்பாளைபுல்கும்மதுப்பாயவாய்
மடித்தமந்தியுகளுந்திலைதைமதிமுத்தமே. (அ)

படங்கொணாகத்தலியானும்பைந்தாமரையின்மிசை
யிடங்கொணல்வேதனுமேத்தநின்றவிறைவன்னிடன்
திடங்கொணவின்னிசைதொண்டர்பாடுந்திலைதைப்பதி
மடங்கல்வந்துவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. (கூ)

புத்தர்தேரர்பொறியில்சமணர்களும்வீறிலாப்
பித்தர்சொன்னம்மொழிகேட்கிலாதபெருமானிடம்
பத்தர்சித்தர்பணிவுற்றிறைஞ்சுந்திலைதைப்பதி
மத்தயானைவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. (கo)

மந்தமாரும்பொழில்சூழ்திலைதைமதிமுத்தமேற்
கந்தமாருங்கடற்காழியுளான்றமிழ்ஞானசம்
பந்தன்மாலைபழிதீரகின்றேத்தவல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வார்சிவன்சேவடிசேர்வதுதிண்ணமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–மதிமுத்தநாதேசுவரர், தேவியார்–பொற்கொடியம்மை.

255 திருநாகேச்சரம்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தழைகொள்சந் தும்மகிலும்மயிற்பீலியுஞ்சாதியின்
பழமுமுந்திப்புனல்பாய்பழங்காவிரித்தென்கரை
நிழலில்வாணர்தொழுநல்குரீர்மல்குநாகேச்சரத்
தழகர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கழகாகுமே. (க)

பெண்ணைச்பாகம்மடையச்சடையிற்புனல்பேணிய
வண்ணமானபெருமான்மருவும்மிடமண்ணுளார்
நண்ணிநாளுந்தொழுதேத்திநன்செய்துநாகேச்சரங்
கண்ணினுற்காணவல்லாரவர்கண்ணுடையார்களே. (உ)

குறவர்கொல்லைப்புனங்கொள்ளைகொண்டும்மணிகுலவுநீர்
பறவையாலப்பரக்கும்பழங்காவிரித்தென்கரை
நறவைநாறும்பொழில்சூழ்ந்தழகாயநாகேச்சரத்
திறைவர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கிடரில்லையே. (ங)

கூசநோக்காதமுன்சொன்னபொய்கொடுவினைகுற்றமுங்
நாசமாக்கும்மநத்தார்கள்வந்தாடுநாகேச்சரந்
தேசமாக்குந்திருக்கோயிலாக்கொண்டசெல்வன்கழ
னேசமாக்குந்திறத்தாரறத்தார்நெறிப்பாலரே. (ச)

வம்புநாறும்மலரும்மலைப்பண்டமுங்கொண்டுநீர்
பைம்பொன்வாரிக்கொழிக்கும்பழங்காவிரித்தென்கரை
நம்பர்நாளுமமர்கின்றநாகேச்சரநண்ணுவா
ரும்பர்வானோர்தொழச்சென்றுடனுவதுமுண்மையே. (ஞ)

காளமேகக்கிறக்காலனைடந்தகருடனு
நீளமாய்கின்றெய்தகாமனும்பட்டனனினைவுறி
னுளுங்நாதனமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
கோளுநாளுந்தீயவேனுநன்காங்குறிக்கொண்மினே. (ட)

வேயுதிர்முத்தொடுமத்தயானைமருப்பும்விராய்ப்
பாய்புனல்வந்தலைக்கும்பழங்காவிரித்தென்கரை
நாயிறுந்திங்களுங்கூடிவந்தாடுநாகேச்சர
மேயவன்றண்டிபோற்றியென்பார்வினைவீடுமே. (ண)

இலங்கைவேந்தன்சிரம்பத்திரட்டியெழிற்றோள்களும்
மலங்கிவீழும்மலையாலடர்த்தானிடமல்லிய
நலங்கொள்சிந்தையவர்நாடொறுநண்ணுநாகேச்சரம்
வலங்கொள்சிந்தையுடையாரிடராயினமாயுமே. (அ)

கரியமாலும்மயனும்மடியும்முடிகாண்பொ
வெரியதாகிநிமிர்ந்தானமரும்மிடமீண்டுகா

விரியினீர்வந்தலைக்குங்கரைமேவுநாகேச்சரம்
பிரிவிலாதவ்வடியார்கள்வானிற்பிரியார்களே. (கூ)

தட்டிடுக்கியறிதூக்கியகையினர்சாக்கியர்
கட்டுரைக்கும்மொழிகொள்ளலும்வெள்ளிலங்காட்டிடை
நட்டிருட்கண்ணடமாடியநாதனுகேச்சர
மட்டிருக்கும்மலரிட்டடிவீழ்வதுவாய்மையே. (கூ)

கந்தகாமும்புனற்காவிரித்தென்கரைக்கண்ணுதன்
னந்திசேருந்திருநாகேச்சரத்தின்மேன்ஞானசம்
பந்தனுவிற்பனுவல்லிவைபத்தும்வல்லார்கள்போ
யெந்தையீசன்னிருக்கும்முலகெய்தவல்லார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-கூ0.

---

256 திருமூக்கீச்சரம்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும்விரலேழையோடாடியகாரண
மாய்ந்துகொண்டாங்கறியங்கிறைந்தாரவரார்கொலோ
வேந்தன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மெய்ம்மையே. (க)

வெண்டலையோர்கலனப்பலிதேர்ந்துவிரிசடைக்
கொண்டலாரும்புனல்சேர்த்தமையாளொடுங்கூட்டமா
விண்டவர்தம்மதிலெய்தபின்வேனில்வேள்வெந்தெழக்
கண்டவர்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்கன்மமே (உ)

மருவலார்தம்மதிலெய்ததுவும்மான்மதலையை
யுருவிலாரவ்வெரியூட்டியதும்முல்குண்டதாற்
செருவிலாரும்புலிசெங்கயலானையினஞ்செய்த
பொருவின்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்யும்பூசலே. (ங)

அன்னமன்னநடைச்சாயலாளோடமர்செய்தவே
மின்னேயன்னசடைக்கங்கையான்மேவியகாரணம்
தென்னன்கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினன்
மன்னன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மாயமே. (ச)

விடமுனுரவ்வழல்வாயதோர்பாம்பரைவீக்கியே
நடமுனுரவ்வழலாடுவர்பேயொடுநள்ளிருள்
வடமனீடுபுகழ்ப்பூழியன்றென்னவன்கோழிமன்
னடன்மன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரச்சமே. (ஞ)

வெந்தநீறுமெய்யிற்பூசுவராடுவர்வீக்கிருள்
வந்தெனரவ்வனேகொள்வதுமிங்கொருமாயமா
மந்தணமாதனனேரியன்செம்பியனுக்கிய
வெந்தைமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரேதமே. (சு)

அரையிலாருங்கோலியில்லவனுணுடுபெண்ணுமா
யுரையிலாரவ்வழலாடுவரொன்றலர்காண்மினே
விரவலார்தம்மதின்மூன்றுடன்வெவ்வழலாக்கினு
னரையன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரச்சமே. (எ)

ஈர்க்குநீர்ச்செஞ்சடைக்கேற்றதுங்கூற்றையுதைத்ததுங்
கூர்க்குருன்மூவிலைவேல்வலனேந்தியகொள்கையும்
மார்க்கும்வாயானரக்கன்னுரத்தைகெரித்தவ்வடன்
மூர்க்கன்மூக்கீச்சரத்தடிகள்செய்யாகின்றமொய்ம்பதே. (அ)

நீருளாரும்மலர்மேலுறைவானெடுமாலுமாய்ச்
சீருளாருங்கழறேடமெய்த்தீத்திரளாயினன்
சீரினலங்கொளிர்தென்னவன்செம்பியன்வில்லவன்
சேருமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்செம்மையே. (கூ)

வெண்புலான்மார்பிடுதலினீர்வெற்றரையுழல்பவ
ருண்பினுலேயுரைப்பார்மொழியூனமதாக்கினு
ணெண்புலால்வேம்பிகவல்லவனெங்கெழிற்கிள்ளைசேர்
பண்பின்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்பச்சையே. (கo)

மல்லிவார்மும்முடிமன்னர்மூக்கீச்சரத்தடிகளைச்
செல்வராகினியும்படிசேர்த்தியசெந்தமிழ்
நல்லராய்வாழ்பவர்காழியுண்ஞானசம்பந்தன
சொல்லவல்லாரவர்வானுலகாளவும்வல்லரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

2.57 திருப்பாதிரிப்புலியூர்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

முன்னநின்றமுடக்காலமூயற்கருள்செய்தனீர்
புன்னைநின்றுகமழ்பாதிரிப்புலியூருளான
றன்னைநின்றுவணங்குந்தன்றவமில்லிகள்
பின்னைநின்றபிணியாக்கையைப்பெறுவார்களே. (க)

கொள்ளிநக்கபகுவாயபேய்கள்குழைந்தாடவே
முள்ளிலவம்முதுகாட்டிறையும்முதல்வன்னிடம்
புள்ளினங்கள்பயிலும்பாதிரிப்புலியூர்தனை
யுள்ளநம்மேல்வினையாயினவொழியுங்களே. (உ)

மருளினல்லார்வழிபாடுசெய்யும்மழுவாளர்மேற்
பொருளினல்லார்பயில்பாதிரிப்புலியூருளான்
வெருளின்மானின்பிணைநோக்கல்செய்துவெறிசெய்தபின்
னருளியாகத்திடைவைத்தவும்மழகாகவே. (கூ)

போதினுலும்புகையாலுமுய்த்தேயடியார்கடாம்
போதினுலேவழிபாடுசெய்யப்புலியூர்தனு
ளாதிநாலும்மவலம்மிலாதவடிகண்மறை
யோதிநாளும்மிடும்பிச்சையேற்றுண்டுணப்பாலதே. (சு)

ஆகநல்லாரமுதாக்கவுண்டானழலேந்தலே
நாகநல்லார்பரவநடங்கையார்த்தவன்
போகநல்லார்பயிலும்பாதிரிப்புலியூர்தனுட்
பாகநல்லாளொடுநின்றவெம்பரமேட்டியே. (டு)

மதியமொய்த்தகதிச்போலொளிம்மணற்கானல்வாய்ப்
புதியமுத்தந்திகழ்பாதிரிப்புலியூரெனும்
பதியில்வைகப்படுமென்தைதன்பழந்தொண்டர்கள்
குதியுங்கொள்வர்விதியுஞ்செய்வர்குழகாகவே. (சு)

கொங்கரவப்படுவண்டறைகுளிர்கானல்வாய்ச்
சங்கரவப்பறையின்னெலியவைசார்ந்தெழப்
பொங்கரவம்முயர்பாதிரிப்புலியூர்தனு
ளங்கரவம்மரையிலசைத்தானையடைமினே. (எ)

வீக்கமெழுமிலங்கைக்கிறைவிலங்கல்லிடை
யூக்கமொழித்தலறவ்விரலிறையூன்றினுன்
பூக்கமழும்புனற்பாதிரிப்புலியூர்தனே
நோக்கமெலிந்தணுகாவினை நணுகுங்களே. (அ)

அன்னந்தாவுமணியார்பொழின்மணியார்புன்னே
பொன்னந்தாதுசொரிபாதிரிப்புலியூர்தனுண்
முன்னந்தாவியடிமூன்றளந்தவன்ஞன்முகன்
றன்னந்தாளுற்றுணராததோர்தவநீதியே. (கூ)

உரிந்தகூறையுருவத்தொடுதெருவத்திடைத்
திரிந்துதின்னுஞ்சிறுகோன்பரும்பெருந்தேரரு
மெரிந்துசொன்னவ்வுரைகொள்ளாதேயெடுத்தேத்துமின்
பரிந்தவெண்ணீற்றண்ணல்பாதிரிப்புலியூரையே. (கo)

அந்தணல்லரைகன்காழியுண்ஞானசம்
பந்தனல்லார்பயில்பாதிரிப்புலியூர்தனுட்
சந்தமாலைத்தமிழ்பத்திவைதரித்தார்கள்மேல்
வந்துதீயவ்வடையாமையால்வினை மாயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நகோட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தோன்றுத்துணைசுவரர், தேவியார்-தோகையம்பிகையம்மை.

۲.۵۶ ஸ்ரீபுகலி-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

விடையதேறிவெறியக்கரவார்த்தவிமலனூர்
படையதாகப்பரசுதரித்தார்க்கிடமாவது
கொடையிலோவார்குலமும்முயர்த்தம்மறையோர்கடாம்
புடைகொள்வேள்விப்புகையும்பருலாவும்புகலியே. (க)

வேலைதன்னின்மிகுநஞ்சினையுண்டிருள்கண்டனூர்
ஞாலமெங்கும்பலிகொண்டுழல்வார்நகராவது
சாலநல்லார்பயிலும்மறைகேட்டுப்பதங்களிச்
சோலைமேவுங்கிளித்தான்சொற்பயிலும்புகலியே. (உ)

வண்டுவாழுங்குழன்மங்கையோர்கூறுகந்தார்மதித்
தண்டமேவுஞ்சுடர்த்தொல்சடையார்க்கிடமாவது
கெண்டைபாயமடுவில்லுயர்கேதகைமாதவி
புண்டரீகமலர்ப்பொய்கைகிலாவும்புகலியே. (ங)

திரியுமூன்றுபுரமும்மெரித்தந்திகழ்வானவர்க்
கரியபெம்மானரவக்குழையார்க்கிடமாவது
பெரியமாடத்துயருங்கொடியின்மிடைவால்வெயிற்
புரிசிலாததடம்பூம்பொழில்சூழ்ந்தண்புகலியே. (ச)

ஏலிலாருஞ்சிலைப்பார்த்தனுக்கின்னருள்செய்தவர்
நாவினுண்மூக்கரிவித்தநம்பர்க்கிடமாவது
மாலிலாருங்கனிவார்கிடங்கில்வீழவாரிபோய்ப்
பூலிலாரும்புனற்பொய்கையில்வாழும்புகலியே. (ஞ)

தக்கன்வேள்வித்தகர்த்ததலைவன்றையலரொடு
மொக்கவேயெம்மூரவோனறையும்மிடமாவது
கொக்குவாழைப்பலவின்கொழுந்தண்கனிகொன்றைகள்
புக்கவாசப்புன்னைபொன்றிரள்கரட்டும்புகலியே. (ஈ)

தொலிலாதவரக்கன்னுரத்தைத்தொலிவித்தவன்
றலையுந்தோளுங்கெரித்தசதுரர்க்கிடமாவது
கலியின்மேவும்மனத்தோரிரப்போர்க்குக்கரப்பிலார்
பொலியுமந்தண்பொழில்சூழ்ந்தழகாரும்புகலியே. (அ)

கிண்டுபுக்காரபறந்தாரயர்ந்தார்கேழலன்னமாய்க்
காண்டுமென்றூர்கழல்பணியகின்றூர்க்கிடமாவது
நீண்டகரையிரையாரல்வாரகிறைசெறுவினிற்
பூண்டுமிக்கவ்வயல்காட்டுமந்தண்புகலியே. (கூ)

தடுக்குடுத்துத்தலையைப்பறிப்பாரொடுசாக்கிய
ரிடுக்கணுய்ப்பாரிறைஞ்சாதவெம்மீசர்க்கிடமாவது
மடுப்படுக்குஞ்சுருதிப்பொருள்வல்லவர்வானுளோ
ரடுத்தடுத்துப்புகுந்தீண்டுமன்தண்புகலியே. (சம)

எய்தவொண்ணுவிறைவன்னுறைகின்றபுகலியைக்
கைதவமில்லாக்கவுணியன்ஞானசம்பந்தன்சீர்
செய்தபத்தும்மிவைசெப்பவல்லார்சிவலோகத்தே
யெய்திநல்லவிமையோர்களேத்தவிருப்பார்களே. (கச)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்—கஉங.

இரண்டாந்திருமுறை

முற்றிற்று.

பகற்பண்.

பூமநீர்மை-காந்தாரம்-பியந்தைக்காந்தாரம்-கவுசிகம்-இந்தளம்-தக்கேசி-சாதாரி-நட்டபாஷை-நட்டராகம்-பழம்பஞ்சுரம்-காந்தாரபஞ்சமம்-பஞ்சமம் ஆ கஉ.

இராப்பண்.

தக்கராகம்-பழந்தக்கராகம்-சீகாமரம்-கொல்லி-கொல்லிக்காவாணம்-வியாழக்குறிஞ்சி-மேகராகக்குறிஞ்சி-அந்தாளிக்குறிஞ்சி-குறிஞ்சி ஆ-ங.

பொதுப்பண்.

செவ்வழி-செந்துருத்தி-திருத்தாண்டகம் ஆ-ங.

ஆ பண்-உச.

சிவமயம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள்.

மூன்றாந்திருமுறை.

259 கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாய்நறுநெய்யொடுபாலுமிரந்தணர்பிரியாதசிற்றம்பல
நாடினாயிடமாகலுங்கொன்றைநயந்தவனே
பாடினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்வெண்டிங்கள்
சூடினாயருளாய்சுருங்கவெந்தொல்வினையே. (க)

கொட்டமேகமழுங்குழலாளொடுகூடினாயெருதேறினாய்நூதல்
பட்டமேபுனைவாயிசைபாடுவபாரிடமா
நட்டமேகவில்வாய்மறையோர்தில்லைநல்லவர்பிரியாதசிற்றம்பல
மிட்டமாயுறைவாயிவைமேவியதென்னைகொலோ. (உ)

நீலத்தார்கரியமிடற்றரற்நல்லநெற்றிமேலுறைகண்ணினர்பற்று
சூலத்தார்சுடலைப்பொடிநீறணிவார்சடையார்
சீலத்தார்தொழுதேத்தவிற்றம்பலஞ்சேர்தலாற்கழற்சேவடிகைதொழக்
கோலத்தாபருளாயுனகாரணங்கூறுதுமே. (ங)

கொம்பலைத்தழகெய்தியதண்ணிடைக்கோலவாண்மதிபோலமுகத்திரண்
டம்பலைத்தகண்ணுண்முலைமேவியவார்சடையான்
கம்பலைத்தெழுகாமுறுகாலையர்தலாற்கழற்சேவடிகைதொழ
வம்பலத்தறைவானடியார்க்கடையாவினையே. (ச)

தொல்லையாரமுதுண்ணநஞ்சுண்டதோர்தூமணிமிடறுபகுவாயதோர்
பல்லையார்தலையிற்பலியேற்றுழல்பண்டரங்கா
தில்லையார்தொழுதேத்தவிற்றம்பலஞ்சேர்தலாற்கழற்சேவடிகைதொழ
வில்லையாம்வினைதானெரியம்மதிலெய்தவனே. (ஞ)

ஆகந்தோயணிகொன்றையாயனலங்கையாயமரர்க்கமராவுமை
பாகந்தோய்பகவாபலியேற்றுழல்பண்டரங்கா
மாகந்தோய்பொழின்மல்குசிற்றம்பலமன்னினுய்மழுவாளினுயழ
னாகந்தோயரையாயடியாரைகண்ணுவினையே. (சு)

சாதியார்பனிக்கின்னெடுவெள்ளியசங்கவார்குழையாய்திகழப்படும்
வேதியாவிதிர்தாவிழவாரணிதில்லைதன்னு
ளாதியார்க்கிடமாயசிற்றம்பலமன்கையார்நெழுவல்லடியார்களே
வாதியாதகலுக்நலியாமலிதிவினையே. (எ)

வேயினுர்பணைத்தோளியேடாடலேவேண்டினுய்விதிர்தாவுபிர்கட்கமு
தாயினுயிடுகாட்டெரியாடலமர்ந்தவனே

தீயினுர்கணையாற்புரமூன்றெய்தசெம்மையாய்திகழ்கின்றசிற்றம்பல
மேயினுய்கழலேதொழுதெய்துதுமேலுலகே. (அ)

தாரினுர்விரிகொன்றையாய்மதிதாங்குநீள்சடையாய்தலைவாகல்ல
தேரினுர்மறுகிற்றிருவாரணிதில்லைதன்னுட்
சீரினுல்வழிபாடொழியாததோர்செம்மையாயழகாயசிற்றம்பல
மேரினுலமர்ந்தாயுளசீரடியேத்துதுமே. (கூ)

வெற்றரையருழல்வார்துவராடையர்வேடத்தாரவர்கள்ளுரைகொள்ளன்மின்
மற்றவருலகின்னவலம்மவைமாற்றகில்லார்
கற்றவர்தொழுதேத்துசிற்றம்பலங்காதலாற்கழற்சேவடிகைதொழு
வுற்றவருலகின்னுறுதிகொளவல்லவரே. (கo)

நாறுபூம்பொழினண்ணியகாழியுணன்மறைவல்லஞானசம்பந்த
னூறுமின்றமிழானலுயர்ந்தாருறைதில்லைதன்னு
ளேறுதொல்புகழேந்துசிற்றம்பலத்திசீனியிசையாற்சொன்னபத்திவை
கூறுமாமுவல்லாருயர்ந்தாரொடுங்கூடுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

260 திருப்பூந்தராய்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விரலாள்பவளத்துவர்வாயினுள்பனிமாமதிபோன்முகத்
தந்தமில்புகழாண்மலைமாதொடுமாதிபிரான்
வந்துசேர்விடம்வானவரெத்திசையுந்நிறைந்துவலஞ்செய்தும்மாமலர்
புந்திசெய்திறைஞ்சிப்பொழிபூந்தராய்போற்றுதுமே. (க)

காலியங்கருங்கண்ணினுள்கனித்தொண்டைவாய்கதிர்முத்தநல்வெண்ணகைத்
தூலியம்பெடையன்னநடைச்சுரிமென்குழலா
டேலியுந்திருமேனியோர்பாகமாயொன்றிரண்டொருமூன்றெடுசேர்பதி
பூலிலக்கணனெப்பவர்பூந்தராய்போற்றுதுமே. (உ)

பையராவருமல்குன்மெல்லியல்பஞ்சின்னேரடிவஞ்சிகொணுண்ணிடைத்
தையலாளொருபாலுடையெம்மிறைசாருமிடஞ்
செய்யெலாங்கழுநீர்கமலம்மலர்த்தேறலூறலிற்சேலுலாதகநற்
பொய்யிலாமறையோர்பயில்பூந்தராய்போற்றுதுமே. (ஙு)

முள்ளிநாண்முகைமொட்டியல்கோங்கினரும்புதேன்கொள்குரும்பைமூவாமருள்ளியன்றபைம்பொற்கலசத்தியலெத்தமுலை [ங்
வெள்ளிமால்வரையன்னதோர்மேனியின்மேவினுர்பதிவீமருதண்பொழிற்
புள்ளினந்துயின்மல்கியபூந்தராய்போற்றுதுமே. (ச)

பண்ணியன்றெழு மென்மொழியாள் பகர்கோதையோர் திகழ்பைந்தளிர்மேனி [யோர்
பெண்ணியன்றமையம்பிற்பெருமாற்கிடம்பெய்வனூர்
கண்ணியன்றெழுகாலைச்செழுங்கருநீலமல்கியகாமருவாவிநற்
புண்ணியருறையும்பதிபூந்தராய்போற்றுதுமே. (ஞ)

வாணிலாமதிபோனுதலாண்மடமாழையொண்கணுள்வெண்டரளங்கைப்
பாணிலாவியவின்னிசையார்மொழிப்பாவையொடுஞ்

சேணிலாத்திகழ்செஞ்சடையெம்மண்ணல்சேர்வதுசிகரப்பெருங்கோயில்சூழ்
போணிலாநறையும்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (சு)

காருலாவியவார்குழலாள்கயற்கண்ணினுள்புயற்காலொளிமின்னிடை
வாருலாவியமென்முலையாண்மலைமாதுடனாய்
நீருலாவியசென்னியன்மன்னிகிருநாமமுந்நான்குசிரப்பதி
பேருலாவெயில்சூழ்பொழிற்பூந்தராய்பேற்றுதுமே. (எ)

காசைசேர்குழலாள்கயலேர்தடங்கண்ணிகாம்பனதோட்கதிர்மென்முலைத்
தேசுசேர்மலைமாதமருந்திருமார்பகலத்
தீசன்மேவுமிருங்கயிலையெடுத்தாணியன்றடர்த்தானிணச்சேவடி
பூசைசெய்பவர்சேர்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (அ)

கொங்குசேர்குழலாணிழல்வெண்ணகைக் கெரவ்வைவாய்க்கொடியேரிடையா
பங்குசேர்திருமார்புடையார்படர்தியருவாய் [ஞமை
மங்குல்வண்ணனுமாமலரோனுமயங்கநீண்டவர்வான்மிசைவக்தெழு
பொங்குநீரின்மிதக்தநற்பூந்தராய்போற்றுதுமே. (கூ)

கலவமாமயிலாரியலாள்கரும்பன்னமென்மொழியாள்கதிர்வாணுதற்
குலவுபூங்குழலாளுமைகூறனைவேதமுரையர
லலவைசொல்லுவார்தேரமணர்தாளர்க்கினன்றனைநண்ணலுகல்குநற்
புலவர்தாம்புகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமே. (கo)

தேம்பனுண்ணிடையாள்செழுஞ்சேலனகண்ணியோடண்ணல்சேர்விடக்தேனமர்
[ண்
பூம்பொழிற்கிகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமென
ரோம்புகன்மையன்முத்தமிழ்ஞான மறைஞானசம்பக்தனுண்டமிழ்மாலைகொ
டாம்படியிவையேத்தவல்லார்க்கடையாவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

೭೧. ஸ்ரீபுகலி-நாலடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இயலிசையெனும்பொருணின்றிறமாம் புயலனமிடறுடைப்புண்ணியனே
கயலனவரிநெடுங்கண்ணியொடு மயலுலகடிதொழவமர்ந்தவனே
கலனுவதுவெண்டலைகடிபொழிற்புகலிதன்னு
ணிலனுடைறுமின்புறுகிறைமதியருளினனே. (க)

நிலையுறுமிடர்நிலையாதவண்ண மிலையுறுமலர்கள்கொண்டேத்துதும்யா
மலையினிலரிவையைவெருவவன்றே லலைவருமதகரியுரித்தவனே
யிமையோர்கணின்றுடொழுவெழிறிழ்பொழிற்புகலி
யுமையாளொடுமன்னினீயுயர்திருவடியிணையே. (உ)

பாடினையருமறைவரன்முறையா லாடினைகாணமுன்னருவரத்திற்
சாடினைகாலனைத்தயங்கொளிசேர் நீடுவன்பிறைமுடிங்கலனே
நிணையேயடியார்தொழுநெடுமதிற்புகலிக்நகர்
தணையேயிடமேவினதவநெறியருளெமக்கே. (கூ)

திழறிகழ்மழுவினையாணியின்றே லழறிகழ்மேனியிலணிக்தவனே
கழறிகழ்சிலம்பொலியலம்பரல்ல முழுவொடுமருகுடமுயற்றினனே

மூடிமேன் மதிசூடினீ முருகமர் பொழிற்புகலியு
ளடியாரவரேத் துறவழகொடமிருந்தவனே. (சு)

கருமையினெளிர்கடனஞ்சமுண்ட வருமையினுலகுயிரளித்தகின் றன்
பெருமையைகிலத்தவர்பேசினல்லா லருமையிளப்பரிதாயவனே
யரவேரிடையாளொடமேலகடன் மலிபுகலி
பொருள்சேர்தரநாடொறும்புலிமிசைபொலிந்தவனே. (டு)

அடையரிமாவொடுவேங்கையின்றோல் புடைபடவரைமிசைப்புனைந்தவனே
படையுடைகெடமதில்பரிசழித்த விடையுடைக்கொடிமல்குவேதியனே
விகிர்தாபரமானினீவிண்ணவர்தொழப்புகலித்
தகுவாய்மடமாதொடுந்தாள்பணிந்தவர்தமக்கே. (சு)

அடியவர்தொழுதெழவமரேத்தச் செடியவல்வினீபலதீர்ப்பவனே
தடியிடையகலல்குற்றூமொழியைப் பொடியணிமார்புறப்புல்கினனே
புண்ணியாபுகிதாபுகழேற்றினீபுகலிந்தகர்
நண்ணினுங்கழலேத்திடநண்ணிலாவினீயே. (எ)

இரவொடபகலதாமெம்மானினீனைப் பரவுதலொழிகிலன்வழியடியேன்
சுரவிரிநறுங்கொன்றைகொண்டணிந்த வரவிரிசடைமுடியாண்டகையே
யனமென்னடையாளொடுமதிர்கடலிலங்கைமன்னனினீ
யினமார்தருதோளடர்த்திருந்தினீ புகலியுளே. (அ)

உருகிடவுவகைதந்துடலினுள்ளார் பருகிடுமமுதனபண்பினனே
பொருகடல்வண்ணனும்பூவுளானும் பெருகிடுமருளெனப்பிறங்கெரியா
யுயர்ந்தாயினீநீயெனீயொண்மலரடியினீக்கீழ்
வயந்தாங்குறவளர்மதிற்புகலிமனே. (சு)

கையினிலுண்பவர்கணிகைநோன்பர் செய்வனதவமலாச்செதமதியார்
பொய்யருரைக்கப்பொருளெனத மெய்யவரடிதொழவிரும்பினனே
வியந்தாய்வெள்ளேற்றினீவிண்ணவர்தொழுபுகலி
யுயர்ந்தாய்பெருங்கோயிலொருங்குடனிருந்தவனே. (க0)

புண்ணியர்தொழுதெழுபுகலிந்தகர் விண்ணவரடிதொழவிளங்கினனீ
நண்ணியஞானசம்பந்தன்வாய்மை பண்ணியவருந்தமிழ்ப்பத்தும்வல்லார்
நடலையவையின்றிப்போய்நண்ணுவார்சிவனுலக
மிடராயினவின்றித்தாமெய்தவர்தவநெறியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

262 திருவாடுதுறை-நாலடிமேல்வைப்பு-

பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இடரினுந்தளரினுமெனதுறுகோய் தொடரினுமுனகழற்றொழுதெழுவேன்
கடறனிலமுதொடுகலந்தநஞ்சை மிடறினிலடக்கியவேதியனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (க)

வாழினுஞ்சாவினும்வருந்தினும்போய் வீழினுமூனகழல்விடுவேனல்லேன்
ஏழினுந்தடம்புனலயங்குசென்னி போழினமதிவைத்தபுண்ணியனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (உ)

நனவிலுங்கனவிலுநம்பாவுன்னே மனவிலும்வழிபடன்மறவேனம்மான்
புனல்விரிசுரும்பொன்றைப்போதணிந்த கனலெரியனல்புல்குகையவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (ஊ)

தும்மலோடூநற்துயர்தோன்றிடினு மம்மலரடியலாலரற்றுதென்னுச்
கைமல்குவரிசிலெக்கணையொன்றினுன் மும்மதிலெரியெழமுனிந்தவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (எ)

கையதுவீழினுங்கழிவுறினுஞ் செய்கழலடியலாற்கிந்தைசெய்யேன்
கொய்யணிநறுமலர்குலாயசென்னி மையணிபிடாமடையவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (ரி)

வெந்துயர்தோன்றியோர்வெருவுறினு மெந்தாயுன்னடியலாலேத்தாதென்னு
வந்தலையரவுகொண்டரைக்கசைத்த சந்தவெண்பொடியணிசங்கரனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (சு)

வெப்பொடுவிரவியோர்வீனைவரினு மப்பாவுன்னடியலாலரற்றுதென்னு
வொப்புடையொருவனேயுருவழிய வப்படியழலெழவிழித்தவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (எ)

பேரிடர்பெருகியோர்பிணிவரினுஞ் சீருடைக்கழலலாற்சிந்தைசெய்யே
னேருடை மணிமுடியிராவணனே யாரிடர்படவரையார்த்தவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (அ)

உண்ணினும்பசிப்பினுமுறங்கினுகின் ஞெண்மலரடியலாலுரையாதென்னுக்
கண்ணனுங்கடிகமழ்தாமரைமே லண்ணலமளப்பரிதாயவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (கூ)

பித்தெடுமயங்கியோர்பிணிவரினு மத்தவுன்னடியலாலரற்றுதென்னுப்
புத்தருஞ்சமணரும்புரனுரைக்கப் பத்தர்கட்கருள்செய்பயின்றவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுன தின்னருளாவடுதுறையானே. (கo)

அலைபுனலாவடுதுறையமர்ந்த விலைதனவேற்படையெம்மிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன விலையுடையருந்தமிழ்மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய்விண்ணவர்வியனுலகம்
நிலையாகமுன்னே யுவார்நிலமிசைநிலையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

263 திருப்பூந்தராய்–ஈரடிமேல்வைப்பு–பண்–காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தக்கன்வேள்வித்தகர்த்தவன்பூந்தராய்
மிக்கசெம்மைவிமலன்வியன்கழற்
சென்றுசிந்தையில்வைக்கமெய்க்கதி
நன்றதாகியநம்பன்ஊரனே. (க)

புள்ளினம்புகழ்போற்றியபூந்தராய்
வெள்ளநீர்தாங்குவிகிர்தனடிதொழ
ஞாலத்தில்லுயர்வாருள்குநன்னெறி
மூலமாயமுதலவன்ஊரனே. (உ)

வேந்தராயுலகாளவிருப்பமுறிற்
பூந்தராய்நகர்மேயவன்பொற்கழ
லீதியாணினைந்தேத்தியுள்கிடச்
சாதியாவினையான தானே. (ங)

பூசுரர்தொழுதேத்தியபூந்தரா
யீசன்சேவடியேத்தியிறைஞ்சிடச்
சிந்தைநோயவைதீரநல்கிய
விந்துவார்சடையெம்மிறையே. (ச)

பொலிந்தவெண்பணிமேனியன்பூந்தராய்
மலிந்தபுந்தியராகிவணங்கிட
நந்தமேல்வினையோடவீடுசெ
யெந்தையாயவெம்மீசன்ஊரனே. (ஞ)

பூதஞ்சூழப்பொலிந்தவன்பூந்தராய்
நாதன்சேவடிநாளுநவின்றிட
நல்குநாடொறுமின்பநளிர்புனல்
பில்குவார்சடைப்பிஞ்ஞகனே. (ட)

புற்றினாகமணிந்தவன்பூந்தராய்ப்
பற்றிவாழும்பரமனீப்பாடிடப்
பாலமாயினதீரப்பணித்திடுஞ்
சேவகத்தியசெல்வன்ஊரனே. (ண)

போதகத்தரிபோர்த்தவன்பூந்தராய்
காதலித்தான்கழல்விரலொன்றினு
லரக்கனற்றலழித்தவனுக்கருள்
பெருக்கினின்றவெம்பிஞ்ஞகனே. (அ)

மத்தமானவிருவர்மருவொணா
வத்தனனவன்மேவியபூந்தரா
யாளதாகவடைந்தம்மினும்வினை
யாளுமாறருள்செய்புந்தானே. (கூ)

பொருத்தமில்சமண்சாக்கியர்பொய்கடிக்
கிருத்தல்செய்தபிரானிமையோர்தொழப்
பூந்தராய்நகர்கோயில்கொண்டுகை
பேந்துமான்மறியெம்மிறையே. (கo)

புந்தியான்மிகநல்லவர்பூந்தரா
யந்தமில்லெம்மடிகளேஞானசம்
பந்தன்மாலைகொண்டேத்திவாழுதும்
பந்தமார்வினைபாறிடுமே. (கச)

திருச்சிற்றம்பலம்.

ஆஅ பதிகம்-டு.

---

264 திருக்கொள்ளம்பூதூர்-ஈரடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர்
நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (க)

கோட்டகக்கழனிக்கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறைநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (உ)

குலையினர்தெங்குசூழ்கொள்ளம்பூதூர்
வினையிலாட்கொண்டவிகிர்தனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (கூ)

குவளைகண்மலருங்கொள்ளம்பூதூர்த்
தவளமாமணிதலைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (ச)

கொன்றைபொன்சொரியுங்கொள்ளம்பூதூர்
நின்றபுன்சடைநிமலனையுள்கச்

செல்லவுந் துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (நி)

ஓடம்வந்தணையுங்கொள்ளம்பூதூர்
ராடல்பேணியவடிகளேயுள்கச்
செல்லவுந் துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (கூ)

ஆறுவந்தணையுங்கொள்ளம்பூதூர்
ரேறுதாங்கியவிறைவனேயுள்கச்
செல்லவுந் துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (எ)

குரக்கினம்பயிலுங்கொள்ளம்பூதூர்
ரரக்கனைச்செற்றவாதியையுள்கச்
செல்லவுந் துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (அ)

பருவராலுகளுங்கொள்ளம்பூதூர்
நிருவர்காண்பரியான்கழலுள்கச்
செல்லவுந் துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (கூ)

நீரகக்கழனிக்கொள்ளம்பூதூர்த்
தேரமண்செற்றசெல்வனேயுள்கச்
செல்லவுந் துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (கo)

கொன்றைசேர்சடையான்கொள்ளம்பூதூர்
நன்றுகாழியுண்ஞானசம்பந்த
னின்றுசொன்மாலைகொண்டேத்தவல்லார்போ
யென்றும்வானவரோடிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–வில்வவனேசுவரர், தேவியார்–சுவந்தராம்பிகையம்மை.

இது ஓடக்காரனில்லாமல் அவ்வோடம் ஆற்றிற்சென்று கரைசேரும்படி அருளிச் செய்த பதிகம்.

ஆ.ஆ திருப்புகலி–பண்–காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கண்ணுதலானும்வெண்ணீற்றினானுங்கழலார்க்கவே
பண்ணினைபாடகின்றுடனானும்பரஞ்சோதியும்
புண்ணியநான்மறையோர்களேத்தும்புகலிநகர்ப்
பெண்ணினல்லாளொடும்வீற்றிருந்தபெருமானன்றே. (க)

சாம்பலோடுந்தழலாடினனுஞ்சடையின்பிசை
பாம்பினோடும்மதிசூடினனும்பசுவேறியும்
பூம்படுகல்லிளவாளை பாயும்புகலிந்நகர்க்
காம்பனதோளியோடுமிருந்தகடவுளன்றே. (உ)

கருப்புகல்வார்சிலைக்காமன்வேவக்கடைகண்டானு
மருப்புகல்லாணையினீருரிபோர்த்தமணுளனும்
பொருப்பனமாமணிமாடமோங்குபுகலிந்நகர்
விருப்பினல்லாளொடும்வீற்றிருந்தவிமலனன்றே. (ஊ)

அங்கையினங்கழலேந்தினனுமழகாகவே
கங்கையைச்செஞ்சடைசூடினனுங்கடலின்னிடைப்
பொங்கியநஞ்சமுதண்டவனும்புகலிந்நகர்
மங்கைகல்லாளொடும்வீற்றிருந்தமணவாளனே. (எ)

சாமகல்வேதனுந்தக்கன்றன்வேள்வித்தகர்த்தானு
நாமநூறுயிரஞ்சொல்லிவானோர்தொழுதானும்
பூமல்குதண்பொழின்மன்னுமந்தண்புகலிந்நகர்க்
கோமளமாதொடும்வீற்றிருந்தகுழகனன்றே. (டு)

இரவிடையொள்ளெரியாடினனுமிமையோர்தொழச்
செருவிடைமூப்புரந்தீயெரித்தசிவலோகனும்
பொருவிடையொன்றுகந்தேறினனும்புகலிந்நக
ரரவிடைமாதொடுவீற்றிருந்தவழகனன்றே. (ரு)

சேர்ப்பதுதிண்சிலைமேலினனுந்திகழ்பாலன்மேல்
வேர்ப்பதுசெய்தவெங்கூற்றுதைத்தானும்வேள்விப்புகை
போர்ப்பதுசெய்தணிமாடமோங்குபுகலிந்நகர்ப்
பார்ப்பதியோடுடன்வீற்றிருந்தபரமனன்றே. (எ)

கன்னெடுமால்வரைக்கீழரக்கன்னிடர்கண்டானும்
வின்னெடும்போர்விறல்வேடனுகிவிசயற்கொரு
பொன்னெடுங்கோல்கொடுத்தானுமந்தண்புகலிந்நக
ரன்னமன்னநடைமங்கையோடுமமர்ந்தானன்றே. (அ)

பொன்னிறநான்முகன்பச்சையானென்றிவர்புக்குழித்
தன்னியின்னனெனக்காண்பரியதழற்சோதியும்
புன்னைபொன்றுதிர்மல்குமந்தண்புகலிந்நகர்
மின்னிடைமாதொடும்வீற்றிருந்தவிமலனன்றே. (கூ)

பிண்டியும்போதியும்பேணுவார்பேச்சினைப்பேணுதீதோர்
தொண்டருங்காதல்செய்சோதியாயசுடர்ச்சோதியான்
புண்டரீகமலர்ப்பொய்கைசூழ்ந்தபுகலிந்நகர்
வண்டமர்கோதையோடுமிருந்தமணவாளனே. (கஉ)

பூங்கமழ்கோதையோடுமிருந்தான்புகலிந்நகர்ப்
பாங்கணேஞானசம்பந்தன்சொன்னதமிழ்பத்திவை
யாங்கமர்வெய்தியவாதியாகவிசைவல்லவ
ரோங்கமரர்பதியோர்தொழச்செல்வதுமுண்மையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

266 திருக்கடவூர்த் திருவீரட்டம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சடையுடையானுமெய்யாடலானுஞ்சரிகோவண
வுடையுடையானுமையார்க்கவொண்கண்ணுமைகேள்வனுங்
கடையுடைநன்னெடுமாடமோங்குங்கடவூர்தனுள்
விடையுடையண்ணலும்வீரட்டானத்தானல்லனே. (க)

விரிதருவார்சடையானும்வெள்ளேயெருதேறியும்
புரிதருமாமலர்க்கொன்றைமாலைபுனைந்தேத்தவே
கரிதருகாலனீச்சாடினானுங்கடவூர்தனுள்
விரிதருதொல்புகழ்வீரட்டானத்தானல்லனே. (உ)

நாதனுங்ளிருளாடினானுநளிர்போதின்கட்
பாதனும்பாய்புலித்தோலினானும்பசுவேறியுங்
காதலர்தண்கடவூரினானுங்கலந்தேத்தவே
வேதமோதியும்வீரட்டானத்தானல்லனே. (ங)

மழுவமர்செல்வனுமாசிலாதபலபூதமுண்
முழவொலியாழ்குழன்மொந்தைகொட்டம்முதுகாட்டிடைக்
கழல்வளர்கால்குஞ்சித்தாடினானுங்கடவூர்தனுள்
விழவொலிமல்கியவீரட்டானத்தானல்லனே. (ச)

சுடர்மணிச்சுண்ணவெண்ணீற்றினானுஞ்சுழல்வாயதோர்
படமணிநாகமரைக்கசைத்தபரமேட்டியுங்
கடமணிமாவுரித்தோலினானுங்கடவூர்தனுள்
விடமணிகண்டனும்வீரட்டானத்தானல்லனே. (ஞ)

பண்பொலிநான்மறைபாடியாடிப்பலவூர்கள்போ
யுண்பலிகொண்டுழல்வானும்வானின்னெளிமல்கிய
கண்பொலிநெற்றிவெண்டிங்களானுங்கடவூர்தனுள்
வெண்பொடிபூசியும்வீரட்டானத்தானல்லனே. (ஃ)

செவ்வழலாய்நிலனாகின்றசிவமூர்த்தியு
மூவ்வழனான்மறையைத்தமாயமுனிகேள்வனுங்
கவ்வழல்வாய்க்கதநாகமார்த்தான்கடவூர்தனுள்
வெவ்வழலேந்துகைவீரட்டானத்தானல்லனே. (எ)

அடியிரண்டோருட னம்பைஞ்ஞான்கிருபதுதோள் தச
முடியுடைவேந்தனூர்க்கழித்தமுதன்மூர்த்தியுங்
கடிகமழும்பொழில்சூழுமந்தண்கடவூர்தனுள்
வெடிதலையேந்தியும்வீரட்டானத்தானல்லனே. (அ)

வரைகுடையாமழைதாங்கினனும்வளர்போதின்கட்
புரைகடிந்தோங்கியகான்முகத்தான்புரிந்தேத்தவே
கரைகடல்சூழ்வையங்காக்கின்றனுங்கடவூர்தனுள்
விரைகமழ்பூம்பொழில்வீரட்டானத்தானல்லனே. (கூ)

தேரரும்மாசுகொண்மேனியாருந்தெளியாததோ
ராரருஞ்சொற்பொருளாகின்றவெமதாகியான்
காரிளங்கொன்றைவெண்டிங்களானுங்கடவூர்தனுள்
வீரமுஞ்சேர்கழல்வீரட்டானத்தானல்லனே. (கo)

வெந்தவெண்ணீறணிவீரட்டானத்துறைவேந்தனை
யந்தணர்தங்கடவூருளாணியணிகாழியான்
சந்தமெல்லாமடிசாத்தவல்லமறைஞரனசம்
பந்தனசெந்தமிழ்பாடியாடக்கெடும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

267 திருவீழிமிழலை-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கேள்வியார்நாடொறுமோதுநல்வேதத்தர்கேடிலா
வேள்வியெய்தணர்வேதியர்வீழிமிழலையார்
வாழியர்தோற்றமுங்கேடும்வைப்பாருயிர்கட்கெலா
மாழியர்தம்மடிபோற்றியென்பார்கட்கணியாரே. (க)

கல்லினற்பாவையோர்பாகத்தர்காதலித்தேத்திய
மெல்லினத்தார்பக்கன்மேவினர்வீழிமிழலையார்
நல்லினத்தார்செய்தவேள்விசெகுத்தெழுகாயிற்றின்
பல்லினத்துந்தகர்த்தாரடியார்பாவநாசமே. (உ)

நஞ்சினையுண்டிருள்கண்டர்பண்டந்தனைச்செற்ற
வெஞ்சினமூவிலைசூலத்தர்வீழிமிழலையா
ரஞ்சனக்கண்ணுமைபங்கினர்கங்கையங்காடிய
மஞ்சனச்செஞ்சடையாரென்னவல்வினைமாயுமே. (ஙூ)

கலியிலங்குமழுக்கட்டங்கங்கண்டிகைக்குண்டலம்
வியிலங்கும்மணிமாடத்தர்வீழிமிழலையார்
தலியிலங்கும்பிறைதாழ்வடஞ்சுலந்தமருக
மலியிலங்கும்புனலேற்றவர்க்குமடியார்க்குமே. (ச)

பிறையுறுசெஞ்சடையார்வீடையார்பிச்சைகச்சியே
வெறியுறுகாட்பலிதேர்ந்துழல்வீழிமிழலையார்
முறைமுறையாலிசைபாடுவாராடிமுன்றெண்டர்க
ளிறையுறைவாஞ்சியமல்லதெப்போதுமென்னுள்ளமே. (கூ)

வசையறுமாதவங்கண்டுவரிசிலேவடனெய்
விசையனுக்கன்றருள்செய்தவர்வீழிமிழலையா
ரிசைவரவிட்டியல்கேட்பித்துக்கல்லவட்டமிட்டுத்
திசைதொழுதாடியும்பாடுவார்சிந்தையுட்சேர்வரே. (சு)

சேடர்விண்ணோர்கட்குத்தேவர்கன்மூவிருதொன்னூலர்
வீடர்முத்தீயர்நால்வேதத்தர்வீழிமிழலையார்
காடரங்காவுமைகாணவண்டத்திமையோர்தொழ
நாடகமாடியையேத்தவல்லார்வினைநாசமே. (எ)

எடுத்தவன்மாமலைக்கீழவிராவணன்வீழ்தர
விடுத்தருள்செய்திசைகேட்டவர்வீழிமிழலையார்
படுத்துவெங்காலனைப்பால்வழிபாடுசெய்பாலற்குக்
கொடுத்தனரின்பங்கொடுப்பர்தொழக்குறைவில்லையே. (அ)

திக்கமர்நான்முகன்மாலண்டமண்டலந்தேடிட
மிக்கமர்தீத்திரளாயவர்வீழிமிழலையார்
சொக்கமதாடியும்பாடியும்பாரிடஞ்சூழ்தரு
நக்கர்தநாமநமச்சிவாயவென்பார்நல்லரே. (கூ)

தற்றரையர்துவராடையர்தப்புவொன்றிலா
வெற்றரையராறியாதெறிவீழிமிழலையார்
சொற்றெரியாப்பொருள்சோதிக்கப்பானின்றசோதிதான்
மற்றறியாவடியார்கடஞ்சிந்தையுண்மன்னுமே. (கo)

வேதியர்கைதொழுவீழிமிழலைவிரும்பிய
வாதிபைவாழ்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனுய்ந்
தோதியவொண்டமிழ்ப்பத்திவையும்முரைசெய்பவர்
மாதியல்பங்கன்மலரடிசேரவும்வல்லரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

288 திருவிராமேச்சரம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அலைவளர்தண்டியோடயலேயடக்கியுமை
மூலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
யிலைவளர்தாழைகள்விம்முகானலிராமேச்சரந்
தலைவளர்கோலநன்மாலையன்முனிருந்தாட்சியே. (க)

தேவியைலவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
வேவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சர
மேவியசிந்தையினர்கடம்மேல்வினைவீடுமே. (உ)

மானனநேர்க்கிலைதேகிதன்னையொருமாயையாற்
கானதில்வவ்வியகாரரக்கன்னுயிர்செற்றல
னீனமில்லாப்புகழண்ணல்செய்தவிராமேச்சர
ஞானமுநன்பொருளாகிநின்றதொருநன்மையே. (ஊ)

உரையுணராதவன்காமமென்னுமுறுவேட்கையான்
வரைபொருதோளிறச்செற்றவில்லிமனிழ்ந்தேத்திய
விரைமருவுங்கடலோதமல்குமிராமேச்சரத்
தரையரவாடகின்றுடல்பேணுமம்மானல்லனே. (எ)

ஊறுடைவெண்டலைகையிலேந்திப்பலபூர்தொறும்
வீறுடைமங்கையரையம்பெய்யவிறலார்ந்ததோ
ரேறுடைவெல்கொடியெந்தைமேயவிராமேச்சரம்
பேறுடையான்பெயரேத்தமாந்தர்பிணிபேருமே. (ஙி)

அணையலைசூழ்கடலன்றடைத்துவழிசெய்தவன்
பணையிலங்கும்முடிபத்திறுத்தபழிபோக்கிய
விணையிலியென்றுமிருந்தகோயிலிராமேச்சர
துணையிலிதாமலர்ப்பாதமேத்தத்துயர்நீங்குமே. (சு)

சனிபுதன்ஞாயிறுவெள்ளிதிங்கட்பலதீயன
முனிவனசெய்துகந்தானவென்றவினைமூடிட
வினியருணல்கிடென்றண்ணல்செய்தவிராமேச்சரம்
பனிமதிசூடிகின்றுடவல்லபரமேட்டியே (எ)

பெருவரையன்றெடுத்தேந்தினன்றன்பெயர்சாய்கெட
வருவரையாலடர்த்தன்றுநல்கியயன்மாலெனு
மிருவருநாடிகின்றேறத்துகோயிலிராமேச்சரத்
தொருவனுமேபலவாகிநின்றதொருவண்ணமே. (அ-ஊ)

சாக்கியர்வன்சமண்கையர்மெய்யிற்றழுமசற்றத்தார்
வாக்கியலும்மூரைபற்றுவிட்டுமதிலொண்மையா
லேக்கியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சர
மாக்கியசெல்வனேயேத்திவாழ்மின்னருளாகவே. (கo)

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றனை
யிகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சரம்
புகலியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்புந்தியா
லகலிடமெங்குநின்றேத்தவல்லார்க்கில்லையல்லலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ. பதிகம்-கo.

269 திருப்புனவாயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ்சடைவெண்பிறையன்விரிநூலினன்
பன்னியநான்மறைபாடியாடிப்பலவூர்கள்போ
யன்னமன்னக்கடையாளொடுமமருமிடம்
புன்னைகன்மாமலர்பொன்னுதிர்க்கும்புனவாயிலே. (க)

விண்டவர்தம்புரமூன்றெரித்தவிடையேறிப்போய்
வண்டமருங்குழன்மங்கையொடும்மகிழ்ந்தானிடங்
கண்டலுஞாழலுன்றுபெருங்கடற்கானல்வாய்ப்
புண்டரீகம்மலர்ப்பொய்கைசூழ்ந்தபுனவாயிலே. (உ)

விடையுடைவெல்கொடியேற்றினனும்விறற்பாரிடம்
புடைபடவாடியவேடத்தானும்புனவாயிலிற்
றொடைகமழ்வில்கொன்றையந்தாரினனுஞ்சுடர்வெண்மழுப்
படைவலனேற்றியபாலனெய்யாடும்பரமனன்றே. (ங)

சங்கவெண்டோடணிகாதினனுஞ்சடைதாழவே
யங்கையிலங்கழலேற்றினனுமழகாகவே
பொங்கரவம்மணிமார்பினனும்புனவாயிலிற்
பைங்கண்வெள்ளேற்றண்ணலாகிற்றபரமேட்டியே. (ச)

கலிபடுதண்கடனஞ்சமுண்டகறைக்கண்டனும்
புலியதள்பாம்பரைச்சுற்றினனும்புனவாயிலி
னெலிதருதண்புனலோடெருக்கும்மதமத்தமு
மெலிதருவெண்பிறைசூடினின்றவிடையூர்தியே. (ஞ)

வாருறுமெண்முலைமங்கைபாடநடமாடிப்போய்க்
காருறுகொன்றைவெண்டிங்களாறுஞ்சுவாயதோர்
போருறுவெண்மழுவேற்றினனும்புனவாயிலிற்
சீருறுசெல்வமல்கவிருந்தசிவலோகனே. (ட)

பெருங்கடனஞ்சமுதுண்டகந்துபெருங்காட்டிடைத்
திருந்திளமென்முலைத்தேவிபாடந்நடமாடிப்போய்ப்
பொருந்தலர்தம்புரமூன்றுமெய்துபுனவாயிலி
னிருந்தவன்றன்கழலேத்துவார்கட்கிடரில்லையே. (ண)

மனமிகுவேலனவ்வாளரக்கன்வலியொல்கிட
வனமிகுமால்வரையாலடர்த்தானிடமன்னிய
னினமிகுதொல்புகழ்பாடலாடலெழின்மல்கிய
புனமிகுகொன்றையந்தென்றலார்ந்தபுனவாயிலே. (அ)

திருவளர்தாமரைமேலினனுந்திகழ்பாற்கடற்
கருநிறவண்ணனுங்காண்பரியகடவுள்ளிடங்

நரல்சுரிசங்கொடுமிப்பியுந்திங்கலமல்கிய
பொருகடல்வெண்டிரைவந்தெறியும்புனவாயிலே. (கூ)

போதியெனப்பெயராயினரும்பொறியில்சமண்
சாதியுரைப்பனகொண்டயர்த்துதளர்வேயதன்மின்
போதவிழ்தண்பொழின்மல்குமந்தண்புனவாயிலில்
வேதனைநாடொறுமேத்துவார்மேல்வினைவீடுமே. (கo)

பொற்றொடியாளுமைபங்கன்மேவும்புனவாயிலைக்
கற்றவர்தாங்கொழுதேத்தகின்றசடற்காழியா
னற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்நன்மையா
லற்றமில்பாடல்பத்தேத்தவல்லாருள்சேர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–புனவாயிலீசுவரர், தேவியார்–கருணையீசுவரியம்மை.

ஃ70 திருக்கோட்டாறு–பண்–காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வேதியர்விண்ணவரேத்தநின்றுள்விளங்கும்மறை
யோதியவொண்பொருளாகிநின்றுளெளியார்கிளிக்
கோதியதண்பொழில்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ளாதியையேநினைந்தேத்தவல்லார்க்கல்லலில்லையே. (க)

ஏலமலர்க்குழன்மங்கைகல்லாளிமவான்மகள்
பாலமருந்திருமேனியெங்கள்பரமேட்டியுங்
கோலமலர்ப்பொழில்சூழ்ந்தெழிலார்திருக்கோட்டாற்றுள்
ளாலநீழற்கிழிருந்தறஞ்சொன்னவழகனே. (உ)

இலைமல்குசூலமொன்றேற்கினனுமிமையோர்தொழ
மலைமல்குமங்கையோர்பங்கனையம்மணிகண்டனுங்
குலைமல்குதண்பொழில்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ளலைமல்குவார்சடையேற்றுகந்தவழகனன்றே. (ங)

ஊனமரும்மூடனுள்ளிருந்தவ்வுமைபங்கனும்
வானமரும்மதிசென்னிவைத்தமறையோதியுந்
தேனமரும்மலர்ச்சோலைசூழ்ந்தநிருக்கோட்டாற்றுட்
டானமரும்விடையாணிமெங்கடலேவனன்றே. (ச)

வம்பமரும்மலர்க்கோதைபாகமகிழ்மைந்தனுஞ்
செம்பவளத்திருமேனிவெண்ணீறணிசெல்வனுங்
கொம்பமரும்மலர்வண்டுகிண்டுந்திருக்கோட்டாற்றுண்
ணம்பனெனப்பணிவார்க்கருள்செய்யெங்கணுதனே. (ஞ)

பங்தமரும்விரன்மங்கைகல்லாளொருபாகமா
வெங்தமரும்பொடிப்பூசவல்லவிகிர்தன்மிகுங்
கொங்தமரும்மலர்ச்சோலைசூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ளங்தணனீனிங்தேத்தவல்லார்க்கில்லையல்லலே. (சு)

தண்டமரும்பிறைசூடிநீடுசுடர்வண்ணனும்
வண்டமருங்குழன்மங்கைகல்லாளொருபங்கனுங்
தெண்டிரைநீர்வயல்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ளண்டமுமெண்டிசையாகினின்றவழகனன்றே. (எ)

இரவமருங்கிறம்பெற்றுடையவிலங்கைக்கிறை
கரவமரக்கயிலையெடுத்தான்வலிசெற்றவன்
குரவமரும்மலர்ச்சோலைசூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ளரவமருஞ்சடையானடியார்க்கருள்செய்யுமே. (அ)

ஓங்கியகாரணனொன்முகனும்முணராவகை
நீங்கியதீயுருவாகிகின்றநிமலன்னிழற்
கோங்கமரும்பொழில்சூழ்ந்தெழிலார்திருக்கோட்டாற்றுள்
ளாங்கமரும்பெருமானமரர்க்கமரனன்றே. (கூ)

கடுக்கொடுத்ததுவராடையர்காட்சியில்லாததோர்
தடுக்கிடுக்கிச்சமணேதிரிவார்கட்குத்தன்னருள்
கொடுக்கவல்லகுழகன்னமருந்திருக்கோட்டாற்றுள்
ளிடுக்கணின்றித்தொழுவாரமரர்க்கிறையாவரே. (கo)

கொடியுடைமால்விடையூர்தியினன்றிருக்கோட்டாற்றுள்
ளடிகளலார்க்கதின்றுடவல்லவருளாளனைக்
கடிகமழும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்சொற்
படியிவைபாடிகின்றுடவல்லார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஜராபதேசுவரர், தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

---

27. திருப்பூந்தராய்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னனவெயிறுடைவிரவலார்கடங்
தன்னியபுரமூகச்சுளிக்ததொன்மையர்
புன்னையம்பொழிலணிபூந்தராய்நக
ரன்னமன்னகடையரிவைபங்கரே. (க)

மூதணிமுப்புரத்தெண்ணிலோர்களை
வேதணிசரத்தினல்வீட்டினரைவர்

போதணிபொழிலமர்பூந்தராய்நகர்த்
தாதணிகுழலுமைதனிவர்காண்மினே. (உ)

தருக்கியதிரிபுரத்தவர்கடாமுகப்
பெருக்கியவிலைதனிப்பிடித்தபெற்றியர்
பொருக்கடல்புடைதருபூந்தராய்நகர்க்
கருக்கியகுழலுமைகணவர்காண்மினே. (ஊ)

நாகமும்வரையுமேநாணும்வில்லுமா
மாகமார்புரங்களீமறித்தமாண்பினர்
பூக்கமர்பொழிலணிபூந்தராய்நகர்ப்
பாகமர்மொழியுமைபங்கர்காண்மினே. (ச)

வெள்ளெயிறுடையவவ்வினைலார்களூ
ரொள்ளெரியூட்டியவொருவனூரொளிர்
புள்ளணிபுறவினிற்பூந்தராய்நகர்க்
கள்ளணிகுழலுமைகணவர்காண்மினே. (ரு)

துங்கியருனவர்தோற்றமாநக
ரங்கியில்வீழ்தரவாய்த்தவம்பினர்
பொங்கியகடலணிபூந்தராய்நக
ரங்கயலனகணியரிவைபங்கரே. (சு)

அண்டர்களுய்ந்திடவவுணர்மாய்தரக்
கண்டவர்கடல்விடமுண்டகண்டனர்
புண்டரீகவ்வயற்பூந்தராய்நகர்
வண்டமர்குழலிதன்மணாளர்காண்மினே. (எ)

மாசினவரக்கனைவரையின்வாட்டிய
காய்சினவெயில்களீக்கமுத்தகண்டனர்
பூசுரர்பொலிதருபூந்தராய்நகர்க்
காசைசெய்குழலுமைகணவர்காண்மினே. (அ)

தாமுகமாக்கியவசுரர்தம்பதி
வேமுகமாக்கியவிகிர்தர்கண்ணனும்
பூமகனறிகிலாப்பூந்தராய்நகர்க்
கோமகனெழிற்பெணமரிவைகூறரே. (கூ)

முத்தரவசுரர்கண்மொய்த்தமுப்புர
மத்தகுமழலிடைவீட்டினாரமண்
புத்தருமறிவொணாப்பூந்தராய்நகர்க்
கொத்தணிகுழலுமைகூறர்காண்மினே. (கo)

புரமெரிசெய்தவர்பூந்தராய்நகர்ப்
பரமலிகுழலுமைகங்கைபங்கரைப்
பரவியபத்தன்மெய்ப்பாடல்வல்லவர்
சிரமலிவெகதிசேர்தறிண்ணமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

272 திருப்பைஞ்ஞீலி-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரிடம்பாடிலரடிகள்காடலா
லோரிடங்குறைவிலருடையர்கோவணங்
கீரிடஞ்சடைவிடையூர்திநித்தலும்
பாரிடம்பணிசெயும்பயில்பைஞ்ஞீலியே. (க)

மருவிலார்திரிபுரமெரியமால்வரை
பருவிலாக்குனித்தபைஞ்ஞீலிமேவலா
னுருவிலான்பெருமையையுளங்கொளாதவத்
திருவிலாரவர்களைத்தெருட்டலாகுமே. (உ)

அஞ்சுரும்பணிமலரமுதமாந்தித்தேன்
பஞ்சுரம்பயிற்றும்பைஞ்ஞீலிமேவலான்
வெஞ்சுரந்தனிலுமைவெருவவந்ததோர்
குஞ்சரம்படவுரிபோர்த்தகொள்கையே. (ங)

கோடல்கள்புறவணிகொல்லைமுல்லைமேற்
பாடல்வண்டிசைமுரல்பயில்பைஞ்ஞீலியார்
பேடலராணலர்பெண்ணுமல்லதோ
ராடலையுகந்தவெம்மடிகள்வல்லரே. (ச)

விழியிலாநகுதலைவிளங்கிளம்பிறை
சுழியிலார்வருபுனற்சூழரங்கினுள்
பழியிலாப்பரவுபைஞ்ஞீலிபாடலான்
கிழியிலார்கேண்மையைக்கெடுக்கலாகுமே. (ஞ)

விடையுடைக்கொடிவலனேந்திவெண்மழுப்
படையுடைக்கடவுள்பைஞ்ஞீலிமேவலான்
முடியிடைக்கலையல்குலாளோர்பாகமாச்
சடையிடைப்புனல்வைத்தசதுரனல்லனே. (சு)

தூயவன்றூயவெண்ணீறுமேனிமேற்
பாயவன்பாயபைஞ்ஞீலிகோயிலா
மேயவன்வேய்புரைதோளிபாகமா
வேயவனெனீச்செயுந்தன்மையென்கொலோ. (எ)

தொத்தினதோண்முடியுடையவன்றலை
பத்தினெரித்தபைஞ்ஞீலிமேவலான்
முத்தினைமுழுவல்செய்தாளோர்பாகமாப்
பொத்தினன்றிருந்தடிபொருந்திவாழ்மினே. (அ)

நீருடைப்போதுறைவானுமாலுமாய்ச்
சீருடைக்கழலடிசென்னிகாண்கிலர்

பாருடைக்கடவுள்பைஞ்ஞீலிமேவிய
தாருடைக்கொன்றையந்தலைவர்தன்மையே. (கூ)

பீலியார்பெருமையும்பிடகர்நூன்மையுஞ்
சாலியாதவர்கனிச்சாதியாததோர்
கோலியாவருவரைகூட்டியெய்தபைஞ்
ஞீலியான்கழலடிநினைந்துவாழ்மினே. (கo)

கண்புனல்வினைவயற்காழிஞ்கற்பகந்
நண்புணரருமறைஞானசம்பந்தன்
பண்பினர்பரவுபைஞ்ஞீலிபாடுவா
ருண்பினவுலகினிலோங்கிவாழ்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நீலகண்டேசுவரர், தேவியார்-விசாலாக்ஷியம்மை.

---

273 திருவெண்காடு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரம்மறையவைவானவரோடு
மிந்திரன்வழிபடநின்றவெம்மிறை
வெந்தவெண்ணீற்றர்வெண்காடுமேவிய
வந்தமும்முதலுடையடிகளல்லரே. (க)

படையுடைமழுவினர்பாய்புலித்தோ
லுடையினர்கோவணமுகந்தகொள்கையர்
விடையுடைக்கொடியர்வெண்காடுமேவிய
சடையிடைப்புனல்வைத்தசதுரரல்லரே. (உ)

பாலொடுநெய்தயிர்பலவுமாடுவர்
தோலொடுநூலிழைதைதைந்தமார்பினர்
மேலவர்பரவுவெண்காடுமேவிய
வாலமதமர்ந்தவெம்மடிகளல்லரே. (ங)

நாழலுஞ்செருந்தியுகுமலர்ப்புன்னீர்ப்
தாழைவெண்குருகயலயங்குகானலில்
வேழமதரித்தவெண்காடுமேவிய
யாழினிசையுடையிறைவரல்லரே. (ச)

பூதங்கள்பலவுடைப்புனிதர்புண்ணிய
நீதங்கள்பலவிடர்தீர்க்குமெம்மிறை
வேதங்கண்முதல்வர்வெண்காடுமேவிய
பாதங்கடொழுதின்றபரமரல்லரே. (ஞ)

மண்ணவர்விண்ணவர்வணங்கவைகலு
மெண்ணியதேவர்களிறைஞ்சுமெம்மிறை
விண்ணமர்பொழில்கொள்வெண்காடுமேவிய
வண்ணலேயடிதொழவல்லலில்லையே. (சு)

நயந்தவர்க்கருள்பலநல்கியிந்திரன்
கயந்திரம்வழிபடநின்றகண்ணுதல்
வியந்தவர்பரவுவெண்காடுமேவிய
பயந்தருமழுவுடைப்பரமரல்லரே. (எ)

மலையுட்னெடுத்தவல்லரக்கனீண்முடி
தலையுடனெரித்தருள்செய்தசங்கரர்
விலையுடைநீற்றர்வெண்காடுமேவிய
வலையுடைப்புனல்வைத்தவடிகளல்லரே. (அ)

ஏடவிழ்நறுமலரயனுமாலுமாய்த்
தேடவுந்தெரிந்தவர்தேரகிற்கிலர்
வேடமதுடையவெண்காடுமேவிய
வாடலேயமர்ந்தவெம்மடிகளல்லரே. (கூ)

போதியர்பிண்டியர்பொருத்தமில்லிக
ணீதிகள்சொல்லியுநினையகிற்கிலர்
வேதியர்பரவுவெண்காடுமேவிய
வாதியையடிதொழவல்லலில்லையே. (கஅ)

நல்லவர்புகலியுண்ஞானசம்பந்தன்
செல்வனெஞ்சிவனுறைதிருவெண்காட்டின்மேற்
சொல்லியவருந்தமிழ்பத்தும்வல்லவ
ரல்லலோடருவினையமுதலாவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்

ஆ பதிகம்-கஇ.

---

274 திருக்கொள்ளிக்காடு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

நிணம்படுசுடலையினீறுபூசினின்
றணங்குவர்பேய்களோடாடுவர்மாகட
முணங்கல்வெண்டலைதனிலுண்பராயினுங்
குணம்பெரிதுடையர்நங்கொள்ளிக்காடரே. (க)

ஆற்றனல்லடியினேயலர்கொண்டேத்துவான்
சாற்றியவந்தணன்றருதிகண்டகாண்
மாற்றலனிமுன்னடர்த்துவந்தவி
னூற்றினேயுதைத்தனர்கொள்ளிக்காடரே. (உ)

அத்தகுவானவர்க்காகமால்விடம்
வைத்தவர்மணிபுரைகண்டத்தினுளே
மத்தமும்வன்னியுமலிந்தசென்னிமேற்
கொத்தலர்கொன்றையர்கொள்ளிக்காடரே. (கூ)

பாவணமேவுசொன்மாலையிற்பல
நாவணங்கொள்கையினவின்றசெங்கைய
ராவணங்கொண்டெமையாள்வராயினுங்
கோவணங்கொள்கையர்கொள்ளிக்காடரே. (சு)

வார்ணிவனமுலைமங்கையாளொடுஞ்
சீரணிதிருவுருத்திகழ்ந்தசென்னியர்
நாரணனிலைதனனணுகலாரெயில்
கூரெரிகொளுவினர்கொள்ளிக்காடரே. (ஙி)

பஞ்சுதோய்மெல்லடிப்பாவையாளொடு
மஞ்சுதோய்கயிலையுண்மகிழ்வர்நாடொறும்
வெஞ்சினமருப்பொடுவிரையவந்தடை
குஞ்சரமுரித்தனர்கொள்ளிக்காடரே. (சுஎ)

இறையுறுவரிவளையிசைகள்பாடிட
வறையுறுகழலடியார்க்கவாடுவர்
சிறையுறுவிரிபுனல்சென்னியின்மிசைக்
குறையுறுமதியினர்கொள்ளிக்காடரே. (எ)

எடுத்தனன்கையிலையையல்வலியினை
யடர்த்தனர்திருவிரலாலலறிடப்
படுத்தனரென்றவன்பாடல்பாடலுங்
கொடுத்தனர்கொற்றவாள்கொள்ளிக்காடரே. (அ)

தேடினரயன்முடிமாலுஞ்சேவடி
நாடினரவரென்றுநணுகலுற்றிலர்
பாடினர்பரிவொடுபத்தர்சித்தமுங்
கூடினர்க்கருள்செய்வர்கொள்ளிக்காடரே. (கூ)

நாடிநின்றறிவினுணிலிகள்சாக்கிய
ரோடிமூண்றுமெனுமையவுரைகண்மெய்யல
பாடுவர்நாண்மறைபயின்றமாதெடுங்
கூடுவர்திருவுருக்கொள்ளிக்காடரே. (கஅ)

நற்றவர்காழியுண்ஞானசம்பந்தன்
குற்றமில்பெரும்புகழ்க்கொள்ளிக்காடரைச்
சொற்றமிழின்னிசைமாலைசோர்வின்றிக்
கற்றவர்கழலடிகாணவல்லரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–அக்கினீசுவரர், தேவியார்–பஞ்சினுமெல்லடியம்மை.

திருச்சிற்றம்பலம்.

மருவமர்குழலுமைபங்கர்வார்சடை
யரவமர்கொள்கையெம்மடிகள்கோயிலாங்
குரவமர்சுரபுன்னீகோங்குவேங்கைகள்
விரவியபொழிலணிவிசயமங்கையே. (க)

கீதமுனிசைதரக்கிளரும்வீணையர்
பூதமுன்னியல்புடைப்புனிதர்பொன்னகர்
கோதனம்வழிபடக்குலவுநான்மறை
வேதியர்தொழுதெழுவிசயமங்கையே. (உ)

அக்கரவரையினரிவைபாகமாத்
தொக்கநல்வீணையுடைச்சோதிதொன்னகர்
தக்கநல்வானவர்தலைவர்நாடொறு
மிக்கவர்தொழுதெழுவிசயமங்கையே. (ங)

தொடைமலியிதழியுந்துன்னெருக்கொடு
புடைமலிசடைமுடியடிகள்பொன்னகர்
படைமலிமழுவினர்பைங்கண்மூரிவெள்
விடைமலிகொடியணல்விசயமங்கையே. (ச)

தோடமர்காதினன்முதைந்தநீற்றின
னேடமர்கோதையோடினிதமர்விடங்
காடமர்மாகரிகதறப்போர்த்ததோர்
வேடமதுடையணல்விசயமங்கையே. (ஞ)

மைப்புரைகண்ணுமைபங்கன்வண்டழ
லொப்புரைமேனியெம்முடையவன்னக
ரப்பொடிமலர்கொடங்கிறைஞ்சிவானவர்
மெய்ப்படவருள்புரிவிசயமங்கையே. (சு)

இரும்பொனின்மலிவிலினெரிசரத்தினல்
வரும்புரங்களீப்பொடிசெய்தமைந்தனூர்
சுரும்பமர்கொன்றையுந்தூயமத்தமும்
விரும்பியசடையணல்விசயமங்கையே. (எ)

உளங்கையிலிருபதோடொருபதுங்கொடாங்
களந்தருமவரையெடுத்திடுமரக்கனைத்
தளர்ந்துடனெரிதரவடர்த்ததன்மையன்
விளங்கிழையொடும்புகுவிசயமங்கையே. (அ)

மண்ணினையுண்டவன்மலரின்மேலுறை
யண்ணல்கடமக்களப்பரியவத்தனூர்

தண்ணருஞ்சாந்தமும்பூவுநீர்கொடு
விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையே. (சூ)

கஞ்சியுங்கவளமுண்கவணர்கட்டுரை
நஞ்சினுங்கொடியனநமர்களேற்கிலார்
செஞ்சடைமுடியுடைத்தேவனன்னகர்
விஞ்சையர்தொழுதெழுவிசயமங்கையே. (கo)

விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையை
நண்ணியபுகலியுண்ஞானசம்பந்தன்
பண்ணியசெந்தமிழ்பத்தும்வல்லவர்
புண்ணியர்சிவகதிபுகுதறிண்ணமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-விசயநாதேசுவரர், தேவியார்-மங்கைநாயகியம்மை.

---

276 திருவைகன்மாடக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தளமதியுடைமறிதோன்றுகையின
ரிளமதியணிசடையெந்தையாரிட
முளமதியுடையவர்வைகலோங்கிய
வளமதிதடவியமாடக்கோயிலே (சு)

மெய்யகமிளிரும்வெண்ணூலர்வேதியர்
மையகண்மலைமகளோடும்வைகிடம்
வையகமிழ்தரவைகன்மேற்றிசை
செய்யகண்வளவன்முன்செய்ததோயிலே. (உ)

கணியணிமலர்கொடுகாலுமாலியும்
பணியணிபவர்க்கருள்செய்தபான்மையர்
தணியணியுமையொடுதாமுந்தங்கிட
மணியணிகிளர்வைகன்மாடக்கோயிலே. (ரு)

கொம்பியல்கோதைமுன்னஞ்சக்குஞ்சரத்
தும்பியதூரிசெய்ததுங்கர்தங்கிடம்
வம்பியல்சோலைசூழ்வைகன்மேற்றிசைச்
செம்பியன்கோச்செங்கணன்செய்கோயிலே. (சு)

விடமடைமிடற்றினர்வேதநாவினர்
மடமொழிமலைமகளோடும்வைகிட
மடவனநடையில்வைகன்மாநகர்க்
குடதிசைநிலவியமாடக்கோயிலே. (ஙி)

நிறைபுனல்பிறையொடுநிலவுநீள்சடை
பிறையவருறைவிடமிலங்குமூவெரி
மறையொடுவளர்வுசெய்வாணவர்வைகலிற்
றிறையுடைநிறைசெல்வன்செய்ததோயிலே. (சு)

எரிசரம்வரிசிலையினையவேவிமுன்
றிரிபுரமெரிசெய்தசெல்வர்சேர்விடம்
வரிவளையவர்பயில்வைகன்மேற்றிசை
வருமுகிலணவிய மாடக்கோயிலே. (எ)

மலையன விருபதுதோளினுன்வலி
தொலைவுசெய்தருள்செய்ததோதியாரிட
மலர்பலிபொழிலணிவைகல்வாழ்வர்கள்
வலம்வரு மலையன மாடக்கோயிலே. (அ)

மாலவன் மலரவனேடிமால்கொள
மாலெரியாகியவரதர்வைகிட
மாலைகொடணிமறைவாணர்வைகலின்
மாலன மணியணிமாடக்கோயிலே. (கூ)

கடுவுடைவாயினர்கஞ்சிவாயினர்
பிடருரைபேணிலார்பேணுகோயிலா
மடமுடையவர்பயில்வைகன்மாநகர்
வடமலையனையநன்மாடக்கோயிலே. (கo)

மைந்தன திடம்வைகன்மாடக்கோயிலைச்
சந்தமர்பொழிலணிசண்பைஞானசம்
பந்தனதமிழ்கெழுபாடல்பத்திவை
சிந்தைசெய்பவர்சிவலோகஞ்சேர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழாநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வைகுந்தேசுவரர், தேவியார்-வைகலம்பிகையம்மை.

---

277 திரு அம்பர்ப்பெருந்திருக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஏரிதரவனல்கையிலேந்தியெல்லியி
னீரிதிரிகானிடைநட்டமாடுவா
ரரிசிலம்பொருபுனலம்பர்மாநகர்க்
குரிசில்செங்கண்ணவன்கோயில்சேர்வரே. (க)

மையகண்மலைமகள்பாகமாயிருள்
கையதோர்கனலெரிகனலவாடுவ

மையணங் கொருபுனலம்பர்ச்செம்பியர்
செய்யகணிறைசெய்தகோயில்சேர்வரே. (உ)

மறைபுனை பாடலர்சுடர்கைமல்கவோர்
பிறைபுனை சடைமுடிபெயரவாடுவ
ரறைபுனனிறைவயலம்பர்மாநக
ரிறைபுனை யெழில்வளரிடமதென்பரே. (ஊ)

இரவுமல்கிளமதிசூடியீடியர்
பூவமல்கருமறைபாடியாடுவ
ரரவமோடியர்செம்மலம்பர்க்கொம்பலர்
மரவமல்கெழினகர்மருவிவாழ்வரே. (எ)

சங்கணிகுழையினர்சாமம்பாடுவர்
வெங்கனல்கணரவீசியாடுவ
ரங்கணிவிழவமரம்பர்மாநகர்ச்
செங்கணிலிறைசெய்தகோயில்சேர்வரே. (ஏ)

கழல்வளர்காலினர்சுடர்கைமல்கவோர்
சுழல்வளர்குளிர்புனல்சூடியாடுவ
ரழல்வளர்மறையவரம்பர்ப்பைம்பொழி
னிழல்வளர்நெடுநகரிடமதென்பரே. (ஐ)

இசலுமுசுடரெரியிலங்கவீசியே
பகலிடம்பலிகொளப்பாடியாடுவ
ரகலிடமலிபுகழம்பர்வம்பவிழ்
புகலிடநெடுநகர்புகுவர்போலுமே. (ஒ)

எரியன மணிமுடியிலங்கைக்கோன்றன
கரியன தடக்கைகளடர்த்தகாலின
ரரியவர்வளநகரம்பரின்பொடு
புரியவர்பிரிவிலர்பூதஞ்சூழவே. (ஓ)

வெறிகிளர்மலர்மிசையவனும்வெற்றொழிற்
பொறிகிளர்ராவணப்புல்குசெல்வனு
மறிகிலரரியவரம்பர்ச்செம்பியர்
செறிகழலிறைசெய்தகோயில்சேர்வரே. (ஔ)

வழிதலைபறிதலையவர்கள்கட்டிய
மொழிதலைபயனெனமொழியல்வம்மினே
வழிதலைபொருபுனலம்பர்மாநக
ருழிதலையொழிக்துளருமையுக்தாமுமே. (க0)

அழகரையடிகளையம்பர்மேவிய
நிழறிகழ்சடைமுடிநீலகண்டரை

யுமிழ்திரையுலகினிலோ துவீர்கொண்மின்
றமிழ்கெழுவிரகினன் றமிழ்செய்மாலையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரமபுரிநாதேசுவரர், தேவியார்-பூங்குழலையம்மை.

---

২৭৪ திருப்பூவணம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாதமர்மேனியனகிவண்டொடு
போதமர்பொழிலணிபூவணத்துறை
வேதனேவிரவலரணமூன்றெய்த
நாதனேயடிதொழநன்மையாகுமே. (க)

வானணிமதிபுல்குசென்னிவண்டொடு
தேனணிபொழிற்றிருப்பூவணத்துறை
யானகல்லருமறையங்கமோதிய
ஞானனேயடிதொழநன்மையாகுமே. (உ)

வெந்தயருமுபிணிவீனைகடீர்வதோர்
புந்தியர்தொழுதெழுபூவணத்துறை
யந்திவெண்பிறையினோடமுடிய
நந்தியையடிதொழநன்மையாகுமே. (ங)

வாசநன்மலர்மலிமார்பில்வெண்பொடிப்
பூசனேப்பொழிறிகழ்பூவணத்துறை
யீசனேமலர்புனைந்தேத்துவார்வினை
நாசனேயடிதொழநன்மையாகுமே. (ச)

குருந்தொடுமாதவிகோங்குமல்லிகை
பொருந்தியபொழிற்றிருப்பூவணத்துறை
யருந்திறலவுணர்தமரணமூன்றெய்த
பெருந்தகையடிதொழப்பிடையில்லையே. (ஞ)

வெறிகமழ்புன்னைபொன்னுழல்விம்மிய
பொறியரவணிபொழிற்பூவணத்துறை
இறிபடமுடையினன்கேடில்கொள்கைய
னறுமலரடிதொழநன்மையாகுமே. (சு)

பறைமல்குமுழவொடுபாடலாடலன்
பொறைமல்குபொழிலணிபூவணத்துறை
மறைமல்குபாடலன்மாதோர்கூறினன்
னறைமல்குகழலெழுவல்லில்லையே. (எ)

வரைதனெடுத்தவல்லரக்கனீண்முடி
விரறனிலடர்த்தவன்வெள்ளீறிற்றினன்
பொருபுனல்புடையணிபூவணத்தினப்
பரவியவடியவர்க்கில்லைப்பாவமே. (அ)

நீர்மல்குமலருறைவானுமாலுமாய்ச்
சீர்மல்குதிருத்தடிசேரகிற்கிலர்
போர்மல்குமழுவினன்மேயபூவண
மேர்மல்குமலர்புனைந்தேத்தலின்பமே. (கூ)

மண்டைகொண்டுழிதருமதியிலாரருங்
குண்டருங்குணம்பலபேசுங்கோலத்தர்
வண்டமர்வளர்பொழின்மல்குபூவணம்
கண்டவரடிதொழுதேத்தல்கன்மமே. (கo)

புண்ணியர்தொழுதெழுபூவணத்துறை
யண்ணலையடிதொழுதன்தண்காழியு
ணண்ணியவருமறைஞானசம்பந்தன்
பண்ணியதமிழ்சொலப்பறையும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

179 திருக்கருக்குடி–பண்–காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

நனவிலுங்கனவிலுநாளுந்தன்னெளி
நினைவிலுமெனக்குவந்தெய்துநின்மலன்
கனைகடல்வையகந்தொழுகருக்குடி
யனலெரியாடுமெம்மடிகள்காண்மினே. (க)

வேதியன்விடையுடைவிமலனென்னலர்
மூதெயிலெரிவெயமுனிந்தமக்கணன்
காதியல்குழையினன்கருக்குடியம
ராதியையடிதொழவல்லலில்லையே. (உ)

மஞ்சுறுபொழில்வளமலிகருக்குடி
நஞ்சுறுதிருமிடறுடையகாதலன்
ரஞ்சுறும்பார்குழலிவையஞ்சவே
வெஞ்சுரந்தனில்விடையேறலென்கொலோ. (கூ)

ஊனுடைப்பிறவியையறுக்கவுன்னுவீர்
காணிடையாடலரன்பயில்கருக்குடிக்
கோனுயர்கோயிலேவணங்கிவைகுமின்
வானவர்தொழுகழல்வாழ்த்திவாழ்மினே. (ச)

சூடுவர்சடையிடைக்கங்கைகங்கையைக்
கூடுவருலகிடையையங்கொண்டொலி
பாடுவரிசைபறைகொட்டநட்டிரு
ளாடுவர்கருக்குடியண்ணல்வண்ணமே. (நி)

இன்புடையாரிசைவீணைபூணரா
வென்புடையாரெழின்மேனிமேலெரி
முன்புடையார்முதலேத்துமன்பருக்
கன்புடையார்கருக்குடியெமண்ணலே. (சு)

காலமுஞாயிறுந்தீயுமாயவர்
கோலமுமுடியரவணிந்தகொள்கையர்
சீலமுமுடையவர்திருக்கருக்குடிச்
சாலவுமினிதவருடையதன்மையே. (எ)

எறிகடல்புடைதழுவிலங்கைமன்னனை
முறிபடவரையிடையடர்த்தமூர்த்தியார்
கறைபடுபொழின்மதிதவழ்கருக்குடி
யறிவொடுதொழுமவராள்வர்நன்மையே. (அ)

பூமனுந்திசைமுகன்றனும்பொற்பமர்
வாமனனறிகிலாவண்ணமோங்கெரி
யாமெனவுயர்ந்தவனணிகருக்குடி
நாமனனினில்வரினேதனன்மையே. (சு)

சாக்கியர்சமண்படுகையர்பொய்ம்மொழி
யாக்கியவுரைகொளேலருந்திருந்தமக்
காக்கியவரனுறையணிகருக்குடிப்
பூக்கமழ்கோயிலேபுடைபட்டுய்ம்மினே. (கo)

கானலில்விரைமலர்ஷிம்முகாழியான்
ஞானமெய்ஞ்ஞானசம்பந்தன்சொல்லிய
ஊனமின்மொழிவலார்க்குயருமின்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சற்குணலிங்கேசுவரர், தேவியார்-சர்வாலங்கிதமின்னம்மை.

ஆ பதிகம்-உக.

2810 திருப்பஞ்சாக்கரப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சித்தம்பலம்.

தஞ்சலுந் துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகநைந் துகினீமிளுடோறும்
வஞ்சகமற் றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத் தனவஞ்செழுத்துமே. (க)

மந்திரநான் மறையாகிவானவர்
சிந்தையுணின் றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந் திரமஞ்செழுத்துமே. (உ)

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினீயேற்றிநன்புலத்
தேனைவழிதிறந்தேத்தவார்க்கிட
ரானகெடுப்பனவைந்தெழுத்துமே. (ங)

நல்லவர்தீயரெனுதஞ்சினச்
செல்லல்கெடச்சிவமுத்திகாட்டுவ
கொல்லரமன்றமர்கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பன வஞ்செழுத்துமே. (ச)

கொங்கலர்வன மதன்வாளியைந்தகத்
தங்குளபூதமுமஞ்சவம்பொழிற்
றங்கரவின் படமஞ்சுந்தம்முழை
யங்கையிலேவிரலஞ்செழுத்துமே. (ஞ)

தும்மலிருமலொடார்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம்வினீங்கதபோழ்தினு
மிம்மைவினையடர்த்தெய்தும்போழ்தினு
மம்மையினுந் தினையஞ்செழுத்துமே. (ட)

வீடுபிறப்பையறுத்தமெச்சினர்
பீடைகெடுப்பனபின்னைநாடொறு
மாடுகொடுப்பனமன்னுமாகட
மாடியுகப்பனவஞ்செழுத்துமே. (ண)

வண்டமரோதிமடந்தைபேணின
பண்டையிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டுதுதித்தபின்னவர்க்
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே. (அ)

கார்வணனுன்முகன்காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்

பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவனவஞ்செழுத்துமே. (சு)

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வீணப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே. (கo)

நற்றமிழ்ஞானசம்பந்தனுன்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
தற்றனவல்லவரும்பராவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

281 திருவிற்கோலம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உருவினருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினுன்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெகுண்டுநோக்கிய
செருவினுறைவிடந்திருவிற்கோலமே. (சு)

சிற்றிடையுமையொருபங்கனஞ்சுமி
லுற்றதோரிரியினலெருசரத்தினல்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. (உ)

ஐயனல்லதிசயனயன்விண்ணோர்தொழு
மையணிகண்டனர்வண்ணம்வண்ணவான்
பையரவல்குலாள்பாகமாகமுஞ்
செய்யவனுறைவிடந்திருவிற்கோலமே. (ரு)

விதைத்தவன்முனிவருக்கறமுன்காலினை
யுதைத்தவனுயிரிழந்தருண்டுவீழ்ந்தரப்
புதைத்தவனெருகர்ப்புரங்கண்மூன்றையுஞ்
சிதைத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (ச)

மூர்த்தினன்மூவருண்முதல்வனுயினன்
கோர்த்துலாமலர்ப்பொழிற்கூகமேவினன்
னேர்த்திவான்பிறையினடியர்மேல்வினை
சிந்துவானுறைவிடந்திருவிற்கோலமே. (ஞ)

தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினன்

மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவனுறைவிடந் திருவிற்கோலமே. (சு)

விரித்தவனருமறைவிரிசடைவெள்ளந்
தரித்தவன் றரியலர்புரங்களாசற
வெரித்தவனிலங்கையர்கோனிடர்ப்படச்
சிரித்தவனுறைவிடந் திருவிற்கோலமே. (எ-அ)

திரிதருபுரமெரிசெய்தசேவகன்
வரியரவொடுமதிசடையில்வைத்தவ
னரியொடுபிரமனதாற்றலாலுருத்
தெரியலனுறைவிடந் திருவிற்கோலமே. (கூ)

சீர்மையில்சமணுடுசீவரக்கையர்
நீர்மையிலுரைகள்கொள்ளாதநேசர்க்குப்
பார்மலிபெருஞ்செல்வம்பரிந்துநல்கிடுஞ்
சீர்மையினனிடந் திருவிற்கோலமே. (கo)

கோடல்வெண்பிறையனீக்கூகமேவிய
சேடனசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லஃதமிழ்ஞானசம்பந்தன
பாடவல்லார்களுக்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்—புராந்தகேசுவரர், தேவியார்-புராந்தரியம்மை.

இத்தலம்-கூவமென வழங்கப்படுகின்றது.

ஃ§ திருக்கழுமலம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம்வாழுலாம்வைகலு
மெண்ணினல்லகதிக்கியாதுமேசர்குறைவிலைக்
கண்ணினல்லஃதுறங்கழுமலவளாகர்ப்
பெண்ணினல்லாளொடும்பெருந்தகையிருந்ததே. (க)

போதையார்பொற்கிண்ணத்தடிசில்பொல்லாதெனத்
தாதையார்முனிவுறத்தானெனையாண்டவன்
காதையார்குழையினன்கழுமலவளாகர்ப்
பேதையாளவளொடும்பெருந்தகையிருந்ததே. (உ)

தொண்டனேசெய்தொழிற்றுயரறுத்தஞ்சலாம்
வண்டணைகொன்றையான்மதமலர்ச்சடைமுடிக்

கண்டுணெற்றியான்கழுமலவளநகர்ப்
பெண்டுணையாகவோர்பெருந்தகையிருந்ததே. (கூ)

அயர்வுளோமென்றுநீயசைவொழிநெஞ்சமே
நியர்வளமுன்கையாணேரிழையவளொடுங்
கயல்வயல்குதிகொளுங்கழுமலவளநகர்ப்
பெயர்பலதுதிசெயப்பெருந்தகையிருந்ததே. (சு)

அடைவிலோமென்றுநீயயர்வொழிநெஞ்சமே
விடையமர்கொடியினன்விண்ணவர்தொழுதெழுங்
கடையுயர்மாடமார்கழுமலவளநகர்ப்
பெடையனநடையொடும்பெருந்தகையிருந்ததே. (டு)

மற்றொருபற்றிலெநெஞ்சமேமறைபல
கற்றகல்வேதியர்கழுமலவளநகர்ச்
சிற்றிடைப்பேரல்குற்றிருந்திழையவளொடும்
பெற்றெனையாளுடைப்பெருந்தகையிருந்ததே. (சூ)

குறைவளைவதுமொழிகுறைவொழிநெஞ்சமே
நிறைவளைமுன்கையாணேரிழையவளொடுங்
கறைவளர்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிறைவளர்சடைமுடிப்பெருந்தகையிருந்ததே. (எ)

அரக்கனரருவரையெடுத்தவனலறிட
நெருக்கினர்விரலினீடியாழ்பாடவே
கருக்குவாளருள்செய்தான்கழுமலவளநகர்ப்
பெருக்குநீரவிளொடும்பெருந்தகையிருந்ததே. (அ)

நெடியவன்பிரமனுநினைப்பரிதாயவ
ரடியொடுமுடியறியாவழலுருவினன்
கடிகமழ்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிடிநடையவளொடும்பெருந்தகையிருந்ததே. (கூ)

தாருறுதட்டைதச்சமணர்சாக்கியர்கட
மாருறுசொற்களேற்றடியிணையடைத்தய்ம்மின்
காருறுபொழில்வளர்கழுமலவளநகர்ப்
பேரறத்தாளொடும்பெருந்தகையிருந்ததே. (கo)

கருந்தடக்தேன்மல்குகழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கையோடிருந்தவெம்பிரான்றனை
யருந்தமிழ்ஞானசம்பந்தனசெந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய்விண்ணுலகாள்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

११३ திருந்துதேவன்குடி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மருந்துவேண்டில்லீவைமந்திரங்கள்ளிவை
புரிந்துகேட்கப்படும்புண்ணியங்கள்ளிவை
திருந்துதேவன்குடித்தேவர்தேவெய்திய
வருந்தவத்தோர்தொழுமடிகள்வேடங்களே. (க)

வீதிபோக்காவனவினையைவிட்டுய்வன
வோதியோர்க்ககப்படாப்பொருளோர்விப்பன
தீதிறேவன்குடித்தேவர்தேவெய்திய
வாதியந்தம்மிலாவடிகள்வேடங்களே, (உ)

மானமாக்குவனமாசுநீக்குவன
வானுயுள்கச்செலும்வழிகள்காட்டுவ்வன
தேனும்வண்டும்மிசைபாடுந்தேவன்குடி
யானுஞ்சாடும்முடியடிகள்வேடங்களே. (கூ)

செவிகளார்விப்பனசிந்தையுட்சேர்வன
கவிகள்பாடுவனகண்குளிர்விப்பன
புவிகள்பொங்கப்புனல்பாயுந்தேவன்குடி
யவிகளுய்க்கப்படுமடிகள்வேடங்களே. (ை)

விண்ணுலாவுந்நெறிவீடுகாட்டுந்நெறி
மண்ணுலாவுந்நெறிமயக்கந்தீர்க்குந்நெறி
தெண்ணிலாவெண்மதிதீண்டுதேவன்குடி
யண்ணலானேயுடையடிகள்வேடங்களே. (ஙு)

பங்கமென்னப்படாபழிகளென்னப்படா
புங்கமென்னப்படாப்புகழ்களென்னப்படுந்
திங்கடோயும்பொழிறீண்டுதேவன்குடி
யங்கமாமுஞ்சொன்னவடிகள்வேடங்களே. (சு)

கரைதலொன்றும்மிலைகருதவல்லார்தமக்
குரையிலானம்மிலையுலகினின்மன்னுவர்
திரைகள்பொங்கப்புனல்பாயுந்தேவன்குடி
யரையில்வெண்கோவணத்தடிகள்வேடங்களே. (ஞ)

உலகமுட்குந்திறலுடையரக்கன்வலி
விலகுபுத்தக்கணம்வெருட்டும்வேடத்தினன்
நிலகமாரும்பொழிலுஞ்சூழ்ந்ததேவன்குடி
யலர்தயங்கும்முடியடிகள்வேடங்களே. (அ)

துளக்கமில்லாதனதூயதோற்றத்தன
விளக்கமாக்குவனவெறிவண்டாரும்பொழி

நீலக்குந்தேவன்குடித்திசைமுகனேடுமா
லளக்கவொண்ணவண்ணத்தடிகள்வேடங்களே. (கூ)

செருமருதண்டுவர்த்தேரமணர்தர்க
ளருமருவப்படாத்தொழும்பர்தமுரைகொளே
திருமருவும்பொய்கைசூழ்ந்ததேவன்குடி
யருமருந்தாவனவடிகள்வேடங்களே. (கo)

சேடர்தேவன்குடித்தேவர்தேவன்றிண
மாடமோங்கும்பொழின்மல்குதண்காழியா
ளுடவல்லஃதமிழ்ஞானசம்பந்தனற்
பாடல்பத்தும்வல்லார்க்கில்லையம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கர்க்கடகேசுவரர், தேவியார்-அருமருந்துநாயகியம்மை.

---

234 திருக்கானப்பேர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்தழீஇ
விடியலேதடமூழ்கிவிதியினல்வழிபடுங்
கடியுலாம்பூம்பொழிற்கானப்பேரண்ணனின்
னடியலாலடைசரணுடையரோவடியரே. (க)

நண்ணிடைப்பேரல்குனூபுரமெல்லடிப்
பெண்ணினல்லாரோர்பாகமாப்பேணினுண்
கண்ணுடைநெற்றியான்கருகியகானப்பேர்
விண்ணிடைவேட்கையார்விரும்புதல்கருமமே. (உ)

வாவிவாய்த்தங்கியதுண்சிறைவண்டினங்
காவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலை
நாவிவாய்ச்சார்தருபூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துநின்றுட்டுவார்தொண்டரே. (ங)

நிறையுடைநெஞ்சுளுநீருளும்பூவுளும்
பறையுடைமுழவுளும்பலியுளும்பாட்டுளுங்
கறையுடைமிடற்றண்ணல்கருதியகானப்பேர்
குறையுடையவர்க்கலாற்களிலார்குற்றமே. (ச)

ஏனப்பூண்மார்பின்மேலெனப்பூண்டிலா
ஞானப்பேராயிரம்பேரிளனண்ணிய
கானப்பேரூர்தொழுங்காதலார்தீதிலர்
வானப்பேரூர்புகும்வண்ணமும்வல்லரே. (ஞ)

பள்ளமேபடர்சடைப்பாற்படப்பாய்ந்தநீர்
வெள்ளமேதாங்கினன்வெண்மதிசூடினன்
கள்ளமேசெய்கிலார்கருதியகானப்பே
ருள்ளமேகோயிலாவுள்குமென்னுள்ளமே. (சு)

மானமாமடப்பிடிவன்கையாலலகிடக்
கானமார்கடகரிவழிபடுங்கானப்பே
ரூனமாமுடம்பினிலுறுபிணிகெடவென்னின்
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே. (எ)

வாளினன்வேலினன்மால்வரையெடுத்தநின்
டோளினனெடுமுடிதொலையவேயூன்றிய
தாளினன்கானப்பேர்தலையினல்வணங்குவார்
நாளுநாளுயர்வதோர்நன்மையைப்பெறுவரே. (அ)

சிலையினன்மும்புரந்தீயெழச்சென்றவ
னிலையிலாவிருவரைநிலைமைகண்டேயங்கினன்
கலையினர்புறவிற்றேன்கமழ்தருகானப்பேர்
தலையினல்வணங்குவார்தவமுடையார்களே. (சு)

உறித்தலைச்சுரையொடுகுண்டிகைபிடித்துச்சி
பறித்தலும்போர்த்தலும்பயனிலாப்பாவிகாண்
மறித்தலைமடப்பிடிவளரிளங்கொழுங்கொடி
கறித்தெழுகானப்பேர்கைதொழல்கருமமே. (கம)

காட்டகத்தாடலான்கருதியகானப்பேர்
கோட்டகத்திளவரால்குதிகொளுங்காழியா
னாட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன
பாட்டகத்திவைவலார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–காளீசுவரர், தேவியார்–மகமாயியம்மை.

இந்தத் தலம்–காளையார் கோவிலென்று வழங்கப்படுகின்றது.

ஏ ரீ திருச்சக்கரப்பள்ளி–பண்–கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

படையினர்வெண்மழுப்பாய்புலித்தோலரை
புடையினருமையொருகூறனூர்வதோர்
விடையினர்வெண்பொடிப்பூசியார்விரிபுனற்
சடையினருறைவிடஞ்சக்கரப்பள்ளியே. (க)

பாடினாருமறைபனிமதிச்சடைமிசைச்
சூடினார்படுதலைதன்னெருக்கதனெடு
நாடினாரிடுபலிநண்ணியோர்காலனீச்
சாடினார்வளநகர்ச்சக்கரப்பள்ளியே. (உ)

மின்னினார்சடைமிசைவிரிகதிர்மதியமும்
பொன்னினார்கொன்றையும்பொறிகிளரரவமுங்
துன்னினாருலகெலாந்தொழுதெழுநான்மறை
தன்னினார்வளநகர்ச்சக்கரப்பள்ளியே. (கூ)

நலமலிகொள்கையார்நான்மறைப்பாடலார்
வலமலிமழுவினார்மகிழுமூர்வண்டறை
மலர்மலிசலமொடுவந்திழிகாவிரி
சலசலமணிகொழிசக்கரப்பள்ளியே. (ச)

வெந்தவெண்பொடியணிவேதியர்விரிபுன
லந்தமிலணிமலிமங்கையோடமருமூர்
கந்தமார்மலரொடுகாரகிற்பன்மணி
சந்திஞ்சே ணீடுபுனற்சக்கரப்பள்ளியே. (ஞ)

பாங்கினுண்முப்புரம்பாழ்படவெஞ்சிலை
வாங்கினார்வானவர்தானவர்வணங்கிட
வோங்கினாருமையொருகூறுடுமொலிபுன
றூங்கினாருறைவிடஞ்சக்கரப்பள்ளியே. (சு)

பாரினார்தொழுதெழுபரவுபல்லாயிரம்
பேரினார்பெண்ணெருகூறனார்பேரொலி
நீரினார்சடைமுடிநிறைமலர்க்கொன்றையர்
தாரினார்வளநகர்ச்சக்கரப்பள்ளியே. (எ)

முதிரிலாவோர்பிறைசூடினார்முன்னகர
ளெதிரிலாமுப்புரமெரிசெய்தார்வரைதனு
லதிரிலாவல்லரக்கன்வலிவாட்டிய
சதிரினார்வளநகர்ச்சக்கரப்பள்ளியே. (அ)

தணிபடுகோவணஞ்சுண்ணவெண்பொடியினர்
பணிபடுமார்பினர்பனிமதிச்சடையினர்
மணிவணனவனெடுமலர்மிசையானெயுந்
தனிவினர்வளநகர்ச்சக்கரப்பள்ளியே. (கூ)

உடம்புபோர்சீவரமுண்டொழிற்சமணர்கள்
விடம்படுமுரையவைமெய்யலவிரிபுனல்
வடம்படுமலர்கொடுவணங்குமின்வைகலுந்
தடம்புனல்சூழ்தருசக்கரப்பள்ளியே. (க0)

தண்வயல்புடையணிசக்கரப்பள்ளியெங்
கண்ணுதலவனடிகமழ்மலரணகர்
நண்ணியசெந்தமிழ்ஞானசம்பந்தன்சொற்
பண்ணியவிவைசொலப்பறையுமெய்ப்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆலந்துறைஈசுவரர், தேவியார்-அல்லியங்கோதையம்மை.

சக்கரப்பள்ளியினிற் சார்ந்த அல்லியங்கோதை, சொற்கிரங்கு மாலந்துறையானே என்னுஞ் சிவசர்மப் பஃறொடையானு முணர்க.

ஃ8ஏ திருமழபாடி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காலியார்வண்டினங்கிண்டியகாரு
சோலியார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலியார்விடமணிவேதியன்விரும்பிட
மாலியார்மதிதவழ்மாமழபாடியே. (க)

கறையணிபிடாடைக்கண்ணுதனண்ணிய
பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினந்தூமலர்தையலே
மறையணிகாவினன்மாமழபாடியே. (உ)

அந்தணர்வேள்வியுமருமறைத்தழனியுஞ்
செந்தமிழ்க்கேதமுஞ்சீரினல்வளர்தரப்
பந்தணைமெல்விரலாளொடும்பயில்விட
மந்தம்வந்துலவுசீர்மாமழபாடியே. (ங)

அத்தியினுரிதனையழகுறப்போர்த்தவன்
முத்தியாய்மூவரின்முதல்வனுய்கின்றவன்
பத்தியாற்பாடிடப்பரிந்தவர்க்கருள்செயு
மத்தனருறைவிடமணிமழபாடியே. (ச)

கங்கையார்சடையிடைக்கதிர்மதியினிற்தவன்
வெங்கண்வாளரவுடைவேதியன்றீதிலாச்
செங்கயற்கண்ணுமையாளொடுஞ்சேர்விட
மங்கைமார்நடம்பயின்மாமழபாடியே. (ஞ)

பாலனாருயிர்பாங்கினலுணவருங்
காலனாருயிர்செகக்காலினற்சாடினன்
சேலினார்கண்ணினுடன்னெடுஞ்சேர்விட
மாலினர்வழிபடுமாமழபாடியே. (ட)

விண்ணிலாரிமையவர்மெய்ம்மகிழ்ந்தேத்தவே
யெண்ணிலார்முப்புரமெரியுணகைசெய்தாய்

கண்ணினுற்காமனைக்கனலெழக்காய்ந்தவெம்
மண்ணலாருறைவிடமணிமழபாடியே. (எ)

கரத்தினுற்கயிலையெடுத்தகாரரக்கன
சிரத்தினீள்பூந்றலுஞ்செவ்வனடிசரணெனு
விரத்தினுற்கைகரம்பெடுத்திசைபாடலும்
வரத்தினுன்மருவிடமாமழபாடியே. (அ)

ஏடுலாமலர்மிசையனெழின்மாலுமாய்
நாடினுர்க்கரியசீர்நாதனுறைவிடம்
பாடலாம்பெண்ணீயின் பழம்வினைப்பம்பொழின்
மாடலாமல்குசீர்மாமழபாடியே. (கூ)

உறிபிடித்துத்தைவாய்ச்சமணுடசாக்கியச்
செறிபிடித்தறிவிலாரீதச்சொற்கொள்ளன்மின்
பொறிபிடித்தரவினம்பூணெனக்கொண்டுமான்
மறிபிடித்தானிடமாமழபாடியே. (கo)

ஞாலத்தாராதிரைநாளிஞைடொறுஞ்
சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்மிக்கசீர்ஞானசம்பந்தன்சொற்
கோலத்தாற்பாடுவார்குற்றமற்றூர்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

287 மேலைத்திருக்காட்டுப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வாருமன்னும்முலைமங்கையோர்பங்கின
ணூருமன்னும்பலியுண்பதும்வெண்டலை
காருமன்னும்பொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நீருமன்னுஞ்சடைநிமலர்தம்நீர்மையே. (க)

கிருத்தனுர்நீள்சடைமதியொடுபாம்பணி
கருத்தனுர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
யருத்தனுரழகமர்மங்கையோர்பாகமாப்
பொருத்தனுர்கழலிணைபோற்றுதல்பொருளதே. (உ)

பண்ணினுரருமறைபாடினுர்நெற்றியோர்
கண்ணினுர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
விண்ணினுர்விரிபுனன்மேவினுர்சடைமுடி
யண்ணலாரெம்மையாளுடையவெம்மடிகளே. (ங)

பணங்கொணகம்மரைக்கார்ப்பதுபலபலி
யுணங்கலோடுண்கலனுறைவதுகாட்டிடை

கணங்கள்கூடித்தொழுதேத்தக்காட்டுப்பள்ளி
நிணங்கொள்சூலப்படைகிமலர்தன்நீர்மையே. (சு)

வரையுலாஞ்சன்தொடுவன்திழிகாவிரிக்
கரையுலாமிடுமணல்சூழ்ந்தகாட்டுப்பள்ளித்
திரையுலாங்கங்கையுந்திங்களுஞ்சூடியங்
கரையுலாங்கோவணத்தடிகள்வேடங்களே. (கூ)

வேதனார்வெண்மழுவேந்தினரங்கமுன்
னேதினருமையொருகூறனரொண்குழைக்
காதினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நாதனார்திருவடிநாளுநின்றேத்துமே. (கூ)

மையினர்மிடறனர்மான்மழுவேந்திய
கையினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளித்
தையலோர்பாகமாத்தண்மதிசூடிய
வையனரடிதொழவல்லலொன்றில்லையே. (எ)

சிலைதனன்மூப்புரஞ்செற்றவன்சீரினர்
மலைதனல்வல்லரக்கன்வலிவாட்டினன்
கலைதனர்புறவணிமல்குகாட்டுப்பள்ளி
தலைதனல்வணங்கிடத்தவமதுவரகுமே. (அ)

செங்கண்மாறிகழ்தருமலருறைதிசைமுகன்
றங்கையாற்றொழுதெழத்தழலுருவாயினன்
கங்கையார்சடையினன்கருதுகாட்டுப்பள்ளி
யங்கையாற்றொழுமவர்க்கல்லலொன்றில்லையே. (கூ)

போதியார்பிண்டியாரென்றவப்பொய்யர்கள்
வாதினுரையவைமெய்யலவைகலுங்
காரினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
யேரினர்தொழுதெழவின்பம்வந்தெய்துமே. (கo)

பொருபுனல்புடையணிபுறவநன்னகர்மனன்
னருமறையவைவல்லவணிகொள்சம்பந்தன்சொற்
கருமணிமிடற்றினன்கருதுகாட்டுப்பள்ளி
பரவியதமிழ்சொலப்பறையுமெய்ப்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தீயாடியப்பர், தேவியார்-வார்கொண்டமுலையம்மை.

திருச்சித்தம்பலம்.

பைத்தபாம்போடரைக்கோவணம்பாய்புலி
மொய்த்தபேய்கண்முழக்கமுதுகாட்டிடை
நித்தமாகநடமாடிவெண்ணீறணி
பித்தர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (க)

கயலசேலகருங்கண்ணியர்நாடொறும்
பயலிகொள்ளப்பலிதேர்ந்தழல்பான்மையா
ரியலிவாளனேர்கிணைந்தோர்களுக்கெண்ணரும்
பெயரர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (உ)

கோடல்சாலவ்வுடையார்கொலையானையின்
மூடல்சாலவ்வுடையார்முளிகானிடை
யாடல்சாலவ்வுடையாரழகாகிய
பீடர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (ங)

மண்ணர்நீராரழலார்மலிகாலினர்
விண்ணர்வேதம்விரித்தோதவார்மெய்ப்பொருள்
பண்ணர்பாடலுடையாரொருபாகமும்
பெண்ணர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (ச)

மறையர்வாயின்மொழிமானெடுவெண்மழுக்
கறைகொள்சூலம்முடைக்கையர்காரார்தருங்
நறைகொள்கொன்றையந்தார்தருஞ்சென்னிமேற்
பிறையர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (ஞ)

புற்றரவம்புலித்தோலரைக்கோவணந்
தற்றிரவின்னடமாடுவர்தாழ்தரு
சுற்றமர்பாரிடந்தொல்கொடியின்மிசைப்
பெற்றர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (ஃ)

தூணியிறுத்தசுரிசங்கமர்வெண்பொடி
யிணையிலேற்றையுகந்தேறுவரும்மெரி
கணையினூன்முப்புரஞ்செற்றவர்கையினிற்
பிணையர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (எ)

சரிவிலாவல்லரக்கன்றடந்தோடஓர்
நெரிவிலாரவ்வடர்த்தார்நெறிமென்குழ
லரிவைபாகமமர்ந்தாரடியாரொடும்
பிரிவில்கோயில்லரதைப்பெரும்பாழியே. (அ)

வரியராவெண்பணிமார்பினர்நீர்மல்கு
மெரியராஞ்சிண்டைமேற்பிறையேற்றவர்

கரியமாலோடயன்காண்பரிதாகிய
பெரியர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (ச)

காணிலாதசமண்சாக்கியர்காடொறு
மேணிலாதம்மொழியவ்வெழிலாயவர்
சேணுலாமும்மதிலீயெழச்செற்றவர்
பேணுகோயில்லரதைப்பெரும்பாழியே. (ச0)

நீரினுர்புன்சடைநிமலனுக்கிடமெனப்
பாரினுர்பரவரதைப்பெரும்பாழியைச்
சீரினுர்காழியுண்ஞானசம்பந்தன்செய்
யேரினுர்தமிழ்வல்லார்க்கில்லையாம்பாவமே. (சக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பரதேசுவரர், தேவியார்-அலங்காரநாயகியம்மை.

2ஈ7 திருமயேந்திரப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

திரைதருபவளமுஞ்சீர்திகழ்வயிரமுங்
கரைதருமகிலொடுகனவளம்புகுதரும்
வரைலிலாலெயிலெய்தமயேந்திரப்பள்ளியுள்
ளரவரையழகனேயடியிணைபணிமினே. (க)

கொண்டல்சேர்கோபுரங்கோலமார்மாளிகை
கண்டலுங்கைதையுங்கமலமார்வாவியும்
வண்டுலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியிற்
செண்டுசேர்விடையினன்றிருத்தடிபணிமினே. (உ)

கோங்கிளவேங்கையுங்கொழுமலர்ப்புன்னையுந்
தாங்குதேன்கொன்றையுந்தகுமலர்க்குரவமு
மாங்கரும்புமவயன்மயேந்திரப்பள்ளியுள்
ளாங்கிருந்தவன்கழலடியிணைபணிமினே. (ங)

வங்கமார்சேணுயர்வருகுரியான்மிகு
சங்கமாரொலியெற்றருபுகைகமழ்தரும்
மங்கையோர்பங்கினன்மயேந்திரப்பள்ளியுள்
ளெங்களணயகன்றனதிணையடிபணிமினே. (ச)

நித்திலத்தொகையலகிரைதருமலரெனச்
சித்திரப்புனரிசேர்த்திடத்திகழ்திருந்தவன்
மைத்திகழ்கண்டனன்மயேந்திரப்பள்ளியுட்
கைத்தலமுழுவினக்கண்டடிபணிமினே. (ஞ)

சந்திரன்கதிரவன்றருபுகழையெடு
மிந்திரன்வழிபடவீருந்தவெம்மிறையவன்
மந்திரம்மறைவளர்மயேந்திரப்பள்ளியுள்
ளந்தமில்லழகனையடிபணிந்தும்மினே. (சு)

சடைமுடிமுனிவர்கள்சமைவெர்டும்வழிபட
நடநவில்புரிவினனறவணிமலரொடு
படர்சடைமதியினன்மயேந்திரப்பள்ளியுள்
ளடல்விடையுடையவனடிபணிந்தும்மினே. (எ)

சிரமொருபதமுமுடைச்செருவலியரக்கனைக்
கரமிருபதுமிறக்கனவரையடர்த்தவன்
மரவமர்பூம்பொழின்மயேந்திரப்பள்ளியுள்
ளரவமர்சடையனையடிபணிந்தும்மினே. (அ)

நாகணைத்துயில்பவன்னலமிகுமலர்வ
ஞகணைந்தவர்கழலணியவும்பெறுகிலர்
மாகணைந்தலர்பொழின்மயேந்திரப்பள்ளியுள்
யோகணைந்தவன்கழலுணர்ந்திருந்தும்மினே. (கூ)

உடைதுறந்தவர்களுமுடைதுவருடையரும்
படுபழியுடையவர்பகர்வனவிடுமினீர்
மடைவளர்வயலணிமயேந்திரப்பள்ளியு
ளிடமுடையீசனையிணையடிபணிமினே. (கo)

வம்புலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியு
ணம்பனார்கழலடிஞானசம்பந்தன்சொ
னம்பரமிதுவெனநாவினவில்லவ
ரும்பராரெதிர்கொளவுயர்பதியணைவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமேனியழகர், தேவியார்-வடிவாம்பிகையம்மை.

ஆக பதிகம்-நக.

ரஅo திருவடகம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வன்னியுமத்தமும்பிறைசடையினன்
பொன்னியறிருவடிபுதுமலரவைகொடு
மன்னியமறையவர்வழிபடவடியவ
ரின்னிசைப்பாடலரேடகத்தொருவனே. (க)

சொடிநெடுமாளிகைக்கோபுரங்குளிர்மதி
வடிவுறவமைதரமருவியவேடகத்
தடிகளேயடிபணிந்தரற்றுமினன்பிலி
விடிபடும்வினைகள்போயில்லையதாகுமே. (உ)

குண்டலந்திகழ்தருகாதடைக்குழகனே
வண்டலம்பும்மலர்க்கொன்றைவாண்மதியணி
செண்டலம்பும்விடைச்சேடனூரேடகங்
கண்டுகைதொழுதலுங்கவலைநோயகலுமே. (ஊ)

ஏலமார்தருகுழலேழையோடெழில்பெறும்
கோலமார்தருவிடைக்குழகனுருவைவிடஞ்
சாலமாதவிகளுஞ்சந்தனஞ்சண்பகஞ்
சீலமாரேடகஞ்சேர்தலாஞ்செல்வமே. (எ)

வரியணிநயனிகன்மலைமகண்மறுகிடக்
கரியினீயுரிசெய்தகறையணிமிடறினன்
பெரியவன்பெண்ணினோடாணலியாகிய
வெரியவனுறைவிடமேடகக்கோயிலே. (ஏ)

பொய்கையின்பொழிலுறுபுதமலர்த்தென்றலார்
வைகையின்வடகரைமருவியவேடகத்
தையனேயடிபணிந்தரற்றுமின்னடர்தரு
வெய்யவன்பிணிகெடவீடெளிதாகுமே. (ஐ-எ)

தடவரையெடுத்தவன்தருக்கிறத்தோளடர்ப்
படவிரலூன்றியேபரிந்தவற்கருள்செய்தான்
மடவரலெருக்கொடுவன்னியுமத்தமு
மிடமுடைச்சடையினானேடகத்திறைவனே. (அ)

பொன்னுமாமணிகளும்பொருதிரைச்சந்தகி
றன்னுளார்வைகையின்கரைதனிற்சமைவுற
வன்னமாமயனுமாலடிமுடிதேடியு
மின்னவாறெனவொணானேடகத்தொருவனே. (கூ)

குண்டிகைக்கையினர்குணமிலாதேரர்கள்
பண்டியைப்பெருக்கிடும்பளகர்கள்பணிகிலர்
வண்டிரைக்கும்மலர்க்கொன்றையும்வன்னியும்
மிண்டுசேர்க்குஞ்சடையேடகத்தெந்தையே. (கo)

கோடுசந்தனமில்கொண்டிழிவைகைநீ
ரோடுசென்றணிதருமேடகத்தொருவனை
நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன
பாடல்பத்திவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

২৭/ திருஉசாத்தானம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

நீரிடைத்துயின்றவன் றம்பிநீள்சாம்புவான்
பேருடைச்சுக்கிரீவன்றுமன்றெழுக்
காருடைநஞ்சுண்டுகாத்தருள்செய்தவெஞ்
சிருடைச்சேடர்வாழ்திருவுசாத்தானமே. (க)

கொல்லியேறுடையவன்கோவணவாடையன்
பல்லியார்படுதலைப்பலிகொளும்பரமனூர்
முல்லையார்புறவணிமுதுபதிநறைகமழ்
தில்லையானுறைவிடந்திருவுசாத்தானமே. (உ)

தாமலார்போலவேதக்கனார்வேள்வியை
யூமனுர்தங்களுவாக்கினனெருநொடிக்
காமனுருடல்கெடக்காய்ந்தவெங்கண்ணுதல்
சேமமாவுறைவிடந்திருவுசாத்தானமே. (ங)

மறிதருகரத்தினன்மால்விடையேறியான்
குறிதருகோலநற்குணத்தினுரடிதொழ
நெறிதழுவேதியர்நித்தலுநியமஞ்செய்
செறிதருபொழிலணிதிருவுசாத்தானமே. (ச-நி-சு)

பண்டிரைத்தயனுமாலும்பலபத்தர்கள்
தொண்டிரைத்துமலர்தூவித்தோத்திரஞ்சொலக்
கொண்டிரைக்கொடியொடுங்குருகினல்லினந்
தெண்டிரைக்கழனிசூழ்திருவுசாத்தானமே. (எ)

மடவரல்பங்கினன்மலைமகளுமதியாது
சடசடவெடித்தவன்றலைபத்துநெரிதர
வடர்தரவூன்றியங்கேயவற்கருள்செய்தான்
றிடமெனவுறைவிடந்திருவுசாத்தானமே. (அ)

ஆணலார்பெண்ணலாரயனெடுமாலுக்குங்
காணுணவண்ணத்தான்கருதுவார்மனத்துளான்
பேணுவார்பிணியொடும்பிறப்பறுப்பானிடஞ்
சேணுலாமாளிகைத்திருவுசாத்தானமே. (சு)

காணமார்வாழ்க்கையான்காரமண்டேரர்சொல்
லூனமாக்கொண்டுநீருரைமினுய்யவெனில்
வானமார்மதிலணிமாளிகைவளர்பொழிற்
றேனமாமதியந்தோய்திருவுசாத்தானமே. (கo)

வரைதிரிக்திழியுநீர்வளவயற்புகலிமன்
றிரைதிரிக்தெறிகடற்றிருவுசாத்தானரை
யுரைதெரிக்தணருஞ்சம்பக்தனுண்டமிழ்வல்லார்
நரைதிரையின்றியேநன்னெறிசேர்வரே. (ஈக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மந்திரபுரீசுவரர், தேவியார்-பெரியநாயகியம்மை.

---

272 திருமுதுகுன்றம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வண்ணமாமலர்கொடுவானவர்வழிபட
வண்ணலாராயிழையாளொடுமமர்விடம்
விண்ணின்மாமழைபொழிந்திழியவெள்ளருவிசேர்
திண்ணிலார்புறவணிதிருமுதுகுன்றமே. (க)

வெறியுலாங்கொன்றையந்தாரினுன்மேதகு
பொறியுலாமரவசைத்தாடியோர்புண்ணியன்
மறியுலாங்கையினுன்மங்கையோடமர்விடஞ்
செறியுளார்புறவணிதிருமுதுகுன்றமே. (உ)

ஏறனூர்விடைமிசையிமையவர்தொழுமெம
கூறனூர்கொல்புலித்தோலினூர்மேனிமே
னீறனூர்நிறைபுனற்சடையனூர்நிகழ்விடங்
தேறலார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (ஊ)

உரையினுருபொருளாயினுமையொடும்
விரையினுர்கொன்றைசேர்சடையினுன்மேவிடம்
முரையினுரொலியெனவோங்குமுத்தாறுமெய்த்
திரையினுரெறிபுனற்றிருமுதுகுன்றமே. (சு)

கடியவாயினகுரற்கனிறினப்பினிறவோ
நிடியவெங்குரலினுடாளிசென்றிடுகெறி
வடியவாய்மழுவினன்மங்கையோடமர்விடஞ்
செடியதார்புறவணிதிருமுதுகுன்றமே. (ஙி)

கானமார்கரியினீருரிவையர்பெரியதோர்
வானமார்மதியினுடரவர்தாமருவிட
மூனமாயினபிணியவைகெடுத்தமையொடுங்
தேனமார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (கூ)

மஞ்சர்தாமலர்கொடுவானவர்வணங்கிட
வெஞ்சொலார்வேடரோடாடவர்விரும்பவே

யஞ்சொலாளுமையொடுமமர்விடமணிகலீச்
செஞ்சொலார்பயிறருந்திருமுதுகுன்றமே. (எ)

காரினாரமர்தருங்கயிலைநன்மலையினை
யேரினார்முடியிராவணனெடுத்தானிற
வாரினார்முலையொடும்மன்னினார்மருவிடஞ்
சீரினார்திகழ்தருந்திருமுதுகுன்றமே. (அ)

ஆடினார்கான கத்தருமறையின்பொருள்
பாடினார்பலபுகழ்பரமனாரிணையடி
யேடினார்மலர்மிசையனுமாலிருவருந்
தேடினாரறிவொணார்திருமுதுகுன்றமே. (கூ)

மாசுமெய்தூசுகொண்டுழல்சமண்சாக்கியர்
பேசுமெய்யுளவல்லபேணுவீர்காணுமின்
வாசமார்தருபொழில்வண்டினமிசைசெயத்
தேசமார்புகழ்மிகுந்திருமுதுகுன்றமே. (கo)

திண்ணினார்புறவணிதிருமுதுகுன்றரை
நண்ணினான்காழியுண்ஞானசம்பந்தன்சொல்
லெண்ணினானீரைந்துமாலையியலுமாப்
பண்ணினாற்பாடுவார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

293 திருத்தெங்குடித்திட்டை–பண்கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

முன்னேநான்மறையவைமுறைமுறைகுறையொடுந்
தன்னதாடொழுதெழுகின்றவன்றன்னிட
மன்னுமாகாவிரிவந்தடிவருடநற்
செந்நெலார்வளவயற்றென்குடித்திட்டையே. (க)

மகரமாடுங்கொடிமன்மதவேடனீ
நிகரலாகாதெருப்பெழவிழித்தானிடம்
பகரபாணித்தலம்பன்மகரத்தொடுஞ்
சிகரமாளிகைதொகுந்தென்குடித்திட்டையே. (உ)

கருவினலன்றியேகருவெலாமாயவ
னுருவினலன்றியேயுருவுசெய்தானிடம்
பருவநாள்வீழவொடும்பாடலோடாடலுந்
திருவினன்மிகுபுகழ்த்தென்குடித்திட்டையே. (கூ)

உண்ணிலாவாவியாயோங்குதன்றன்மையை
விண்ணிலாரறிகிலாவேதவேதாந்தனூ

பெண்ணிலாவெழின்மணிக்கனகமாளிகையிளந்
தெண்ணிலாவிரிதருந்தென்குடித்திட்டையே. (சு)

வருந்திவானோர்கள்வந்தடையமாகஞ்சுதா
னருந்தியாரமுதவர்க்கருள்செய்தான்மருவுமூர்
செருந்திபூமாதவிப்பந்தல்வண்சென்பகந்
திருந்தூர்நீள்வளர்பொழிற்பெண்குடித்திட்டையே. (டு)

ஊறினீரோசையுள்ளொன்றினுரொன்றிமால்
கூறினீரமர்தருங்குமரவேடாதையூ
ராறினீர்பொய்யகத்தையுணர்வெய்திமெய்
தேறினீர்வழிபடுந்தென்குடித்திட்டையே. (சு)

கானலேக்கும்மவன்கண்ணிடந்தப்பரீள்
வானலேக்குந்தவத்தேவுவைத்தானிடந்
தானலித்தெள்ளமூர்தாமரைத்தண்டுறை
தேனலேக்கும்வயற்பென்குடித்திட்டையே. (எ)

மாலொடும்பொருதிறல்வாளரக்கன்னெரிச்
தோலிடும்படிவிரலொன்றுவைத்தானிடங்
கரலொடுங்கனகமூக்குடன்வரக்கயல்வரால்
சேலொடும்பாய்வயற்பென்குடித்திட்டையே. (அ)

நாரணன்றன்னெடுநான்முகன்றனுமாய்க்
காரணன்னடிமுடிகாணவொண்ணனிடம்
ஆரணங்கொண்டுபூசுரர்கள்வந்தடிதொழச்
சீரணங்கும்புகழ்த்தென்குடித்திட்டையே. (கூ)

குண்டிகைக்கையுடைக்குண்டரும்புத்தரும்
பண்டுசைத்தேயிடும்பற்றுவிட்டுர்தொழும்
வண்டிரைக்கும்பொழிற்றண்டலைக்கொண்டலார்
தெண்டிரைத்தண்புனற்பென்குடித்திட்டையே. (கo)

தேனலார்சோலைசூழ்தென்குடித்திட்டையைக்
கானலார்கடிபொழில்சூழ்தருங்காழியுண்
ஞானவாஞ்ஞானசம்பந்தனசெந்தமிழ்
பானலார்மொழிவலார்க்கில்லையம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பசுபதீசுவரர், தேவியார்-உலகநாயகியம்மை.

294 திருக்காளத்தி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரகிலொடுசாதிதேக்கும்மர
முந்துமாமுகலியின்கரையினிலுமையொடும்
மந்தமார்பொழில்வளர்மல்குவண்காளத்தி
யெந்தையாரிணையடியெண்மகத்துள்ளவே. (க)

ஆலமாமரவமோடமைந்தகீர்ச்சந்தனஞ்
சாலமாபீலியுஞ்சண்பகமுந்தியே
காலமார்முகலிவந்தணைதருகாளத்தி
நீலமார்கண்டனிணையுமாகினவதே. (உ)

கோங்கமேகுரவமேகொன்றையம்பாதிரி
மூங்கில்வந்தணைதருமுகலியின்கரையினி
லாங்கமர்காளத்தியடிகளையடிதொழ
வீங்குவெந்துயர்கெடும்வீடெளிதாகுமே. (ங)

கரும்புதேன்கட்டியுங்கதலியின்கனிகளு
மரும்புநீர்முகலியின்கரையினிலணிமதி
யொருங்குவார்சடையினன்காளத்தியெருவணை
விரும்புவாரவர்கடாம்விண்ணுலகாள்வரே. (ச)

வரைதருமகிலொடுமாமுத்தமுந்தியே
திரைதருமுகலியின்கரையினிற்றேமலர்
விரைதருசடைமுடிக்காளத்திவிண்ணவ
னிரைதருகழலிணைநித்தலுமினமினே. (ஞ-சு-ஏ)

முத்துமாமணிகளுமுழுமலர்த்திரள்களு
மெத்துமாமுகலியின்கரையினிலெழில்பெறக்
கத்திடவரக்கனைக்கால்விரலூன்றிய
வத்தன்றன்காளத்தியணைவதுகருமமே. (அ)

மண்ணுமாவேங்கையும்மருதுகள்பீற்றுந்தி
ணண்ணுமாமுகலியின்கரையினின்மைசேர்
வண்ணமாமலரயன்மாலவன்காண்கிலா
வண்ணலார்காளத்தியாங்கணைந்துய்மினே. (கூ)

வீங்கியவுடலினர்விரிதருதுவருடைப்
பாங்கிலார்சொலைவிடும்பரண்டிபணியுமி
னேங்குவன்காளத்தியுள்ளமோடுணர்தர
வாங்கிடும்வினைகளேவானவர்க்கெருவனே. (கo)

அட்டமாசித்திகளணிதருளத்தி
வட்டவார்சடையணிவயலணிகாழியான்
சிட்டனான்மறைவலஞானசம்பந்தன்சொ
லிட்டமாப்பாடுவார்க்கில்லையாம்பாவமே. (ஈஈ)

திருச்சிற்றம்பலம்.

ஈ஧ஏ திருப்பிரமபுரம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கரமுனம்மலராற்புனன்மலர்தூவியேகலந்தேத்துமின்
பரமனூர்பலபேரினற்பொலிபத்தர்சித்தர்கடாம்பயில்
வரமுன்னவருள்செய்யவல்லவெம்மையனுடைமுமேமசீர்ப்
பிரமனூர்பிரமாபுரத்தைபிஞ்ஞகனருள்பேணியே. (க)

விண்ணிலார்மதிசூடினுன்விரும்பும்மறையவன்றலை
யுண்ணகன்பலிபேணினுலகத்தூனுயிரான்மலைப்
பெண்ணினுர்திருமேனியான்பிரமாபுரத்தைகோயிலா
ளண்ணலாருளாளனுயமர்கின்றவெம்முடையாதியே. (உ)

எல்லியில்புகழாளனும்மிமையோர்கணத்தடன்கூடியும்
பல்லியார்தலியிற்பலியதுகொண்டுகந்தபடிறனுர்
தொல்லைவையகத்தேறுதொண்டர்கடமேலர்சொரிந்தேத்தவே
மல்லியம்பொழிறென்மல்கும்பிரமாபுரத்தைமைந்தனே. (ஊ)

அடையலார்புரஞ்சீறியந்தணரேத்தமாமடமாதொடும்
பெடையெலாங்கடற்கானல்புல்கும்பிரமாபுரத்தைகோயிலான்
றொடையலார்நறுங்கொன்றையான்றொழிலேபரவிகின்றேத்தினு
லிடையிலார்சிவலோகமெய்துதற்கிதுகாரணங்காண்மினே. (எ)

வாயிடைம்மறையோதிமங்கையர்வந்திடப்பலிகொண்டுபோய்ப்
போயிடம்மெரிகானிடைப்புரிகாடகம்மினிதாடினுன்
பேயொடுங்குடிவாழ்வினுன்பிரமாபுரத்தைபிஞ்ஞகன்
றூயிடைப்பொருள்தன்தையாகுமென்றேதுவார்க்கருடன்மையே. (ஏ)

ஊடினுலினியாவதென்னுயர்நெஞ்சமேயுறுவல்வினைக்
கோடிநீயுழல்கின்றதென்னமுலன்றுதன்கையிலேந்தினுன்
பீடுகோர்ந்ததுகொள்கையான்பிரமாபுரத்தைவேதியன்
னேடுகோமதியோடராவணியெந்தையென்றுகின்றேத்திடே. (ஐ)

செய்யன்வெள்ளியன்ஒள்ளியார்சிலரென்றுமேத்திகிற்கிடை
வையனுண்டகையன்தணருமாமறைப்பொருளாயினுன்
பெய்யுமாமழையானவன்பிரமாபுரம்மிடம்பேணிய
வெய்யவெண்மழுவேந்தியைகினைந்தேத்துமின்வினைவீடவே. (ஒ)

கன்றெருக்கையிலேந்திநல்லிளவின்கனிபடநூறியுஞ்
சென்றெருக்கியமாமறைப்பொருடேர்ந்தசெம்மலரோனுமா
யன்றரக்கனச்செற்றவன்னடியும்முடியுமவைகாண்கிலார்
பின்றருக்கியதண்பொழிற்பிரமாபுரத்தரன்பெற்றியே. (அ)

உண்டுடுக்கைவிட்டார்களும்முயர்கஞ்சிமண்டைகொடேரரும்
பண்டடக்குசொற்பேசுமப்பரிவொன்றிலார்கள்சொற்கொள்ளன்மின்
றண்டொடக்குவண்சூலமுந்தழன்மாமழுப்படைதன்கையிற்
கொண்டொடுக்கியமைந்தனெம்பிரமாபுரத்துறைகூத்தனே. (கூ)

பித்தனெப்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்கழல்பேணியே
மெய்த்தவத்துகின்றேர்களுக்குரைசெய்தருன்பொருண்மேவிட
வைத்தசிக்தையுண்ஞானசம்பந்தன்வாய்நவின்றெழுமாலைகள்
பொய்த்தவம்பொறிநீங்கவின்னிசைபோற்றிசெய்யுமெய்ம்மாந்தரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-கூஎ.

---

296 திருக்கண்டியூர்-திருவீரட்டம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வினவினேனறியாமையில்லுரைசெய்மினீரருள்வேண்டுவீர்
கனவிலார்புனற்காவிரிக்கரைமேயகண்டியூர்வீரட்டன்
றனமுனேதனக்கின்மையோதமராயினுரண்டமாளத்தான்
வனனில்வாழ்க்கைகொண்டாடிப்பாடியிவ்வையமாப்பலிதேர்ந்ததே. (அ)

உள்ளவாறெனக்குரைசெய்மின்னுயர்வாயமாதவம்பேணுவீர்
கள்ளவிழ்பொழில்சூழ்கண்டியூர்வீரட்டத்துறைகாதலான்
பிள்ளைவான்பிறைசெஞ்சடைம்மிசைவைத்ததும்பெருமீரொலி
வெள்ளைந்தாங்கியதென்கொலோமிகுமங்கையாளுடனுகவே. (உ)

அடியராயினீர்சொல்லுமின்னதினிலேனரன்செய்கையைப்
படியெலாந்தொழுதேத்தகண்டியூர்வீரட்டத்துறைபான்மையான்
முடிவுமாய்முதலாயிவ்வையகமுழுதுமாயமுகாயதோர்
பொடியதார்திருமார்பினிற்புரிநூலும்பூண்டெழுபொற்பதே. (ங)

பழையதொண்டர்கள்பகருமின்பலவாயவேதியன்பான்மையைக்
கழையுலாம்புனன்மல்குகாவிரிமன்னுகண்டியூர்வீரட்டன்
குழையொர்காதினிற்பெய்துகந்தொருகுன்றின்மங்கைவெருவுறப்
புழைநெடுங்கைநன்மாவுரித்ததுபோர்த்துகந்தபொலிவதே. (ச)

விரவிலாதமைக்கேட்கின்றேனடிவிரும்பியாட்செய்வீரிளம்புயின்
கரவெலாந்திரைமண்டுகாவிரிக்கண்டியூருறைவீரட்டன்
முரவமொந்தைமுழாவொலிக்கமுழங்கும்பேயொடுங்கூடிப்போய்
பரவுவானவர்க்காகவார்கடனஞ்சமுண்டபரிசதே. (ஞ)

இயலுமாறெனக்கியம்புமின்னிறைவன்னுமாய்நிறைசெய்கையைக்
கயனெடுங்கண்ணினார்கடாம்பொலிசண்டியூருறைவீரட்டன்
புயல்பொழிற்திழிவானுளோர்களுக்காகவன்றயன்பொய்ச்சிரம்
மயனகவவதரிந்தமற்றதிலானுகந்தவருத்தியே. (சு)

திருந்துதிதாண்டர்கள்செப்புமின்மிகச்செல்வன்றன்னதுதிறமெலாங்
கருந்தடங்கண்ணினார்கடாந்தொழுகண்டியூருறைவீரட்ட
னிருந்தருவ்வரோடாலமீழல்லறமுரைத்தம்மிகுவெம்மையார்
வருந்தவன்சிலையாலமாமதிள்மூன்றுமாட்டியவண்ணமே. (எ)

நாவிரித்தான்றெல்புகழ்பலபேணுவீரிறைநல்குமின்
காவிரித்தடம்புனல்செய்கண்டியூர்வீரட்டத்துறைகண்ணுதல்
கோவிரிப்பயஞ்சாடியகொள்கையுங்கொடிவரைபெற
மாவரைத்தலத்தாலரக்கனவலியைவாட்டியமாண்பதே. (அ)

பெருமையேசரணுகவாழ்வுறுமாந்தர்காளிறைபேசுமின்
கருமையார்பொழில்சூழ்ந்தண்வயற்கண்டியூருறைவீரட்ட
னெருமையாலுயர்மாலுமற்றைமலரவனுணர்ந்தேத்தவே
யருமையாலவருக்குயர்ந்தெரியாகிநின்றவத்தன்மையே. (கூ)

நமரெழுபிறப்பறக்குமாந்தர்கணவிலுமின்னுமைக்கேட்கின்றேன்
கமரழியல்சூழ்ந்தண்புனற்கண்டியூருறைவீரட்டன்
றமரழிக்கெழுசாக்கியச்சமணுதரோதுமதுகொளாத
தமரானவசேத்தவந்தன்றன்னீச்சூலத்திலாய்ந்ததே. (கo)

கருத்தணிப்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகள்வணி
யருத்தணித்திறமடியர்பான்மிகக்கேட்டுகந்தவினுவரை
திருத்தமாந்திகழ்காழிஞானசம்பந்தன்செப்பியசெந்தமி
ழொருத்தராகிலும்பலர்களாகிலுமுரைசெய்வாருயர்ந்தார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீரட்டேசுவரர், தேவியார்-மங்கைநாயகியம்மை.

இறை உத்தரவு.

---

297 திருவாலவாய்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபஞ்சவன்னிவ்வினென்றுரிபரிவெய்திடே
லானமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (க)

ஆகமத்தொடுமந்திரங்களுமைத்தசங்கதபக்கமாப்
பாகத்தீர்த்தொடிதைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா

மாகதக்கரிபோற்றிரிந் தபுரிந் துகின் றுணுமாசுசே
ராகதர்க்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே. (உ)

அத்தகுபொருளுண்டுமில்லையுமென் றுரின் றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமையொழிந் தவரதிலழிந்தெழுந் தகவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந் தசனங்கள்வெட்குறநக்கமே
சித்திரர்க்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே. (ஊ)

ஸுந்துசேனனுமிந் துசேனனுந் தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந் தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே (எ)

கூட்டினுர்கிளியின்விருத்தமுரைத்ததோரொலியின்றெழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களீப்பல்லறங்
காட்டியேவருமாடெலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே. (ரு)

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா
வனகநந்தியர்மதுபொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே. (சு)

பந்தணம்மவையொன் றிலம்பரிவொன் றிலமெனவாசக
மந்தணம்பலபேசுமாசறுசீர்மையின்றியநாயமே
யந்தணம்மருகந்தணம்மதபுத்தணம்மதுசித்தணச்
சிந்தணர்க்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே. (எ)

மேலெனக்கெதிரில்லையென்றவரக்களுர்மிகைசெற்றதிப்
போலியைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடக்கிடுக்கியேபிறர்பின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே. (அ)

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியனடிபோற்றிலார்
சாமவத்தையினர்கள்போறலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாயசகதிக்குநே
ராமவர்க்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே. (கூ)

தங்களுக்குமச்சாக்கியர்க்குந்தரிப்பொணுதகற்சேவடி
யெங்களையகனேத்தொழிந்திடுக்கெமடித்தொருபொய்த்தவம்
பொங்குநூல்வழியன்றியேபுலவோர்களீப்பழிக்கும்பொலா
வங்கதர்க்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே. (கo)

எக்கராமமண்கையருக்கெளியேனலேன் றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்முன்னிவை

தக்கசீர்ப்புகலிக்குமன் றமிழ்நாதன் ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்பதத் தமுரைப்பவர்க்கிடரில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்

இது பாண்டிய ராஜனுடைய சுரப்பீனி தீர்ப்பதற்காகத் திருஞானசம்பந்தசுவாமிக ளெழுந்தருளியிருக்கும்போது பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார் கண்டு சுவா மிகளுடைய திருமேனி மிகுந்த பாலியமாயிருக்கின்றது மன்றித் தனிமையாயு மிருக் கின்றது. சமணர்களோ சரீரதிடமுள்ளவர்களும் பலருமாயிருக்கின்றார்களென்று உட்பரி வுற்றக் குறிப்பினைத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவுள்ளத்திலுணர்ந்து கொண்டு அன்னையே யஞ்சவேண்டுவதில்லை யென்று கட்டளையிட்ட பதிகம்.

ஏழ்தனித் திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கல்லாணீழ லல்லல்தீதவை, நல்லார்பேண ரல்லோகாமே. (க)
கொன்றைசூடி நின்றதேவை, யன்றியொன்று நன்றிலோமே. (உ)
கல்லாகெஞ்சி னில்லான்ஈசன், சொல்லாதாரோ டல்லோநாமே. (ங)
சூற்றுதைத்த நீற்றினீனப், போற்றுவார்க டோற்றினரே. (ச)
காட்டுளாடும் பாட்டுளாணை, நாட்டுளோருந் தேட்டுளாரே. (ஞ)
தக்கன்வேள்விப் பொக்கன்தீர்த்த, மிக்கதேவர் பக்கத்தோமே. (சு)
பெண்ணுணய விண்ணோர்கோவை, நண்ணுதாரை யெண்ணோநாமே. (எ)
தூர்த்தன்வீரக் கீர்த்தகோவை, யார்த்தமாக வேத்தினேமே. (அ)
பூவினுந் தாவினு, நாவினு மோவினரே. (கூ)
மொட்டமணர் கட்டர்தேரர், பிட்டர்சொல்லே விட்டுளோமே. (க0)
அந்தண்காழிப் பந்தன்சொல்லைச், சிந்தைசெய்வோ ருய்ந்துளாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஏழ்திருவேகம்பம்-திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருவார்கச்சித் திருவேகம்பத், தொருவாவென்ன மருவாவினையே. (க)
மதியார்கச்சி நதியேகம்பம், விதியாலேத்தப் பதியாவாறே. (உ)
கலியார்கச்சி மலியேகம்பம், பலியார்போற்ற நலியாவினையே. (ங)
வரமார்கச்சிப் புரமேகம்பம், பரவாவேத்த விரவாவினையே. (ச)
படமார்கச்சி யிடமேகம்பத், தடையாயென்ன வடையாவினையே. (ஞ)
நலமார்கச்சி நிலவேகம்பங், குலவாவேத்தக் கலவாவினையே. (சு)
கிரியின்னுரியன் றிருவேகம்பன், பெரியபுராணன் றெரிசெய்தானே. (எ)
இலங்கையரசைத் தலங்கலூன்று, நலங்கொள்கம்ப னிலங்குசரணே. (அ)
மறையோனரியு மறியாவனலன், நெறியேகம்பங் குறியாற்றொழுமே. (கூ)
பறியாத்தேரர் நெறியில்கச்சிச், செறிகொள்கம்பங் குறுகுவோமே. (க0)
கொச்சைவேந்தன் கச்சிக்கம்ப, மெச்சுஞ்சொல்லே நச்சும்புகழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நிறைவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
குறைவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
சிறைவண்டியாழ்செய்பம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தா
னிறைவனென்றேயுலகெல்லாமேத்தநின்றபெருமானே. (க)

மாகத்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைப்
பாகத்திங்கள்சூடியோராடன்மேயபண்டங்கன்
மேகத்தாடுசோலைசூழ்மிடைசிற்றேமமேவினு
னாகத்தோர்கொளாமையைப்பூண்டவண்ணலல்லனே. (உ)

நெடுவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
கொடுவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
படுவண்டியாழ்செய்பம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தான்
கடுவெங்கூற்றைக்காலினூற்காய்ந்தகடவுளல்லனே. (ங)

கதிரார்திங்கள்வாண்முகமாதர்பாடக்கண்ணுதன்
முதிரார்திங்கள்சூடியோராடன்மேயமுக்கண
னெதிரார்புனலம்புன்சடையெழிலாருஞ்சிற்றேமத்தா
னதிரார்பைங்கணேறுடையாதிமூர்த்தியல்லனே. (ச)

வானூர்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைக்
கூனூர்திங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
றேனூர்வண்டுபண்செயுந்திருவாருஞ்சிற்றேமத்தான்
மானூர்வின்றன்மாதோடுமகிழ்ந்தமைந்தனல்லனே. (ஞ)

பனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடப்பல்சடைக்
குனிவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
றனிவெள்விடையன்புள்ளினத்தாமஞ்சூழ்சிற்றேமத்தான்
முனிவுமூப்புநீக்கியமுக்கண்மூர்த்தியல்லனே. (ட)

இளருந்திங்கள்வாண்முகமாதர்பாடக்கேடிலா
வளருந்திங்கள்சூடியோராடன்மேயமாதவன்
றளிருங்கொம்புமதுவுமார்தாமஞ்சூழ்சிற்றேமத்தா
னெளிரும்வெண்ணூன்மார்பனென்னுளத்துள்ளானல்லனே. (ண)

சூழ்ந்ததிங்கள்வாண்முகமாதர்பாடச்சூழ்சடைப்
போழ்ந்ததிங்கள்சூடியோராடன்மேயபுண்ணியன்
சூழ்ந்தவயற்சிற்றேமத்தான்றடவரையைத்தன்சூளினு
லாழ்ந்தவரக்கனெல்கவன்றடர்த்தவண்ணலல்லனே. (அ)

தனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடத்தாழ்சடைத்
துணிவெண்டிங்கள்சூடியோராடன்மேயதொன்மையா

ணணிவண்ணச்சிற்றேமத்தானலர்மேலக்தளளனு
மணிவண்ணனுமுன்காண்கிலாமழுவாட்செல்வனல்லனே. (சு)

வெள்ளேத்திங்கள்வாண்முகமாதர்பாடவிரிசடைப்
பிள்ளேத்திங்கள்சூடியோராடன்மேயபிஞ்ஞக
னுள்ளத்தார்சிற்றேமத்தானுருவார்புத்தசொப்பில்லாக்
கள்ளத்தாரைத்தனதியுட்கரந்துவைத்தானல்லனே. (கo)

கல்லிலோதமல்குதண்கானல்சூழ்ந்தகாழியா
னல்லவாயவின்றமிழ்கவிலுஞானசம்பந்தன்
செல்வனூர்சிற்றேமத்தைப்பாடல்சீரார்காவினல்
வல்லராகிவாழ்த்துவாரல்லலின்றிவாழ்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பொன்வைத்தநாதர், தேவியார்-அகிலாண்டேசுவரியம்மை.

3o/ சீகாழி-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

சந்தமார்முலேயாடனகூறனர்
வெந்தவெண்பொடியாடியமெய்யனர்
கந்தமார்பொழில்சூழ்தருகாழியு
ளெந்தையாரடியென்மனத்துள்ளவே. (க)

மானிடம்முடையார்வளர்செஞ்சடைத்
தேனிடங்கொளுங்கொன்றையந்தாரினர்
கானிடங்கொளுந்தண்வயற்காழியா
ரூனிடங்கொண்டெனுச்சியினிற்பரே. (உ)

மைகொள்கண்டத்தர்வான்மதிச்சென்னியர்
பைகொள்வாளரவாட்டும்படிறனர்
கைகொண்மான்மறியார்கடற்காழியு
ளையனக்தணர்போற்றிருக்குமே. (கூ)

புற்றினகமும்பூளையும்வன்னியுங்
கற்றையார்சடைவைத்தவர்காழியுட்
பொற்றெடியோடிருந்தவர்பொற்கழ
லுற்றபோதடனேத்தியுணருமே. (ச)

நலியுங்குற்றமுநம்முடனெய்வினை
மெலியுமாறதுவேண்டுதிரேல்வெய்ய
கலிகடக்தகையார்கடற்காழியு
ளலிகொள்செஞ்சடையாரடிபோற்றுமே. (ஞ)

பெண்ணேர்கூறினர்பேயுடனாடுவர்
பண்ணுமேத்திசைபாடியவேடத்தார்
கண்ணுமூன்றுடையார்கடற்காழியு
ளண்ணலாயவடிகள்சரிதையே. (கூ)

பற்றுமானமழுவுமழகுற
முற்றுமூரிரிந்துபலிமுன்னுவர்
கற்றமானன்மறையவர்காழியுட்
பெற்றமேறுகந்தார்பெருமையே. (எ)

எடுத்தவல்லரக்கன்முடிதோளிற
வடர்த்துகந்தருள்செய்தவர்காழியுட்
கொடித்தயங்குநற்கோயிலுளின்புற
விடத்துமாதொடுதாமுமிருப்பரே. (அ)

காலன்றன்னுயிர்வீட்டுகழலடி
மாலுநான்முகன்றானும்வணப்புற
வோலமிட்டுமுன்றேடியுணர்கிலாச்
சீலங்கொண்டவனூர்திகழ்காழியே. (கூ)

உருவமீத்தவர்தாமுமுறுதுவர்
தருவலாடையினருந்தகவிலர்
கருமம்வேண்டுதிரேற்கடற்காழியு
ளொருவன்சேவடியேயடைந்துய்மினே. (கO)

கானல்வந்தலவுங்கடற்காழியுள்
ளீனமில்லியினேயடியேத்திடு
ஞானசம்பந்தன்சொல்லியநற்றமிழ்
மானமார்குமகிழ்ந்தரைசெய்யவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

302 திருக்கழிப்பாலை–பண்–கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வெந்தகுங்கிலியப்புகைவிம்மவே
கந்தநின்றுலவுங்கழிப்பாலையா
ரந்தமும்மலவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே. (க)

வானிலங்கவிளங்குமிளம்பிறை
தானலங்கலுகந்ததலைவனூர்
கானிலங்கவருங்கழிப்பாலையார்
மானலம்மடநோக்குடையாளொடே. (உ)

கொடிகொளேற்றினர்கூற்றையுதைத்தனர்
பொடிகொண்மார்பினிற்பூண்டதோராமையர்
கடிகொள்பூம்பொழில்சூழ்கழிப்பாலையுள்
ளடிகள்செய்வனவார்க்கறிவொண்ணுமே. (கூ)

பண்ணலம்படவண்டறைகொன்றையின்
றண்ணலங்கலுகந்ததலைவனர்
கண்ணலங்கவருங்கழிப்பாலையுள்
ளண்ணலெங்கடவுள்ளவனல்லனே. (ச)

ஏரினூருலகத்திமையோரொடும்
பாரினூருடனேபரவப்படுங்
காரினார்பொழில்சூழ்கழிப்பாலையெஞ்
சீரினார்கழலேசிக்தைசெய்மினே. (டு)

துள்ளுமான்மறியங்கையிலேந்தியூர்
கொள்வனூரிடுவெண்டலையிற்பலி
கள்வனூருறையுங்கழிப்பாலையை
யுள்ளுவார்வினையாயினவோயுமே. (சு)

மண்ணினுர்மலிசெல்வமும்வானமு
மெண்ணினீரினிதேத்தமின்பாகமும்
பெண்ணினூர்பிறைநெற்றியோடுற்றமுக்
கண்ணினூருறையுங்கழிப்பாலையே. (எ)

இலங்கைமன்னனையீரைந்திரட்டிதோ
டிலங்கவூன்றியதூமழுவாளினூர்
கலங்கள்வந்தலவுங்கழிப்பாலையை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (அ)

ஆட்சியாலலராஞெடுமாலுமாய்த்
தாட்சியாலறியாததளர்ந்தனர்
காட்சியாலறியான்கழிப்பாலையை
மாட்சியாற்றொழுவார்வினைமாயுமே. (கூ)

செய்யதண்டுவராடையினூெடு
மெய்யின்மாசுபிறங்கியதீலராக்
கையர்கேண்மையனூகழிப்பாலையெம்
மையன்சேவடியேயடைந்தய்மினே. (கo)

அந்தண்காழியருமறைஞானசம்
பந்தன்பாய்புனல்சூழ்கழிப்பாலையைச்
சிந்தையாற்சொன்னசெந்தமிழ்வல்லவர்
மூந்திவானுலகாடன்முறைமையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-சச.

3o3 திருவாரூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமாயுலகாதியுமாயினன்
வெந்தவெண்பொடிப்பூசியவேதியன்
சிந்தையேபுகுந்தான்றிருவாரூரெம்
மெந்தைதானெனையேன்றுகொளுங்கொலோ. (க)

கருத்தனேகருதார்புரமூன்றெய்த
வொருத்தனேயுமையாளொருகூறனே
திருத்தனேதிருவாரூரெந்திவண்ண
வருத்தவென்னெனையஞ்சலென்னுததே. (உ)

மறையன்மாமுனிவன்மருவார்புர
மிறையின்மாத்திரையில்லெரியூட்டினன்
சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூரெம்
மிறைவன்றானெனையேன்றுகொளுங்கொலோ. (ங)

பல்லிலோடுகையேந்திப்பலிதிரிக்
தெல்லிவந்திடுகாட்டெரியாடுவான்
செல்வமல்கியதென்றிருவாரூரா
னல்லதீர்த்தெனையஞ்சலெனுங்கொலோ. (ச)

குருந்தமேறிக்கொடிவிடுமாதவி
விரிந்தலர்ந்தவிரைகமழ்தேன்கொன்றை
திருந்துமாடங்கள்சூழ்திருவாரூரான்
வருந்துப்போழ்தெனைவாடலெனுங்கொலோ. (ஞ)

வார்கொண்மென்முலையாளொருபாகமா
வூர்களாரிடுபிச்சைகொளுத்தமன்
சீர்கொண்மாடங்கள்சூழ்திருவாரூரா
னூர்கணுவெனையஞ்சலெனுங்கொலோ. (ட)

வளைக்கைமங்கைநல்லாளோர்பாகமாத்
துளைக்கையானைத்தயர்படப்போர்த்தவன்
றிளைக்குந்தண்புனல்சூழ்திருவாரூரா
னினைக்கும்போழ்தெனையேன்றுகொளுங்கொலோ. (ண)

இலங்கைமன்னனிருபதுதோளிறக்
கலங்கக்கால்விரலாற்கடைக்கண்டவன்
வலங்கொண்மாமதில்சூழ்திருவாரூரா
னலங்கற்கெனையஞ்சலெனுங்கொலோ. (அ)

நெடியமாலும்பிரமனுநேர்கிலாப்
படியவன்பனிமாமதிச்சென்னியான்

செடிகணீக்கியதென் றிருவாரூரெம்
மடிகடானெனையஞ்சலெனுங்கொலோ. (கூ)

மாசுமெய்யினர்வண்டுவசாடைகொள்
காசைபோர்க்குங்கலதிகள்சொற்கொளேற்
றேசமல்கியதென் றிருவாரூரெம்
மீசன்றானெனையேன்றுகொளுங்கொலோ. (கo)

வன்னிகொன்றைமதியொடுகூவிளஞ்
சென்னிவைத்தபிரான்றிருவாரூரை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்வாய்
பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

304 திருக்கருகாவூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திலங்குமுறுவல்லுமையஞ்சவே
மத்தயானைமறுகவ்வுரிவாங்கியக்
கத்தைபோர்த்தகடவுள்கருகாவூரெம்
மத்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (க)

விழுதவல்லசடையான்றனீயுள்குவார்
கழுதமூழலகலாததோர்செல்வமாங்
கழுதமுல்லைகமழ்கின்றகருகாவூ
ரமுதர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (உ)

பழகவல்லசிறுத்தொண்டர்பாவின்னிசை.
குழகரென்றுகுழையாவழையாவருங்
கழல்கொள்பாடலுடையார்கருகாவூரெம்
மழகர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (கூ)

பொடிமெய்பூசிமலர்கொய்துபுனர்ந்தடன்
செடியரல்லாவுள்ளமல்கியசெல்வத்தர்
கடிகொண்முல்லைகமழுங்கருகாவூரெம்
மடிகள்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ச)

மையலின்றிமலர்கொய்துவணங்கிடச்
செய்யவுள்ளமும்மிகநல்கியசெல்வத்தர்
கைதன்முல்லைகமழுங்கருகாவூரெம்
மையர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ஞ)

மாசிறைண்டர்மலர்கொண்டுவணங்கிட
வாசையாரவருணல்கியசெல்வத்தர்

காய்கின றத்தவிடையார்கருகாவூரெம்
மீசர்வண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (சு)

வெந்தநீறுமெய்பூசியவேதியன்
சிந்தைதின் றவருணல்கியசெல்வத்தான்
கந்தமல்வல்கமழுங்கருகாவூரெம்
மெந்தைவண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (எ-அ)

பண்ணினேர்மொழியாளோர்பாகனர்
மண்ணுகோலம்முடையம்மலராளெடுங்
கண்ணனேடவரியார்கருகாவூரெம்
மண்ணல்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (சு)

போர்த்தமெய்யினர்போதழல்வார்கள்சொற்
றீர்த்தமென்றுதெளிவீர்தெளியேன்மின்
கார்த்தண்முல்லைகமழுங்கருகாவூரெம்
மார்த்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (கo)

கலவமஞ்ஞையுலவுங்கருகாவூர்
நிலவுபாடலுடையான்றன்னீள்கழல்
குலவுஞானசம்பந்தனசெந்தமிழ்
சொலவல்லாரவர்தொல்வினை தீருமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-முல்லைவனேசுவரர், தேவியார்-கரும்பனையாளம்மை.

---

305 திருவாலவாய்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துட
னூட்டமூன்றுடையாயுரைசெய்வனுன்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. (க)

மத்தயானையினீருரிமூடிய
வத்தனேயணியாலவாயாய்பணி
பொய்த்தவன்றலவேடத்தராஞ்சமண்
சித்தரையழிக்கத்திருவுள்ளமே. (உ)

மண்ணகத்திலும்வானிலுமெங்குமார்
திண்ணகத்திருவாலவாயாய்ருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியபேயமண்
டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. (ங)

ஓதியோத்தறியாவமணுதரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே
நீதியாகநினைந்தருள்செய்திடே. (சு)

வையமார்புகழாயடியார்தொழுஞ்
செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப்
பையவாதுசெயத்திருவுள்ளமே. (டு)

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய
தேறலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச்
சீறிவாதுசெயத்திருவுள்ளமே. (சு)

பண்டடித்தவத்தார்பயில்வாற்றெழுந்
தொண்டருக்கெளியாய்திருவாலவா
யண்டனேயமண்கையரைவாதினிற்
செண்டடித்தமுறத்திருவுள்ளமே. (எ)

அரக்கன்றன்கிரியேற்றவன்றன்முடிச்
செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக்
கரக்கவாதுசெயத்திருவுள்ளமே. (அ)

மாலுநான்முகனும்மறியாநெறி
யாலவாயுறையுமண்ணலேபணி
மேலைவீடுணராவெற்றரையரை
சாலவாதுசெயத்திருவுள்ளமே. (கூ)

கழிக்கறைப்பமீன்கவர்வாரம
ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய்
மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. (கம)

செந்தெனுமுரலுந்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமணுசரச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்
பந்தன்சொற்பகரும்பழிநீங்குமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கையாரழலன்னமழகார்சடைக்
கங்கையான்கடவுள்ளிடமேலிய
மங்கையானுறையும்மழபாடியைத்
தங்கையாற்றொழுவார்தகவாளரே. (க)

வீதியுமாம்விளைவாமொழியார்த்ததோர்
கதியுமாங்கிவாம்வசியாற்றமா
மதியுமாம்வலியாமழபாடியு
ணிதியந்தோய்சடைநாதனற்பாதமே. (உ)

முழவினுன்முதுகாமுறைபேய்க்கணக்
குழவினுன்குலவுங்கையிலேந்திய
மழவினுனுறையும்மழபாடியைத்
தொழுமினுந்துயரானவைதீரவே. (ங)

கலையினுன்மறையாங்கதியாகிய
மலையினுன்மருவார்புரமூன்றெய்த
சிலையினுன்சேர்திருமழபாடியைத்
தலையினல்வணங்கத்தவமாகுமே. (ச)

நல்வினைப்பயனுன்மறையின்பொருள்
கல்வியாயகருத்தனுருத்திரன்
செல்வன்மேயதிருமழபாடியைப்
புல்கியேத்தமதுபுகழாகுமே. (ஞ)

நீடினருலகுக்குயிராய்நின்று
ஆடினனெரிகாளிடமாநடம்
பாடினரிசைமாமழபாடியை
நாடினர்க்கில்லைநல்குரவானவே. (ட)

மின்னினரிடையாளொருபாகமாய்
மன்னினனுறைமாமழபாடியைப்
பன்னினரிசையால்வழிபாடுசெய்
துன்னினர்விண்ணாயினவோயுமே. (ண)

தென்னிலங்கையர்மன்னன்செழுவரை
தன்னிலங்கவடர்த்தருள்செய்தவன்
மன்னிலங்கியமாமழபாடியை
புன்னிலங்கவுமுபிணியில்லையே. (அ)

திருவினயகனுஞ்செழுந்தாமரை
மருவினனுந்தொழுதத்தமன்மாண்பம
ருருவினனுறையும்மழபாடியைப்
பரவினர்வினபற்றறுப்பார்களே. (கூ)

நலியுநன்றறியாச்சமணசாக்கியர்
வலியசொல்லினுமாமழபாடியு
ளொலிசெய்வார்கழலான்றிறமுள்கவே
மெலியுநம்முடன்மேல்வினயானவே. (கo)

மந்தமுந்துபொழின்மழபாடியு
ளெந்தைசந்தமினிதகந்தேத்துவான்
கந்தமார்கடற்காழியுண்ஞானசம்
பந்தன்மாலைவல்லார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

307 நமச்சிவாயத்திருப்பதிகம்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பதும்
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதநாமநமச்சிவாயவே. (க)

நம்புவார்நமர்நாமநவிற்றினல்
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலதம்மூலகுக்கெலா
நம்பனுநமச்சிவாயவே. (உ)

நெக்குளார்வமிகப்பெருகிக்கினைந்
தக்குமாலுடன்கையிலெண்ணுவார்
தக்கவானவராத்தகுவிப்பது
நக்கனுநமச்சிவாயவே. (ங)

இயமன்தூதருமஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதவல்லார்தமைநண்ணினு
னியமந்தானினவார்க்கினியானெற்றி
நயனனுநமச்சிவாயவே. (ச)

கொல்வாரேறுங்குணம்பலநன்மைக
ளில்லாரேனுமியம்புவராயிடி
லெல்லாத்தீங்கையுநீங்குவரென்பரா
னல்லார்நாமநமச்சிவாயவே. (ஞ)

மந்தரம்மன்னபாவங்கண்மேவிய
பந்தணையவர்தாமும்பகர்வரேற்
சிந்தம்வல்வினைசெல்வமுமல்குமா
னந்திநாமநமச்சிவாயவே. (சு)

நரகமேழ்புகநாடினராயினு
மூரைசெய்வாயினராயினுருத்திரர்
கிரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனுமநமச்சிவாயவே. (எ)

இலங்கைமன்னனெடுத்தவடக்கன்மேற்
றலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொணுமநமச்சிவாயவே. (அ)

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலர்ந்தவ
ரோதுநாமநமச்சிவாயவே. (கூ)

கஞ்சிமண்டையர்கையி லுண்கையர்கள்
வெஞ்சொண்மிண்டர்விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுண்கண்டனமச்சிவாயவே. (கo)

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மிழற்றேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-சை.

---

308 திருத்தண்டலைநீணெறி-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

விரும்புந்திங்களுங்கங்கையும்விம்மவே
சுரும்புந்தும்பியுஞ்சூழ்சடையார்க்கிடங்
கரும்புஞ்செங்கெலுங்காய்கமுகின்வள
நெருங்குந்தண்டலைநீணெறிகாண்மினே. (க)

இகழுங்காலனிதயத்துமென்னுளந்
திகழுஞ்சேவடியான்றிருந்தும்மிடம்
புகழும்பூமகளும்புணர்பூசுரர்
நிகழுந்தண்டலைநீணெறிகாண்மினே. (உ)

பரந்தநீலப்படரிரிவல்விடங்
கரந்தகண்டத்தினன்கருதும்மிடஞ்
சுரந்தமேதித்துறைபடிந்தோடையி
னிரந்ததண்டலைநீணெறிகாண்மினே. (கூ)

தவந்தவென்புந்தவளப்பொடியுமே
யுவந்தமேனியினனுறையும்மிடஞ்
சிவந்தபொன்னுஞ்செழுந்தரளங்களு
நிவந்ததண்டலைநீணெறிகாண்மினே. (சு-நி-சு-எ)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
லிலங்கலில்லடர்த்தான்விரும்புமிடஞ்
சலங்கொளிப்பிதரளமுஞ்சங்கமு
நிலங்கொடண்டலைநீணெறிகாண்மினே. (அ)

கருவருந்தியினன்முகன்கண்ணனென்
றிருவருந்தெரியாவொருவன்னிடஞ்
செருவருந்தியசெம்பியன்கோச்செங்க
ணிருபர்தண்டலைநீணெறிகாண்மினே (கூ)

கலவுசீவரத்தார்கையிலுண்பவர்
குலவமாட்டாக்குழகனுறைவிடஞ்
சுலவுமாமதிலுஞ்சுதைமாடமு
நிலவுந்தண்டலைநீணெறிகாண்மினே. (கo)

நீற்றார்தண்டலைநீணெறிநாதனைத்
தோற்றுமேன்மையர்தோணிபுரத்திறை
சாற்றினானசம்பந்தன்தமிழ்வல்லார்
மாற்றில்செல்வர்மறப்பர்பிறப்பையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழாநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நீணெறிநாதேசுவரர், தேவியார்-ஞானம்பிகையம்மை.

3o7 திருவாலவாய்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய
வையனேயஞ்சலென்றருள்செய்யெனப்
பெய்யராமமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே. (க)

சித்தனேதிருவாலவாய்மேவிய
வத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை

யெத்தராமமணர்கொளுவுஞ்சுடர்
பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. (உ)

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச்
சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே. (ங)

சிட்டனேதிருவாலவாய்மேவிய
வட்டமூர்த்தியனேயஞ்சலென்றருள்
அட்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பட்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (ச)

நண்ணலார்புரமூன்றெரியாலவா
யண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
எண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பண்ணியற்றமிழ்ப்பாண்டியற்காகவே. (ஞ)

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையு
மஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர்
பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. (ட)

செங்கண்வெள்விடையாய்திருவாலவா
யங்கணவஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல்
பங்கமிறென்னன்பாண்டியற்காகவே. (ண)

தூர்த்தன்வீரந்தொலைத்தருளாலவா
யார்த்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யேத்திலாவமணர்கொளுவுஞ்சுடர்
பார்த்திபன்றென்னன்பாண்டியற்காகவே. (அ)

தாவினனயன்முனறியாவகை
மேவினாய்திருவாலவாயாயரு
ளீவிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பாவினன்றென்னன்பாண்டியற்காகவே. (ஈ)

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய
வண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (கo)

அப்பனலவாதியருளினல்
லெப்பர்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பளாணசம்பந்தனுரைபத்திஞ்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்

310 திருவாலவாய்-திருவிராகம்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவகின்றபண்பனே
காடலாலவாயிலாய்கவாளிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (க)

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
வொட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலா
யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. (உ)

குற்றநீருணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிராணநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றதூற்கருத்துநீபருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்தமுன்னுரைப்பதென்முகம்மனே. (ங)

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வநீமுழங்கழ
லுதிரவீசியாடுவாயமுகனீபுயங்கனீ
மதுரநீமணாளனீமதுரையாலவாயிலாய்
சதுரனீசதுமுகன்கபாலமேந்துசம்புவே. (ச)

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனையதொண்டுசெய்துபண்டுமின்முமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. (ஞ)

பொன்றயங்கிலங்கொளிர்ந்தலர்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினுங்கூடலாலவாயிலாய்
கின்றயங்கியாடலேகினைப்பதென்னியமமே. (ட)

ஆதியந்தமாயினுயாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினுய்சோதியுள்ளேசர்சோதியாய்-
கீதம்வந்தவர்ய்மையாற்கினர்தருக்கினர்க்கலர்
லோதிவந்தவாய்மையாலுணர்ந்தரைக்கலாருமே. (ண)

கறையிலங்குகண்டனேகருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனீத்தோளடாவூன்றினுய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினனினைப்பதேநியமமே. (அ)

தாவணவ்விடையினுய்தலைமையாகதாடொறுங்
கோவணவ்வுடையினுய்கூடலாலவாயிலாய்

திவணம்மலர்மிசைத்திசைமுகன் னுமாலுமின்
றாவணமளக்கிலார் ளக்கமெய் துவார்களே. (கூ)

தேற்றமில்வீணைத்தொழிற்றேரருஞ்சமணரும்
போற்றிசைத்துனின்கழற்புகழ்ந் துபுண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினுக்கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகினின் றதென்னநன்மையே. (கஅ)

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினு
லாயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாயதேவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

௩॥ திருவானைக்கா-திருவிராகம்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வானைக்காவல்வெண்மதிமல்குபுல்குவார்சடைத்
தேனைக்காவிலின்மொழித்தேவிபாகமாயினு
ஞானைக்காவிலண்ணலேயபயமாகவாழ்பவ
ரோனைக்காவல்வேண்டுவார்க்கேதுமேதமில்லையே. (க)

சேறுபட்டதண்வயற்சென்றுசென்றுசேணுலா
வாறுபட்டதுண்டுறையானைக்காவிலண்ணலார்
நீறுபட்டமேனியார்நிகரில்பாதமேத்துவார்
வேறுபட்டசிந்தையார்விண்ணிலெண்ணவல்லரே. (உ)

தாரமாயமாதராடனேர்பாகமாயினு
னீரமாயபுன்சடையேற்றதிங்கள்சூடினு
ராரமாயமார்புடையானைக்காவிலண்ணலே
வாரமாய்வணங்குவார்வல்வினைகண்மாயுமே. (ங)

விண்ணினண்ணுபுல்கியவீரமாயமால்விடைச்
சுண்ணவெண்ணீறுடினுஞ்சூலமேந்துதகையினு
ணண்ணல்கண்ணேர்மூன்றினுனைக்காவுகைதொழ
வெண்ணும்வண்ணம்வல்லவர்க்கேதமொன்றுமில்லையே. (ச)

வெய்யபாவங்கைவிடவேண்டுவீர்களாண்டசீர்
மைகொள்கண்டன்வெய்யதீமாலையாடுகாதலான்
கொய்யவிண்டநாண்மலர்க்கொன்றைதுன்றுசென்னியெம்
மையன்மேயபொய்கைசூழானைக்காவுசேர்மினே. (ஞ)

நாணுமோர்வுசார்வுமுன்னகையுமுட்குநன்மையும்
பேணுறுதசெல்வமும்பேசநின்றபெற்றியா

ஞணும்பெண் ணுமாகியவானேக்காவிலண்ணலார்
காணுங்கண் ணுமூன் றுடைக்கைமிடறனல்லனே. (சு)

கூரும்மாலுநண்பகற்கூடிவல்லதொண்டர்கள்
பேருமூருஞ்செல்வமும்பேசின்றபெற்றியான்
பாரும்விண் ணுங்கைதொழப்பாயுங்கங்கைசெஞ்சடை
யாரனீரோடேன்றினுனேக்காவுசேர்மினே. (எ)

பொன்னமல்குதாமரைப்போதுதாவண்டினம்
மன்னமல்குதண்டுறையானேக்காவிலண்ணலைப்
பன்னவல்லகான்மறைபாடவல்லதன்மையோர்
முன்னவல்லர்மொய்கழறுன்னவல்லர்விண்ணையே. (அ)

ஊனெடுண்டனன்றெனவூனெடுண்டபீதென
வானதொண்டரன்பினற்பேசின்றதன்மையான்
வானெடொன்முசூடினுன்வாய்மையாகமன்னினின்
ரூனெடுஞ்சுமாடினுனேக்காவுசேர்மினே. (கூ)

கையிலுண்ணுங்கையருங்கடுக்கடின்கழுக்களு
மெய்யைப்போர்க்கும்பொய்பரும்வேதகெறியையறிகிலார்
தையல்பாகமாயினுன்றழலதுருவத்தானெங்க
ளையன்மேயபொய்கைசூழானேக்காவுசேர்மினே. (கo)

ஊழிபூழிவையகத்துயிர்கடோற்றும்வானெடும்
ஆழியானுங்காண்கிலாவானேக்காவிலண்ணலைக்
காழிஞானசம்பந்தன்கருதிச்சொன்னபத்திவை
வாழியாகக்கற்பவர்வல்வினைகண்மாய்மே. (கக)

திருச்சிற்றம்பலம்.

3/2 திருப்பாசுரம்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனுமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. (க)

அரியகாட்சியராய்த்தமதங்கைசே
ரெரியமேறுகந்தேறுவர்கண்டமூங்
கரியர்காடுறைவாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர்பெற்றியே. (உ)

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே
தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா
லெந்தையாரவரெவ்வகையார்கொலோ. (ங)

ஆட் பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்புங்
கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெய்தை
தாட்பால்வணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார். (சு)

னதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கள்மிக்கீரிறையேவந் தசார்மின்களே. (டு)

ஆடும்மெனவும்மருங்கூற்றமுதைத்தவேதம்
பாடும்மெனவும்புகழல்லதுபாவநீங்கக்
கேடும்பிறப்பும்மறுக்கும்மெனக்கேட்டீராகி
னுடுந்திறத்தார்க்கருளல்லதுநாட்டலாமே. (சு)

கடிசேர்ந்தபோதமலரானகைக்கொண்டுநல்ல
படிசேர்ந்தபால்கொண்டங்காட்டிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலையறவெட்டிடமுக்கண்மூர்த்தி
யடிசேர்ந்தவண்ணம்மறிவார்சொலக்கேட்டுமன்றே. (எ)

வேதம்முதல்வன்முதலாகவீளங்கிவையம்
மேதப்படாமேயுலகத்தவரேத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலேமுதலாப்பொலிந்த
சூதன்னெலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே. (அ)

பாராழிவட்டம்பகையானலிந்தாட்டவாடிப்
பேராழியானகிடர்கண்டருள்செய்தல்பேணி
நீராழிவிட்டேறிநெஞ்சிடங்கொண்டவர்க்குப்
போராழியீந்தபுகழும்புகழ்றதன்றே. (கூ)

மாலாயவனும்மறைவல்லநான்முகனும்
பாலாயதேவர்பகரில்லமுதூட்டல்பேணிக்
காலாயமுந்நீர்கடைந்தார்க்கரிதாயெழுந்த
வாலாலமுண்டங்கமரர்க்கருள்செய்ததாமே. (கo)

அற்றன்றியந்தண்மதரைத்தொகையாக்கினுஞ்
தெற்றென்றுதெய்வந்தெளியார்க்கரைக்கோலைதெண்ணீர்ப்
பற்றின்றிப்பாங்கெதிர்விரவும்பண்புநோக்கிற்
பெற்றென்றுயர்த்தபெருமான்பெருமானுமன்றே. (கக)

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல
வெல்லார்களும்பரவுமீசனியேத்துபாடல்
பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானேருலகாளவும்வல்லர்என்றே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

313 திருவான்மியூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

விரையார்கொன்றையினுய்விடமுண்டமிடற்றினனே
யுரையார்பல்புகழாயுமைங்கையோர்பங்குடையாய்
திரையார்தெண்கடல்சூழ்திருவான்மீயூருறையும்
மரையாவுன்னியல்லாலடையாதெனதாதரவே. (க)

இடியாரேறுடையாயிமையோர்தம்மணிமுடியாய்
கொடியார்மாமதிபோடாவம்மலர்க்கொன்றையினுய்
செடியார்மாதவிசூழ்திருவான்மீயூருறையும்
படிகளுன்னியல்லாலடையாதெனதாதரவே. (உ)

கையார்வெண்மழுவாகனல்போற்றிருமேனியனே
மையாரொண்கணல்லாளுமையாள்வளர்மார்பினனே
செய்யார்செங்கயல்பாய்திருவான்மீயூருறையு
மையாவுன்னியல்லாலடையாதெனதாதரவே. (ங)

பொன்போலுஞ்சடைமேற்புனலுங்கியபுண்ணியனே
மின்போலும்புரிநூல்விடையேறியவேதியனே
தென்பால்வையமெலாங்கழுங்திருவான்மிதன்னி
லன்பாவுன்னியல்லாலடையாதெனதாதரவே. (ச)

கண்ணுருந்தலாய்கதிர்சூழொளிமேனியின்மே
லெண்ணுர்வெண்பொடிநீறணிவாயெழில்வார்பொழில்சூழ்
திண்ணுர்வண்புரிசைத்திருவான்மீயூருறையு
மண்ணுவுன்னியல்லாலடையாதெனதாதரவே. (ஞ)

நீதிநின்னியல்லாலெறியாதுநினைந்தறியே
னேதிகான்மறைகண்மறையோன்றலையொன்றினையுஞ்
சேதிசேதமில்லாத்திருவான்மீயூருறையு
மாதியுன்னியல்லாலடையாதெனதாதரவே. (ட)

வானுர்மாமதிசேர்சடையாய்வரைபோலவருங்
காளராணியின்ரேழுரித்தாய்கறைமர்மிடற்றாய்
தேனுர்சோலைகள்சூழ்திருவான்மீயூருறையும்
மானுயுன்னியல்லாலடையாதெனதாதரவே. (எ)

பொறிவாய்நாகணையானெடுபூமிசைமேயவனு
நெறியார்நீள்கழன்மேன்முடிகாண்பரிதாயவனே
செறியார்மாமதில்சூழ்திருவான்மீயூருறையு
மறிவேயுன்னியல்லாலடையாதெனதாதரவே. (அ-கூ)

குண்டாடுஞ்சமணர்கொடுஞ்சாக்கியரென்றிவர்கள்
கண்டார்காரணங்கள்கருதாதவர்பேசுகின்றுய்
திண்டேர்வீதியதார்திருவான்மீயூருறையு
மண்டாவுண்ணியல்லாலடையாதெனதாதரவே. (கஅ)

கன்றுருங்கமுகின்வயல்சூழ்தருகாழிதனி
னன்றுனபுகழான்மிகுஞானசம்பந்தனுரை
சென்றுரைத்தம்மிடர்தீர்திருவான்மீயூரதன்மேற்
குன்றுதேத்தவல்லார்கொடுவல்வினைபோயறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-இஇ.

---

314. திருப்பிரமபுரம்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இறையவனீசனெந்தையிமையோர்தொழுதேத்தநின்ற
கறையணிகண்டன்வெண்டோடணிகாதினன்காலத்தன்று
மறைமொழிவாய்மையினுன்மலையாளொடுமன்னுசென்னிப்
பிறையணிசெஞ்சடையான்பிரமாபுரம்பேணுமினே. (க)

சடையினன்சாமவேதன்சரிகோவணவன்மழுவாட்
படையினன்பாய்புலித்தோலுடையான்மறைபல்கலீநூ
லுடையவனூனமில்லியுடனுயுமைநங்கையென்னும்
பெடையொடும்பேணுமிடம்பிரமாபுரம்பேணுமினே. (உ)

மாணியைநாகோலனுயிர்மாய்ந்தறச்செற்றுக்காளி
காணியவாடல்கொண்டான்கலந்தூர்வழிசென்றுபிச்சை
யூணியல்வாசகக்கொண்டங்குடனேயுறைகங்கையோடும்
பேணியகோயின்மன்னும்பிரமாபுரம்பேணுமினே. (ஙு)

பாரிடம்விண்ணுமெங்கும்பயின்றுசுபரந்தமீண்டப்
பேரிடர்த்தேவர்கணம்பெருமானிதுகாவெனவு
மோரிடத்தேதகரந்தங்குமைநங்கையொடும்முடனே
பேரிடமாகக்கொண்டபிரமாபுரம்பேணுமினே. (ச)

நச்சரவச்சடைமேனளிர்திங்களுமொன்றவைத்தங்
கச்சமெழிலிடைமேலழகார்மழுவேந்திநல்ல
விச்சைபகர்ந்துமிகவிடுமின்பலியென்றுநாளும்
பிச்சைகொளாண்ணனண்ணும்பிரமாபுரம்பேணுமினே. (ஞ)

பெற்றவன்மூப்புரங்கள்பிழையாவண்ணம்வாளியினுற்
செற்றவன்செஞ்சடையிற்றிகழ்தங்கைதனைத்தரித்திட்
டொற்றைவிடையினனுமைநங்கையொடும்முடனே
பெற்றிமையாலிருந்தான்பிரமாபுரம்பேணுமினே. (ரு)

வேதமலிந்தவொலிவிழவின்ஞெலிவீணையொலி
கீதமலிந்தடனேகிளரத்திகழ்பௌவமறை
யோதமலிந்தயர்வான்முகடேறவொண்மால்வரையான்
பேதையொடும்பிரிந்தான்பிரமாபுரம்பேணுமினே. (எ)

இமையவரஞ்சியோடவெதிர்வாரவர்தம்மையின்றி
யமைதருவல்லரக்கன்னடர்த்தமலையன்றெடுப்பக்
குமையதுசெய்தபாடக்கொற்றவாளொடுநாள்கொடுத்திட்
டுமையொடிருந்தபிரான்பிரமாபுரமுன்னுமினே. (அ)

ஞாலமளித்தவனும்மரியும்மடியோடுமுடி
காலம்பலசெலவுங்கண்டிலாமையினற்கதறி
யேலமிடவருளியுமைநங்கையொடும்முடனு
யேலவிருந்தபிரான்பிரமாபுரமேத்துமினே. (கூ)

துவருறுமாடையினர்தொக்கபீலியர் * நக்கரையர
ரவரவர்தன்மைகள்கண்டணுகேன்மின்னருள்பெறுவீர்
சுவருறுசிந்தையொன்றிக்கழிகாலமெல்லாம்படைத்த
விவரவரென்றிறைஞ்சிப்பிரமாபுரமேத்துமினே. (கூ)

உரைதருநான்மறையோர்புகழ்ந்தேத்தவொண்மாதினெடும்
வரையெனவீற்றிருந்தான்மலிகின்றபிரமாபுரத்
தரைசினையேத்தவல்லவணிசம்பந்தன்பத்தும்வல்லார்
விரைதருவிண்ணுலகம்மெதிர்கொள்ளவிரும்புவரே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

3/5 திருவொற்றியூர்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

விடையவன்விண்ணுமண்ணுந்தொழுகின்றவன்வெண்மழுவாட்
படையவன்பாய்புலித்தோலுடைகோவணம்பல்கரந்தைச்
சடையவன்சாமவேதன்சதிதங்கியசங்கவெண்டோ
டுடையவனூனமில்லியுறையும்மிடமொற்றியூரே. (க)

பாரிடம்பாணிசெய்யப்பறைக்கட்செறுபல்கணப்பேய்
சிரொடும்பாடலாடலிலையஞ்சிதையாதகொள்கைத்
தாரிடும்போர்விடையன்றலைவன்றலையேகலனு
வூரிடும்பிச்சைகொள்வானுறையும்மிடமொற்றியூரே. (உ)

வினிதருநீருமண்ணும்விசும்போடனல்காலுமாகி
யனிதருபேரருளாஞகியவாதிமூர்த்தி
களிதருவண்டுபண்செய்கமழ்கொன்றையினேடணிந்த
வொளிதருவெண்பிறையானுறையும்மிடமொற்றியூரே. (கூ)

* நக்கரையரென்பது-நிருவாணமான அரையினையுடையவர்கள் சைவசமயத்தவர்கள்.

அரவமேகச்சதாகவசைத்தானலர்கொன்றையந்தார்
விரவிவெண்ணூல்கிடந்தவிரையார்வரைமார்பனெந்தை
பரவுவார்பாவமெல்லாம்பறைத்துப்படர்புன்சடைமே
லுரவுநீரேற்றபெம்மானுறையும்மிடமொற்றியூரே. (அ)

வில்லினுர்வெய்யபாவம்விதியாலருள்செய்தநல்ல
பலினுர்மொந்தைதாளந்தகுணிச்சமும்பாணியாலே
யலினுல்வீசிகீர்கொண்டடிமேலலரிட்டுமுட்டா
தலகினுரேத்தகின்றவுறையும்மிடமொற்றியூரே. (இ)

கமையொடுகின்றசீரான்கழலுஞ்சிலம்புமொலிப்பச்
சுமையொடுமேலும்வைத்தான்விரிகொன்றையுஞ்சோமனீயு
மமைவொடுகீண்டதிண்டோளழகாயபொற்றேடிலங்க
வுமையொடுங்கூடகின்றவுறையும்மிடமொற்றியூரே. (உ)

நன்றியால்வாழ்வதுள்ளம்முலகுக்கொருநன்மையாலே!
கன்றினர்மும்மதிலுங்கருமால்வரையேயெய்யாப்
பொன்றினர்வார்சுடலைப்பொடிநீறணிக்தாழலம்
பொன்றினலெய்தபெம்மானுறையும்மிடமொற்றியூரே. (எ)

பெற்றியாற்பித்தனெப்பான்பெருமான்கருமானுரிதோல்
சுற்றியான்சுத்திசூலஞ்சுடர்க்கண்ணுதன்மேல்விளங்கத்
தெற்றியாற்செற்றரக்கன்னுடலைச்செழுமால்வரைக்கீ
ழொற்றியான்மூற்றுமாள்வானுறையும்மிடமொற்றியூரே. (அ)

திருவினர்போதினுனுந்திருமாலுமோர்தெய்வமுன்னித்
தெரிவினற்காணமாட்டார்திகழ்சேவடிசிக்தைசெய்த
பரவினர்பாவமெல்லாம்பறையப்படர்பேரொளியேய
டொருவனுய்கின்றபெம்மானுறையும்மிடமொற்றியூரே. (சு)

தோகையம்பீலிகொள்வார்தவர்க்கூறைகள்போர்த்தழல்வா
ராகமசெல்வனுரையலர்தூற்றுதல்காரணமாக
கூகையம்மாக்கள்சொல்லக்குறிக்கொள்ளன்மினேழுலகு
மோகைதக்தாளவல்லானுறையும்மிடமொற்றியூரே. (கo)

ஒண்பிறைமல்குசென்னியிறைவன்னுறையொற்றியூரைச்
சண்பையர்தந்தலைவன்றமிண்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனை பாடல்பத்தும்பரவிப்பணிந்தேத்தவல்லார்
விண்புனை மேலுலகம்விருப்பெய்துவர்வீடெளிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–மாணிக்கத்தியாகர், தேவியார்–வடிவுடையம்மை.

316 திருச்சாத்தமங்கை-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலர்க்கொன்றைமாலேதிகழ்க்குமதிசென்னிவைத்தீ
நிருமலர்க்கண்ணிதன்னேடுடனுவதுமேற்பதொன்றே
பெருமலர்ச்சோலைமேகமுருஞ்சும்பெருஞ்சாத்தமங்கை
யருமலராதிமூர்த்தியவர்தியமர்ந்தவனே. (க)

பொடிதீணப்பூசுமார்பிற்புரிநூலொருபாற்பொருந்தக்
கொடியனசாயலாளேரிடனுவ துங்கூடிவதே
கடிமணமல்கிநாளுங்கமழும்பொழிற்சாத்தமங்கை
யடிகணக்கன்பரவவயவர்தியமர்ந்தவனே. (உ)

நானலந்தங்குமார்பினுகர்நீணிர்தேதுதேறி
மானனநோக்கிதன்னேடுடனுவதுமாண்பதுவே
தானலங்கொண்டுமேகந்தவழும்பொழிற்சாத்தமங்கை
யானலந்தேய்த்தவெம்மானயவர்தியமர்ந்தவனே. (ரு)

மற்றவின்மால்வரையாமதிலெய்துவெண்ணீறுபூசிப்
புற்றரவல்குலாளோடுடனுவதும்பொற்பதுவே
கற்றவர்சாத்தமங்கைகர்கைதொழச்செய்தபாவம்
மற்றவர்காளுமேத்தவயவர்தியமர்ந்தவனே. (ச)

வெந்தவெண்ணீறுபூசிவிடையேறியவேதகீதன்
பந்தணவும்விரலாளுடனுவதும்பாங்கதுவே
சந்தமாறங்கமவேதந்தரித்தார்தொழுஞ்சாத்தமங்கை
யந்தமாயாதியாகியயவர்தியமர்ந்தவனே. (ஞ)

வேதமாய்வேள்வியாகிவிளங்கும்பொருள்வீடதாகிச்
சோதியாய்மங்கைபாகங்கிலேதான்சொல்லலாவதொன்றே
சாதியாண்மிக்கசீராற்றகுவார்தொழுஞ்சாத்தமங்கை
யாதியாய்நின்றபெம்மானயவர்தியமர்ந்தவனே. (சு)

இமையமெல்லாமிரியமதிலெய்துவெண்ணீறுபூசி
யுமையையோர்பாகமவைத்தநிலேதானுன்னலாவதொன்றே
சமையமாறங்கம்வேதந்தரித்தார்தொழுஞ்சாத்தமங்கை
யமையவேரேறுஞ்சீரானயவர்தியமர்ந்தவனே. (எ)

பண்ணுலாம்பாடல்வீணேபயில்வாரேனோர்பரமயோகி
விண்ணுலாமால்வரையான்மகள்பாகமும்வேண்டினேயே
தண்ணிலாவெண்மதியந்தவழும்பொழிற்சாத்தமங்கை
யண்ணலாய்நின்றவெம்மானயவர்தியமர்ந்தவனே. (அ)

பேரெழிற்றேளைக்கன்வலிசெற்றதும்பெண்ணேர்பாக
மீரெழிற்கோலமாகியுடனுவதுமேற்பதொன்றே

காரெழில்வண்ணனேடுகனகம்மணியானுங்காணு
வாரழல்வண்ணமங்கையயவந்தியமர்ந்தவனே. (சு)

கங்கையோர்வார்சடைமேலடையப்புடைபேகமழு
மங்கையோடொன்றிகின்றம்மதிதான்சொல்லலாவதொன்றே
சங்கையிலாமறையோரவர்தாந்தொழுசாத்தமங்கை
யங்கையிற்சென்னிவைத்தர்யவந்தியமர்ந்தவனே. (சு0)

மறையினுர்மல்குகாழித்தமிழ்ஞானசம்பந்தன்மன்னு
நிறையினுர்நீலநக்கனெடுமாநகரென்றுதொண்ட
ரறையுமூர்சாத்தமங்கையயவந்திமேலாய்ந்தபத்து
மூறைமையாலேத்தவல்லாரிமையோரிலுமுந்துவரே. (சக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அயவந்திசுவரர், தேவியார்-மலர்க்கணம்பிகையம்மை.
சாத்தமங்கை என்பது ஸ்தலம், அயவந்தி என்பது ஆலயம்.

---

317 திருக்குடமூக்கு-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அரவிரிகோடனீடலணிகாவிரியார்த்தபலே
மரவிரிபோதுமவ்வன்மணமல்லிகைகள்ளவிழுங்
குரவிரிசோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
யிரவிரிதிங்கள்சூடியிருந்தானவனெம்மிறையே. (க)

ஒத்தரவங்களோடுமொலிகாவிரியார்த்தபலே
பூத்தரவங்களோடும்புகைக்கொண்டடிபோற்றிசைல
கூத்தரவங்களோவாக்குழகன்குடமூக்கிடமா
யேத்தரவங்கள்செய்யவிருந்தானவனெம்மிறையே. (உ)

மயில்பெடைபுல்கியாலமறைமேல்மடவன்னமல்கும்
பயில்பெடைவண்டுபண்செய்பழங்காவிரிப்பைம்பொழில்வாய்க்
குயில்பெடையோடுபாடலுடையான்குடமூக்கிடமா
யியலொடுவானமேத்தவிருந்தானவனெம்மிறையே. (ங)

மிக்கரைதாழவேங்கையுரியார்த்துமையாள்வெருவ
வக்கரவாமையேனமருப்போடவைபூண்டழகார்
கொக்கரையோடுபாடலுடையான்குடமூக்கிடமா
யெக்கரையாருமேத்தவிருந்தானவனெம்மிறையே. (ச)

வடிவுடைவாட்டடங்கண்ணுமையஞ்சவோர்வாரணத்தைப்
பொடியணிமேனிமூடவுரிகொண்டவன்புன்சடையான்
கொடிநெடுமாடமோங்குகுழகன்குடமூக்கிடமா
யிடிபடுவானமேத்தவிருந்தானவனெம்மிறையே. (ஞ)

கழைவளர்கவ்வைமுத்தங்கமழ்காவிரியார்த்தயலே
தழைவளர்மாலினல்லபலவின்கனிகடயங்கு
குழைவளர்சோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
வீழைவளர்மங்கையோடமிருந்தானவனெம்மிறையே. (சு)

மலைமலிமங்கைபாகம்மகிழ்தானெழில்வையமுய்யச்
சிலைமலிவெங்கணையாற்சிதைத்தான்புரமூன்றினையுங்
குலைமலிதண்பலவின்பழம்வீழ்குடமூக்கிடமா
வில்லைமலிசூலமேந்தியிருந்தானவனெம்மிறையே. (எ)

நெடுமுடிபத்துடையநிகழ்வாளரக்கன்னுடலைப்
படுமிடர்கண்டயரப்பருமால்வரைக்கீழடர்த்தான்
கொடுமடநங்குதெங்குபழம்வீழ்குடமூக்கிடமா
விடுமணலெக்கர்சூழவிருந்தானவனெம்மிறையே. (அ)

ஆரெரியாழியானுமலரானுமளப்பரிய
நீரிரிபுன்சடைமேனிரம்பாமதிசூடிநல்ல
கூரெரியாகிநீண்டகுழகன்குடமூக்கிடமா
* வீரிருகோவணத்தேடிருந்தானவனெம்மிறையே. (கூ)

மூடியசீவரத்தார்முதுமட்டையர்மோட்டமணர்
நாடியதேவரெல்லாநயக்கதேத்தியகன்னலத்தான்
கூடியசுன்றமெல்லாமுடையான்குடமூக்கிடமா
வேடலர்கொன்றைசூடியிருந்தானவனெம்மிறையே. (கo)

வெண்கொடிமாடமோங்குவிறல்வெங்குருநன்னகரா
ணண்பொடுநின்றசீரான்றமிழ்ஞானசம்பந்தனல்ல
தண்குடமூக்கமர்ந்தானடிசேர்தமிழ்பத்தும்வல்லார்
விண்புடைமேலுலகம்வியப்பெய்துவர்வீடெளிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–கும்பேசுவரர், தேவியார்–மங்களாம்பிகையம்மை.

---

318 திருவக்கரை–பண்–பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணிமாமிடற்றுன்கரிகாடரங்காவுடையான்
பிறையணிகொன்றையினனொருபாகமும்பெண்ணமர்ந்தான்
மறையவன்றன்றலையிற்பலிகொள்பவன்வக்கரையி
னுறைபவனெங்கள்பிரானெனலியார்க்குமுள்குதுமே. (க)

* நான்கு வேதங்களும் கோவணமாதலின் ஈரிருகோவண மென்றருளிச்செய்தது.

பாய்ந்தவன்சாலமீனமுன்பணைத்தோளியோர்பாகமதா
வேய்ந்தவனெண்ணிறைந்தவிமையோர்கடொழுதிறைஞ்ச
வாய்ந்தவன்முப்புரங்களெரிசெய்தவன்வக்கரையிற்
றேய்ந்திளவெண்பிறைசேர்சடையானடிசெப்புதுமே. (உ)

சந்திரசேகரனேயருளாயென்னுதண்மிசும்பி
லிந்திரனுமுதலாவிமையோர்கடொழுதிறைஞ்ச
வந்தரமூவெயிலும்மனலாய்விழவோரம்பினுன்
மந்தரமேருவில்லாவனைத்தானிடம்வக்கரையே. (கூ)

நெய்யணிசூலமோடுநிறைவெண்மழுவும்மரவுங்
கையணிகொள்கையினுன்கனன்மேவியவாடலினுன்
மெய்யணிவெண்பொடியான்விரிகோவணவாடையின்மேன்
மையணிமாமிடற்றனுறையும்மிடம்வக்கரையே. (ச)

ஏனவெண்கொம்பினேடும்மிளவாமையும்பூண்டுகந்து
கூனிளவெண்பிறையுங்குளிர்மத்தமுஞ்சூடிநல்ல
மானனமென்விழியாளொடும்வக்கரைமேவியவன்
ருனவர்முப்புரங்களெரிசெய்ததலைமகனே. (டு)

கார்மலிகொன்றையோடுங்கதிர்மத்தமும்வாளரவு
நீர்மலியுஞ்சடைமேனிரம்பாமதிசூடிநல்ல
வார்மலிமென்முலையாளொடும்வக்கரைமேவியவன்
பார்மலிவெண்டலையிற்பலிகொண்டுழல்பான்மையனே. (சு)

காணணவும்மறிமானெருகையதோர்கைமழுவாட்
டேனணவுங்குழலாளுமைசேர்திருமேனியினுன்
வானணவும்பொழில்சூழ்திருவக்கரைமேவியவ
னூனணவுந்தலையிற்பலிகொண்டுழலுத்தமனே. (எ)

இலங்கையர்மன்னனையெழில்பெற்றவிராவணனைக்
கலங்கவோர்கால்விரலாற்கதிர்பொன்முடிபத்தலற
நலங்கெழுசிந்தையனையருள்போற்றலுநன்கினித்த
வலங்கெழுமூவிலைவேலுடையானிடம்வக்கரையே. (அ)

காமனீடழித்திட்டவன்கார்தலிசென்றிரப்பச்
சேமமேயுன்றனக்கென்றருள்செய்தவன்தேவர்பிரான்
சாமவெண்டாமரைமேலயனுந்தரணியளந்த
வாமனனும்மறியாவகையானிடம்வக்கரையே. (கூ)

மூடியசீவரத்தர்முதிர்பிண்டியரென்றிவர்க
டேடியதேவர்தம்மாலிறைஞ்சப்படுந்தேவர்பிரான்
பாடியநான்மறையன்பலிக்கென்றுபல்வீதிதொறும்
வாடியவெண்டலைகொண்டுழல்வானிடம்வக்கரையே. (கூ)

தண்புனலும்மரவுஞ்சடைமேலுடையான்பிறைதோய்
வண்பொழில்சூழ்ந்தழகாரிறைவன்னுறைவக்கரையைச்
சண்பையர்தந்தலைவன்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனேபாடல்வல்லாரவர்தம்வினேபற்றறுமே. (சக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சந்திரசேகரேசுவரர், தேவியார்-வடிவாம்பிகையம்மை.

ஆறு பதிகம்-சுo.

319 திருவெண்டுறை-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியன்னதிரையன்னனல்லாடியவாரழகன்
பாதியோர்மாதினெடும்பயிலும்பரமாபரமன்
போதியலும்முடிமேற்புனலோடரவம்புனைந்த
வேதியன்மாதிமையால்விரும்பும்மிடம்வெண்டுறையே. (க)

காலனேயோருதையில்லுயிர்வீடுசெய்வார்கழலான்
பாலொடுநெய்தயிரும்பயின்றுடியபண்டரங்கன்
மாலுமதியொடுநீரரவம்புனேவார்சடையான்
வேலனகண்ணியொடும்விரும்பும்மிடம்வெண்டுறையே. (உ)

படைநவில்வெண்மழுவாட்பலபூதப்படையுடையான்
கடைநவின்மும்மதிலும்மெரியூட்டியகண்ணுதலா
னுடைநவிலும்புலித்தோலுடையாடையினன்கடிய
விடைநவிலுங்கொடியான்விரும்பும்மிடம்வெண்டுறையே. (ஙூ)

பண்ணமர்வீணையினன்பரவிப்பணிதொண்டர்கட
மெண்ணமர்சிந்தையினனிமையோர்க்குமறிவரியான்
பெண்ணமர்கூறுடையான்பிரமன்றலையிற்பலியான்
விண்ணவர்தம்பெருமான்விரும்பும்மிடம்வெண்டுறையே. (ச)

பாரியலும்பலியான்படியர்க்குமறிவரியான்
சீரியலும்மலையாளொருபாகமுஞ்சேரவைத்தான்
போரியலும்புரமூன்றுடன்பொன்மலையெய்லையா .
வீரியனின்றுசெய்தான்விரும்பும்மிடம்வெண்டுறையே. (ஞ)

ஊழிகளாயுகமாயொருவர்க்குமுணர்வரியான்
போழிளவெண்மதியும்புனலும்மணிபுன்சடையான்
யாழின்மொழியுமையாள்வெருவவ்வெழில்வெண்மருப்பின்
வேழமுரித்தபிரான்விரும்பும்மிடம்வெண்டுறையே. (ஈ)

கன்றியகாலனையும்முருளக்கனல்வாயலறிப்
பொன்றமுன்னின்றபிரான்பெடியாடியமேனியினன்
சென்றிமையோர்பரவுந்திகழ்தேவடியான்புலன்கள்
வென்றவனம்மிறைவன்விரும்பும்மிடம்வெண்டுறையே. (எ)

கரமிருபத்தினலுங்கடுவன்சினமாயெடுத்த
சிரமொருபத்துமுடையரக்கன்வலிசெற்றுகந்தான்
பரவவல்லார்வினைகளுப்பாலெருபாகமும்பெண்
விரவியவேடத்தினன்விரும்பும்மிடம்வெண்டுறையே. (அ)

கோலமலரயனுங்குளிர்கொண்டனிறத்தவனுஞ்
சீலமறிவரிதாத்திகழ்ந்தோங்கியசெந்தழலான்
மூலமதாகிமின்முதிர்புன்சடைவெண்பிறையான்
வேலைவிடமிடற்றன்விரும்பும்மிடம்வெண்டுறையே. (கூ)

நக்குருவாயவருந்துவராடைகயந்தூடையாம்
பொக்கர்கடம்மூரைகளைபொய்யெனவெம்மிறைவன்
றிக்குநிறைபுகழார்தருதேவர்பிரான்கனக
மிக்குயர்சோதியவன்விரும்பும்மிட ம்வெண்டுறையே. (கo)

திண்ணமரும்புரிசைத்திருவெண்டுறைமேயவனைத்
தண்ணமரும்பொழில்சூழ்தருசண்பையர்தந்தலைவ
னெண்ணமர்பல்கலையானிசைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணமர்பாடல்வல்லார்வினையாயினபற்றறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வெண்டுறைநாதேசுவரர், தேவியார்-வேனெடுங்கண்ணியம்மை.

---

320 திருப்பனந்தாள்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கண்பொலிநெற்றியினன்றிகழ்கையிலோர்வெண்மழுவான்
பெண்புணர்கூறுடையான்பிகுபீடைமால்விடையான்
விண்பொலிமாமதிசேர்தருசெஞ்சடைவேதியனூர்
தண்பொழில்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (க)

கிரித்தவனன்மறையைமிக்கவிண்ணவர்வந்திறைஞ்ச
வெரித்தவன்முப்புரங்கள்ளியவேழுலகில்லுயிரும்
பிரித்தவன்செஞ்சடைமேனிறைபேரொலிவெள்ளந்தன்னைத்
தரித்தவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (உ)

உடுத்தவன் மானுரிதோல்கழ லுள்கவல்லார்வினைகள்
கெடுத்தருள்செய்யவல்லான் கிளர்தேமார்நான் மறையான்
மடுத்தவனஞ்சமுதாமிக்கமாதவர்வேள்வியைமுன்
றடுத்தவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (சூ)

சூழ்தருவல்வினையுமுடறேன்றியபல்பிணியும்
பாழ்படவேண்டுதிரேன்மிகவேத்துமின்பாய்புனலும்
போழிளவெண்மதியும்மனல்பொங்கரவும்புனைந்த
தாழ்சடையான்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (சு)

விடம்படுகண்டத்தினனிருள்வெள்ளநீர்மங்கையொடுங்
நடம்புரிகொள்கையினனவனெம்பிறைசேருமிடம்
படம்புரிநாகமொடுதிரைபன்மணியுங்கொணருந்
தடம்புனல்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (டு)

விடையுயர்வெல்கொடியானடிவிண்ணெடுமண்ணுமெல்லாம்
புடைபடவாடலல்லான்மிகுபூதமசர்பல்படையான்
றொடைநவில்கொன்றையொடுவன்னிதுன்னெருக்கும்மணிந்த
சடையவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (சு)

மலையவன்முன்பயந்தமடமாதையோர்கூறுடையான்
சிலைமலிவெங்கணையாற்புரமூன்றவைசெற்றுகந்தா
னலைமலிதண்புனலும்மதியாடரவும்மணிந்த
தலையவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (எ)

செற்றரக்கன்வலியைத்திருமெல்விரலால்டர்த்து
முற்றுமவ்வெண்ணீறணிந்ததிருமேனியன்மும்மையினன்
புற்றரவம்புலியின்னுரிதோலொடுகோவணமுங்
கற்றவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (அ)

வின்மலைநாணரவம்மிகுவெங்களமம்பதனற்
புன்மைசெய்தானவர்தம்புரம்பொன்றுவித்தான்புனித
னன்மலர்மேலயனுங்கண்ணுநாரணனும்மறியாத்
தன்மையனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (சூ)

ஆதர்சமணரொடும்மடையைந்துகில்போர்த்தழலுங்
நீதருரைக்குமொழியைவைகொள்ளன்மினின்மலனூர்
போதவிழ்பொய்கைதனுட்டிகழ்புள்ளரியப்பொழில்வாய்த்
தாதவிழும்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (கo)

தண்வயல்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரத்துக்
கண்ணியலேபிறையானவன்றன்மேமுன்காழியர்கோ
னண்ணியசெந்தமிழான்மிகுஞானசம்பந்தனல்ல
பண்ணியல்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சடையப்பரசுவரர், தேவியார்-பெரியநாயகியம்மை.

32/ திருச்செங்காட்டங்குடி-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பைங்கோட்டுமலர்ப்புன்னைப்பறவைகள்பயப்பூரச்
சங்காட்டந்தவிர்த்தென்னைத்தவிராநோய்தந்தானே
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டன்பணிசெய்ய
வெங்காட்டுளனலேந்திவிளையாடும்பெருமானே. (க)

பொன்னம்பூங்கழிக்கானற்புணர்துணையோடுடன்வாழு
மன்னங்காளன்றில்காளகன்றும்போய்வருவீர்காள்
கன்னவிற்றோட்சிறுத்தொண்டன்கணபதீச்சரமேய
வின்னமுதனீணையடிக்கீழென்னதல்லலுரையீரே. (உ)

குட்டத்துங்குழிக்கரையுங்குளிர்பொய்கைத்தடத்தகத்து
மிட்டத்தாலிரைதேருமிருஞ்சிறகின்மடநாராய்
சிட்டன்சீர்ச்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
வட்டவார்சடையார்க்கென்வருத்தஞ்சென்றுரையாயே. (ங)

கானருகும்வயலருகுங்கழியருகுங்கடலருகு
மீனிரியவருபுனலின்னிரைதேர்வெண்மடநாராய்
தேனமர்தார்ச்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
வானமருஞ்சடையார்க்கென்வருத்தஞ்சென்றுரையாயே. (ச)

ஆரலாஞ்சுறவமேய்ந்தகன்கழனிச்சிறகுலர்த்தும்
பாரல்வாய்ச்சிறகுருகேபயிறாவிமடநாராய்
சிருலாஞ்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
நீருலாஞ்சடையார்க்கென்னிலைமைசென்றுரையீரே (ஞ)

குறைக்கொண்டாரிடர்தீர்த்தல்கடனன்றேகுளிர்பொய்கைத்
துறைக்கெண்டைகவர்குருகேதுணைபிரியாமடநாராய்
கறைக்கண்டன்பிறைச்சென்னிக்கணபதீச்சரமேய
சிறுத்தொண்டன்பெருமான்சீரருளொருநாள்பெறலாமே. (சு)

கருவடியப்சுங்கால்வெண்குருகேயொண்கழிநாரா
யொருவடியாளிரந்தாளென்றெருநாள்சென்றுரையீரே
செருவடிதோட்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
திருவடிதன்றிருவருளேபெறலாமோதிறத்தவர்க்கே. (எ)

கூராரலிரைதேர்ந்துகுளமுலவிவயல்வாழ்ந்
தாராரவேமடநாராய்தமியேற்கொன்றுரையீரே
சீராளன்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய்
பேராளன்பெருமான்றனருளொருநாள்பெறலாமே. (அ)

நறப்பொலிபூங்கழிக்கானனவில்குருகேயுலகெல்லா
மறப்புலிதேர்ந்தழல்வர்க்கென்னலர்கோட்டழகியதே

சிறப்புலவன் சிரத்தொண் டன்செங்காட் டங்குடிமேய
பிறப்பிலிபேர்பித்தற்றிகின் றிழிக்கோவெம்பெருகலமே. (கூ)

செந்தண்பூம்புனல்பரந்தசெங்காட்டங்குடிமேய
வெந்தநீறணிமார்பன்சிரத்தொண்டனவன்வேண்ட
வந்தண்பூங்கலிக்காழியடிகளேயடிபரவுஞ்
சந்தங்கொள்சம்பந்தன்றமிழ்மைப்போர்தக்கோரே. (கo-கக)

திருச்சிற்றம்பலம்.

---

322 திருப்பெருவேளூர்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அண்ணவுங்கழுக்குன்றுமாயமலையவைவாழ்வார்
விண்ணோருமண்ணோரும்வியந்தேத்தவருள்செய்வார்
கண்ணவாருலகுக்குக்கருத்தானர்புரமெரித்த
பெண்ணணம்பெருமானர்பெருவேளூர்பிரியாரே. (க)

கருமானினூரியுடையர்கரிகாடரிமவானர்
மருமானிரிவரென்றுமடவாளோடனவர்
பொருமானவிடையூர்வதுடையார்வெண்பொடிப்பூசும்
பெருமானர்பிஞ்ஞகனர்பெருவேளூர்பிரியாரே. (உ)

குணக்குந்தென்றிசைக்கண்ணுங்குடபாலும்வடபாலுங்
கணக்கென்னவருள்செய்வார்கழிந்தோர்க்குமொழிந்தோர்க்கும்
வணக்கஞ்செய்மனத்தராய்வணங்காதார்தமக்கென்றும்
பிணக்கஞ்செய்பெருமானர்பெருவேளூர்பிரியாரே. (கூ)

இறைக்கொண்டவளேயாளோடிருகூருயொருகூறு
மறைக்கண்டத்திறைநாவர்மதிலெய்தவில்வல்லர்
கறைக்கொண்டமிடறுடையர்கனல்கிளருஞ்சடைமுடிமேற்
பிறைக்கொண்டபெருமானர்பெருவேளூர்பிரியாரே. (ச)

விழையாதார்விழைவார்போற்பல்விகிர்தக்கள்பலபேசிக்
குழையாதார்குழைவார்போற்குணகல்லபலகூறி
யழையாவுமலற்றுவுமடிவீழ்வார்தமக்கென்றும்
பிழையாதபெருமானர்பெருவேளூர்பிரியாரே. (ஞ)

விரித்தாரான்மறைப்பொருளோயுமையஞ்சவிறல்வேழ
மூரித்தாராமுரிபோர்த்தமதின்மூன்றுமொருகணையா
லெரித்தாராரமிமைப்பளவிலிமையோர்கடொழுதிறைஞ்சப்
பெருத்தாரெம்பெருமானர்பெருவேளூர்பிரியாரே. (சு

மறப்பிலாவடிமைக்கண்மனம்வைப்பார்தமக்கெல்லாஞ்
சிறப்பிலார்மதிலெய்தசிலேவலர்லாரொருகணையா
லிறப்பிலார்பிணியில்லார்தமக்கென்றுங்கேடிலார்
பிறப்பிலாப்பெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (எ)

எரியார்வேற்கடற்றுணியிலங்கைக்கோன்றனீவீழ
முரியார்ந்ததடந்தோள்களடர்த்துகந்தமுதலாளர்
வரியார்வெஞ்சிலைபிடித்தமடவாளோருபாகம்
பிரியாதபெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (அ)

சேணியலுநெடுமாலுந்திசைமுகனுஞ்செருவெய்திக்
காணியல்பையறிவிலராய்க்கனல்வண்ணரடியிணைக்கீழ்
நாணியவர்தொழுதேத்தநாணமேயருள்செய்து
பேணியவெம்பெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (கூ)

புற்றேறியுணங்குவார்புகையார்த்ததுகில்போர்ப்பார்
சொற்றேறவேண்டாரீர்தொழுமின்கள்சுடர்வண்ண
மற்றேறரும்பரிமாவும்மதகளிறுமிலையொழியப்
பெற்றேறுமம்பெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (கo)

பைம்பொன்சீர்மணிவாரிப்பலவுஞ்சேர்கனியுந்தி
யம்பொன்செய்மடவரலாரணிமல்குபெருவேளூர்
நம்பன்றன்கழல்பரவிநவில்கின்றமறைஞான
சம்பந்தன்றமிழ்வல்லார்க்கருவினைநோய்சாராவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரியாவீசுவரர், தேவியார்-மின்னேயாளம்மை.

---

323 திருக்கச்சிநெறிக்காரைக்காடு-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வாரணவுமுலைமங்கைபங்கினராயங்கையினிற்
பேரணவுமழுவொன்றங்கேந்திவெண்பொடியணிவார்
காரணவுமணிமாடங்கடைதவின்றகலிக்கச்சி
நீரணவுமலர்ப்பெய்கைநெறிக்காரைக்காட்டாரே. (க)

காரூருமணிமிடற்றர்கரிகாடருடைகலிகொண்
டீரூரன்பலிக்குழல்வாருழைமானினுரியதளர்
தேரூருநெடுவீதிச்செழுங்கச்சிமாநகர்வாய்
நீரூருமலர்ப்பெய்கைநெறிக்காரைக்காட்டாரே. (உ)

கூறணிந்தார்கொடியிடையைக்குளிர்சடைமேலிளமதியோ
டாறணிந்தாராடரவம்பூண்டுகந்தாரான்வெள்ளே

யேறணிந்தார்கொடியதன்மேலென்பணிந்தார்வரைமார்பி
னீறணிந்தார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (கூ)

பிறைநவின்றசெஞ்சடைகள்பின்முழப்பூதங்கண்
மறைநவின்றபாடலோடாடலராய்மழுவேந்திச்
சிறைநவின்றவண்டினங்கடேங்கனிவாய்த்தேன்கதுவு
நிறைநவின்றகலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (சு)

அன்றுலின்மேழிருந்தங்கறம்புரிந்தவருளாளர்
குன்றுதவெஞ்சிலையிற்கோளரவகாண்கொளுவி
யொன்றுதார்புரமூன்றுமோங்கெரியில்வெந்தவிய
கின்றருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (டு)

பன்மலர்கள்கொண்டடிக்கீழ்வானோர்கள்பணிந்திறைஞ்ச
நன்மையிலாவல்லவுணர்கர்மூன்றுமொருகொடியில்
வின்மலியுண்கொளுவிவெங்கணையாலெய்தழித்த
நின்மலனார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (சு)

புற்றிடைவாளரவினெடுபூணகொன்றைமதமத்த
மெற்றெழியாவல்புனலோடிளமதியமேந்துசடைப்
பெற்றுடையாரொருபாகம்பெண்ணுடையார்கண்ணமரு
நெற்றியினர்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (எ)

ஏழ்கடல்சூழ்தென்னிலங்கைக்கோமானெழில்வரைவாய்த்
தாழ்விரலாலூன்றியதோர்தன்மையினர்நன்மையினு
ராழ்கிடங்குசூழ்வயலுமதில்புல்கியழகமரு
நீண்மதுகிற்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (அ)

ஊண்டானுமொலிகடனஞ்சுடைதலையிற்பலிகொள்வர்
மாண்டார்தமெலும்பணிவர்வரியரவேடெழிலாமை
பூண்டாருமோரிருவரறியாமைப்பெரங்கெரியாய்
நீண்டாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (கூ)

சூண்டாடிச்சமண்படுவார்கூறைதணமெய்போர்த்து
மிண்டாடித்திரிதருவாருரைப்பனகண்மெய்யல்ல
வண்டாருங்குழலாளேவரையாகத்தொருபாகங்
கண்டாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (கo)

கண்ணுருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டுறையும்
பெண்ணுருந்திருமேனிப்பெருமானதடிவாழ்த்தி
தண்ணுரும்பொழிற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
பண்ணுருந்தமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காரைத்திருநாதசுவரர், தேவியார்-காரார்குழலியம்மை.

ஆ பதிகம்-கடி.

324 திருவேட்டக்குடி-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரைக்குமலர்க்கொன்றைவிரிசடைமேல்மதியரவங்
கண்டிரைக்கும்பிறைச்சென்னிக்காவாலிகண்கழல்க
டொண்டிரைத்துத்தொழுதிறைஞ்சத்துளங்கொளிநீர்ச்சுடர்ப்பவளந்
தெண்டிரைக்கண்கொணர்ந்தெறியுந்திருவேட்டக்குடியாரே. (க)

பாய்திமிலர்வலையோடுமீன்வாரிப்பயின்றெங்குங்
காயினியிற்கொணர்ந்தட்டுங்கைதைசூழ்கழிக்கானற்
போயிரவிற்பேயோடும்புறங்காட்டிற்புரிந்தழகார்
தீயெரிகைமகிழ்ந்தாருந்திருவேட்டக்குடியாரே. (உ)

தோத்திரமாமணலிலிங்கந்தொடங்கியவானிரையிற்பால்
பாத்திரமாவாட்டுதலும்பரஞ்சோதிபரிந்தருளி
யாத்தமெனமறைநால்வர்க்கறம்புரிதூலன்முரைத்த
தீர்த்தமல்குசடையாருந்திருவேட்டக்குடியாரே. (ங)

கலவஞ்சேர்கழிக்கானல்கதிர்முத்தங்கலந்தெங்கு
மலவஞ்சேரணைவாரிக்கொணர்ந்தெறியுமகன்முறைவாய்
நிலவஞ்சேர்துணிடையநேரிழையாளவளோடுந்
திலதஞ்சேர்நெற்றியினர்திருவேட்டக்குடியாரே. (ச)

வங்கமார்கடலலறப்பருவரையோடரவுழலச்
செங்கண்மால்கடையவெழுநஞ்சருந்துசிவமூர்த்தி
யங்கமான்மறைநால்வர்க்கறம்பொருளின்பயனளித்த
திங்கள்சேர்சடையாருந்திருவேட்டக்குடியாரே. (ஞ)

நாவாயபிறைச்சென்னிநலந்திகழுமிலங்கிப்பி
கோவாதனித்திலங்கள்கொணர்ந்தெறியுங்குளிர்கான
லேவாரும்வெஞ்சிலையாலெயின்மூன்றுமெரிசெய்த
தேவாதிதேவனார்திருவேட்டக்குடியாரே. (சு)

பானிலவும்பங்கயத்தப்பைங்கானல்வெண்குருகு
கானிலவுமலர்ப்பொய்கைகைதல்சூழ்கழிக்கானன்
மானின்விழிமலைமகளேர்டொருபாகம்பிரிவரியார்
தேனிலவுமலர்ச்சோலைத்திருவேட்டக்குடியாரே. (ஏ)

துறையுலவுகடலோதஞ்சுரிசங்கமிடறிப்போய்
நறையுலவும்பொழிற்புன்னைநன்னீழற்கீழமரு
மிறையபயிலுமிராவணன்றன்றலைபத்துமிருப தோ
டிறலழியவடர்த்தாருந்திருவேட்டக்குடியாரே. (அ)

அருமறைநான்முகத்தானுமகலிடமீரேற்றுனு
மிருவருமாயளப்பரியவெரியுருவாய்நீண்டபிரான்
வருபுனலின்மணியுந்திமறிதிரையார்சுடர்ப்பவளத்
திருவுருவில்வெண்ணீற்றர்திருவேட்டக்குடியாரே. (கூ)

இகழ்ந்தரைக்குஞ்சமணர்களுமிடும்போர்வைச்சாக்கியரும்
புகழ்ந்தரையாப்பாவிகள்சொற்கொள்ளேன்மின்பொருளென்ன
நிகழ்ந்திலங்குவெண்மணலினிறைத்தண்டப்பிறைக்கற்றை
திகழ்ந்திலங்குசெஞ்சடையார்திருவேட்டக்குடியாரே. (கo)

தெண்டிரைசேர்வயலுடுத்ததிருவேட்டக்குடியாரைத்
தண்டலைசூழ்கலிக்காழித்தமிழ்ஞானசம்பந்த
னெண்டமிழ்நூலிவைபத்துமுணர்ந்தேத்தவல்லார்போ
யுண்டுடுப்பில்வானவரோடியர்வானத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமேனியழகீசுவரர், தேவியார்-சாந்தநாயகியம்மை.

---

3 ஸ்ரீ திருப்பிரமபுரம்-வழிமொழித்திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சுரருலகுநரர்கள்பயிறரணிதலமுரணழியவர்மனகின்மூப்
புரமெரியவிரவுவகைசரவிசைகொள்கரமுடையபரமனிடமாம்
வரமருளவரன்முறையினிரைநிறைகொள்வருசுருதிசிரவுரையினும்
பிரமனுயரனெழில்கொள்சரணவிணபரவிவணர்பிரமபுரமே. (க)

தாணுபிகுவாணிசைகடாணுவியர்பேணுமதகாணுமளவிற்
கோணுதனீணயனிகேரணில்பிடிமாணுமதகாணும்வகையே
யேணுகரிபூணழியவாணியல்கொண்மாணிபதிசேணமரர்கோன்
வேணுவினேயேணிருகர்காணிறிவிகாணாடுவேணுபுரமே. (உ)

பகலொளிசெய்நகமணியைமுகைமலரைநிகழ்சரணவகவமுனிவர்க்
ககலமலிசகலகலிகவுரைசெய்முகமுடையபசவனிடமாம்
பகைகளையும்வகையிலமுகவிறையையிகவருளநிகரிலிமையோர்
புகவுலகுபுகழவெழிறிகழநிகழ்பெருகுபுகலிநகரே. (ஙு)

அங்கண்மதிகங்கைநதிவெங்கணரவங்களெழிறங்குமிதழித்
தங்கமலர்தங்குசடையங்கிகிரொங்களிறைதங்குமிடமாம்
வெங்கதிர்விளங்குலகமெங்குமெதிர்பொங்கெரிபுனன்கள்கலோர்
வெங்குருவிளங்கியுமைபங்கர்சரணங்கள்பணிவெங்குருவதே. (ச)

ஆணியல்வுகாணவனவாணவியல்பேணியெதிர்பாணமழைசேர்
தூணியறுநாணியறவேணுசிலேபேணியறுநாணிவிசயன்
பாணியமர்பூணவருண்மாணுபிரமாணியிடமேணுமுறையிற்
பாணியுலகாளமிகவாணின்மலிதோணிகிகர்தோணிபுரமே. (இ)

நிராமயபராபரபுராதனபராவுசிவராகவருளென்
றிராவுமெகிராயதுபராகிணபுராணனமராதிபதியா
மராமிசையிராதெழிறராயரபராயணவராகவுருவா
தராயணிவிராயெரிபராய்பிருதராய்மொழிவிராயபதியே. (உ)

அரணியுறுமூரணர்பலர்மரணமவர்விரணமதிலாமலிபடைக்
கரம்விசிறுவிரகனமர்கரணனுயர்பரனெறிகொள்கரனதிடமரம்
பரவமுதவிரவவுடல்புரளமுறுமரலையரிசிரமரியவச்
சிரமரனசரணமவைபரவவிருகிரகமமர்சிரபுரமதே. (எ)

அறமழிவுபெறவுலகுதெறுபுயவன்விறலழியகிறுவிவிரன்மா
மறையினெளிமுறைமுரல்செய்பிறையெயிறனுறவருளுமிறைவனிடமாங்
குறைவின்மிகுகிறைதையுழிமறையமரர்கிறையருளமுறையொடும்வரும்
புறவனெதிர்கிறைகிலவுபொறையனுடல்பெறவருளும்புறவமதவே. (அ)

விண்பயிலமண்பகிரிவண்பிரமனெண்பெரியபண்படைகொண்மால்
கண்பரியுமொண்பொழியதண்பொருள்கடண்புகழ்கொள்கண்டனிடமா
மண்பரியுமொண்பொழியதண்புசகர்புண்பயிலவிண்படரவச்
சண்பையமொழிபண்பமுனிகண்பழிசெய்பண்புகளேசண்பைநகரே. (ஈ)

பாழியுறைவேழகிகர்பாழமணர்சூழுமுடலாளருணரா
வேழினிசையாழின்மொழியேழையவள்வாழுமிறைதாழுமிடமாங்
கீழிசைகொண்மேலுலகில்வாழரசுசூழரைசுவாழவரணுக்
காழியகில்காழிசெயவேழுலகிலூழிவளர்காழிநகரே. (கூ)

நச்சரவுகச்செனவசைச்சுமதியுச்சியின்மிலைச்சொருகையான்
மெய்ச்சிரமணிச்சுலகினிச்சமிடுபிச்சையமர்பிச்சனிடமா
மச்சமதநச்சிமதமச்சிறுமியைச்செய்தவவச்சவிரகக்
கொச்சைமுரவச்சர்பணியச்சுரர்கணச்சிமிடைகொச்சைநகரே. (கூ)

ஒழுகலரிதழிகலியிலுழியுலகுபழிபெருகுவழியைகினையா
முழுதுடலிலெழுமயிர்கடமுவுமுனிகுமுலினெடுகெமுவுசிவனைத்
தொழுதலகிலிமுருகமலமழியும்வகைகமுவுமுரைகமுமனகரப்
பழுதிலிறையெழுதுமொழிதமிழ்விரகன்வழிமொழிகண்மொழிதகையவே. ()

திருச்சிற்றம்பலம்.

326 ஸ்ரீகயிலாயம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வாளவரிகோளபுலிகீளதுரிதாளின்மிசைநாளுமகிழ்வ
ராளுமவர்வேளுகர்போளயிலகோளகளிருளிவரவிற்
றோளுமரர்தாளமதர்கூளியெழுமீளிமிளிர்துளிவளர்பொற்
காளமுகின்மீளவிருள்கீளஎரிதாளகயிலாயமலையே. (க)

புற்றரவுபற்றியகைக்கெற்றியதுமற்றொருகணெற்றைவிடையன்
செற்றதெயிலுற்றதமையற்றவர்கணற்றுணெனவினற்றனகர்தான்
சுற்றுமணிபெற்றதொளிசெற்றமொடுகுற்றமிலதெற்றனவினுக்
கற்றவர்கள்சொற்றொகையின்முற்றுமொளிபெற்றகயிலாயமலையே. (உ)

சிங்கவரைமன்கையர்கடங்களனசெங்கைகிறைகொங்குமலர்தூ
யெங்கள்வினசங்கையவையிங்ககலவங்கமொழியெங்குமுளவாய்த்
திங்களிருணெங்கவொளிலிங்கமிருதொங்கலொடுதங்கவயலே
கங்கையொடுபொங்குசடையெங்களிறைதங்குகயிலாயமலையே. (ங)

மூடியசடைபிடியதொருவடியமழுவுடையர்செடியுடையதலையில்
வெடியவினகொடியர்கெடவிடுசில்பலிகொடியமகிழடிகளிடமாம்
கொடியகுரலுடையவிடைகடிய தடியடியினெறுபிடியினதிரக்
கடியகுரனெடியமுகின்மடியவதரடிகொள்கயிலாயமலையே. (ச)

சூடங்கையினுடங்கெரிதொடர்ந்தெழவிடங்கிளர்படங்கொளரவ
மடங்கொளிபடர்ந்திடகடந்தருவிடங்கனதிடந்தண்முகில்போய்த்
தடங்கடலொடர்ந்துடனுடங்குவவிடங்கொளமிடைந்தகுரலாற்
கடுங்கலின்முடங்கனுடைங்கரவொடுங்குகயிலாயமலையே. (ஞ)

ஏதமிலபூதமொடுகோதைதுணையாதிமுதல்வேதவிகிர்தன்
கீதமொடுநீதிபலவோதிமறவாதபயினுதனகர்தான்
ரூதிபொதிபோதுவிடவூதுதிறைமீதுதுளிகூதனலியக்
காதன்மிகுசோதிவிளர்மாதபயில்கேதகயிலாயமலையே. (ஞ)

சென்றபலவென்றலவுபுன்றலையர்துன்றலொடுமொன்றியுடனே
நின்றமரரென்றுமிறைவன்றனடிசென்றபணிகின்றநகர்தான்
துன்றுமலர்பொன்றிகழ்செய்கொன்றைவிரைதென்றலொடுசென்றுகமழக்
கன்றுபிடிதன்றுகளிறென்றிவைமுனின்றகயிலாயமலையே. (எ)

மருப்பிடைநெருப்பெழுதருக்கொடுசெருச்செய்தபருத்தகளிறின்
பொருப்பிடைவிருப்புறவிருக்கையையொருக்குடனரக்கனுணரா
தொருத்தியைவெருக்குறவெருட்டலுநெருக்கெனிருத்தவிரலாற்
கருத்திலிவொருத்தனெயெருத்திறெரித்தகயிலாயமலையே. (அ)

பரியதிரையெரியபுனல்வலியபுலியுரியதுடைபரிசையுடையன்
வரியவளையரியகணியுருவிஞெடுபுரிவினவர்பிரிவினகர்தான்

பெரியவெரியுருவமதுதெரியவுருப்புரிவுதருமருமையதனைற்
கரியவனுமரியமறைபுரியவனுமருவுகயிலாயமலையே. (கூ)

அண்டர்தொழுதண்டிபணிகண்டடிமைகொண்டவிறைதுண்டமதியோ
டிண்டைபுனைவுண்டசடைமுண்டதரசண்டவிருள்கண்டரிடமாங்
குண்டமணவண்டரவர்மண்டைகையிலுண்டுழறிமிண்டுசமயங்
கண்டவர்கள்கொண்டவர்கள்பண்டுமறியாதகயிலாயமலையே. (கo)

அந்தண்வரைவந்தபுனறந்ததிரைசந்தனமொடுந்தியகிலுங்
கந்தமலர்கொந்திளைடுமந்திபலசிந்துகயிலாயமலைமே
லெந்தையடிவந்தணுகுசந்தமொடுசெந்தமிழிசைந்தபுகலிப்
பந்தனுரைசிந்தைசெயவந்தவினைநைந்துபரலோகமெளிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

327 திருக்காளத்தி-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வானவர்கடானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்விடந்
தானமுதுசெய்தருள்புரிந்தசிவன்மேவுமலைதன்னினவினவி
லேனமிளமாணினெடுகிள்ளீனிகொள்ளவெழிலார்கவணினற்
கானவர்தமாமகளிர்கனகமணிவிலகுகாளத்திமலையே. (க)

முதுசினலிலவுணர்புரமூன்றுமொருநொடிவரையின்மூளவெரிசெய்
சதுரர்மதிபொதிசடையர்சங்கரர்விரும்புமலைதன்னினவினவி
லெதிரெதிரவெதிர்பிணியவெழுபொறிகள்சிந்தவெழிலேனமுதுதக்
கதிர்மணியின்வளரொளிகொளிருமுகலிலவுகாளத்திமலையே. (உ)

வல்லிவருகாளியைவருத்துவலியாகுமிருதாருகனீ
கொல்லெனவிடுத்தருள்புரிந்தசிவன்மேவுமலைகுறினவிற்
பல்பலவிருங்கனி * பருங்கியிகவுண்டவைநெருங்கியினமாய்க்
கல்லதிரின்றுகருமந்திவினையாடுகாளத்திமலையே. (ங)

வேயனையதோளுமையோர்பாகமதுவாகவிடையேறிசடைமேற்
றூயமதிசூடிசுடுகாடினடமாடிமலைதன்னினவினவில்
வாய்கலசமாகவழிபாடுசெயும்வேடன்மலராகுரயனங்
காய்கணையினுளிடந்தீசனடிகூடுகாளத்திமலையே. (ச)

மலியின்மிசைதனின்முகில்போல்வருவதொருமதகரியைமழைபொலலறக்
கொலைசெய்தமையஞ்சவுரிபோர்த்தசிவன்மேவுமலைகுறினவி
லலைகொள்புனலருவிபலசுனைகள்வழியிழியவயனிலவுமுதுவேய்
கலகலெனவொளிகொள்கதிர்முத்தமவைசிந்துகாளத்திமலையே. (ஞ)

* பருகி எனச்சொல்வது விகாரவகையாற் பருங்கியெனை நின்றது.

பாரதம்விளங்கியபரீதனருக்தவமுயன்றபணிகண்
டாரருள்புரிக்தலீகொள்கங்கைசடையேற்றவண்மலையினில்
வாரதரிருங்குவவர்சேவலின்மடித்தவெரித்தவிறகிற்
காரகிலிரும்புகைவிசும்புகமழ்கின்றகாளத்திமலையே. (சு)

ஆருமெதிராதவலியாகியசலந்தரனையாழியதனு
லீரும்வகைசெய்தருள்புரிக்தவனிருந்தமலைதன்னினவி
ஓருமரவம்மொளிகொண்மாமணியுமிழ்ந்தவையுலாவிவரலாற்
காரிருள்கடிக்தகனகம்மெனவிளங்குகாளத்திமலையே. (எ)

எரியணியசுரியமயிரிராவணனையீடழியவெழில்கொள்விரலாற்
பெரியவரையூன்றியருள்செய்தசிவன்மேவுமலைபெற்றினவில்
வரியசிலேயேடுவர்களாடவர்கணீடுவரையூடுவரலாற்
கரியினெடுவரியுமுவையரியினமும்வெருவுகாளத்திமலையே. (அ)

இனதளவிலிவனதடியிணையுமுடியறிதலெனவிகலுமிருவர்
தனதருவமறீவரியசகலசிவன்மேவுமலைதன்னினவினிற்
புனவர்புனமயிலனியமாதரொடுமைக்தருமணம்புணருகாட்
கனகமெனமலர்களணிவேங்கைகணிலாவுகாளத்திமலையே. (சு)

நின்றுகவளம்பலகொள்கையரொடுமெய்யிலிடுபோர்வையவரு
நன்றியறியாதவகைகின்றசிவன்மேவுமலைகாடினவிற்
குன்றின்மலிதன்றுபொழினின்றுகுளிர்சந்தின்முறிதின்றுகுலவிக்
கன்றினெடுசென்றுபிடிநின்றுவினையாடுகாளத்திமலையே. (கo)

காடதிடமாகநடமாடுசிவன்மேவுகாளத்திமலையை
மாடமொடுமாளிகைகணீடுவளர்கொச்சைவயமன்னுதலிவ
ணுடுமலிகீடுபுகழ்ஞானசம்பக்தனுரைசெல்லுதமிழின்
பாடலொடுபாடுமிசைவல்லவர்கணல்லர்பரலோகமெளிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

328 திருமயிலாடுதுறை–திருவிராகம்–பண்–சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

ஏனவெயிறுடரவோடென்புவரியாமையிவைபூண்டினியராய்க்
கானவரிகீடுமூவையதனுடையபடர்சடையர்காணியெனலா
மானபுகழ்வேதியர்களாகுதியின்மீதுபுகைபோகியழகார்
வானமுமுசோலிமிசைமாசுபடமூசுமயிலாடுதுறையே. (க)

அந்தண்மதிசெஞ்சடையரங்கணெழில்கொன்றையொடணிக்தழகரா
மெந்தமடிகட்கினியதானமதுவேண்டிலெழிலார்பதியதாங்
கந்தமலிசந்தினெடுகாரகிலும்வாரிவருகாவிரியுளால்
வந்தகரையுந்தியெதிர்மந்திமலர்சிக்துமயிலாடுதுறையே. (உ)

தோளின்மிசைவரியரவநஞ்சழலவீக்கிமிகநேரக்கரியராய்
மூளைபடுவெண்டலையிலுண்டுமுதுகாடுண்றியுழுதல்வரிடமாம்
பாளைபடுபைங்கமுகுசெங்கனியுதிர்த்திடகிரந்தகமழ்பூ
வாளைகுதிகொள்ளமடல்விரியமணகாறுமயிலாடுதுறையே. (கூ)

ஏதமிலரியமறைமலியர்மகளாகியவிலங்குதலொண்
பேதைதடமார்பதிடமாகவுறைகின்றபெருமானதிடமாங்
காதன்மிகுகவ்வையொடுமவ்வலவைகூடிவருகாவிரியுளான்
மாதர்மறிதிரைகள்புகலெறியவெறிதமழுமயிலாடுதுறையே. (சு)

பூவிரிகதப்பின்மடமங்கையரகந்தொறுநடந்தபலிதேர்
பாவிரியிசைக்குரியபாடல்பயிலும்பரமர்பழமையெனலாங்
காவிரிதரைத்திருகரைக்குமணிசிந்தவரிவண்டுகவர
மாவிரிமதக்கிழியமந்திருகிக்கொள்ளுமயிலாடுதுறையே. (டு)

கடந்திகழ்கருங்களிறுரித்தமையுமஞ்சமிகநேரக்கரியராய்
விடந்திகழுமூவிலைகல்வேலுடையவேதியர்விரும்புபுலிமாக் [வாய்
தொடர்ந்தொளிர்விடக்கதொரு சோதிபிருதொண்டையெழில்கொண்டதுவர்
மடந்தையர்குடைந்தபுனல்வாசமிகுகாறுமயிலாடுதுறையே. (சு)

அவ்வதிசையாருமடியாருமூளராகவருள்செய்தவர்கண்மே
லெவ்வமறவைகலுமிரங்கியெரியாடுமெழிசனிடமாங்
கவ்வையொடுகாவிரிகலந்தவருதென்கரைகிரந்தகமழ்பூ
மவ்வலொடுமாதவிமயங்கிமணகாறுமயிலாடுதுறையே. (எ)

இலங்கைகரக்கர்மன்னன்முடியொருபதினேடிருபதுதோணெரியவிரலால்
விலக்கலிலடர்த்தருள்புரிந்தவரிருந்தவிடம்வினவுதிர்க்களேற்
கலங்கணுரையுந்தியெதிர்வந்தகயமூழ்கிமலர்கொண்டுமகிழ
மலங்கிவருகாவிரிகிரந்துபொழிகின்றமயிலாடுதுறையே. (ஏ)

ஒண்டிறலினுன்முகனுமாலுமிகநேடியுணராதவகையா
லண்டமுறவங்கியுருவாகியிகரீண்டவரனுரகிடமாங்
கெண்டையிரைகொண்டுகெளிறுருடனிருந்துகிளர்வாயுறுதல்சேர்
வண்டன்மணல்கிண்டிமடவாரைவீயாடுமயிலாடுதுறையே. (கூ)

மிண்டுதிறலமணரொடுசாக்கியருமலர்தூற்றுமிக்கதிறலோ
னிண்டைகுடிகொண்டசடையெங்கள்பெருமானதிடமென்பரெழிலார்
தெண்டிரைபரந்தொழுகுகாவிரியதென்கரைகிரந்தகமழ்பூ
வண்டவைதினக்கமதுவந்தொழுகுசோலைமயிலாடுதுறையே. (கூ)

தினந்தருமயானநிலவானமதியாததொருசூலமொடுபேய்க்
கணந்தொழுகபாலிகழலேத்திபிகவாய்த்ததொருகாதன்மையினுன்
மணந்தண்மலிகாழிமறைஞானசம்பந்தன்மயிலாடுதுறையைப்
புணர்ந்ததமிழ்பத்துமிசையாலுரைசெய்வார்பெறுவர்பொன்னுலகமே. (கசு)

திருச்சிற்றம்பலம்.

329 திருவைகா-திருவிராகம்--பண்-சாதாரி.

திருச்சித்தம்பலம்.

கோழைமிடறுகவிகோளுமிலவாகவிசைகூடும்வகையா
யேழையடியாரவர்கள்யாவைசொனசொன்மகிழுமீசனிடமாங்
தாழையிளநீர்முதியகாய்கமுகின்வீழநிரைதாறுசெறி
வாழையுதிர்வீழ்கனிகளூறியவல்சேறுசெய்பும்வைகாவிலே. (க)

அண்டமுறுமேருவரையங்கிகணராவதாகவெழிலார்
விண்டவர்தமப்புரமெரித்தவிகிர்தன்னவன்விரும்புமிடமாம்
புண்டரிகமாமலர்கள்புக்குவிளையாடுவயல்சூழ்தடமெலாம்
வண்டினிசைபாடவழகார்குயின்மிழற்றுபொழில்வைகாவிலே. (உ)

ஞானமிலராகியுயர்நற்றவமெய்கற்றவையுணர்ந்தவடியார்
ஞானபீகின்றுதொழாஞாளுமருள்செய்யவலநாதனிடமா
மானவயல்சூழ்தருமல்சூழியருகேபொழில்கடோறுமழகார்
வானமதியோடுமழைதீண்முகில்கள்வந்தணவும்வைகாவிலே. (கூ)

இன்னவுருவின்னகிறமென்றறிவதேலரிதுநீதிபலவுந்
தன்னதருவாமெனமிகுத்ததவநீதியொடுதானமர்விட
முன்னவினைபோம்வகையினுன்முழுதுணர்ந்தருமுயல்கின்றமுனிவர்
மன்னவிருபோதுமருவித்தொழுதுசெரும்வயல்வைகாவிலே. (ச)

வேதமொடுவேள்விபலவாயினமிகுத்துவிதியாறுசமய
மோதியுமுணர்ந்தமுளதேவர்தொழுகின்றருள்செயொருவனிடமா
மேதகையகேதகைகள்புன்னையொடுகாழலைவிக்கவழகான்
மாதவிமணங்கமழவண்டுபலபாடுபொழில்வைகாவிலே. (ஞ)

நஞ்சமுதுசெய்தமணிகண்டனமையாளுடையஞானமுதல்வன்
செஞ்சடையிடைப்புனல்கரந்தசிவலோகனமர்கின்றவிடமா
மஞ்சுடரொடாடுபதமேழினிசையெண்ணரியவண்ணமுளவாய்
மைந்தரொடுமாதர்பலருந்தொழுதுசேரும்வயல்வைகாவிலே. (சு)

நாளுமிகுபாடலொடுஞானமிகுசல்லமலர்வல்லவகையாற்
றோளினெடுகைகுளிரவேதொழுமவர்க்கருள்செய்சோதியிடமா
நீளவளர்சோலைதொறுநாளிபலதுன்றுகனிகின்றுதிர
வாளுகுதிகொள்ளமதுகாமலர்விரியும்வயல்வைகாவிலே. (எ)

கையிருபதோடுமெய்கலங்கிடவிலங்கலெடுத்தகடியோ
னேயிருசிரங்களொருங்குடனெரித்தவழகன்றனிடமாங்
கையின்மலர்கொண்டுகலலியொடுமாலைகருதிப்பலவிதம்
வையகமெலாமருவிகின்றுதொழுதேத்துமெழில்வைகாவிலே. (அ)

அந்தமுதலாதிபெருமானமர்கோனையன்மாலுயிவர்க
ளொந்தைபெருமானிறைவனென்றுதொழுகின்றருள்செயீசனிடமாஞ்

சிந்தைசெய்துபரமடியார்பொடிமெய்பூசியெழுதொண்டரவர்கள்
வந்துபலசந்தமலர்முந்தியணையும்பதிநல்வைகாவிலே. (சு)

ஈசனெமையாளுடையவெந்தைபெருமானிறைவனென்றுதனையே
பேசுதல்செயாவமணர்புத்தரவர்சித்தமணையாவவனிடந்
தேசமதலாமருவினின்றுபரவித்திகழுந்நபுகழோன்
வாசமலராறபலதூவியணையும்பதிநல்வைகாவிலே. (கo)

மூற்றுமையாளுடையமுக்கண்முதல்வன்றிருவைகாவிலதனைச்
செற்றமலிஞர்சிரபுரத்தலிவன்ஞானசம்பந்தனுரைசெ
யுற்றதமிழ்மாலையிரைந்துமிவைவல்லவருருத்திரரெனப்
பெற்றமரலோகமிகவாழ்வர்பிரியாரவர்பெரும்புகழொடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–வில்லவனேசர், தேவியார்–வளைக்கைவல்லியம்மை.

ஆ பதிகம்-எo.

---

330 திருமாகறல்–திருவிராகம்–பண்–சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

விங்குவீனைகழனிமிகுகடைசியர்கள்பாடல்லியாடலரவ
மங்குலொடுநீள்கொடிகண்மாடமலிதேடுபொழின்மாகறலுளான்
கொங்குவிரிகொன்றையொடுகங்கைவளர்திங்களணிசெஞ்சடையினன்
செங்கண்விடையண்ணலடிசேர்பவர்கடீவினைகடீருமுடனே. (க)

கலியிஞலிமங்கையர்கள்பாடலொலியாடல்கவினெய்தியழகார்
மலியினிகர்மாடமுயர்நீள்கொடிகள்வீசுமொலிமாகறலுளா
னிலியின்மலிவேனுணியசூலம்வலனேந்தியெரிபுன்சடையினு
ளிலிகொள்புனலேந்துபெருமானடியையேத்தவினையகலுமிகவே. (உ)

காலியொடுதுந்துமிகள்சங்குகுழல்யாழ்முழவுகாமருவுசீர்
மாலிவழிபாடுசெய்துமாதவர்களேத்திமகிழ்மாகறலுளான்
சேலியுடைபேணியதன்மேலோர்சுடர்நாகமசையாவழகிதாப்
பாலியனநீறுபுனைவானடியையேத்தவினைபறையுமுடனே. (ந)

இங்குகதிர்முத்திஞெடுபொன்மணிகளுந்தியெழின்மெய்புளுடனே
மங்கையருமைந்தர்களுமன்னுபலாடிமகிழ்மாகறலுளான்
கொங்குவளர்கொன்றைகுளிர்திங்களணிசெஞ்சடையினனடியையே
நுங்கள்வினைதீரமிகவேத்திவழிபாடுதகராவெழுமினே. (ச)

தஞ்சுகமுறீலமிருளிங்கவொளிதோன்றுமதவார்கழனிவாய்
மஞ்சுமலியும்பொழிலின்மயில்கணடமாடமலிமாகறலுளான்
வஞ்சமதயானையுரிபோர்த்தமகிழ்வானேர்மழுவாளன்வளரு
நஞ்சமிருள்கண்டமுடைநாதனடியாரைநலியாவினைகளே. (ஞ)

மன்னுமறையோர்களொடுபல்படிமமாதவர்கள்கூடியுடனு
யின்னவகையாலினிதிறைஞ்சியிமையோரிலெழுமாகறலுளான்
மின்னேவிரிபுன்சடையின்மேன்மலர்கள்கங்கையொடுதிங்களெனவே
யுன்னுமவர்தொல்வினைகளொல்கவுயர்வாலுலகமேறலெளிதே. (சு)

வெய்யவினைநெறிகள்செலவர்,தீவினைகள்வீட்டலுறுவீர்
மைகொள்விரிகானன்மதுவார்கழனிமாகறலுளானெழிலதார்
கையகரிகால்வரையின்மேலதுரிதோலுடையமேனியழகா
ரையனடிசேர்பவரையஞ்சியடையாவினைகளகலுமிகவே. (எ)

தூசுதுகினீள்கொடிகண்மேகமொடுதோய்வனபொன்மாடமிசையே
மாசுபடுசெய்கைமிகமாதவர்களோதிமலிமாகறலுளான்
பாசுபதவிச்சைவரிநச்சரவுகச்சையுடைபேணியழகார்
பூசுபொடியீசனெனவேத்தவினைநிற்றலிலபோகுமுடனே. (அ)

தூயவிரிதாமரைகணெய்தல்கழுநீர்குவளைதோன்றமருவுண்
பாயவரிவண்டுபலபண்முரலுமோசையின்மாகறலுளான்
சாயவிரலூன்றியவிராவணனதன்மைகெடவின்றபெருமா
ணையபுகழேத்துமடியார்கள்வினையாயினவுமகல்வதெளிதே. (கூ)

காலினலபைங்கழல்கணீண்முடியின்மேலுணர்வுகாமுறவினுன்
மாலுமலராலுமறியாமையெரியாகியுயர்மாகறலுளா
ஞலுமெரிதோலுமுரிமாமணியராகமொடுகூடியுடனு
யாலும்விடையூர்தியுடையடிகளடியாரையடையாவினைகளே. (கூ)

கடைகணெடுமாடமிகவோங்குகமழ்விதிமலிகாழியவர்கோ
னடையும்வகையாற்பரவியரணியடிகூடுசெம்பந்தனுரையான்
மடைகொள்புனலோடுவயல்கூடுபொழின்மாகறலுளானடியையே
யுடையதமிழ்பத்துமுணர்வாரவர்கடொல்வினைகளொல்குமுடனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அடைக்கலங்காத்தநாதர், தேவியர்-புவனநாயகியம்மை.

---

331 திருப்பட்டீச்சரம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பாடன்மறைசூடன்மதிபல்வனலியோர்பாகமதின்மூன்றிரண்டணையாற்
கூடவெரியூட்டியெழில்காட்டிகிழல்கூடுபொழில்சூழ்பழசையுண்
மாடமழபாடியுறைபட்டீசரமேயகடிகட்டாவினுர்
வேடனிலைகொண்டவரைவீடுநெறிகாட்டிவினைவீடுமலரே. (க)

நீரின்மலிபுன்சடையர்நீளரவுகச்சையதுகச்சிலையதோர்
கூரின்மலிசூலமதுவேந்தியுடைகோவணமுமானினுரிதோல்

காரின்மலிகொன்றைவிரிதார்சுடவுள்காதல்செய்துமேயகர்தான்
பாரின்மலிசீர்பழசைபட்டீசரமேத்தவினைபற்றழியுமே. (உ)

காலம்டவர்கள்புனலாடுவதுகவ்வைகடியார்மறுகெலா
மாலைமணநாறுபழையாறைமழபாடியழகாயமலிசீர்ப்
பாலியனதீறுபுனைமார்பனுறைபட்டீசரமேபரவுவார்
மேலையொருமால்கடல்கள்போற்பெருகிவிண்ணுலகமாளுமவரே. (ஙூ)

கண்ணின்மிசைநண்ணியிழிவிப்பமுகமேத்தகமழ்செஞ்சடையினன்
பண்ணின்மிசைகின்றபலபாணிபடவாடவலபான்மதியினன்
மண்ணின்மிசைநேரின்மழபாடிமலிபட்டீசரமேமருவுவார்
விண்ணின்மிசைவாழுமிமையோரொடுடனுதலதுமேவலெளிதே. (சு)

மருவுமுலவுதிரைமழபாடிமலிமத்தவிழவார்க்கவரையார்
பருவமழைபண்கவர்செய்பட்டீசரமேயபடர்புன்சடையினன்
வெருவமதயானையுரிபோர்த்தமையையஞ்சவருவெள்விடையினை
னுருவமெரிசுழல்கடொழவுள்ளமுடையாரையடையாவினைகளே. (ஙூ)

மறையினெலிதேமொடுபாடுவனபூதமடிமருவிவிரவார்
பறையினெலிபெருகநிகழ்நட்டமமர்பட்டீசரமேயபனிசூர்
பிறையினெடுமருவியதோர்சடையினிடையேற்றபுனறோற்றகிலேயா
பிறைவனடிமுறைமுறையினேத்தமவர்தீத்தொழில்களில்லர்பிகவே. (சூ)

பிறவிபிணிசூப்பினெடுநீங்கியிமையோருலகுபேணவுமுவார்
துறவியெனுமுள்ளமுடையார்கள்கொடிவீதியழகாயதொருசீ
றிறைவனுறைபட்டீசரமேத்தியெழுவார்கள்விணையேதுமிலவாய்
நிறவிரையாலுமொழியாலும்வழிபாடுமறவாதவரே. (எ)

கேசமிகுதோள்வலவனுகியகைவன்மலையைநீக்கியிடலுக்
கீசன்விறல்வாட்டிவரையுற்றவணராதகிரம்பாமகியெ
னீசனுறைபட்டீசரமேத்தியெழுவார்கள்விணையேதுமிலவாய்
காசமறவேண்டுதலினண்ணலெளிதாமமரர்விண்ணுலகமே. (அ)

தூயமலராலுநெடியானுமறியாரவன்முற்றகியின்
னேயவகையான தனையாரதறிவாரணிகொண்மார்பினகலம்
பாயகலநீறதணிவானுமைதனுடுமுறைபட்டீசரமே
மேயவனதீரடியுமேத்தவெளிதாகுநலமேயுலகமே. (கூ)

தடுக்கினையிடுக்கிமடவார்களிடுபிண்டமதுவுண்டுழறுங்
கடுப்பொடியுடற்கயவர்கத்துமொழிகாதல்செய்திடாதகமழ்சேர்
மடக்கயல்வயற்கொண்மழபாடிநகர்நீடுபழையாறையதனுட்
படைக்கொருகரத்தன்மிகுபட்டீசரமேத்தவினைபற்றறுத்தலே. (கo)

மந்தமலிசோலைமழபாடிநகர்நீடுபழையாறையதனிற்
பந்தமுயர்வீடுநலபட்டீசரமேயபடர்புன்சடையினை

யந்தண்மறையோரினிதுவாழ்புகலிஞானசம்பந்தனணியார்
செந்தமிழ்கள்கொண்டினிதுசெப்பவலதொண்டர்வீனிற்பதிலவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பட்டீச்சரநாதர், தேவியார்-பல்வளோயகியம்மை.

---

332. திருத்தேவூர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

காடுபயில்வீடுமுடையோடுகனன்மூடுமுடையாடைபுலிதோ
றேடுபலியூணதுடைவேடமிகுவேதியர்திருத்துதநிதா
ஞடகமதாடமளைபாடல்வரிகோடல்கைமறிப்பலமார்
சேடுமிகுபேடையனமூடிமகிழ்மாடமிசைதேவூரதுவே. (க)

கோளரவுகொன்றைசுகுவெண்டலையெருக்குவனிகொக்கிறகொடும்
வாளரவுதண்சலமகட்குலவுசெஞ்சடைவரத்திறைவனூர்
வேளரவுகொங்கையிளமங்கையர்கள்குங்குமம்விரைக்குமணமார்
தேளரவுதென்றறெருவெங்குறிறைவொன்றிலருதேவூரதுவே. (உ)

பண்டடவுசொல்லிமலல்லியுமைபங்கனெமையாளுமிறைவ
னெண்டடவுவானவரிறைஞ்சுகழலோனினிதிருத்தவிடமாம்
விண்டடவுவார்பொழிலுகுத்தரதவாடிமலர்சூடிவிரையார்
* செண்டடவுமாளிகைசெறிக் துதிருவொன்றிலவளர்தேவூரதுவே. (ஊ)

மாசின்மனநேசர்தமதாசைவளர்சூலதரன்மேலியிமையோ
ரீசன்மறையோதியெரியாடிமிகுபாசுபதன்மேவுபதிதான்
வாசமலர்கோதுகுயில்வாசகமுமாதரவர்பூவைமொழியுக்
தேசவொலிவீணையொடுகீதமதுவீதிறைதேவூரதுவே. (எ)

கானமுறுமான்மறியனூனுரிபோர்வைகனலாடல்புரிவோ
னேனவெயிறுமையிளநாகம்வளர்மார்பினிமையோர்தலைவனூர்
வானளவுசூதமிளவாழைமகிழ்மாதவிபலாகிலவிவார்
தேனமதுவுண்டுவரிவண்டுமருள்பாடிவருதேவூரதுவே. (ஙி)

ஆறிஞெடுகீறுமதியேறுசடையேறுமையார்நகர்கடான்
சீறுமலவேறுபடநீறுசெய்தநீறனமையாளுமரனூர்
வீறுமலரூறுமதுவேறிவளர்வாயவீனின்றகழனிச்
சேறுபடுசெங்கயல்விளிப்பவிளவாலைவருதேவூரதுவே. (சு)

கன்றியெழலென்றிகிழ்தன்றபுரமன்றவியநின்றநகைசெ
யென்றனதுசென்றுறிலையென்றைதனதந்தையமரின்பநகர்தான்
முன்றின்மிசைகின்றபலவின்கனிகடிந்துகறவைக்குரூஉகள்
சென்றிசையகின்றபுதுளியொன்றவிலையாடிவளர்தேவூரதுவே. (எ)

* செண் என்பது செண் எனக் குறுகினின்றது.

ஓதமலிகின்றதெனிலங்கையரையன் மலிபுயங்கணெரியப்
பாதமலிகின்றவிரலொன்றினிலடர்த்தபரமன்றனிடம்
போதமலிகின்றமடவார்கணடமாடலொடுபொங்குமுரவஞ்
சேதமலிகின்றகரம்வென்றிதொழிலாளர்புரிதேவூரதுவே. (அ)

வண்ணமுகிலின்னவெழிலண்ணலொடுசுண்ணமலிவண்ணமலர்மே
னண்ணவனுமெண்ணரியவிண்ணவர்கள்கண்ணவனலங்கொள்பதிதான்
வண்ணவனநுண்ணிடையினெண்ணரியவன்னநடையின்மொழியினூர்
திண்ணவனமாளிகைசெறிந்தவிசையாழ்மருவுதேவூரதுவே. (கூ)

பொச்சமமர்பிச்சைபயிலச்சமணுமெச்சமறுபோதியருமா
மொச்சைபயிலிச்சைகடிபிச்சன்மிகுநச்சரவன்மொச்சுநகர்தான்
மைச்சின்முகில்வைச்சபொழில் (கo)

தங்கமிகுபொங்கரவுதங்குசடைநங்களிறைதன்றுகுழலார்
செங்கயல்கண்மங்கையுமைநங்கையொருபங்கனமர்தேவூரதன்மேற்
பைங்கமலமங்கணிகொடிண்புகலிஞானசம்பந்தனுரைசெய்
சங்கமலிசெந்தமிழ்கள்பத்துமிசைவல்லவர்கள்சங்கையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பத்தாவதிற்குறைவு கிலமானதிற்சேர்ந்தது.

---

333 திருச்சண்பைநகர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

✓ஏந்தமதகரிக்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதிகிசெய்யவளர்தீபமொடுதூபமலிவாய்மையதனு
லந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகொந்தளநன்மாதினெடுமேவுபதிசண்பைநகரே. (க)

அங்கம்விரிதத்தியரவாமைவீரவாரமமர்மார்பிலழகன்
பங்கயமுகத்தரிவையோடுபிரியாதபயில்கின்றபதிதான்
பொங்குபரவைத்திரைகொணர்ந்துபவளத்திரள்பொலிந்தவயலே
சங்குபுரியப்பிதரளத்திரள்பிறங்கொளிகொள்சண்பைநகரே. (உ)

போழுமதிதாழுநதிபொங்கரவுதங்குபுரிபுன்சடையினன்
யாழின்மொழிமாழைவிழியேழையிளமாதினெடிருந்தபதிதான்
வாழைவளர்நாழன்மிழ்மன்னுபுனைதன்னுபொழின்மாடுமடலார்
தாழைமுகிழ்வேழமிருதந்தமெனவுந்துதகுசண்பைநகரே. (ங)

கொட்டமுழவிட்டவடிவட்டணைகடட்டநடமாடிகுலவும்
பட்டதலைகட்டுமலர்மட்டுமலிபாவையொடுமேவுபதிதான்
வட்டமதிதட்டுபொழிலுட்டமதவாய்மைவழுவாதமொழியாற்
சட்டகலியெட்டுமருவெட்டும்வளர்தத்தைபயில்சண்பைநகரே. (ச)

பணங்கெழுவுபாடலினேடாடல்பிரியாதபரமேட்டிபகவ
னணங்கெழுவுபாசமுடையாகமுடையன்பர்பெருமானிடமா
மிணங்கெழுவியாடுகொடிமாடமதினீடுவிரையார்புறவெலாக்
தணங்கெழுவியேடலர்கொடாமரையிலன்னம்வளர்சண்பைநகரே. (நி)

பாலனுயிர்மேலணுவுகாலனுயிர்பாறவுதைசெய்தபரம
னுமையில்போலியலியாயிழைதனேடுமமர்வெய்துமிடமா
மேலமலிசோலையினவண்டுமலர்கிண்டிகறவுண்டிசைசெயச்
சாலிவுயல்கோலமலிசேலுகளீலம்வளர்சண்பைநகரே. (சு)

விண்பொயதனுன்மழைவிழாதொழியினும்விளைவுதான்மிகவுடை
மண்பொயதனுல்வளமிலாதொழியினுந்தமதுவண்மைவழுவா
ருண்பகரவாருலகினுழிபலதேதரினுமியானபதிதான்
சண்பைநகரீசனடிதாழுமடியார்தமதுதன்மையதுவே. (எ)

வரைக்குலமகட்கொருமமறுக்கம்வருவித்தமதியில்வலியுடை
யரக்கனதுரக்கரசிரத்துறவடர்த்தருள்புரிந்தவழக
னிருக்கையதருக்கன்முதலானவிமையோர்குழுமியெழலிழவினிற்
றருக்குலநெருக்குமலித்தண்பொழில்கள்கொண்டலனசண்பைநகரே. (அ)

நீலவரைபோலகிகழ்கேழலுருநீள்பறவைசேருருவமா
மாலுமலரானுமறியாமைவளர்தீயுருவமானவரதன்
சேலுமினவேலுமனகண்ணியொடுகண்ணுபதிசூழ்புறவெலாஞ்
சாலிமலிசோலைகுயில்புள்ளினெடுகிள்ளைபயில்சண்பைநகரே. (கூ)

போதியர்கள்பிண்டியர்கள்போதுவழுவாதவகையுண்டுபலபொய்
யோதியவர்கொண்டுசெய்வதொன்றுமிலைகன்றுதணர்வீருரைமினே
வாதியெமையாளுடையவரிவையொடுபிரிவிலியமர்ந்தபதிதான்
சாதிமணிதெண்டிரைகொணர்ந்துவயல்புகவெறிகொள்சண்பைநகரே. (கூ)

வாரின்மலிகொங்கையுமைநங்கையொடுசங்கரன்மகிழ்ந்தமருமூர்
சாரின்முறைகண்டலிசும்புறமுமுங்கொலிகொள்சண்பைநகர்மேற்
பாரின்மலிவின்றபுகழ்நின்றதமிழ்ஞானசம்பந்தனுரைசெய்
சீரின்மலிசெந்தமிழ்கள்செப்புமவர்சேர்வர்சிவலோகநெறியே. (கசு)

திருச்சிற்றம்பலம்.

---

324 திருவேதவனம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கற்பொலிசுரத்தினெரிகானினிடைமாநடமதாடிமடவா
நிற்பலிகொளப்புகுதுமெந்தைபெருமானிடமென்பர்புவிமேன்
மற்பொலிகலிக்கடன்மலிக்குவடெனத்திரைகொழித்தமணியை
விற்பொலிதுதற்கொடியிடைக்கணிகைமார்கவரும்வேதவனமே. (க)

பண்டிரைபௌவப்புணரியிற்கனகமால்வரையைவட்டரவினைக்
கொண்டுகயிறிற்கடையவந்தவிடமுண்டகுழகன்றனிடமாம்
வண்டிரைகிழற்பொழிலின்மாதவியின்மீதணவுதென்றல்வெறியார்
வெண்டிரைகள்செம்பவளமுந்துகடல்வந்தமொழிவேதவனமே. (உ)

காரியன்மெலோதிநுதிமாதைமுடிவார்சடையில்வைத்தும்மலையார்
நாரியொருபான்மகிழுநம்பருறைவென்பர்நெடுமாடமதுகிற்
றேரியல்விழாவினெழிதிண்பணிலமொண்படகநாளுமிசையால்
வேரிமலிவார்குழுனன்மாதரிசைபாடலொலிவேதவனமே. (ஊ)

நீறுதிருமேனியின்மிசைத்தொளிபெறத்தடவிவந்திடவமே
யேறியுலகங்கடொறும்பிச்சைதுகிர்ச்சையிருந்தபதியா
மூறுபொருளின்றமிழியற்கிளவிதேருமடமாதருடனூர்
வேறுதிசையாடவர்கள்கூறவிசைதேருமெழில்வேதவனமே. (ச)

கத்திரிகைதத்திரிகறங்குதுடிதக்கையொடிடக்கைபடக
மெத்தணியுலப்பில்கருவித்திரளலம்பவிமையோர்கள்பரச
வொத்தறமிகித்தடமிட்டவொருவர்க்கிடமதென்பருலகின்
மெய்த்தகையபத்தரொடுசித்தர்கண்மிடைந்துகளும்வேதவனமே. (நி)

மாலைமதிவாளரவுகொன்றைமலர்துன்றுசடைதின்றுசுழலக்
காலியிலெழுந்தகதிர்தாரகைமடங்கவனலாடுமரனூர்
சோலையின்மடங்கொடாறுமண்டியினவண்டுமதுவுண்டிசைசெய
வேலையொலிசங்குதிரைவங்கசுறவங்கொணருங்வேதவனமே. (சு)

வஞ்சுமனத்தவுணர்வல்லரணமன்றலியவார்சிலைவளைத்
தஞ்சகமவித்தவமரர்க்கமரணிதெருமானதிடமாம்
கிஞ்சுகவிதழ்க்கனிகளூறியசெவ்வாயவர்கள்பாடல்பயில
விஞ்சகவியக்கர்முனிவக்கணநிறைந்தமிடைவேதவனமே. (எ)

முடித்தலைகள்பத்துடைமுருட்டிருவரக்கனெருக்கிவிரலா
ரடித்தலமுன்வைத்தலமரக்கருணைவைத்தனிடம்பலதுயர்
கெடுத்தலகிலீனத்தற்வியற்றுதல்கிளர்ந்துபுலவாணர்வதுமை
விடுத்தலைமைத்துறிதிகல்குமவர்மல்குபதிவேதவனமே. (அ)

வாசமலர்மேவியுறைவானுநெடுமாலுமறியாதநெறியைக்
கூசுதல்செயாதவமணுதரொடுதேர்குமுகர்தவரனூர்
காசுமணிவார்கனகநீடுகடலோடுதிரைவார்துவலைமேல்
வீசுவலைவாணரவைவாரிவிலைபேசுமெழில்வேதவனமே. (கூ-கo)

மந்தமுழவங்கடல்வளங்கெழுவுகாழிபதிமன்னுகவுணி
வெந்தபொடிநீறணியும்வேதவனமேவுசிவனின்னருளினூற்
சந்தமிவைதண்டமிழினின்னிசையெனப்பரவுபாடலுலகிற்
பந்தனுரைகொண்டுமொழிவார்கள்பயில்வார்களுயர்வானுலகமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வேதவனம் என்பது-வேதாரணியம்.

ஆ பதிகம்-எடி.

335 திருமாணிகுழி-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்

பொன்னியல்பொருப்பரையன் மங்கையொருபங்கர்புனறங்குசடைமேல்
வன்னியொடுமத்தமலர்வைத்தவிறல்வித்தகர்மகிழ்ந்துறைவிடங்
கன்னியிளவாளைகுதிகொள்ளவிளவள்ளைபடர்ள்ளல்வயல்வாய்
மன்னியிளமேதிகள்படிந் துமணிசேருதவிமாணிகுழியே. (க)

சோதிபிகுரீதுமெய்பூசியொருதோலுடைபுனைந்துதெருவே
மாதர்மனைதோறுமிசைபாடிவரிபேசுமரனூர்மகிழ்விடந்
தாதமலிதாமரைமணங்கமழவண்டுமுரறண்பழனமிக்
கோதமலிவேலிபுடைசூழலகினீடுதவிமாணிகுழியே. (உ)

அம்பணியகண் ணுமைமடந்தையளஞ்சிவெருவச்சினமுடைக்
கம்பமதயானையுரிசெய்தவரனூர்கருதிமேயவிடமாம்
வம்புமலிசோலைபுடைசூழமணிமாடமதினீடியழகா
ரும்பரவர்கோனகரமென்னமிகமன்னுதவிமாணிகுழியே. (கூ)

சித்தநியமத்தொழிலனுகிநெடுமால்குறளனுகிமிகவுஞ்
சித்தமதொருக்கிவழிபாடுசெயகின்றசிவலோகனிடமாம்
கொத்தலர்மலர்ப்பொழிலினீடுகுலமஞ்ஞைநடமாடலதகண்
டொத்தவரிவண்டுகளுலாவியிசைபாடுதவிமாணிகுழியே. (சு)

மாசின்மதிசூடுசடைமாமுடியர்வல்லசுரர்தொன்னகரமூன்
னுசமதுசெய்துதலவானவர்களுக்கருள்செய்தம்பனிடமாம்
வாசமலிமென்சுழன்மடந்தையர்கண்மாளிகையின்மன்னியழகா
ரூசன்மிசையேறியினிதாகவிசைபாடுதவிமாணிகுழியே. (டு)

மந்தமலர்கொண்டுவழிபாடுசெயுமாணியிர்வவ்வமன மாய்
வந்தவொருகாலனுயிர்மாளவுதைசெய்தமணிகண்டனிடமாஞ்
சந்திஞெடுகாரில்சுமந்துதடமாமலர்கள்கொண்டுகெடில
மூந்துபுனல்வந்துவயல்பாயுமணமாருதவிமாணிகுழியே. (கூ)

எண்பெரியவானவர்களின்றுதிசெய்யவிறையேகருணேயா
யுண்பரியகூஞ்சதனேயுண்டுலகமுய்யவருளுத்தம்னிடம்
பண்பயிலுமம்பண்டுபலகிண்டிமதுவுண்டுகிறைபம்பொழிலின்வர
யொண்பலவினின்கனிசொரிந்துமணநாறுதவிமாணிகுழியே. (எ)

எண்ணமதுவின்றியெழிலார்கையேமாமலையெடுத்தநிறலார்
இண்ணியவரக்கனெரித்தருள்புரிந்தசிவலோகனிடமாம்
பண்ணமருமென்மொழியினர்பணிமுலைப்பவளவாயழகதா
ரொண்ணுதன்மடந்தையர்குடைந்துபுனலாடுதவிமாணிகுழியே. (அ)

நேமிமபனுடனிருமாலுமுணராவகைநிமிர்ந்துமுடிமே
லேமிலவுதிங்கண்மதமத்தமிதழிச்சடையெமீசனிடமா

மாடலவுமல்லிகைகுருந்துகொடிமாதவிசெருந்திகுரவின்
னூடலவுபுன்னைவிரைதாதுமலிசேருதவிமாணிகுழியே. (சு)

மொட்டையமணர்முதுதேரர்மதியில்லிகண்முயன்றனபடும்
முட்டைகண்மொழிந்தமொழிகொண்டருள்செய்யாதமுதல்வன்றனிடமா
மட்டைமலிதாழையிளநீர்முதியவாழையில்வீழ்தவதரில்
லொட்டமலிபூகவிரைதாதுதிரவேறுதவிமாணிகுழியே. (கo)

உந்திவருதண்கெடிலமோடுபுனல்சூழுதவிமாணிகுழிமே
லந்திமதிசூடியவெமானடிசேருமணிகாழிகரான்
சந்தமிறைதண்டமிழ்தெரிந்தணருஞானசம்பந்தனதுசொன்
முந்தியிசைசெய்தமொழிவார்களுடையார்கணெடுவானநிலனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–மாணிக்கமேனியீசுவரர், தேவியார்–மாணிக்கவல்லியம்மை.

---

338 திருவேதிகுடி–திருவிராகம்–பண்–சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கீறுவரியாடரவொடாமைமனவெண்புகிரைபூண்பரிடவ
மேறுவரியாவருமிறைஞ்சுசூழலாதியிருந்தவிடமார்
தாறுவிரிபூகமலிவாழைவிரைநாறவிளவாலைமடிவில்
வேறுபிரியாதவிளையாடவளமாரும்வயல்வேதிகுடியே. (க)

சொற்பிரிவிலாதமறைபாடிநடமாடுவர்தொலாவினையுரிவை
மற்புரிபுயத்தினிதமேவுவரெனாளும்வளர்வானவர்தொழத்
தற்பெரியசுஞ்சமுதமாகமுனையின்றவரியன்றதொருஞீர்
வெற்பரையன்மங்கையொருபங்கர்நகரென்பர்திருவேதிகுடியே. (உ)

போழுமதிபூணரவுகொன்றைமலர்துன்றுசடைவென்றிபுகமேல்
வாழுநதிதாழுமருளாளரிருளார்மிடறர்மாதரிமையோர்
சூழுமிறவாளர்திருமார்பில்விரிதூலர்வரிதோலருடைமேல்
வேழவுரிபோர்வையினர்மேவுபதியென்பர்திருவேதிகுடியே. (ங)

காடர்கரிகாலர்கனல்கையரனன்மெய்யருடல்செய்யர்செவியிற்
றோடர்தெரிளேர்சரிகோவணவராவணவர்தொல்நகர்தான்
பாடலுடையார்களடியார்கண்மலரோடுபுனல்கொண்டுபணிவார்
வேடமொளியானபொடிபூசியிசைமேவுதிருவேதிகுடியே. (ச)

சொக்கர்துணிக்கவெயிலுக்கறமுனிந்ததொழுமூவர்மகிழத்
தக்கவருள்பக்கமுறவைத்தவரனரினிதுதங்குநகர்தான்
கொக்கரவமுற்றபொழில்வெற்றிகிழல்பற்றிவரிவண்டிசைகுலா
மிக்கமரர்மெச்சியினிதச்சமிடர்போகநல்கும்வேதிகுடியே. (ஞ)

செய்யதிருமேனிமிசைவெண்பொடியணிந்துகருமானுரிவைபோர்த்
தையமிடுமென்றுமடமங்கையொடகந்திரியுமண்ணலிடமாம்
வையம்வீலமாறிடினுமேறுபுகழ்மிக்கிழிலாதவகையார்
வெய்யமொழிதண்புலவருக்குரைசெயாதவவர்வேதிகுடியே. (சு)

உன்னியிருபோதுமடிபேணுமடியார்தமிடரொல்கவருளித்
தன்னியொருகால்வருடனுளிழலிருந்ததணிவன் றனிடமாங்
கன்னியரொடாடவர்கண்மாமணம்விரும்பியருமங்கலமிக
மின்னியலுநுண்ணிடைநன்மங்கையரியற்றுபதிவேதிகுடியே. (எ)

உரக்கரெருப்பெழுருக்கிவரைபற்றியவொருத்தன்முடிதோ
ளரக்கனீயடர்த்தவனிசைக்கினிதருல்லியருளங்கணனிட
முருக்கிதழ்மடக்கொடிமடந்தையருமாடவருமொய்த்தகலவை
விரைக்குழன்மிகக்கமழவிண்ணிசையுலாவுதிருவேதிகுடியே. (அ)

பூவின்மிசையக்தணனெடாழிபொலியங்கையனுக்கேடவெரியாயத்
தேவுமிவரல்லரினியாரவரெனனின்முதிகழ்கின்றவரிடம்
பாவலர்களோசையியல்கேள்வியதருதகொடையாளர்பயில்வர
மேவரியசெல்வருெடுமாடம்வளர்வீதிநிகழ்வேதிருடியே. (சு)

வஞ்சமணர்தேரர்மதிகேடர்தமருத்தறிவிலாதவர்மொழி
தஞ்சமெனவென்றுமுணராதவடியார்கருதுசைவனிடமா
மஞ்சுபுலன்வென்றறுவகைப்பொருடெரிந்தெழுவிசைக்கிளவியால்
வெஞ்சினமொழித்தவர்கண்மேவினிகழ்கின்றதிருவேதிகுடியே. (கo)

கந்தமலிதண்பொழினன்மாடமிடைகாழிவளர்ஞானமுணர்சம்
பந்தன்மலிசெந்தமிழின்மாலைகொடுவேதிகுடியாதிகழலே
சிந்தைசெயவல்லவர்கணல்லவர்களென்னநிகழ்வெய்தியமையோ
ரந்தவுலகெய்தியரைசாளுமதுவேசரதமாமிணைமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதபுரீசுவரர், தேவியார்-மங்கையர்க்கரசியம்மை.

---

337 திருக்கோகரணம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

என்றுமரியானயலவர்க்கியலிசைப்பொருள்களாகியென
ணன்றுமொளியானெளிதிறந்தபொன்முடிக்கடவுணண்ணுமிடமா
மொன்றியமனத்தடியர்கூடியமையோர்பரவுநீடரவமார்
குன்றுகணெருங்கிவிரிதண்டலைமிடைந்தவள்ர்கோகரணமே. (க)

பேதைமடமங்கையொருபங்கிடமிகுத்திடவமேறியமரர்
வாதைபடவண்கடலெழுந்தவிடமுண்டவென்வாழ்முடிமா
மாதரொடுமாடவர்கள்வந்தடியிறைஞ்சுசிறைமாமலர்கடூய்க்
கோதைவரிவண்டிசைகொள்கீதமுரல்கின்றவளர்கோகரணமே. (உ)

முறைத்திறமுறப்பொருடெரிக்குமுனிவர்க்கருளியாலநிழல்வாய்
மறைத்திறமறத்தொகுதிகண்டசமயங்களேலகுத்தவனிடங்
துறைத்துறைமிகுத்தருவிதூமலர்சுமந்துவரையுந்திமதகைக்
குறைத்தறையிடக்கரிபுரிந்திடுசாரன்மலிகோகரணமே. (ஊ)

இலைத்தலைமிகுத்தபடையெண்கரம்விளங்கவெரிவீசுமுடிமே
லிலைத்தலைதொகுத்தபுனல்செஞ்சடையில்வைத்தவழகன்றனிடமா
மலைத்தலைவகுத்தமுழைதோறுமுழைவாளரிகள்கேழல்களிறு
சூலைத்தலைமடப்பிடிகள்கூடிவினையாடிகிழ்கோகரணமே. (எ)

தொடைத்தலைமலைத்திதழிதுன்னியவெருக்கலரிவன்னிமுடியின்
சடைத்தலைமிலைச்சியதபோதனனெமாநிபயில்கின்றபதியாம்
படைத்தலைபிடித்தமறவாளரொடுவேடர்கள்பயின்றுகுழுமிக்
குடைத்தலைநெருப்படியகின்றபுபழிதீரநல்குகோகரணமே. (ஏ)

றீறுதிருமேனிமிசையாடிநிறைவார்சழல்சிலம்பொலிசெய
வேறுவிலையாடவிசைகொண்டிடபலிக்குவருமீசனிடமா
மாறுசமயங்களும்விரும்பியடிபேணியாளுகமமிகக்
கூறுமனம்வேறிரதிவந்தடியர்கம்பம்வருகோகரணமே. (ஐ)

கல்லவடமொன்தைகுழுருளமலிகொக்கரையரக்கரைமிசை
பல்லபடநாகம்விரிகோவணவராளநகரென்பரயலே
நல்லமடமாதரரனமமுநவிற்றியதிருத்தமுழுகச்
கொல்லவிடர்கோயகறரப்புகன்கொடுத்தருளுகோகரணமே. (ஒ)

வரைத்தலைநெருக்கியமுருட்டிருணிறத்தவனவாய்களலறவ்
விரற்றலையுகிர்ச்சிறி தலைவத்தபெருமானினிதமேவுமிடமாம்
புரைத்தலைகெடுத்தமுனிவாணர்பொலிவாகியீதிரவதன்மேற்
குரைத்தலைகழற்பணியவோமம்மிலகும்புகைசெய்கோகரணமே. (ஓ)

வில்லிமையினுல்விறலரக்கனுயிர்செற்றவனும்வேதமுதலோ
னில்லியுளதென்றியலிநேடவெரியாகியுயர்கின்றபரனூ
ரெல்லியில்வரைத்தகடல்வட்டமுமிறைஞ்சுகிறைவாசமுருவக்
கொல்லியிலிருங்குறவர்தம்மயிர்புலர்த்திவளர்கோகரணமே. (கூ)

நேசமின்மனச்சமணர்தேரர்கணிரந்தமொழிபொய்களல்வித்
தாசைகொண்மனத்தையடியாரவர்தமக்கருளுமங்கணனிடம்
பாசமதறுத்தவனியற்பெயர்கள்பத்தடையமன்னவனைக்
கூசவகைகண்டுபினவர்க்கருள்கண்கவலகோகரணமே. (கஅ)

கோட்டரவீணும்விரிசாரன்முனெருங்கிவளர்கோகரணமே
யீடமினிதாகவுறைவானடிகள்பேணியணிகாழிநகரா
ணுடியதமிழ்க்கிளவியின்னிசைசெய்ஞானசம்பந்தன்மொழிகள்
பாடவலபத்தரவரெத்திசையுமாள்வர்பரலோகமெளிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தலவதேசத்திலிருப்பது. அத்தத்தேயத்தில் இது ஒரேதலம்.
சுவாமிபெயர் - மாபலாதர், தேவியார் - கோகரணாயகியம்மை.

337திருவீழிமிழலை-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சீர்மருவுதேசினெடுதேசமலிசெல்வமறையோர்கள்பணியத்
தார்மருவுகொன்றையணிதாழ்சடையினனமர்சயங்கொள்பதிதான்
பார்மருவுபங்கயமுயர்த்தவயல்சூழ்பழனவீடவருகே
கார்மருவுவெண்கனகமாளிகைகவின்பெருகுவீழிநகரே. (க)

பட்டமுழவிட்டபணிலத்தினெடுபன்மறைகளோதுபணிசற்
சிட்டர்கள்சயத்திகைகள்செய்யவருள்செய்தழல்கொண்மேனியவனூர்
மட்டுலவுசெங்கமலவேலிவயல்செங்கெல்வளர்மன்னுபொழில்வாய்
விட்டுலவுதென்றல்வீசைநாறுபதிவேதியர்கள்வீழிநகரே. (உ)

மண்ணிழிசுரர்க்குவளமிக்கபதிமற்றமுளமன்னியிர்களுக்
கெண்ணிழிவிலின்பகிகம்வெய்தவெழிலார்பொழிலின்கமுபதம்
பண்ணிழிவிலாதவகைபாடமடமஞ்ஞைநடமாடலழகார்
விண்ணிழிவிமானமுடைவிண்ணவர்பிரான்மருவுவீழிநகரே. (ஊ)

செந்தமிழர்தெய்வமறைநாவர்செழுநற்கலிதெரிந்தவவரோ
டந்தமில்குணத்தவர்களர்ச்சனைகள்செய்யவமர்ன்றவரனூர்
கொந்தலர்பொழிற்பழனவேலிகுளிர்தண்புனல்வளம்பெருகவே
வெந்திறல்விளங்கிவளர்வேதியர்விரும்புபதிவீழிநகரே. (எ)*

பூதபதியாகியபுராணமுனிபுண்ணியனன்மாதைமருவிப்
பேதமிலாதவகைபாகமிகவைத்தபெருமானிடமா
மாதவர்களன்னமறையாளர்கள்வளர்த்தமலிவேள்வியதனு
லேதமிலாதவகையின்பமமர்ன்றவெழில்வீழிநகரே. (ஙி)

மண்ணின்மறையோர்மருவுவைதிகமுமாதவமுமற்றமுலகத்
தெண்ணில்பொருளாயவைபடைத்தவிமையோர்கள்பெருமானிடமா
ணண்ணிவருநாவலர்கணுடொறும்வளர்க்கிகழ்ன்றபுகழ்சேர்
விண்ணுலவுமாளிகைநெருங்கிவளர்நீள்புரிசைவீழிநகரே. (சு)

மன்திரநன்மாமறையினேடுவளர்வேள்விமிசைமிக்கபுகைபோ
யன்தரவிசும்பணவியற்புதமெனப்படருமாழியிருள்வாய்
மன்தரநன்மாளிகைநிலாவுமணிமீடுதிர்விட்டவொளிபோய்
வென்றழல்விளக்கெனவிரும்பினர்திருத்துபதிவீழிநகரே. (எ)

ஆனவலியிற்றசமுகசன்றலியரங்கவணியாழிவிரலா
லூனமருயர்ச்தருருதிப்புனலில்வீழ்தரவுணர்ந்தபரனூர்
தேனமர்திருத்துபொழில்செங்கனகமாளிகைதிகழ்ந்தமதிலோ
டானதிருவற்றுவளரச்தணர்நிறைந்தவனிவீழிநகரே. (அ)

ஏனவுருவாகிமணிடன்தலிமையோனுமெழிலன்னவுருவ
மானவனுமாதியினெடன்தமறியாதவழன்மேனியவனூர்
வானணவுமாமதின்மருங்கலர்செருங்கியவளங்கொள்பொழில்வாய்
வேனன்மலர்வெய்திடவிளங்கொளியின்மிக்கபுகழ்வீழிநகரே. (கூ)

குண்டமணராகியொருகோலமிகுபீலியொடுகுண்டிகைபிடித்
தெண்டிசையுமில்லதொருதெய்வமுளதென்பரதுவென்னபொருளாம்
பண்டையயனன்னவர்கள்பாவனவிரும்புபரன்மேவுபதிசீர்
வெண்டரளவாணகைநன்மாதர்கள்விளங்குமெழில்வீழிநகரே. (கo)

மத்தமலிகொன்றைவளர்வார்சடையில்வைத்தபரன்வீழிநகர்சேர்
வித்தகனெவெங்குருவில்வேதியன்விரும்புதமிழ்மாலைகள்வல்லார்
தெத்திரவிமானமமர்செல்வமலிகின்றசிவலோகமருவி
யத்தகுகுணத்தவர்களாகியனுபோகமோடியோகவரதே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

337 திருத்தோணிபுரம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சங்கமருமுன்கைமடமாதையொருபாலுட்னிரும்பி
யங்கமுடன்மேலுறவணிர்துபிணிதீரவருள்செய்யு
மெங்கள்பெருமானிடமெனத்தருமுனீர்கடலின்முத்தந்
துங்கமணியிப்பிகள்கரைக்குவருதோணிபுரமாமே. (க)

சல்லரியியாழ்முழவமொர்தைருமுழுரைமதியம்பக்
கல்லரியமாமலையர்பாவையொருபாகமிலைசெய்
தல்லெரிகையேர்திடமாடுசடையண்ணலிடமென்பர்
சொல்லரியதொண்டர்துதிசெய்யவளர்தோணிபுரமாமே. (உ)

வண்டரவுகொன்றைவளர்புன்சடையின்மேன்மதியம்வைத்துப்
பண்டரவுதன்னரையிலார்த்தபரமேட்டிபழிதீரத்
தண்டரவவொண்கடலினஞ்சமமுதண்டகடவுள்ளூர்
தொண்டரவர்மிண்டிவழிபாடுமல்குதோணிபுரமாமே. (ங)

கொல்லிவிடையேறுடையகோவணவனுவணமாலை
யொல்லியுடையான்டையலாரணமொள்ளழல்விளித்த
வில்லியுடையான்மிகவிரும்புபதிமேலிவளர்தொண்டர்
சொல்லியடைவாகவிட்டீர்த்தருள்செய்தோணிபுரமாமே. (ச)

தேயுமதியஞ்சடையிலங்கிடலிலங்கன் மலிகானிற்
காயுமடுதிண்கரியினீருரிவைபோர்த்தவனினப்பார்
தாயெனநிறைந்ததொருதன்மையினர்நன்மையெடுவாழ்வு
தூயமறையாளர்முறையோதிநிறைதோணிபுரமாமே. (கூ)

பற்றலர்தமூப்புரமெரித்தடிபணிந்தவர்கண்மேலேக்
குற்றமதொழித்தருளுகொள்கையினன்வெள்ளிண்முதுகானிற்
பற்றவனிசைக்கிளவிபாரிடமதேத்தநடமாடுந்
தற்றசடையத்தனுறைகின்றபதிதோணிபுரமாமே. (சு)

பண்ணமருநான்மறையர்நூன்முறையின்றிருமார்பிற்
பெண்ணமருமேனியினர்தம்பெருமைபேசுமடியார்மெய்த்
திண்ணமரும்வல்வினைகடீரவருள்செய்தலுடையாணூர்
ஆடினுரொருவர்போலுமலர்கமழ்குழலினுலோக்
கூடினுரொருவர்போலுங்குளிர்புனல்வளர்ந்ததிங்கள்
சூடினுரொருவர்போலுந்தூயகான் மறைகளுண்கும்
பாடினுரொருவர்போலும்பழனத்தெம்பரமனுரே. (க)

போவதோர்நெறியுமானுர்புரிசடைப்புனிதனுர்நான்
வேவதோர்வினையிற்பட்டுவெம்மைதான்விடவுங்கில்லேன்
கூவருனவர்கள்கோளார்குணமிலாவைவர்செய்யும்
பாவமேதிரின்ருர்பழனத்தெம்பரமனுரே. (உ)

கண்டராய்முண்டராகிக்கையிலோர்கபாலமேந்தித்
தொண்டர்கள்பாடியாடித்தொழுகழற்பரமனுர்தாம்
விண்டவர்புரங்களெய்தவேதியர்வேதநாவர்
பண்டையென்வினைகடீர்ப்பார்பழனத்தெம்பரமனுரே. (ஊ)

நீரவன்றீயினேடுநிழலவனெழிலதாய
பாரவன்விண்ணின்மிக்கபரமவன்பரமயோகி
யாரவனண்டமிக்கதிசையினேடொளிகளாகிப்
பாரகத்தமுதமானுர்பழனத்தெம்பரமனுரே. (எ)

ஊழியாரூழிதோறுமுலகினுக்கொருவராகிப்
பாழியார்பாவந்தீர்க்கும்பரம்பரபரமதாய
ஆழியானன்னதாணுமன்றவளப்பரிய
பாழியார்பரவியேத்தும்பழனத்தெம்பரமனுரே. (டு)

ஆலின்கீழறங்களெல்லாமன்றவர்க்கருளிச்செய்து
நூலின்கீழவர்கட்கெல்லாநுண்பொருளாகிநின்று
காலின்கீழ்க்காலன்றன்னைக்கடுக்கத்தான்பாய்ந்துபின்னும்
பாலின்கீழ்நெய்யுமானுர்பழனத்தெம்பரமனுரே. (சு)

ஆதித்தனங்கிசோமனயனெமமால்புதனும்
போதித்துங்கின்றமுலகிற்போற்றிசைத்தாரிவர்கள்
சோதித்தாரேழுலகுஞ்சோதியுட்சோதியாகிப்
பாதிப்பெண்ணுருவமானுர்பழனத்தெம்பரமனுரே. (எ)

காற்றனுற்காலற்காய்ந்துகாரிருள்போற்றவிசர்
தோற்றனுர்கடலுண்ஞசத்தோடைக்காதர்சோதி
ஏற்றினரிளவெண்டிங்களிரும்பொழில்சூழ்ந்தகாயம்
பாற்றினர்வினைகளெல்லாம்பழனத்தெம்பரமனுரே. (அ)

கண்ணனும்பிரமனேடுகாண்கிலராகிவந்தே
எண்ணினர்துதித்துமேத்தவெரியருவாகிநின்று
வண்ணநன்மலர்கடீவிவாழ்த்துவாவாழ்த்தியேத்தப்
பண்ணுலாம்பாடல்கேட்டார்பழனத்தெம்பரமனுரே. (கூ)

சூடையுடையரக்கன்சென்றுருளிரக்கயிலர்மெவெற்பி
னிடைமடவரலையஞ்சவெடுத்தவுமிறைவனேக்கி
விடையுடைவிகிர்தன்ருணும்விரலினுலூன்றிமீண்டும்
படைகொடையடிகள்போலும்பழனத்தெம்பரமனுரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆபத்சகாயர், தேவியார்-பெரியநாயகியம்மை.

திருநெய்த்தானம்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

காலனீவீழச்செற்றகழலடியிரண்டும்வந்தென்
மேலவாயிருக்கப்பெற்றேன்மேதகத்தான்றுகின்ற
கோலநெய்த்தானமென்னுங்குளிர்பொழிற்கோயின்மேய
நீலம்வைத்தனையகண்டனீன்க்குமாநீன்க்கின்றேனே. (க)

காமனையன்றுகண்ணற்கனலெரியாகநோக்கித்
தூபமுக்தீபங்காட்டித்தொழுமவர்க்கருள்கள்செய்து
சேமநெய்த்தானமென்னுஞ்செறிபொழிற்கோயின்மேய
வாமனீனீன்தநெஞ்சம்வாழ்வுறநீனைத்தவாறே. (உ)

பிறைதருசடையின்மேலேபெய்புனற்கங்கைதன்னை
யுறைதரவைத்தவெங்களுத்தமனூழியாய
நிறைதருபொழில்கள்சூழநின்றநெய்த்தானமென்று
குறைதருமடியவர்க்குக்குழகனைக்கூடலாமே. (ங)

வடிதருமழுவொன்றேந்திவார்சடைமதியம்வைத்துப்
பொடிதருமேனிமேலேபுரிதருதூலர்போலு
நெடிதருபொழில்கள்சூழநின்றநெய்த்தானமேவி
யடிதருகழல்களார்ப்பவாடுமம்மண்ணலாரே. (ச)

காடிடமாகநின்றுகனலெரிகையிலேந்திப்
பாடியபூதஞ்சூழப்பண்ணுடன்பலவுஞ்சொல்லி
யாடியகழலார்சீராரத்தனெய்த்தானமென்றுங்
கூடியகுழகரைக்கூடுமாறறிகிலேனே. (ஞ)

வானவர்வணங்கியேத்திவைகலுமலர்கொடேவத்
தானவர்க்கருள்கள்செய்யுஞ்சங்கரன்செங்கணேற்றன்
தேனமர்பொழில்கள்சூழத்திகழுநெய்த்தானமேய
கூனிளமதியினீனக்கூடுமாறறிகிலேனே. (சு)

காலதிற்கழல்களார்ப்பக்கனலெரிகையில்வீசி
ஞாலமுங்குழியகின்றுகாட்டமதாடுகின்ற
மேலவாமுகடுதீயவிரிசடைதிசைகள்பாய
மாலொருபாகமாகுமகிழ்ந்தநெய்த்தானனூரே. (எ)

பன்றித்தசடையின்மேலேபாய்புனலதீனைவைத்து
அன்றிப்போதனலுமாடியடிகளீயாறுபுக்கார்
வன்றிப்பாரவணங்கிநின்றுவாழ்த்தவார்வாயினுள்ளார்
சென்றிப்பார்சிக்தையுள்ளார்திருநெய்த்தானனூரே. (அ)

சோதியாய்ச்சுடருமானைச்சண்ணவெண்சாந்துபூசி
ஓதிவாயுலகமேத்தவுகந்துதாமருள்கள்செய்வார்

ஆகியாயந்தமானர்யாவருமிறைஞ்சியேத்த
நீதியாய்நியமமாகிநின்றநெய்த்தானனாரே. (சு)

இலையுடைப்படைகையேந்துமிலங்கையர்மன்னன்றன்னைத்
தலையுடனடர்த்துமீண்டேதானவற்கருள்கள்செய்த
சிலையுடன்கணையைச்சேர்த்துத்திரிபுரமெரியச்செற்ற
கிலையுடையடிகள்போலுறின்றநெய்த்தானனாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நெய்யாடியப்பர், தேவியார்-பாலாம்பிகையம்மை.

திருவையாறு-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்பொறியரவம்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார்மான்மறிமழுவும்வைத்தார்
அங்கையுளனலும்வைத்தாரையனேயாறனாரே. (க)

பொடிதனைப்பூசவைத்தார்பொங்குவெண்ணூலும்வைத்தார்
கடியதோர்நாகம்வைத்தார்காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகம்வைத்தார்
அடியிணைதொழவும்வைத்தாரையனேயாறனாரே. (உ)

உடைதருகீளும்வைத்தாருலகங்களனைத்தும்வைத்தார்
படைதருமழுவும்வைத்தார்பாய்புலித்தோலும்வைத்தார்
விடைதருகொடியும்வைத்தார்வெண்புரிநூலும்வைத்தார்
அடைதரவருளும்வைத்தாரையனேயாறனாரே. (கூ)

தொண்டர்கள்தொழவும்வைத்தார்தூமதிசடையில்வைத்தார்
இண்டையைத்திகழவைத்தாரெமக்கென்றுமின்பம்வைத்தார்
வண்டுசேர்குழலினாரையுமருவியோர்பாகம்வைத்தார்
அண்டவானவர்களேத்துமையனேயாறனாரே. (சு)

வானவர்வணங்கவைத்தார்வல்வினைமாயவைத்தார்
கானிடைநடமும்வைத்தார்காமனைக்கனலாவைத்தார்
ஆனிடையைந்தும்வைத்தாராட்டுவார்க்கருளும்வைத்தார்
ஆனையினுரிவைவைத்தாரையனேயாறனாரே. (எ)

சங்கணிகுழையும்வைத்தார்சாம்பல்மெய்ப்பூசவைத்தார்
வெங்கதிரெரியவைத்தார்விரிபொழிலினைத்தும்வைத்தார்
கங்குலும்பகலும்வைத்தார்கடுவினைகளையவைத்தார்
அங்கமதோதவைத்தாரையனேயாறனாரே. (கூ)

பத்தர்கட்கருளும்வைத்தார்பாய்விடையேறவைத்தார்
சித்தத்தையொன்றவைத்தார்சிவமதினியவைத்தார்
முத்தியைமுற்றவைத்தார்முறைமுறைநெறிகள்வைத்தார்
அத்தியினுரிவைவைத்தாரையனீயாறனரே. (எ)

ஏறுகந்தேறவைத்தாரிடைமருதிடமும்வைத்தார்
நாறுபூங்கொன்றைவைத்தார்நாகமுமரையில்வைத்தார்
கூறுமையாகம்வைத்தார்கொல்புலித்தோலும்வைத்தார்
ஆறுமோர்சடையில்வைத்தாரையனீயாறனரே. (அ)

பூதங்கள்பலவும்வைத்தார்பொங்குவெண்ணீறும்வைத்தார்
கீதங்கள்பாடவைத்தார்கின்னரந்தன்னைவைத்தார்
பாதங்கள்பரவவைத்தார்பத்தர்கள்பணியவைத்தார்
ஆதியுமந்தம்வைத்தாரையனீயாறனரே. (கூ)

இரப்பவர்க்கீயவைத்தாரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங்கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்க்கங்கைதன்னைப்படர்சடைப்பாகம்வைத்தார்
அரக்கனுக்கருளும்வைத்தாரையனீயாறனரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செம்பொற்சோதீசுவரர், தேவியார்-அறம்வளர்த்தாயிகி.

திருவையாறு-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குண்டனுஞ்சமணரோடேகூடிநான்கொண்டமாலைத்
தண்டனேசுடர்கொள்சோதிதுநெறியாகின்ற
அண்டனேயமரரேறேதிருவையாறமர்ந்ததேனே
தொண்டனேன்றொழுதன்பதருஞ்சொல்லிகான்றிரிகின்றேனே. (க)

பீலிகையிடுக்கிநாளும்பெரியதோர்தவமென்றெண்ணி
வாலியதறிகள்போலமதியிலார்பட்டதென்னே
வாலியார்வணங்கியேத்துந்திருவையாறமர்ந்ததேனே
டாலியாவெழுந்தநெஞ்சமழிதரவெழுந்தவாறே. (உ)

தட்டிடுஞ்சமணரோடேதருக்கிகான்றவமென்றெண்ணி
யொட்டிடுமனத்தினீரேயும்மையான்செய்வதென்னே
மொட்டிடுகமலப்பொய்கைத்திருவையாறமர்ந்ததேனே
டொட்டிடுமுள்ளத்தீரேயும்மைநானுகந்திட்டேனே. (ஊ)

பாசிப்பல்மாசுமெய்யர்பலமிலாச்சமணரோடு
நேசத்தாலிருந்தநெஞ்சைநீக்குமாறறியமாட்டேன்

தேசத்தார்பரவியேத்துந்திருவையாறமர்ந்ததேனே
வாசத்தால்வணங்கவல்லார்வல்வினைமாயுமன்றே. (சு)

கடுப்பொடியட்டிமெய்யிற்கருதியோர்தவமென்றெண்ணி
வடுக்களோடிசைந்தநெஞ்சேமதியிலிபட்டதென்னே
மடுக்களில்வாளைபாயுந்திருவையாறமர்ந்ததேனே
யடுத்துநின்றுனுநெஞ்சேயருந்தவஞ்செய்தவாறே. (டு)

துறவியென்றவமதோரேன்சொல்லியசெலவுசெய்து
உறவினுலமணரோடுமுணர்விலேனுணர்வொன்றின்றி
நறவமார்பொழில்கள்சூழ்ந்தநிருவையாறமர்ந்ததேனே
மறவிலாநெஞ்சமேநன்மதியுனக்கடைந்தவாறே. (சு)

பல்லுரைச்சமணரோடேபலபலகாலமெல்லாஞ்
சொல்லியசெலவுசெய்தேன்சோர்வனினைந்தபோது
மல்லிகைமலருஞ்சோலைத்திருவையாறமர்ந்ததேனே
எல்லியும்பகலுமெல்லாநினைந்தபோதினியவாறே. (எ)

மண்ணுளார்விண்ணுளாரும்வணங்குவார்பாவம்போக
எண்ணிலாச்சமணரோடேயிசைந்தனேயழைநெஞ்சே
தெண்ணிலாவெறிக்குஞ்சென்னித்திருவையாறமர்ந்ததேனைக்
கண்ணினுற்காணப்பெற்றுக்கருதிற்றேமுடிந்தவாறே. (அ)

குருந்தமதாசித்தமாலும்குலமலர்மேனினும்
திருந்துதற்றிருவடியுந்திருமுடிகாணமாட்டார்
அருந்தவமுனிவரேத்துந்திருவையாறமர்ந்ததேனைப்
பொருந்தினின்றுனுநெஞ்சேபொய்வினைமாயுமன்றே. (கூ)

அறிவிலாவரக்கனெடியருவரையெடுக்கலுற்று
முறுகினுன்முடிகக்கண்டுமுதறிவாளனெக்கி
நிறுவினன்சிறுவிரலால்நெரிந்துபோய்நிலத்தில்வீழ
அறிவினுலருள்கள்செய்தான்றிருவையாறமர்ந்ததேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செம்பொற்சோதிசுவரர், தேவியார்-அறம்வளர்த்தாயகி.

திருவையாறு-பண்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தானலாலகமிலில்லைச்சமலாதடிமையில்லைக்
கானலாதாடலில்லைக்கருதவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லைவார்குழன்மங்கையோடும்
ஆனலாதூர்வதில்லையணியாறனூர்க்கே. (க)

ஆலலாலிருக்கையில்லையருந்தவமுனிவர்க்கன்று
நூலலாலெடிவதில்லைநுண்பொருளாய்க்துகொண்டு

மாலுநான்முகனுங்கூடி மலரடிவணங்கவேலை
ஆலாலமுதமிலையையனீயாறனூர்க்கே. (உ)

நரிபுரிசுடலைதன்னிடமானவிற்றலில்லைச்
சுரிபுரிகுழலியோடுந் துணையலாலிருக்கையில்லைத்
தெரிபுரிசிந்தையார்க்குத்தெளிவலாலருளுமில்லை
யரிபுரிமலர்கொண்டேத்துமையனீயாறனூர்க்கே. (ஊ)

தொண்டலாற்றுணையுமில்லைத்தோலலாதுடையுமில்லைக்
கண்டலாதருளுமில்லைக்கலந்தபின்பிரிவதில்லைப்
பண்டைநான்மறைகள்காணப்பரிசினனென்றென்றெண்ணி
யண்டவானவர்களேத்துமையனீயாறனூர்க்கே. (எ)

எரியலாலுருவமில்லையேறலாலேறலில்லைக்
கரியலாற்போர்வையில்லைக்காண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாவமர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்தும்
அரியலாற்றேவியில்லையையனீயாறனூர்க்கே. (ஙி)

என்பலாற்கலனுமில்லையெருதலாலூர்வதில்லைப்
புன்புலால்நாயுகாட்டிற்பொடியலாற்சார்தமில்லைத்
தன்பிலாத்தொண்டர்கூடித்தொழுதழுதாடிப்பாடும்
அன்பலாற்பொருளுமில்லையையனீயாறனூர்க்கே. (சு)

கீளலாதுடையுமில்லைக்கிளர்பொறியரவம்பைம்பூண்
டோளலாற்றுணையுமில்லைத்தொத்தலர்கின்றவேனில்
வேளலாற்காயப்பட்டவீரருமில்லைபீளா
ஆளலாற்கைம்மாறில்லையையனீயாறனூர்க்கே. (எ)

சகமலாதடமையில்லைத்தானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையாளுண்மலர்தொழுதிதூவி
முகமெலாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்தத்தொண்டர்
அகமலர்ற்கோயிலில்லையையனீயாறனூர்க்கே. (அ)

உமையலாதருவமில்லையுலகலாதுடையதில்லை
நமையெலாமுடையராவர்நன்மையேதீமையில்லைக்
கமையெலாமுடையராகிக்கழலடிபரவுந்தொண்டர்க்
கமையிலாவருள்கொடுப்பாரையனீயாறனூர்க்கே. (கூ)

மலையலாலிருக்கையில்லைமதித்திடாவரக்கன்றண்ணீத்
தலையலானெரித்ததில்லைத்தடவரைக்கீழடர்த்து
நிலையிலார்புரங்கள்வேவநெருப்பலால்விரித்ததில்லை
யலையினர்பொன்னிமன்னுமையனீயாறனூர்க்கே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

ஆறாம்பதிகம்—சo.

திருச்சோற்றுத் துறை–திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பொய்விராமேனிதன்னைப்பொருளெனக்காலம்போக்கி
மெய்விராமனத்தனல்வேதியர்வேதராவர்
வைவரலலைக்கப்பட்டவாக்கைகொண்டயர்த்துப்போனேன்
செய்வராலகளுஞ்செம்மைத்திருச்சோற்றுத்துறையனரே. (க)

கட்டராய்நின்றுநீங்கள்காலத்தைக்கழிக்கவேண்டா
எட்டவாங்கைகள்வீசியெல்லின்றுவாரீன
யட்டமாமலர்கள்கொண்டேயானஞ்சுமாட்டவாடிச்
சிட்டராயருள்கள்செய்வார்திருச்சோற்றுத்துறையனரே. (உ)

கல்லினற்புரமூன்றெய்தகடவுளைக்காதலாலே
யெல்லியும்பகலுமுள்ளேயேகாந்தமாகவேத்தும்
பல்லிலிவெண்டலைகையேற்பிப்பல்லிலந்திரியுஞ்செல்வர்
சொல்லுணின்பொருளுமாவார்திருச்சோற்றுத்துறையனரே. (ங)

கறையராய்க்கண்டநெற்றிக்கண்ணராய்ப்பெண்ணேர்பாக
மிறையராயினியராகித்தனியராய்ப்பனிவெண்டிங்கட்
பிறையராய்ச்செய்தலெல்லாம்பீடராய்க்கேடில்சோற்றுத்
துறையராய்ப்புகுந்தெனுள்ளச்சோர்வுகண்டருளினரே. (ச)

பொந்தையைப்பொருளாவெண்ணிப்பொருக்கெனக்காலம்போனே
னெந்தையேயேகமூர்த்தியென்றுநின்றேத்தமாட்டேன்
பந்தமாய்வீடுமாகிப்பரம்பரமாகிநின்று
சிந்தையுட்டேறல்போலுந்திருச்சோற்றுத்துறையனரே. (ஞ)

பேர்த்தினிப்பிறவாவண்ணம்பிதற்றுமின்பேதைபங்கன்
பார்த்தனுக்கருள்கள்செய்தபாசுபதன்றிறமே
யார்த்தவுந்திழிவதொத்தவலைபுனற்கங்கையேற்றுத்
தீர்த்தமாப்போதவிட்டார்திருச்சோற்றுத்துறையனரே. (சு)

கொந்தார்பூங்குழலினரைக்கூறியேகாலம்போன
வெந்தையெம்பிரானுய்நின்றவிறைவனேயத்தாதந்தோ
மூந்தராவல்குலாரையுடன்வைத்தவாதிமூர்த்தி
செந்தாதுபுடைகள்சூழ்ந்ததிருச்சோற்றுத்துறையனரே. (எ)

அங்கதிரோனவனேயண்ணாமாக்கருதவேண்டா
வெங்கதிரோன்வழியேபோவதற்கமைந்துகொண்மின்
அங்கதிரோனவனையுடன்வைத்தவாதிமூர்த்தி
செங்கதிரோன்வணங்குந்திருச்சோற்றுத்துறையனரே. (அ)

ஓதியேகழிக்கின்றீர்களுலகத்தீரொருவன்றன்னை
நீதியால்நினையமாட்டீர்நின்மலனென்றுசொல்லீர்

சாதியாநான்முகனுஞ்சக்கரத்தானுங்காணாச்
சோதியாய்ச்சுடராதானுர்திருச்சோற்றுத்துறையனரே. (கூ)

மற்றுநீர்மனம்வையாதேமறுமையைக்கழிக்கவேண்டிற்
பெற்றதோருபாயந்தன்னற்பிரானேயிதற்றுமின்கள்
கற்றுவந்தரக்கனெடுக்கயிலாயமலெடுக்கச்
செற்றுகந்தருளிச்செய்தார்திருச்சோற்றுத்துறையனரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தொலையாச்செல்வர், தேவியார்-ஒப்பிலாம்பிகை.

திருத்துருத்தி-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பொருத்திபகுரம்பைதன்னிற்பொருளெனக்கருதவேண்டா
இருத்தியெப்போதுநெஞ்சுளிறைவனேயெத்தமின்கள்
ஒருத்தியைப்பாகம்வைத்தங்கொருத்தியைச்சடையுள்வைத்த
திருத்தியஞ்சுடரினுனைத்தொண்டனேன்கண்டவாறே. (க)

சவைதனிச்செய்துவாழ்வான்சலத்தினேயழுந்துகின்ற
விவையொருபொருளுமல்லவிறைவனேயெத்தமின்னே
அவைபுரமூன்றுமெய்தமடியவர்க்கருளிச்செய்த
சுவையினைத்திருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (உ)

உன்னியெப்போதுநெஞ்சுளொருவனேயெத்தமின்னே
கன்னியையொருபால்வைத்தக்கங்கையைச்சடையுள்வைத்துப்
பொன்னியினடுவுதன்னுட்பூம்புனல்பொலிந்துதோன்றும்
துன்னியதிருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (கூ)

ஊன்றலிலவியனுகியுலகத்தளரூயிர்கட்கெல்லாங்
தான்றலைப்பட்டுதின்றுசார்கனலகத்தவீழ
வான்றலைத்தேவர்கூடிவானவர்க்கிறைவாவென்னுங்
தேன்றலைத்திருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (ச)

உடறனைக்கழிக்கலுற்றவுலகத்தளரூயிர்கட்கெல்லாம்
இடர்தனைக்கழிக்கவேண்டிலிறைவனேயெத்தமின்னே
கடறனினஞ்சமுண்டுகாண்பரிதாகிகின்ற
சுடர்தனைத்திருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (டு)

அள்ளலைக்கடக்கவேண்டிலரனேயினிமினீர்கள்
கொள்ளலிக்காயந்தன்னுட்புண்டரீகத்திருந்த
வள்ளலைவானவர்க்குங்காண்பரிதாகிகின்ற
துள்ளலைத்திருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (சு)

பாதியிலுமையாள் தன்னேப்பாகமாவைத்தபண்பன்
வேதியனென்றுசொல்லிவிண்ணவர்விரும்பியேத்தச்
சாதியாஞ்சதுமுகனுஞ்சக்கரத்தானுங்காணாச்
சோதியைத்தூருத்தியானேத்தொண்டனேன்கண்டவாறே. (எ)

சாமனிவாழ்க்கையானசலத்தினுளழுந்தவேண்டா
தூமலலகிலுங்காட்டித்தொழுதடிவணங்குமின்னே
சோமனிச்சடையுள்வைத்துத்தொன்னெறிபலவுங்காட்டுக்
தூமனற்றூருத்தியானேத்தொண்டனேன்கண்டவாறே. (அ)

குண்டரேசமணர்புத்தர்குறியறியாதுமின்றூ
கண்டதேகருதுவார்கள்கருத்தெண்ணுதொழிமினீர்கள்
விண்டவர்புரங்களெய்துவிண்ணவர்க்கருள்கள்செய்த
தொண்டர்கள்தூணியுனேத்தருத்திராந்கண்டவாறே. (சு)

பிண்டத்தைக்கழிக்கவேண்டிற்பிராணியேபிதற்றுமின்கள்
அண்டத்தைக்கழியநீண்டவடலரக்கன்றனண்மை
கண்டொத்துக்கால்விரலாலுன்றிமீண்டருளிச்செய்த
துண்டத்துத்திருத்தியானேத்தொண்டனேன்கண்டவாறே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதேசுவரர், தேவியார்-முயிழாம்பிகையம்மை.

திருக்காஞ்சித்திருமேற்றளி-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மறையதுபாடிப்பிச்சைக்கென்றகந்திரிந்துவாழ்வார்
பிறையதுசடைமுடிமேற்பெய்வனோபடன்னேடுங்
கறையதுகண்டங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளார்
மிறையவர்பாடலாடலிலங்குமேற்றளியனூரே. (க)

மாலியமாயன்றன்னேமகிழ்ந்தனர்விருத்தராகும்
பாலனைப்பசுபதியார்பால்வெள்ளீருழுஞ்சிக்
காலனைக்காலாற்செற்றார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏலகற்கடம்பன்றூதையிலங்குமேற்றளியனூரே. (உ)

விண்ணிடைவிண்ணவர்கள்விரும்பிவந்திறைஞ்சிவாழ்த்தப்
பண்ணிடைச்சுவையின்பிக்கின்னரம்பாடல்கேட்டார்
கண்ணிடைமணியினெப்பார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எண்ணிடையெழுத்துமானரிலங்குமேற்றளியனூரே. (ங)

சேசமனியரவினேடுசூழ்தரக்கங்கையுடும்
வாமனிவானவர்கள்வலங்கொடுவந்துபோற்றக்
காமனைக்காய்த்தகண்ணுர்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏமநின்றுடுமென்தையிலங்குமேற்றளியனூரே. (ச)

ஊனவனுயிரினேடுமுலகங்களுழியாகித்
தானவர்தனமுமாகித்தனஞ்சயனேடெதிர்த்த
கானவர்காளகண்டர்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏனமக்கோடுபூண்பாரிலங்குமேற்றளியனரே. (நி)

மாயனும்மாலுஞ்சிமலரவனுஞ்சிமண்ணுய்த்
தேயமாய்த்திசையெட்டாகித்தீர்த்தமாய்த்திரிதர்கின்ற
காயமாய்க்காயத்துள்ளார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏயமென்றேளிபாகரிலங்குமேற்றளியனரே. (சு)

மண்ணினேயுண்டமாயன்றன்னேயோர்பாகங்கொண்டார்
பண்ணினேப்பாடியாடும்பத்தர்கள்சித்தங்கொண்டார்
கண்ணினேமூன்றுங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எண்ணினேயெண்ணவைத்தாரிலங்குமேற்றளியனரே. (எ)

செல்வியைப்பாகங்கொண்டார்சேர்த்தினமகனுக்கொண்டார்
மல்லிகைக்கண்ணியோடுமாமலர்க்கொன்றைசூடிக்
கல்வியைக்கரையிலாதகாஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எல்லியைவிளங்கின்றூரிலங்குமேற்றளியனரே. (அ)

வேறிணேயின்றியென்றும்விளங்கொளிமருங்கினேக்
கூறியலாகவைத்தார்கோளராமதியும்வைத்தார்
ஆறினேச்சடையுள்வைத்தாரணிபொழிற்சுச்சிதன்னுள்
ஏறினேயேறுமெந்தையிலங்குமேற்றளியனரே. (கூ)

தென்னவன்மலியெடுக்கச்சேயிழைநடுங்கக்கண்டு
மன்னவன்விரலாலூன்றமணிமுடிநெரியவாயாற்
கன்னலின்கீதம்பாடக்கேட்டவர்காஞ்சிதன்னுள்
இன்னவற்கருளிச்செய்தாரிலங்குமேற்றளியனரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமேற்றளிநாதர், தேவியார்-திருமேற்றளிநாயகி.

திருவெகம்பம்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனேநகரமூன்றுமெரியுணவெருவீநோக்கும்
அம்பனேயமுதையாற்றையணிபொழிற்சுச்சியுள்ளே
கம்பனேக்கதிர்வெண்டிங்கட்செஞ்சடைக்கடவுடன்னைச்
செம்பொனேப்பவளத்தூணேச்சிந்தியாவெழுகின்றேனே. (க)

ஒருமுழமுள்ளகுட்டமொன்பதுதானியுடைத்தா
யுரைமுழமதனகலமதனில்வாழ்முதலையைத்து

பெருமுழைவாய்தல்பற்றிக்கிடந்தான்பிதற்றுகின்றேன்
கருமுகிறவமூமாடக்கச்சியேகம்பனீரே. (உ)

மலையினார்மகளோர்பாகமைந்தனார்மருவொன்றேந்திச்
சிலையினல்மதில்கண்மூன்றுதியெழச்செற்றசெல்வர்
இலையினார்சூலமேந்தியேகம்பமேவினரைத்
தலையினல்வணங்கவல்லார்தலைவர்க்குர்தலைவர்தாமே. (கூ)

பூத்தபொற்கொன்றைமாலைபுரிசடைக்கணிந்தசெல்வர்
தீர்த்தமாங்கங்கையாளைத்திருமுடிகிழவைத்து
ஏத்தவரேத்தநின்றவேகம்பமேவினரை
வாழ்த்துமாறறியமாட்டேன்மால்கொடுமையங்கினேனே. (ச)

மையினார்மலர்நெடுங்கண்மங்கையோர்பாகமாகிக்
கையிலோர்கபாலமேந்திக்கடைதொறும்பலிகொள்வார்தாம்
எய்வதோரேனமோட்டியேகம்பமேவினரைக்
கையினற்றொழவல்லார்க்குக்கடுவினைகளேயலாமே. (ஞ)

கருவினைமருவுங்கங்கைதங்கியசடையனெங்கள்
அருவினையகலநல்குமண்ணலையமர்போற்றும்
திருவினைத்திருவேகம்பஞ்செப்பிடவுறையவல்ல
உருவினையுருகியாங்கேயுள்ளத்தாலுகக்கின்றேனே. (சு)

கொண்டதோர்கோலமாகிக்கோல்காவுடையசூத்தன்
உண்டதோர்நஞ்சமாகியுலகெலாமுய்யவுண்டான்
எண்டிசையோருமேத்தநின்றவேகம்பன்றன்னைக்
கண்டுகானடிமைசெய்வான்கருதியேதிரிகின்றேனே. (எ)

படமுடையரவினோடுபனிமதியணிச்சுடிக்
கடமுடையுரிவைமூடிக்கண்டவரஞ்சவம்ம
இடமுடைக்கச்சிதன்னுளேகம்பமேவினன்றன்
நடமுடையாடல்காணஞாலந்தாழ்ந்தவாறே. (அ)

பொன்றிகழ்ந்தொன்றைமாலைபொருந்தியநெடுந்தண்மார்பர்
நன்றியிற்புகுந்தெனுள்ளமெள்ளவேநவிலுகின்றது
குன்றியிலெடுத்தமேனிக்குவளையங்கண்டரெம்மை
இன்றுயில்போதுகண்டாரினியரேகம்பனரே. (சு)

அருத்தியார்பழனத்துள்ளார்தொண்டர்கள்பலருமேத்த
அருத்தியாலன்புசெய்வாரவர்வர்க்கருள்கள்செய்தே
ஏருத்தினையிசையவேறியேகம்பமேவினர்க்கு
வருத்தினின்றடிமைசெய்வார்வல்வினைமாயுமன்றே. (சஂ)

திருச்சிற்றம்பலம்.

திருவெற்றியூர்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச்சடையுள்வைத்தவேதகீதன்றன்பாத
மெள்ளத்தானடையவேண்டின்மெய்தருஞானத்தீயாற்
கள்ளத்தைக்கழியவின்றுர்க்காயத்துக்கலந்தின்று
உள்ளத்தளொளியுமாருமொற்றியூருடையகோவே. (க)

வஞப்பெனும்வாழ்க்கைவேண்டாவானவரிறைவனின்று
புஞப்பதோர்பொள்ளலாக்கையதனெடும்புனர்வுவேண்டில்
நிறப்பெனுமருந்தவத்தாலானமர்விடமதாகி
யுஞர்ப்பெனுமுணர்வுமுள்ளாரொற்றியூருடையகோவே. (உ)

தானத்தைச்செப்துவாழ்வார்சலத்தினீயமூந்தின்றீர்
வானத்தவணக்கவேண்டில்லம்மின்கள்வல்லீராயின்
ஞானத்தைவிளக்கையேற்றிநாடியுள்விரவவல்லார்க்
கூனத்தையொழிப்பர்போலுமொற்றியூருடையகோவே. (ங)

காமத்தளுந்திநின்றுகண்டாலொறுப்புண்ணுதே
சாமத்துவேதமாயினின்றதோர்சயம்புதன்னே
யேமத்துமிடையிராவுமேகாந்தமியம்புவார்க்கு
ஓமத்தளொளியதாகுமொற்றியூருடையகோவே. (ச)

சமையமேலாறுமாகித்தானெருசயம்புவாகி
யிமையவர்பரவியேத்தவினிதினங்கிருந்தவீசன்
கமையினீயுடையராகிக்கழலடிபரவுவார்க்கு
உமையொருபாகர்போலுமொற்றியூருடையகோவே. (ஞ)

ஒருத்தித்தன்றலைச்சென்றுலோக்கரந்திட்டானுலகமேத்த
ஒருத்திக்குருல்லனுமிறப்படுத்தொளித்துமீண்டே
யொருத்தியைப்பாகம்வைத்தானுணர்வினுலையமுண்ணி
யொருத்திக்குருல்லனல்லனெற்றியூருடையகோவே. (ட)

பிணமுடையுடலுக்காகப்பித்தராய்த்திரிந்துநீங்கள்
புணர்வெனும்போகம்வேண்டாபோக்கலாம்பொய்யைநீங்க
நிணமுடைநெஞ்சினுள்ளானினைக்குமாறினைக்கின்றுர்க்கு
உணர்வினேடிருப்பர்போலுமொற்றியூருடையகோவே. (ண)

பின்னுவார்சடையான்றன்னைப்பித்தற்றிலாப்பேதைமார்கள்
தன்னுவார்நரகந்தன்னுட்டொல்வினைதிரவேண்டின்
மன்னுவான்மறைகளோதிமனத்தினுள்விளக்கொன்றேற்றி
யுன்னுவாருள்ளத்துள்ளாரொற்றியூருடையகோவே. (அ)

மூள்குவார்போகம்வேண்டின்முயற்றியாலிடர்கள்வந்தால்
எள்குவாரெள்கினின்றங்கிதுவொருமாயமென்பார்

பள்குவார்பத்தராகிப்பாடியுமாடினின்று
உள்குவாருள்ளத்துள்ளாரொற்றியூருடையகோவே. (கூ)

வெறுத்துகப்புலன்களைந்தும்வேண்டிற்றுவேண்டுநெஞ்சே
மறுத்துகவார்வச்செற்றக்குரோதங்களானமாயப்
பொறுத்துகப்புட்பகத்தேதருடையாணையடரவூன்றி
யொறுத்துகந்தருள்கள்செய்தாரொற்றியூருடையகோவே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைகாட்டியுள்ளது.

சுவாமிபெயர்-மாணிக்கத்தியாகர், தேவியார்-வடிவுடையம்மை.

திருவொற்றியூர்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலவினைக்கின்றேனை
யோம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே. (க)

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலேயூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணு
தனியுனுமூணர்வைநல்காயொற்றியூருடையகோவே. (உ)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகைலாயம்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கனகமாவயிரமுத்துமாமணிக்கயிலேகண்டு
முனகனுபரக்கலெடுத்தமுமையாளஞ்ச
அனகனுய்ன்றவீசனூன்றலுமலறிவீழ்ந்தான்
மனகனூன்றினனேன்மறித்துரோகில்லேயன்றே. (க)

கதித்தவன்கண்சிவந்தகயிலேநன்மலையையோடி
யதிர்த்தவனெடுத்திடலுமரிவைதானஞ்சவீச
னெதித்தவனூன்றியிட்டகிலேயழித்தலறிவீழ்ந்தான்
மதித்திறையூன்றினனேன்மறித்துரோகில்லேயன்றே. (உ)

கறுத்தவன்கண்சிவந்தகயிலேநன்மலையைக்கையால்
மறித்தலுமங்கையஞ்சவானவரிறைவனக்கு
நெறித்தொருவிரலாலூன்றநெடுவரைபோலவீழ்ந்தான்
மறித்திறையூன்றினனேன்மறித்துரோகில்லேயன்றே. (கூ)

கடுத்தவன் கண்சிவந் துகயிலேநன் மலையையோடி
யெடுத்தலுமங்கையஞ்சவிறையவனிறையேகக்கு
நொடிப்பளவிரலா லூன்றநோவதுமலறியிட்டான்
மடித்திறையூன்றினுனேன்மறித்துநோக்கில்லையன்றே. (சு)

கன்றித்தன் கண்சிவந் துகயிலேநன் மலையையோடி
வென்றித்தன்கைத்தலத்தாலெடுத்தலும்வெருவமங்கை
நன்றுத்தானக்குநாதனூன்றலுங்கழலீழ்ந்தான்
மன்றித்தானூன்றினுனேன்மறித்துநோக்கில்லையன்றே. (டு)

களித்தவன் கண்சிவந் துகயிலேநன் மலையையோடி
கௌளித்தவனெடுத்திடலுகேரிழையஞ்சநோக்கி
வெளித்தவனூன்றியிட்டவெற்பினுலலறிவீழ்ந்தான்
மளித்திறையூன்றினுனேன்மறித்துநோக்கில்லையன்றே. (சு)

கருத்தனுய்க்கண்சிவந் துகயிலேநன்மலையைக்கையால்
எருத்தனுயெடுத்தவாறேயெந்திழையஞ்சவீசன்
றிருத்தனுய்நின்றதேவன்றிருவிரலூன்றவீழ்ந்தான்
வருத்துவானூன்றினுனேன்மறித்துநோக்கில்லையன்றே. (எ)

சுடியவன் கண்சிவந் துகயிலேநன்மலையையோடி
வடிவுடைமங்கையஞ்சவெடுத்தலுமருவநோக்கிச்
செடிபடத்திருவிரலாலூன்றலுஞ்சிதைத்துவீழ்ந்தான்
வடிவுறவூன்றினுனேன்மறித்துநோக்கில்லையன்றே. (அ)

கரியத்தான்கண்சிவந் துகயிலேநன்மலையைப்பற்றி
பிரியத்தானெடுத்திடலுமேந்திழையஞ்சவீச
னெரியத்தானூன்றமுன்னநிற்கிலாதலறிவீழ்ந்தான்
மரியத்தானூன்றினுனேன்மறித்துநோக்கில்லையன்றே. (கூ)

கற்றனன்கயிலேதன்னைக்காண்டலுமகக்கனேடிச்
செற்றவனெடுத்தவாறேசெயிழையஞ்சவீசன்
உற்றிறையூன்றமுன்னமுணர்வழிவகையாலீழ்ந்தான்
மற்றிறையூன்றினுனேன்மறித்துநோக்கில்லையன்றே. (கo)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்—கைலாயநாதர், தேவியார்—பார்வதியம்மை.

ஆடகிகம் - சுஎ.

திரு ஆப்பாடி—திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கடலகமேழினுமும்புவனமுங்கலந்தவின்னும்
உடலகத்துயிரும்பாருமொள்ளழலாகிநின்று
தடமலர்க்கந்தமாலைதண்மதிபகலுமாகி
மடலவிழ்கொன்றைசூடிமன்னுமாப்பாடியாரே. (க)

ஆதியுமறிவுமாகியறிவினுட்செறிவுமாகிச்
சோதியுட்சுடருமாகித்தூநெறிக்கொருவனுகிப்
பாதியிற்பெண்ணுமாகிப்பரவுவார்பாங்கனுகி
வேதியர்வாழுஞ்சேய்ஞலிரும்புமாப்பாடியாரே. (ஏ)

எண்ணுடையிருக்குமாகியிருக்கினுட்பொருளுமாகிப்
பண்ணிணுடுபாடறன்னீப்பரவுவார்பாங்கனுகிக்
கண்ணெருநெற்றியாகிக்கருதுவார்கருதலாகாப்
பெண்ணெருபாகமாகிப்பேணுமாப்பாடியாரே. (கூ)

அண்டமாரமரர்கோமானுதியெம்மண்ணல்பாதங்
கொண்டவன்சுறிப்பினுலேகூப்பினுன்றபரத்தைக்
கண்டவன்றுதைபாய்வான்காலறவெறியக்கண்டு
தண்டியார்க்கருள்கள்செய்ததலைவராப்பாடியாரே. (சு)

சிந்தையுந்தெளிவுமாகித்தெளிவினுட்சிவமுமாகி
வந்தனன்பயனுமாகிவானுதல்பாகமாகி
மந்தமாம்பொழில்கள்சூழ்ந்தமண்ணித்தென்கரைமேன்மன்னி
யந்தமோடளவிலாதவடிகளாப்பாடியாரே. (ஙி)

வன்னிவாளரவுமத்தமதியமுமாறுஞ்சூடி
மின்னியவுருவாஞ்சோதிமெய்ப்பொருட்பயனுமாகிக்
கன்னியோர்பாகமாகிக்கருதுவார்கருத்தமாகி
யின்னிசைதொண்டர்பாடவிருந்தவாப்பாடியாரே. (சு)

உள்ளுமாய்ப்புறமுமாகிவுருவுமாயருவுமாகி
வெள்ளமாய்க்கரையுமாகிவிரிதிரைஞாயிறுகிக்
கள்ளமாய்க்கள்ளத்தள்ளாய்கருத்தமாயருத்தமாகி
யள்ளுவார்க்கள்ளல்செய்திட்டிருந்தவாப்பாடியாரே. (எ)

மயக்கமாய்த்தெளிவுமாகிமால்வரைவளியுமாகித்
தியக்கமாயொருக்கமாகிச்சிந்தையுளொன்றிகின்று
வியக்கமாயிறுதியாகியெண்டிசைக்கிறைவராகி
யயக்கமாயடக்கமாயவைவராப்பாடியாரே. (அ)

ஆழலுருவமாகியண்டமேழ்கடந்தவெற்றை
பேரொளியுருவினுனீப்பிரமனுமாலுங்காணுச்
சீரவைபரவியேத்திச்சென்றடிவணங்குவார்க்குப்
பேரருளருளிச்செய்வார்பேணுமாப்பாடியாரே. (கூ)

திண்டிறலரக்கனேஞடிச்சீகயிலாயந்தன்னே
யெண்டிறலிலனுமாகியெடுத்தலுமேழையஞ்ச
விண்டிறனெரியவூன்றிமிக்கடுத்தலறிவீழப்
பண்டிறல்கேட்டுகந்தபரமராப்பாடியாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பாலுவந்தாயகர், தேவியார்-பெரியாயகியம்மை.

திருக்குறுக்கை-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியிற்பிரமனர்தாமர்ச்சித்தாரடியிணைக்கீழ்
ஓதியவேதகாவருணருமாருணரமுற்றூர்
சோதியுட்சுடராய்த்தோன்றிச்சொல்லினியிறக்தார்பல்பூக்
கோதிவண்டறையுஞ்சோலைக்குறுக்கைவீரட்டனரே. (க)

நீற்றினிறையப்பூசிநித்தலுநியமஞ்செய்து
ஆற்றுநீர்பூரித்தாட்டுமந்தணனரைக்கொல்வான்
சாற்றிநாளற்றதென்றுதருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனரே. (உ)

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்ருதைதானைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீர்தார்குறுக்கைவீரட்டனரே. (ங)

சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பக்தர்செய்து
உலந்தவணிறந்தபோதேதோச்செங்கணுமாகக்
கலந்தசீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனரே. (ச)

ஏறுடனேழுடன்றானெண்ணியாயிரம்பூக்கொண்டு
ஆறுசடைச்சடையினனேயர்ச்சித்தானடியிணைக்கீழ்
வேறுமோர்பூக்குறையமெய்ம்மலர்க்கண்ணிணப்பிண்டக்
கூறுமோராழியிந்தார்குறுக்கைவீரட்டனரே. (ஞ)

கல்லினலெறிந்தகஞ்சிதாமுணுஞ்சாக்கியனூர்
கெல்லினர்சோமுணைமேல்விசும்பாளவைத்தார்
எல்லியாங்கெரிகையேந்தியெழிறிகழ்நட்டமாடிக்
கொல்லியம்பண்ணுகந்தார்குறுக்கைவீரட்டனரே. (ட)

காப்பதோர்வில்லுமம்புங்கையுடையிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்சேருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்டத்
தீப்பெருங்கண்கள்செய்யக்குருதிரொழுகுதன்கண்
கோப்பதுபற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனரே. (எ)

நிறைமறைக்காடுதன்னினீண்டெரிதீபந்தன்னைக்
கறைநிறத்தெலிதன்மூக்குச்சுட்டிடக்கண்முதூண்ட
நிறைகடல்மண்ணும்விண்ணும்நீண்டவானுலகமெல்லாங்
குறைவறக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனரே. (அ)

அணங்குமைபாகமாகவடக்கியவாதிமூர்த்தி
வணங்குவாரிடர்கடீர்க்குமருந்தல்லருந்தவத்த

கணம்புல்லர்க்கருள்கள்செய்துகாலாமடியார்க்கென்றுங்
குணங்களீக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (சூ)

எடுத்தனெழிற்கயிலையிலங்கையர்மன்னன்றன்னீ
யடுத்தொருவிரலாலூன்றவலறிப்போயவனும்வீழ்ந்து
விடுத்தனன்கைகரம்பால்வேதகீதங்கள்பாடக்
கொடுத்தனர்கொற்றவாளுங்குறுக்கைவீரட்டனாரே. (சஅ)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுக்கை-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நெடியமால்பிரமனோடுநீரெனும்பிலயங்கொள்ள
அடியொடுமுடியுங்காணாரருச்சுனற்கம்பும்வில்லுங்
துடியுடைவேடராகித்தூயமந்திரங்கள்சொல்லிக்
கொடிநெடுந்தேர்கொடுத்தார்குறுக்கைவீரட்டனாரே. (க)

ஆர்த்தமாமயனுமாலுமன்றிமற்றெழிற்றேவர்
சோர்த்தமெம்பெருமானென்றுதொழுதோத்திரங்கள்சொல்லத்
தீர்த்தமாமட்டமிழுன்சிருடையேழுநாளுங்
கூத்தராய்வீதிபோந்தார்குறுக்கைவீரட்டனாரே (உ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீரட்டேசுவரர், தேவியார்-ஞானம்பிகையம்மை.

திருக்கோடிகா-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நெற்றிமேற்கண்ணினானேநீறுமெய்ப்பூசினானே
கற்றைப்புன்சடையினானேகடல்விடம்பருகினானே
செற்றவர்புரங்கண்மூன்றுஞ்செவ்வழல்செலுத்தினானே
குற்றமில்குணத்தினானேகோடிகாவுடையகோவே. (க)

கடிகமழ்கொன்றையானேகபாலங்கையேந்தினானே
வடிவுடைமங்கைதன்னோர்பிரியோர்பாகத்தானே
யடியிணைபரவநாளுமடியவர்க்கருள்செய்வானே
கொடியணிவிழவதோவாக்கோடிகாவுடையகோவே. (உ)

நீறுமெய்ப்பூசினானேநிழறிகழ்மழுவினானே
யேறுகந்தேறினானேயிருங்கடலமுதம்பாரானே
யாறுமோர்நான்குவேதமறமுரைத்தருளினானே
கூறுமோர்பெண்ணினானேகோடிகாவுடையகோவே. (ங)

காலனைக்காலாற்செற்றன்றருள்புரிகருணையானே
நீலமார்கண்டத்தானேநீண்முடியமரர்கோவே
ஞாலமாம்பெருமையானேநளிரிளந்திங்கள்சூடுங்
கோலமார்சடையினானேகோடிகாவுடையகோவே. (சு)

பூணரவாரத்தானேபுலியுரியரையினானே
காணில்வெண்கோவணமுங்கையிலோர்கபாலமேந்தி
பூணுமூர்ப்பிச்சையானேயுமையொருபாகத்தானே
கோணல்வெண்பிறையினானேகோடிகாவுடையகோவே. (டு)

சேமுல்வெண்கொம்புண்டகிளரொளிமார்பினானே
யேழையேனேழையேனுனென்செய்கேனென்தைபெம்மான்
மாழையொண்கண்ணினார்கள்வலைதனின்மயங்குகின்றேன்
கூழையேறுடையசெல்வாகோடிகாவுடையகோவே. (சு)

அழலுமிழுங்கையானேயரிவையோர்பாகத்தானே
தழலுமிழுராவமார்த்துத்தலைதனிற்பலிகொள்வானே
நிழலுமிழ்சோலைசூழுநீள்வரிவண்டினங்கள்
முழலுமிழ்தேம்பாடுங்கோடிகாவுடையகோவே. (எ)

ஏவடுசிலையினானேபுரமவையெரிசெய்தானே
மாவடுவகிர்கொள்கண்ணுள்மலைமகள்பாகத்தானே
ஆவடுதறையுளாரனேயைவராலாட்டப்பட்டேன்
கோவடுகுற்றந்தீராய்கோடிகாவுடையகோவே. (அ)

ஏற்றநீர்க்கங்கையானேயிருகிலந்தாவினனு
நாற்றமாமலர்மேலேறுநான்முகனிவர்கள்கூடி
யாற்றலாலளக்கலுற்றார்க்கழலுருவாயினானே
கூற்றுக்குங்கூற்றனுவாய்கோடிகாவுடையகோவே. (கூ)

பழகுநானடிமைசெய்வேன்பசுபதீபாவநாசா
மழகனியானேயின்றேல்மலைமகள்வெருவப்போர்த்த
அழகனேயரக்கன்றிண்டோளருவரைகெரியவூன்றுங்
குழகனேகோலமார்பாகோடிகாவுடையகோவே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழாநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோடீசுவரர், தேவியார்-வடிவாம்பிகையம்மை.

திரு ஆரூர்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

படுகுழிப்பவ்வத்தன்ன பண்டியைப்பெய்தவாற்றாற்
கெடுவதிம்மனிதர்வாழ்க்கைகாண்டொறுங்கேதகின்றேன்
மூடுகுவிருந்தினேவர்மூர்க்கரேயிவர்களோடும்
அடியனேன்வாழுமாட்டேனூர்மூலட்டனீரே. (க)

புழுப்பெய்தபண்டிதன்னேப்புறமொருதோலான்மூடி
யொழுக்கருவொன்பதுவாயொற்றுமையொன்றுமில்லைச்
சழக்குடையிதனுளேவர்சங்கடம்பலவுஞ்செய்ய
அழிப்பனுய்வாழுமாட்டேனூர்மூலட்டனீரே. (உ)

பஞ்சின்மெல்லடியினர்கள் பாங்கராயவர்கணின்று
கெஞ்சினேபலவுஞ்செய்துகினேவினுகினேயலொட்டார்
நஞ்சணியிடற்றினேநாதனேநம்பனேகான்
அஞ்சினேற்கஞ்சலென்னீராரூர்மூலட்டனீரே. (ங)

கெண்டையந்தடங்கணல்லார் தம்மையேகெழுமவேண்டிக்
குண்டராய்த்திரிதந்தைவர்குலத்திடர்க்குழியினூக்கக்
கண்டுநான்றரிக்கவில்லேன்காத்துக்கொள்கறைசேர்கண்டா
அண்டவானவர்கள்போற்றுமாரூர்மூலட்டனீரே. (ச)

தாழ்குழலின்சொனல்லார் தங்களேத்தஞ்சமென்று
ஏழையேனுகினாளுமென்செய்கேனெந்தைபெம்மான்
வாழ்வதேலரிதுபோலும்வைகலுமைவர்வந்து
ஆழ்குழிப்படுத்தவாற்றேனூர்மூலட்டனீரே. (ஞ)

மாற்றமொன்றருளகில்லீர்மதியிலேன்விதியிலாமை
சீற்றமுந்தீர்த்தல்செய்யீர்சிக்கெனவுடையராகிக்
கூற்றம்போலிவர்வந்தகூத்திட்டுக்கோகுசெய்ய
ஆற்றவுங்கில்லேனுயேனூர்மூலட்டனீரே. (சு)

உயிர்நிலையுடம்பேகாலாயுள்ளமேதாழியாகத்
துயரமேயேற்றமாகத்தன்பக்கோலதனேப்பற்றிப்
பயிர்தனச்சுழியவிட்டுப்பாழ்க்குநீரிறைத்துமிக்க
அயர்வினூலிவர்க்காற்றேனூர்மூலட்டனீரே. (ஏ)

கற்றதேலொன்றுமில்லக்காரிகையாரோடாடிப்
பெற்றதேற்பெரிதுந்தன்பம்பேதையேன்பிழைப்பினூலே
முற்றினூலிவர்வந்தமுறைமுறையுதயரஞ்செய்ய
அற்றுநானூலைந்தபோனேனூர்மூலட்டனீரே. (அ)

பத்தனுய்வாழுமாட்டேன்பாவியேன்பரவிவந்து
சித்தத்துளேயீசனேசெய்வினேபலவுஞ்செய்ய

* திருஆரூரென்பதற்குப்பொருள் இலக்குமிவாசஞ்செய்யுமூரென்பர்.

மத்துமுதயிரேபோலமறுகுமென்னுள்ளங்தானும்
அத்தனேயமரர்கோவேயாரூர்மூலட்டனீரே. (சு)

தடக்கைகளாலேக்துகொண்டுதடவரைதன்னேப்பற்றி
யெடுத்தவன்பேர்க்கவோடியிரிக்தனபூதமெல்லா
முடித்தலேயனேத்தங்தோளுமுறிதாஷிறையேயூன்றி
யடர்த்தருள்செய்ததென்னேயாரூர்மூலட்டனீரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திரு ஆரூர்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குழல்வலங்கொண்டசொல்லாள்கோலவேற்கண்ணிதன்னேக்
கழல்வலங்கொண்டுகீங்காக்கண்களேக்கண்களார
அழல்வலங்கொண்டகையானருட்கதிறெறிக்குமாரூர்
தொழவலங்கொண்டல்செய்வான்றுன்றினுர்தோன்றினரே. (க)

நாகத்தைகங்கையஞ்சகங்கையைமஞ்ஞையென்று
வேகத்தைத்தவிராகம்வேழத்தினுரிவைபோர்த்துப்
பாகத்தினிமிர்தல்செய்யாத்திங்களேமின்னென்றஞ்சி
யாகத்திற்கிடந்தாகமடங்குமாரூரனரே. (உ)

தொழுதகங்குழையமேவித்தோட்டிமையுடையதொண்டர்
அழுதகம்புருகுதினின்றரவரவர்போலுமாரூர்
எழிலகடுவெண்முற்றமின்றியுமேர்கொள்வேலிப்
பொழிலகம்விளங்குதிங்கட்புதமுகிழ்சூடினரே. (ங)

நஞ்சிருள்மணிகொள்கண்டர்நகைபிருள்மக்கங்குல்
வெஞ்சுடர்விளக்கத்தாடிவிளங்கினர்போலுமூவா
வெஞ்சுடர்மூகடுதீண்டிவெள்ளிகராசமென்ன
அஞ்சுடராணிவெண்டிங்களணியுமாரூரனரே. (சு)

எந்தளிர்நீர்மைகோலமேனியென்றிமையோரேத்தப்
பைந்தளிர்க்கொம்பரன்னபடர்கொடியிபப்பட்டித்
தஞ்சடைத்தொத்தினுலுந்தம்மதோர்நீர்மையாலும்
அந்தளிராகம்போலும்வடிவாரூரனரே. (ஞ)

வானகம்விளங்கமல்கும்வளங்கெழுமதியஞ்சூடித்
தானகமழியவந்ததாம்பலிதேர்வர்போலும்
ஊனகஞ்சழிந்தவோட்டினுண்பதுமொளிகொணஞ்சம்
ஆனகமஞ்சுமாடுமடிகளாரூரனரே. (அ)

அஞ்சணைகணியனேயழறவன்றுநோக்கி
அஞ்சணைகுழலினுலையமுதமாவணிந்துகக்கு

அஞ்சணையஞ்சுமாடியாடரவாட்டுவார்தாம்
அஞ்சணைவேலியாரூரரதரித்திடங்கொண்டாரே. (எ)

வணங்கிமுன்னமரரேத்தவல்வினையானதீரப்
பிணங்குசடைச்சடையில்வைத்தபிறையுடைப்பெருமையண்ணல்
மணங்கமழோதிபாகர்மதிகிலாவட்டத்தாடி
யணங்கொடிமாடவீதியாரூரெம்மடிகளாரே. (அ)

ஈகலிடம்பிறர்கட்காகநான்மறையோர்கடங்கள்
புகலிடமாகிவாழும்புகலியிருவர்கூடி
யிகலிடமாகநீண்டங்கிண்டெழிலழலதாகி
யகலிடம்பரவியேத்தவடிகளாரூரிலாரே. (கூ)

ஆயிரந்திங்கள்மொய்த்தவலேசுடலமுதம்வாங்கி
யாயிரமசுரர்வாழுமணிமதின்மூன்றும்வேவ
வாயிரந்தோளுமட்டித்தாடியவசைவுதீர
வாயிரமடியும்வைத்தவடிகளாரூரனாரே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பகைத்திட்டார்புரங்கண்மூன்றும்பற்றிநீறுகிவீழப்
புகைத்திட்டதேவர்கோலேபொறியிலேனுடலந்தன்னுள்
அகைத்திட்டங்கதனைநாளுமைவர்கொண்டாட்டவாடித்
திகைத்திட்டேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (க)

மையரிமதர்த்தவொண்கண்மாதரார்வலையிற்பட்டுக்
கையெரிசூலமேந்துங்கடவுளேநினையமாட்டேன்
ஐதெரிந்தகமிடற்றேயடைக்கும்போதாவியார்தாஞ்
செய்வதொன்றறியமாட்டேன்திருப்புகலூரனீரே. (உ)

மூப்பதுமூப்பத்தாறுமூப்பதுமிடுகுரம்பை
யப்பர்போலேவர்க்குவதருகிதுலிடென்று
ஒப்பவேகலியலுற்றுலய்யுமாறறியமாட்டேன்
செப்பமேதிகழுமேனித்திருப்புகலூரனீரே. (ங)

பொறியிலாவழுக்கையோம்பிப்பொய்யினைமெய்யென்றெண்ணி
நெறியலாநெறிகள்சென்றேவீதினேநியேதம்
அறிவிலேனமர்கோவேயமுதினேமண்ணில்லைக்குஞ்
செறிவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (ச)

அளியினுர்குழலினுர்களவர்களுக்கன்பதாகிக்
களியினுர்பாடலோவாக்கடலூர்வீரட்டமென்னுங்

தளியினுர்பாதரானுமினவிலாத்தகவில்கெஞ்சந்
தெளிவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (நி)

இலவினுர்மாதர்பாலேயிசைந்துகானிருந்துபின்னும்
நிலவுகாள்பலவென்றெண்ணிநீதனேனதியுன்னே
வுலவினானுள்கமாட்டேனுன்னடிபரவுவானுஞ்
செலவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (சு)

காத்திலேனிரண்டுமூன்றுங்கல்வியேலில்லையென்பால்
வாய்த்திலேனடிமைதன்னுள்வாய்மையாற்றுயேனல்லன்
பார்த்தனுக்கருள்சுள்செய்தபரமனேபரவுவார்கள்
தீர்த்தமேதிகழும்பொய்கைத்திருப்புகலூரனீரே. (எ)

நீருமாய்த்தீயுமாகிநிலனுமாய்விசும்புமாகி
யேருடைக்கதிர்களாகியிமையவரிறைஞ்சநின்று
ஆர்வதற்கரியராகியங்கங்கேயாடுகின்ற
தேவர்க்குந்தேவராவார்திருப்புகலூரனீரே. (அ)

மெய்புளேவிளக்கையேற்றிவேண்டளவுயரத்தூண்டி
யுய்வதோருபாயம்பற்றியுகக்கின்றேனுகவாவண்ண
மைவரையகத்தேவைத்தீரவர்களேவலியர்சாலச்
செய்வதொன்றறியமாட்டேன்திருப்புகலூரனீரே. (சு)

அருவரைதாங்கினுனுமருமறையாதியானு
மிருவருமறியமாட்டாவீசனுரிலங்கைவேந்தன்
கருவரையெடுத்தனுன்முகண்வழிருறுதிசோரத்
திருவிரல்சிறிதுவைத்தார்திருப்புகலூரனரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–அக்கினீசுவரர், தேவியார்–கருந்தார்க்குழலியம்மை.

ஆடு பதிகம் – இசை.

திருவலம்புரம்–திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தெண்டிரையோங்கியோதஞ்சென்றடிவீழுங்காலைத்
தொண்டிரைத்தண்டார்கோனத்தொழுதடிவணங்கியெங்கும்
வண்டுகள்மதுக்கள்மாந்துவலம்புரத்தடிகடம்மைக்
கொண்டுநற்றீதம்பாடக்குழகர்தாமிருந்தவாறே. (க)

மடுக்களில்வாளைபாயவண்டினமிரிந்தபொய்கைப்
பிடிக்களிறென்னத்தம்மிற்பிணையின்றுணைவரால்கள்

தொடுத்தநன் மாலையேந்தித்தொண்டர்கள் பரவியேத்த
வடித்தடங்கண்ணிபாகர்வலம்புரத்திருந்தவாறே. (உ)

தேனுடைமலர்கள்கொண்டுதிருந்தடிபொருந்தச்சாத்தி
ஆனிடையஞ்சுங்கொண்டவன்பினலமரவாட்டி
வானிடைமதியஞ்சூடும்வலம்புரத்தடிகடம்மை
நானடைந்தேத்தப்பெற்றநல்வினைப்பயனுற்றேனே. (ஊ)

மூனெயிற்றினல்லேனம்பூண்டுமெய்சடைகடாழ
வானெயிற்றினீயராகம்வலித்தரையிசையவீக்கிப்
பூனகையபோர்வைபோர்த்துப்புனலொடுமதியஞ்சூடி
வானபயிலினீயரேத்தும்வலம்புரத்தடிகடாமே. (ச)

சுருளுமுவரையின்மேலார்தளங்கிளம்பளிங்குசிந்த
இருளுறுகதிர்தழைத்தவிளங்கதிர்ப்பசலைத்திங்கள்
அருளுமுமடியரெல்லாமங்கையின்மலர்களேந்த
மருளுறுகிதன்கேட்டார்வலம்புரத்தடிகளாரே. (எ)

நினைக்கின்றேனெஞ்சுதன்னுளீண்டபுன்சடையினனே
யனைத்துடன்கொண்டவந்தன்கன்பினலமையவாட்டிப்
புனைக்கின்றேன்பொய்ம்மைதன்னைமெய்மையைப்புணரமாட்டே
னினைக்குநான்செய்வதென்னேயினிவலம்புரவனீரே. (சு)

செங்கயல்சேல்கள்பாய்ந்துதேம்பழுனியநாடித்
தங்கயந்தறந்துபோந்துதடம்பொய்கையடைந்துநின்று
கொங்கையர்குடையுங்காலைக்கொழுங்கனியழுங்கினராம்
மங்கலமனியின்பிக்கார்வலம்புரத்தடிகளாரே. (எ)

அருகெலாங்குவளைசெந்நெலகலியேரம்பனெய்தல்
தெருவெலாந்தெங்குமாவும்பழம்வீழும்படப்பையெல்லாம்
குருகினங்கூடியாங்கேகும்மலித்திறகுலர்த்தி
மருவலாமிடங்கள்காட்டும்வலம்புரத்தடிகளாரே. (அ)

கருவரையனையமேனிக்கடல்வண்ணனவனுங்காணுன்
திருவரையனையபூமேற்றிசைமுகனவனுங்காணுன்
ஒருவரையுச்சியேறியோங்கினசோங்கிவந்து
அருமையிலெளிமையானரவர்வலம்புரவனீரே. (கூ)

வாளெயிறிலங்கநக்குவளர்கயிலாயந்தன்னை
யாள்வலிகருதிச்சென்றவரக்கனவரைக்கீழன்று
தோளொடுபத்துவாயுந்தொலைத்தடனமூந்தலுன்றி
யாண்மையும்வலியுந்தீர்ப்பாரவர்வலம்புரவனீரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வலம்புரநாதர், தேவியார்-வடிவெழிர்க்கண்ணம்மை.

திருஆவடுதுறை-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மாயிருஞாலமெல்லாமலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கையாணீப்படர்சடைவைப்பர்போலுங்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனரே. (க)

மடந்தைபாகத்தர்போலுமான்மறிக்கையர்போலுங்
குடந்தையிற்குழகர்போலுங்கொல்புலித்தோலர்போலுங்
கடைந்தஞ்சுண்பர்போலுங்காலனைக்காய்வர்போலும்
அடைந்தவர்க்கன்பர்போலுமாவடுதுறையனரே. (உ)

உற்றநோய்தீர்ப்பர்போலுமுதுகாடுமேயவர்போலுஞ்
செற்றவர்புரங்கண்மூன்றுந்தீயெழச்செறுவர்போலுங்
கற்றவர்பரவியேத்திக்கலந்தலந்தபாடும்
அற்றவர்க்கன்பர்போலுமாவடுதுறையனரே. (ஊ)

மழுவமர்கையர்போலுமாதவள்பாகர்போலும்
எழுதுமேவலர்போலுமெண்புகொண்டணிவர்போலுங்
தொழுதெழுந்தரடிபாடித்தோத்திரம்பலவுஞ்சொல்லி
யழுமவர்க்கன்பர்போலுமாவடுதுறையனரே. (எ)

பொடியணிமெய்யர்போலும்பொங்குவெண்ணூலர்போலுங்
கடியதோர்விடையர்போலுங்காமனைக்காய்வர்போலும்
வெடிபடுதலையர்போலும்வேட்கையாற்பரவுந்தொண்டர்
அடிமையையளப்பர்போலுமாவடுதுறையனரே. (ஏ)

வக்கரனுயிரைவவ்வக்கண்மலர்கொண்டுபோற்றச்
சக்கரங்கொடுப்பர்போலுந்தானவர்தலைவர்போலுந்
தக்கமாமுடர்தம்மைத்தயரிலேவீழ்ப்பர்போலும்
அக்கரையார்ப்பர்போலுமாவடுதுறையனரே. (ஐ)

விடைதருகொடியர்போலும்வெண்புரிநூலர்போலும்
படைதருமழுவர்போலும்பாய்புலித்தோலர்போலும்
உடைதருளேர்போலுமுலகமுமாவர்போலும்
அடைபவரிடர்கடிர்குமாவடுதுறையனரே. (ஒ)

முந்திவானோர்கள்வந்தமுறைமையால்வணங்கியேத்த
நந்திமாகாளரென்பார்நடுவுடையார்கணிற்பச்
சிந்தியாதேயொழிந்தார்திரிபுரமெரிப்பர்போலும்
அந்திவான்மதியஞ்சூடுமாவடுதுறையனரே. (அ)

பானமரேனமாகிப்பாரிடந்திட்டமாலுந்
தேனமர்ந்தேதுமல்லித்திசைமுகமுடையகோவுந்

னைரைத்தியக்கறுத்தருவுருவுடையர்போலும்
ஆன்றையேற்றர்போலுமாவடுதுறையனரே. (கூ)

பார்த்தனுக்கருள்வர்போலும்படர்சடைமுடியர்போலும்
ஏத்துவாரிடர்கடீரவின்பங்கள்கொடுப்பர்போலுங்
கூத்தராய்ப்பாடியாடிக்கொடுவலியரக்கன்றன்னோ
யார்த்தவாயலறுவிப்பாராவடுதுறையனரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மாசிலாமணியீசுவரர், தேவியார்-ஒப்பிலாமுலையம்மை.

திருவாவடுதுறை-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மஞ்சனேமணியுமானுய்மரகதத்திரளுமானுய்
நெஞ்சுளேபுகுந்துநின்றுநீனேதருநிகழ்வினனே
தஞ்சமும்போதாகவந்துதுணேயெனக்காகின்றும்
அஞ்சலென்றருளவேண்டுமாவடுதுறையுளானே. (க)

ஞானுகந்தன்னேநாளுநுணுகுமாகருதியேயும்
ஊனுகந்தேதம்புராயேனுள்ளுறவைவர்நின்றூர்
தானுகந்தேயுகந்ததகவிலாத்தொண்டனேனுண்
ஆனுகந்தேறுவானேயாவடுதுறையுளானே. (உ).

கட்டமேவினேகளானகாத்தினவகோக்கியாளா
யொட்டவேயொட்டிநாளுமுன்னேயுள்வைக்கமாட்டேன்
பட்டவான்றலேகையேந்திப்பலிதிரிந்தூர்கடோறும்
அட்டமாவருவினேனேயாவடுதுறையுளானே. (கூ)

பெருமைநன்றுடையதில்லேயென்றுநான்பேசமாட்டேன்
ஒருமையாலுன்னேயுள்கியுகந்துவானேறமாட்டேன்
கருமையிட்டாயவூனேக்கட்டமேகழிக்கின்றேனுன்
அருமையானஞ்சமுண்டவாவடுதுறையுளானே. (ச)

தட்டனுய்வினேயதென்னுஞ்சுழித்தலேயகப்பட்டேனேக்
கட்டனுயைவர்வந்துகலக்காமைக்காத்துக்கொள்வாய்
மட்டவிழ்கோதைதன்னேமகிழ்ந்தொருபாகம்வைத்து
அட்டமாநாகமாட்டுமாவடுதுறையுளானே. (ஞ)

காரழற்கண்டமேயாய்கடிமதிற்புரங்கள்மூன்றும்
ஓரழலம்பினலேயுகைத்துத்தீயெரியூட்டி
நீரழற்சடையுளானேநினேப்பவர்வினேகடீர்ப்பாய்
ஆரழலேக்கியாடுமாவடுதுறையுளானே. (சு)

செறிவிலேன்சிந்தையுள்ளேசிவனடிதெரியமாட்டேன்
குறியிலேன்குணமொன்றில்லேன்கூறுமாகூறமாட்டேன்
நெறிபடுமதியொன்றில்லேனினையுமாறினையமாட்டேன்
அறிவிலேனையர்த்துப்போனேனுவடுதுறையுளானே. (எ)

கோலமாமங்கைதன்னைக்கொண்டொருகோலமாய
சீலமேயறியமாட்டேன்செய்வினைமூடிகின்று
ஞாலமாபித்னுள்ளெனினைவியாவண்ணநல்காய்
ஆலமாகஞ்சமுண்டவாவடுதுறையுளானே. (அ)

நெடியவன்மலரினனுநேர்க்திருபாதநேடக்
கடியதோருருவமாகக்கனலெரியாகிகின்று
வடிவினவண்ணமென்றேயென்முதாம்பேசலாகார்
அடியனேனெஞ்சினுள்ளாராவடுதுறையுளானே. (கூ)

மலைக்குமேராயரக்கன்சென்றமதங்கையஞ்சத்
தலைக்குமேற்கைகளாலேதாங்கினன்வலியைமாள
வுலப்பிலாவிரலாலூன்றியொருத்தவற்கருள்கள்செய்து
அலைத்தவான்கங்கைசூடுமாவடுதுறையுளானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருப்பருப்பதம்–திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கன்றினர்புரங்கள்மூன்றுங்கனலெரியாகச்சீறி
நின்றதோருருவந்தன்னுணீர்மையுனிறையுங்கொண்டும்
ஒன்றியாங்குமையுந்தாமூமூர்பலிதேர்ந்துபின்னும்
பன்றிப்பின்வேடராகிப்பருப்பதநோக்கினுரே. (க)

கற்றமாமறைகள்பாடிக்கடைதொறும்பலியுந்தேர்வார்
வற்றலோர்தலைகையேந்திவானவர்வணங்கிவாழ்த்த
முற்றவோர்சடையினீரையேற்றமுக்கண்ணர்தம்மைப்
பற்றினர்க்கருள்கள்செய்துபருப்பதநோக்கினுரே. (உ)

கரவிலாமனத்தராகிக்கைதொழுவார்கட்கென்றும்
இரவினின்றெரியதாடியின்னருள்செய்புமென்தை
மருவலர்புரங்கண்மூன்றுமாட்டியவலையராகிப்
பரவுவார்க்கருள்கள்செய்துபருப்பதநோக்கினுரே. (ங)

கட்டிட்டதலைகையேந்திக்கனலெரியாடிச்சீறிச்
சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணக்காடராகி
விட்டிட்டவேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப்பருப்பதநோக்கினுரே. (சு)

கையராய்க்கபாலமேந்திக்காமனீக்கண்ணற்காய்ந்து
மெய்யராய்மேனிதன்மேல்விளங்குவெண்ணீறுபூசி
யுய்யராயுள்குவார்கட்குவகைகள்பலவுஞ்செய்து
பையராவரையிலார்த்துப்பருப்பதநோக்கினரே. (இ)

வேடராய்வெய்யராகிவேழத்தினுரிவைபோர்த்து
ஓடராயுலகமெல்லாமுழிதர்வருமையுந்தாமும்
காடராய்க்கனல்கையேந்திக்கடியதோர்விடைமேல்கொண்டு
பாடராய்ப்பூதஞ்சூழப்பருப்பதநோக்கினரே. (உ)

மேகம்போன்மிடற்றராகிவேழத்தினுரிவைபோர்த்து
யேகம்பமேவினர்தாமிமையவர்பரவியேத்தக்
காகம்பார்கழறாகிக்கடியதோர்விடையொன்றேறிப்
பாகம்பெண்ணுருவமானர்பருப்பதநோக்கினரே. (எ)

பேரிடர்ப்பிணிகடீர்க்கும்பிஞ்ஞகனெந்தைபெம்மான்
காருடைக்கண்டராகிக்கபாலமோர்கையிலேந்திச்
சீருடைச்செங்கண்வெள்ளேறேறியசெல்வர்நல்ல
பாரிடம்பாணிசெய்யப்பருப்பதநோக்கினரே. (அ)

அங்கண்மாலுடையராயவைவராலாட்டுணதே
யுங்கண்மால்தீரவேண்டியுள்ளத்தாலுள்கியேத்துஞ்
செங்கண்மால்பரவியேத்திச்சிலனெனநின்றசெல்வர்
பைங்கண்வெள்ளேறதேறிப்பருப்பதநோக்கினரே. (ஊ)

அடல்விடையூர்தியாகியரக்கன்சிரோடரவூன்றிக்
கடலிடைநஞ்சமுண்டகறையணிகண்டனார்தாஞ்
சுடர்விடுமேனிதன்மேற்சுண்ணவெண்ணீறுபூசிப்
படர்சடைமதியஞ்சேர்த்திப்பருப்பதநோக்கினரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது வடநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–பருப்பதேசுவரர், தேவியார்–மனோன்மனியம்மை.

திருஅவளிவணல்லூர்–திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தோற்றினனெயிறுகவ்வித்தொழிலுடையரக்கன்றன்னைத்
தேற்றுவான்சென்றுசொல்லச்சிக்கெனத்தவிருமென்று
வீற்றினையுடையனவெடுவெடுத்தெழுந்தவன்றன்
ஆற்றலையழிக்கவல்லாரவளிவணல்லூராரே. (க)

வெம்பினரரக்கரெல்லாமிகச்சமக்காயிற்றென்று
செம்பினலெடுத்தகோயில்சிக்கெனச்சிதையுமென்ன

நம்பினுரென் றுசொல்லிநன் மையான்மிக்குநோக்கி
யம்பினலழியவெய்தாரவளிவணல்லூராரே. (உ)

கீழ்ப்படக்கருதலாமோகீர்த்தியையுள்ளதாகிற்
சேரட்பெருவலியினுலேதாலப்பனன் மலையையென் றீ
வேட்படவைத்தவாறேவிதிர்த்திதக்கன்வீழ்ந்து
ஆட்படக்கருதிப்புக்காரவளிவணல்லூராரே. (ஊ)

நிலவலம்வல்லனல்லகோர்மையையினியமாட்டான்
சிலவலங்கொண்டசெல்வன்சிரியகயிலைதன்னைத்
தலவலங்கருதிப்புக்குத்தாக்கினன்றன்னையன்று
அலகுயோக்குவித்தாரவளிவணல்லூராரே. (எ)

தவவலியொன்றனுகித்தனதொருபெருமையாலே
மெய்வ்வலியுடையனென்றுமிகப்பெருந்தேரைபூர்ந்து
செவ்வலிகூர்வீழியாற்சிரமத்தாலெடுக்குற்றனே
யவ்வலிதீர்க்கவல்லாரவளிவணல்லூராரே. (ஏ)

நன்மைதானறியமாட்டானடுவிலாவரக்கர்கோமான்
வன்மையேகருதிச்சென்றுவலிதனச்செலுத்தலும்றுக்
கன்மையான்மலையேறடிக்கருதித்தானெடுத்தவாயால்
அம்மையேவென்னவைத்தாரவளிவணல்லூராரே. (ஐ)

கதம்படப்போதுவார்கள்போதமக்கருத்தினுலே
சிதம்படநின்றரீர்கள்சிக்கெனத்தவிருமென்று
மதம்படுமனத்தனிவன்மையான்மிக்குநோக்க
அதம்பழத்தருவுசெய்தாரவளிவணல்லூராரே. (ஒ)

நாடுமிக்குழிதர்கின்றநடுவிலாவரக்கர்கோனே
யோடுமிக்கென்றுசொல்லியூன்றினுனிரலாலே
பாடுமிக்குய்வனென்றுபனியரற்றிறங்கள்காட்டி
யாடுமிக்கரவம்பூண்டாரவளிவணல்லூராரே. (ஓ)

ஏனமாயிடந்தமானுமெழிறருமூளரியானும்
ஞானந்தானுடையராகிநன்மையையறியமாட்டார்
சேணந்தானிலாவரக்கன்செழுவரையெடுக்கவூன்றி
ஆனந்தவருள்கள்செய்தாரவளிவணல்லூராரே. (ஔ)

ஊக்கினனன்மலையேறடியுணர்விலாவரக்கன்றன்னைத்
தாக்கினன்விரலினுலேதலைபத்துந்தகரவூன்றி
நோக்கினனஞ்சத்தன்னைநோன்பிறவூன்றுசொல்லி
யாக்கினரமுதமாகவவளிவணல்லூராரே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-சாக்ஷிநாயகேசுவரர், தேவியார்-சுவுந்தரநாயகியம்மை.

திருப்பெருவேளூர்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மறையணிநாவினனே மறப்பிலரார்மனத்துளானைக்
கறையணிகண்டன்றன்னைக்கனலெரியாடினனைப்
பிறையணிசடையினனைப்பெருவேளூர்பேணினனை
நறையணிமலர்கடூவிநாடொறும்வணங்குவனே. (க)

நாதனையுலகமெல்லாநம்பிரானெனவுகின்ற
பாதனம்பரமயோகிபலபலதித்தினும்
பேதனைப்தோன்றினனைப்பெருவேளூர்பேணினனை
யோதநாவுடையனகியுரைக்குமாறுரைக்கின்றேனே. (உ)

குறவிதோண்மணந்தசெல்வக்குமரவேடனதையென்று
நறவிளநறுமென்கூந்தனங்கையோர்பாகத்தானைப்
பிறவியைமாற்றுவானைப்பெருவேளூர்பேணினனை
யுறவினல்வல்லனகியுணருமாறுணர்த்துவோமே. (ரு)

மைஞ்ஞவில்கண்டன்றன்னைவலங்கையின்மழுவொன்றேந்திக்
கைஞ்ஞவின்மானினோடுங்கனலெரியாடினனைப்
பிஞ்ஞகன்றன்னையந்தண்பெருவேளூர்பேணினனைப்
பொய்ஞ்ஞகனினையமாட்டாப்பொறியிலாவறிவிலேனே. (ச)

ஒடைசேர்நெற்றியானையுரிவையைமூடினனை
வீடதேகாட்டுவானைவேதநான்காயினனைப்
பேடைசேர்புறவங்காப்பெருவேளூர்பேணினனைக்
கூடனன்வல்லமாற்றங்குறுகுமாறறிகிலேனே (ஞ)

கச்சைசேர்நாகத்தானைக்கடல்விடங்கண்டத்தானைக்
கச்சியேகம்பன்றன்னைக்கனலெரியாடுவானைப்
பிச்சைசேர்ந்துழல்வினனைப்பெருவேளூர்பேணினனை
யிச்சைசேர்ந்தமரநாடுமிறைஞ்சுமாறிறைஞ்சுவேனே. (சு)

சித்தராய்வந்துதன்னைத்திருவடிவணங்குவார்கள்
முத்தனைமூர்த்தியாயமுதல்வனைமுழுதுமாய
பித்தனைப்பிறருமேத்தப்பெருவேளூர்பேணினனை
மெத்தனையவனைநாளும்விரும்புமாறறிகிலேனே. (எ)

மூண்டமேதாங்கினனைமூர்த்தியஞானத்தானை
வண்டலர்கொன்றைமாலைவளர்மதிக்கண்ணியானைப்
பிண்டமேயாயினனைப்பெருவேளூர்பேணினனை
யண்டமாமாதியானையறியுமாறறிகிலேனே. (அ)

விரிவிலாவறிவினர்கள்வேறெருசமயஞ்செய்து
யெரிவினற்சொன்னரேனுமெம்பிராற்கேற்றதாகும்

பரிவினற்பெரியோரேத்தும்பெருவேளூர்பற்றினனே
மருவினான்வாழ்த்தியுய்யும்வகையதுனினைக்கின்றேனே. (சு)

பொருகடலிலங்கைமன்னனுடல்கெடப்பொருத்தல்
கருகியகண்டத்தானக்கதிரிளங்கொழுந்துசூடும்
பெருகியசடையினப்பெருவேளூர்பேணினனே
யுருகியவடியரேத்தமுள்ளத்தாளுள்குவேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரியாதநாதர், தேவியார்-மின்னனையாளம்மை.

ஆ பதிகம் – சுo.

திருவிராமேச்சரம்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பாசமுங்கழிக்கவில்லாவரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டுமதியினுமால்செய்கோயில்
நேசமிக்கன்பினுலேனினமினீர்நின்முநாளுந்
தேசமிக்காளிருந்ததிருவிராமேச்சுரமே. (க)

முற்றினநாள்களென்றுமுடிப்பதேகாரணமா
யுற்றவன்போர்களாலேயுணர்வில்லாவரக்கர்தம்மைச்
செற்றமால்செய்ததகோயிற்றிருவிராமேச்சுரத்தைப்
பற்றிநீபரவுநெஞ்சேபடர்சடையீசன்பாலே. (உ)

கடலிடைமலிகடம்மாலடைத்தமால்கருமமுற்றித்
திடலிடைச்செய்ததகோயிற்றிருவிராமேச்சுரத்தைத்
தொடலிடைவைத்தநாவிற்சுழல்கின்றேன்மாய்மையின்றி
யுடலிடைதின்றும்பேராவைவராட்டுண்டுநானே. (கூ)

குன்றுபோற்றேரூடையகுணமிலாவரக்கர்தம்மைக்
கொன்றுபோராழியம்மால்வேட்கையாற்செய்ததகோயில்
நன்றுபோல்நெஞ்சமேநீநன்மையையறிதியாயிற்
சென்றுநீதொழுதுய்கண்டாய்திருவிராமேச்சுரமே. (ச)

வீரமிக்கெயிறுகாட்டிவிண்ணுறநீண்டராக்கன்
கூரமிக்கவனேச்சென்றுகொன்றுடன்கடற்பதித்த
தீரமிக்கானிருந்ததிருவிராமேச்சுரத்தைக்
கோரமிக்கார்தவத்தாற்கூடுவார்குறிப்புளாரே. (ஞ)

ஆர்வலநம்பின்மிக்காரென்றவவ்வரக்கர்கூடிப்
போர்வலஞ்செய்தமிக்குப்பொருதவர்தம்மையீட்டித்
தேர்வலஞ்செற்றமால்செய்திருவிராமேச்சுரத்தைச்
சேர்மடநெஞ்சமேநீசெஞ்சடையெந்தைபாலே. (ஈ)

வாக்கினுலின் புரைத்துவாழ்கிலார் தம்மையெல்லாம்
போக்கினும்புடைத்தவர்களுயிர்தனேயுண்டுமால்தான்
றேக்குநீர்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தை
நோக்கினுல்வணங்குவார்க்குநோய்வினே நுணுகுமன்றே. (எ)

பலவுராடமைசெய்துபார்தன்மேற்குழுமிவந்து
கொலேவிலார்கொடியராயவரக்கரைக்கொன்றுவீழ்த்த
சிலேயினுன்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தைத்
தலேயினுல்வணங்குவார்கள்தாழ்வரார்தவமதாமே. (அ)

கோடிமாதவங்கள்செய்தகுன்றினர்தம்மையெல்லாம்
வீடவேசக்கரத்தாலெறிந்துபின்னன்புகொண்டு
தேடிமால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தை
நாடிவாழ்நெஞ்சமேநீநன்னெறியாகுமன்றே. (கூ)

வன்கண்ணர்வாளரக்கர்வாழ்வினேயொன்றறியார்
புன்கண்ணராகிநின்றுபோர்கள்செய்தாரைமாட்டிச்
செங்கண்மால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தைத்
தங்களுலெய்தவல்லார்தாழ்வரார்தவேவன்பாலே. (கo)

வரைகளெரித்தேயுயர்ந்தமணிமுடியரக்கர்கோனே
விரையமுற்றறவொடுக்கிவீண்டுமால்செய்தகோயில்
திரைகள்முத்தால்வணங்குந்திருவிராமேச்சுரத்தை
யுரைகள்பத்தாலுரைப்பாருள்குவாரன்பினுலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-இராமலிங்கேசுவரர், தேவியார்-பருவதவர்த்தனியம்மை.

திருவாலவாய்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணுவென்றென்
ரோதியேமலர்கடியொருங்கிநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணேவைத்தாய்படர்சடைமதியஞ்சூடும்
ஆதியேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (க)

நம்பனேநான்முகத்தாய்நாதனேஞானமூர்த்தி
யென்பொனேயீசாவென்றென்றேத்துநரனேசற்றென்றும்
பின்பினேநிரிந்துநாயேன்பேர்த்தினிப்பிறவாவண்ணம்
அன்பனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (உ)

ஒருமருந்தாகியுள்ளாயும்பரோடுலருக்கெல்லாம்
பெருமருந்தாகிநின்றுப்பேரமுதினசுவையாய்க்
கருமருந்தாகியுள்ளாளும்வல்வினேகடீர்க்கும்
அருமருந்தாலவாயிலப்பனேயருள்செயாயே. (கூ)

செய்யகின் கமலபாதஞ்சேருமா தேவர்தேவே
மையணிகண்டத்தானேமான்மழுவொன்றேந்துஞ்
சைவனேசாலஞானங்கற்றறிவிலாதநாயேன்
ஐயனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (சு)

வெண்டலைசையிலேந்திபிகவுமூர்பலிகொண்டென்று
முண்டதுமில்லைசொல்லிலுண்டதுசுஞ்சுதன்னைப்
பண்டுநின்னியமாட்டாப்பளகனேளமதார
அண்டனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (டு)

எஞ்சலில்புகலிதென்றென்றேத்திநாளேசற்றென்றும்
வஞ்சகமொன்றுமின்றிமலரடிகாணும்வண்ண
நஞ்சினைமிடற்றில்வைத்தநற்பொருட்பதமேகாயேற்
கஞ்சனென்றுலவாயிலப்பனேயருள்செயாயே. (சு)

வழுவிலாதுன்னேவாழ்த்திவழிபடுந்தொண்டனேனுன்
செழுமலர்ப்பாதங்காணத்தெண்டிரைநஞ்சமுண்ட
குழகனேகோலவில்லீசூத்தனேமாத்தாயுள்ள
அழகனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (எ)

நறுமலர்நீருங்கொண்டுநாடொறுமேத்திவாழ்த்திச்
செறிவனசித்தம்வைத்துத்திருவடிசேரும்வண்ண
மறிகடல்வண்ணன்பாகமாமறையங்கமாறும்
அறிவனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (அ)

நலந்திகழ்வாயினூலாற்சருகிலைப்பக்தர்செய்த
பிலந்தியையரசதாளவருளினையென்றுதிண்ணங்
கலந்துடன்வந்துகின்றருள்கருதிநான்காண்பதாக
அலந்தனலைவாயிலப்பனேயருள்செயாயே. (கூ)

பெரடிக்கொடுபூசிப்பொல்லாக்குரம்பையிற்புந்தியொன்றிப்
பிடித்துகின்றுள்களென்றும்பிதற்றிநானிருக்கமாட்டே
னெடுப்பனென்றிலங்கைக்கோன்வந்தெடுத்தலுமிருபதுதோள்
அடர்த்தனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சொக்கநாதேசுவரர், தேவியார்-மீனாட்சியம்மை.

திருவண்ணாமலை-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஒதிமாமலர்கடியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினனே
யாதியேயமரர்கோவேயனியணாமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாறினிலேனே. (க)

பண்டனே வென்றவின் சொற்பாவையோர் பங்கநீல
கண்டனே காள்கொன்றைக்கடவுளேமலபாதர
அண்டனேயமரர்கோவேயணியணமலையுளாரனே
தொண்டனேனுன்னையல்லாற்சொல்லுமாசொல்லிலேனே. (உ)

உருவமுமுயிருமாகியோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைபிறப்புவீடாய்நின்றவெம்பெருமான்மிக்க
அருவிபொன்சொரியுமண்ணமலையுளாயண்டர்கோவே
மருவினின்பாதமல்லான்மற்றொருமாடிலேனே. (ஊ)

பைம்பொனேபவளக்குன்றேபரமனேபரல்வெண்ணீற்றாய்
செம்பொனேமலர்செய்பாதாசீர்தருமணியேயிக்க
அம்பொனேகொழித்தலீமுமணியணமலையுளானே
யென்பொனேயுன்னையல்லாலேதுணாணினேனிலேனே. (எ)

பிறையணிமுடியினனேபிஞ்ஞகாபெண்ணேர்பாகா
மறையவலாவிறைவாவண்டார்கொன்றையாய்வாமதேவா
அறைகழலமரரேத்துமணியணமலையுளானே
யிறைவனேயுன்னையல்லாலியாதுணாணினேனிலேனே. (ஏ)

புரிசடைமுடியின்மேலோர்பொருபுனற்கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக்கருதியகாலகாலா
அரிகுலமலிந்தவண்ணமலையுளாயலரின்மிக்க
வரிமிகுவண்டுபண்செய்பாதநான்மறப்பிலேனே. (ஐ)

இரவியுமதியும்விண்ணுமிருநிலம்புனலுங்காற்று
மூரகமார்பவனமெட்டுந்திசையொளியுருவமானா
யரவுமிழ்மணிகொள்சோதியணியணமலையுளானே
பரவுகின்பாதமல்லாற்பரமநான்பற்றிலேனே. (ஒ)

பார்த்தனுக்கன்றுநல்கிப்பாசுபதத்தையீந்தாய்
நீர்த்தடம்புலாவுகங்கைநெடுமுடிநிலாவவைத்தா
யார்த்தவர்நீண்டுகொண்டலணியணமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத்திறமலாற்றிறமிலேனே. (ஓ)

பாலுநெய்முதலாமிக்கபசுவின்ஞாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக்காண்கிலாவகையுளின்றாய்
ஆலுநீர்கொண்டல்பூகமணியணமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன்மலரடிமறப்பிலேனே. (ஔ)

இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடிந்தவெம்மா
னிரத்தினஞ்வரையையூக்கவொருவிரானுதியினாலே
யரக்கனெரித்தவண்ணமலையுளாயமரரேறே
சிரத்தினஞல்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே. (கஂ)

திருச்சிற்றம்பலம்.

இது நாகோட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அருணுசலேசுவரர், தேவியார்-உண்ணுமுலையம்மை.

திருவீழிமிழலை-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பூதத்தின் படையர்பாம்பின்பூணினர்பூணநூலர்
சீதத்திற்பொலிந்தநங்கட்கொழுந்தர்கஞ்சமுந்தகண்டர்
கீதத்திற்பொலிந்தவோசைக்கேள்வியர்வேள்வியாளர்
வேதத்தின்பொருளர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (க)

காலியிற்கதிர்செய்மேனிகங்குலிற்கமுத்தகண்டர்
மாலியின்மதியஞ்சேர்ந்தமகுடத்தர்மதுவும்பாலும்
ஆலியிற்பாகும்போலவண்ணித்திட்டடியார்க்கென்றும்
வேலியினமுதர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (உ)

வருந்தினருனலின்றுய்வழஞ்சினகாளராற்கே
பிழிருந்தருன்பொருள்களுல்வர்க்கியம்பினிருவரோடும்
பொருந்தினர்பிரிந்ததம்பாற்பொய்யராமவர்கட்கென்றும்
விருந்தினர்திருந்துவீழிமிழலையுள்விகிர்தனரே. (ஊ)

நிலையிலாவூர்மூன்றெரிந்தநெருப்பரிகரற்றம்பாகச்
சிலையில்நாணதுவுநாகங்கொண்டவர்தேவர்தங்கள்
தலையினற்றரித்தவென்புந்தலைமையிர்வடமும்பூண்ட
விலையிலாவேடர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (ச)

மறையிடைப்பொருளர்மொட்டின்மலர்வழிவாசத்தேனர்
கறவிடைப்பாலினெய்யர்கரும்பினிற்கட்டியாளர்
பிறையிடைப்பாம்புகொன்றைப்பிணையல்சேர்சடையுணீரர்
விறகிடைத்தீயர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (ரு)

எண்ணகத்தில்லையல்லருளரல்லிமவான்பெற்ற
பெண்ணகத்தரையர்கூற்றிற்பெருவலியிருவராகி
மண்ணகத்தவர்நீரிஞல்வர்தியதனில்மூவர்
விண்ணகத்தொருவர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (சு)

சந்தணிகொங்கையாளோர்பங்கினர்சாமவேத
ரென்தையுமெந்தைதந்தைதன்தையுமாயவீசர்
அந்தியேர்டுதயமந்தணளராளெய்யால்வேட்கும்
வெந்தழலுருவர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (எ)

நீற்றினினிறையப்பூசிநித்தலாயிரம்பூக்கொண்டு
ஏற்றுமுழியொருநாளொன்முகுறையக்கண்ணிறையவிட்ட
ஆற்றலுக்காழிகல்கியவன்கொணர்ந்திழிச்சுங்கோயில்
வீற்றிருந்தளிப்பர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (அ)

சித்திசெய்பவர்கட்கெல்லாஞ்சேர்விடஞ்சென்றுகூடப்
பத்திசெய்பவர்கள்பாவம்பறைப்பவரிறப்பிலாளர்

முத்திசெய்பவளமேனிமுதிரொளிநீலகண்டர்
வித்தினின்மூலையர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (கூ)

தருக்கினவரக்கன்றேரூர்சாரதிதடைகிலாது
பொருப்பினெடுத்ததோளும்பொன்முடிபத்தும்புண்ணாய்
நெரிப்புண்டங்கலறிமீண்டுநினைந்தடிபரவத்தம்வாள்
விருப்பொடுங்கொடுப்பர்வீழிமிழலையுள்விகிர்தனரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீழியழகீசுவரர், தேவியார்-சுந்தராம்பிகையம்மை.

திருச்சாய்க்காடு-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தோடுலாமலர்கடியித்தொழுதெழுமார்க்கண்டேயன்
வீடுகாளனுகிற்றென்றுமெய்கொள்வான்வந்தகாலன்
பாடுதான்செலுமஞ்சிப்பாதமேசரணமென்னச்
சாடினார்காலன்மாளச்சாய்க்காடுமேவினாரே. (க)

வடங்கெழுமீலமத்தாகவானவரசுரரோடு
கடைந்திடவெழுந்தநஞ்சங்கண்டுபல்தேவரஞ்சி
யடைந்துதநஞ்சரணமென்னவருள்பெரிதுடையராகித்
தடங்கடனஞ்சமுண்டார்சாய்க்காடுமேவினாரே. (உ)

அரணிலாவெளியநாவலருநிழலாகவீசன்
வரணியலாகித்தன்வாய்நூலினற்பத்தர்செய்ய
முரணிலாச்சிலந்தித்தண்ணீமுடியுடைமன்னனுக்கித்
தரணிதாளனவைத்தார்சாய்க்காடுமேவினாரே. (ங)

அரும்பெருஞ்சிலைக்கைவேடனுய்விறற்பார்த்தற்கன்று
உரம்பெரிதுடைமைகாட்டியெள்ளளமர்செய்துமீண்டே
வரம்பெரிதுடையனுக்கிவளமர்முகத்தின்மன்னு
சரம்பொலிதூணியீந்தார்சாய்க்காடுமேவினாரே. (ச)

இந்திரன்பிரமனாங்கியெண்வகைவசுக்களோடு
மந்திரமறையதோதிவானவர்வணங்கிவாழ்த்தத்
தந்திரமறியாதக்கன்வேள்வியைத்தகர்த்தனான்று
சந்திரற்கருள்செய்தாருஞ்சாய்க்காடுமேவினாரே. (ஞ)

ஆமலிபாலுநெய்யுமாட்டியர்ச்சனைகள்செய்து
பூமலிகொன்றைசூட்டப்பொறுதலன்றுதானைக்
கூர்மழுவொன்றுலோச்சக்குளிர்சடைக்கொன்றைமாலை
தாமெனத்தண்டிக்கீந்தார்சாய்க்காடுமேவினாரே. (சு)

மையறுமனத்தனுபவரேதன்வரங்கள்வேண்ட
ஐயமிலமரேத்தவாயிரமுகமதாகி
வையகமெனியப்பாய்வான்வந்திழிகங்கையென்னுந்
தையலேச்சடையிலேற்றார்சாய்க்காடுமேவினரே. (எ)

குவப்பெருந்தடக்கைவேடன்கொடுஞ்சிலையிறைச்சிப்பரந்
துவர்ப்பெருஞ்செருப்பாளிக்கித்தூயவாய்க்கலசமாட்ட
உவப்பெருங்குருதிசோரவொருகணையிடந்துங்கப்பத்
தவப்பெருந்தேவுசெய்தார்சாய்க்காடுமேவினரே. (அ)

நக்குலாமலர்பன்னூறுகொண்டுநன்ஞானத்தேடு
மிக்கபூசனைகள்செய்வான்மெண்மலரொன்றுகாண
தொக்குமென்மலர்க்கணெண்றங்கொருகணையிடந்தமைப்பச்
சக்கரங்கொடுப்பார்போலுஞ்சாய்க்காடுமேவினரே. (கூ)

புயங்களீஞ்ஞான்றும்பத்தமாயகொண்டரக்கனேஞடிச்
சிவன்றிருமலையைப்பேர்க்கத்திருமலர்க்குழலியஞ்ச
வியன்பெறவெய்திவீழவிரல்சிறிதூன்றிமீண்டே
சயம்பெறநாமமீந்தார்சாய்க்காடுமேவினரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–சாயாவனேசுவரர், தேவியார்–குயிலின்னான்மொழியம்மை.

திருநாகேச்சரம்–திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கச்சைசேரரவர்போலுங்கறையணிமிடற்றர்போலும்
பிச்சைகொண்டுண்பர்போலும்பேரருளாளர்போலு
மிச்சையான்மலர்கவியிரவெர்டுபகலுந்தம்மை
நச்சுவார்க்கினியர்போலுநாகவீச்சரவனுரே. (க)

வேடுறுவேடராகிவிசயனேடெய்தார்போலுங்
காடுறுதியர்போலுங்கடிபுனற்கங்கைகங்கை
சேடெறிசடையர்போலுக்ஞிவினேதீர்க்கவல்ல
நாடறிபுகழர்போலுநாகவீச்சரவனுரே. (உ)

கற்றுணேவில்லதாகக்கடியரண்செற்றர்போலும்
பொற்றுணேப்பாதர்போலும்புலியதளுடையர்போலுஞ்
சொற்றுணைமாலிகொண்டுதொழுதெழுவார்கட்கெல்லா
நற்றுணையாவர்போலுநாகவீச்சரவனுரே. (ஊ)

கொம்பனுளர்பாகர்போலுங்கொடியுடைவிடையர்போலுஞ்
செம்பொனுருவர்போலுந்திகழ்திருநீற்றர்போலு
மெம்பிரானெம்மையாளுமிறைவனேயென்றுதம்மை
நம்புவார்க்கன்பர்போலுநாகவீச்சரவனுரே. (எ)

கடகரியுரியர்போலுங்கனமழுவாளர்போலும்
படவரவரையர்போலும்பாரிடம்பலவுங்கூடிக்
குடமுடைமுழவமார்ப்பக்கூளிகள்பாடஞரு
நடநவிலடிகள்போலுநாகவீச்சரவனுரே. (நி)

பிறையுமுசடையர்போலும்பெண்ணெருபாகர்போலு
மறையுமுமொழியர்போலுமான்மறையவன்றனோடு
முறைமுறையமார்கூடிமுடிகளால்வணங்கநின்ற
நறவமர்கழலர்போலுநாகவீச்சரவனுரே. (சு)

வஞ்சகர்க்கரியர்போலுமருவினேர்க்கெளியர்போலுங்
குஞ்சரத்துரியர்போலுங்கூற்றினைக்குமைப்பர்போலும்
விஞ்சையரிரியவன்முவேலைவாய்வந்தெழுந்த
நஞ்சணிமிடற்றர்போலுநாகவீச்சரவனுரே. (எ)

போகமார்மோடிகொங்கைபுணர்தருபுனிதர்போலும்
வேகமார்விடையர்போலும்வெண்பொடியரடுமேனிப்
பாகமாலுடையர்போலும்பருப்பதவில்லர்போலு
நாகநாணுடையர்போலுநாகவீச்சரவனுரே. (அ)

கொக்கரைதாளம்வீணைபாணிசெய்குழகர்போலு
மக்கரையணிவர்போலுமைந்தலையரவர்போலும்
வக்கரையமர்வர்போலுமாதரைமையல்செய்யு
நக்கரையருவர்போலுநாகவீச்சரவனுரே. (சு)

விண்மையாற்புரங்கண்மூன்றும்வெந்தழல்விரித்தார்போலுந்
தன்மையரலமரர்தங்கடலேவர்க்குந்தலேவர்போலும்
வன்மையான்மலையெடுத்தான்வலியினைத்தொலேவித்தாங்கே
நன்மையாலளிப்பர்போலுநாகவீச்சரவனுரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சண்பகாரண்ணியேசுவரர், தேவியார்-குன்றமுலோயகியம்மை.

ஆ பதிகம்-கக.

திருக்கொண்டீச்சரம்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வரைகிலேன்புலன்களோந்தும்வரைகிலாப்பிறவியாயப்
புரையிலேபடங்கிநின்றுபுறப்படும்வழியுங்காணேன்
அரையிலேமினிருநாகத்தண்ணலேயஞ்சலென்னுய்
திரையுலாம்பழனவேலித்திருக்கொண்டீச்சரத்துளாரனே. (க)

தொண்டனேன்பிறந்துவாளாதொல்வினைக்குழியில்வீழ்ந்து
பிண்டமேசுமந்துதைந்துபோர்வதோர்வழியுங்காணேன்
அண்டனேயண்டவாணவறிவனேயஞ்சலென்னுய்
தெண்டிரைப்பழனஞ்சூழ்ந்தநிருக்கொண்டீச்சரத்துளாரனே. (உ)

கால்கொடுத்தெலும்புமூட்டிக்கதிர்கரம்பாக்கையார்த்துத்
தோலுடுத்துதிரமட்டித்தொகுமயிர்மேய்ந்தகூரை
யோலெடுத்தழைஞர்கூடியொளிப்பதற்கஞ்சுகின்றேன்
சேலுடைப்பழனஞ்சூழ்ந்ததிருக்கொண்டீச்சரத்துளானே. (கூ.)

கூட்டமாயைவர்வந்துகொடுக்தொழிற்குணத்தராகி
யாட்டுவார்க்காற்றகில்லேனுடரவசைத்தகோவே
காட்டிடையரங்கமாகவாடியகடவுளேயோ
சேட்டிரும்பழனவேலித்திருக்கொண்டீச்சரத்துளானே. (சு)

பொக்கமாய்கின்றபொல்லாப்புழுமிடைமூடைகொளாக்கை
தொக்குகின்றைவர்தொண்ணூற்றறுவருந்துயக்கமெய்த
மிக்குகின்றிவர்கள்செய்யும்வேதனைக்கலந்துபோனேன்
செக்கரேதிகழுமேனித்திருக்கொண்டீச்சரத்துளானே. (எ)

ஊனுலாமுடைகொளாக்கையுடைகலமாவதென்றும்
மானுலாமழைக்கணார்தம்வாழ்க்கையைமெய்யென்றெண்ணி
நானெலாபிணியகாலைண்ணிலேணெண்ணபில்லேன்
தேனுலாம்பொழில்கள்சூழ்ந்ததிருக்கொண்டீச்சரத்துளானே. (சு)

சாணிருமடங்குநீண்டசடைக்குடைப்பதிக்குநாதர்
வாணிகரைவர்தொண்ணூற்றறுவருமயக்குஞ்செய்து
பேணியபதியினின்றுபெயரும்போதறியமாட்டேன்
சேணுயர்மாடநீடுதிருக்கொண்டீச்சரத்துளானே. (எ)

பொய்மறித்தியற்றிவைத்துப்புலால்கமழ்பண்டம்பெய்து
பைமறித்தியற்றியன்னபாங்கிலாக்குரம்பைதன்று
கைமறித்தீனவரவிகழ்பும்போதறியமாட்டேன்
சென்னெறிச்செலவுகாணேன்றிருக்கொண்டீச்சரத்துளானே. (அ)

பாலனுய்க்கழிந்தநாளும்பனிமலர்க்கோதைமார்தம்
மேலனுய்க்கழிந்தநாளுமெலிவொடுமூப்புவந்து
கோலனுய்க்கழிந்தநாளுங்குறிக்கொளிலாதகெட்டேன்
சேலுலாம்பழனவேலித்திருக்கொண்டீச்சரத்துளானே. (ஆ)

விரைதருகருமென்கூந்தல்விளங்கிழைவேலொண்கண்ணுள்
வெருவரவிலங்கைக்கோமான்விலங்கலெடுத்தலுன்று
பருவரையனையதோளுமுடிகளும்பாறிவீழத்
திருவிரலான்றினனேதிருக்கொண்டீச்சரத்துளானே. (கஂ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பசுபதீசுவரர், தேவியார்-சாந்தநாயகியம்மை.

திருவாலங்காடு–திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளநீர்ச்சடையர்போலும்விரும்புவார்க்கெளியர்போலும்
உள்ளுளேயுருகிநின் றங்குகப்பவர்க்கன்பர்போலுங்
கள்ளமேவினகளெல்லாங்கரிசறுத்திடுவர்போலும்
அள்ளலம்பழனமேயவாலங்காட்டடிகளாரே. (க)

செந்தழலுருவர்போலுஞ்சினவிடையுடையர்போலும்
வெந்தவெண்ணீறுகொண்டுமெய்க்கணிந்திடுவர்போலும்
மந்தமாம்பொழிற்பழனமல்கியவள்ளல்போலும்
அந்தமிலடிகள்போலுமாலங்காட்டடிகளாரே. (உ)

கண்ணினுற்காமவேளைக்கனலெழவிழிப்பர்போலும்
எண்ணிலார்புரங்கண்மூன்றுமெரியுணச்சிரிப்பர்போலும்
பண்ணினார்முழவமோவாப்பைம்பொழிற்பழனமேய
அண்ணலாரெம்மையாளுமாலங்காட்டடிகளாரே. (ஊ)

காறிடுவிடத்தையுண்டகண்டரெண்டோளர்போலுங்
தூறிடுசுடலைதன்னிற்சுண்ணவெண்ணீற்றர்போலுங்
கூறிடுமுருவர்போலுங்குளிர்பொழிற்பழனமேய
ஆறிடுசடையர்போலுமாலங்காட்டடிகளாரே. (எ)

பார்த்தனேடமர்பொருதபத்திமைகாண்பர்போலுங்
கூர்த்தவாயம்புகோத்துக்குணங்களியதிவர்போலும்
பேர்த்துமோராவகாழியம்பொடுகொடுப்பர்போலுந்
தீர்த்தமாம்பழனமேயதிருவாலங்காடனாரே. (ஏ)

வீட்டினுர்சுடுவெண்ணீறுமெய்க்கணிந்திடுவர்போலுங்
காட்டினின்றுடல்பேணுங்கருத்தினையுடையர்போலும்
பாட்டினுர்முழவமோவாப்பைம்பொழிற்பழனமேயரர்
ஆட்டினாரவந்தன்னையாலங்காட்டடிகளாரே. (ஐ)

தாளுடைச்செங்கமலத்தடங்கொள்சேவடியர்போலு
நாளுடைக்காலன்வீழவுதைசெய்தநம்பர்போலுங்
கோளுடைப்பிறவிதீர்ப்பார்குளிர்பொழிற்பழனமேய
ஆளுடையண்ணல்போலுமாலங்காட்டடிகளாரே. (ஒ)

கூடினாருமைதன்னேடுகுழிப்புடைவேடங்கொண்டு
சூடினார்கங்கையாளைச்சுவறிடுசடையர்போலும்
பாடினார்சாமவேதம்பைம்பொழிற்பழனமேயார்
ஆடினார்காளிகாணவாலங்காட்டடிகளாரே. (ஓ)

வெற்றரைச்சமணரோடும்வீலியுடைக்கூறைபோர்க்கும்
ஏற்றரைச்சொற்கள்கொள்ளார்குணங்களேயுகப்பர்போலும்
பெற்றமேயுகந்தங்கேறும்பெருமையையுடையர்போலும்
அற்றங்களறிவர்போலுமாலங்காட்டடிகளாரே. (கூ)

மத்தனுய்மலியெடுத்தவரக்கனீக்காத்தோடொல்க
வொத்தினூர்திருவிரலாலூன்றியிட்டருள்வர்போலும்
பத்தர்தம்பாவந்தீர்க்கும்பைம்பொழிற்பழனமேய
அத்தனூர்நம்மையாள்வாராலங்காட்டடிகளாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–ஊர்த்தாண்டவேசுரர், தேவியார்–வண்டார்குழலிம்மை.

திருக்கோவல்வீரட்டானம்–திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

செத்தையேன்சிதம்பாயேன்செடியனேனழுக்குப்பாயும்
பொத்தையேபோற்றிநாளும்புகலிடமறியமாட்டேன்
எத்தைநான்பற்றிநிற்கேனிருளறநோக்கமாட்டாக்
கொத்தையேன்செய்வதென்னேகோவல்வீரட்டனீரே. (க)

தலைசுமந்திருகைநாற்றித்தரணிக்கேபாரையதாகி
நிலையிலாநெஞ்சந்தன்னுணித்தலுமைவர்வேண்டும்
வினைகொடுத்தறக்கமாட்டேன்வேண்டிற்றேவேண்டியெய்த்தேன்
குலைகொண்மாங்கனிகள்சிந்துங்கோவல்வீரட்டனீரே. (உ)

வழித்தலைப்படவுமாட்டேன்வைகலுந்தூய்மைசெய்து
பழித்திலேன்பாசமற்றுப்பரமநான்பரவமாட்டேன்
இழித்திலேன்பிறவிதன்னேயென்னினைந்திருக்கமாட்டேன்
கொழித்துவந்தலைக்குந்தெண்ணீர்க்கோவல்வீரட்டனீரே. (ங)

சாற்றுவரைவர்வந்தசந்தித்தகுடிமைவேண்டிக்
காற்றுவர்கனலப்பேசிக்கண்செவிமூக்குவாயுள்
ஆற்றுவரலக்குபோனேனுதியறிவொன்றின்றிக்
கூற்றுவர்வாயிற்பட்டேன்கோவல்வீரட்டனீரே. (ச)

தடுத்திலேனேவர்தம்மைத்தத்துவத்துயர்வுநீர்மைப்
படுத்திலேன்பரப்புநோக்கிப்பன்மலர்ப்பாதமுற்ற
அடுத்திலேன்சிந்தையாரவார்வலித்தன்புதிண்ணங்
கொடுத்திலேன்கொடியவாநரன்கோவல்வீரட்டனீரே. (ஞ)

மாச்செய்தஞ்சம்பைதன்னேமண்ணிடைமயக்கமெய்து
நாச்செய்தநாளுமைந்துதல்லனவாய்தல்வைத்துக்
காச்செய்தகாயுந்தன்னுணித்தலுமைவர்வந்து
கோச்செய்துஞமைக்கவாற்றேன்கோவல்வீரட்டனீரே. (சு)

படைகள்போல்வினைகள்வந்துபற்றியென்பக்கனின்றும்
விடகிலாவாதலாலேவிதிர்தனைவிரும்பியேத்தும்
இடையிலேனென்செய்கேனுனிரப்பவர்தங்கட்கென்றுங்
கொடையிலேன்கொள்வதேதரன்கோவல்வீரட்டனீரே. (எ)

பிச்சிலேன்பிறவிதன்னைப்பெறுதையேன்பிணக்கமென்னுந்
தச்சுளேயழுந்திவீழ்ந்துதயரமேயிடும்பைதன்னுள்
அச்சனுயாதிமூர்த்திக்கன்பனுய்வாழமாட்டாக்
கொச்சையேன்செய்வதென்னேகோவல்வீரட்டனீரே. (அ)

கிணத்திடையாக்கைபேணிகியமஞ்செய்திருக்கமாட்டேன்
மணத்திடையாட்டம்பேசிமக்களேசுற்றமென்னுங்
கணத்திடையாட்டப்பட்டுக்கூதலாலுன்னைப்பேணுங்
குணத்திட்டவாழமாட்டேன்கோவல்வீரட்டனீரே. (கூ)

விரிகடலிலங்கைக்கோனேவியன்கயிலாயத்தின்கீ
ழிருபதுதோளும்பத்துச்சிரங்களுநெரியவூன்றிப்
பரவியபாடல்கேட்டுப்படைகொடுத்தருளிச்செய்தார்
குரவொடுகோங்குசூழ்ந்தகோவல்வீரட்டனூரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது ஈரோட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீரட்டேசுரதார், தேவியார்-வெளாகந்தவல்லி.

திருநனிபள்ளி-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மூற்றுணையாயினூனூலர்க்குமுதல்வன்றன்னைச்
சொற்றுணையாயினூனைச்சோதியையாதரித்து
உற்றுணர்க்தருகியுறியுள்கசிவுடையவர்க்கு
நற்றுணையாவர்போலுகனிபள்ளியடிகளாரே. (க)

புலர்ந்தகால்பூவுஞீருங்கொண்டடிபோற்றமாட்டா
வலஞ்செய்துவாயினூலால்வட்டணைப்பத்தர்செய்த
லிலக்கியையரசனுக்கிச்சிர்மைகளருளவல்லார்
நலந்திகழ்சோலைசூழ்ந்தநனிபள்ளியடிகளாரே. (உ)

எண்பதம்பத்தமாறுமென்னுளேயிருந்தும்மண்ணிக்
கண்பழக்கொன்றுமின்றிக்கலக்கநானலக்கழிந்தேன்
செண்பகந்திகழும்புன்னைசெழுந்திரட்குரவம்வேங்கை
நண்புசெய்சோலைசூழ்ந்தநனிபள்ளியடிகளாரே. (ஈ)

பண்ணினுர்பாடலாகிப்பழத்தினிரதமாகிக்
கண்ணினுர்பார்வையாகிக்கருத்தொடெற்பமாகி
யெண்ணினுரெண்ணமாகியேழுலகனேத்துமாகி
நண்ணினுர்வீனகடூர்ப்பார்நனிபள்ளியடிகளாரே. (ச)

துஞ்சிருள்காலைமாலைதொடர்ச்சியைமறந்திராதே
யஞ்செழுத்தேதினாளுமரனடிக்கன்பதாரும்
வஞ்சனீப்பார்ற்சோருக்கிவழக்கிலாவமணர்தந்த
நஞ்சமுதாக்குவித்தார்நனிபள்ளியடிகளாரே. (நி)

செம்மலர்க்கமலத்தோனுந்திருமுடிகாணமாட்டான்
அம்மலர்ப்பாதங்காண்பானுழியானகழ்ந்துங்காணுன்
நின்மலனென்றங்கேத்துநீனப்பினியருளினாளு
நம்மலமறுப்பர்போலுநனிபள்ளியடிகளாரே. (ஈ)

அரவத்தால்வரையைச்சுற்றியமரோடசுரர்கூடி
யரவித்தக்கடையத்தோன்றுமாலஞ்சமுதாவுண்டார்
விரவித்தம்மடியராகிவீடிலாத்தொண்டர்தம்மை
நரகத்தில்வீழவொட்டார்நனிபள்ளியடிகளாரே. (எ)

மண்ணுளேதிரியும்போதுவருவனபலவுங்குற்றம்
புண்ணுளேபுரைபுரையன்புழுப்பொதிபொள்ளலாக்கை. (அ-ஊ)

பத்தமோரிரட்டிதோளான்பாரித்தமலியெடுக்கப்
பத்தமோரிரட்டிதோள்கள்படருடம்படரவூன்றிப்
பத்தலாய்தேம்பாடப்பரிந்தவற்கருள்கொடுத்தார்
பத்தர்தாம்பரவியேத்துநனிபள்ளிப்பரமனாரே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நற்றுணையப்பர், தேவியார்-பர்வதராசபுத்திரி.

திருநாகைக்காரோணம்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மானிதாய்தந்தைமக்கள்மற்றுளசுற்றமென்னும்
வினையுளேவிழுந்தழுந்திவேதனைக்கிடம்மாகாதே
கனையுமாகடல்சூழ்நாகைகமண்ணுகாரோணத்தானே
நினையுமாவல்லீராகிலுய்யலாநெஞ்சினீரே. (க)

வையனைவையமுண்டமாலங்கர்தோண்மேற்கொண்ட
செய்யனைச்செய்யபோதிற்றிசைமுகன்சிரமொன்றேந்தும்
கையனைக்கடல்சூழ்நாகைக்காரோணங்கோயில்கொண்ட
ஐயனைநினைந்தநெஞ்சேயம்மாமுய்ந்தவாறே. (உ)

நிருத்தனைநிமலன்றன்னைநீலலம்விண்ணின்மிக்க
விருத்தனைவேதவித்தைவினைபொருண்மூலமான
கருத்தனைக்கடல்சூழ்நாகைக்காரோணங்கோயில்கொண்ட
வொருத்தனையுணர்தலாலுமுய்ந்தவாநெஞ்சினீரே. (ஊ)

மண்டினேயிரந்தகொண்டமாயனேடசுரர்வானேர்
தெண்டிரைகடையவன்றவிடன்னேயுண்ட
கண்டனேக்கடல்சூழ்நாகைக்காரோணங்கோயில்கொண்ட
அண்டனேநினேந்தெஞ்சேயம்மகாமுய்ந்தவாறே. (சு)

நிறைபுனலணிந்தசென்னிநீணிலாவரவஞ்சூடி
மறையொலிபாடியாடன் மயானத்தமிழ்ந்தமைந்தன்
கறைமலிகடல்சூழ்நாகைக்காரோணங்கோயில்கொண்ட
விறைவனேநாளுமேத்தவிடும்பைபோயின் பமாமே. (டு)

வெம்பணிக்கருங்கையானேவெருவவன் முரிவைபோர்த்த
கம்பணிக்காலற்காய்ந்தகாலனேஞாலமேத்தும்
உம்பனேயும்பர்கோனேநாகைக்காரோணமேய
செம்பொனேநினேந்தெஞ்சேதிண்ணகாமுய்ந்தவாறே. (சு)

வெங்கடுங்கானத்தேழைதன்னெடும்வேடனுய்ச்சென்
றங்கமர்மலர்த்துபார்த்தற்கடுசரமருளினேனே
மங்கைமாராடலோவாமன்னுகாரோணத்தானேக்
கங்குலும்பகலுங்காணப்பெற்றுநான்களித்தவாறே. (எ)

தெற்றினர்புரங்கள்மூன்றுந்தீயினில்விழவோரம்பாற்
செற்றவெஞ்சிலேயர்வஞ்சர்சிந்தையுட்சேர்விலாதார்
கற்றவர்பயிலுநாகைக்காரோணங்கருதியேத்தப்
பெற்றவர்பிறந்தார்மற்றப்பிறந்தவர்பிறந்திலாரே. (அ-சூ)

கருமலிகடல்சூழ்நாகைக்காரோணர்கமலபாதத்
தொருவிரனுதிக்குநில்லாதொண்டிறலரக்கனுக்கான்
இருதிறமங்கைமாரோடெம்பிரான்செம்பொனுகந்
திருவடிதரித்துஞற்றத்திண்ணகாமுய்ந்தவாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காயாரோகணேசுவரர், தேவியார்-நீலாயதாக்ஷியம்மை.

திருவின்னம்பர்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

விண்ணவர்மகுடகோடிமிடைந்தசெவடியர்போலும்
பெண்ணெருபாகர்போலும்பேடலியாணர்போலும்
வண்ணமாலயனுங்காணுமால்வரையெரியர்போலும்
எண்ணுருவநேகர்போலுமின்னம்பரீசனுரே. (க)

பன்னியமறையர்போலும்பாம்பரையுடையர்போலுந்
தன்னியசடையர்போலுந்தூமதிமத்தர்போலு
மன்னியமழுவர்போலுமாதிடமிழிவர்போலும்
ஏன்னியமுடையர்போலுமின்னம்பரீசனுரே. (உ)

மறியொருகையர்போலுமர தமையுடையர்போலும்
பறிதலைப்பிறவிநீக்கிப்பணிகொளவல்லர்போலுஞ்
செறிவுடையங்கமாலைசேர்திருவுருவர்போலும்
எறிபுனற்சடையர்போலுமின்னம்பரீசனரே. (கூ)

விடமலிகண்டர்போலும்வேள்வியையழிப்பர்போலுங்
கடவுநல்விடையர்போலுங்காலனைக்காய்வர்போலும்
படமலியரவர்போலும்பாய்புலித்தோலர்போலும்
இடர்களைந்தருள்வர்போலுமின்னம்பரீசனரே. (சு)

அளிமலர்க்கொன்றைதுன்றுமவிர்சடையுடையர்போலுங்
களிமயிற்சாயலோடுங்காமனைவிழிப்பர்போலும்
வெளிவளருருவர்போலும்வெண்பொடியணிவர்போலும்
எளியவரடியர்க்கென்றுமின்னம்பரீசனரே. (டு)

கணையமர்கிலேயர்போலுங்கரியுரியுடையர்போலுங்
தணையமர்பெண்ணர்போலுந்தாமணிக்குன்றர்போலும்
அணையுடையடியர்கூடியன்பொடுமலர்கவேும்
இணையடியுடையர்போலுமின்னம்பரீசனரே. (சு)

பொருப்பமர்புயத்தர்போலும்புனலணிசடையர்போலு
மருப்பிளவாமைதாங்குமார்பில்வெண்ணூலர்போலும்
உருத்திரமூர்த்திபோலுமுணர்விலரர்புரங்கண்மூன்றும்
எரித்திடுஞ்சிலேயர்போலுமின்னம்பரீசனரே. (எ)

காடிடமுடையர்போலுங்கடிகுரல்விளியர்போலும்
வேடுருவுடையர்போலுமெண்மதிக்கொழுந்தர்போலுங்
கோடலர்வன்னிதும்பைகொக்கிறகலர்த்தகொன்றை
யேடமர்சடையர்போலுமின்னம்பரீசனரே. (அ)

காறிடுவிடத்தையுண்டகண்டரெண்டோளர்போலு
நீறுடையுருவர்போலுகிணைப்பினையரியர்போலும்
பாறுடைத்தலைகையேற்றிப்பலிதிரிந்துண்பர்போலும்
ஏறுடைக்கொடியர்போலுமின்னம்பரீசனரே. (கூ)

ஆர்த்தெழுமிலங்கைக்கோனையருவரையடர்ப்பர்போலும்
பார்த்தனேடமர்பொருதபடைகொடுத்தருள்வர்போலுந்
தீர்த்தமாங்கங்கைதன்னைத்திருச்சடைவைப்பர்போலும்
ஏத்தவேழுலகும்வைத்தாரின்னம்பரீசனரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-எழுத்தறிந்தவீசுவரர், தேவியார்-கொந்தார்பூங்குழலம்மை.

ஆடு பதிகம் - எடு.

திருச்சேறை-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பெருந்திருவீமவான்பெற்றபெண்கொடிபிரிந்தபின்னே
வருந்துவான்றவங்கள்செய்யமாமணம்புணர்ந்தமன்னும்
அருந்திருமேனிதன்பாலங்கொருபாகமாகத்
திருந்திடவைத்தார்சேறைச்சென்றெறிச்செல்வனாரே. (க)

ஓர்த்துளவாறுநோக்கியுண்மையையுணராக்குண்டர்
வார்த்தையெமெய்யென்றெண்ணிமயக்கில்வீழ்ந்தழுந்துவேனைப்
பேர்த்தெனையாளாக்கொண்டுபிறவிவான்பிணிகளெல்லாம்
தீர்த்தருள்செய்தார்சேறைச்சென்றெறிச்செல்வனாரே. (உ)

ஒன்றியதவத்தமன்னியுடையனுயல்பில்காலம்
நின்றுதங்கழல்களேத்துநீள்சிலேவிசையனுக்கு
வென்றிகொள்வேடனாகிவீரும்பிவெங்கானகத்துச்
சென்றருள்செய்தார்சேறைச்சென்றெறிச்செல்வனாரே. (ங)

அஞ்சையுமடக்கியாற்றலுடையனையனேகாலம்
வஞ்சமிறவத்தணின்றுமன்னியபகீரதற்கு
வெஞ்சினமுகங்களாகிவிசையொடுபாயுங்கங்கை
செஞ்சடையேற்றார்சேறைச்சென்றெறிச்செல்வனாரே. (ச)

நிறைந்தமாமணலிக்கூப்பிநேசமோடாவின்பாலைக்
கறந்துகொண்டாட்டக்கண்டுகழுத்ததன்றுதைதாளை
யெறிந்தமாணிக்கப்போதேயெழில்கொள்தண்டீசனென்னச்
சிறந்தபேரளித்தார்சேறைச்சென்றெறிச்செல்வனாரே. (ஞ)

விரித்தபல்கதிர்கொள்ளுலம்வெடிபடுதமருகங்கை
தரித்ததோர்கோலகாலபயிரவனதிவேழம்
உரித்தமையஞ்சக்கண்டுமொண்டிருமணிவாய்விள்ளச்
சிரித்தருள்செய்தார்சேறைச்சென்றெறிச்செல்வனாரே. (சு)

சுற்றுமுன்னிமையோர்நின்றுதொழுதுதூமலர்கடூவி
மற்றெமையுயக்கொளென்னமன்னுவான்புரங்கண்மூன்றும்
உற்றொருசொடியின்முன்னமொள்ளழலெழுவாயின்வீழச்
செற்றருள்செய்தார்சேறைச்சென்றெறிச்செல்வனாரே. (எ)

மூன்றியிவ்வுலகமெல்லாம்படைத்தவன்மாலினேடும்
என்தனிநாதனேயென்றிறைஞ்சிநின்றேத்தல்செய்ய
அந்தமில்சோதிதன்னையடிமுடியறியாவண்ணஞ்
சென்றழலானர்சேறைச்சென்றெறிச்செல்வனாரே. (அ-சு)

ஒருவருகிரிலாதவொண்டிறலரக்கனேடிப்
பெருவரையெடுத்ததிண்டோள்பிறங்கியமுடிகளிற்று
மருவியெம்பெருமானென்னமலரடிமெள்ளவாங்கித்
திருவருள்செய்தார்சேறைச்செங்கெறிச்செல்வனாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சென்னெறியப்பர், தேவியார்-ஞானவல்லியம்மை.

நெஞ்சம் ஈசனே நினைந்த-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

முத்தினே மணியைப்பொன்னே முழுமுதற்பவளமேய்க்குங்
கொத்தினேவயிரமாலைக்கொழுந்தினேயமரர்சூடும்
வித்தினேவேதவேள்விவிளைவினைவிளங்கநின்ற
அத்தனேநினைந்தநெஞ்சமழுகிதானினைந்தவாறே. (க)

முன்பனேயுலகுக்கெல்லாமூர்த்தியைமுனிகளேத்தும்
இன்பனேயிலங்குசோதியிறைவனேயரிவையஞ்ச
வன்பனைத்தடக்கைவேழக்களிற்றினையுரித்தவெங்கள்
அன்பனேநினைந்தநெஞ்சமழுகிதானினைந்தவாறே. (உ)

கரும்பினுமினியான்றன்னைக்காய்கதிர்ச்சோதியானே
இருங்கடலமுதந்தன்னையிறப்பொடுபிறப்பிலானைப்
பெரும்பெருட்டிளவியானைப்பெருந்தவமுனிவரேத்தும்
அரும்பெரு நினைந்தநெஞ்சமழுகிதானினைந்தவாறே. (ங)

செருத்தனேயருத்திசெய்தசெஞ்சரஞ்செலுத்தியூர்மேல்
கருத்தனேக்கனகமேனிக்கடவுளைக்கருதம்வானோர்க்
கொருத்தனேயொருத்திபாகம்பொருத்தியுமருத்திதீரா
நிருத்தனேநினைந்தநெஞ்சநேர்படநினைந்தவாறே. (ச)

கூற்றினையுதைத்தபாதக்குழகனேமழலைவெள்ளே
றேற்றனையிமையோரேத்தவிருஞ்சடைக்கற்றைதன்மேல்
ஆற்றினையடியரேத்தமமுதனையமுதமாக
நீற்றனைநினைந்தநெஞ்சநேர்படநினைந்தவாறே. (ஞ)

கருப்பனேத்தடக்கைவேழக்களிற்றினையுரித்தகண்டன்
விருப்பனேவிளங்குசோதியென்கயிலாயமென்னும்
பொருப்பனேப்பொருப்பன்மங்கைபங்கனேயங்கையேற்ற
பெருப்பனேநினைந்தநெஞ்சநேர்படநினைந்தவாறே. (ஈ)

நீதியானினேப்புளானினைப்பவர்மனத்துளானைச்
சாதியைச்சங்கவெண்ணீற்றண்ணலேவிண்ணிலவானோர்
சோதியைத்தளக்கமில்லாவிளக்கினேயளக்கலாகா
ஆதியைநினைந்தநெஞ்சமழுகிதானினைந்தவாறே. (எ)

பழகனீயுலகுக்கெல்லாம்பருப்பனீப்பொருப்போடொக்கும்
மழகளியானீயின்றேல்மலைமகணடுங்கப்போர்த்த
குழகனீக்குழலித்திங்கள்குளிர்சடைமருவவைத்த
அழகனீகினீன்தநெஞ்சமழகிதாகினீன்தவாறே. (ச)

விண்ணிடைமின்னெப்பானீமெய்ப்பெரும்பொருளைப்பானீக்
கண்ணிடைமணியொப்பானீக்கடவிருட்சுடரொப்பானீ
எண்ணிடையெண்ணலாகாவிருவரைவெருவுகீண்ட
அண்ணலேகினீன்தநெஞ்சமழகிதாகினீன்தவாறே. (கூ)

உரவனீத்திரண்டதிண்டோளரக்கனீயூன்றிமூன்றார்
கிரவனிமிர்ந்தசோதிநீண்முடியமரர்தங்கள்
சுரவனீக்குளிர்வெண்டிங்கட்சடையிடைப்பொதிமைவாய்
அரவனீகினீன்தநெஞ்சமழகிதாகினீன்தவாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

தனித்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டனேன்பட்டதென்னேதூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக்குங்குமக்குழம்புசாத்தி
இண்டைகொண்டேறநோக்கியீசனெம்பிரானேக்
கண்டனேக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே. (க)

பின்னிலேன்முன்னிலேனன்பிறப்பறுத்தருள்செய்வானே
என்னிலேனுயினேனுளங்கதிர்ப்பயலேத்திங்கட்
சென்னிலாவெறிக்குஞ்சென்னிச்சிவபுரத்தமரரேறே
நின்னலால்கனேகணூரேனீயுசேசகலத்தானே. (உ)

கள்ளனேன்கள்ளத்தொண்டாய்க்காலத்தைக்கழித்துப்போக்கித்
தெள்ளியேனுகினின்றுதேடினேனுடிக்கண்டேன்
உள்குவாருள்கிற்றெல்லாமுடனிருந்தறிதியென்று
வெள்கினேன்வெள்கினனும்விலாவிறச்சிரித்திட்டேனே. (ங)

உடம்பெனுமனையகத்துளுள்ளமேதகளியாக
மடம்படுமூணர்நெய்யட்டியுயிரெனுந்திரிமயக்கி
இடம்படுஞானத்தீயாலெரிகொளவிருந்துநோக்கில்
கடம்பமர்காளைதாதைதழலடிகாணலாமே. (ச)

வஞ்சப்பெண்ணரங்குகோயில்வாளெயிற்றரவர்தஞ்சா
வஞ்சப்பெண்ணிருந்தசூழல்வான்றவழ்மதியர்தோயும்
வஞ்சப்பெண்வாழ்க்கையாளேன்வாழ்வினேவாழலுற்று
வஞ்சப்பெண்ணுறக்கமானேன்வஞ்சனேனென்செய்கேனே. (ஞ)

உள்குவாருள்ளத்தானேயுணர்வெனும்பெருமையானே
உள்கினேனுனுங்காண்பானுருகினேனாறிழூறி
எள்கினெனெந்தைபெம்மானிருதலீமின் னுகின்ற
கொள்ளிமேலெறும்பென்னுள்ளமெங்ஙனங்கூடுமாறே. (சு)

மோத்தையைக்கண்டகாக்கைபோலவல்வினைகள்மொய்த்துன்
வார்த்தையைப்பேசலொட்டா மயக்கநான்மயங்குகின்றேன்
சீத்தையைச்சிதம்புதன்னீச்செடிகொணேய்வடிவொன்றில்லா
ஊத்தையைக்கழிக்கும்வண்ணமுணர்வுதாவுலகமூர்த்தி. (எ)

அங்கத்தைமண்ணுக்காக்கியார்வத்தையுனக்கேதந்து
பங்கத்தைப்போகமாற்றிப்பாவித்தேன்பரமாகின்னீச்
சங்கொத்தமேனிச்செல்வாசாதனையேனுன்னை
யெங்குற்றுயென்றபோதாவிங்குற்றேனென்கண்டாயே. (அ)

வெள்ளநீர்ச்சடையனுர்தாம்வினவுவார்போலவந்தென்
உள்ளமேபுகுந்துநின்றுர்க்குறங்குநான்புடைகள்போந்து
கள்ளசோபுகுந்தீரென்னக்கலந்துதானேக்கிறக்கு
வெள்ளநோமென்றுகின்றுர்விளங்கிளம்பிறையனரே. (ஈ)

பெருவிரலிறைதானூன்றப்பிறையெயிறிலங்கவங்காந்
தருவரையனையதோளானரக்கனன்றலறிவீழ்ந்தான்
இருவருமொருவனையுவருமங்குடையவள்ளல்
திருவடிசுமந்துகொண்டுகாண்கநான்றிரியுமாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

தனித்–திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மருளவாமனத்தனுகிமயங்கினேன்மதியிலாதேன்
இருளவாவுமுக்குமெந்தையிணையடிநீழலென்னும்
அருளவாப்பெறுதலின்றியஞ்ஞானமெந்தேற்குப்
பொருளவாத்தந்தவாறேபோதுபோய்ப்புலந்ததன்றே. (க)

மெய்ம்மையாமுழவைச்செய்துவிருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாங்களையைவாங்கிப்பொறையெனுரைப்பாய்ச்சித்
தம்மையுநோக்கிக்கண்டதகவெனும்வேலியிட்டுச்
செம்மையுணிற்பராகிற்சிவகதிவினையுமன்றே. (உ)

எம்பிரானென்றதேகொண்டென்னுளேபுகுந்துநின்றிங்
கெம்பிரானுட்டவாடியென்னுளேயுழிதர்வேனை
எம்பிரானென்னைப்பின்னைத்தன்னுளேகாக்குமென்றுல்
எம்பிரானென்னிலல்லாலென்செய்கேனேழையேனே. (ங)

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாறிறையநீரமைவாட்டிப்
பூசனீசனுர்க்குப்போற்றவிக்காட்டினேமே. (சு)

வஞ்சகப்புலையனேனேவழியறத்தொண்டிற்பூட்டி
அஞ்சலென்றுண்டுகொண்டாயதுவுகின் பெருமையன்றே
நெஞ்சகங்கனியமாட்டேனின்னீயுள்வைக்கமாட்டேன்
நஞ்சிடங்கொண்டகண்டாவென்னெனநன்மைதானே. (நி)

நாயினுங்கடைப்பட்டேனைநன்னெறிகாட்டியாண்டாய்
ஆயிரமரவமார்த்தவமுதனேயமுதமொத்து
நீயுமென்னெஞ்சினுள்ளேநிலாவினுய்நிலாவிநிற்க
கோயவைசாருமாகிலெனக்கிநீயருள்செயாயே. (சு)

வீள்ளத்தானெனதுமாட்டேன்விருப்பெனும்வேட்கையாலே
வள்ளத்தேன்போலநின்னேவாய்மடுத்துண்டிடாமே
உள்ளத்தேதிற்றியேனுமுயிர்ப்புளேவருதியேனுங்
கள்ளத்தேகிற்றியம்மாவெங்ஙனங்காணுமாறே. (எ)

ஆசைவன்பாசமெய்தியங்குற்றேனிங்குற்றேனுய்
ஊசலாட்டுண்டுவாளாவுழுந்துராணுழிதராமே
தேசனேதேசமூர்த்திதிருமறைக்காடுமேய
சுசனேயுன்றன்பாதமேத்துமாறருளெம்மானே. (அ)

நிறைவிலேனேசமில்லேனிணவிலேன்வினையின்பாச
மறைவிலேபுறப்பட்டேறும்வகையெனக்கருளெனெம்மான்
சிறையிலேன்செய்வதென்னேதிருவடிபரவியேத்தக்
குறைவிலேன்குற்றந்தீராய்கொன்றைசேர்சடையினுனே. (சு)

நடுவிலாக்காலன்வந்துநணுகும்போதறியவொண்ணு
அடுவனவஞ்சுபூதமவைதனக்காற்றலாகேன்
படுவனபலவுங்குற்றம்பாங்கிலாமனிதர்வாழ்க்கை
கெடுவதிப்பிறவிசீசிகிளரொளிச்சடையினீரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

தனித்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கடும்பகனட்டமாடிக்கையிலோர்கபாலமேந்தி
இடும்பலிக்கில்லந்தோறுமுழிதருமிறைவனீரே
நெடும்பொறைமஃலயர்பாவைநேரிழைநெறிமென்கூந்தற்
கொடுங்குழைபுகுந்தவன்றுங்கோவணமரையதேயோ. (க)

கோவணமுடுத்தவாறுங்கோளரவசைத்தவாறுங்
தீவணச்சாம்பர்பூசித்திருவுருவிருந்தவாறும்
பூவணக்கிழவனரைப்புலியுரியரையனரை
ஏவணச்சிலையினரையாவரேயெழுதுவாரே. (உ)

விளக்கினுர்பெற்றவின்பமெழுகினும்பதிற்றியாகும்
தளக்கினன்மலர்தொடுத்தார்ஞாயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின்மெய்ஞ்ஞறிஞானமாகும்
அளப்பில்கீதஞ்சொன்னருக்கடிகடாமருளுமாறே. (கூ)

சந்திரச்சடையில்வைத்தசங்கரன்சாமவேதி
அந்தரத்தமரர்பெம்மானனல்வெள்ளூர்தியான்றன்
மந்திரமச்சிவாயவாசநீறணியப்பெற்றுல்
வெந்தறம்வினையும்நோயும்வெவ்வழல்விறஞ்சிட்டன்றே. (ச)

புள்ளுவரைவர்கள்வர்புனத்திடைப்புகுர்துகின்று
துள்ளுவர்சூறைகொள்வர்தூநெறிவிலோபமொட்டார்
முள்ளுடையவர்கடம்மைமுக்கணன்பாதமீழல்
உள்ளுடைமறைந்துகின்றங்குணர்வினுலெய்யலாமே. (டு)

தொண்டனேன்பிறந்துவாளாத்தொல்வினைக்குழியில்வீழ்ந்து
பிண்டமேசுமந்தநாளும்பெரியதோரவாவிற்பட்டேன்
அண்டனேயமரர்கோவேயறிவனேயஞ்சலென்னுய்
தெண்டிரைக்கங்கைசூடுந்திகழ்தருசடையினனே. (சு)

பாறிஞப்பாவிநெஞ்சேபன்றிபோலளற்றிற்பட்டுத்
தேறிநீகினேதியாயிற்சிவகதிதிண்ணமாகும்
ஊறலேயுவர்ப்புநாறியுதிரமேயொழுகும்வாசல்
கூறையால்மூடக்கண்டுகோலமாக்கருதினையே. (எ-அ-கூ)

உய்த்தகாலுதயத்தும்பருமையவணடுக்கஞ்சீர
வைத்தகாலரக்கனேதன்வான்முடிதனக்குநேர்ந்தான்
மொய்த்தகான்முழிழ்வெண்டிங்கண்மூர்த்தியெனுச்சிதன்மேல்
வைத்தகால்வருந்துமென்றுவாடிகானெடுங்கினனே. (கப)

திருச்சிற்றம்பலம்.

குறைந்த-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வென்றிலேன்புலன்களைந்தும்வென்றவர்வளாகந்தன்னுட்
சென்றிலேனுதலாலேசெங்கெறியதற்குஞ்சேயேன்
நின்றுளேனுலும்புனின்றேனீசனேனீசனேயோ
இன்றுளேனுலியல்லேனென்செய்வான்றேன்றினேனே. (க)

கற்றிலேன்கலைகள்ஞானங்கற்றவர்தங்களோடும்
உற்றிலேனுதலாலேயுணர்வுக்குஞ்சேயனேனேன்
பெற்றிலேன்பெருந்தடங்கண்பேதைமார்தமக்கும்பொல்லேன்
எற்றுளேனிறைவனேநானென்செய்வான்றேன்றினேனே. (உ)

மாட்டினேன்மனத்தைமுன்னேமறுமையையுணரமாட்டேன்
மூட்டினுன்முன்னேநாளேமுதல்வனேவணங்கமாட்டேன்
பாட்டினும்பாலகின்முபற்றதாம்பாவத்தன்னீ
சூட்டினேன்கனேயமாட்டேனென்செய்வான்றேன்றினேனே. (ஊ)

கரைக்கடற்றோதமேறுங்கடல்விடமுண்டகண்டன்
உரைக்கடற்றோதுதீர்மையுணர்ந்திலேனுதலாலே
யரைக்கிடந்தசையுநாகமசைப்பனேயின்பவாழ்க்கைக்
கிரைக்கிடந்தருகுகின்றேனென்செய்வான்றேன்றினேனே. (எ)

செம்மைவெண்ணீறுபூசுஞ்சிவனவன்றேவதேவன்
வெம்மைநோய்வினைகடீர்க்கும்விகிர்தனுக்கார்வமெய்தி
அம்மைமின்றடிமைசெய்யாவடிலிலாமுடிவில்வாழ்க்கைக்
கிம்மைமின்றருகுகின்றேனென்செய்வான்றேன்றினேனே. (ஙி)

பேச்சொடுபேச்சுக்கெல்லாம்பிறர்தமைப்புறமேபேசக்
கூச்சிலேனுதலாலேகொடுமையைவிடுமாறென்றே
நாச்சொல்லிநாளுமூர்த்திநின்மையையுணரமாட்டேன்
ஏச்சுளேகின்றமெய்யேனென்செய்வான்றேன்றினேனே. (சு)

தேசனேத்தேசமாகுந்திருமாலோர்பங்கன்றன்னைப்
பூசனைப்புனிதன்றன்னைப்புணரும்புண்டரீகத்தானை
நேசனெருப்பன்றன்னைநிவஞ்சகத்தகன்றபெசம்மை
சுசனையறியமாட்டேனென்செய்வான்றேன்றினேனே. (எ)

வினைக்கின்றவினையைநோக்கிவெண்மயிர்விரவிமேலும்
மூனைக்கின்றமுடியினுஞ்சென்றுகற்பவடிபரவமாட்டா
தினைக்கின்றேனிருமியூன்றியென்செய்வான்றேன்றினேனே. (அ)

வினைவறிவிலாமையாலேவேதனைக்குழியிலாழ்ந்து
கனைகணுமில்லேனெந்தாய்கா மரங்கற்றுமில்லேன்
தனையவிழ்கோதைதனல்லார்தங்களோடிடன்பமெய்த
இனையனுமல்லேனெந்தாயென்செய்வான்றேன்றினேனே. (கூ)

வெட்டனவுடையனுகிவீரத்தான்மலையெடுத்த
திட்டனீத்திட்டத்தீர்த்தத்தச்சுவையபடக்கிதங்கேட்ட
அட்டமாமூர்த்தியாயவாதியையோதிநாளும்
எட்டனையெட்டமாட்டேனென்செய்வான்றேன்றினேனே. (கஂ)

திருச்சிற்றம்பலம்.

குறைந்த-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தம்மானங்காப்பதாகித்தையலார்வலைபுளாழ்ந்து
அம்மானேயமுதன்றன்னேயாதினையப்தமாய
செம்மானவொளிகொண்டேமனிச்சிக்கையுளொன்றிகின்ற
எம்மானேகினேயமாட்டேனெனச்செய்வான்ரேன்றினேனே. (க)

மக்களேமணந்ததாரமவ்வயிற்றவரையோம்புஞ்
சிக்குளேயழுந்தியீசன்றிறம்படேன்றவமதாரேன்
கொச்புளேபோலத்தோன்றியதனுளேமறையக்கண்டும்
இக்களேபரத்தையோம்பவென்செய்வான்ரேன்றினேனே. (உ)

கூழையேனகமாட்டேன்கொடுவினைக்குழியில்வீழ்ந்து
ஏழினின்னிசையினுமிறைவனேபேத்தமாட்டேன்
மாழையொண்கண்ணினல்லமடந்தைமார்தமக்கும்பொல்லேன்
ஏழையேனிதாளுமென்செய்வான்ரேன்றினேனே. (கூ)

முன்னேயென்வினையுளேமூர்த்தியைநினையமாட்டேன்
பின்னேநான்பித்தனுவிப்பிதற்றுவன்பேதையேனுன்
என்னுளேமன்னிகின்றவிசையதாயினேன
யென்னுளேகினேயமாட்டேனெனச்செய்வான்ரேன்றினேனே. (ச)

கறையணிகண்டன்றன்னேக்காமாங்கற்றுமில்லேன்
பிறைநுதற்பேதைமாதர்பெய்வளையார்க்குமல்லேன்
மறைநவில்நாவினனேமன்னிகின்றிறைஞ்சிகாரு
மிறையையுமேத்தமாட்டேனென்செய்வான்ரேன்றினேனே. (ஞ)

வளைத்துகின்றவர்கள்வர்வந்தெனைநடுக்குஞ்செய்யத்
தளைத்தவைத்தலையேற்றிமித்தழலெரிமடத்தரிற்
றிளைத்துகின்றுடுகின்றவாமைபோற்றெளிவிலாதேன்
இளைத்துகின்றுடுகின்றேனென்செய்வான்ரேன்றினேனே. (சு-எ-அ-கூ-கo)

திருச்சிற்றம்பலம்.

ஆடு பதிகம்-எக.

கோயிற்றிருவிருத்தம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பானேயுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வானேயுடைப்புனல்வக்கதிவாழ்வயற்றில்லேதன்னுள்
ஆனவுடைக்கழற்சிற்றம்பலத்தானடல்கண்டாற்
பினேயுடைக்கண்களாற்பின்னேப்பேய்த்தொண்டர்காண்பதென்னே. (க)

பொருவிடையொண்முடைப்புண்ணியமூர்த்திபுலியதளன்
உருவுடையம்மலேமங்கைமணாளனுலகுக்கெல்லாக்
கிருவுடையத்தணர்வாழ்கின்றதில்லேச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (உ)

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுதும்
அடுத்தவணங்குமயனுமாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டனிற்துபொன்னுங்கியதில்லைச்சிற்றம்பலவன்
உடுத்ததுகில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (கூ)

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
அச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னேக்கண்கொண்டுகாண்பதென்னே. (சு)

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துறைகின்ற
மெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றன்
கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னேக்கண்கொண்டுகாண்பதென்னே. (எ)

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
றேனைத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கும்
ஏனத்தெயிறுகண்டாற்பின்னேக்கண்கொண்டுகாண்பதென்னே. (சு)

தெரித்தகணியாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிகள்
தரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (எ)

சுற்றுமமரர்சுரர்பதிகின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையுணஞ்சையுண்டான்
செற்றங்கனங்கணீத்தீவிழித்தான்றில்லையம்பலவ
னெற்றியிற்கண்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (அ)

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிகள்
வைத்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வயிரமுமாணிக்கந்தன்னுள்ளிளங்கியதூ
மத்தமலர்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (சு)

தருக்கிமிகுத்துத்தன்றோள்வலியுன்னித்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள்கோன்சிரித்து
வரக்கன்மணிமுடிபத்துமணிதில்லையம்பலவன்
நெருக்கிமிதித்தவிரல்கண்டகண்கொண்டுகாண்பதென்னே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமூலத்தானநாயகர், சபாநாதர், தேவியார்-சிவகாமியம்மை.

கோயில் திருவிருத்தம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருநட்டகண்டனீயன்டத்தலைவனீக்கற்பகத்தைச்
செருநட்டமும்மதிலெய்யவல்லானீச்செற்றீமூழங்கத்
திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைச்சிற்றம்பலத்துப்
பெருநட்டமாடியையானவர்கோனென்றுவாழ்த்துவனே. (க)

ஒன்றியிருந்தினீனின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனீக்காலாற்கடந்தானடியவர்க்காச்
சென்றுதொழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
ஏன்றுவந்தாயெனுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே. (உ)

கண்மனவீர்கழியுங்கருத்தேசொல்லீக்காண்பதென்னே
நன்மனவர்நவிலீல்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
பொன்மலையில்வெள்ளிக்குன்றதுபோலப்பொலிந்திலங்கி
யென்மனமேயொன்றிப்புக்கனன்போந்தசுவடில்லையே. (ங)

குனித்தபுருவமுங்கொவ்வைச்செவ்வாயிற்குமிண்சிரிப்பும்
பனித்தசடையும்பவளம்போன்மேனியிற்பால்வெண்ணீறும்
இனித்தமுடையவெடுத்தபொற்பாதமுங்காணப்பெற்றுல்
மனித்தப்பிறவியும்வேண்டுவதேயிந்தமாநிலத்தே. (ச)

வாய்த்தநந்தமக்கீதோபிறவிமதித்திடுமின்
பார்த்தற்குப்பாசுபதமருள்செய்தவன்பத்தருள்ளீர்
கோத்தன்றமுமும்புரந்தீவினீத்தான்றில்லையம்பலத்துக்
கூத்தனுக்காட்பட்டிருப்பதன்றேரந்தங்கூழைமையே. (ஞ)

பூத்தனபொற்சடைபொன்போன்மினிரப்புரிகணங்கள்
ஆர்த்தனகொட்டியரித்தனபல்குறட்பூதகணம்
தேத்தென்வென்றிசைவண்டுகள்பாடுசிற்றம்பலத்துக்
கூத்தனிற்கூத்துவல்லாருளரோவென்றன்கோல்வளைக்கே. (சு)

மூடிகொண்டமத்தமுமுக்கண்ணினேனுக்குமுறுவலிப்புந்
தடிகொண்டகையுந்துதைந்தவெண்ணீறுஞ்சுரிகுழலாள்
படிகொண்டபாகமும்பாய்புலித்தோலுமென்பாவிநெஞ்சிற்
குடிகொண்டவாதில்லையம்பலக்கூத்தன்குரைகழலே. (எ)

படைக்கலமாகவுன்னுமத்தெழுத்தஞ்சினுவிற்கொண்டேன்
இடைக்கலமல்லேனெழிறப்பும்முனக்காட்செய்கின்றேன்
றுடைக்கினும்மோகேன்றெழுதுவனங்கித்தூநீறணிந்
தடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே. (அ)

பொன்னெத்தமேனிமேல்வெண்ணீறணிந்துபுரிசடைக்கண்
மின்னெத்திலங்கப்பலிதேர்ந்தழலும்விடங்கர்வேடச்

சின்னத்தினன் மலிதில்லையுட்சிற்றம்பலத்தாடம்
என்னத்தனடல்கண்டின்புற்றதாலிவ்வியனிலமே. (கூ)

சாடவெடுத்ததுதக்கன்றன்வேள்வியிற்சந்திரனை
வீடவெடுத்ததுகாலனைநாரணனான்முகனுந்
தேடவெடுத்ததுதில்லையுட்சிற்றம்பலத்தாடம்
ஆடவெடுத்திட்டபாதமன்றேநம்மையாட்கொண்டதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுபின்பாதமெல்லா
நாலஞ்சுபுள்ளினமேற்கினவென்பர்நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண்டோவந்தணாழியகலிடமே. (க)

கடையார்கொடிநெடுமாடங்களெங்குங்கலந்திலங்க
வுடையானுடைதலைமாலையுஞ்சூடியுகந்தருளி
யிடைதானுடையவவ்வேதியன்வாழுங்கழுமலத்துள்
அடைவார்வினைகளையெள்கராடொறுமாடுவனே. (உ)

திரைவாய்ப்பெருங்கடன்முத்தங்குவிப்பமகந்துகொண்டு
நுரைவாய்நுளைச்சியரோடிக்கழுமலத்துள்ளழுந்தும்
விரைவாய்நுமலர்சூடியவிண்ணவன்நண்டிக்கே
வரைவாப்பரிசிவைநாடொறுந்தமையாள்வனவே. (ஙு)

விரிக்குமருமந்பதம்வேதங்களோதும்விழுமியநூல்
உரைக்கிலுரும்பொருளுள்ளவாகேட்கிலுலகமுற்றும்
இரிக்கும்பறையொடுபூதங்கள்பாடக்கழுமலவன்
திருத்தன்பழம்படியாடுங்கமுனம்மையாள்வனவே. (ச)

சிந்தித்தெழுமனமேநினையாமுன்கழுமலத்தைப்
பந்தித்தவல்வினைதீர்க்கவல்லானைப்பசுபதியைச்
சந்தித்தகாலமுமத்துமென்றெண்ணியிருந்தவர்க்கு
மூந்தித்தொழுகழுடொறுந்தம்மையாள்வனவே. (ஞ)

தீயெம்பெருமையுநீரியஞ்சாலவழ்கடைத்தா
யீயெம்பெருவெள்ளத்தன்மிதந்தவித்தோணிபுரஞ்
சேயின்றிரிபுரமூன்றெரித்தார்தங்கழுமலவர்
அலருங்கழலடிகாடொறுநந்தம்மையாள்வனவே. (சு)

மூற்றிக்கிடந்தமுன்னீரின்மிதந்துடன்மொய்த்தமரர்
சுற்றிக்கிடந்துதொழப்படுகின்றவருமுழவர்
தெற்றிக்கிடந்துவெங்கோன்றளர்தூன்றிவெண்டிங்கள்சூடுங்
கற்றைச்சடைமுடியார்க்கிடமாயகழுமலமே. (எ)

உடலுமுயிருமொருவழிச்செல்லுமுலகத்துள்ளே
யடையுமூணவன்தடைத்தாரமரடியிணைக்கீழ்
நடையும்விழுவொடுநாடொறுமல்குகுழுமலத்துள்
விடையோன்றனிப்பதநாடொறுநந்தம்மையாள்வனவே. (அ)

பாவைக்கடனஞ்சையுண்டதுமில்லைப்பார்முழுது
நிரவிக்கிடந்துதொழப்படுகின்றதுதீண்டிருவர்
சிரமப்படவந்தசார்ந்தார்கழுடிகாண்பதற்கே
யரவக்கழலடிநாடொறுநந்தம்மையாள்வனவே. (கூ)

கரையார்கடல்சூழிலங்கையர்கோன்றன்முடிசிதறத்
தொலையாமலரடியூன்றவுமுள்ளம்விதிர்விதிர்த்துத்
தலையாய்க்கிடந்துயர்ந்தான்றனகழுமலங்காண்பதற்கே
யலையாப்பரிசிவைநாடொறுநந்தம்மையாள்வனவே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பிரமபுரீசர், தேவியார் - திருநிலைநாயகி.

திருத்தோணியில் வீற்றிருப்பவர் தோணியப்பர்.

திருக்கழுமலம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

படையார்மழுவொன்றுபற்றியகையன்பதினவிற்
கடையார்கொடிநெடுமாடங்களோங்குகழுமலமா
மடைவாய்க்குருகினம்பாகவிரிதொழும்வண்டினங்கள்
பெடைவாய்மதுவுண்டுபோதாதிருக்கும்பெரும்பதியே. (சு)

திருச்சிற்றம்பலம்.

ஆருயிர்த்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாந்திசைக்குமிருதிசைக்கும்மிறைவாமுறையென்
றிட்டாரமர்வெம்பூசலெனக்கேட்டெரிவிழியா
லொட்டாக்கியவர்திரிபுரமூன்றையுமோரம்பினல்
அட்டானடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (க)

பேழ்வாயரவினரைக்கமர்ந்தேறிப்பிறங்கிலங்கு
தேய்வாயிளம்பிறைசெஞ்சடைமேல்வைத்ததேவர்பிரான்
மூவானிளகான்முழுவுலகோடுமண்விண்ணுமற்றும்
ஆவானடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (உ)

தெரியாவெருளியனுய்த்தக்கன்வேள்வித்தகர்த்தகர்த்த
வெரியாரிலங்கியசூலத்தினுனிமையாதமுக்கட்

பெரியான்பெரியார்பிறப்பறுப்பானென்றுதன்பிறப்பை
யரியானடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (கூ)

வடிவுடைவாணெடுங்கண்ணுமையாளோர்பான்மகிழ்ந்து
வெடிகொளரவொடுவேங்கையதள்கொண்டுமேன்மருவிப்
பொடிகொளகலத்துப்பொன்பிதிர்ந்தன்னபைங்கொன்றையந்தார்
அடிகளடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (சு)

பொறுத்தானமரர்க்கமுதருளிநஞ்சமுண்டுகண்டங்
கறுத்தான்கறுப்பழகாவுடையான்கங்கைசெஞ்சடைமேற்
செறுத்தான்றனஞ்சயன்சேணரகலங்கணொன்றினல்
அறுத்தானடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (டு)

காய்ந்தான்செறற்கரியானென்றுங்காலனைக்காலொன்றினற்
பாய்ந்தான்பணிமதில்மூன்றுங்கணின்னெனுமொள்ளழலால்
மேய்ந்தான்வியனுலகேழும்விளங்கவிழுமியநூல்
ஆய்ந்தானடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (சு)

ஊன்றான்செறுத்தற்கரியான்றலையையிரொன்றினற்
கூன்றானதனிறையெடுமால்கணர்குருதி
வான்றானெருவிரலின்னெடுவீழ்வித்துச்சாம்பல்வெண்ணீ
றூன்றானடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (எ)

முன்திவட்டத்திடைப்பட்டதெல்லாமுடிவேந்தர்தங்கள்
பன்திவட்டத்திடைப்பட்டவீப்புண்பதற்கஞ்சிக்கொல்லோ
நன்திவட்டநறுமாமலர்க்கொன்றையுநக்கசென்னி
யன்திவட்டத்தொளியானடிச்சேர்ந்ததென்னருயிரே. (அ)

மிகத்தான்பெரியதோர்வேங்கையதன்கொடுமெய்ம்மருவி
யகத்தான்வெருவநல்லாரூடுக்குமப்பான்வரும்பொன்
முகத்தாற்குளிர்ந்திருந்துள்ளத்தினுலுகப்பாரிசைந்த
வகத்தானடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (சூ)

பைம்மாணரவல்குற்பங்கயச்சீறடியாள்வெருவக்
கைமாவரிசிலுக்காமனியட்டகடவுண்முக்கண்
எம்மானிவனென்றிருவருமேத்தவெரிகிமிர்ந்த
வம்மானடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (கo)

பழகவோரூர்தியரன்பைங்கட்பரிடம்பாணிசெய்யக்
குழலுமுழவொடுமாநடமாடியுயரிலங்கைக்
கிழவனிருபதுதோளுமொருவிரலாலிறுத்த
வழகனடிநிழற்கீழதன்றேவென்றனருயிரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சோற்றுத்துறை-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கரவியெழுந்தகடிமலர்தூயனதாங்கொணர்ந்து
மேலியமரர்விரும்புபிடம்விரையான்மலிந்த
சோலைமணங்கமழ்சோற்றுத்துறையுறைவார்சடைமேன்
மாலைமதியமன்றேறுவெம்பிரானுக்கழகியதே. (க)

வண்டணைகொன்றையும்வன்னியுமத்தமும்வாளரவுங்
கொண்டணைந்தேறுமுடியுடையான்குரைசேர்கழற்கே
தொண்டணைந்தாடியசோற்றுத்துறையுறைவார்சடைமேல்
வெண்டலைமாலையன்றேறுவெம்பிரானுக்கழகியதே (உ)

அளக்குநெறியினனன்பர்கடம்மனத்தாய்ந்துகொள்வான்
விளக்குமடியவர்மேல்வினைதீர்த்திடும்விண்ணவர்கோன்
முளக்குங்குழையணிசோற்றுத்துறையுறைவார்சடைமேற்
றிளக்குமதியன்றேறுமெம்பிரானுக்கழகியதே. (ங)

ஆய்ந்தகைவாளரவத்தொடுமால்விடையேறியெங்கும்
போந்தகைமானடமாடுவர்பின்னுசடையிடையே
சேர்ந்தகைமாமலர்துன்னியசோற்றுத்துறையுறைவார்
ஏய்ந்தகைச்சூலமழுவெம்பிரானுக்கழகியதே. (ச)

கூற்றைக்கடந்ததுங்கோளரவார்த்ததுங்கோளுழுவை
நீற்றிற்றுதைந்துதிரியும்பரிசதுகாமறியோ
மாற்றிற்கிடந்தங்கலைப்பவலைப்புண்டசைந்ததொக்குஞ்
சோற்றுத்துறையுறைவார்சடைமேலதோர்தூமதியே. (ஞ)

வல்லாடினின்றுவலிபேசுவரார்கோளர்வல்லசுரர்
கொல்லாடினின்றுகுமைக்கிலும்வானவர்வந்திறைஞ்சச்
சொல்லாடினின்றுபபில்கின்றசோற்றுத்துறையுறைவார்
வில்லாடினின்றறிலேயெம்பிரானுக்கழகியதே. (ஃ)

ஆயமுடையதுகாமறியோமரணத்தவரைக்
காயக்கணிசிலைவாங்கியுமெய்துதுயக்கறுத்தான்
தூயவெண்ணீற்றினன்சோற்றுத்துறையுறைவார்சடைமேற்
பாயும்வெண்ணீர்த்திரட்கங்கையெம்மானுக்கழகியதே. (எ)

அண்டரம்பர்கடைந்தெழுந்தேறடியஞ்சஅணை
யுண்டமதனையொடுக்கவல்லான்பிக்கவும்பர்கள்கோன்
றெண்டுபயில்கின்றசோற்றுத்துறையுறைவார்சடைமேல்
இண்டைமதியமன்றேறுவெம்பிரானுக்கழகியதே. (அ)

கடன்மணிவண்ணன்கருதியகான்முகன்றுணதியா
லிடைமணிகண்டமுடையவன்றானெனவேயாளுடையான்

சுடாணிந்தாடியசோற்றுத்துறையுறைவார்சடைமேல்
படமணிநாகமன்றேவெம்பிரானுக்கழகியதே. (கூ)

இலங்கைக்கிறைவனிருபதுதோளுமுடிநெரியக்
கலங்கவிரலினூன்றியவனைக்கருத்தழித்த
தலங்கல்மழுவினன்சோற்றுத்துறையுறைவார்சடைமேல்
இலங்குமதியமன்றேவெம்பிரானுக்கழகியதே. (கo)

திருப்பிற்றம்பலம்.

திருவொற்றியூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

செற்றுக்களிற்றுரிகொள்கின்றஞான்றுசெருவெண்கொம்பொன்
றிற்றுக்கிடந்ததுபோலுமிளம்பிறைபாம்பதனைச்
சுற்றிக்கிடந்ததுகிம்புரிபோலச்சுடரிமைக்கு
நெற்றிக்கண்மற்றதன்முத்தொக்குமாலொற்றியூரனுக்கே. (க)

சொல்லக்கருதியதொன்றுண்டுகேட்கிற்றொண்டாயடைந்தார்
அல்லற்படக்கண்டுபின்னென்கொடுத்தியலெண்முந்நீர்
மல்லற்றிரைச்சங்கநித்திலங்கொண்டுவம்பக்கரைக்கே
யொல்லைத்திரைகொணர்ந்தெற்றெற்றியூருறையுத்தமனே. (உ)

பரவைவருதிரைநீர்க்கங்கைபாய்ந்துக்கடல்சடைமே
லரவமணிதருகொன்றையிளந்திங்கள்சூடியதோர்
குரவநறுமலர்கோங்கமணிக்குருலாயசென்னி
யுரவுதிரைகொணர்ந்தெற்றெற்றியூருறையுத்தமனே. (ங)

தானகங்காட்சங்காகவுடையதன்னடைந்தா
ரூனகரமுமுடைதலையிற்பலிகொள்வதுந்தான்
றேனகரமுந்திருவொற்றியூருறைவாரவர்தாந்
தானகமேவந்துபோனதம்வேண்டியுழிதர்வரே. (ச)

வேலைக்கடனஞ்சமுண்டுவெள்ளேற்றெருத்தும்வீற்றிருந்த
மாலைச்சடையார்க்குறைவிடமாவதுவாரிகுன்று
வாலைக்கரும்பொடுசெங்நெற்கழனியருகணைந்த
சோலைத்திருவொற்றியூரையெப்போதுந்தொழுமின்களே. (ஞ)

புற்றினில்வாழுமரவுக்குந்திங்கட்குங்கங்கையென்னுஞ்
சிற்றிடையாட்குஞ்செறிதருகண்ணிக்குஞ்சேர்விடமாம்
பெற்றுடையான்பெரும்பேச்சுடையான்பிரியாதெனையாள்
விற்றுடையானெற்றியூருடையான்றன்விரிசடையே. (ரு)

இன்றரைக்கண்ணுடையாரெங்குமில்லையிமையமென்னுங்
குன்றரைக்கண்ணன்குலமகட்பாவைக்குக்கூறிட்டநாள்
அன்றரைக்கண்ணுங்கொடுத்தமையானேயும்பாகம்வைத்த
வொன்றரைக்கண்ணன்கண்டீரெற்றியூருறையுத்தமனே. (ஏ)

சுற்றிவண்டியாழ்செயுஞ்சோலையுங்காவுந்தைதக்கிலங்கு
பெற்றிகண்டாரல்மற்றியாவருங்கொள்வர்பிறரிடைபோ
யொற்றிகொண்டாரொற்றியூரையுங்கைவிட்டுறுமென்றெண்ணி
விற்றிகண்டாய்மற்றிதுவொப்பதில்லிடம்வேதியனே. (அ)

சுற்றிக்கிடந்தொற்றியூரனென்சிந்தைபிரிவறியா
னெற்றித்திரிதந்துநீயென்னசெய்தியுலகமெல்லாம்
பற்றித்திரிந்ததுபல்லொடுகாமென்றுகண்குழித்தக்
கெற்றித்திருப்பதல்லாலென்னசெய்புரித்தீவினையே. (கூ)

அங்கட்கடுக்கைக்குமுல்லைப்புறவமுமுவல்செய்யும்
பைங்கட்டலைக்குச்சுடலைக்களரிப்பருமணிசேர்
கங்கைக்குவேலையரவுக்குப்புற்றுக்கலிநிரம்பாத்
திங்கட்குவானந்திருவொற்றியூர்திருமுடியே. (கo)

தருக்கினவாளரக்கன்முடிபத்திறப்பாதந்தன்னு
லொருக்கினவாறடியேனைப்பிறப்பறுத்தாளவல்லா
னெருக்கினவானவர்தானவர்கூடிக்கடைந்தநஞ்சைப்
பருக்கினவாறென்செய்கேனெற்றியூருறைபண்டங்கனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - அசு.

திருப்பழனம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மேவித்தநின்றுவினைகள்தனவெந்தையர்த்தக்கமெல்லாம்
ஆவித்தநின்றுகழிந்தனவல்லலவையறப்பான்
பாவித்தபாவனையேயறிவாய்பழனத்தரசே
கூவித்தக்கொள்ளுந்தினையடியேனைச்சூழிக்கொள்வதே. (க)

சுற்றிநின்றுர்புறங்காவலமர்க்கடைத்தலையின்
மற்றுநின்றுர்திருமாலொருகொன்முகன்வந்தடிக்கீழ்ப்
பற்றிநின்றுர்பழனத்தரசேபுன்பணியறிவான்
உற்றுநின்றுரடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (உ)

ஆடிநின்றுயண்டமேழுங்கடந்தபோய்மேலவையுங்
கூடிநின்றுய்குவிமென்முலையாளையுங்கொண்டுடனே
பாடிநின்றுய்பழனத்தரசேயங்கோர்பான்மதியஞ்
சூடிநின்றுயடியேனையஞ்சாமைக்குறிக்கொள்வதே. (ரு)

எரித்தவிட்டாயம்பிறைபுரமூன்றுமுன்னேபடவும்
உரித்தவிட்டாயுமையாணுடுக்கெய்தவோர்குஞ்சரத்தைப்
பரித்தவிட்டாய்பழனத்தரசேசங்கைவார்சடைமேற்
றரித்தவிட்டாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (சு)

முன்னியமுன்னிமூவெயிலும்முடனே
மன்னியமங்குமிருந்தனைமாயமனத்தவர்கள்
பன்னியநூலின்பரிசறிவாய்பழனத்தரசே
யுன்னியமுன்னடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (நி)

ஏய்ந்தமுத்தாயின்பலபிரிந்தேபடைத்தான்றலையைக்
காய்ந்தமுத்தாய்கண்ணினிலுலன்றுகாமனைக்காலினையும்
பாய்ந்தமுத்தாய்பழனத்தரசேயென்பழவினைநோ
யாய்ந்தமுத்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (சு)

மற்றுவைத்தாயங்கோர்மாதொருபாகமகிழ்ந்துடனே
யுற்றுவைத்தாயுமையாளொடுங்கூடும்பரிசவனே
பற்றிவைத்தாய்பழனத்தரசேயங்கோர்பாம்பொருகை
சுற்றிவைத்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (எ)

ஊரினின்றுயொன்றிகின்றுவிண்டாரையுமொள்ளழலாற்
போரினின்றுய்பொறையாயுயிராவிசுமந்துகொண்டு
பாரினின்றுயபழனத்தரசேபணிசெய்பவர்கட்
காரகின்றுயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (அ)

போகம்வைத்தாய்புரிபுன்சடைமேலோர்புனலதனை
யாகம்வைத்தாய்மலையரசன்மடமங்கைமகிழ்ந்துடனே
பாகம்வைத்தாய்பழனத்தரசேயுன்பணியருளால்
ஆகம்வைத்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (சு)

அடுத்திருந்தாயரக்கன்முடிவாயொடுதோணெரியக்
கெடுத்திருந்தாய்கிளர்ந்தார்வலியைக்கிலேயோடுடனே
படுத்திருந்தாய்பழனத்தரசேபுலியின்னுரிதோ
லுடுத்திருந்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்துருத்தி-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாலினைமாலுறநின்றுன்மலைமகடன்னுடைய
பாலனைப்பான்மதிசூடியைப்பண்புணராரிதின்மேற்
போலனைப்போர்விடையேறியைப்பூந்துருத்திமகிழும்
ஆலனையாதிபுராணனைநாமடிபோற்றுவதே. (க)

மறியுடையான்மழுவாளினன்மாமலைமங்கையோர்பாற்
குறியுடையான்குணமொன்றறிந்தாரில்லைக்கூறிலவன்
பொறியுடைவாளரவத்தவன்பூந்துருத்தியுறையும்
அறிவுடையாதிபுராணனைநானடிபோற்றுவதே. (உ)

மறுத்தவர்மும்மதில்மாயவோர்வெஞ்சிலைகோத்தோரம்பால்
அறுத்தனையாலதன்கீழனையால்விடமுண்டதனைப்

பொறுத்தணிப்பூதப்படையனிப்பூந்துருத்தியுறையு
நிறத்தனீலமிடற்றனியானடிபோற்றுவதே. (ந)

உருவினியூழிமுதல்வனியோதினிறைந்தின்ற
திருவினத்தேசம்படைத்தனிச்சென்றடைந்தேனுடைய
பொருவினியெல்லாந்தரந்தனிப்பூந்துருத்தியுறையுங்
கருவினைக்கண்மூன்றுடையனியானடிபோற்றுவதே. (ச)

தக்கன்றன்வேள்வித்தகர்த்தவன்சாரமதுவன்றுகொள்
மிக்கனமும்மதில்வீயவோர்வெஞ்சிலைகோத்தோரம்பாற்
புக்கனன்பொன்றிகழ்ந்தன்னதோர்பூந்துருத்தியுறையு
நக்கனங்கள்பிரான்றனிநானடிபோற்றுவதே. (ஞ)

அருகடைமாலியுந்தானுடையானழகாலமைந்த
வுருவுடையங்கையுந்தன்னெருபாலுகாயுறின்ரூன்
பொருபடைவேலினன்வில்லினன்பூந்துருத்தியுறையுக்
திருவுடைத்தேசமதியனியானடிபோற்றுவதே. (ஙு)

மன்றியுறின்றமதிலைமாயவகைகெடுக்கக்
கன்றியுறின்றுகடுஞ்சிலைவாங்கிக்கனலம்பினூற்
பொன்றியும்போகப்புரட்டினன்பூந்துருத்தியுறையு
மன்றியுஞ்செய்தபிரான்றனியானடிபோற்றுவதே. (எ)

மின்னிறமிக்கவிடையுமைங்கையோர்பான்மகிழ்ந்தான்
என்னிறமென்றமரர்பெரியாரின்னர்தாமறியார்
பொன்னிறமிக்கசடையவன்பூந்துருத்தியுறையும்
என்னிறவெந்தைபிரான்றனியானடிபோற்றுவதே. (அ)

அக்கியைநல்லமதியனியார்க்குமறிவரிய
செந்தியைவாட்டுஞ்செம்பொன்னினிச்சென்றடைந்தேனுடைய
புந்தியைப்புக்கவறிவினிப்பூந்துருத்தியுறையு
நந்தியைநங்கள்பிரான்றனிநானடிபோற்றுவதே. (சு)

பைக்கையும்பாற்திவிழிக்கையும்பாம்புசடையிடையே
வைக்கையும்வானிழிகங்கையுமங்கைகருதுக்குறவே
மொய்க்கையரக்கனியூன்றினன்பூந்துருத்தியுறையு
மிக்கநல்வேதவிகிர்தனிநானடிபோற்றுவதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருநெய்த்தானம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாரிடஞ்சாடியபல்லுயிர்வானமரர்க்கருளிக்
காரடைந்தகடல்வாயுமிழ்ந்தநஞ்சமுதாகவுண்டான்
ஊரடைந்தவுலகிற்பலிகொள்வதுநாமறியோ
நீரடைந்தகரைநின்றநெய்த்தானத்திருந்தவனே. (க)

தேய்ந்திலங்குஞ்சிறுவெண்மதியாய்கின்றிருச்சடைமேற்
பாய்ந்தகங்கைப்புனல்பன்முகமாகிப்பரந்தொலிப்ப
ஆர்ந்திலங்குமழுவேலுடையாயடியேற்குரைசீ
யேய்ந்தினமங்கையுறியுநெய்த்தானத்திருத்தவே. (உ)

கொன்றடைந்தாடிக்குமைத்திடுங்கூற்றமொன்னர்மதின்மேற்
சென்றடைந்தாடிப்பொருததுந்தேசமெல்லாமறியுங்
குன்றடைந்தாடுங்குளிர்பொழிற்காவிரியின்கரைமேற்
சென்றடைந்தார்வினைதீர்க்குநெய்த்தானத்திருந்தவனே. (ஊ)

கொட்டுமுழவுரவத்தொடுகோலம்பலவனிக்
கட்டம்பலபயின்றருவெர்நாகமரைக்கசைத்துச்
சிட்டர்திரிபுரந்தீயெழச்செற்றசிலையுடையான்
இட்டமுமையொடுகின்றநெய்த்தானத்திருந்தவனே. (எ)

கைமலர்க்கொன்றைதுழாய்வன்னிமத்தமுங்கூவிளமும்
மெய்மலர்வேய்ந்தவிரிசடைக்கற்றைவிண்ணோர்பெருமான்
மைமலர்நீலநிறங்கருங்கண்ணியோர்பான்மகிழ்ந்தான்
நின்மலனுடனிலையெய்த்தானத்திருந்தவனே. (ஏ)

பூந்தார்தழுங்கொன்றைமாலையைவாங்கிச்சடைக்கணிந்து
கூர்ந்தார்விடையினேறிப்பல்பூதப்படைகடுவே
போந்தார்புறவிசைபாடவுமாடவுங்கேட்டருளிச்
சேர்ந்தாருமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே. (ஐ)

பற்றினபாம்பன்படுத்தபுலியுரித்தோலுடையன்
முற்றினமூன்றுமதில்களோமூட்டியெரித்தழித்தான்
சுற்றியபூதப்படையினன்சூழமழுவொருமான்
செற்றுநங்தீவினைதீர்க்குநெய்த்தானத்திருந்தவனே. (ஒ)

விரித்தசடையினன்விண்ணவர்கோன்விடமுண்டகண்டன்
உரித்தகரியுரிமூடியொன்னார்மதில்மூன்றுடனே
யெரித்தகிலையினனீடழியாதென்னையாண்டுகொண்ட
தரித்தவுமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே. (ஓ)

தூங்கான்முளங்கான்முழாய்கொன்றைதுன்னியசெஞ்சடைமேல்
வாங்கான்மதியமும்வாளரவுங்கங்கைதான்புனைந்தான்
றேங்கார்திரிபுரந்தீயெழவெய்ததிகையுத்த
நீங்காவுமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே. (ஔ)

ஊட்டிநின்றருன்பொருவாளிலமும்மதிறீயம்பினால்
மாட்டிநின்றருனன்றினர்வெந்தவீழவும்வானவர்க்குக்
காட்டிநின்றருன்கதமாகங்கைபாயவோர்வார்சடையை
மீட்டிநின்றருன்றிருநின்றநெய்த்தானத்திருந்தவனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவேதிகுடி.-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கையதுகாலெரிநாகங்கனல்விடுசூலமது
வெய்யதுவேலைஞ்சுண்டலரிசடைவிண்ணவர்கோன்
செய்யினின்னீலமணங்கமழுந்திருவேதிகுடி
யையனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (க)

கைத்தலைமான்மறியேந்தியகையன்கனன்மழுவன்
பொய்த்தலையேந்திநற்பூதியனிர்துபலிதிரிவான்
செய்த்தலைவாளைகள்பாய்ந்துகளுந்திருவேதிகுடி
யத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (உ)

முன்பின்முதல்வன்முனிவனெம்மேலவினைகழித்தா
னன்பனிலையிலவுணர்புரம்பொடியானசெய்புஞ்
செம்பொனேநன்மலர்மேலவன்சேர்திருவேதிகுடி
யன்பனேநம்மையுடையனைநாமடைந்தாடுதுமே. (ஊ)

பத்தர்கணுளுமறவார்பிறவியையொன்றறுப்பான்
முத்தர்கண்முன்னம்பணிசெய்துபரிடமுன்னுயர்த்தான்
கொத்தனகொன்றைமணங்கமழுந்திருவேதிகுடி
யத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (சு)

ஆனைனைந்தேறுங்குறிகுணமாரறிவாரவர்கை
மானைனைந்தாடுமதியும்புனலுஞ்சடைமுடியன்
றேனைனைந்தாடியவண்டுபயிறிருவேதிகுடி
யானைனைந்தாடுமமுவனைநாமடைந்தாடுதுமே. (டு)

எண்ணுமெழுத்தங்குறியுமறிபவர்தாமொழியப்
பண்ணினிசைமொழிபாடியவானவர்தாம்பணிவார்
திண்ணெனின்னைகளைத்தீர்க்கும்பிரான்றிருவேதிகுடி
நண்ணவரியவமுதினைநாமடைந்தாடுதுமே. (எ)

ஊர்ந்தவிடையுகந்தேறியசெல்வனைநாமறியோம்
ஆர்ந்தமடமொழிமங்கையோர்பாகமமிழ்ந்தடையான்
சேர்ந்தபுனற்சடைச்செல்வப்பிரான்றிருவேதிகுடிச்
சார்ந்தவயலணிதண்ணமுதையடைந்தாடுதுமே. (ஏ)

எரியுமழுவினனெண்ணியமற்றெருவன்றலையுட்
டிரியும்பலியினன்றேயமூநாடுமெல்லாமுடையான்
விரியும்பொழிலணிசேறுதிகழ்திருவேதிகுடி
யரியவமுதினியன்பர்களோடடைந்தாடுதுமே. (அ)

மையணிகண்டன்மறைவிரிநாவன்மதித்துகந்த
மெய்யனிநீற்றன்விழுமியவெண்மழுவாட்படையான்

செய்யகமலமணங்கமழுந்திருவேதிகுடி
யையனேயாராவமுதினேநாமடைந்தாடுதுமே. (கூ)

வருத்தனேவாளரக்கன்முடிதோளொடுபத்திறுத்த
பொருத்தனேப்பொய்யாவருளனேப்பூதப்படையுடைய
திருத்தனேத்தேவர்பிரான்றிருவேதிகுடியுடையெ
வருத்தனேயாராவமுதினேநாமடைந்தாடுதுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–வேதபுரீசுவரர், தேவியார்–மங்கையர்க்கரசியம்மை.

திருவையாறு–திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குறுவித்தவாகுற்றநோய்வினைகாட்டிக்குறுவித்தநோ
யுறுவித்தவாவுற்றநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
யறிவித்தவாறடியேனையயாறனடிமைக்களே
செறிவித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (க)

கூர்வித்தவாகுற்றநோய்வினைகாட்டியுங்கூர்வித்தநோ
யூர்வித்தவாவுற்றநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
யார்வித்தவாறடியேனையயாறனடிமைக்களே
சேர்வித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (உ)

தாக்கினவாசலமேவினைகாட்டியுந்தண்டித்தநோய்
நீக்கினவாநெடுநீரினின்றேற்றிநினைந்தருளி
யாக்கினவாறடியேனையயாறனடிமைக்களே
நோக்கினவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (ஙீ)

தருக்கினநான்மகவின்றியுமோடச்சலமதனுல்
கெருக்கினவாநெடுநீரினின்றேறநினைந்தருளி
யுருக்கினவாறடியேனையயாறனடிமைக்களே
பெருக்கினவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (ச)

இழிவித்தவாறிட்டநோய்வினைகாட்டியிடர்ப்படுத்துக்
கழிவித்தவாகட்டநோய்வினைதீர்ப்பான்கலந்தருளி
யழிவித்தவாறடியேனையயாறனடிமைக்களே
தொழுவித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (ஞ)

இடைவித்தவாறிட்டநோய்வினைகாட்டியிடர்ப்படுத்தி
உடைவித்தவாறுற்றநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
யடைவித்தவாறடியேனையயாறனடிமைக்களே
தொடர்வித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (ஃ)

படக்கினவாபடரின்முபன்னுரும்படக்கினநோ
யடக்கினவாறதுவன்றியுந்தீவினைபாவமெல்லாம்

அடக்கினவாறடியேனையையாறனடிமைக்களே
யடக்கினவாதொண்டனேனேத்தன்பொன்னடிக்கீழெனேயே. (எ)

மறப்பித்தவாவல்லேநோய்வினேகாட்டிமறப்பித்தநோய்
துறப்பித்தவாதுக்கநோய்வினேதீர்ப்பானுகந்தருளி
பிறப்பித்தவாறடியேனேயையாறனடிமைக்களே
சிறப்பித்தவாதொண்டனேனேத்தன்பொன்னடிக்கீழெனேயே. (அ)

துயக்கினவாதுக்கநோய்வினேகாட்டித்துயக்கியநோ
யியக்கினவாறிட்டநோய்வினேதீர்ப்பானிசைந்தருளி
யயக்கினவாறடியேனேயையாறனடிமைக்களே
மயக்கினவாதொண்டனேனேத்தன்பொன்னடிக்கீழெனேயே. (கூ)

கறுத்தமிட்டார்கண்டங்கங்கைசடைமேற்கரந்தருளி
பிறுத்தமிட்டாரிலங்கைக்கிறைதன்னேபிரபதோள்
அறுத்தமிட்டாரடியேனேயையாறனடிமைக்களே
பொறுத்தமிட்டார்தொண்டனேனேத்தன்பொன்னடிக்கீழெனேயே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பரியனசிந்திப்பவர்க்குச்சிறந்துசென்றேன்
முந்திப்பொழிவனமுத்திகொடுப்பனமொய்த்திருண்டு
பந்தித்துகின்றபழவினீர்ப்பனபரம்புசுற்றி
யந்திப்பிறையணிந்தாடுமையாறனடித்தலமே. (க)

இழித்தனவேழைப்பிறப்புமறுத்தனவென்மனத்தே
பொழித்தனபோலெழிற்சூற்றையுதைத்தனபோற்றவர்க்காய்
கிழித்தனதக்கன்கிளரொளிவேள்வியைக்கீழ்முன்சென்று
அழித்தனவாறங்கமானவையாறனடித்தலமே. (உ)

மணிகிறமொப்பனபொன்னிறமன்னினமின்னிலவாய்க்
கணிகிறமன்னகயிலேப்பொருப்பனகாதலைசெய்யத்
துணிவனசிலத்தராகித்தொடர்ந்துவிடாததொண்டர்க்
கணியனசேயனதேவர்க்கையாறனடித்தலமே. (கூ)

இருடருதன்பப்படலமறப்பமெய்ஞ்ஞானமென்னும்
பொருடருகண்ணிழந்துண்பொருணுடிப்புகலிழந்த
குருடருந்தம்மைப்பரவக்கொடுநரகக்குழிநின்
றருடருகைக்கொடுத்தேற்றுமையாறனடித்தலமே. (ச)

எழுவாயிறுவாயிலாதனவெங்கள்பிணிதவிர்த்து
வழுவாமருத்துவமாவனமாநரகக்குழிவாய்
விழுவாரவர்தம்மைமீழ்ப்பனமீட்பனமிக்கவன்பேர
டழுவார்க்கமுதங்களர்காண்கையாறனடித்தலமே. (ஞ)

தன்பக்கடலிடைத்தோணித்தொழில்பூண்டதொண்டர்தம்மை
யின்பக்கரைமுகன்றேற்றுந்திறத்தனமாற்றயலே
பொன்பட்டொழுகப்பொருந்தொளிசெய்யுமப்பொய்பொருந்தா
வன்பர்க்கணியனகாண்கவையாறனடித்தலமே. (சு)

களித்துக்கலந்ததேர்காதற்கஞ்சிவொடுகாவிரிவாய்க்
குளித்துத்தொழுதமுன்னின்றவிப்பத்தரைக்கோதில்சென்றேன்
றெளித்துச்சுவையமுதூட்டியமரர்கள்சூழிருப்ப
வளித்துப்பெருஞ்செல்வமாக்குமையாறனடித்தலமே. (எ)

திருத்திக்கருத்தினச்செல்வேகிறுத்திச்செறுத்தடலே
வருத்திக்கடிமலர்வாளெடுத்தேச்சிமெருங்குசென்று
விருத்திக்குழக்கவல்லோர்கட்குவிண்பட்டிகையிடமால்
அருத்தித்தருந்தவரேத்தமையார்நனடித்தலமே. (அ)

பாடும்பறண்டையுமொந்தையுமார்ப்பப்பரந்துபல்பேய்
கூடிமுழவக்குவிகவிழ்கொட்டக்குறாகரிகள்
றீடுங்குழல்செய்யவையநெளியநிணப்பிணக்காட்
டாடுக்திருவடிகாண்கவையாறனடித்தலமே. (சு)

நின்போலமரர்கணீண்முடிசாய்த்துநிமிர்த்துருத்த
பைம்போதழுக்கிப்பவளக்தழைப்பனபாங்கறியா
வென்போலிகள்பறித்திட்டவியுமுகையுமெல்லா
மம்போதெனக்கொள்ளுமையணையாறனடித்தலமே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் – கூ.

திருவையாறு–திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மலையார்மடந்தைமனத்தனவானேர்மகுடமன்னி
நிலையாயிருப்பனநின்றேர்மதிப்பன.நீணிலத்துப்
புலையாடுபுன்மைதவிர்ப்பனபொன்னுலகம்மளிக்கும்
அலையார்புனற்பொன்னிசூழ்ந்தவையாறனடித்தலமே. (க)

பொலம்புண்டரீகப்புதுமலர்போல்வனபோற்றியென்பார்
புலம்பும்பொழுதும்புணர்துணையாவனபொன்னனைய
லெலம்புஞ்செறிபாடகமுஞ்செழுங்கிண்கிணித்திராளும்
அலம்புந்திருவடிகாண்கவையாறனடித்தலமே. (உ)

உற்றுரிலாதார்க்குறுதுணையாவனவோதிநன்னூல்
கற்றுரர்பரவப்பெருமையுடையனகாதல்செய்ய
றிற்பார்தமக்குக்கிளரொளிவானகந்தான்கொடுக்கும்
அற்றுரர்க்கரும்பொருள்காண்கவையாறனடித்தலமே. (கூ)

வானேக்கடந்தண்டத்தப்பான்மதிப்பனமந்திரிப்பா
ரூனேக்கழித்தய்யக்கொண்டருள்செய்வனவுத்தமர்க்கு

ஞானச்சுடராய்நடுவேயுதிப்பனங்கையஞ்ச
ஆனையுரித்தனகாண்கவையாறனடித்தலமே. (சு)

மாதரமானிலமாவனவானவர்மாமுகட்டின்
மீதனமென்கழல்வெங்கச்சுவீக்கினவெங்கமனூர்
தூதரையோடத்தூரப்பன தன்பறத்தொண்டுபட்டார்க்
காதரமாவனகாண்கவையாறனடித்தலமே. (நி)

பேணித்தொழுமவர்பொன்னுலகாளப்பிறங்கருளால்
ஏணிப்படிநெறியிட்டுக்கொடுத்திமையோர்முடிமேண்
மாணிக்கமொத்தமரகதம்போன் றுவயிரமன்னி
யாணிக்கனகமுமொக்குமையாறனடித்தலமே. (சு)

ஒதியஞானமுஞானப்பொருளுமொலிதிறந்த
வேதியர்வேதமும்வேள்வியுமாவனவிண்ணுமண்ணுஞ்
சோதியுஞ்செஞ்சுடர்ஞாயிறுமொப்பனதூமதியோ
டாதியுமன்தமுமானவையாறனடித்தலமே. (எ)

சுணங்குமுகத்தத்தணமுலைப்பாவைசுரும்பொடுவண்
டணங்குங்குழலியணிபார்வனைக்கரங்கூப்பிநின்று
வணங்கும்பொழுதம்வரும்பொழுதும்வண்காந்தளொண்போ
தணங்குமவிந்தமொக்குமையாறனடித்தலமே. (அ)

சுழலார் துயர்வெயிற்சுட்டிடும்போதடித்தொண்டர்தன்னு
நிழலாவனவென் றுநீங்காப்பிறவிநிலைகெடுத்துக்
கழலாவினைகள்கழற்றுவதாலவனங்கள்தந்த
வழலாரொளியனகாண்கவையாறனடித்தலமே. (கூ)

வலியான்றலைபத்தும்வாய்விட்டலறவரையடர்த்து
மெலியாவலியுடைக்கூற்றையுதைத்தவிண்ணோர்கண்முன்னே
பலிசேர்படுகடைப்பார்த்தப்பன்னுரும்பலரிகழ
வலியாரிலிற்குமையனையாறனடித்தலமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்டியூர்–திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வானவர்தானவர்வைகன்மலர்கொணர்ந்திட்டிறைஞ்சித்
தான்வரமால்பிரமன்னறியாததகைமையினு
ஞானவனற்புராணனன்றுமெடியபன்றியெய்த
கானவனீக்கண்டியூரண்டவாணர்தொழுகின்றதே. (க)

வானமதியமும்வாளரவும்புனலோடுசடைத்
தானமதுவெனவைத்தழல்வான்றழல்போலுருவன்
காணமறியொன்றுகையுடையான்கண்டியூரிருந்த
ஊனமில்வேதமுடையானீநாமடியுள்குதுமே. (உ)

பண்டங்கமுத்ததோர்கையுடையான் படைத்தான்றலையை
யுண்டங்கமுத்ததுமூரொடுநாடவைதானறியுங்
கண்டங்கமுத்தமிடறுடையான் கண்டியூரிருந்த
தொண்டர்பிரானைக்கண்டீரண்டவாணர்தொழுகின்றதே. (க)

முடியின்முற்றுதலொன்றில்லையெல்லாமுடன்றுணுடையான்
கொடியமுற்றவிடையேறியோர்கூற்றெருபாலுடையான்
கடியமுற்றவல்வினோய்களீவான் கண்டியூரிருந்தா
னடியுமுற்றுர்தொண்டரில்லைகண்டீரண்டவானவரே. (ச)

பற்றியோராணையுரித்தபிரான்பவளத்திரள்போன்
மூற்றுமணிக்கதோர்நீறுடையான்முன்னமேகொடித்த
கற்றங்குடையவன்றுனறியான்கண்டியூரிருந்த
குற்றமில்லவதமுடையாரையாமண்டர்கூறுவதே. (ஞ)

போர்ப்பணையாணையுரித்தபிரான் பொறிவரையவஞ்
சேர்ப்பதுவானத்திரைகடல்சூழுலகம்பிதனைக்
காப்பதுகாரணமாகக்கொண்டான்கண்டியூரிருந்த
கூர்ப்புடையொள்வாண்மழுவணையாமண்டர்கூறுவதே. (ங)

அட்டதுகாலனையாய்ந்ததுவேதமாறங்கமன்று
சுட்டதுகாமனைக்கண்ணதனலேதொடர்ந்தெரியக்
கட்டவைமூன்றுமெரித்தபிரான்கண்டியூரிருந்த
குட்டமுன்வேதப்படையணையாமண்டர்கூறுவதே. (ஏ)

ஆட்டுமொலிநீரணிமதியும்மலரானவெல்லாம்
இட்டும்பொதியுஞ்சடைமுடியானிண்டைமாலையங்கைக்
கட்டுமரவதுதானுடையான்கண்டியூரிருந்த
கொட்டும்பறையுடைக்கூத்தனையாமண்டர்கூறுவதே. (அ)

மாய்ந்தனதீவினைமங்கினகோய்கண்மறுகிவிழத்
தேய்ந்தனபாவஞ்செறுக்கில்லைநம்மைச்செற்றநங்கைக்
காய்ந்தபிரான்கண்டியூரெம்பிரானங்கமாறினையும்
ஆய்ந்தபிரானல்லனேவடியேனையாட்கொண்டவனே. (சு)

மண்டிமலையையெடுத்தமத்தாகியவாசுகியைத்
தண்டியமரர்கடைந்தகடல்விடங்கண்டருளி
யுண்டபிரானுஞ்சொலித்தபிரானுஞ்சியோடிநண்ணக்
கண்டபிரானல்லனேகண்டியூரண்டவானவனே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீரட்டேசுவரர், தேவியார்-மங்கைநாயகியம்மை.

திருப்பாதிரிப்புலியூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஈன்றளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றுயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
ஏன்றனிமையவர்க்கன்பன்திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றுத்தணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே. (க)

பற்றுயினைக்கிடப்போதுகெஞ்சேயிரக்கப்பாரைமுற்றுஞ்
சுற்றுயலைகடன்மூடினுங்கண்டேன்புகல்நமக்கு
உற்றுணுமையவட்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்
முற்றுமுனேமதிக்கண்ணியினன்றனமொய்கழலே. (உ)

விடையான்விரும்பியென்னுள்ளத்திருந்தானினிநமக்கிங்
கடையாவவலமருவினைசாராநமனியஞ்சோம்
புடையார்கமலத்தயன்போல்பவர்பாதிரிப்புலியூ
ருடையானடியரடியடியோங்கட்கரியதுஞ்சே. (ங)

மாயமெலாமுற்றவிட்டிருணீங்கிமலமகட்கே
நேயநிலவவிருந்தானவன்றன்றிருவடிக்கே
தேயமெலாகின்றிறைஞ்சுந்திருப்பாதிரிப்புலியூர்
மேயகல்லான்மலர்ப்பாதமென்சிக்கையுணின்றனவே. (ச)

வைத்தபொருணமக்கர்மென்றுசொல்லிமனத்தடைத்துச்
சித்தமொருக்கிச்சிவாயநமவென்றிருக்கினல்லான்
மொய்த்தகதிர்மதிபோல்வாரவர்பாதிரிப்புலியூர்
அத்தனருள்பெறலாமோவறிவிலாப்பேதைநெஞ்சே. (ஞ)

கருவாய்க்கிடந்துன்கழலேகினையுங்கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்றனமம்பயின்றேனுனதருளாற்
றிருவாய்ப்பொலியச்சிவாயநமவென்றுநீறணிந்தேன்
றருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரரனே. (சு)

எண்ணுதமரரிரக்கப்பரவையுணஞ்சையுண்டாய்
திண்ணுரசுரர்திரிபுரந்தியெழச்செற்றவனே
பண்ணுர்ந்தமைந்தபொருள்கள்பயில்பாதிரிப்புலியூர்க்
கண்ணுர்துதலாய்கழனங்கருத்திலுடையனவே. (எ)

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. (அ)

மண்பாதலம்புக்குமால்கடன்மூடிமற்றேழுலகும்
விண்பாறிசைகெட்டிருசுடர்வீழினுமஞ்சனெஞ்சே

திண்பானமக்கொன்றுசண்டோர்திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக்கடவுட்சுடரான்கழலிணையே. (சு)

திருந்தாவமணர்தந்திநெறிப்பட்டுத்திகைத்தமுத்தி
தருந்தாளினைக்கேசரணம்புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுடனெரித்தாய்பாதிரிப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல்வந்தேன்றுகொள்ளே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தோன்றாத்துணைமீசுவரர், தேவியார்-தோகையம்பிகையம்மை.

திருவீழிமிழலை-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வான்சொட்டச்சொட்டநின்றட்டும்வளர்மதியோடயலே
தேன்சொட்டச்சொட்டனின்றட்டுந்திருக்கொன்றைசென்னிவைத்தீர்
மான்பெட்டைநோக்கியமணீர்மணிநீர்ப்பழனவீழியீரீர்
நான்சட்டதம்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (க)

அந்தமுமாதியுமாகிநின்றீரண்டமெண்டிசைக்கும்
பந்தமும்வீடும்பரப்புகின்றீர்பசுவேற்றுகந்தீர்
வெந்தழலோம்புமிழலையுளீரென்னைத்தென்றிசைக்கே
யுந்திடும்போதுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (உ)

அலைக்கின்றநீர்நிலங்காற்றனலம்பரமாகிநின்றீர்
கலைக்கன்றுசேருங்கரத்தீர்கலைப்பொருளாகிநின்றீர்
விலக்கின்றிலகுமிழலையுளீர்மெய்யிறகையொடுகால்
குலைக்கின்றுதம்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (ங)

நீத்தொழிலான்றலைத்தீயிலிட்டுச்செய்தவேள்விசெற்றீர்
பேய்த்தொழிலாட்டியைப்பெற்றுடையீர்பிடித்தத்திரியும்
வேய்த்தொழிலாளர்மிழலையுளீர்விக்கியஞ்செழுத்தும்
ஓத்தொழிந்தம்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (ச)

தோட்பட்டகரகமுஞ்சூலமுஞ்சுற்றியும்பத்திமையான்
மேற்பட்டவர்தணர்வீழியுமென்னையும்வேறுடையீர்
நாட்பட்டுவக்துபிறந்தேனிறக்கநமன்றமர்தம்
கோட்பட்டுதம்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (ஙி)

கண்டியிற்பட்டகழுத்தடையீர்கரிக்காட்டிலிட்ட
பண்டியிற்பட்டபரிகலத்தீர்பதிவீழிகொண்டீர்
உண்டியிற்பட்டினிநோயினுறக்கத்தினும்மையைவர்
கொண்டியிற்பட்டுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (ஞ)

தோற்றங்கண்டான்சிரமொன்றுகொண்டீர்தூயவெள்ளெருதொன்
றேற்றங்கொண்டீரெழிலவீழிமிழலையிருக்கைகொண்டீர்

சிற்றங்கொண்டென்மேற்சிவந்ததோர்பாசத்தால்விசியவெங்
கூற்றங்கண்டும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (எ)

சுழிப்பட்டகங்கையுந்திங்களுஞ்சூடிச்சொக்கம்பயின்றீர்
பழிப்பட்டபாம்பரைப்பற்றுடையீர்படர்தீப்பருக
விழிப்பட்டகாமனைவிட்டீர்மிழலையுளீர்பிறவிச்
சுழிப்பட்டுநும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (அ)

பிள்ளையிற்பட்டபிறைமுடியீர்மறையோதவல்லீர்
வெள்ளையிற்பட்டதோர்நீற்றீர்விரிநீர்மிழலையுளீர்
நள்ளையிற்பட்டைவர்க்கரைப்பிக்கநமன்றமர்தங்
கொள்ளையிற்பட்டுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (கூ)

கறுக்கொண்டரக்கன்கயிலையைப்பற்றியகையுமெய்யு
நெறுக்கென்றிறச்செற்றசேவடியாற்கூற்றைநீறுசெய்தீர்
வெறிக்கொன்றைமாலைமுடியீர்விரிநீர்மிழலையுளீர்
இறக்கின்றுநும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீழியழகர், தேவியார்-சுந்தரகுஜாம்பிகையம்மை.

திருச்சதகத்திமுற்றம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகியமுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்தவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குதழற்தைத்
தேவாதிருச்சத்திமுற்றத்தறையுள்சிவக்கொழுந்தே. (க)

காய்ந்தாயனங்களுடலம்பொடிபடக்காலினமுன்
பாய்ந்தாயுயிர்செகப்பாதம்பணிவார்தம்பல்பிறவி
யாய்ந்தாய்தழப்பாயடியேற்கருளாயுன்னன்பர்சிந்தை
சேர்ந்தாய்திருச்சத்திமுற்றத்தறையுள்சிவக்கொழுந்தே. (உ)

பொத்தார்நரம்பைபுகுந்தைவர்நாளும்புகலிப்ப
மத்தார்தயிர்போன்மறுகுமென்சிந்தைமறக்கொழிவி
யத்தாவடியேனடைக்கலங்கண்டாயமரர்கடஞ்
சித்தாதிருச்சத்திமுற்றத்தறையுள்சிவக்கொழுந்தே. (ஙு)

நில்லாக்குரம்பைநிலையாக்கருதியிந்நீலிலத்தொன்
றல்லாக்குழிவீழ்ந்தயர்வுறுவேனைவந்தாண்டுகொண்ட
வில்லேர்புருவத்தமையாள்கணவாவிடிற்கெடுவேன்
செல்வாதிருச்சத்திமுற்றத்தறையுள்சிவக்கொழுந்தே. (ச)

கருவுற்றிருந்தன்கழலேனைந்தேன்கருப்புவியிற்
றெருவிற்புகுந்தேன்றிகைத்தடியேன்றன்றிகைப்பொழிவி

யுருவிற்றிகழுமுமையாள்கணவாவிடிற்கெடுவேன்
றிருவிற்பொலிசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (டு)

வெம்மைநமன்றமர்மிக்குவிரவிவிழுப்தன்முன்
இம்மையுன்றுனென்றன்னெஞ்சத்தெழுதிவையீங்கிகழி
லம்மையடியேற்கருளதியென்பதிங்காறறிவார்
செம்மைதருசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (சு)

விட்டார்புரங்களொருநொடிவேவவோர்வெங்கணையாற்
சுட்டாயென்பாசத்தொடர்பறுத்தாண்டுகொள்தும்பிபம்பு
மட்டார்குழலிமலைமகள்பூசைமகிழ்ந்தருளுஞ்
சிட்டாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (எ)

இகழ்ந்தவன்வேள்வியழித்திட்டிமையோர்பொறையிரப்பத்
திகழ்ந்திடவன்றேவிசயமுங்கொண்டதுநீலகண்டர
புகழ்ந்தவடியேன்றன்புன்மைகடீரப்புரிந்தருள்காய்
திகழ்ந்ததிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (அ)

தக்கார்வமெய்திச்சமண்டவிர்ந்துன்றன்சரண்புகுந்தேன்
எக்காதலெப்பயனுன்றிறமல்லாலெனக்குளதே
மிக்காரில்லேயுள்விருப்பமிகவடமேருவென்னுங்
கிக்காதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (கூ)

பொறித்தேரரக்கன்பொருப்பெடுப்புற்றவன்பொன்முடிதோள்
இறத்தாளொருவிரலூன்றிட்டலறவிரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய்கொடிமேன்செய்குற்றக்கொடியேனோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சிவக்கொழுந்தீசுவரர், தேவியார்-பெரியநாயகியம்மை.

திருநல்லூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அட்டுமினில்பலியென்றென்றகங்கடைதோறும்வந்து
மட்டவிழ்குழலார்வளைகொள்ளும்வகையென்கொலோ
கொட்டியபாணியெடுத்திட்டபாதமுங்கோளரவு
நட்டகின்றுடியாதர்நல்லூரிடங்கொண்டவரே. (க)

பெண்ணிட்டம்பண்டையதன்றிவைபெய்பலிக்கென்றுழல்வார்
ணண்ணிட்டுவந்தமனீபுகுந்தாருநல்லூரகத்தே
பண்ணிட்டபாடலராடலராய்ப்பற்றிநோக்கினின்று
கண்ணிட்டுப்போயிற்றுக்காரணமுண்டுகறைக்கண்டரே. (உ)

படவேரவல்குற்பாவைகல்லீர்பகலேயொருவர்
இடுவாரிடைப்பலிகொள்பவர்போலவந்தில்புகுந்து

ஈட்வாரடிகணடம்பயின்முடியகூத்தர்கொலோ
வடபார்கயிலேயுர்தென்பானல்லூருர்தம்வாழ்பதியே. (கூ)

செஞ்சுடர்ச்சோதிப்பவளத்திரடிகழ்முத்தணைய
நஞ்சணிகண்டனல்லூறைநம்பனைநாளெருகாற்
முஞ்சிடைக்கண்டுகனவின்றமீத்தொழுதேற்கவன்ரு
னெஞ்சிடைநின்றகலான் பலகாலமுநின்றனனே. (ச)

வெண்மதிசூடிவிளங்கிநின்றுவிண்ணோர்கடொழ'
நண்ணியதொடுபாடலருதல்லூரகத்தே
திண்ணிலையங்கொடுகின்றுன்றிரிபுரமூன்றெரித்தான்
கண்ணுளுநெஞ்சத்தகத்துமுளகழற்சேவடியே. (ஞ)

தேற்றப்படத்திருநல்லூரகத்தேசிவனிருந்தான்
றேற்றப்படச்சென்றுகண்டுகொள்ளார்தொண்டர்துன்மதியால்
ஆற்றிற்கெடுத்தக்குளத்தினிற்றேடியவாதரைப்போற்
காற்றிற்கெடுத்துலகெல்லாந்திரிதர்வர்காண்பதற்கே. (ஈ)

நாட்கொண்டதாமரைப்பூந்தடஞ்சூழ்ந்தநல்லூரகத்தே
கேட்கொண்டகோவணங்காவென்றுசொல்லிக்கிறிபடத்தான்
வாட்கொண்டநோக்கினியொடுமங்கோர்வாணிகனே
யாட்கொண்டவார்த்தையுரைக்குமன்றேவிவ்வகலிடமே. (எ)

அறைமல்குபைங்கழலார்ப்பகின்றுனணியார்சடைமேல்
நறைமல்குகொன்றையந்தாருடையானுநல்லூரகத்தே
பறைமல்குபாடலனுடலனுகிப்பரிசழித்தான்
பிறைமல்குசெஞ்சடைதாழகின்றுடியபிஞ்ஞகனே. (அ)

மன்னியமாமறையோர்மகிழ்ந்தேத்தமருவியெங்குர்
துன்னியதொண்டர்களின்னிசைபாடித்தொழுதுநல்லூர்க்
கன்னியர்தாமுங்கனவிடையுன்னியகாதலரை
யன்னியமற்றவரங்கணனேயருணல்கென்பரே. (கூ)

திருவமர்தாமரைசீர்வளர்செங்கழுநீர்கொணைய்தல்
குருவமர்கோங்கங்குராமகிழ்செண்பகங்கொன்றைவன்னி
மருவமர்நீன்கொடிமாடமலிமறையோர்கணல்லூர்
உருவமர்பாகத்துமையவள்பாகனேயுள்குதுமே (கo)

செல்லேர்கொடியன்சிவன்பெருங்கோயில்சிவபுரமும்
வல்லேன்புகவுமதில்சூழிலங்கையர்காவலனைக்
கல்லார்முடியொடுதோளிறச்செற்றகழலடியான்
நல்லூரிருந்தபிரானல்லனேநம்மையாள்பவனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் – கூ.

திருவையாறு-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அந்திவட்டத்திங்கட்கண்ணியனேயாறமர்ந்துவந்தென்
புந்திவட்டத்திடைப்புகுந்தின்றுணேயும்பொய்யென்பனே
சிந்திவட்டச்சடைக்கற்றையலம்பச்சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடுகொன்றைவளாவியநம்பனேயே. (க)

பாடகக்கால்கழற்கால்பருதிக்கருக்கவந்தி
நாடகக்கானங்கைமுன்செவ்வணேனத்தின்பின்னடந்த
காடகக்கால்கணங்களெதாழுங்காலெங்கணப்பின்றகா
லாடகக்காலரிமான்றோல்வலனேயாற்றனவே. (உ)

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஓதவித்தாய்முன்னறவுரைகாட்டியமணரொடே
காதவித்தாய்கட்டகோய்பிணிதீர்த்தாய்கலக்குருளிப்
போதவித்தாய்நின்பணிபிழைக்கிற்புளியம்பலரால்
மோதவிப்பாயுகப்பாய்முனிவாய்கச்சியேகம்பனே. (க)

எத்தைக்கொடேததையேழுபமஞ்டிசைவித்தெனைக்
கொத்தைக்குமுங்காவழிகாட்டுவித்தென்னைக்கோகுசெய்தாய்
முத்திற்பிரளும்பளிங்கினிற்சோதியுமொய்பவளத்
தொத்தினியேய்க்கும்படியாய்பொழிற்கச்சியேகம்பனே. (உ)

மெய்யம்புகோத்தவிசயனேடன்றெருவேடனுகிப்
பொய்யம்பெய்தாவமருளிச்செய்தாய்புரமூன்றெரியக்
கையம்பெய்தாய்தன்கழலடிபோற்றுக்கயவர்நெஞ்சிற்
குய்யம்பெய்தாய்கொடிமாமதில்சூழ்கச்சியேகம்பனே. (ங)

குறிக்கொண்டிருந்துசெந்தாமரையாயிரம்வைகல்வைகல்
நெறிப்படவின்டைபுனின்றமாலினியழிப்பான்
கறைக்கண்டனீயொருபூக்குறைவித்தக்கண்சூல்விப்பதே
பிறைத்தண்டவார்சடையாய்பெருங்காஞ்சியெம்பிஞ்ஞகனே. (சு)

உரைக்குங்கழிந்திங்குணர்வரியாளுள்குவார்வினையைக்
கரைக்குமெனக்கைதொழுவதல்லாற்கதிரோர்களெல்லாம்
விரைக்கொண்மலரவன்மாலெண்வசுக்கவேகாதசர்க்க
ளிரைக்குமபிர்தர்க்கறியவொண்ணுனெங்களேகம்பனே. (ஞ)

கருவுற்றநாண்முதலாகவுன்பாதமேகாண்பதற்கு
உருகிற்றெனுள்ளமுநானுங்கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
றிருவொற்றியூராய்திருவாலவாய்திருவாரூராய்
ஒருபற்றிலாமையுங்கண்டிரங்காய்கச்சியேகம்பனே (ஞ)

அரியயனிர்திரன்சந்திராதித்தரமரெல்லாம்
உரியகின்கொற்றக்கடைத்தலையாருணங்காக்கிடந்தார்
புரிதருபுன்சடைப்போகர்முனிவர்புலம்புகின்றூர்
எரிதருசெஞ்சடையேகம்பவென்னேதிருக்குறிப்பே. (எ)

பாம்பரைச்சேர்த்திப்படருஞ்சடைமுடிப்பால்வண்ணனே
கூம்பலிச்செய்தகரதலத்தன்பர்கள்கூடிப்பன்னூள்
சாம்பலிப்பூசித்தசையிற்புரண்டுகின்றூள்சரணென்
றேம்பலிப்பார்கட்கிரங்குகண்டாய்கச்சியேகம்பனே. (அ)

ஏன்றுகொண்டாயென்னேயெம்பெருமானினியல்லமென்னிற்
சான்றுகண்டாயிவ்வுலகமெல்லாந்தனியேனென்றென்னே
யூன்றிகின்றூரைவர்க்கொற்றிவைத்தாய்பின்னேயொற்றியெல்லாஞ்
சோன்றகொண்டாய்கச்சியேகம்பமேயசுடர்வண்ணனே. (கூ)

உன்றிகின்றருன்றனேலக்கச்சூலகள்வாய்தல்பற்றித்
துன்றிகின்றூர்தொல்லேவானவரீட்டம்பணியறிவான்
வன்றுகின்றூரயனுந்திருமாலுமதிட்கச்சியா
யின்றகின்றேமினியெங்ஙனமோவன்றிறைஞ்சுவதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவின்னம்பர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மன்னும்மலைமகள்கையால்வருடினமாமறைகள்
சொன்னதறைதொறுக்தூப்பொருளாயினதூக்கமலத்
தன்னவடிவினவன்புடைத்தொண்டர்க்கமுதருத்தி
யின்னல்கமேவனவின்னம்பரான்றனிணேயடியே. (க)

பைதற்பிணக்குழைக்காளிவெங்கோபம்பங்கப்படுப்பான்
செய்தற்கரியதிருநடஞ்செய்தனசீர்மறையோன்
உய்தற்பொருட்டுவெங்கூற்றையுதைத்தனவும்பர்க்கெல்லாம்
எய்தற்கரியனவின்னம்பரான்றனிணேயடியே. (உ)

சுணங்குகின்றூர்கொங்கையாஞமைசூடினதூமலரால்
வணங்குகின்றும்பர்கள்வாழ்த்தினமன்னுமறைகடம்மிற்
பிணங்குகின்றின்னனவென்றறியாதனபேய்க்கணத்தோ
டினங்குகின்றூடினவின்னம்பரான்றனிணேயடியே. (கூ)

ஆறுன்றியசமயங்களினவ்வவர்க்கப்பொருள்கள்
வேறுன்றிலாதனவிண்ணேர்மதிப்பனமிக்குபமன்
மாறுன்றிலாதனமண்ணெடுவிண்ணகமாய்க்திடினும்
ஈறுன்றிலாதனவின்னம்பரான்றனிணேயடியே. (ச)

அரக்கர்தம்மூப்புரமம்பொன்றிலைடலங்கியின்வாய்க்
கரக்கமுன்வைதிகத்தேர்பிசைகின்றனகட்டுருவம்

பரக்கவெங்கானிடைவேடுருவாயின பல்பதிதோ
றிரக்கநடந்தனவின்னம்பரான் றனிணேயடியே. (இ)

கீண்டுங்கிளர்ந்தும்பொற்கேழன்முன்றேடினகேடுபடா
வாண்டும்பலபலவூழியுமாயினவாரணத்தின்
வேண்டும்பொருள்களிளங்கின்றுடினமேவஞ்சிலம்
பீண்டுங்கழலினவின்னம்பரான் றனிணேயடியே. (ஈ)

போற்றுந்தகையனபொல்லாமுயலகன்கோபப்புன்மை
யாற்றுந்தகையனவாமுசமயத்தவரவரைத்
தேற்றுந்தகையனதேறியதொண்டரைச்சென்றெறிக்கே
யேற்றுந்தகையனவின்னம்பரான் றனிணேயடியே. (உ)

பயம்புன்மைசேர்தருபாவந்தவிர்ப்பனபார்ப்பதிதன்
குயம்பொன்மைமாமலராக்கக்குலாவினகூடவொண்ணுச்
சயம்புவென்றேதகுதாணுவென்றேசதுர்வேதங்கணின்
றியம்புங்கழலினவின்னம்பரான் றனிணேயடியே. (ஊ)

அயனெடுமாலிந்திரன்சந்திராதித்தரமரெல்லாஞ்
சயசயவென்றமுப்போதும்பணிவனதண்கடல்சூழ்
வியனிலமுற்றுக்கும்விண்ணுக்குநாகர்வியனகர்க்கும்
இயம்பரமாவனவின்னம்பரான்றனிணேயடியே. (எ)

தருக்கியதக்கன்றன்வேள்வித்தகர்த்தனதாமரைப்போ
தருக்கியசெம்பொனுவமனிலாதெனவொண்கயிலை
நெருக்கியவாளரக்கன்றலைபத்துநெரித்தவன்றன்
இருக்கியல்பாயினவின்னம்பரான் றனிணேயடியே. (ஏ)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொல்லோ
அலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாலருசேவடியான்றிருமூலத்தானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (க)

மற்றிடமின்றிமனீ றுறந்தல்லுணவல்லமணர்
சொற்றிடமென்றுதுரிசுபட்டேனுக்குமுண்டுகொல்லோ
விற்றிடம்வசங்கிவிசயனேடன்றெருவேடுவனுப்
புற்றிடங்கொண்டான்றன்றொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (உ)

ஒருவடிவின்றிரின்றுண்குண்டர்முன்னமக்குண்டுகொல்லோ
செருவடிவெஞ்சிலையாற்புரமட்டவன்சென்றடையாத்
திருவுடையான்றிருவாரூர்த்திருமூலத்தானன்செங்கட்
பொருவிடையானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (ஊ)

மாசினேபெறியமேனியர்லன்கண்ணர்மொண்ணரைவிட்
டீசனேயெனினைந்தேசமுவேனுக்குமுன்டுகொல்லோ
தேசனேயாரூர்த்திருமூலத்தானனீச்சிந்தைசெய்து
பூசனேபூசுரர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (ச)

அருந்தம்பொழுதுரையாடாவமணர்திறமகன்று
வருந்திநினைந்தரனேயென்றுவாழ்த்துவேற்குண்டுகொல்லோ
திருந்தியமாமதிலாரூர்த்திருமூலத்தானனுக்குப்
பொருந்துந்தவமுடைத்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (ரு)

வீங்கியதோள்களுந்தாள்களுமாய்நின்றுவெற்றரையே
மூங்கைகள்போலுண்ணுமூடர்முன்னேநமக்குண்டுகொல்லோ
தேங்கமழ்சோலைத்தென்னாரூர்த்திருமூலத்தானன்செய்ய
பூங்கமலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (சு)

பண்ணியசாத்திரப்பேய்கள்பறிதலைக்குண்டரைவிட்
டெண்ணில்புகழீசன்றன்னருள்பெற்றேற்குமுண்டுகொல்லோ
திண்ணியமாமதிலாரூர்த்திருமூலத்தானனெங்கள்
புண்ணியன்றன்னடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (எ)

கரப்பர்க்கண்மெய்யைத்தலைபறிக்கச்சகமென்னுங்குண்ட
ருரைப்பனகேளரதிங்குய்யப்போர்தேதுர்க்குமுண்டுகொல்லோ
திருப்பொலியாரூர்த்திருமூலத்தானன்றிருக்கயிலைப்
பொருப்பன்விருப்பமர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (அ)

கையிலிடுசோறுநின்றுண்ணுங்காதலமணரைவிட்
டுய்யுநெறிகண்டிங்குய்யப்போர்தேதுனக்குமுண்டுகொல்லோ
ஐயனணிவயலாரூர்த்திருமூலத்தானனுக்குப்
பொய்யன்பிலாவடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (கூ)

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போர்தேதுனக்குமுண்டுகொல்லோ
மற்பொலிதோளானிராவணன்றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வேம்பினைப்பேசிவிடக்கினையோம்பிவினைபெருக்கித்
தூம்பினைத்தூர்த்தந்கோர்சுமந்துதுணையென்றிருத்திர்தொண்டீ
ராம்பலம்பும்பொய்கையாரூரமர்ந்தானடிமுறைஞ்ச்
சாம்பலைப்பூசிச்சலமின்றித்தொண்டுபட்டுய்ம்மின்களே. (க)

ஆராய்ந்தடித்தொண்டராணிப்பொனாரூரகத்தடக்கிப்
பாரூர்பரிப்பத்தம்பங்குனியுத்திரம்பாற்படுத்தார

ஞரூர்நறுமலர்நாதனடித்தொண்டனம்பிநந்தி
நீராற்றிருவிளக்கிட்டமைநீடுரையுமன்றே. (உ)

பூம்படிமக்கலம்பொற்படிமக்கலம்மென்றிவற்று
லாம்படிமக்கலமாகிலுமாரூரினிதமர்ந்தார்
தாம்படிமக்கலம்வேண்டுவரேற்றமிழ்மாலைகளால்
நாம்படிமக்கலஞ்செய்துதொழுதும்மடநெஞ்சமே. (ஊ)

அடிக்கின்றபாம்பரையார்த்தத்தளங்காமதியணிந்து
முடிக்கொண்டராகிமுனிவர்பணிசெய்வதேயுமன்றிப்
பொடிக்கொண்டுபூசிப்புகுந்தொண்டர்பாதம்பொறுத்தபொற்பால்
அடித்தொண்டநந்தியென்பானுளனூரமுதினுக்கே. (எ)

கரும்புபிடித்தவர்காயப்பட்டாரங்கோர்கோடலியா
லிரும்புபிடித்தவரின்புறப்பட்டாரிவர்கணிற்க
அரும்பவிழ்தண்பொழில்சூழணியாரூரமர்ந்தபெம்மான்
விரும்புமனத்தினியாதொன்றுநானுன்னவேண்டுவனே. (ஏ)

கொடிகொள்விதானங்கவரிபறைசங்கங்கைவிளக்கோ
டிடிவில்பெருஞ்செல்வமெய்துவரெய்தியுமூனமில்லா
வடிகளுமாரூரகத்தினராயினுமந்தவளப்
பொடிகொண்டணிவார்க்கிருளொக்குநந்திபுறப்படிலே. (சு-எ-அ-சூ)

சங்கொலிப்பித்திடுமின்சிறுகாலைத்தடவழலிற்
சுங்குலியப்புகைக்கூட்டென்முங்காட்டியிருபதோதா
ளங்குலம்வைத்தவன்செங்குருதிப்புனலோடவஞ்ஞான்
றங்குலிவைத்தானடித்தாமரையென்னியாண்டனவே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

திருக்காரோணம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமாமலைமங்கைபங்காகங்கைவார்சடையாய்
கடிகமழ்சோலைசுலவுகடனாகைக்காரோணனே
பிடிபடவாரணம்பேணுந்துரகநிற்கப்பெரிய
இடிகுரல்வெள்ளெருதேறுமிதென்னீகொலெம்மிறையே. (க)

கற்றூர்பயில்கடனாகைக்காரோணத்தெந்தண்ணுதலே
வித்தருங்கியகரம்வேனெடுங்கண்ணிவியன்கரமே
னற்றுணைடுஞ்சிலைநாண்வலித்தகரனின்கரமே
செற்றூர்புரஞ்செற்றசேவகமென்னீகொல்செப்புமினே. (உ)

தூமென்மலர்க்கணீகோத்துத்தீவேள்வித்தொழிற்படுத்த
காமன்பெடிபடக்காய்ந்தகடனாகைக்காரோணநின்
னாமம்பரவிநமச்சிவயவென்னுமஞ்செழுத்துஞ்
சாமன்றுரைக்கத்தருகிலாயெங்கள்சங்கரனே. (ஊ)

பழிவழியோடியுபாலிப்பறிதலேக்குண்டர்தங்கண்
மொழிவழியோடிமுடிவேன்முடியாமைக்காத்தக்கொண்டாய்
கழிவழியோதமுலவுகடனுகைக்காரோணவென்
வழிவழியாளாகும்வண்ணமருளெங்கள்வானவனே. (சு)

செந்துவர்வாய்க்கருங்கண்ணிணைவெண்ணகைத்தெமொழியார்
வந்துவலஞ்செய்தமாகடமாடமலிந்தசெல்வக்
கந்தமலிபொழில்சூழ்கடனுகைக்காரோணமென்னு
சிந்தைசெய்வாரைப்பிரியாதிருக்குந்திருமங்கையே. (நி)

பனிபுரைகைம்மதயானைபுரித்தபரஞ்சுடரே
கனிகடல்சூழ்தருநாகைக்காரோணத்தெங்கண்ணுதலே
மனிதுறந்தல்லுணவல்லமண்குண்டர்மயக்கைநீக்கி
எனிணினைந்தாட்கொண்டாய்க்கென்னினியான்செயுபிச்சைகளே. (சு)

சிர்மலிசெல்வம்பெரிதுடையசெம்பொன்மாமலியே
கார்மலிசோலைசுலவுகடனுகைக்காரோணனே
வார்மலிமென்முலையார்பலிவந்திடச்சென்றிரந்து
ஊர்மலிபிச்சைகொண்டுண்பதுமாதிமையோவுரையே. (எ)

வங்கமலிகடனுகைக்காரோணத்தெம்வானவனே
யெங்கள்பெருமானேர்விண்ணப்பமுண்டதுகேட்டருளீர்
கங்கைசடையுட்கரந்தாயக்கள்ளத்தைமெள்ளவுமை
நங்கையறியிற்பொல்லாதகண்டாயெங்கணையகனே. (அ, சு)

கருந்தடங்கண்ணியுந்தானுங்கடனுகைக்காரோணத்தா
னிருந்ததிருமலையென்றிறைஞ்சாதன்றெடுக்கலுற்றான்
பெருந்தலைபத்துமிருபதுதோளும்பிதிர்ந்தலற
விருந்தருளிச்செய்ததேமற்றுச்செய்திலனெம்மிறையே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவதிகை-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாசிலொள்வாள்போன்மறியுமணிநீர்த்திரைத்தொகுதி
யூசலையாடியங்கொண்டிறையன்னமுறங்கலுற்றூர்
பாச்றைநீலம்பருகியவண்டுபண்பாடல்கண்டு
வீசுங்கெடிலவடகரைத்தேயெந்தைவீரட்டமே. (க)

பைங்காற்றவனீபறைகொட்டப்பாலிலீர்ப்படுக
ரைங்காற்குவளைமேலாவியுயிர்ப்பவருகுலவுஞ்
செங்காற்குருகிவைசேருஞ்செறிகெடிலக்கரைத்தே
வெங்காற்குருகிலைவீரனருள்வைத்தவீரட்டமே. (உ)

ஆம்மலர்க்கண்ணியரஞ்சனஞ்செந்துவர்வாயினீயார்
வெம்முலைச்சாந்தம்விலைபெறுமாலையெடுத்தவர்சு
டம்மருங்கிற்கிரங்கார்தடந்தோண்மெலியக்குடைவார்
விம்மூபுனற்கெடிலக்கரைத்தேயெந்தைவீரட்டமே. (சூ)

மீனுடைத்தண்புனல்வீரட்டரேதும்மைவேண்டுகின்ற
தியாவுடைச்சில்குறையொன்றுளதான முந்தண்ணெருக்கின்
றேனுடைக்கொன்றைச்சடையுடைக்கங்கைத்திரைதவழுங்
கானுடைத்திங்கட்குழவியெப்போதுங்குறிக்கொண்மினே. (சு)

ஆரட்டதேனுமிரந்தண்டகமகவன்றிரிந்து
வேரட்டநிற்பித்திடுகின்றதால்விரிநீர்ப்பரவைச்
சூரட்டவேலவன்றுதையச்சூழ்வயலாரதிகை
வீரட்டத்தானேவிருப்பாவரும்பாவவேதனையே. (சூ)

படர்பொற்சடையும்பகுவாயரவும்பனிமதியுஞ்
சுடலைப்பொடியுமெல்லாமுளவேயவர்தூயதெண்ணீர்க்
கெடிலக்கரைத்திருவீரட்டராவர்கெட்டேனடைந்தார்
நடலைக்குநற்றுணையாருங்கண்டீரவர்நாமங்களே. (சூ)

காளங்கடந்ததோர்கண்டத்தராகிக்கண்ணுர்கெடில
நாளங்கடிக்கோர்நரகமுமாகிற்குகன்கிசைந்த
தாளங்கள்கொண்டுங்குழல்கொண்டுமியாழ்கொண்டுந்தாமங்களனே
வேடங்கள்கொண்டுவிசும்புசெல்வரவர்வீரட்டரே. (எ,அ,ஈ,க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தன்னேச்சரணென்றுதாளடைந்தேன்றன்னடியடையப்
புன்னைப்பொழிற்புகலூரண்ணல்செய்வனகேண்மின்களோ
வென்னைப்பிறப்பறத்தென்வீனைகட்டறுத்தேழ்நரகத்
தென்னைக்கிடக்கலொட்டான்சிவலோகத்திருத்திடுமே. (க)

பொன்னேவகுத்தன்னமேனியனேபுணர்மென்முலையா
டன்னேவகுத்தன்னபாகத்தனேதமியேற்கிரங்காய்
புன்னேமலர்த்தலேவணம்றும்புகலூரரசே
யென்னேவகுத்திலையேலிடம்பைக்கிடம்யாதுசொல்லே. (உ, ஈ)

பொன்னனவர்சடைக்கொன்றையினுய்புகலூரரசே
மன்னுளதேவர்கடேடுமருந்தேவலஞ்சுழியா
யென்னளவேயுனக்காட்பட்டிடைக்கலத்தேதெடப்பா
ருன்னளவேயெனக்கொன்றுமிரங்காதவுத்தமனே. (ச, டு, ஊ, எ, அ, சு)

ஒணப்பிரானுமொளிர்மாமலர்மிசையுத்தமனும்
காணப்பரவியுங்காண்கின்றிலர்காரார்கிடைத்
தோணற்பிராணிவலிதொலைத்தோன்தொல்லைநீர்ப்புகலூர்க்
கோணப்பிராணிக்குமுக்குமுகாகொடுவினையே. (கo)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம்-கo௯.

திருக்கழிப்பாலை-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

நெய்தற்குருகுதன்பிள்ளையென்றெண்ணிநெருங்கிச்சென்று
கைதைமடற்புல்குதென்கழிப்பாலையதனுறைவாய்
பைதற்பிறையொடுபாம்புடன்வைத்தபரிசறியோம்
எய்தப்பெறிலிரங்காதகண்டாய்நம்மிறையவனே. (க)

பருமாமணியும்பவளமுத்தும்பரந்திவரை
பொருமால்கரைமேற்றிரைகொணர்ந்தெற்றப்பொலிந்திலங்குங்
கருமாமிடறுடைக்கண்டனெம்மான்கழிப்பாலையெந்தை
பெருமானவனென்னீயாளுடையானிப்பெருநிலத்தே. (உ)

நரட்பட்டிருந்தின்பமெய்தலுற்றிங்குநமன்றமராற்
கோட்பட்டொழிவதன்முந்துறவேகுளிரார்தடத்தத்
தாட்பட்டதாமரைப்பொய்கையந்தண்கழிப்பாலையண்ணற்
காட்பட்டொழிந்தவன்றேவல்லமாயிவ்வகலிடத்தே. (ங)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மருட்டியர்தீரவன்றர்ச்சித்தமாணிமார்க்கண்டயற்கா
யிருட்டியமேனிவ்வீவாளெயிற்றெரிபோலுங்குஞ்சிச்
சுருட்டியநாவில்வெங்கூற்றம்பதைப்பவுதைத்துங்ஙனே
யுருட்டியசேவடியான்கடவூருறையுத்தமனே. (க)

பதத்தெழுமந்திரமஞ்செழுத்தோதிப்பரிவினெடு
மிதத்தெழுமாணிதனின்னுயிருண்ணவெருண்டடர்த்த
கதத்தெழுகாலனைக்கண்ருருட்புனலாறெழுக
வுதைத்தெழுசேவடியான்கடவூருறையுத்தமனே. (உ)

கரப்புறுசிந்தையர்காண்டற்கரியவன்காமனையு
மெருப்புமிழ்கண்ணினனீள்புனற்கங்கையும்பொங்கரவும்
பரப்பியசெஞ்சடைப்பால்வணன்காலனைப்பண்டொருகா
லுரப்பியசேவடியான்கடவூருறையுத்தமனே. (ங)

மறித்திகழ்கையினன்வானவர்கோனைமனமகிழ்ந்து
குறித்தெழுமாணிதனுருயிர்கொள்வான்கொதித்தசினத்தை

கறுத்தெழுமூவிலைவேலுடைக்காலனைத்தானலற
வுறுக்கியசேவடியான்கடவூருறையுத்தமனே. (சு)

குழைத்திகழ்காதினன்வானவர்கோனைக்குளிர்ந்தெழுந்த
பழக்கமோடர்ச்சித்தமாணிதனுருயிர்கொள்ளவந்த
அழற்பொதிமூவிலைவேலுடைக்காலனைத்தானலற
உழக்கியசேவடியான்கடவூருறையுத்தமனே. (டு)

பாலனுக்காவன்றுபாற்கடலீந்துபணிந்தெழுந்த
ஆனிழற்கீழிருந்தாரணமோதியருமுனிக்காச்
சூலமும்பாசமுங்கொண்டுதொடர்ந்தடர்ந்தோடிவந்த
காலனைக்காய்ந்தபிரான்கடவூருறையுத்தமனே. (சு)

படர்சடைக்கொன்றையும்பன்னகமாலைபணிகையிரு
உடைதலைக்கொத்தழல்மேனியனுண்பலிக்கென்றுழல்வோன்
சுடர்பொதிமூவிலைவேலுடைக்காலனைத்துண்டமதா
உடற்றியசேவடியான்கடவூருறைப்புத்தமனே. (எ)

வெண்டலைமாலையுங்கங்கைக்குரோடிவிரிசடைமேற்
பெண்டனிநாயகன்பேயுகந்தாடும்பெருந்தகையான்
கண்டனிநெற்றியன்காலனைக்காய்ந்துகடலிலீவிடம்
உண்டருள்செய்தபிரான்கடவூருறையுத்தமனே. (அ)

கேழலதாகிக்கிளறியகேசவன்காண்பரிதாய்
வாழிகன்மாமலர்க்கண்ணிடந்திட்டவம்மாலவற்கன்
றாழியுமீந்துவடுதீறற்காலனையன்றடர்த்து
ஊழியுமாயபிரான்கடவூருறையுத்தமனே. (கூ)

தேன்றிகழ்ந்தொன்றையுங்கூவிளமாலைதிருமுடிமேல்
ஆன்றிகழைந்துகந்தாடும்பிரான்மலையார்த்தெடுத்த
கூன்றிகழ்வாளரக்கன்முடிபத்துங்குலைத்துவிழ
வூன்றியசேவடியான்கடவூருறையுத்தமனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருமாற்பேறு-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்குயிர்பெறக்கூற்றையுதைத்தனமாவலிபாற்
காணிக்கிரந்தவன்காண்டற்கரியனகண்டதொண்டர்
பேணிக்கிடந்துபரவப்படுவனபோற்றமஃதே
மாணிக்கமாவனமாற்பேறுடையான்மலரடியே. (க)

கருடத்தனிப்பாகன்காண்டற்கரியனகாதல்செய்யிற்
குருடர்க்குமுன்னேகுடிகொண்டிருப்பனகோலமல்கு
செருடக்கடிமலர்ச்செல்வித்தன்செங்கமலக்கரத்தால்
வருடச்சிவப்பனமாற்பேறுடையான்மலரடியே. (உ)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - கoகூ.

திருத்தூங்காணைமாடம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னுர் திருவடிக்கொன் றுண்டுவிண்ணப்பம்போற்றிசெய்யு
மென்னுவிகாப்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல
மின்னுருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டல்
தன்னுர்கடந்தையுட்டூங்காணைமாடச்சுடர்க்கொழுந்தே. (க-உ-ரு-ச)

ஆவாசெறுதொண்டனென்னினைந்தானென் றரும்பிணிநோய்
காவாதொழியிற்கலக்குமுன்மேற்பழிகாதல்செய்வார்
தேவாதிருவடிநீறென்னேப்பூசுசெந்தாமரையின்-
பூவார்கடந்தையுட்டூங்காணைமாடத்தெம்புண்ணியனே. (டு-சு-ள-அ-சூ)

கடவுக்கிகிரிசுடவாதொழியக்கயிலேயுற்றருன்
படவுக்திருவிரலொன் றுவைத்தாய்பனிமால்வரைபோல்
இடபம்பொறித்தென்னேயேன் றுகொள்ளாயிருஞ்சோலைதிங்கள்
தடவுங்கடந்தையுட்டூங்காணைமாடத்தெந்தத்துவனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

பசுபதி-திருவிருத்தம்,

திருச்சிற்றம்பலம்.

சாம்பலைப்பூசித்தரையிற்புரண்டுநின்றருள்பரவி
யேம்பலிப்பார்கட்கிரங்குகண்டாயிருங்கங்கையென்னுங்
காம்பலிக்கும்பணைத்தோளிகதிர்ப்பூண்வனமுலைமேற்
பாம்பலிக்குஞ்சடையாயெம்மையாளும்பசுபதியே. (க)

உடம்பைத்தொலைவித்துன்பாதந்தலைவைத்தவுத்தமர்கள்
இடும்பைப்படாமலிரங்குகண்டாயிருளோடச்செந்தீ
யடும்பொத்தனையவழன்மழுவாவழலேயுமிழும்
படம்பொத்தரவரையாயெம்மையாளும்பசுபதியே. (உ)

தரித்தனந்தவிராவடியார்தடுமாற்றமென்னு
மூரித்திரைப்பவ்வநீக்குகண்டாய்முன்னேகளொருகால்
வேரித்தண்பூஞ்சுடரம்புகணைவேள்வெந்துவிழச்செந்தீப்
பாரித்தகண்ணுடையாயெம்மையாளும்பசுபதியே. (ஊ)

ஒருவரைத்தஞ்சமென்றெண்ணுதன்பாதமிறைஞ்சுகின்றூர்
அருவினைச்சுற்றமகல்விகண்டாயண்டமேயணவும்
பெருவரைக்குன்றம்பிளிறப்பிளந்துவேய்த்தோளியஞ்சப்
பருவரைத்தோலுரித்தாயெம்மையாளும்பசுபதியே. (எ)

இடுக்கொன்றுமின்றியெஞ்சாமையுன்பாதமிறைஞ்சுகின்றூர்க்
கடர்க்கின்றநோயைவிலக்குகண்டாயண்டமெண்டிசையுஞ்

சுடர்த்திங்கள்சூடிச்சுழல்கங்கையோடுஞ்சுரும்புதுன்றிப்
படர்க்கொண்டசெஞ்சடையாயெம்மையாளும்பசுபதியே. (நி)

அடலேக்கடல்கழிவானின்னடியிணையடைந்தார்
கடலேப்படாமைவிலக்குகண்டாய்கறுங்கொன்றைதிங்கள்
சுடலேப்பொடிச்சுண்ணமாசணஞ்சூளாமணிகிடந்து
படரச்சுடர்மகுடாவெம்மையாளும்பசுபதியே. (சு)

துறவித்தொழிலேபுரிந்துன்சுரும்படியேதொழுவார்
பிறவித்தொழிலதுமாற்றுகண்டாய்மதின்மூன்றுடைய
வறவைத்தொழில்புரிந்தந்தரத்தேசெல்லுமந்திரத்தேர்ப்
பறவைப்புரமெரித்தாயெம்மையாளும்பசுபதியே. (எ-அ-சு)

சித்தத்துருகிச்சிவனெம்பிரானென்றுசிந்தையுள்ளே
பித்துப்பெருகப்பிதற்றுகின்றீர்பிணிதீர்த்தருளாய்
மத்தத்தரக்கனிருபதுதோளுமுடியுமெல்லாம்
பத்தற்றுமறெரித்தாயெம்மையாளும்பசுபதியே. (கப)

திருச்சிற்றம்பலம்.

சரக்கறை-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

விடையும்விடைப்பெரும்பாகாவென்விண்ணப்பம்வெம்மழுவாட்
படையும்படையாய்கிரைத்தபல்பூதமும்பாய்புலித்தோல்
உடையுமுடைதலேமாலேயும்மாலேப்பிறையொதுங்குஞ்
சடையுமிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (க)

விஞ்சத்தடவரைவெற்பாவென்விண்ணப்பம்மேலிலங்கு
சங்கக்கலனுஞ்சரிகோவணமுந்தமருகமும்
அங்கிப்பிறையுமனல்வாயரவும்விரவியெல்லாஞ்
சந்தித்திருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (உ)

வீந்தார்தலேகலனேந்தியென்விண்ணப்பமேலிலங்கு
சாந்தாயவெந்ததவளவெண்ணீறுந்தருணிச்சமும்
பூந்தாமரைமேனிப்புள்ளியுழைமானதள்புலித்தோ
ரூந்தாமிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (ங)

வெஞ்சமாவேழத்தரியாயென்விண்ணப்பமேலிலங்கு
வஞ்சமாவந்தவருபுனற்கங்கையும்வான்மதியு
நஞ்சமாநாகநருந்திரமாலேருவெண்டலே
தஞ்சமாவாழுஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (ச)

வேலேக்கடனஞ்சமுண்டாயென்விண்ணப்பமேலிலங்கு
காலற்கடந்தானிடங்கயிலாயமுங்காமர்கொன்றை

மாலைப்பிறையுமணிவாயரவும்விரவியெல்லாஞ்
சாலக்கிடக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (நி)

வீழிட்டகொன்றையந்தாராயென்விண்ணப்பமேலிலங்கு
சூழிட்டிருக்குற்சுளாமணியுஞ்சுடலீறும்
ஏழிட்டிருக்குநல்லக்குமரவுமென்பாமையொடுந்
தாழிட்டிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (சு)

விண்டார்புரமூன்றுமெய்தாயென்விண்ணப்பமேலிலங்கு
தொண்டாடியதொண்டடிப்பொடிநீறுந்தொழுதுபாதங்
கண்டார்கள்கண்டிருக்குங்கயிலாயமுங்காமர்கொன்றைத்
தண்டாரிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (எ)

வீடுபட்டியேறுகந்தேறியென்விண்ணப்பமேலிலங்கு
கொடுகொட்டிகொக்கரைதக்கைகுழல்தாளம்வீணையொற்றை
வடுவிட்டகொன்றையும்வன்னியுமத்தமும்வாளரவந்
தடுகுட்டமாடுஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (அ)

வெண்டிரைக்கங்கைவிரிதாவென்விண்ணப்பமேலிலங்கு
கண்டிகைபூண்டுகடிசூத்திரமேற்கபாலவடங்
குண்டிகைகொக்கரைகொன்றைபிறைகுறட்பூதப்படை
தண்டுவைத்திட்டசரக்கறையோவென்றனிநெஞ்சமே. (கூ)

வேதித்தவெம்மழுவாளியென்விண்ணப்பமேலிலங்கு
சோதித்திருக்குஞற்சுளாமணியுஞ்சுடலீறும்
பாதிப்பிறையும்படுதலைத்தண்டமும்பயிற்புலித்தோல்
சாதித்திருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (கo)

விவந்தாடியகழலெந்தாயென்விண்ணப்பமேலிலங்கு
தவந்தானெடுக்கத்தலைபத்திறுத்தனைதாழ்புலித்தோல்
சிவந்தாடியபொடிநீறுஞ்சிரமாலைசூடிகின்று
தவந்தானிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தனி-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளிக்குழைத்தணிபோலுங்கபாலத்தன்வீழ்ந்திலங்கு
வெள்ளிப்புரியன்னவெண்புரிநூலன்விரிசடைமேல்
வெள்ளித்தகடன்னவெண்பிறைசூடிவெள்ளென்பணிந்து
வெள்ளிப்பொடிப்பவளப்புறம்பூசியவேதியனே. (க)

உடலேத்துறந்தலகேழுங்கடந்தலவாதுன்பக்
கடலேக்கடந்தய்யப்போயிடலாருங்கனகவண்ணப்

படலேச்சடைப்பரவைத்திரைக்கங்கைப்பனிப்பிறைவெண்
சுடலேப்பொடிக்கடவுட்கடிமைக்கட்டுணிநெஞ்சமே. (உ)

முன்னேயுரைத்தாலுவமனேயொக்குமிம்மூவுலகுக்
கன்னேயுமத்தனுமாவாயழல்வண்ணனீயலேயோ
உன்னேநினேந்தேகழியுமென்னுவிகழிதற்பின்
என்னேமறக்கப்பெருமெம்பிரானுன்னேவேண்டியதே. (ஙூ)

நின்னேயெப்போதுநினேயலொட்டாய்நீநினேயப்புறிற்
பின்னேயப்போதேமறப்பித்துப்போத்தொன் றுாடுவித்தி
யுன்னேயெப்போதுமறக்கிட்டனக்கினிதாவிருக்கும்
என்னேயொப்பாருளரோசொல்லுவாழியிறையவனே. (ச)

முழுத்தழன்மேனித்தவளப்பொடியன்கனகக்குன் றத்
தெழிற்பெருஞ்சோதியையெங்கள்பிராணியகழ்ந்திர்கண்டீர்
தொழப்படுந்தேவர்தொழப்படுவானேத்தொழுதபின்னேத்
தொழப்படுந்தேவர்தம்மாற்றெழுவிக்குந்தன்றெண்டரையே. (ஞ)

விண்ணகத்தான்மிக்கவேதத்துளான்விரிநீருடுத்த
மண்ணகத்தான்றிருமாலகத்தான்மருவற்கினிய
பண்ணகத்தான்பத்தர்சித்தத்துளான்பழநாயடியேன்
கண்ணகத்தான்மனத்தான்சென்னியானெங்கறைக்கண்டனே. (சு)

பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போ
யிருங்கடன்மூடியிறக்குமிறந்தான்களேபரமுங்
கருங்கடல்வண்ணன்களேபரமுங்கொண்டுகங்காளராய்
வருங்கடன்மீளரின்றெம்மிறைநல்வீணைவாசிக்குமே. (எ)

வானந்தளங்கிலென்மண்கம்பமாகிலென்மால்வரையுந்
தானந்தளங்கித்தலேதடுமாறிலென்றண்கடலு
மீனம்படிலென்விரிசுடர்வீழிலென்வேலேநஞ்சுண்
டேனமொன்றில்லாவொருவனுக்காட்பட்டவுத்தமர்க்கே. (அ)

சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியெம்மா
னவனெனேயாட்கொண்டளித்திடுமாகிலவன்றனேயான்
பவனெனுநாமம்பிடித்துத்திரிந்துபன்னுளழைத்தால்
இவனெனேப்பன்னுளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே. (கூ)

என்னேயொப்பாருன்னேயெங்ஙனங்காண்பரியலியுன்னே
தின்னேயொப்பார்நின்னேக்காணும்படித்தன்றுநின்பெருமை
பொன்னேயொப்பாரித்தழலேவளாவிச்செம்மானஞ்செற்று
மின்னேயொப்பாரமினிருஞ்சடைக்கற்றையேதியனே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

தனி-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பவளத்தடவரைபோலுந்திண்டோள்களத்தோள்மிசையே
பவளக்குழைதழைத்தாலொக்கும்பல்சடையச்சடைமேற்
பவளக்கொழுந்தன்னபைம்முகநாகமந்நாகத்தொடும்
பவளக்கண்வாலமதியென்தைரூம்பனிமலரே. (க)

முருகார்நறுமலரிண்டைதழுவிவண்டேமுரலும்
பெருகாரடைசடைக்கற்றையினுப்பிணிமேய்ந்திருந்த
விருகாற்குரம்பையிதநாளுடையதிதுபிரிந்தாற்
றருவாயெனக்குன்றிருவடிக்கேழோர்தலைமைறவே. (உ)

மூவாவுருவத்தமுக்கண்முதல்வமீக்கூரிடும்பை
காவாயெனக்கடைதாங்குமணியைக்கையாலமரர்
நாவாயசைத்தவொலியொலிமாறியதில்லைப்பாற்
றீயாயெரிந்தபெடியரக்கழிந்ததிரிபுரமே. (ங)

பந்தித்தபாவங்களம்மையிற்செய்தனவிம்மைவந்து
சந்தித்தபின்னேச்சமழ்ப்பதென்னேவந்தமர்முன்னுண்
முந்திச்செழுமலரிட்டுமுடிதாழ்த்தடிவணங்கு
நந்திக்குமுந்துறவாட்செய்கிலாவிட்டகன்னெஞ்சமே. (ச)

அந்திவட்டத்திளங்கண்ணியனுமஞ்செஞ்சடையான்
புந்திவட்டத்திடைப்புக்குறின்றனேயும்பெயர்யென்பனே
சந்திவட்டச்சடைக்கற்றையலம்பச்சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடுகொன்றைவளாவியநம்பனையே. (ஞ)

உன்மத்தகமலர்சூடியுலகந்தொழச்சுடலைப்
பன்மத்தகங்கொண்டுபல்கடைதோறும்பலிதிரிவான்
என்மத்தகத்தேயிரவும்பகலும்பிறிவரியான்
தன்மத்தகத்தோரிளம்பிறைசூடியசங்கரனே. (கூ)

அரைப்பாலுடுப்பனகோவணச்சின்னங்கையமுணல்
வரைப்பாவையைக்கொண்டதெருடிவாழ்க்கைக்குவானிரைக்கும்
இரைப்பாபடுதலையேந்துகையாமறைதேடுமென்தா
யுரைப்பாருரைப்பனவேசெய்தியாலெல்களுத்தமனே. (எ)

துறக்கப்படாதவுடலைத்துறந்துவெந்தூதுவரோ
டிறப்பனிறக்தாலிருவிசும்பேறவனேறிவந்து
பிறப்பன்பிறக்தாற்பிறையனிவார்சடைப்பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொலோவென்றென்னுள்ளங்கிடந்தமறுகிடுமே. (அ)

வேரிவளாயவிரைமலர்க்கொன்றைபுனைந்தகண்
சேரிவளாயவென்சிந்தைபுகுந்தான்றிருமுடிமேல்
வாரிவளாயவருபுனற்கங்கைசடைமறிவா
யேரிவளாவிக்கிடந்ததுபோலுமிளம்பிறையே. (சூ)

கன்னெடுங்காலம்வெதும்பிக்கருங்கடனீர்சுருங்கிப்
பன்னெடுங்காலமழைதான்மறக்கினும்பஞ்சமுண்டென்
றென்னெடுஞ்சூளுறுமஞ்சனெஞ்சேயிமையாதமுக்கட்
பொன்னெடுங்குன்றமொன்றுண்டுகண்டீரிப்புகலிடத்தே. (கo)

மேலுமறிந்திலனுன்முகன்மேற்சென்றுகீழிடந்து
மாலுமறிந்திலன்மாலுற்றதேவழிபாடுசெய்யும்
பாலன்மிசைச்சென்றுபாசம்விசிறிமறிந்தசிந்தைக்
காலனறிந்தானறிதற்கரியான்கழலடியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம்-ககச.

திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்த

முதற்றிருமுறை முற்றிற்று.

திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள்.

இரண்டாந்திருமுறை.

கோயில்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமேலுமிப்பூமிசை
யென்னம்பாலிக்குமாறுகண்டின்புற
வின்னம்பாலிக்குமோவிப்பிறவியே. (க)

அரும்பற்றப்படவாய்மலர்கொண்டுநீர்
சுரும்பற்றப்படத்தூவித்தொழுமினே
கரும்பற்றச்சிலைக்காமனைக்காய்ந்தவன்
பெரும்பற்றப்புலியூரெம்பிரானையே. (உ)

அருச்சுற்றவினையாலடர்ப்புண்டுநீ
ரெரிச்சுற்றக்கிடந்தாரென்றயலவர்
சிரிச்சுற்றப்பலபேசப்படாமுன்னந்
திருச்சிற்றம்பலஞ்சென்றடைந்துய்ம்மினே. (கூ)

அல்லலென்செயுமருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத்தொண்டர்தானென்செயுந்
தில்லைமாநகர்ச்சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோரடிமைபூண்டேனுக்கே. (ச)

ஊனிலாவியுயிர்க்கும்பொழுதெலா
நானிலாவியிருப்பனென்னதனைத்
தேனிலாவியசிற்றம்பலவனார்
வானிலாவியிருக்கவும்வைப்பரே. (ஞ)

சிட்டர்வானவர்சென்றுவணங்கொளுஞ்
சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலத்துறை
சிட்டன்சேவடிகைதொழச்செல்லுமச்
சிட்டர்பாலனுகான்செலுகாலனே (ஙு)

ஒருத்தனருளகங்கட்கொருசுடர்
திருத்தனர்தில்லைச்சிற்றம்பலவனர்
விருத்தனரிளையார்விடமுண்டவெம்
அருத்தனரடியாரையறிவரே. (எ)

விண்ணிறைந்ததோர்வெவ்வழலின்னுரு
வெண்ணிறைந்தவிருவர்க்கறிவொணாக்
கண்ணிறைந்தகடிபொழிலம்பலத்
தண்ணிறைந்துறைகின்றருடமொருவனே. (அ)

வில்லைவட்டப்படவாங்கியவுணர்தம்
வல்லைவட்டம்மதிண்மூன்றுடன்மாய்த்தவன்
றில்லைவட்டத்திசைகைதொழுவார்வினை
யெல்லைவட்டங்கடந்தோடுதலுண்மையே. (கூ)

காடிகாரணனுன்முகனென்றிவர்
தேடியுள்திரிந்துங்காணவல்லரோ
மாடமாளிகைசூழ்தில்லையம்பலத்
தாடிபாதமென்னெஞ்சுளிருக்கவே. (கo)

மதுரவாய்மொழிமங்கையோர்பங்கினன்
சதுரன்சிற்றம்பலவன்றிருமலை
யதிரவார்த்தெடுத்தான்முடிபத்திற
மிதிகொள்சேவடிசென்றடைந்தய்ம்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கோயில்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கையும்மதவேழமுரித்தவ
னினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனே. (க)

தீர்த்தனைச்சிவனைச்சிவலோகனை
மூர்த்தியைமுதலாயவொருவனைப்
பார்த்தனுக்கருள்செய்தசிற்றம்பலக்
கூத்தனைக்கொடியேன்மறந்துய்வனே. (உ)

கட்டும்பாம்புங்கபாலங்கைமான்மறி
யிட்டமாயிடுகாட்டெரியாடுவான்
செட்டர்வாழ்தில்லையம்பலக்கூத்தனை
யெட்டனைப்பொழுதும்மறந்துய்வனே. (ங)

மாண்பால்கறந்தாட்டிவழிபட
நீணிலகெலாமாளக்கொடுத்தவ

ணணியைச்செம்பொனம்பலத்தண்ணின்ற
தாணுவைத்தமியேன்மறந்துய்வனே. (சு)

பித்தனேப்பெருங்காடரங்காவுடை
முத்தனேமுனேவெண்மதிசூடியை
த்தனேச்செம்பொனம்பலத்தண்ணின்ற
வத்தனேயடியேன்மறந்துய்வனே. (டு)

நீதியைநிறைவைமறைகள்சூட
னேதியையொருவர்க்குமறிவொணாச்
சோதியைச்சுடர்ச்செம்பொனினம்பலத்
தாதியையடியேன்மறந்துய்வனே. (சு)

மைகொள்கண்டனெண்டோளன்முக்கண்ணினன்
பைகொள்பாம்பரையார்த்தபரமனூர்
செய்யமாதுறைசிற்றம்பலத்தெங்க
ளேயனேயடியேன்மறந்துய்வனே. (எ)

மூழுதும்வானுலகத்தளதேவர்கள்
தொழுதுபோற்றியுந்தூயசெம்பொன்னினு
லெழுதிமேய்ந்தசிற்றம்பலக்கூத்தனே
யிழுதையேன்மறந்தெங்ஙனமுய்வனே. (அ)

காருலாமலர்க்கொன்றையந்தாரனே
வாருலாமுலேமங்கைமணளனேத்
தேருலாவியதில்லையுட்கூத்தனே
யாரிலாவமுதைமறந்துய்வனே. (கூ)

ஓங்குமால்வரையேந்தலுற்றரக்கிரம்
வீங்கிவிம்முறலுன்றியதாளினுன்
றேங்குநீர்வயல்சூழ்தில்லைக்கூத்தனேப்
பாங்கிலாத்தொண்டனேன்மறந்துய்வனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவரத்துறை–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கடவுளைக்கடலுள்ளெழுஞ்சுண்ட
வுடலுளாரையொப்பாரியலாதவெம்
மடலுளாரையரத்துறைமேவிய
சுடருளானைக்கண்டீர்காந்தொழுவதே. (க)

கரும்பொப்பானைக்கரும்பிளிற்கட்டியை
விரும்பொப்பானைவிண்ணோருமறிகிலா
வரும்பொப்பானையரத்துறைமேவிய
சுரும்பொப்பானைக்கண்டீர்காந்தொழுவதே. (உ)

ஏறெப்பாணெயெல்லாவுயிர்க்கும்பிறை
வேறெப்பாணெவிண்ணேறுமறிகிலா
வாறெப்பாணெயரத்துறைமேவிய
வூறெப்பாணெக்கண்டீர்நாந்தொழுவதே. (கூ)

பரப்பொப்பாணெப்பகலிருள்நன்னிலா
விரப்பொப்பாணெயிளமதிசூடிய
வரப்பொப்பாணெயரத்துறைமேவிய
சுரப்பொப்பாணெக்கண்டீர்நாந்தொழுவதே. (சு)

செய்யொப்பாணெசெய்யிற்சுடர்போல்வதோர்
மெய்யொப்பாணெவிண்ணேறுமறிகிலா
ரையொப்பாணெயரத்துறைமேவிய
கையொப்பாணெக்கண்டீர்நாந்தொழுவதே. (டு)

நிதியொப்பாணெநிதியிற்கிழவனெ
விதியொப்பாணெவிண்ணேறுமறிகிலா
ரதியொப்பாணெயரத்துறைமேவிய
கதியொப்பாணெக்கண்டீர்நாந்தொழுவதே. (சு)

புனலொப்பாணெப்பொருந்தலர்தம்மையே
மினலொப்பாணெவிண்ணேறுமறிகிலா
ரனலொப்பாணெயரத்துறைமேவிய
கனலொப்பாணெக்கண்டீர்நாந்தொழுவதே. (எ)

பொன்னெப்பாணெப்பொன்னிற்சுடர்போல்வதோர்
மின்னெப்பாணெவிண்ணேறுமறிகிலா
ரன்னெப்பாணெயரத்துறைமேவிய
தன்னெப்பாணெக்கண்டீர்நாந்தொழுவதே. (அ)

காழியாணெக்கனவிடையூருமெய்
வாழியாணெவல்லோருமென்றின்னவ
ராழியான்பிரமற்குமரத்துறை
யூழியாணெக்கண்டீர்நாந்தொழுவதே. (கூ)

கலையொப்பாணெக்கற்றூர்க்கோரமுதினெ
மலையொப்பாணெமணிமுடியூன்றிய
வலையொப்பாணெயரத்துறைமேவிய
நிலையொப்பாணெக்கண்டீர்நாந்தொழுவதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணுமலை-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வட்டணெமதிசூடியைவானவர்
சிட்டணெத்திருவண்ணுமலையணெ
யிட்டணெயிகழ்ந்தார்புரமூன்றையு
மட்டணெயடியேன்மறந்துய்வனெ. (க)

வானனே மதிசூடியமைத்தனைத்
தேனனைத்திருவண்ணமலையனை
யேனனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
வானனையடியேன்மறந்துய்வனே. (உ)

மத்தனை மதயானையுரித்தவெஞ்
சித்தனைத்திருவண்ணமலையனை
மூத்தனைமுனிந்தார்புரமூன்றெய்த
வத்தனையடியேன்மறந்துய்வனே. (ஊ)

காற்றனைக்கலக்கும்வினைபோயறத்
தேற்றனைத்திருவண்ணமலையனைக்
கூற்றனைக்கொடியார்புரமூன்றெய்த
வாற்றனையடியேன்மறந்துய்வனே. (எ)

மின்னனை வினைதீர்த்தெனையாட்கொண்ட
தென்னனைத்திருவண்ணமலையனை
யென்னனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
வன்னனையடியேன்மறந்துய்வனே. (ரு)

மன்றனை மதியாதவன்வேள்விமேற்
சென்றனைத்திருவண்ணமலையனை
வென்றனைவெகுண்டார்புரமூன்றையுங்
கொன்றனைக்கொடியேன்மறந்துய்வனே. (ஙு)

வீரனை விடமுண்டனை விண்ணவர்
தீரனைத்திருவண்ணமலையனை
பூசனையுணராதார்புரமூன்றெய்த
வாரனையடியேன்மறந்துய்வனே. (எ)

கருவினைக்கடல்வாய்விடமுண்டவெங்
திருவினைத்திருவண்ணமலையனை
யுருவினையுணராதார்புரமூன்றெய்த
வருவினையடியேன்மறந்துய்வனே. (அ)

அருத்தனையரவைக்தலைகாகத்தைத்
திருத்தனைத்திருவண்ணமலையனைக்
கருத்தனைக்கடியார்புரமூன்றெய்த
வருத்தனையடியேன்மறந்துய்வனே. (கூ)

அரக்கனையலறவ்விரலூன்றிய
திருத்தனைத்திருவண்ணமலையனை
யிரக்கமாயென்னுடலுமுகோய்கனைத்
தரக்கனைத்தொண்டனேன்மறந்துய்வனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணுமலை–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பட்டியேறுகந்தேதிப்பலவில
மிட்டமாகவிரந்துண்டுழிதரு
மட்டமூர்த்தியண்ணுமலைகைதொழக்
கெட்டுப்போம்வினைகேடில்லைகாண்மினே. (சு)

பெற்றமேறுவர்பெய்பலிக்கென்றவர்
சுற்றமாமிருதோல்குழலாளொடு
மற்றந்தீர்க்குமண்ணுமலைகைதொழ
நற்றவத்தொடுஞானத்திருப்பரே. (உ)

பல்லிலோடுகையேந்திப்பலவில
மொல்லைச்சென்றுணங்கல்கவ்வாரவ
ரல்லல்தீர்க்குமண்ணுமலைகைதொழ
நல்லவாயினநம்மையடையுமே. (ரு)

பாடிச்சென்றுபலிக்கென்றுநின்றவ
ரோடிப்போயினர்செய்வதொன்றென்கொலோ
வாடிப்பாடியண்ணுமலைகைதொழ
வோடிப்போகுநம்மேலைவினைகளே. (சு)

தேடிச்சென்றுதிருந்தடியேத்தமி
ஞடிவந்தவர்நம்மையுமாட்கொள்வ
ராடிப்பாடியண்ணுமலைகைதொழ
வோடிப்போநமதுள்ளவினைகளே. (நி)

கட்டியொக்குங்கரும்பினிடைத்துணி
வெட்டிவீணைகள்பாடும்விகிர்தனு
ரட்டமூர்த்தியண்ணுமலைமேவிய
நட்டமாடியைநண்ணுநன்காகுமே. (சு)

கோணிக்கொண்டையர்வேடமுன்கொண்டவர்
பாணிநட்டங்களாடும்பரமனு
ராணிப்பொன்னினண்ணுமலைகைதொழப்
பேணிநின்றபெருவினைபோகுமே. (எ)

கண்டுதான்கமுத்தான்காலனுருமிர்
பண்டுகால்கொடுபாய்ந்தபரமனு
ரண்டத்தோங்குமண்ணுமலைகைதொழ
விண்டுபோகுநம்மேலைவினைகளே. (அ)

முந்திச்சென்றமுப்போதும்வணங்குமின்
அந்திவாயெரியான்றனண்ணுமலை

சிந்தியாவெழுவார்வினை தீர்த்திடுங்
கந்தமாமலர்சூடுங்கருத்தனே. (சு)

மறையினனெடுமாலவன்காண்கிலா
நிறையும்நீர்மையுள்நின்றருள்செய்தல
னுறையுமாண்பினண்ணுமலைகைதொழப்
பறையுநாஞ்செய்தபாவங்களானவே. (கo)

திருச்சிற்றம்பலம்.

ஆஅ பதிகம்-டு.

திருவாரூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எப்போதும்மிறையும்மறவாதுநீர்
மூப்போதும்பிரமன்றெழுநின்றவன்
செப்போதும்பொனின்மேனிச்சிவனவ
னப்போதைக்கஞ்சலென்னுமாரூரனே. (க)

சடையின்மேலுமோர்தையலோர்தைவர
வடைகிலாவரவையரையார்த்தவர்
படையினேர்தடங்கண்ணுமைபாகமா
வடைவர்போலிடுகாடராரூரரே. (உ)

விண்டவெண்டலையேகலனாகவே
கொண்டகம்பலிதேருங்குழகனர்
தண்டவெண்பிறையைத்தவிரையவ
ரண்டவாணர்க்கருளுமாரூரரே. (ரு)

விடையுமேறுவர்வெண்டலையிற்பலி
கடைகடோறுந்திரியுமெங்கண்ணுத
லுடையுஞ்சீரையுறைவதுகாட்டிடை
யடைவர்போலரங்காகவாரூரரே. (சு)

தூணிக்கைவேழத்தரிபுடல்போர்த்தவர்
வீணிக்கையாளையோர்பாகமிழ்வெய்தித்
தேனிக்குந்திங்கட்சடையுட்டிசைமூழ்
தளக்குஞ்சிந்தையர்போலுமாரூரரே. (டு)

பண்ணினின்மொழியாளையோர்பாகமா
விண்ணினர்விளங்கும்மதிசூடியைச்
சுண்ணநீறுமெய்பூசிச்சுடலையில்
நண்ணியாடுவர்போலுமாரூரரே. (சு)

மட்டுவார்குழலாளொடுமல்விடை
யிட்டமாவுகந்தேறுமிறைவனர்

கட்டுவாங்கங்கனமழுமான்றனே
டட்டமாம்புயமாகுமாரூரரே. (எ)

தோய்ந்ததிங்கட்கமழ்சடையான்கன
லேந்தியெல்லியுளாடுமிறைவனர்
காய்ந்தகாமனைநோக்கினகண்ணினு
ராய்ந்தரன்மறையோதுமாரூரரே. (அ)

உண்டுநஞ்சுகண்டத்துளடக்கியங்
கிண்டைசெஞ்சடைவைத்தவியல்பினுன்
கொண்டகோவணவாடையன்கூரெரி
யண்டவாணரடையுமாரூரரே. (கூ)

மாலுநான்முகனும்மறிகிற்கிலார்
காலனுயவவனைக்கடந்திட்டுச்
சூலமான்மழுவேந்தியகையினு
ராலமுண்டழகாயவாரூரரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொக்கரைகுழல்வீணைகொடுகொட்டி
பக்கமேபகுவாயனபூதங்க
ளொக்கவாடலுகந்துடன்கூத்தரா
யக்கினேடரவார்ப்பராரூரரே. (சு)

எந்தமாதவஞ்செய்தனெஞ்சமே
பந்தம்வீடவையாயபராபர
னந்தமில்புகழாரூரரனெறி
சிந்தையுள்ளுஞ்சிரத்துளுந்தங்கவே. (உ)

வண்டுலாமலர்கொண்டுவளர்சடைக்
கிண்டைமாலிபுனைந்துமிராப்பகல்
தொண்டராகித்தொடர்ந்துவிடாதவர்க்
கண்டமாளவும்வைப்பராரூரரே. (கூ)

துன்பெலாமறநீங்கிச்சுவத்தரா
யென்பெலாநெக்கிரப்பகலேத்தினின்
றின்பராய்கினைந்தென்றுமிடையரு
வன்பராமவர்க்கன்பராரூரரே. (ச)

முருட்டுமெத்தையின்முன்கிடத்தாமுன
மரட்டரைவரையாசமுத்திட்டுநீர்
முரட்டடித்தவத்தக்கன்றன்வேள்வியை
யரட்டடக்கிதனூரடைமினே. (ஞ)

எம்மையாரில்லையானுமுளேனலே
னெம்மையாருமிதுசெயவல்லரே
யம்மையாரெனக்கென்றென்றரற்றினேற்
கம்மையாரைத்தந்தாராரையரே. (கூ)

தண்டவாளியைத்தக்கன்றன்வேள்வியைச்
செண்டதாடியதேவர்கண்டோக்
கண்டுகண்டிவள்காதலித்தன்பதாய்க்
கொண்டியாயினவாறென்றன்கோதையே. (எ)

இவணமைப்பலபேசத்தொடங்கினு
ளவணமென்றெனிலாரூரனெனும்
பவணிவீதிவிடங்கனீக்கண்டிவள்
தவணியாயினவாறென்றன்றையலே. (அ)

நீரைச்சுஞ்சடைவைத்தநிமலனார்
காரொத்தமிடற்றர்கனல்வாயரா
ஆரத்தருறையும்மணியாரூரைத்
தூரத்தேதொழுவார்வினைதூளியே. (கூ)

உள்ளமேயொன்றுமுரியுரைப்பனுன்
வெள்ளக்தாங்குவிரிசடைவேதிய
னள்ளல்நீர்வயலாரூரமர்ந்தவெம்
வள்ளல்சேவடிவாழ்த்திவணங்கிடே. (கூ)

விண்டமாமலர்மேலுறைவானெடுங்
கொண்டல்வண்ணனுங்கூடியறிகிலா
வண்டவாணன்றனூரடிதொழப்
பண்டைவல்வினைநில்லாபறையுமே. (கக)

மையுலாவியகண்டத்தனண்டத்தன்
கையுலாவியசூலத்தன்கண்ணுத
லையனூரடிதொழுவார்க்கெல்லா
முய்யலாமல்லலொன்றில்லைகாண்மினே. (கஉ)

திருச்சிற்றம்பலம்

திரு அன்னியூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பாறலைத்தபடுவெண்டலையின
னீறலைத்தசெம்மேனியனேரிழை
கூறலைத்தமெய்கோளரவாட்டிய
வாறலைத்தசடையன்னியூரரே. (க)

பண்டொத்தமொழியாளையோர்பாகமா
யிண்டைச்சென்சடையன்னிருள்சேர்ந்ததோர்

கண்டத்தன்கரியின்னுரிபோர்த்தவ
னண்டத்தப்புறத்தான்னியூரரே. (உ)

பரவிநாளும்பணிந்தவர்தம்வினை
தீரவையாகத்துடைப்பவர்தம்மிடங்
குரவநாறுங்குழலுமைகூறரா
யரவமாட்டுவர்போலன்னியூரரே. (ஊ)

வேதகீதர்விண்ணோர்க்குமுயர்ந்தவர்
சோதிவெண்பிறைதன்றுசடைக்கணி
நாதர்நீதியினுலடியார்தமக்
காதியாகின்றுரன்னியூரரே. (எ)

எம்பிரானிமையோர்கள்தமக்கெலா
மின்பராகியிருந்தவெம்மீசனூர்
தன்பவல்வினைபோகத்தொழுமவர்க்
கன்பராகின்றுரன்னியூரரே. (டு)

வெந்தநீறுமெய்பூசுநன்மேனியர்
கந்தமாமலர்சூடுங்கருத்தினர்
சிந்தையார்சிவனூர்செய்யதீவண்ண
ரந்தணாளர்கண்டீரன்னியூரரே. (ஈ)

ஊனையார்தலையிற்பலிகொண்டுழல்
வானவானவர்தாங்கள்வணங்கவே
தேனையார்குழலாளையோர்பாகமா
வானையீருரியாரன்னியூரரே. (எ)

காலைபோய்ப்பலிதேர்வர்கண்ணுர்நெற்றி
மேலைவானவர்வந்துவிரும்பிய
சோலைசூழ்புறங்காடரங்காகவே
யாலின்கீழறத்தாரன்னியூரரே. (அ)

எரிகொள்மேனியரென்பணிந்தின்பராய்த்
திரியுமூவெயில்தீயெழச்செற்றவர்
கரியமாலொடுநான்முகன்காண்பதற்
கரியராகின்றுரன்னியூரரே. (கூ)

வஞ்சரக்கன்கரமுஞ்சிரத்தொடு
மஞ்சுமஞ்சுமோராறுநான்கும்பிறப்
பஞ்சிமெல்விரலாலடர்த்தாயிழை
யஞ்சலஞ்சலென்றுரன்னியூரரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காடு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஓதமால்கடல்பாவியுலகெலா
மாதரார்வலங்கொண்மறைக்காடரைக்
காதல்செய்துகருதப்படுமவர்
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (க)

பூக்குந்தாழைபுறணியருகெலா
மாக்கந்தானுடைமாமறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரியாரடியார்தம்மை
நோக்கிக்காண்பதுதம்பணிசெய்யிலே. (உ)

புன்னைநாழல்புறணியருகெலா
மன்னினூர்வலங்கொண்மறைக்காடரோ
வன்னமென்னடையாளோர்பாகமாச்
சின்னவேடமுகப்பதுசெல்வமே. (கூ)

அட்டமாமலர்சூடியடம்பொடு
வட்டப்புன்சடைமாமறைக்காடரோ
நட்டமாடியுகான்மறைபாடியு
மிட்டமாகவிருக்குமிடமதே. (ச)

நெய்தலாம்பல்நிறைவயல்சூழ்தரு
மெய்யினூர்வலங்கொள்மறைக்காடரோ
தையல்பாகங்கொண்டிடர்கவர்புன்சடைப்
பைதல்வெண்பிறைப்பாம்புடன்வைப்பதே. (ஞ)

துஞ்சும்போதுந்துயிலின்றியேத்துவார்
வஞ்சின்றிவலங்கொள்மறைக்காடரோ
பஞ்சின்மெல்லடிப்பாவைபலிகொணர்ந்
தஞ்சிறிற்பதமைக்தலேநரகமே. (ஙு)

விண்ணுளார்விரும்பியெதிர்கொள்ளவே
மண்ணுளார்வணங்கும்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. (எ)

திருவினூர்செல்வமல்குவிழாவணி
மருவினூர்வலங்கொண்மறைக்காடரோ
வுருவினாலுமையாளோர்பாகமாய்
மருவினுய்கங்கையைச்சென்னிதன்னிலே. (அ)

சங்குவந்தலைக்குந்தடங்கானல்வாய்
வங்கமார்வலங்கொண்மறைக்காடரோ

கங்கைசெஞ்சடைவைப்ப துமன்றியே
யங்கையில்லனலேந்தலழகிதே. (கூ)

குறைக்காட்டான்விட்டகோகுத்தமாமலை
யிறைக்காட்டியெடுத்தான்றலையீரைந்து
மறைக்காட்டானிறையூன்றலும்வாய்விட்டா
னிறைக்காட்டாயெம்பிரானுனையேத்தவே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காடு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினுர்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினுலுமைக்காணக்கதவினீத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. (கூ)

ஈண்டுசெஞ்சடையாகத்தழலீசரோ
மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
வாண்டுகொண்டாரேயருள்செய்திடும்
நீண்டமாக்கதவின்வலிநீக்குமே. (உ)

அட்டமூர்த்தியதாகியவப்பரோ
தட்டர்வான்புரஞ்சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டியசென்னிப்பரமரோ
சட்டவிக்கதவந்திறப்பிம்மினே. (ரு)

அரியகான்மறையோதியநாவரோ
பெரியவான்புரஞ்சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவணவாடைவிருத்தரோ
பெரியவான்கதவம்பிரிவிக்கவே. (சு)

மலியில்வீடிருக்கும்மறைக்காடரோ
கலிகள்வந்திறைஞ்சுங்கழலேத்தரோ
வலியில்மாமணிவண்ணவுருவரோ
தொலிவிலாக்கதவந்துணைநீக்குமே. (டு)

பூக்குந்தாழைபுறணியருகெலா
மார்க்குந்தண்பொழில்சூழ்மறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரியோடிகேளுமை
நோக்கிக்காணக்கதவைத்திறவுமே. (சு)

வெந்தவெண்பொடிப்பூசும்விகிர்தரோ
வந்தமில்லியணிமறைக்காடரோ
எந்தைதீயடியார்வந்திறைஞ்சிட
விந்தமாக்கதவம்பிணிநீக்குமே. (எ)

ஆறுசூடுமணிமறைக்காடரோ
கூறுமாதமைக்கீர்தருமுகரோ
ஏறதேறியவெம்பெருமானிக்த
மாறிலாக்கதவம்வலிதீக்குமே. (அ)

சுண்ணவெண்பொடிப்பூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகக்தேறும்பரமரோ
வண்ணலாகியணிமறைக்காடரோ
திண்ணமாக்கதவந்திறப்பிம்மினே. (கூ)

அரக்கனேவிரலாலடர்த்திட்டநீ
ரிரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே. (கo)

திருச்சிற்றம்பலம்.
ஆ பதிகம்-கo.

திருமீயச்சூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தோற்றுங்கோயிலுந்தோன்றியகோயிலும்
வேற்றுக்கோயில்பலவுளமீயச்சூர்க்
கூற்றம்பாய்ந்தருளிர்புன்சடையரற்
கேற்றங்கோயில்கண்டீரிளங்கோயிலே. (க)

வந்தனையடைக்கும்மடித்தொண்டர்கள்
பந்தனைசெய்துபாவிக்கநின்றவன்
சிந்தனைதிருத்துந்திருமீயச்சூ
ரெந்தைமுடையாரிளங்கோயிலே. (உ)

பஞ்சமந்திரமோதும்பரமனு
ரஞ்சவாஞையுரித்தனலாடுவார்
நெஞ்சம்வாழுமினீனந்திருமீயச்சூ
ரெந்தைமுடையாரிளங்கோயிலே. (கூ)

நாறுமல்லிகைகூவிளஞ்செண்பகம்
வேறுவேறுவிரித்தசடையிடை
யாறுகொண்டுகந்தான்றிருமீயச்சூ
ரேறுகொண்டுகந்தாரிளங்கோயிலே. (ச)

வெவ்வவண்ணத்தநாகம்வெருவவே
கவ்வவண்ணக்கனல்விரித்தாடுவர்
செவ்வவண்ணந்திகழ்திருமீயச்சூ
ரெவ்வவண்ணப்பிரானிளங்கோயிலே. (ஙூ)

பொன்னங்கொன்றையும்பூவணிமாலையும்
பின்னுஞ்செஞ்சடைமேற்பிறைசூடிற்று

மின்னுமேகலையாளொடுமீயச்சூ
ரின்னநாளகலாரிளங்கோயிலே. (சு)

படைகொள்பூதத்தன்பைங்கொன்றைத்தாரினன்
சடைகொள்வெள்ளத்தன்சாந்தவெண்ணீற்றினன்
விடைகொளூர்தியினன்றிருமீயச்சூ
ரிடைகொண்டேத்தநின்றாரிளங்கோயிலே. (எ)

ஆறுகொண்டசடையினர்தாமுமோர்
வேறுகொண்டதோர்வேடத்தராகிலுங்
கூறுகொண்டுகந்தாளொடுமீயச்சூ
ரேறுகொண்டுகந்தாரிளங்கோயிலே. (அ)

வேதத்தானென்பர்வேள்வியுளானென்பர்
பூதத்தானென்பர்புண்ணியன்றன்னையே
சீதத்தான்மிளருந்திருமீயச்சூ
ரேதந்தீர்க்கநின்றாரிளங்கோயிலே. (கூ)

கடுக்கனேகயிலாயமலீதனே
யெடுக்கலுற்றவிராவணனீடற
விடுக்கணின்றிவெருண்டவன்மீயச்சூ
ரிடுக்கண்டீர்க்கநின்றாரிளங்கோயிலே. (சு)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கரைந்துகைதொழுவாரையுங்காதலன்
வரைந்தவைதெழுவாரையும்வாடல
னிரைந்தபாரிடத்தேதவர்நித்தலும்
விரைந்துபோவது வீழிமிழலைக்கே. (க)

ஏற்றுவெல்கொடியீசன்றனதிரை
நாற்றஞ்சூடுவர்நன்னுதற்கிங்களார்
நீற்றுச்சந்தனவெள்ளெலும்பரவலார்
வேற்றுக்கோலங்கொள்வீழிமிழலையே. (உ)

பூணைபொற்சுலத்தன்போர்விடையூர்தியான்
வீணைவெனகத்தன்வெண்மழுவாளினன்
நீணெயின்றவனீசனேயெனு
மீனெயிலார்தொழும்வீழிமிழலையே. (கூ)

மாடத்தாமனத்துடன்வைத்தவர்
கோடத்தார்குருக்கேத்திரத்தார்பலர்
பாடத்தார்பழிப்பார்பழிப்பல்லதோர்
வேடத்தார்தொழும்வீழிமிழலையே. (ச)

எடுத்தவெல்கொடியேறுடையான்நம
ருடுப்பர்கோவணமுண்பதுபிச்சையே
கெடுப்பதாவதுதீவினைன்றவல்வினை
விடுத்துப்போவதுவீழிமிழலையே. (நி)

குழலியாழ்மொழியாரிசைவேட்கையா
லுழலியாக்கையைபூணுமுணர்விலீர்
தழலிநீர்மடிக்கொள்ளன்மின்சாற்றினே
மிழலையானடிசார்வின்னுள்வதே. (சு)

தீரன்மீத்திரளன்சடைத்தங்கிய
நீரனுடியநீற்றன்வண்டார்கொன்றைத்
தாரன்மாலையன்றண்ணறுங்கண்ணியன்
வீரன்வீழிமிழலைவிகிர்தனே. (எ)

எரியினிறையாரிடுகோட்டிடை
கரியினுர்பிரியாமகிழ்கின்றதோர்
எரியினுர்தம்பிறப்பொடுசாதலை
விரியினுர்தொழுவீழிமிழலையே. (அ)

நீண்டசூழ்சடைமேலோர்நிலாமதி
காண்டுசேவடிமேலோர்கனைகழல்
வேண்டுவாரவர்வீதிபுகுந்திலர்
மீண்டும்போவதுவீழிமிழலைக்கே. (சு)

பாலியாழொடுசெல்வமழிபண்கொள
மாலிவானவர்வந்தவழிபடு
மாலியாரமலந்தனராகுதி
வேலியார்தொழும்வீழிமிழலையே. (கo)

மழலையேற்றுமணுளன்நிருமலை
சுழலவார்த்தெடுத்தான்முடிதோளிறக்
கழல்கொள்காலிற்றிருவிரலூன்றது
மிழலையானடிவாழ்கெனவிட்டதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

என்பொனேயிமையோர்தொழுபைங்கழல்
நன்பொனேநலந்தீங்கறிவொன்றிலேன்
செம்பொனேதிருவீழிமிழலையு
ளன்பனேயடியேனேக்குறிக்கொளே. (க)

கண்ணினற்களிசூரக்கையாற்றொழு
தெண்ணுமாறறியாதிலேப்பேன்றனை
விண்ணுளார்தொழும்வீழிமிழலையு
ளண்ணலேயடியேனைக்குறிக்கொளே. (உ)

ஞாலமேவிசும்பேநலந்தீமையே
காலமேகருதேகருத்தாற்றொழுஞ்
சீலமேதிருவீழிமிழலையுட்
கோலமேயடியேனைக்குறிக்கொளே. (கூ)

முத்தனேமுதல்வாமுகிழும்முனே
யொத்தனேயொருவாவுருவாகிய
சித்தனேதிருவீழிமிழலையு
ளத்தனேயடியேனைக்குறிக்கொளே. (ச)

கருவனேகருவாய்த்தெளிவார்க்கெலா
மொருவனேயுயிர்ப்பாயுணர்வாய்நின்ற
திருவனேதிருவீழிமிழலையுட்
குருவனேயடியேனைக்குறிக்கொளே. (ஙி)

காத்தனேபொழிலேழையுங்காதலா
லாத்தனேயமர்க்கயன்றன்றலை
சேர்த்தனேதிருவீழிமிழலையுட்
கூத்தனேயடியேனைக்குறிக்கொளே. (சு)

நீதிவானவர்நித்தல்நியமஞ்செய்
தோதிவானவரும்முணராததோர்
வேதியாவிர்தாதிருவீழியு
ளாதியேயடியேனைக்குறிக்கொளே. (எ)

பழகுகின்னடிசூடியபாலனைக்
கழகுகின்மேல்வைத்தகாலனைச்சாடிய
வழகனேயணிவீழிமிழலையுட்
குழகனேயடியேனைக்குறிக்கொளே. (அ)

அண்டவானவர்கூடிக்கடைந்தஞ்
சுண்டவானவனேயுணர்வொன்றிலேன்
விண்டவான்பொழில்வீழிமிழலையுட்
கொண்டனேயடியேனைக்குறிக்கொளே. (கூ)

ஒருத்தனேங்கலேத்தாங்கலும்பற்றுமம்
வருத்தினேய்மஞ்சனேன்மனமன்னிய
திருத்தனேதிருவீழிமிழலையு
ளருத்தனேயடியேனைக்குறிக்கொளே. (கஂ)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருது-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பாசமொன்றிலராய்ப்பலபத்தர்கள்
வாசநாண்மலர்கொண்டடிவைகலு
மீசனெம்பெருமானிடைமருதினிற்
பூசகாம்புகுதும்புனலாடவே. (க)

மறையினண்மலர்கொண்டடிவானவர்
முறையினன்முனிகள்வழிபாடுசெ
யிறைவனெம்பெருமானிடைமருதினி
லுறையுமீசனையுள்குமெனுள்ளமே. (உ)

தொன்றைமாலையுங்கூவிளமத்தமுஞ்
சென்றுசேரத்திகழ்ந்தடைவைத்தவ
னென்றுமென்றைபிரானிடைமருதினை
நன்றுகைதொழுவார்வினை நாசமே. (கூ)

இம்மைவானவர்செல்வம்மிகைத்திடு
மம்மையேற்பிறவித்துயர்தீர்த்திடு
மெம்மையாளுமிடைமருதன்கழல்
செம்மையேதொழுவார்வினைசிக்குமே. (ச)

வண்டணிந்தனவன்னியுங்கொன்றையுங்
கொண்டணிந்தசடைமுடிக்கூத்தனு
ரெண்டிசைக்குமிடைமருதாவென
விண்டுபோயறுமேலவினைகளே. (ஞ)

ஏறுதேறுமிடைமருதீசனை
கூறுவார்வினைதீர்க்குங்குழகனை
ராறுசெஞ்சடைவைத்தவழகனைக்
கூறியூறியுருகுமென்னுள்ளமே. (ரு)

விண்ணுளாரும்விரும்பப்படுபவர்
மண்ணுளாருமிகைக்கப்படுபவ
ரெண்ணினுஞ்பொழில்சூழிடைமருதினை
நண்ணினாரைநண்ணுவினைநாசமே. (எ)

வெந்தவெண்பொடிப்பூசும்விகிர்தனர்
கந்தமாலைகள்சூடுங்கருத்தனு
ரெந்தையென்னிடைமருதினிலீசனைச்
சிந்தையால்நினைவார்வினைதேயுமே. (அ)

வேதமோதும்விரிசடையண்ணலார்
பூதம்பாடலின்றும்பும்புனிதனு
ரேதந்தீர்க்குமிடைமருதாவென்று
பாதமேத்தப்பறையுகம்பாவமே. (ஈ)

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைகல்லாரினுங்
தனிமுடிகவித்தாளுமரசினு
மினியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. (க0)

முற்றிலாமதிசூடுமுதல்வனு
மொற்றினர்மலையாரக்கன்முடி
யெற்றினுர்கொடியாரிடைமருதினைப்
பற்றினரைப்பற்றுவினை பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருது-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பறையினேசையும்பாடலினேசையு
மறையினேசையும்வைகும்வயலொ
மிறைவனெங்கள்பிரானிடைமருதினி
லுறையுமீசனேயுள்குமென்னுள்ளமே. (க)

மனத்துண்மாயனேமாசறுசோதியைப்
புனிற்றுப்பிள்ளோவெள்ளேம்மதிருடியை
யெனக்குத்தாயையெம்மானிடைமருதினி
னினைத்திட்டிறிகிறைந்தவதென்னுள்ளமே. (உ)

வண்டணிந்தனவன்னியுமத்தமுங்
கொண்டணிந்தசடைமுடிக்கூத்தனே
யெண்டிசைக்குமிடைமருதாவென
விண்டுபோயறுமேலிவினகளே. (ங)

தூணியிலாமையிற்றூங்கிருட்பேய்களோ
டணையலாவதெமக்கரிதேயென
வினியிலாவிடைமாமருதில்லெழு
பணியிலாகமஞ்சொல்லுந்தன்பாங்கிக்கே. (ச)

மண்ணியுண்டமால்காணுன்மலரடி
விண்ணிவிண்டயன்காணுன்வியன்முடி
மொண்ணுமாமருதாவென்றென்மொய்குழல்
பண்ணியாயமுந்தானும்பயிலுமே. (ஞ)

மங்கைகாணக்கொடார்மணமாலையைக்
கங்கைகாணக்கொடார்முடிக்கண்ணியை
நங்கைமீரிடைமருதிற்நங்கைக்கே
எங்குவாங்கிக்கொடுத்தாரிதழியே. (ரு, எ, அ, சு, க0, கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ. பதிகம்-கஇ.

திருப்பேரெயில்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மறையுமோ துவர்மான் மறிக்கையினர்
கறைகொள்கண்டமுடையகபாலியார்
துறையும்போகுவர் தூயவெண்ணீற்றினர்
பிறையுஞ்சூடுவர்பேரெயிலாளரே. (க)

கணக்கிலாரையுங்கற் றுவல்லாரையும்
வணக்கிலாகெறிகண்டுகொண்டாரையுந்
தணக்குவார் தணிப்பாரெப்பொருளையும்
பிணக்குவாரவர்பேரெயிலாளரே. (உ)

சொரிவிப்பார்மழைசூழ்கதிர்த்திங்களை
விரிவிப்பர்வெயிற்பட்டவிளங்கொளி
யெரிவிப்பார் தணிப்பாரெப்பொருளையும்
பிரிவிப்பாரவர்பேரெயிலாளரே. (ங)

செறுவிப்பார்சிலையால்மதில்தீர்த்தங்க
ளுறுவிப்பார்பலபத்தர்களுள்ளினை
யறுவிப்பாரதுவன்றியுகல்வினை
பெறுவிப்பாரவர்பேரெயிலாளரே. (ச)

மற்றையாரறியார்மழுவாளினர்
பற்றியாட்டியோரைந்தலைப்பாம்பரை
சுற்றியாரவர் தூநெறியால்மிகு
பெற்றியாரவர்பேரெயிலாளரே. (ஞ)

திருக்குவார்குழற்செல்வனசேவடி
யிருக்குவாய்மொழியாற்றினையேத்துவார்
சுருக்குவார் துயர்தோற்றங்களாற்றறப்
பெருக்குவாரவர்பேரெயிலாளரே. (ட)

முன்னையார்மயிலூர்திமுருகவேள்
தன்னையாரெனிற்றருளுந்தலைமக
னென்னையாளுமிறையவனெம்பிரான்
பின்னையாரவர்பேரெயிலாளரே. (ண)

உழைத்துக்துள்ளியுமுள்ளத்துளேயுரு
விழைத்தமெந்தைபிரானென்றிராப்பக
லழைக்குமன்பினராயவடியவர்
பிழைப்புநீக்குவர்பேரெயிலாளரே. (அ)

நீருலாநிமிர்புன்சடையாவெனு
வேருலாவனங்கன்றிறல்வாட்டிய

வாருலாவனமென்முலையாளொடும்
பேருலாரவர்பேரெயிலாளரே. (கூ)

பாணியார்படுதம்பெயர்ந்தாடுவர்
தூணியார்விசயற்கருள்செய்தவர்
மாணியாய்மண்ணளந்தவனுன்முகன்
பேணியாரவர்பேரெயிலாளரே. (கo)

மதத்தவாளரக்கன்மணிப்புட்பகஞ்
சிதைக்கவேதிருமாமலைக்கீழ்ப்புக்குப்
பதைத்தங்கார்த்தெடுத்தான்பத்துநீண்முடி
பிதக்கவூன்றிப்பேரெயிலாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முத்தினீப்பவளத்தைமுனைத்தவெள்
தொத்தினீச்சுடரைச்சுடர்போலொளிப்
பித்தினீக்கொலுகஞ்சினீவானவர்
நித்தனெருநற்கண்டவெண்ணியே. (க)

வெண்ணித்தொன்னகர்மேயவெண்டிங்களார்
கண்ணித்தொத்தசடையர்கபாலியார
ரெண்ணித்தம்மைநினைந்திருந்தேனுக்கு
நண்ணித்திட்டமுதூறுமென்னுவக்கே. (உ)

காற்றினீக்கனலீக்கதிர்மாமணி
நீற்றினீநினீப்பர்வினீநீக்கிடுங்
கூற்றினீயுதைத்திட்டகுணமுடை
வீற்றினெருநற்கண்டவெண்ணியே. (ஙூ)

நல்லனீத்திகழ்நான்மறையோதியைச்
சொல்லனீச்சுடரைச்சுடர்போலொளிர்
கல்லனீக்கடிமாமதின்மூன்றெய்த
வில்லனெருநற்கண்டவெண்ணியே. (ச)

சுடரைப்போலொளிர்சுண்ணவெண்ணீற்றனை
யடருஞ்சென்னியில்வைத்தவமுதினைப்
படருஞ்செஞ்சடைப்பான்மதிசூடியை
யிடரைநீக்கியையான்கண்டவெண்ணியே. (ஞ)

பூதநாதனைப்பூம்புகலூரனைத்
தாதெனைத்தவழும்மதிசூடியை
நாதனீநல்லநான்மறையோதியை
வேதனெருநற்கண்டவெண்ணியே. (சு)

ஒருத்தியையொருபாகத்தடக்கியும்
பொருத்தியபுனிதன்புரிபுன்சடைக்
கருத்தனைக்கறைக்கண்டனைக்கண்ணுதல்
நிருத்தனைநெருநற்கண்டவெண்ணியே. (எ)

சடையனைச்சரிகோவணவாடைகொண்
டுடையனையுணர்வார்வினைதீர்த்திடும்
படையனைமழுவாளொடுபாய்தரும்
விடையனைநெருநற்கண்டவெண்ணியே. (அ)

பொருப்பனைப்புனலாளொடுபுன்சடை
யருப்பனையிளந்திங்களங்கண்ணியான்
பருப்பதம்பரவித்தொழுந்தொண்டர்கள்
விருப்பனைநெருநற்கண்டவெண்ணியே. (கூ)

சூலவஞ்சனவல்லவெஞ்சுந்தரன்
கோலமாவருள்செய்ததோர்கொள்கையான்
காலனஞ்சவுதைத்திருள்கண்டமாம்
வேலைநஞ்சமக்கண்டதுவெண்ணியே. (கo)

இலையினார்கொன்றைசூடியவிசனர்
மலையினாரைக்கன்றிறல்வாட்டினர்
நிலையினல்மதிலெய்தவன்வெண்ணியைத்
தலையினற்றொழுவார்வினைதானுமே. (கச)

நாடுதங்கியநாரையூரானடம்
ஆடுபைங்கழலம்மவழகிதே. (கூ)

கொக்கின்றாவலுங்கூவிளங்கண்ணியும்
மிக்கவெண்டலைமாலைவிரிசடை
நக்கனெங்குநாரையூர்நம்பனுக்
கக்கினரமும்மம்மவழகிதே. (சு)

வடிகொள்வெண்மழுமானமர்கைகளும்
பொடிகொள்செம்பவளம்புரைமேனியும்
கடிகொள்நன்மயில்சேர்திருநாரையூர்
அடிகடம்வடிவம்மவழகிதே. (டு)

சூலமல்கியகையுஞ்சுடரொடு
பாலுநெய்தயிராடியபான்மையும்
ஞாலமல்கியநாரையூர்நம்பனுக்
காலநீழலுமம்மவழகிதே. (சு)

பண்ணினுன்மறைபாடலோடாடலும்
எண்ணினுர்புரமூன்றெரிசெய்ததும்
நண்ணினுர்துயர்தீர்த்தனுநாரையூர்
அண்ணலார்செய்கையம்மவழகிதே. (எ)

என்புபூண்டெருதேறியிளம்பிறை
மின்புரிந்தசடைமேல்விளக்கவே
நன்பகற்பலிதேரிலுநாரையூர்
அன்பனுக்கதுவம்மவழகிதே. (அ)

மூரலுங்கின்னரமொன்றைமுழக்கவே
யிரவில்கின்றெரியாடலுமீவொ
னரலும்வாரிநன்னுரையூர்நம்பனுக்
கரவும்பூணுதலம்மவழகிதே. (கூ)

கடுக்கையுஞ்சடையன்கயிலம்மலே
யெடுத்தவாளரக்கன்றலையிரைஞ்சுஞ்
நடுக்கம்வந்திறநாரையூரான்விரல்
அடுத்ததன்மையுமம்மவழகிதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சவுந்தரேசுவரர், தேவியார்-திரிபுரசுந்தராயகி.

ஆக பதிகம்-இரு.

திருக்கோளிலி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மைக்கொள்கண் ணுமைபங்கினன்மான்மழு
தொக்கதையினன்செய்யதோர்சோதியன்
கொக்கமர்பொழில்சூழ்தருகோளிலி
நக்கனத்தொழநம்வினைநாசமே. (க)

மூத்தினீமுதலாகியமூர்த்தியை
வித்தினீவிளைவாயவிகிர்தனைக்
கொத்தலர்பொழில்சூழ்தருகோளிலி
யத்தனைத்தொழநீங்குநம்மல்லலே. (உ)

வெண்டிரைப்பரவைவிடமுண்டதோர்
கண்டனைக்கலந்தார்தமக்கன்பனைக்
கொண்டலம்பொழிற்கோளிலிமேவிய
அண்டனைத்தொழுவார்க்கல்லலில்லையே. (ங)

பலவும்வல்வினைபாயும்பரிசினுல்
உலவுங்கங்கையுந்திங்களுமொன்சடை
குலவினுன்குளிரும்பொழிற்கோளிலி
நிலவினுன்றனைநித்தல்நினையினே. (ச)

அல்லலாயின தீருமழகிய
முல்லைவெண்முறுவல்லுமையஞ்சவே
கொல்லையானையுரித்தவன்கோளிலிச்
செல்வன்சேவடிசென்றுதொழுமினே. (ஞ)

ஆவின்பால்கண்டளவிலருந்தவம்
பாலன்வேண்டலுஞ்செல்லென்றுபாற்கடல்
கூவினுன்குளிரும்பொழிற்கோளிலி
மேவினனைத்தொழவினைவீடுமே. (ரு)

சீர்த்தநன்மனையாளுஞ்சிறுவரும்
ஆர்த்தசுற்றமும்பற்றிலையாதலாற்
கூத்தனுருறையுங்கிருக்கோளிலி
யேத்திநீர்தொழுமின்னிடர்தீருமே. (எ)

மாலதாகிமயங்குமனிதர்காள்
காலம்வந்துகடைமுடியாமுனங்
கோலவார்பொழிற்கோளிலிமேவிய
நீலகண்டனைநின்றுநினையினே. (அ)

கேடுமூடிக்கிடந்தண்ணுகாட்டது
தேடிநீர்திரியாதேசிவகதி

கூடலாந் திருக்கோளிலியீசனைப்
பாடுமின்னிரவோடுபகலுமே. (கூ)

மடித்தமாமலையேக்தலுற்றுனை
யடர்த்தப்பின்னுமிரங்கியவற்கருள்
கொடுத்தவன்னுறைகோளிலியேதொழ
விடுத்தநீங்கிடுமேலவினைகளே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோளிலிநாதர், தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

திருக்கோளிலி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முன்னமேநினையாதொழுக்தனுனை
யின்னநானினசேவடியேத்திலேன்
செந்நெலார்வயல்சூழ்திருக்கோளிலி
மன்னனேயடியேனை மறவலே. (க)

விண்ணுளார்தொழுதேத்தும்விளக்கினை
மண்ணுளார்வினை தீர்க்குமருந்தினைப்
பண்ணுளார்பயிலுந்திருக்கோளிலி
யண்ணலாரடியேதொழுதய்ம்மினே. (உ)

நாளுநம்முடைநாள்களறிலோம்
ஆளுநோய்களோரைம்பதோடாறெட்டும்
ஏழைமைப்பட்டிருந்துநீரையாதே
கோளிலியரன்பாதமேகூறுமே. (கூ)

விழவினைசையொலியருத்தண்பொழில்
பழகினர்வினை தீர்க்கும்பழம்பதி
யழல்கையானமருந்திருக்கோளிலிக்
குழகனர்திருப்பாதமேகூறுமே. (ச)

மூலமாகியமூவர்க்குமூர்த்தியைக்
காலனுகியகாலற்குங்காலனைக்
கோலமாம்பொழில்சூழ்திருக்கோளிலிச்
சூலபாணிதன்பாதந்தொழுமினே. (ஞ)

காற்றனைக்கடனஞ்சமுதுண்டவெண்
ணீற்றனைநிமிர்புன்சடையண்ணலை
யாற்றனையமருந்திருக்கோளிலி
யேற்றனைநடியேதொழுதேத்துமே. (சு)

வேதமாயவிண்ணேர்கள்தலைவனை
யோதமன்னுயிரேத்துமொருவனைக்

கோதிவண்டறையுங்திருக்கோளிலிச்
சூலபாணிதன்பாதந்தொழுமினே. (எ)

நீதியாற்றெழுவார்கள்தலைவனை
வாதையானவிடுக்குமணியினைக்
கோதிவண்டறையுந்திருக்கோளிலி
வேதநாயகன்பாதம்விரும்புமே. (அ)

மாலுநான்முகனுமறிவொணாப்
பாலின்மென்மொழிபாலொருபங்கனைக்
கோலமாம்பொழில்சூழ்திருக்கோளிலி
நீலகண்டனைநித்தல்நினைமினே. (கூ)

அரக்கனையவிலங்கையர்மன்னனை
நெருக்கியம்முடிபத்திறுத்தானவற்
கிரக்கமாகியவன்றிருக்கோளிலி
யருத்தியாயடியேதொழுதுய்ம்மினே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவாறைவடதளி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தலையெலாம்பறிக்குஞ்சமண்கையருள்
நிலையினுல்மறைத்தால்மறைக்கொண்ணுமே
யலையினார்பொழிலாறைவடதளி
நிலையினைடியேநினைந்துய்ம்மினே. (க)

மூக்கினுல்முரன்றேதியக்குண்டிகை
தூக்கினார்குலந்தூறுத்தேதனக்
காக்கினனியாறைவடதளி
நோக்கினார்க்கில்லையாலருநோய்களே. (உ)

குண்டரைக்குணமில்லாரைக்கூறையில்
மிண்டரைத்துரந்தவிமலன்றினை
யண்டரைப்பழையாறைவடதளிக்
கண்டரைத்தொழுதுய்ந்தனகைகளே. (ங)

மூடையரைத்தலைமுண்டிக்குமொட்டரைக்
கடையரைக்கடிந்தார்கனல்வெண்மழுப்
படையரைப்பழையாறைவடதளி
யுடையரைக்குளிர்ந்துள்ளுமென்னுள்ளமே. (ச)

ஒள்ளரிக்கணர்முன் * னமணினின்றுணுங்
கள்ளரைக்கடிந்த † கருப்பூறலே

---

* அமண் நின்று உணும் என்பது-நிருவாணமாக நின்று உண்ணுதல்.
† கருப்பு ஊறல் என்பது-கரும்புரசம். கருப்பு-வலித்தல் விகாரம்.

யள்ளலம்புனலாறைவடதளி
வள்ளலீப்புகழத்துயர்வாடுமே. (நி)

நீதியைக்கெடின்றமணேயுணுஞ்
சாதியைக்கெடுமாசெய்தசங்கரன்
ஆதியைப்பழையாறைவடதளிச்
சோதியைத்தொழுவார் துயர்தீருமே. (சு)

திரட்டிரைக்கவளந்திணிக்குஞ்சமண்
பிரட்டரைப்பிரித்தபெருமான்றனை
யருட்டிறத்தணியாறைவடதளித்
தெருட்டரைத்தொழுதீவினைதீருமே. (எ)

ஒதினத்தெழுத்தஞ்சுணராச்சமண்
* வேதினைப்படுத்தானெவக்கூற்றுதை
பாதனைப்பழையாறைவடதளி
நாதனைத்தொழநம்வினைநாசமே. (அ)

வாயிருந்தமிழேபடித்தாளுரு
ஆயிரஞ்சமணும்மழிவாக்கினன்
பாயிரும்புனலாறைவடதளி
மேயவன்னெனவல்வினைவீடுமே. (கூ)

செருத்தனைச்செயுஞ்சேணரக்கன்னுடல்
எருத்திறவிரலாலிறைபூன்றிய
அருத்தனைப்பழையாறைவடதளித்
திருத்தனைத்தொழுவார்வினைதேயுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சோமேசுவரர், தேவியார்-சோமகலாநாயகியம்மை.

திருமாற்பேறு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பொருமாற்றிண்படைவேண்டிநற்பூம்புனல்
வருமாற்றின்மலர்கொண்டுவழிபடுங்
கருமாற்கின்னருள்செய்தவன்காண்டகு
திருமாற்பேறுதொழினேதேயுமே. (க)

ஆலத்தார்நிழலில்லறநால்வர்க்குக்
கோலத்தாலுரைசெய்தவன்குற்றமில்
மாலுக்காருருச்செய்தவன்மாற்பேறு
ஏலத்தான்றெழுவார்க்கிடரில்லையே. (உ)

* வேது என்பது-வெப்பம்.

துணிவண்ணச்சுடராழிகொள்வானெண்ணி
யணிவண்ணத்தலர்கொண்டடியர்ச்சித்த
மணிவண்ணற்கருள்செய்தவன்மாற்பேறு
பணிவண்ணத்தவர்க்கில்லையாம்பாவமே. (கூ)

தீதவைசெய் துதீவினீழாதே
காதல்செய்தகருத்தினில்நின்றவன்
மாதவர்பயில்மாற்பேறுகைதொழப்
போதுமின்னினீயினபோகுமே. (சு)

வார்கொள்மென்முலைமங்கையோர்பங்கினன்
வார்கொணன்முரசம்மறையவ்வறை
வார்கொள்பைம்பொழில்மாற்பேறுகைதொழு
வார்கள்மன்னுவர்பொன்னுலகத்திலே. (ரி)

பண்டைவல்வினை பற்றறுக்கும்வகை
யுண்டுசொல்லுவன்கேண்மினெளிகினிர்
வண்டுசேர்பொழில்சூழ்தருமாற்பேறு
கண்டுகைதொழத்தீருங்கவலையே. (சு)

மழுவலான்றிருகாமமகிழ்ந்துரைத்
தழுவலார்களுக்கன்புசெய்தின்பொடும்
வழுவிலாவருள்செய்தவன்மாற்பேறு
தொழுவலார்தமக்கில்லைத்துயரமே. (எ)

முன்னவனுலகுக்குமுழுமணிப்
பொன்னவன்றிகழ்முத்தொடுபோகமாம்
மன்னவன்றிருமாற்பேறுகைதொழும்
அன்னவரெமையாளுடையார்களே. (அ)

வேடனுய்விசயன்னெடுமெய்துவெங்
காடுநீடுகந்தாடியகண்ணுதல்
மாடமேயருந்திருமாற்பேறு
பாடுவார்பெறுவார்பரலோகமே. (சு)

கருத்தனுய்க்கயிலாயமலைதனைத்
தருக்கினலெடுத்தானைத்தகரவே
வருத்தியாரருள்செய்தவன்மாற்பேறு
அருத்தியாற்றொழுவார்க்கில்லையல்லலே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்—மால்வணங்குமீசர், தேவியார்-கருணாயகியம்மை.

ஆறாம் பதிகம்-க0.

திருமாற்பேறு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஏதமொன்றுமறிவிலராயினும்
ஓதியஞ்செழுத்தும்முணர்வார்கட்குப்
பேதமின்றியவரவருள்ளத்தே
மாதுந்தாமுமகிழ்வர்மாற்பேறரே. (க)

அச்சமில்லைகெஞ்சேயரனுமங்கள்
நிச்சலுங்கினையாய்வினைபோயறக்
கச்சமாவிடமுண்டகண்டாவென
வைச்சமாநிதியாவர்மாற்பேறரே. (உ)

சாத்திரம்பலபேசுஞ்சமக்காள்
கோத்திரமுங்குலமுங்கொண்டென்செய்வீர்
பாத்திரஞ்சிவமென்றபணிதிரேல
மாத்திரைக்குள்ளருளுமாற்பேறரே. (ங)

இருந்துசொல்லுவன்கேண்மின்களேழைகாள்
அருந்தவத்தருமஞ்செழுத்தோதினற்
பொருந்துநோய்பிணிபோகத்தரப்படுதோர்
மருந்துமாகுவர்மன்னுமரற்பேறரே. (ச)

சாற்றிச்சொல்லுவன்கேண்மின்றரணியீர்
ஏற்றின்மேல்வருவான்கழலேத்தினற்
கூற்றைநீக்கிக்குறைவறுத்தாள்வதோர்
மாற்றிலாச்செம்பொனுவர்மாற்பேறரே. (ஞ)

ஈட்டுமாநிதிசாலவிழக்கிலும்
வீட்டுங்காலன்விரையவழைக்கிலுங்
காட்டின்மாநடமாடுவாய்காவெனில்
வாட்டந்தீர்க்கவும்வல்லர்மாற்பேறரே. (ரு)

ஐயனேயரனேயென்றரற்றினல்
உய்யலாமுலகத்தவர்பேணுவர்
செய்யபாதமிரண்டுநினையவே
வையமாளவும்வைப்பர்மாற்பேறரே. (எ, அ, கூ)

உந்திச்சென்றுமலையெடுத்தவன்
சந்துதோளொடுதாளிறவூன்றினன்
மந்திபாய்பொழில்சூழுமாற்பேறென
அந்தமில்லதோரின்பமணுகுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முத்தூரும்புனல்மொய்யரிசிற்கரைப்
புத்தூரான்னடிபோற்றியென்பாரெலாம்
பொய்த்தூரும்புலனைந்தெடுப்புல்லிய
மைத்தூரும்வினைமாற்றவும்வல்லரே. (க)

பிறைக்கணிச்சடையெம்பெருமானென்று
கறைக்கணித்தவர்கண்டவணக்கத்தா
லுறக்கணித்தருகாமனைத்தார்களைப்
புறக்கணித்திடும்புத்தூர்ப்புனிதரே. (உ)

அரிசிலின்கரைமேலணியார்தரு
புரிசைசூழ்திருப்புத்தூர்ப்புனிதனைப்
பரிசொடும்பரவிப்பணிவார்க்கெலாம்
துரிசில்லைநன்னெறிதோன்றிடுங்காண்மினே. (ங)

வேதனம்மிகுவீணையில்மேவிய
கீதனக்கினருள்சுரந்தகொன்றையம்
போதனம்புனல்சூழ்ந்தபுத்தூரனை
நாதனைநினைந்தென்மனமையுமே. (ச)

அருப்புப்போன்முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சேர்ந்திலைவிட்டுகல்லிட்டமாய்த்
திருப்புத்தூரனைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றினுமண்ணிக்குங்காண்மினே. (ஞ)

பாம்பொடுமதியும்படர்புன்சடைப்
பூம்புனலும்பொதிந்தபுத்தூருளான்
நாம்பணிந்தடிபோற்றிடநாடொறும்
சாம்பலென்புதமக்கணிவாருமே. (சு)

கனலங்கைதனிலேந்திவெங்காட்டிடை
யனலங்கெய்திநின்றுடுவர்பாடுவர்
பினலஞ்செஞ்சடைமேன்மிலையந்தரு
புனலுஞ்சூடுவர்போலும்புத்தூரரே. (எ)

காற்றினுங்கடிதாகிநடப்பதோர்
ஏற்றினும்மிசைசென்றதுமலரென்பொடு
நீற்றினியணிவார்தினைவாய்த்தமைப்
போற்றியென்பவர்க்கன்பர்புத்தூரரே. (அ)

முன்னுமூப்புரஞ்செற்றனாயினும்
அன்னமொப்பரால்வந்தடைந்தார்க்கெலா

மின்னுமொப்பர்விரிசடைமேனிசெம்
பொன்னுமொப்பர்புத்தூரெம்புனிதரே. (சு)
செருத்தனற்றனதேர்செலவுய்த்திடுங்
கருத்தனுய்க்கயிலேயெடுத்தானுடல்
பருத்ததோள்கெடப்பாதத்தொருவிரல்
பொருத்தினார்பொழிலார்ந்தபுத்தூரரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-படிக்காசுவைத்தநாதர், தேவியார்-அழகம்மை.

கடுவாய்க்கரைத்திருப்புத்தூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒருத்தனை மூவுலகொடுதேவர்க்கு
மருத்தனையடியேன்மனத்துள்ளமாக்
கருத்தனைக் * கடுவாய்ப்புனலாடிய
திருத்தனைப்புத்தூர்ச்சென்றுகண்டுய்ந்தேனே. (க)

யாவருமறிதற்கரியான்றனை
மூவரின்முதலாகியமூர்த்தியை
நாவினல்லுரையாகியநாதனைத்
தேவனைப்புத்தூர்ச்சென்றுகண்டுய்ந்தேனே. (உ)

அன்பனையடியாரிடர்நீக்கியைச்
செம்பொனைத்திகழுந்திருக்கச்சியே
கம்பனைக்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
நன்பொனைக்கண்டுநானுய்யப்பெற்றேனே. (ங)

மாதனத்தைமாதேவனை மாநிலாக்
கோதனத்திலேற்றாடியைவெண்குழைக்
காதனைக்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
நாதனைக்கண்டுநானுய்யப்பெற்றேனே. (ச)

குண்டுபட்டகுற்றந்தவிர்த்தென்னையாட்
கொண்டுநற்றிறங்காட்டியகூத்தனைக்
கண்டனைக்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
அண்டனைக்கண்டருவினையற்றேனே. (ஞ)

பந்தபாசமறுத்தெனையாட்கொண்ட
மைந்தனைம்மணவாளனைமாமலர்க்
கந்தநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
எந்தையீசனைக்கண்டினிதாயிற்றே. (சு)

* கடுவாயென்பது-ஒருநதியின்பெயர்.

உம்பராணையுருத்திரமூர்த்தியை
* யம்பராணையமலனையாதியை
கம்புநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
எம்பிராணைக்கண்டின்பமதாயிற்றே. (எ)

மாசார்பாசமயக்கமுமித்தெனுள்
நேசமாகியநித்தன்மணுளனைப்
பூசுநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
ஈசனேயெனவின்பமதாயிற்றே. (அ)

இடுவாரிட்டகவளங்கவர்ந்திரு
† கடுவாயிட்டவர்கட்டுரைகொள்ளாதே
கடுவாய்த்தென்கரைப்புத்தூரடிகட்காட்
படுவேபெற்றுநான்பாக்கியஞ்செய்தேனே. (கூ)

அரக்கனற்றலழித்தவன்பாடல்கேட்
டிரக்கமாகியருள்புரிசீனைத்
திரைக்கொணீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
இருக்குநாதனைக்காணப்பெற்றய்ந்தேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்–சொன்னபுரீசுவரர், தேவியார்–சொன்னபுரிநாயகியம்மை.
ஆ பதிகம் சுஉ.

திருக்குரங்காடுதுறை–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

இரங்காவன்மனத்தார்களியக்குமுப்
புரங்காவல்லழியப்பொடியாக்கினன்
‡ தரங்காடுந்தடநீர்ப்பொன்னித்தென்கரைக்
குரங்காடுதுறைக்கோலக்கபாலியே. (க)

முத்தினைமணியைப்பவளத்தொளிர்
தொத்தினைச்சுடர்ச்சோதியைச்சோலைசூழ்
கொத்தலர்குரங்காடுதுறையுறை
யத்தனென்னவண்ணித்திட்டிருந்தேதே. (உ)

குளிர்புனற்குரங்காடுதுறையனைத்
தளிர்நிறத்தையல்பங்கனைத்தண்மதி
யொளியனைத்தினைத்தெனுக்கெனுள்ளமுந்
தெளிவினைத்தெளியத்தெளிந்திட்டதே. (ஊ)

மணவன்காண்மலையாணெடுமங்கலக்
கணவன்காண்கலைஞானிகள்காதலெண்

* அம்பரென்பது–ஒருதலம். † கடுவாயென்பது–கடுவெளவாய்.
‡ தரங்கம் ஓடும் என்பது–தரங்காடும் என நின்றது.

குணவன்காண்குரங்காடுதுறைதனில்
அணவன்காணன்புசெய்யுமடியர்க்கே. (சு)

ஞாலத்தார்தொழுதேத்தியநன்மையன்
காலத்தானுயிர்போக்கியகாலினன்
நீலத்தார்மிடற்றன்வெள்ளைநீறணி
கோலத்தான்குரங்காடுதுறையனே. (ஙி)

ஆட்டினுன்முன்ன மணரோடென்றனைப்
பாட்டினுன்றன பொன்னடிக்கின்னிசை
வீட்டினுன்னினமெய்யடியாரொடுங்
கூட்டினுன்குரங்காடுதுறையனே. (சூ)

மாத்தன்றன் மறையார்முறையான்மறை
யோத்தன்றருகன்றன்னுயிருண்டபெண்
போத்தன்றனவள்பொங்குனைந்தணி
கூத்தன்றன்குரங்காடுதுறையனே. (எ)

நாடிநந்தமராயினதொண்டர்காள்
ஆடுமின்னமுமின்றெழுமின்னடி
பாடுமின்பரமன்பயிலுமிடங்
கூடுமின்குரங்காடுதறையனே. (அ)

தென்றனன்னெடுங்தேருடையாளுடல்
பொன்றவெங்கனல்பொன்றவிழித்தவன்
அன்றவர்தங்ணையிர்சூலத்தாற்
கொன்றவன்குரங்காடுதுறையனே. (கூ)

நற்றவஞ்செய்தநால்வர்க்குநல்லற
முற்றவண்மொழியாலருள்செய்தகூற்
கொற்றவன்குரங்காடுதறைதொழப்
பற்றுந்தீவினையாயின பாறுமே. (கo)

கடுத்ததோளரக்கன்கயிலேம்மலே
யெடுத்ததோள் தலையிற்றலறவிரல்
அடுத்ததுமவனின்னிசைகேட்டருள்
கொடுத்தவன்குரங்காடுதறையனே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆபத்சகாயர், தேவியார்-பவளக்கொடியம்மை.

திருக்கோழம்பம்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வேழம்பற்றிவர்வேண்டிற்றுவேண்டிப்போய்
ஆழம்பற்றிவீழ்வார்பலராதர்கள்
கோழம்பத்துறைகூத்தன்குரைகழல்
தாழும்பத்தர்கள்தாலச்சதரமே. (க)

கயிலைநன் மலையாளுங்கவலியை
மயிலியன் மலைமகின் மணாளனைக்
குயில்பயில்பொழிற்கோழம்பமெயவென்
உயிரினை நினைந்துள்ளமுருகுமே. (உ)

வாழும்பான்மையராகியவான்செல்வந்
தாழும்பான்மையராகித்தம்வாயினல்
தாழும்பூமணநாறியதாழ்பொழிற்
கோழம்பாவெனக்கூடியசெல்வமே. (கூ)

பாடலாக்கிடும்பண்ணெடுபெண்ணிவள்
கூடலாக்கிடுங்குன்றின்மணற்கொடு
கோடல்பூத்தலர்கோழம்பத்தண்மகிழ்ந்
தாடுங்கூத்தனுக்கன்புபட்டாளன்றே. (ச)

தளிர்கொண்மேனியள்தான்மிகவஞ்சுவோர்
பிளிறுமுவாரணத்தீருரிபோர்த்தவன்
குளிர்கொள்நீர்வயற்கோழம்பமேவினன்
நளிர்கொணீர்சடைமேலுகயக்கதே. (டி)

நாதராவர்நமக்கும்பிறர்க்குந்தாம்
வேதநாவர்விடைக்கொடியார்வெற்பிற்
கோதைமாதொடுங்கோழம்பங்கோயில்கொண்
டாதிபாதமடையவல்லார்களே. (சு)

முன்னைநான்செய்தபாவமுதலறப்
பின்னைநான்பெரிதும்மருள்பெற்றதும்
அன்னமார்வயற்கோழம்பத்துள்ளமர்
பின்னல்வார்சடையானைப்பிதற்றியே. (எ)

ஏழைமாரிடனின்றிருகைக்கொண்டுண்
கோழைமாதொடுங்கூடியகுற்றமாம்
கூழைபாய்வயற்கோழம்பத்தானடி
யேழையேன்முன்மறந்தங்கிருந்ததே. (அ)

அரவணைப்பயின்மாலவன்வந்தடி
பரவணைப்பரமாம்பரஞ்சோதியைக்
குரவனைக்குரவார்பொழிற்கோழம்பத்
துரவனையொருவர்க்குணர்வொண்ணுமே. (கூ)

சமரசூரபன்மாவைத்தடிந்தவேற்
குமரன்றுதைதருற்கோழம்பமேவிய
அமரர்கோவினுக்கன்புடைத்தொண்டர்கள்
அமரலோகமதாளுடையார்களே. (க்ப)

தட்டனுகிமலையெடுத்தானுங்கீழ்ப்
பட்டுவீழ்ந்துபடர்ந்துய்யப்போயினன்
கொட்டமாறியகோழம்பத்தீசனென்
றிட்டகீர்த்திசைத்தவரக்கனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோகுலேசுவரர், தேவியார்-சவுந்தரியம்மை.

திருப்பூவனூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூவனூர்ப்புனிதன்றிருநாமந்தா
னுவினூறுநூறுயிரண்ணினர்
பாவமாயினபாறிப்பறையவே
தேவர்கோவினுஞ்செல்வர்களாவரே. (க)

என்னனென்மனையென்தையெனுயிர்
தன்னன்றன்னடியேன்றனமாகிய
பொன்னன்பூவனூர்மேவியபுண்ணியன்
இன்னனென்றறிவொண்ணுளியற்கையே. (உ)

குற்றங்கூடிக்குணம்பலகூடாதீர்
மற்றுந்தீவினைசெய்தனமாய்க்கலாம்
புற்றராவினன்பூவனூரீசன்பேர்
கற்றுவாழ்த்துங்கழிவதன்முன்னமே. (ங)

ஆலின்மேவியவைந்தமர்ந்தாடுவான்
மாலவெண்டலைதைத்தசெம்மேனியான்
மேலனூல்விரிவெண்ணியின்றென்கரைப்
பூவனூர்புகுவார்வினைபோகுமே. (ச)

புல்லமூர்த்தியூர்பூவனூரும்புனல்
நல்லமூர்த்திகிலலூர்களிபள்ளியூர்
தில்லையூர்திருவாரூர்சிக்காலிகல்
வல்லமூரெனவல்வினைமாயுமே. (ஞ)

அனுசயப்பட்டதுவிதுவென்னுதே
கனிமனத்தொடுகேண்களுநீர்மல்கிப்
புனிதனேப்பூவனூரனேப்போற்றுவார்
மனிதரிற்றலையான மனிதரே. (சு)

ஆதிநாதனமரர்களர்ச்சிதன்
வேதநாவன்வெற்பின்மடப்பாவையோர்
பாதியானன்பரந்தபெரும்படைப்
பூதநாதன்றென்பூவனூர்நாதனே. (எ)

பூவணூர்தண்புறம்பயம்பூம்பாழில்
நாவலூர்நள்ளாறெருதைநன்னிலங்
கோவலூர்குடவாயில்கொடுமுடி.
மூவலூருமுக்கண்ணனூர்காண்மினே. (அ)

ஏவமேதுமிலாவமணேதலர்
பாவகாரிகள்சொல்லைப்பட்டுநான்
தேவதேவனதிறமெறியாகிய
பூவணூர்புகுதப்பெற்றகாலின்றே. (சு)

நாரணன்னெடுநான்முகனிந்திரன்
வாரணன்குமரன்வணங்குங்கழற்
பூரணன்றனீப்பூவணூர்மேவிய
காரணன்னெனையாளுடைக்காளையே. (கo)

மைக்கடுத்தநிறத்தரக்கன்வரை
புக்கெடுத்தலும்பூவணூரன்னடி
நிக்கடுத்தவிரல்நிறுதூன்றலும்
பக்கடுத்தபின்பாடியுய்ந்தானன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-புஷ்பவனநாதர், தேவியார்-கற்பகவல்லியம்மை.

ஆறு பதிகம்-சுடு.

திருவலஞ்சுழி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஓதமார்கடலின்விடமுண்டவன்
பூதநாயகன்பொற்கயிலைக்கிறை
மாதொர்பாகன்வலஞ்சுழியீசனைப்
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (க)

கயிலைநாதன்கறுத்தவர்முப்புரம்
எயில்கடையெழவெல்வலவித்தகன்
மயில்களாலும்வலஞ்சுழியீசனைப்
பயில்கிலார்சிலர்பாவித்தொழும்பரே. (உ)

இளையகாலமெம்மானையடைகிலாத்
தளையிலாச்செவித்தொண்டர்காணும்முடல்
வளையுங்காலம்வலஞ்சுழியீசனைக்
களைகணைக்கருதீரும்மினே. (கூ)

நறைகொள்பூம்புனல்கொண்டெழுமாணிக்காய்க்
குறைவிலாக்கொடுங்கூற்றுதைத்திட்டவன்
மறைகொணவன்வலஞ்சுழிமேவிய
இறைவனீயினியென்னுகொல்சாண்பதே. (ச)

விண்டவர்புரமூன்றுமெரிகொளத்
திண்டிறற்சிலையாலெரிசெய்தவன்
வண்டுபண்முரலுக்நண்வலஞ்சுழி
யண்டனுக்கடிமைத்திறத்தாவனே. (இ)

படங்கொள்பாம்பொடுபான்மதியஞ்சடை
யடங்கவாழவல்லானும்பர்தம்பிரான்
மடந்தைபாகன்வலஞ்சுழியானடி
யடைந்தவர்க்கடிமைத்திறத்தாவனே. (சு)

நரக்கொடுபரவும்மடியார்வினை
போக்கவல்லபுரிசடைப்புண்ணியன்
மாக்கொள்சோலைவலஞ்சுழியீசன்றன்
ஏக்கொளப்புரமூன்றெரியானவே. (எ)

தேடுவார்பிரமன்திருமாலவர்
ஆடுபாதமவருமறிகிலார்
மாடவீதிவலஞ்சுழியீசனைத்
தேடுவானுறுகின்றதென்சிக்தையே. (அ)

கண்பனிக்குங்கைகூப்புங்கண்மூன்றுடை
நண்பனுக்கெனைநான்கொடுப்பேனென்னும்
வண்பொனித்தென்வலஞ்சுழிமேவிய
பண்பனிப்பனைச்செய்தபரிசிதே. (கு)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
நலங்கொள்பாதத்தொருவிரலூன்றினன்
மலங்குபாய்வயல்சூழ்ந்தவலஞ்சுழி
வலங்கொள்வாரடியென்றலைமேலவே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–கபர்த்தீசுவரர், தேவியார்–பெரியநாயகியம்மை.

திருவாஞ்சியம்–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

படையும்பூதமும்பாம்பும்புல்வாயதள்
உடையுந்தாங்கியவுத்தமனூர்க்கிடம்
புடைகிலாவியபூம்பொழில்வாஞ்சியம் (சு)
அடையவல்லவர்க்கல்லலொன்றில்லையே.

பறப்பையும்பசுவும்படுத்தம்பல
திறத்தவும்மூடையோர்திகழும்பதி
கறைப்பிறைச்சடைக்கண்ணுதல்சேர்தரு (உ)
நிறப்புடைத்திருவாஞ்சியஞ்சேர்மினே.

புற்றிலாடரவோடப்புனன்மதி
தெற்றுசெஞ்சடைத்தேவர்பிரான்பதி
சுற்றுமாடங்கள்சூழ்திருவாஞ்சியம்
பற்றிப்பாடுவார்க்குப்பாவமில்லையே. (கூ)

அங்கமாறுமறைநான்குடன்
றங்குவேள்வியர்தாம்பயிலுக்ரகர்
செங்கண்மாலிடமார்திருவாஞ்சியம்
தங்குவார்நம்மமரர்க்கமரரே. (ச)

நீறுபூசுநிமிர்சடைமேற்பிறை
யாறுசூடிமடிகளுறைபதி
மாறுதானெருங்கும்வயல்வாஞ்சியந்
தேறிவாழ்பவர்க்குச்செல்வமாகுமே. (டு)

அற்றப்பற்றின்றியாரையுமில்லவர்க்
குற்றநற்றுணையாவனுறைபதி
தெற்றுமாடங்கள்சூழ்திருவாஞ்சியங்
கற்றுச்சேர்பவர்க்குக்கருத்தாவதே. (சு)

அருக்கனங்கிநமனெறுதேவர்கள்
திருத்தஞ்சேவடியான்றிகழுங்கர்
ஒருக்கிபாகமுகந்தவன்வாஞ்சியம்
அருத்தியாலடைவார்க்கில்லையல்லலே. (எ-கம)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சுகவாஞ்சொதர், தேவியார்-வாழவந்தஅம்மை.

திருநள்ளாறு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

உள்ளாறுதேதார்புண்டரிகத்திரள்
தெள்ளாறுச்சிவச்சோதித்திரளினைக்
கள்ளாறுதபொற்கொன்றைகமழ்சடை
நள்ளாறுவெனநம்வினைநாசமே. (க)

ஆரணப்பொருளாமருளாளனர்
வாரணத்துரிபோர்த்தமணாளனர்
நாரணனணியேத்துநள்ளாறனர்
காரணக்கவுணனக்கடவுளே. (உ)

மேகம்பூண்டதோர்மேருவிற்கொண்டெயில்
சோகம்பூண்டழல்சோரத்தொட்டானவன்
பாகம்பூண்டமால்பங்கயத்தானெடு
நாகம்பூண்டுகூத்தாடுநள்ளாறனே. (கூ)

மலியுஞ்செஞ்சடைவாளரவம்மொடு
பொலியும்பூம்புனல்வைத்தபுனிதனூர்
நலியுங்கூற்றைநலிக்தள்ளாறர்தம்
வலியுங்கண்டிறுமாந்தமிழ்வனே. (ச)

உறவனுய்நிறைந் துள்ளங்குளிர்ப்பவன்
இறைவனுகிநின் றெண்ணிறைந்தானவன்
நறவர்நாறும்பொழிற்றிருநள்ளாறன்
மறவனுய்ப்பன்றிப்பின்சென்றமையமே. (ஞ)

செக்கரங்கழிசெஞ்சுடர்ச்சோதியார்
நக்கரங்கரவார்த்தநள்ளாறனூர்
வக்கரன்னுயிர்வவ்வியமாயற்குச்
சக்கரமருள்செய்தசதுரரே. (ரு)

வஞ்சனஞ்சிற்பொலிகின்றகண்டத்தர்
விஞ்சையிற்செல்வப்பாவைக்குவேந்தனூர்
வஞ்சனெஞ்சத்தவர்க்குவழிகொடா
நஞ்சனெஞ்சர்க்கருளுநள்ளாறரே. (எ)

அல்லனென் றுமலர்க்கருளாயின
சொல்லனென் றுசொல்லாமறைச்சோதியான்
வல்லனென் றும்வல்லார்வளமிக்கவர்
நல்லனென் றுநல்லார்க்குநள்ளாறனே. (அ)

பாம்பணிப்பள்ளிகொண்டபரமனும்
பூம்பணிப்பொலிகின் றபுராணனுக்
காம்பணிக்தளப்பொண்ணித்தனித்தமல்
நாம்பணிக்தடிபோற்றுநள்ளாறனே. (கூ)

இலங்கைமன்னனிருபதுதோளிற
மலங்கமல்வரைமேல்விரல்வைத்தவர்
நலங்கொணீற்றர்நள்ளாறரைநாடொறும்
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தெர்ப்பாரணியேசுவரர், தேவியார்-போகமார்த்தபூண்முலையம்மை.

திருக்கருவிலி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டகுழலார்சுழலில்வலைப்
பட்டிட்டும்மயங்கிப்பரியாதகீர்
கட்டிட்டவினைபோகக்கருவிலிக்
கொட்டிட்டையுறைவான்கழல்கூடுமே. (க)

ஞாலமல்குமனிதர்காள்நாடொறும்
ஏலமாமலரோடிலைகொண்டுநீர்
காலனீர்வருதன்முன்கருவிலிக்
கோலவார்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (உ)

பங்கமாயினவேசப்பறைந்துநீர்
மங்குமாதினையாதேமலர்கொடு
சுங்கைகசேர்சடையான்றன்கருவிலிக்
கொங்குவார்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (ஊ)

வாடிநீர்வருந்தாதேமனிதர்காள்
வேடனாய்வீசயற்கருள்செய்தவெண்
காடனூருறைகின்றகருவிலிக்
கோடுநீள்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (ச)

உய்யுமாறிதுகேண்மினுலகத்தீர்
பைகொள்பாம்பரையான்படையார்மழுக்
கையினனுறைகின்றகருவிலிக்
கொய்கொள்பூம்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (ரு)

ஆற்றவும்மவலத்தழுந்தாதுநீர்
தோற்றுங்கியொடுநீர்கிலெந்தூவெளி
காற்றுமாகிநின்றருன்றன்கருவிலிக்
கூற்றங்காய்ந்தவன்கொட்டிட்டைசேர்மினே. (சு)

நில்லாவாழ்வுநிலபெருமென்றெண்ணிப்
பொல்லாவாறுசெயப்புரியாதுநீர்
கல்லாரமதில்சூழ்தண்கருவிலிக்
கொல்லேறார்பவன்கொட்டிட்டைசேர்மினே. (எ)

பிணித்தநோய்ப்பிறவிப்பிறிவெய்துமா
றுணர்த்தலாமிதுகேண்மினுருத்திர
கணத்தினர்தொழுதேத்துங்கருவிலிக்
குணத்தினனுறைகொட்டிட்டைசேர்மினே. (அ)

நம்புவீரிதுகேண்மின்கணடொறும்
எம்பிரானென்றிமையவரேத்துமே
கம்பனூருறைகின்றகருவிலிக்
கொம்பனூர்பயில்கொட்டிட்டைசேர்மினே. (கூ)

பாருளீரிதுகேண்மின்பருவரை
பேருமாறெடுத்தாணையடர்த்தவன்
கார்கொணீர்வயல்சூழ்தண்கருவிலிக்
கூர்கொள்வேலினன்கொட்டிட்டைசேர்மினே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சற்குணநாதர், தேவியார்-சர்வாங்காயகியம்மை.

திருக்கொண்டீச்சரம்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கண்டபேச்சினிற்காமனீயர்தங்கள்பால்
மண்டியேச்சுணுமாதரைச்சேராதே
சண்டியீச்சுரவர்க்கருள்செய்தவக்
கொண்டியீச்சுரவன்கழல்கூடுமே. (க)

சுற்றமுந்துணைநன்மடவாளொடு
பெற்றமக்களும்பேணலொழிந்தனர்
குற்றமில்புகழ்க்கொண்டீச்சுரவனைர்
பற்றலாலொருபற்றுமற்றில்லையே. (உ)

மாடுதானதுவில்லெனின்மானிடர்
பாடுதான்செல்வாரில்லைபன்மாலையாற்
கூடநீர்சென்றுகொண்டீச்சுரவனைப்
பாடுமின்பரலோகத்திருத்துமே. (ங)

தந்தைதாயொடுதாரமெனுந்தனைப்
பந்தமாங்கயிற்றப்பயில்வெய்திய
கொந்தவிழ்பொழிற்கொண்டீச்சுரவனைச்
சிந்தைசெய்ம்மினவனடிச்சேரவே. (ச)

கேளுமின்னினமையதுகேடுவர்
தீனியேயடிருமல்லதுவெய்தன்மூன்
கோளராவணிகொண்டீச்சரவனை
நாளுமேத்தித்தொழுமினன்காருமே. (ஞ)

வெம்புநோயுமிடரும்வெம்முமைபுந்
துன்பமுந்துயரும்மெனுஞ்சூழ்வினை
கொம்பனூர்பயில்கொண்டீச்சுரவனை
யெம்பிரானெனவல்லவர்க்கில்லையே. (சு)

அல்லலோடருநோயிலழுந்தீர்
செல்லுமாதினையாதேகினைகுரற்
கொல்லியேறுடைக்கொண்டீச்சரவனை
வல்லவாதொழலினையுமே. (எ)

நாறுசாந்தணிகன்முலைமென்மொழி
மாநிலாமலைமங்கையோர்பாகமாக்
கூறனூருறைகொண்டீச்சுரனினைந்
தூறுவார்தமக்கூனமொன்றில்லையே. (அ)

அயிலாரம்பெரிமேருவிலாகவே
யெயிலாரும்பொடியாய்விழவெய்தவன்

குயிலாரும்பொழிற்கொண்டீச்சுரவீணப்
பயில்வாரும்பெருமைபெறும்பாலரே. (கூ)

கிலையினுர்வரைநின்றெடுத்தான்றலை
மலையினலடர்த்துவிறல்வாட்டினன்
குலையினுர்பொழிற்கொண்டீச்சுரவீணத்
தலையினல்வணங்கத்தவமாகுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பசுபதீச்சுவரர், தேவியார்-சாந்தநாயகியம்மை.

ஆக பதிகம்-எo.

திருவிசையமங்கை-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

குசையுமங்கையிற்கோசகமுங்கொண்ட
லசையின்மங்கலவாசகர்வாழ்த்தலே.
யிசையமங்கையுந்தானுமொன்றுயினன்
விசையமங்கையுள்வேதியன்காண்மினே. (க)

ஆதிநாதனடல்விடைமேலமர்
பூதநாதன்புலியதளாடையன்
வேதநாதன்விசையமங்கையுளான்
பாதமோதவல்லார்க்கில்லைபாவமே. (உ)

தொள்ளிடக்கரைகோவந்தபுத்தூரில்
லெள்ளிடைக்கருள்செய்விசையமங்கை
யுள்ளிடைத்துறைகின்றவுருத்திரன்
கிள்ளிடத்தலையற்றதயனுக்கே. (கூ)

திசையுமெங்குங்குலுங்கத்திரிபுரம்
அசையவங்கெய்திட்டாரழலூட்டினன்
விசையமங்கையிருத்தன்புறத்தடி
விசையில்மங்கிவிழுந்தனன்காலனே. (ச)

பொள்ளலரக்கையகத்திலேம்பூதங்கள்
கள்ளமாக்கிக்கலக்கியகரிருள்
விள்ளலாக்கிவிசையமங்கைப்பிரான்
உள்ளநோக்கியென்னுள்ளுளுறையுமே. (ஙி)

கொல்லியேற்றுக்கொடியொடுபொன்மலை
வில்லியேற்றுடையான்விசையமங்கைச்
செல்லபோற்றியென்பாருக்குத்தென்றிசை
யெல்லியேற்றலுமின்சொலுமாகுமே. (சு)

கண்பதுக்கக்கவாலமங்கைக்கொண்டு
உண்பலிக்குழலுத்தமனுள்ளொளி
வெண்பிறைக்கண்ணியான்விசையமங்கை
நண்பனீத்தொழப்பெற்றதுகண்மையே. (எ)

பாண்டுவின்மகன்பார்த்தன்பணிசெய்து
வேண்டுநல்வரங்கொள்விசையமங்கை
யாண்டவன்னடியேகிணைந்தாசையாற்
காண்டலேகருத்தாகியிருப்பனே. (அ)

வந்துகேண்மின்மயல்தீர்மனிதர்காள்
வெந்தநீற்றன்விசையமங்கைப்பிரான்
சிந்தையால்கிணைவார்களேச்சிக்கெனப்
பந்துவாக்கியுயக்கொளுங்காண்மினே. (கூ)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
விலங்கல்சேர்விரலான்விசையமங்கை
வலஞ்செய்வார்களும்வாழ்த்திசைப்பார்களும்
நலஞ்செய்வாரவர்நன்னெறிநாடியே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–விசையநாதர், தேவியார்–மங்களநாயகியம்மை.

திருநீலக்குடி–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வித்தமாடுமனவியுமக்களீர்
செத்தபோதுசெறியார்பிறிவதே
நித்தநீலக்குடியரனுர்நினை
சித்தமாகிற்சிவகதிசேர்திரே. (க)

செய்யமேனியன்றேனெடுபால்தயிர்
கெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாங்
கையில்ஆமலகக்கனியொக்குமே. (உ)

ஆற்றநீள்சடையாயிழையாளொரு
கூற்றன்மேனியிற்கோலமதாகிய
நீற்றனீலக்குடியுடையானடி
பேற்றினரிடர்போக்கும்புனிதனே. (ங)

நாலுவேதியர்க்கின்னருள்நன்னிழல்
ஆலனுலகஞ்சுண்டுகண்டத்தமர்
நீலனீலக்குடியுறைகின்மலன்
காலனுருவிச்போக்கியகாலனே. (ச)

நேசனீலக்குடியரனேயெனு
நீசராய்நெடுமால்செய்தமாபத்தால்
ஈசனேர்சரமெய்யவெரித்தபோய்
நாசமானர்திரிபுரநாதரே. (இ)

கொன்றைசூடியைக்குன்றமகளொடு
நின்றநீலக்குடியரனேயெனீர்
என்றுவாழ்வுகந்தேயிறுமாக்குநீர்
பொன்றும்போதுதமக்கறிவொண்ணுமே. (ஈ)

கல்லினேடெனீப்பூட்டியமண்கையர்
ஒல்லைநீர்புகநூக்கவென்வாக்கினுல்
நெல்லுநீள்வயல்நீலக்குடியரன்
நல்லநாமமேற்றியுய்ந்தனன்றே. (உ)

அழகியோமினீயோமெனுமாசையால்
ஒழுகியாவியுடல்விடுமுன்னமே
நிழலதார்பொழில்நீலக்குடியரன்
கழல்கொள்சேவடிகைதொழுதும்மினே. (ஊ)

கற்றைச்செஞ்சடைக்காய்கதிர்வெண்டிங்கள்
பற்றிப்பாம்புடன்வைத்தபராபரன்
நெற்றிக்கண்ணுடைநீலக்குடியரன்
சுற்றித்தேவர்தொழுங்கழற்சோதியே. (எ)

தருக்கிவெற்பதுதாங்கியவீங்குதோள்
அரக்கனருடலாங்கோர்விரலினுல்
நெரித்தநீலக்குடியரன்பின்னையும்
இரக்கமாயருள்செய்தனனென்பரே. (ஏ)

இருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–நீலகண்டேசுவரர், தேவியார்–நீலிதிறவுமையம்மை.

திருமங்கலக்குடி–திருக்குறுந்தொகை.

இருச்சிற்றம்பலம்.

தங்கலப்பியதக்கன்பெருவேள்வி
யங்கலத்தழித்தாரருள்செய்தவன்
கொங்கலர்க்குழற்கொம்பனையாளொடு
மங்கலக்குடிமேயமணாளனே. (க)

காவிரியின்வடகரைக்காண்டகு
மாவிரியும்பொழில்மங்கலக்குடித்
தேவரியும்பிரமனுந்தேடொணாத்
தூவெரிச்சுடர்ச்சோதியுட்சோதியே. (உ)

மங்கலக்குடியீசணீமாகாளி
வெங்கதிர்ச்செல்வன்விண்ணெடுமண்ணுகேர்
சங்குசக்கரத்தாரிசதுர்முகன்
அங்ககத்தியனுமர்ச்சித்தாரன்றே. (கூ)

மஞ்சன்வார்கடல்சூழ்மங்கலக்குடி
நஞ்சமாரமுதாகநயந்துகொண்
டஞ்சுமாடலமர்ந்தடியேனுடை
நெஞ்சமாலயமாக்கொண்டுகின்றதே. (ச)

செல்வமல்குதிருமங்கலக்குடிச்
செல்வமல்குசிவகியமத்தராய்ச்
செல்வமல்குசெழுமறையோர்தொழச்
செல்வன்றேவியொடுங்கிகழ்கோயிலே. (டு)

மன்னுசீர்மங்கலக்குடிமன்னிய
பின்னுவார்சடைப்பிஞ்ஞகன்றன்பெயர்
உன்னுவாருமுரைக்கவல்லார்களுந்
தன்னுவார்நன்னெறிதொடர்வெய்தவே. (சு)

மாதராரும்வும்மங்கலக்குடி
யாதிநாயகனண்டர்கணையகன்
வேதநாயகன்வேதியர்நாயகன்
பூதநாயகன்புண்ணியமூர்த்தியே. (எ)

வண்டுசேர்பொழில்சூழ்மங்கலக்குடி
விண்டதாதையைத்தாளதவிசிய
சண்டகாயகனுக்கருள்செய்தவன்
தண்டமாமதிசூடியசோதியே. (அ)

கூசுவாரலர்குண்டர்குணமிலர்
நேசமேதுமிலாதவர்நீசர்கள்
மாசர்பால்மங்கலக்குடிமேவிய
ஈசன்வேறுபடுக்கவுய்ந்தேனன்றே. (கூ)

மங்கலக்குடியான்கயிலைமலை
யங்கலைத்தெடுக்குற்றவரக்கர்கோன்
றன்கரத்தொடுதாள்தலைதோள்தகர்ந்
தங்கலைத்தழுதுய்ந்தனன்முனன்றே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–பிராணேசுவரதர், தேவியார்–மங்களாம்பிகையம்மை.

திருவதும்பியூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

விரும்பியூறுவிடேன் மடநெஞ்சமே
கரும்பினூறல்கண்டாய்கலந்தார்க்கவன்
இரும்பினூறலுறுதேர்வெண்டலை
யெதும்பியூர்மலையானெங்களீசனே. (க)

பிறங்குசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுசீர்க்
கறங்குபூதகணமுடைக்கண்ணுதல்
நறுங்குழல்மடவாரொடுநாடொறும்
எதும்பியூர்மலையர்னெங்களீசனே. (உ)

மருந்துவானவர்தானவர்க்கின்சுவை
புரிந்தபுன்சடைப்புண்ணியன்கண்ணுதல்
பொருந்துபூண்முலைமங்கைநல்லாரொடும்
எதும்பியூர்மலையானெங்களீசனே. (ங)

நிறங்கொள்கண்டத்துநின்மலனெம்மிறை
மறங்கொள்வேற்கண்ணிவாணுதல்பாகமா
யறம்புரிந்தருள்செய்தலெமங்கணன்
எதும்பியூர்மலையானெங்களீசனே. (ச)

நறும்பொணுமலர்க்கொன்றையுநாகமுங்
தறும்புசெஞ்சடைத்தூமதிவைத்தவான்
உறும்பொன்மால்வரைப்பேதையோர்தொறும்
எதும்பியூர்மலையானெங்களீசனே. (ஞ)

கதும்பியூர்வனவைகுளகாயத்தில்
திதம்பியூர்வனமற்றும்பலவுள
குதும்பியூர்வதோர்கூட்டகத்திட்டெனை
யெதும்பியூரரன்செய்தவியற்கையே. (சு)

மறந்தமற்றிதுபேரிடர்நாடொறுந்
திறம்பிநீகினையேல்மடநெஞ்சமே
புறஞ்செய்கோலக்குரம்பையிலிட்டெனை
யெதும்பியூரரன்செய்தவியற்கையே. (எ)

இன்பமும்பிறப்புமிறப்பினெடு
தன்பமுமுடனேவைத்தசோதியான்
அன்பனேயரனேயென்றநற்றுவார்க்
கின்பனகுமெதும்பியூரீசனே. (அ)

கண்ணிறைந்தகனபவளத்திரள்
விண்ணிறைந்தவிரிசுடர்ச்சோதியான்

உண்ணிறைந்தருவாயுயிராயவன்
எண்ணிறைந்தவெறும்பியூரீசனே. (கூ)

நிறங்கொள்மால்வரையூன்றியெடுத்ததும்
நறுங்குழல்மடவாள்நடுக்கெய்திட
மறங்கொள்வாளரக்கன்வலிவாட்டினான்
எறும்பியூர்மலையெம்மிறைகாண்மினே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-எறும்பீசுவரர், தேவியார்-நறுங்குழல்நாயகியம்மை.

திருக்குரக்குக்கா-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மரக்கொக்காமெனவாய்விட்டலறிநீர்
சரக்குக்காவித்திரிந்தயராதகால்
பரக்குங்காவிரிநீரலைக்குங்கரைக்
குரக்குக்காவுடையக்கெடுங்குற்றமே. (க)

கட்டாறேகழிகாவிரிபாய்வயல்
கொட்டாறேபுனலூழ்குரக்குக்கா
மூட்டாருவடியேத்தமுயல்பவர்க்
கிட்டாருவிடரோடவெடுக்குமே. (உ)

கையனைத்துங்கலந்தெழுகாவிரி
செய்யனைத்திலுஞ்சென்றிடுஞ்செம்புனல்
கொய்யனைத்துங்கொணருங்குரக்குக்கா
ஐயனைத்தொழுவார்க்கல்லலில்லையே. (கூ)

மிக்கனைத்துத்திரையுமருவிகள்
புக்குக்காவிரிபோந்தபுறம்கரைக்
கொக்கினம்பயில்சோலைக்குரக்குக்கா
நக்கனைநவில்வார்வினைநாசமே. (ச)

விட்டுவெள்ளம்விரிந்தெழுகாவிரி
யிட்டநீடவயலிவ்வயல்
கொட்டமாமுழவோங்குரக்குக்கா
இட்டமாயிருப்பார்க்கிடரில்லையே. (ஞ)

மேலிவானவரோடுவிரிகடல்
மாலுநான்முகனுமளப்பொணாக்
கோலமாளிகைக்கோயில்குரக்குக்காப்
பாலராய்த்திரிவார்க்கில்லைபாவமே. (ஃ)

ஆலமீழலமார்ந்தவழகனார்
காலனீயுதைகொண்டகருத்தனார்

கோலமஞ்ஞைகளாலுங்குரக்குக்நாப்
பாலருக்கருள்செய்வர்பரிவொடே. (எ)

செக்கரங்கெழுசெஞ்சுடர்ச்சோதியார்
அக்கரையரெம்மாதிபுராணனார்
கொக்கினம்வயல்சேருங்குரக்குக்கா
நக்கனீத்தொழநம்வினைநாசமே. (அ)

உருகியுன்குழைந்தேத்தியெழுமினீர்
கரியகண்டன்கழலடிதன்னையே
குரவவன்செழுங்கோயில்குரக்குக்கா
இரவுமெல்லியுமேத்தித்தொழுமினே. (கூ)

இரக்கமின்றிமலியெடுத்தான்முடி
யுரத்தையொல்கவடர்த்தானுறைவிடங்
குரக்கினங்குதிகொள்ளுங்குரக்குக்கா
வரத்தினப்பெறவாலுலகாள்வரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–கொந்தளக்கருணாகரர், தேவியார்–கொந்தளாயிமையம்மை

ஆறாம் பதிகம்–எடுத்த

திருக்காளூர்–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

திருவினதனுஞ்செம்மலர்மேலுறை
யுருவனையுலகத்தினுயிர்க்கெலாங்
கருவனகிமுனேத்தவன்காளூரிற்
பரமனயபரஞ்சுடர்காண்மினே. (க)

பொண்டிர்மக்கள்பெருந்துணைகன்னிதி
யுண்டின்றேயென்றுகவன்மினேனைகாள்
கண்டுகொண்மினீர்காளூர்மூனியினப்
புண்டரீகப்பொதும்பிலொதுங்கியே. (உ)

தாயத்தார்தமர்நன்னியென்னுமிம்
மாயத்தேயிடந்திட்டுமயங்கிடேற்
காயத்தேயுளன்காளூர்மூனியினே
வாயத்தால்வணங்கிர்வினேமாயவே. (ரு)

குறியினின்றுண்டுகூறையிலாச்சமண்
நெறியையிட்டுநினைகழல்பற்றினேன்
அறியலுற்றிரேற்காளூர்மூனியவன்
செறிவுசெய்திட்டிருப்பதென்சிந்தையே. (ச)

பொத்தல்மண்சுவர்ப்பொல்லாக்குரம்பையை
மெய்த்தனென்றுவியந்திடேலைகாள்

சித்தர்பத்தர்கள்சேர்திருக்காஞரில்
அத்தன்பாதமடைதல்கருமமே. (டு)

கல்விஞானக்கலைப்பொருளாயவன்
செல்வமல்குதிருக்காஞரீசனே
யெல்லியும்பகலுமிசைவானவா
சொல்லிடர்நந்துயரங்கடீரவே. (கூ)

நீரும்பாரும்நெருப்புமருக்கனுங்
காருமாருதங்காஞர்மூன்றுத்தவன்
சேர்வுமொன்றறியாததிகைதிகை
யோர்வுமென்றிலரோடித்திரிவரே. (எ)

ஓமத்தோடயன்மாலறியாவணம்
வீமப்பேரொளியாயவிழுப்பொருள்
காமற்காய்ந்தவன்காஞர்மூன்றுத்தவன்
சேமத்தாலிருப்பாவதென்சித்தையே. (அ,கூ)

வன்னிகொன்றையெருக்கணிந்தான்மலை
யுன்னியேசென்றெடுத்தவனெண்டிறல்
தன்னைவீழத்தனிவிரல்வைத்தவன்
கன்னிமாமதிற்காஞர்க்கருத்தனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–செம்மேனிநாயகர், தேவியார்–சிவயோகநாயகியம்மை.

திருச்சேறை–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூரியாவரும்புண்ணியம்பொய்கெடுங்
கூரிதாயவறிவுகைகூடிடுஞ்
சீரியார்பயில்சேறையுட்செந்நெறி
நாரியாகன்றனமகளிலவே. (க)

என்னமாதவஞ்செய்தனெஞ்சமே
மின்னுவார்சடைவேதவிழுப்பொருள்
செந்நெலார்வயற்சேறையுட்செங்நெறி
மன்னுசோதிநம்பால்வந்துவைகவே. (உ)

பிறப்புமூப்புப்பெரும்பிணிவொன்பிணி
பிறப்புநீங்கியின்பம்வந்தெய்திடுஞ்
சிறப்பர்சேறையுட்செந்நெறியான்கழல்
மறப்பதின்றிமனத்தினுள்வைக்கவே. (கூ)

மாடுதேடிமயக்கினில்வீழ்ந்துநீர்
ஓடியெய்த்தும்பயனிலீயுமர்காள்
சேடர்வாழ்சேறைச்செந்நெறிமேவிய
ஆடலான்றன்னடியடைந்திப்மினே. (ச)

எண்ணிநாளுமெரியையிற்கூற்றுவன்
தண்ணென்றோன்றிற்றுரக்கும்வழிகண்டேன்
றிண்ணன்சேறைத்திருச்செந்நெறியுறை
யண்ணலாருளரஞ்சுவதென்னுக்கே. (நி)

தப்பிலவானத்தரணிகம்பிக்கிலென்
ஒப்பிலவேந்தரொருங்குடன்சீறிலென்
செப்பமாஞ்சேறைச்செந்நெறிமேவிய
அப்பனருளரஞ்சுவதென்னுக்கே. (கூ)

வைத்தமாடுமடக்கைநல்லார்களும்
ஒத்தொவ்வாதவுற்றார்களுமென்செய்வார்
சித்தர்சேறைத்திருச்செந்நெறியுறை
யத்தர்தாமுளரஞ்சுவதென்னுக்கே. (எ)

குலங்களென்செய்வகுற்றந்தானென்செய்வ
திலங்கிநீரின்றுசேர்ந்திடல்நெஞ்சமே
யிலங்குசேறையிற்செந்நெறிமேவிய
அலங்கனருளரஞ்சுவதென்னுக்கே. (அ)

பழகினல்லவரும்பண்டிளசுற்றமும்
வீழவிடாவிடில்வேண்டியதெய்தொணு
திகழ்கொள்சேறையிற்செந்நெறிமேவிய
அழகனருளரஞ்சுவதென்னுக்கே. (சு)

பொருத்துநீண்மலையைப்பிடித்தேக்கினன்
வருத்தவுன்றிமலரடிவாங்கினன்
றிருந்துசேறையுட்செந்நெறிமேவியங்
கிருந்தசோ தியென்பார்க்கிடரில்லையே. (ச ி)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செந்நெறியப்பர், தேவியார்-ஞானவல்லியம்மை

திருக்கோடிகா-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சங்குலாமுன்கைத்தையலோர்பாகத்தன்
வெங்குலாமதவேழம்வெருண்டவன்
கொங்குலாம்பொழிற்கோடிகாவாவென
எங்கிலாதேதாரின்பம்வந்தெய்துமே. (க)

வாடிவாழ்வதென்னுவதுமாதர்பால்
ஓடிவாழ்வினீயுள்கிரீர்நரடொறும்
கோடிகாவனீக்கூறிரேற்கூறினேன்
பாடிகாவலிற்பட்டுக்கழிதிரே. (உ)

முல்லைநன்முறுவல்லுமைபங்கனூர்
தில்லையம்பலத்தில்லுறைசெல்வனூர்

கொல்லியேற்றினர்கோடிகாவாயென்றங்
கொல்லியேத்தவர்க்கடமொன்றில்லையே. (கூ)

நாவளம்பெறுமாறுமன்னுதல்
ஆமளஞ்சொல்லியன்புசெயின்னலாற்
கோமளஞ்சடைக்கோடிகாவாவென
மேவகின்றெணேயேசுமவ்வேழையே. (ச)

வீறுதான்பெறுவார்சிலராகிலும்
நாறுபூங்கொன்றைதான்மிகுகல்காணேற்
கூறுவென்கோடிகாவுளாரென்றுமால்
ஏறுவேனும்மாலேசப்படுவனே. (ரு)

நாடிநாரணனன்முகன்வானவர்
தேடியேசறவுந்தெரியாததோர்
கோடிகாவணிக்கூருநரலெலாம்
பாடிகாவலிற்பட்டுக்கழியுமே. (சு, எ, அ, கூ)

வரங்களால்வரையெடுத்தான்றனை
அரங்கவுன்றியருள்செய்தவப்பனூர்
குரங்குசேர்பொழிற்கோடிகாவாவென
இரங்குவன்மனத்தேதங்கள்தீரவே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–கோடீசுவரர், தேவியார்–வடிவாம்பிகையம்மை.

திருப்புள்ளிருக்கும்வேளூர்–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளெருக்கரவம்விரவுஞ்சடைப்
புள்ளிருக்குவேளூரன்பொற்கழல்
உள்ளிருக்குமுணர்ச்சியில்லாதவர்
நள்ளிருப்பர்நரகக்குழியிலே. (க)

மாற்றமொன்றறியீர்மனைவாழ்க்கைபோய்க்
கூற்றம்வந்தணைகொள்வதன்முன்னமே
போற்றவல்லிரேற்புள்ளிருக்குவேளூர்
சீற்றமாயினதேய்த்தறுக்காண்மினே. (உ)

அருமறையனேயானெடுபெண்ணினைக்
கருவிடமிகவுண்டவெங்கண்டனைப்
புரிவெணூலனைப்புள்ளிருக்குவேளூர்
உருகிநைபவருள்ளங்குளிருமே. (கூ)

தன்னுருவையொருவர்க்கறிவொணா
மின்னுருவனைமேனிவெண்ணீற்றனைப்
பொன்னுருவனைப்புள்ளிருக்குவேளூர்
சென்னவல்லவர்க்கில்லையிடர்களே. (ச)

செங்கண்மால்பிரமற்குமறிவொணை
அங்கியின்னுருவாகியழல்வதோர்
பொங்கரவணைப்புள்ளிருக்கும்வேளூர்
மங்கைபாகனைவாழ்த்தவருமின்பே. (நு)

குற்றமில்லியைக்கோலச்சிலையினற்
செற்றவர்புரஞ்செந்தழலாக்கியைப்
புற்றரவணைப்புள்ளிருக்கும்வேளூர்
பற்றவல்லவர்பாவம்பறையுமே. (சு)

கையினேடுகால்கட்டியுமெரலாம்
ஐயன்வீடினனென்பதன்முன்னநீர்
பொய்யிலாவரன்புள்ளிருக்கும்வேளூர்
மையுலாவியகண்டனைவாழ்த்துமே. (எ)

உள்ளமுள்கியுகந்துசிவனென்று
மெள்ளவுள்கவினைகெடுமெய்ம்மையே
புள்ளினர்பணிபுள்ளிருக்கும்வேளூர்
வள்ளல்பாதம்வணங்கித்தொழுமினே. (அ, சு)

அரக்கனார்தலைபத்துமழிதர
நெருக்கமாமலர்ப்பாதநிறுவிய
பொருப்பனூறைபுள்ளிருக்கும்வேளூர்
விருப்பினற்றெழுவார்வினைவீடுமே (கூ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–வைத்தியநாதர், தேவியார்–தையலுயிரம்மை.

திருஅன்பிலாலந்துறை–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வானஞ்சேர்மதிசூடியமைந்தனே
நீநெஞ்சேதெடுவாய்நிலைநிற்கிலே
யானஞ்சாடியையன்பிலாலந்துறைக்
கோனைஞ்செல்வனைக்கூடிடக்கிற்றியே. (க)

காரணத்தர்கருத்தர்கபாலியார்
வாரணத்துரிபோர்த்தமணாளனூர்
ஆரணப்பொருளன்பிலாலந்துறை
நாரணற்கரியானெனைநம்பியே. (உ)

அன்பினஞ்சமைந்தடனடியவென்பிலாணியுரித்தக்களைந்தவன்
* அன்பிலானையம்மானையள்ளுறிய
அன்பினில்கினைந்தாரறிந்தார்களே. (ங)

* அன்பிலாலந்துறையானை எனற்பாலது–அன்பிலானையென நின்றது.

சங்கையுள்ளதஞ்சாவதுமெய்யுமை
பங்கனடிபரவியேனுளைய
அங்கணனெந்தையன்பிலாலத்தறைச்
செங்கணரடிச்சேரவும்வல்லமே. (ச)

கொக்கிறகர்குளிர்மதிச்சென்னியர்
பிக்கரக்கர்புரமெரிசெய்தவர்
அக்கரையினரன்பிலாலத்தறை
நக்குருவருகம்மையறிவரே. (நி)

வெள்ளமுள்ளவிரிசடைகந்தியைக்
கள்ளமுள்ளமனத்தவர்காண்கிலர்
அள்ளலார்வயலன்பிலாலத்தறை
யுள்ளவாறறியார்சிலரூமரே. (ஈ)

பிறவிமாயப்பிணக்கிலழுந்தினும்
உறவெலாஞ்சிந்தித்தன்னியுகவாதே
யறவனெம்பிரானன்பிலாலத்தறை
மறவாதேதொழுதேத்திவணங்குமே. (எ)

நுணங்குநூலயன்மாலுமிருவரும்
பிணங்கியெங்குந்திரிந்தெய்த்தங்காண்கிலர்
அணங்கனெம்பிரானன்பிலாலத்தறை
வணங்குதும்வீணமாய்த்தும்வண்ணமே. (அ)

பொய்யெலாமுரைக்குஞ்சமணசாக்கியக்
கையன்மாருரைகேளாதெழுமினே
ஐயனெம்பிரானன்பிலாலத்தறை
மெய்யன்சேவடியேத்துவார்மெய்யரே. (க)

இலங்கைவேந்தனிருபதுதோளிற்று
மலங்கமாமலிமேல்விரல்வைத்தவ
னலங்கலெம்பிரானன்பிலாலத்தறை
வலங்கொள்வாரைவாவெனவ்வலங்கொள்வரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சத்திவாசேர், தேவியார்-சவுந்தராயியம்மை.

ஆடு பதிகம்-அ0.

திருப்பாண்டிக்கொடுமுடி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிட்டனச்சிவனச்செழுஞ்சோதியை
யட்டமூர்த்தியையாலினிழலமர்
பட்டனத்திருப்பாண்டிக்கொடுமுடி
நட்டனத்தொழுமம்மவீணநாசமே. (க)

பிரமன்மாலறியாதபெருமையன்
தருமமாகியதத்துவனெம்பிரான்
பரமனுருறைபாண்டிக்கொடுமுடி
கருமமாகத்தொழுமடநெஞ்சமே. (உ)

ஊசலாளல்லளொண்கழலாளல்லள்
தேசமார்திருப்பாண்டிக்கொடுமுடி
மீசனேயெனுமித்தனையல்லது
பேசுமாறறியாளொருபேதையே. (கூ)

தூண்டியசுடர்போலொக்குஞ்சோதியான்
காண்டலுமெளியன்னடியார்க்குப்
பாண்டிக்கொடுமுடிமேயபரமனீக்
காண்டுமென்பவர்க்கேதுங்கருத்தொணன். (ச)

செருக்கியம்முடிநின்றிசைவானவ
ரிருக்கொடும்பணிந்தேத்தவிருந்தவன்
றிருக்கொடுமுடியென்றலுந்தீவினைக்
கருக்கெடுமிதுகைகண்டயோகமே. (டு, சு, எ, அ, கூ, கo)

திருச்சிற்றம்பலம்.

இது கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–கொடுமுடிநாதேசுவரர், தேவியார்–பண்மொழியம்மை.

திருவான்மியூர்–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வீண்டமாமலர்கொண்டுவிரைந்துநீர்
அண்டர்நாயகன்றன்னடிசூழ்மின்கள்
பண்டுநீர்செய்தபாவம்பறைந்திடும்
வண்டுசேர்பொழில்வான்மியூரீசனே. (க)

பொருளுஞ்சுற்றமும்பொய்ம்மையும்விட்டுநீர்
மருளுமாந்தரைமாற்றிமயக்கறுத்
தருளுமாவல்லவாதியாயென்றலு
மருளுமித்திடும்வான்மியூரீசனே. (உ)

மந்தமாகியசிந்தைமயக்கறுத்
தந்தமில்குணத்தானையடைந்துநின்
றெந்தையீசனென்றேத்திட வல்லிரேல்
வந்துநின்றிடும்வான்மியூரீசனே. (கூ)

உள்ளமுள்கலந்தேத்தவல்லார்க்கலாற்
கள்ளமுள்ளவகிக்கழிவானலன்
வெள்ளமூமரவும்மிரவுஞ்சடை
வள்ளலாகியவான்மியூரீசனே. (ச)

படங்கொள் பாம்பரைப்பான் மதிசூடியை
வடங்கொண்மென் மூலைமாதொருகூறணைத்
தொடர்ந்தநின் றிதாழுதெழுவார்வினை
மடங்கின் றிடும்வான்மியூரீசனே. (இ)

கெஞ்சிலேர்கினைக்கினைக்குரூர்
பஞ்சின்மெல்லடியாளுமைபங்கவென்
றஞ்சிநாண்மலர்தூவியழுதிரேல்
வஞ்சந்தீர்த்திடும்வான்மியூரீசனே. (ஈ)

இணங்குநூலயன்மாலுமறிகிலாக்
குணங்கள்தான்பரவிக்குறைந்தக்கவர்
சுணங்குபூண்முலைத்துமொழியாரவர்
வணங்கநின்றிடும்வான்மியூரீசனே. (எ)

ஆதியும்மரணுயயன்மாலுமாய்ப்
பாதிபெண்ணுருவாயபரமனென்
றோதியுள்குமைந்தேத்தவல்லாரவர்
வாதைதீர்த்திடும்வான்மியூரீசனே. (அ)

ஒட்டைமாடத்திலொன்பதுவாசலுங்
காட்டில்வேவதன்முன்னங்கழலடி
நாட்டிநாண்மலர்தூவிவலஞ்செயில்
வாட்டந்தீர்த்திடும்வான்மியூரீசனே. (கூ)

பாரமாகமலியெடுத்தான்றனைச்
சீரமாகத்திருவிரலூன்றினன்
ஆர்வமாகவழைத்தவனேத்தலும்
வாரமாயினன்வான்மியூரீசனே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்–மருந்தீசுவரர், தேவியார்-சொக்காயியம்மை.

திருநாகைக்காரோணம்–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பாணத்தான் மதில்மூன் றுமெரித்தவன்
பூணத்தானரவாமைபொறுத்தவன்
றேணத்தானினியான்கடனுகைக்கா
ரோணத்தானெனநம்வினையேயறுமே. (க)

வண்டலம்பியவார்சடையீசனை
விண்டலம்பணிக்தேத்தம்விகிர்தனைக்
கண்டகங்கமழ்நாகைக்காரோணனைக்
கண்டலும்வினையானகழலுமே. (உ)

பூனையுமரமலர்கொண்டுபுனிசடை
நீனையுமரமலர்சூடியநம்பனைக்

கனையுமாகடனுலகுக்கரோணனை
நினையவேவினையாயினநீங்குமே. (கூ)

கொல்லைமால்விடையேறியகோவினை
யெல்லிமாநடமாடுமிறைவனைக்
கல்லினார்மதினுகைக்காரோணனைச்
சொல்லவேவினையானவைசோருமே. (சு)

மெய்யனைவிடையூர்தியைவெண்மழுக்
கையனைக்கடனுகைக்காரோணனை
மையணுக்கியகண்டனைவானவ
ரையனைத்தொழுவார்க்கல்லலில்லையே. (டு)

அலங்கல்சேர்சடையாநிபுராணனை
யிலங்கல்மெல்லியல்பாகமிருப்பனைக்
கலங்கள்சேர்கடனுகைக்காரோணனை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (சு)

சினங்கொண்மால்கரிசீறியவேழினை
யினங்கொள்வானவரேத்தியவீசனைக்
கனங்கொள்மாமதினுகைக்காரோணனை
மனங்கொள்வார்வினையாயினமாயுமே. (எ)

அந்தமில்புகழாயிழையார்பணிந்
தெந்தையீசனென்றேத்துமிறைவனைக்
கந்தவார்பொழில்காகைக்காரோணனைச்
சிந்தைசெய்யக்கெடுந்துயர்திண்ணமே. (அ)

சுருவனைக்கடனுகைக்காரோணனை
யிருவருக்கறிவொண்ணுவிறைவனை
யொருவனையுணராப்புரமூன்றெய்த
செருவனைத்தொழத்தீவினைதீருமே. (கூ)

கடல்கழிதழிநாகைக்காரோணன்றன்
வடவரையெடுத்தார்த்தவரக்கனை
படரவூன்றியபாதமணிதரத்
தொடரவஞ்சுந்துயக்கறுங்காலனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காயாரோகணேசுவரர், தேவியார்-நீலாயதாட்சியம்மை.

திருக்காட்டுப்பள்ளி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாட்டுப்பள்ளிமகிழ்ந்துறைவீர்க்கெலாங்
கேட்டுப்பள்ளிகண்டீர்கெடுவீரிது
ஒட்டுப்பள்ளிவிட்டோடவுமுமனங்
காட்டுப்பள்ளியீளான்கழல்சேர்மினே. (க)

மாட்டைத்தேடி மகிழ்ந்தீர்தம்முளே
காட்டுப்பொய்யெலாம்பேசிடுநாணிலீர்
கூட்டைவிட்டுயிர்போவதன்முன்னமே
காட்டுப்பள்ளியுளான்கழல்சேர்மினே. (உ)

தேனெவன்றசொல்லாலொடுசெல்வமும்
ஊனைவிட்டுயிர்போவதன்முன்னமே
கானவேடர்கருதுங்காட்டுப்பள்ளி
ஞானகாயகனீச்சென்றுநண்ணுமே. (கூ)

அருத்தமுமனையாளெருமக்களும்
பொருத்தமில்லைபொல்லாததுபோக்கிடும்
கருத்தன்கண்ணுதலண்ணல்காட்டுப்பள்ளி
திருத்தன்சேவடியைச்சென்றுசேர்மினே. (ச)

சுற்றமுந்தோணியும்மனைவாழ்க்கையும்
அற்றபோதணையாரவரென்றென்றே
கற்றவர்கள்கருதுங்காட்டுப்பள்ளி
பெற்றமேறும்பிரானடிசேர்மினே. (ஙி)

அடும்புங்கொன்றையும்வன்னியுமத்தமுந்
தடும்பல்செய்சடைத்தூமணிச்சோதியான்
கடம்பன்றாதைகருதுங்காட்டுப்பள்ளி
யுடம்பினூர்க்கோருறுதுணையாருமே. (சு)

மெய்யிலமாசுடையாருடல்மூடுவார்
பொய்யைமெய்யென்றுபுக்குடன்வீழன்மின்
கையின்மானுடையான்காட்டுப்பள்ளியெம்
ஐயன்றன்னடியேயடைந்துய்ம்மினே. (ஞ)

வேலைவிஷந்தகண்ணைவிரும்பிநீர்
சீலங்கெட்டுத்திகையன்பின்பேதைகாள்
காலையேதொழுங்காட்டுப்பள்ளியுறை
நீலகண்டனிணைத்தல்கிணைமினே. (அ)

இன்றுளார்நாளையில்லையெனும்பொரு
ளொன்றுமோராதுழிதருமூமர்கா
ளன்றுவானவர்க்காகிவிடமுண்ட
கண்டனார்காட்டுப்பள்ளிகண்டுய்ம்மினே. (கூ)

எண்ணிலாவரக்கன்மலையேர்திட
வெண்ணிறீண்முடிபத்துமிறத்தவன்
கண்ணுளார்கருதுங்காட்டுப்பள்ளியை
நண்ணுவாரவர்தம்வினைநாசமே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆணியழகர், தேவியார்-அகிலாண்டநாயகியம்மை.

திருச்சிராப்பள்ளி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மட்டுவார்குழலாளொடுமால்விடை
யிட்டமாவுகந்தேறுமிறைவனூர்
கட்டுநீத்தவர்க்கின்னருளேசெயுஞ்
சிட்டர்போலுஞ்சிராப்பள்ளிச்செல்வமே. (க)

அரியயன்றேவெட்டிவட்டாடினு
ரரியயன்றெழுதேத்துமரும்பொருள்
பெரியவன்சிராப்பள்ளியைப்பேணுவா
ரரியயன்றெழவங்கிருப்பார்களே. (உ)

அரிச்சிராப்பகலேவராலாட்டுண்டு
சுரிச்சிரா துநெஞ்சேயொன் றுசொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளியென் றலுந்தீவினை
நரிச்சிரா தரடக்குரடக்குமே. (ங)

தாயுமானெனக்கேதலேகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனெனநம்வினைநாசமே. (ச-ரி-சு-ள-அ-சு-கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தாயுமானேசுவரர், தேவியார்-மட்டுவார்குழலம்மை.

திருவாட்போக்கி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

காலபாசம்பிடித்தெழுதூதுவர்
பாலகர்விருத்தர்பழையரெனார்
ஆலநீழலமர்ந்தவாட்போக்கியார்
சீலமரர்ந்தவர்செம்மைமறப்பரே. (க)

விடுத்தத்தூதுவர்வந்துவினைக்குழிப்
படுத்தபோதுப்பனிவிபாவிகாள்
அடுத்தகின்னரங்கேட்கும்வாட்போக்கியை
யெடுத்துமேத்தியுமின்புறுமின்களே. (உ)

வந்திவ்வாறுவலீத்தெழுதூதுவர்
உந்தியோடிநரகத்திடாமுனம்
அந்தியின்னெளிதாங்கும்வாட்போக்கியார்
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரே. (ங)

கூற்றம்வந்துகுமைத்திடும்போதினுற்
றேற்றம்வந்துதவினவுறலாகுமே

யாற்றவும்மருள்செய்யும்வாட்போக்கிபால்
ஏற்றுமின்விளக்கையிருணீங்கவே. (சு)

மாறுகொண்டுவனீத்தெழுதூதுவர்
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
யாறுசெஞ்சடைவைத்தவாட்போக்கியார்க்
கூறியூறியருகுமென்னுள்ளமே. (டு)

கானமோடிக்கடிதெழுதூதுவர்
தானமோடுதலைபிடியாமுன்னம்
ஆனஞ்சாடியுகந்தவாட்போக்கியார்
ஊனமில்லவர்க்குண்மையினிற்பரே. (சு)

பார்த்துப்பாசம்பிடித்தெழுதூதுவர்
கூர்த்தவேலார்க்குமைப்பதன்முன்னமே
யார்த்தகங்கையடக்கும்வாட்போக்கியார்
சேர்த்திமைகள்விளர்க்குரைமின்களே. (எ)

நாடிவந்துநமன்றமர்நல்லிருட்
கூடிவந்துகுமைப்பதன்முன்னமே
யாடல்பாடலுகந்தவாட்போக்கியை
வாடியேத்தநம்வாட்டந்தவிருமே. (அ)

கட்டமுத்தச்கடிதெழுதூதுவர்
பொட்டறுக்கிப்புறப்படாமுன்னமே
யட்டமாமலர்சூடும்வாட்போக்கியார்க்
கிட்டமாகயிணையடியேத்துமே. (சு)

இரக்கமுன்னறியாதெழுதூதுவர்
பரக்கழித்தவர்பற்றுதல்முன்னமே
யரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
கரப்புதங்கரப்பாரவர்தங்கட்கே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ரத்தினகிரீசுவரர், தேவியார்-சுரும்பார்குழலம்மை.

திருமணஞ்சேரி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பட்டநெற்றியர்பாய்புலித்தோலினர்
கட்டங்கம்முகவில்பவர்காடொறுஞ்
சிட்டர்வாழ்திருவார்மணஞ்சேரியெம்
வட்டவார்சடையார்வண்ணம்வாழ்த்துமே. (க)

தண்ணுவார்குழலாளுமையாளொடும்
பின்னுவார்சடைமேற்பிறைவைத்தவர்

மன்னுவார்மணஞ்சேரிமருந்தினே
யுன்னுவார்வினையாயின வேயுமே. (உ)

புற்றிலாடரவாட்டும்புனிதனர்
தெற்றினர்புரந்தீயெழச்செற்றவர்
சுற்றினர்மதில்சூழ்மணஞ்சேரியார்
பற்றினரவர்பற்றவர்காண்மினே. (க)

மத்தமும்மதியும்வளர்செஞ்சடை
முத்தர்முக்கண்ணர்மூசரவம்மணி
சித்தர்தேவணர்சீர்மணஞ்சேரியெம்
வித்தர்தாம்மிரிப்பாரைவிருப்பரே. (ச)

துள்ளுமான்மறிதூமழுவாளினர்
வெள்ளநீர்சுரந்தார்சடைமேலவர்
அள்ளலார்வயல்சூழ்மணஞ்சேரியெம்
வள்ளலார்கழல்வாழ்த்தவாழ்வாவதே. (ஞ)

நீர்பரந்தநிமிர்புன்சடையின்மேல்
ஊர்பரந்தவுரகமணிபவர்
சீர்பரந்ததிருமணஞ்சேரியார்
ஏர்பரந்தங்கிலங்குசூலத்தரே. (ரு)

சுண்ணத்தர்சுடுநீறுகந்தாடலார்
விண்ணத்தம்மதிசூடியவேல்லியர்
மண்ணத்தமுழவார்மணஞ்சேரியார்
வண்ணத்தம்முலையாளுமைவண்ணமே. (எ)

துன்னவாடையர்தூமழுவாளினர்
பின்னுசெஞ்சடைமேற்பிறைவைத்தவர்
மன்னுவார்பொழில்சூழ்மணஞ்சேரியெம்
மன்னனர்கழலேதொழவாய்க்குமே. (அ)

சித்தர்தேவர்கண்மாலைடுநான்முகன்
புத்தர்சேரமண்கையர்புகழுவே
மத்தர்தாமறியார்மணஞ்சேரியெம்
அத்தனர்க்கடியார்க்கல்லலில்லையே. (சு)

கடுத்தமேனியரக்கன்கயிலையை
யெடுத்தவனெடுநீண்முடிபத்திறப்
படுத்தலுமணஞ்சேரியருளெனக்
கொடுத்தனன்கொற்றவாளொடுகாமமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அருள்வள்ளல்நாயகர், தேவியார்-யாழின்மொழியம்மை.

திருமருகல்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பெருகலாக்தவம்பேதைமைதீரலாக்
திருகலாகியசிக்தைதிருத்தலாம்
பருகலாம்பரமாயதோராளக்தம்
மருகலாண்டிவாழ்த்திவணங்கவே. (க)

பாடங்கொள்பனுவற்றிறங்கற்றப்போய்
நாடங்குள்ளனதட்டியநாணிலீர்
மாடஞ்சூழ்மருகற்பெருமான்றிரு
வேடங்கைதொழவிடெளிதாகுமே. (உ)

கினத்தினல்லருசெய்தொழிலாமவை
யினத்துநீங்கின்றுதரவாய்மிக
மனத்தினுண்மருகற்பெருமான்றிறம்
கினைப்பினுக்கில்லைதீவினைவாழ்க்கையே. (ங)

ஓதுபைங்கிளிக்கொண்பலமுதூட்டிப்
பாதுகாத்துப்பலபலகற்பித்த
மாதுதான்மருகற்பெருமானுக்குத்
தூதுசொல்லவிடத்தான்றெடங்குமே. (ச)

இன்னவாறென்பதண்டறியேனின்று
தன்னுகைவளோசோரக்கணீர்மல்கும்
மன்னுதென்மருகற்பெருமான்றிறம்
உன்னியொண்கொடியுள்ளமுருகுமே. (ஞ)

சங்குஞ்சோரக்கலியுஞ்சரியவே
மங்கைதான்மருகற்பெருமான்வரும்
அங்கவிதியருகணையாளிற்கும்
கங்கைமீரதற்கென்செய்கேனுமே. (ஙு)

காட்சிபெற்றிலளாகிலுங்காதலே
நீட்சியொன்றறியாதுமிகுவதே
மாட்சியார்மருகற்பெருமானுக்குத்
தாழ்ச்சிசாலவுண்டாகுமென்றையலே. (எ)

நீடுநெஞ்சுணினுந்தகணீர்மல்கும்
ஓடுமாலினெடொண்கொடிமாதராள்
மாடுநீண்மருகற்பெருமானுவரிற
கூடுநீயென்றுகூடலிழைக்குமே. (அ)

கந்தவார்குழல்கட்டிலிள்காரிகை
பந்திமால்விடையோடுமன்பாய்மிக
வந்தியாமருகற்பெருமானென்று
சிந்தைசெய்துதிகைத்திடுங்காண்மினே. (கூ)

ஆதிமாமலையன்றெடுத்தானிற்றச்
சோதியென்றலுந்தொல்லருள்செய்திடு
மாதியான்மருகற்பெருமான்றிறம்
ஓதிவாழ்பவரும்பர்க்குமும்பரே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-மாணிக்கவண்ணீசுவரர், தேவியார்-வண்டுவார்குழலம்மை.

தனி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுவெண்பிறைக்கண்ணியோர்கோவண
மொன்றுமுரலுமையோடுமுடித்தது
வொன்றுவெண்டலையேந்தியெழுள்ளத்தே
யொன்றிநின்றருளையுமொருவனே. (க)

இரண்டுமாமலர்க்குள்ளனசெய்தொழி
லிரண்டுமாமலர்க்குள்ளனகோலங்க
ளிரண்டுமில்லிளமானெமையாளுகந்
திரண்டுபோதுமென்சிந்தையுள்வைகுமே. (உ)

மூன்றுமூர்த்தியுறின்றியலுந்தொழில்
மூன்றுமாயினமூவிலைச்சூலத்தன்
மூன்றுகண்ணினன்றீத்தொழின்மூன்றினன்
மூன்றுபோதுமென்சிந்தையுண்மூழ்குமே. (கூ)

நாலின்மேன்முகஞ்செற்றதுமன்னிமல்
நாலுகன்குணர்ந்திட்டதுமின்பமா
நாலுவேதஞ்சரித்ததுகன்னெறி
நாலுபோலெமகத்தறைநாதனே. (ச)

அஞ்சுமஞ்சுமோராடியரைமிசை
யஞ்சுபோலரையர்த்ததின்றத்துவ
மஞ்சுமஞ்சுமோரோரைஞ்சுமாயவ
னஞ்சுமாமெமகத்தறையாதியே. (ஙி)

ஆறுகால்வண்டுமூசியகொன்றையன்
ஆறுசூடியவண்டமுதல்வனர்
ஆறுகூர்மையர்க்கச்சமயப்பொருள்
ஆறுபோலெமகத்தறையாதியே. (சு)

ஏழுமாமலையேழ்பொழில்சூழ்கடல்
ஏழுபோற்றுமிராவணன்கைகரம்
பேழுகேட்டருள்செய்தவன்பொற்கழல்
ஏழுஞ்சூழுடியேன்மனத்துள்ளவே. (எ)

எட்டுமூர்த்தியாய்நின்றியலுந்தொழில்
எட்டுவான்குணத்தீசனெம்மான்றன்னை

யெட்டூர்த்தியுமெம்மிறையெம்முளே
யெட்டூர்த்தியுமெம்முளொடுங்குமே. (அ)

ஒன்பதொன்பதியா ஜெயொளிகளி
றொன்பதொன் பதுபல்கணஞ்சூழவே
யொன்பதாமவைதீத்தொழிலின்னுரை
யொன்பதொத்துநின்றென்னுளொடுங்குமே. (கூ)

பத்துநூறவன்வெங்கண்வெள்ளேற்றண்ணல்
பத்துநூறவன்பல்சடைதோண்மிசை
பத்தியாமிலமாதலின்ஞானத்தார்
பத்தியானிடங்கொண்டதுபள்ளியே. (கo)

திருச்சிற்றம்பலம்.

தனி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலுமவீங்கிளவேனிலு
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
யீசனெந்தையிணையடிநீழலே. (க)

நமச்சிவாயவேஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவேநான நிலிச்சையும்
நமச்சிவாயவேநாவின்றேத்துமே
நமச்சிவாயவேநன்னெறிக்காட்டுமே. (உ)

ஆளாகாராளாளுரையடைந்தய்யார்
மீளாவாட்செய்துமெய்ம்மையுணர்ந்திலார்
* தோளாதசுரையோதொழும்பர்செவி
வாளாமாய்ந்தமண்ணுங்கிக்கழிவரே. (ங)

நடலைவாழ்வுகொண்டென்செய்திர்காணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதண்டவர்கைவிட்டால்
உடலினூர்விடந்தூர்முனிபண்டமே. (ச)

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டரனுமகவில்லிலார்
ஆக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாயிக்கழிவரே. (ஞ)

குறிகளுமடையாளமுங்கோயிலும்
நெறிகளுமவர்நின்றதோர்கோலையும்
அறியவாயிரமாரணமோதிலும்
பொறியிலீர்மனமென்கொல்புகாததே. (ஈ)

---

* தோளாதசுரையென்பது – தவாரமிடாதசுரைக்காய்.

வாழ்த்தவாயும்நினைக்கமடநெஞ்சும்
தாழ்த்தச்சென்னியுந்தகுலவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்தொழியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. (எ)

எழுதுபாவைகல்லார்திறம்விட்டுநான்
றெழுதுபோகின்றேனையுஞ்சூழ்ந்துகொண்
டெழுதகால்வழியேயுழுவான்பொருட்
டிழுதைநெஞ்சமிதென்படுகின்றதே. (அ)

நெக்குநெக்குநினைபவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர்பூவுநீருங்கொண்டு
நக்குநிற்பரவர்தமைநாணியே. (கூ)

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போன்
மறையின்மூளன்மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வுகயிற்றினன்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே. (கo)

திருச்சிற்றம்பலம்.
ஆக பதிகம்-கூ.

தனி-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஏயிலானெனிச்சையகம்படி
கோயிலானைக்குணப்பெருங்குன்றினை
வாயிலானமனென் மனியைப்பெற்ற
தாயிலானைத்தழுவுமெனவியே. (க)

ஞானத்தாற்றொழுவார்சிலஞானிகண்
ஞானத்தாற்றொழுவேனுனைநானலேன்
ஞானத்தாற்றொழுவார்கடொழக்கண்டு
ஞானத்தாலுனைநானுந்தொழுவனே. (உ)

முன்னைஞானமுதற்றனிவித்தினைப்
பின்னைஞானப்பிறங்குசடையனை
யென்னைஞானத்திருளறுத்தாண்டவன்
றன்னைஞானத்தனியிட்டுவைப்பனே. (ங)

புழுவுக்குங்குணநான்கெனக்கும்மதே
புழுவுக்கிங்கெனக்குள்ளபொல்லாங்கில்லை
புழுவினுங்கடையேன்புனிதன்றமர்
குழுவுக்கெவ்விடத்தேசென்றுகூடவே. (ச)

மலியேயஞ் துவிழினுமனிதர்காள்
நிலையினின்றீர்கலங்கப்பெறுதிரேல்

தலைவனுமையவளீசன்றமர்கனைக்
கொலைகையானைதான்கொன்றிடுகிற்குமே. (நி)

கற்றுக்கொள்வனவாயுளகாவுள
இட்டுக்கொள்வனபூவுளநீருள
கற்றைச்செஞ்சடையானுளனுமுளோ
மெத்துக்கோகமனல்முனிவுண்பதே. (சு)

மனிதர்காளிங்கேவம்மொன்றுசொல்லுகேன்
கனிதந்தாற்கனியுண்ணவும்வல்லிரே
புனிதன்பொற்கழலீசனெனுங்கனி
யினிதுசாலவுமேசற்றவர்கட்கே. (எ)

என்னேயேதுமறிந்திலனெம்பிரான்
றன்னேகாணுமுனேதுமறிந்திலே
னென்னேத்தன்னடியானென்றறிதலுந்
தன்னேகாணும்பிரானென்றறிந்தெனே. (அ)

தெள்ளத்தேறிதெளிந்துதித்திப்பதோ
ருள்ளத்தீதறலுமதவொளிவெளி
கள்ளத்தேகடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவினைந்ததே. (கூ, க0)

திருச்சிற்றம்பலம்.

காலபாராயணம்–திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கண்டுகொள்ளரியானைக்கனவித்துப்
பண்டுநாஞ்செய்தபாழிமைகேட்டிரேல்
கொண்டபாணிகொடுகொட்டிதாளங்கைக்
கொண்டதொண்டைதுன்னிஆஞ்சூமலே. (க)

நடுக்கத்துள்ளநகையுளநம்பர்க்குக்
கடுக்கக்கல்லவடமிடுவார்கட்குக்
கொடுக்கக்கொள்வெனவுரைப்பார்களோ
மிடுக்கண்செய்யப்பெறிரிங்குநீங்குமே. (உ)

கார்கொள்கொன்றைக்கடிமலர்க்கண்ணியான்
சீர்கொணமஞ்சிவனென்றரற்றுவார்
ஆர்களாகிலுமாகவர்கனீர்
நீர்கள்சாரப்பெறிரிங்குநீங்குமே. (கூ)

சாற்றினேன்சடைநீண்முடிச்சங்கரன்
சிற்றங்காமங்கள்வைத்தவன்சேவடி
யாற்றவுங்களிபட்டமனத்தராய்ப்
பேற்றியென்றுரைப்பார்புடைபோகலே. (ச)

இறையென்சொன் மறவேன மன்னுதாதுவீர்
பிறையும்பாம்புமுடைப்பெருமான்றமர்
நறவாரியகன்னலுஞ்சாந்திலும்
கிறையீறணிவாரெதிர்செல்லலே. (சு)

வாமதேவன்வளருகர்வைகலுங்
காமமொன்றிலராய்க்கைவிளக்கொடு
தாமதூபமுந்தண்ணலுஞ்சாந்தமும்
ஏமமும்புணிவாரெதிர்செல்லலே. (சூ)

படையும்பாசமும்பற்றியகையினீர்
அடையன்மின்னமதீசனடியரை
விடைகொளூர்தியினனடியார்குமாம்
புடைபுகாதுநீர்போற்றியேபோமினே. (எ)

விச்சையாவதும்வேட்கைமையாவதும்
நிச்சனீறணிவாரைநினைப்பதே
யச்சமெய்தியருகணையாதுநீர்
பிச்சைபுக்கவரன்பரைப்பேணுமே. (அ)

இன்னங்கேண்மினிளம்பிறைசூடிய
மன்னன்பாதமனத்துடனேத்துவார்
மன்னுமஞ்செழுத்தாகியமந்திரந்
தன்னிலொன்றுவல்லரையுஞ்சாரலே. (சுஉ)

மற்றுங்கேண்மின்மனப்பரிப்பொன்றின்றிச்
சுற்றும்பூசியிற்றெருடுகோவணம்
ஒற்றைமேறுடையானடியேயல்லாற்
பற்றொன்றில்லிகண்மேற்படைபோகலே. (கூ)

அரக்கனீரைந்தலையுமோர்தாளினை
நெருக்கியூன்றியிட்டான்றமர்கிற்கிலுஞ்
சருக்கெனதங்குப்போற்கண்டமற்றுநீர்
சுருக்கெனிற்சுடரான்கழல்சூடுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

மறக்கிற்பனே என்னும்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்:

காசினேக்கனலேக்கதிர்மாமணித்
தேசினேப்புகழார்சிலர்தெண்ணர்காண்
மாசினேக்கழித்தாட்கொளவல்லவெம்
மீசனேயினிநான்மறக்கிற்பனே. (க)

புந்திக்குவிளக்காயபுராணனைச்
சந்திக்கண்ணடமாடுஞ்சதுரனை
யந்திவண்ணனையாழமுன்மூர்த்தியை
வந்தெனுள்ளங்கொண்டானைமறப்பனே. (உ)

ஈசனீசனென்றென்றுமரற்றுவன்
ஈசன்றானென்மனத்திற்பிரிவிலன்
பிரமன்றன்சிரமரிந்தபெரியோய்போற்றி பெண்ணுருவோடாணுருவாய் நின்றாய்போற்றி, கரநான்குமுக்கண்ணு முடையாய்போற்றி காதலிப்பார்க் காற்ற வெளியாய்போற்றி, யருமந்தத்தேவர்க் கரசேபோற்றி யன்றரக்கனேந் நான்கு தோளுந்தாளுஞ், சிரமெரித்தசேவடியாய் போற்றிபோற்றி திருமூலத் தானனே போற்றிபோற்றி. (கo)

திருச்சிற்றம்பலம்.

ஆதிகம்-கூஉ.

திருவாரூர்-அரநெறித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொருங்கைமதகரியுருவைப் போர்வையானைப் பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தினானை, கரும்புதருகட்டியையின் னமிர்தைத்தேனைக் காண்பரிய செழுஞ்சுடரைக் கனகக்குன்றை, யிருங்கனகமதிலாரூர் மூலத்தானத்தெமூர் தருளியிருந்தானே யிமையோரேத்தும், அருந்தவனெயரெறியி லப்பன்றன்னே யடைந்தடியேனருவினேநோ யறுத்தவாறே. (க)

கற்பகமுமிருசுடரு மாயினானைக் காளத்திகயிலாய மலையுளானை, விற்பயி லுமதனழிய விழித்தான்றன்னை வியனுலகுக்குவேடுவனுய் நின்றான்றன்னைப், பொற்பமரும் பொழிலாரூர் மூலத்தானம் பொருந்தியவெம் பெருமானைப் பொருந்தார்சிக்தை, யற்புதனெயரநெறியி லப்பன்றன்னே யடைந்தடியேனரு வினேநோ யறுத்தவாறே. (உ)

பாதியொரு பெண்முடிமேற் கங்கையானைப் பாரூர்பரங்குன்ற மேயான்றன்னை, வேதியனைத்தன்னடியார்க் கெளியான்றன்னை மெய்ஞ்ஞானவிளக் காகின விரையெனாமும், போதியலும் பொழிலாரூர் மூலத்தானம் புற்றிடங் கொண்டிருந்தானைப் போற்றுவார்க, ளாதியனெயரநெறியி லப்பன்றன்னே யடைந்தடியே னருவினேநோ யறுத்தவாறே. (ஙு)

நந்திபணிகொண் டருளுநம்பன் றன்னைநாகேச் சரமிடமா நண்ணினானைச், சந்திமலரிட்டணிந்து வாலனேசேத்துந் தத்துவனைச்சக்கரமாற் கிந்தான்றன்னை, யிந்துதழைபொழிலாரூர் மூலத்தான மிடங்கொண்ட பெருமானை யிமையோர்போற்றும், அந்தணனெயரநெறியி லப்பன்றன்னே யடைந்தடியே னருவினேநோ யறுத்தவாறே. (ச)

சுடர்ப்பவளத் திருமேனிவெண்ணீற்றானைச் சோதிலிங்கத் தூங்கானை மாடத்தானை, வீடக்கிடகாடிடமாக வுடையான்றன்னை மிக்கரண மெரிபூட்ட வல்லான்றன்னை, மடற்குலவுபொழிலாரூர் மூலத்தான மன்னியவெம் பெருமானை மதியார்வேள்வி, யடர்த்தவனெயரநெறியி லப்பன்றன்னே யடைந்தடியேனருவினேநோ யறுத்தவாறே. (ஞ)

தாயவனெவ்வுயிர்க்குந் தன்னெப்பில்லாத் தகுதில்லைநடம்பயிலுந் தலை
வன்றன்னை, மாயவனுமலரவனும் வானேறேத்த மறிகடனஞ்சுண்டுகந்த மைந்
தன்றன்னை, மேயவனப்பொழிலாரூர்மூலத்தானம் விரும்பியவெம்பெருமானை
யெல்லாமுன்னே, யாயவனையரெரியிலப்பன்றன்னை யடைந்தடியே னருவினை
நோ யறுத்தவாறே. (சு)

பொருளியல்நற் சொற்பதங்களாயினைப் புகலுரும்புறம்பயமும் மே
யான்றன்னை, மறுளியலுஞ்சிந்தையர்க்கு மருந்தாதன்னை மறைக்காடுஞ்சாய்க்
காடு மன்னினானை, யிருளியல்நற்பொழிலாரூர் மூலத்தானத்தினிதமரும்பெரு
மானை யிமையோரேத்த, வருளியனையரெரியிலப்பன்றன்னை யடைந்தடியே
னருவினைநோ யறுத்தவாறே. (எ)

காலனைக்காலாற்காய்ந்தகடவுடன்னைக் காரோணங்கழிப்பாலை மேயான்
றன்னைப், பாலனுக்குப்பாற்கடலன் றீந்தான்றன்னைப் பணியுகந்தவடியார்
கட்கினியான்றன்னைச், சேலுகளும்வயலாரூர்மூலத்தானஞ் சேர்ந்திருந்தபெரு
மானைப்பவளமீன்ற, ஆலவனையரெரியிலப்பன்றன்னை யடைந்தடியேனருவி
னைநோ யறுத்தவாறே. (அ)

ஒப்பொருவரில்லாதவொருவன்றன்னை யோத்தூருமுறையூருமேவினானை,
வைப்பவனை மாணிக்கச்சோதியானை மாருதமுந்தீவெளிநீர்மண்ணுனைப்,பெ()

பகலவன்றன்பல்லுகுத்த படிறன்றன்னைப் பராய்த்துறைபைஞ்ஞீலியிடம்
பாவித்தானை, யிகலவனையிராவணனை யிடர்செய்தானை யேத்தாதார்மனத்தகத்
தூளிருளானைப்,புகழ்நிலவுபொழிலாரூர்மூலத்தானம்பொருந்தியவெம்பெரு
மானைப் போற்றாரிந்தை, யகலவனையரெரியிலப்பன்றன்னை யடைந்தடியே
னருவினைநோ யறுத்தவாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒருவனுலகேத்தநின்றவூரோ வோருருவேமூவுருவ மானவூரோ, கரு
வனப்காலனைமுன்காய்ந்தவூரோ காமனையுங்கண்ணழலால் விழித்தவூரோ,
மருவனைப் மண்ணும்விண்ணுந் தெரித்தவூரோ மான்மறிக்கையேற்கியோர்
மாதேர்ப்பாகர், திருவினுள்சேர்வதற்கு முன்னேபின்னே திருவாரூர்கோயி
லாக் கொண்டவூரே. (க)

மலையார்பொற்பாவையொடு மகிழ்ந்தவூரோ வானவரைவலியமுத மூட்
டியவூரா, ணிலேபேறுபெறுவித்த நின்றவூரோ நினைப்பரியதழற்பிழம்பாய்
நிமிர்ந்தவூரோ, அலைசாமையலைகடனஞ் சுண்டவூரோ வமரர்கணம் புடை
சூழவிருந்தவூரோ, லையான்மூப்புமெரித்த முன்னேபின்னே திருவாரூர்
கோயிலாக் கொண்டவூரே. (உ)

பாடகஞ்சேர்மெல்லடிநற் பாவையாளு நீயும்பேய்ப்பரீத்தனது பலத்
தைக்காண்பான், வேடனுய்வில்வாங்கி யெய்தவூரோ விண்ணவர்க்குங்கண்

ணவனுய் நின்றநாளோ, மாடமொடு மாளிகைகண் மல்குதில்லை மணிதிகழு மம்பலத்தே மன்னிக்கூத்தை, யாடுவான்புகுவதற்கு முன்னேபின்னே வணி யாரூர்கோயிலாக் கொண்டநாளே. (சு)

ஒங்கியுயர்ந்தெழுந்து நின்றநாளோ வோருகம்போ லேழுகமாய் நின்ற நாளோ, தாங்கியசீர்த்தலையான வாளேர்செய்த தக்கன்றன் பெருவேள்வி தகர்த்தநாளோ, நீங்கியநீர்த்தாமரையா னெடுமாலோடு நில்லாயெம்பெருமா னே யென்றங்கேத்தி, வாங்கிமதி வைப்பதற்கு முன்னேபின்னே வளராரூர் கோயிலாக் கொண்டநாளே. (எ)

பாலனுய்வளர்ந்திலாப்பான்மையானேபணிவார்கட்கங்கங்கேபற்றனே நீலமாமணிகண்டத்தெண்டோளானேநெருநலாயின்றுநினையாகுஞ் சீலமேசிவலோகநெறியேயாகுஞ்சீர்மையேகூர்மையேகுணமேமலல்ல கோலநீகொள்வதற்குமுன்னேபின்னேகுளிராரூர்கோயிலாக்கொண்டநாளே.

நிறம்பலவும்வழிகாட்டிச் செய்கைகாட்டிச் சிறியையாய்ப் பெரியையாய் நின்றநாளோ, மறம்பலவுமுடையாரை மயக்கந்தீர்த்து மாமுனிவர்க்கருள்செ ய்தங்கிருந்தநாளோ, பிறங்கியசீர்ப் பிரமன்றன் றலைகையேந்திப் பிச்சையேற் றுண்டுழன்றுதின்றநாளோ, அறம்பலவுமுரைப்பதற்கு முன்னேபின்னே வணி யாரூர்கோயிலாக் கொண்டநாளே. (சு)

நிலத்தரத்து நீண்டுருவமானநாளோ நிற்பனவுநடப்பனவு மீயேயாகிக், கலந்துரைக்கக் கற்பகமாய் நின்றநாளோ காரணத்தா ஞரணனைக் கற்பித் தன்று, வலஞ்சுருக்கி வல்லசுரர்மாண்டுவீழ வாசுகியை வாய்மடித்துவாளே ருய்ய, சலந்தரனைக் கொல்வதற்கு முன்னேபின்னே தண்ணூர்கோயிலாக் கொண்டநாளே. (எ)

பாதத்தால்முயலகனைப் பாதுகாத்துப் பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற நாளோ, கீதத்தைமிகப்பாடி மடியார்க்கென்றுங்கேடிலாவாலுலகங் கொடுத்த நாளோ, பூதத்தான்பொருநீலி புனிதன்மேவிப் பொய்யுரையா மறைநால்வர் விண்ணோர்க்கென்றும், வேதத்தைவிரிப்பதற்கு முன்னேபின்னே விழவாரூர் கோயிலாக் கொண்டநாளே. (அ)

புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும் பூதலங்களவையெட்டும் பொழில்களெட்டங், கலியெட்டங் காப்பெட்டங் காட்சியெட்டங் கழற்சேவடி யடைந்தார்களீரணைட்டும், நகையெட்டுநாளெட்டு நன்மையெட்டு நலஞ்சிறந் தார் மனத்தகத்தமலர்களெட்டங், திகையெட்டுந்தெரிப்பதற்கு முன்னேபின் னே திருவாரூர்கோயிலாக் கொண்டநாளே. (க)

ஈசனுயுலகேழு மீலியுமாகி மிராவணனீ மீடழித்திட் டிருந்தநாளோ, வாசமலர் மிழ்தென்றலானநாளோ மதயானையுரிபோர்த்து மகிழ்ந்தநாளோ, தாதுமலர்சண்டிக்குக் கொடுத்தநாளோ சகரர்களீமறித்திட்டாட் கொண்ட நாளோ, தேசமுமை யறிவதற்கு முன்னேபின்னே திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

திருவெண்காடு-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தூண்டுசுடர்மேனிதுளிரோருடிச்சூலங்கையேந்தியோர்சுழல்வாய்நாகம்
பூண்டுபொறியரவங்காதிற்பெய்துபொற்சடைகளவைதாழப்புரிவெண்ணூலர்
நீண்டுவிடந்திலங்குதிங்கள்சூடிநெடுந்தெருவேவந்தெனதுநெஞ்சங்கொண்டார்
வேண்டுகடைகடக்கும்வெள்ளேறேறிவெண்காடுமேவியவிகிர்தனுரே. (க)

பாதந்தனிப்பார்மேல்வைத்தபாதர்பாதாளமேழுருவப்பாய்ந்தபாதர்
ஏதப்படாவண்ணங்கின்றபாதரேழுலகுமாய்ந்றபாதபாத
ரோதற்றொலிமடங்கியூருண்டேறியொத்தலகமெல்லாமொடுங்கியபின்
வேதத்தொலிகொண்டுவீணைகேட்பார்வெண்காடுமேவியவிகிர்தனுரே. (உ)

நென்னலேயோரோடேந்திப் பிச்சைக்கென்று வந்தார்க்குவந்தேனென்
றில்லேபுக்கேன், அந்நிலையேநிற்கின்றுரையங்கொள்ளா ருகேவருவார்போ
னேனுகுகின்றார், தங்நிலைமையேதோதாம்மூர்தானேதோ வென்றேனுக்கொன்
றுகச்சொல்லமாட்டார், மென்மூலையார்கூடிலிரும்பியாடும் வெண்காடுமேவிய
விகிர்தனுரே. (ங)

ஆத்தமையடக்கியாருசுடியையவாயரவசைத்தங்கானேறேறிப்
போகம்பலவுடைத்தாய்ப்பூதஞ்சூழப்புலித்தோலுடையாப்புருந்தின்ரூடினை
பாஇடுவான்சென்றேணப்பற்றிகோக்கிப்பரிசழித்தென்வளைகவர்ந்தார்பாலியே
பேசுமுகிலுரிஞ்சுசோலைசூழ்ந்தவெண்காடுமேவியவிகிர்தனுரே. (ச)

கொள்ளேக்குழைக்காதிற்குண்டைப்பூதம் கொடுகொட்டிகொட்டிக்குனித்
தப்பாட, வுள்ளங்கவர்ந்திட்டுப்போவார்போல வுழிதர்வர்நான்றெரியமாட்
டேன்மீண்டேன், கள்ளவிழிவிழிப்பர்காணக்கண்ணுற் கண்ணுளார்போலே
கரந்துகிற்பர், வெள்ளச்சடைமுடியர்வேதகாவர் வெண்காடுமேவிய விகிர்த
னுரே. (ஞ)

தொட்டிலங்குசூலத்தர் மழுவாளேந்திச் சுடர்க்கொன்றைத்தாரணிந்து
சுவைகள்பேசிப், பட்டிவெள்ளேறேறிப்பலியுங்கொள்ளார் பசர்ப்பரைசப்பரி
சழிப்பாரொக்கின்றாரார், சுட்டிலங்குவெண்ணீற்றர்கனலப்பேசிக் கருத்தழி
த்தவனேகவர்ந்தார் காலைமாலை, விட்டிலங்குசடைமுடியர்வேதகாவர் வெண்
காடுமேவியவிகிர்தனுரே. (ட)

பெண்பாலொருபாகம்பேணுவாழ்க்கைக் கோணுகம்பூண்பனவுகாணுஞ்சொல்
உண்பாருநங்குவாரெவ்வாகங்காயுண்பதுநஞ்சன்றேலோவியுண்ணர் [லசர்
பண்பாலவிர்சடையர்பற்றிகோக்கிப்பகலைப்பரிசழியப்பேசுகின்றர்
விண்பான்மதிசூடிவேதமோதிவெண்காடுமேவியவிகிர்தனுரே. (ண)

மருதங்களாய்மொழிவர்மங்கையோடுவானவருமாலயனுங்கூடித்தங்கள் [க்
சுருதங்களாற்றுதித்துத்தூரோட்டித்தோத்திரங்கள்பலசொல்லித்தாங்காட்டி
கருதுஞ்கொலெம்பெருமான்செய்குற்றேவலென்பார்க்கு வேண்டும்வரங்கொடு
விகிர்தங்களாநடப்பர்வெள்ளேறேறிவெண்காடுமேவியவிகிர்தனுரே. [த்து

புள்ளாரனூரான்முகனும்புக்குப்போர்துங்காணூர்பொரியழலாய்கின்றான்னீ
யுள்ளாரேயொன்றல்லாவுருவினேயுலகுக்கொருவிளக்காய்கின்றான்னீ
கள்ளேற்துகொன்றைதூய்க்காலைமூன்றுமோவாமேகின்றதவங்கள்செய்த
வெள்ளாரேவேண்டும்வரங்கொடுப்பார்வெண்காடுமேலியவிகிர்தனாரே. (சு)

மாக்குன்றெடுத்தான்றன்மைந்தனுகிமாவேழமும்வில்லாமித்தான்றன்னே
நோக்குந்துணைத்தேவரெல்லாநிற்கநொடியரையிலேவவிழித்தான்றன்னைக்
காக்குங்கடலிலைக்கைக்கோமான்றன்னைக்கதிர்முடியும்கண்ணும்பிதுங்கவூன்றி
வீக்கந்தவிர்த்தவிரலார்போலும்வெண்காடுமேலியவிகிர்தனாரே. (கம)

திருச்சிற்றம்பலம்.

ஆறாம் பதிகம்-கூகி.

திருப்பழனம்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலையார்கடனஞ்சமுண்டார்தாமேயமரர்களுக்கருள்செய்யுமாதிதாமே[தாமே
கொலையாயகூற்றமுதைத்தார்தாமேகொல்வேங்கைத்தோலொன்றசைத்தார்
சிலையாற்புரமூன்றெரித்தார்தாமேதீநோய்களீர்க்குந்தென்னையாண்டார்தாமே
பலிதேர்ந்தழகாயபண்பர்தாமேபழனகரெம்பிரானார்தாமே. (க)

வெள்ளமொருசடைமேலேற்றார்தாமேமேலார்கண்மேலார்கண்மேலார்தாமே
கள்ளங்கடிந்தென்னையாண்டார்தாமேகருத்தடையபூதப்படையார்தாமே
யுள்ளத்துவகைதருவார்தாமேயுறுநோய்சிறுபிணிகடீர்ப்பார்தாமே
பள்ளப்பரவைநஞ்சுண்டார்தாமேபழனகரெம்பிரானார்தாமே. (உ)

இரவும்பகலுமாய்கின்றார்தாமேயெப்போதுமென்னெஞ்சத்துள்ளார்தாமே
யிரவமரையிலசைத்தார்தாமேயனலாடியங்கைமறித்தார்தாமே
சுரவன்கமழுங்குற்றாலர்தாமேகோலங்கண்மேன்மேலுகப்பார்தாமே
பரவுமடியார்க்குப்பாங்கர்தாமேபழனகரெம்பிரானார்தாமே. (ரு)

மாறின்மதின்மூன்றுமெய்தார்தாமேவரியரவங்கச்சாகவார்த்தார்தாமே
நீறுசேர்திருமேனிநிமலர்தாமேநெற்றிநெருப்புக்கண்வைத்தார்தாமே
யேறுகொடுஞ்சூலக்கையார்தாமேயென்பாபரணமணிந்தார்தாமே
பாறுண்டலையிற்பலியார்தாமேபழனகரெம்பிரானார்தாமே. (ச)

சீரால்வணங்கப்படுவார்தாமேதிசைக்கெல்லாந்தேவாகிநின்றார்தாமே
யாராவமுதமுமானார்தாமேயளவில்பெருமையுடையார்தாமே
நீரார்நியமமுடையார்தாமேநீள்வரைவில்லைகவனித்தார்தாமே
பாரார்பரவப்படுவார்தாமேபழனகரெம்பிரானார்தாமே. (ரி)

காலனுயிர்வெளவவல்லார்தாமேகடிதோடும்வெள்ளேவிடையார்தாமே
கோலம்பலவுமுகப்பார்தாமேகோணகராணகப்பூண்டார்தாமே
நீலம்பொலிக்தயீடற்றார்தாமேநீள்வரையினுச்சியிருப்பார்தாமே
பாலனிருத்தருமானார்தாமேபழனகரெம்பிரானார்தாமே. (சு)

ஏய்ந்தவுமைங்கைபங்கர்தாமேயேழுலிக்கப்புறமாய்கின்றார்தாமே
யாய்ந்தமலர்தூவகின்றார்தாமேயளவில்பெருமையுடையார்தாமே
தேய்ந்தபிறைசடைமேல்வைத்தார்தாமேதிகழ்வாயரவதனையார்த்தசார்தாமே
பாய்ந்தபடர்கங்கையேற்றார்தாமேபழனஞகரெம்பிரானர்தாமே. (எ)

ஓராதாருள்ளத்தினில்லார்தாமேயுள்ளுமன்பர்மனத்தார்தாமே
பேராதென்சிந்தையிருந்தார்தாமேபிறர்க்கென்னுங்காட்சிக்கரியார்தாமே
பூராருமூவுலகத்துள்ளார்தாமேயுலகைநடுங்காமற்காப்பார்தாமே
பாராரமுழவத்தினையார்தாமேபழனஞகரெம்பிரானர்தாமே. (அ)

நீண்டவர்க்கோர் நெருப்புருவ மானார்தாமே நேரிழையை பொருபாகம்
வைத்தார்தாமே, பூண்டரவைப் புலித்தோன்மே லாரத்தார்தாமே பொன்னி
றத்தவெள்ளச் சடையார்தாமே, யாண்டுலகேழுனத்தினோயும் வைத்தார்தாமே
யங்கங்கேசிவமாகி நின்றார்தாமே, பாண்டவரிற்பார்த்தனுக்குப் பரிந்தார்
தாமே பழனஞகரெம்பிரானர்தாமே. (சு)

விடையேறி வேண்டுலகத் திருப்பார்தாமே விரிசடைமோன் சோற்றுத்
துறையார்தாமே, புடைசூழுத்தேவர் குழாத்தார்தாமே பூந்துருத்தி நெய்த்
தானமேயார்தாமே, யடைவேபுனல்சூழை யாற்றார்தாமே யரக்கனையுமாற்ற
லழித்தார்தாமே, படையாப்பல்பூத முடையார்தாமே பழனஞகரெம்பிரானர்
தாமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு–திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்திரிபுரங்கணீருநோக்குமனலாடியாரமுதேயென்றேனனே
கூரார்மழுவாட்படையொன்றேந்திக்குறட்பூதப்பல்படையானென்றேனனே
பேராயிரமுடையாயென்றேனனேபிறைசூடும்பிஞ்ஞகனேயென்றேனனே
யாராவமுதேயென்னையானனேயென்றென்றேநானரற்றினைகின்றேனே. (க)

தீவாயின்முப்புரங்கணீருநோக்குந்தீர்த்தாபுராணனேயென்றேனனே
மூவாமதிசூடியென்றேனனேமுதல்வாமுக்கண்ணனேயென்றேனனே
யேவார்சிலையானேயென்றேனனேயிடும்பைக்கடனின்றுமேறவாங்கி
யாவாவென்றருள்புரியுமையாறனேயென்றென்றேநானரற்றினைகின்றேனே.

அஞ்சுண்ணவண்ணனேயென்றேனனேயடியார்கட்கரமுதேயென்றேனனே
நஞ்சணிகண்டனேயென்றேனனேகாலவர்கணன்மறையேயென்றேனனே
நெஞ்சுணரவுள்புக்கிருந்தபேதுகிறையுமமுதமேயென்றேனனே
யஞ்சாதேயாள்வானேயையாறனேயென்றென்றேநானரற்றினைகின்றேனே. (ங)

தொல்லைத்தோடுக்கலேயென்றேனனே தலங்குமிளம்பையாயென்றேனனே
யெல்லைகிறைந்தானேயென்றேனனேயேழ்நரம்பினின்னிசையாயென்றேனனே

யல்லற்கடல்புக்கழுந்துவேனை வாங்கியருள்செய்தாயென்றேனுனே
யெல்லீயாமையாரூரென்றேனுனேயென்றென்றேநானற்றிசைகின்றேனே.

இண்டைச்சடைமுடியா யென்றேனுனே யிருசுடர்வானத்தா யென்றே
னுனே, தொண்டாற் றொழப்படுவா யென்றேனுனே தூருத்திநெய்த் தாரனத்
தாயென்றேனுனே, கண்டங்கறுத்தானே யென்றேனுனே கனலாருங்கண்
ணுனே யென்றேனுனே, யண்டத்துக்காபால மையாறனே யென்றென்றே
நானற்றி சைகின்றேனே. (நி)

பற்றார்புரமெரித்தா யென்றேனுனே பசுபதிபாண்டரங்காவென்றேனுனே
கற்றார்கணவினுயென்றேனுனேகடவிடையொன்றார்தியாயென்றேனுனே
பற்றுனர்நெஞ்சுளாயென்றேனுனேபார்த்தற்கருள்செய்தாயென்றேனுனே
யற்றார்க்கருள்செய்யுமையாறனேயென்றென்றேநானற்றிசைகின்றேனே.(சு)

விண்ணேர்தலைவனேயென்றேனுனேவிளங்குமிளம்பிறையாயென்றேனுனே
யெண்ணரியிலெரித்தா யென்றேனுனேயேகம்பமேயானேயென்றேனுனே.
பண்ணுர்மறைபாடியென்றேனுனேபசுபதிபானீற்றுயென்றேனுனே
யண்ணவையாறனேயென்றேனுனேயென்றென்றேநானற்றிசைகின்றேனே.

அவனென்றுநானுன்னேயஞ்சாதேனையல்லலுப்பானேயென்றேனுனே
சிவனென்றுநானுன்னேயெல்லாஞ்சொல்லச்செல்வந்தருவானேயென்றேனுனே
பவனுனெனுளளத்துள்ளிகின்றுபண்டைவினேயறுப்பானென்றேனுனே
யவனென்றேயாதியேயையாறனேயென்றென்றேநானற்றிசைகின்றேனே. ()

கச்சியேகம்பனேயென்றேனுனேகயிலாயகிரோணுவென்றேனுனே
கிச்சன்மனுளனேயென்றேனுனேகின்ப்பாரன்மனத்துளாயென்றேனுனே
யுச்சம்போதேறறியென்றேனுனேயுள்குவாருள்ளத்தாயென்றேனுனே
யச்சம்பிணிதீர்க்குமையாறனேயென்றென்றேநானற்றிசைகின்றேனே. (சு)

வில்லாடிவேடனே யென்றேனுனே வெண்ணீறுமெய்க்கணிந்தா யென்
றேனுனே, சொல்லாயசூழலா யென்றேனுனே சுலாவாயதொன் னெறியேயென்
றேனுனே, யெல்லாமா யென்னுயிரே யென்றேனுனே யிலங்கையர்கோன்
றேளிறுத்தா யென்றேனுனே, யல்லாவினைதீர்க்கு மையாறனே யென்றென்
றேநானறறி சைகின்றேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-உஎ.

திருவையாறு-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலாமானுய்நீயேயுலகுக்கொருவனுய்கின்றுய்நீயே
வாசமலரெலாமானுய்நீயேமையான்மருகனுய்கின்றுய்நீயே
பேசப்பெரிதுமினியாய்நீயேபிரானுயடியென்மேல்வைத்தாய்நீயே
தேசவிளக்கெலாமானுய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ. (க)

நோக்கரிய திருமேனி யுடையாய்நீயே நோவாமே நோக்நருள வல்லாய் நீயே, காப்பரிய வைம்புலனுங் காத்தாய்நீயே காமனேயுங்கண்ணழலாற் காய்ந் தாய்நீயே, யார்ப்பரிய மாகாத மார்த்தாய்நீயே யடியானென் றடியென்மேல் வைத்தாய்நீயே, தீர்ப்பரியவல்வினோய் தீர்ப்பாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (உ)

கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய்நீயே கடல்வரைவானுநாய மானாய் நீயே, தனத்தகத்துத்தலைகலனுக் கொண்டாய்நீயே சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய்நீயே, மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய்நீயே மலர்ச்சேவடியென் மேல் வைத்தாய்நீயே, சினத்திருந்த திருலைகண்டனீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (ஊ)

வானுற்றமாமலைகளானாய்நீயே வடகயிலைமன்னியிருந்தாய்நீயே, பூணுற்ற வொளிமழுவாட் படையாய்நீயே யொளிமதியோ டரவுபுனல் வைத்தாய்நீயே, ஆணுற்றலைத் தமமர்ந்தாய்நீயே யடியானென்றடியென்மேல் வைத்தாய்நீயே, தேனுற்ற சொன்மடவாள் பங்கனீயேதிருவையாறகலாத செம்பொற்சோதீ. (எ)

பெண்ணண்பிறப்பிலியாய்நின்றாய்நீயேபெரியார்கட்கெல்லாம்பெரியாய்நீயே யுண்ணவருநஞ்சமுண்டாய்நீயேயூழிமுதல்வனுய்நின்றாய்நீயே கண்ணுயுலகெலாங்காத்தாய்நீயேகழற்கேசவடியென்மேல்வைத்தாய்நீயே திண்ணஞ்மழுவாட்படையாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ. (ஏ)

உற்றிருந்தவுணர்வெலாமானுய்நீயேவுற்றவர்க்கோர்சுற்றமாய்நின்றாய்நீயே கற்றிருந்தகலைஞானமானுய்நீயேகற்றவர்க்கோர்கற்பகமாய்நின்றாய்நீயே பெற்றிருந்ததாயவனினல்லாய்நீயேபிரானடியென்மேல்வைத்தாய்நீயே செற்றிருந்திருலைகண்டனீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ. (ஐ)

எல்லாவுலகுமானுய்நீயேயேகம்பமேவியிருந்தாய்நீயே நல்லாரைநன்மையறிவாய்நீயேஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே பொல்லாவினைகளறுப்பாய்நீயேபுகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே செல்வாயசெல்வந்தருவாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ. (ஒ)

ஆவினிலைந்தமர்ந்தாய்நீயேயளவில்பெருமைபுடையாய்நீயே பூவினிலுற்றமரர்நின்றாய்நீயேபோர்க்கோலங்கொண்டெயிலெய்தாய்நீயே நாவினுவுரையாய்நின்றாய்நீயேநண்ணியடியென்மேல்வைத்தாய்நீயே தேவரறியாததேவனீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ. (ஓ)

எண்டிசைக்கு மொண்சுடராய் நின்றாய்நீயே யேகம்பமேயவிறைவனீயே, வண்டிசைக்கு நறுங்கொன்றைத் தாராய்நீயே வாரானுலகருள வல்லாய்நீயே, தொண்டிசைத்துன் னடிபரவுநின்றாய்நீயே தூமலர்ச்சேவடியென்மேல் வைத் தாய்நீயே, திண்டிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (ஔ)

விண்டார்புரமூன் றமெய்தாய்நீயேவிண்ணவர்க்குமேலாகிநின்றாய்நீயே கண்டாரைக்கொல்லுகஞ்சுண்டாய்நீயேகால்விரலூழியாய்நின்றாய்நீயே

தொண்டாயடியேனையாண்டாய்நீயேனூமலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
திண்டோள்விட்டெரியாடலுகந்தாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதி. (கo)

ஆருமறியாவிடத்தாய்நீயேயாகாயஞ்தேரூரவல்லாய்நீயே
பேரும்பெரியலிலங்கைவேந்தன்பெரியமுடிபத்திறுத்தாய்நீயே
பூரும்புரமூன்றுமட்டாய்நீயேயொண்டாமரையானுமாலுங்கூடித்
தேரும்மடியென்மேல்வைத்தாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதி.(கக)

திருச்சிற்றம்பலம்.

திருமழபாடி–திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நீறேறுதிருமேனி யுடையான்கண்டாய் நெற்றிமேலொற்றைக்கணிறைத்
தான்கண்டாய், கூருகவுமைபாகங் கொண்டான்கண்டாய் கொடியவிடமுண்
டிருண்டகண்டன்கண்டா, யேறேறியெங்குந்திரிவான்கண்டா யேழுலகுமேழ்
மீயுமானான்கண்டாய், மாறுளர்தம்மரணமட்டான்கண்டாய் மழபாடிமன்னு
மணிளன்றனே. (க)

கொக்கிறகுசென்னியுடையான்கண்டாய்கொல்லேவிடையேறுங்கூத்தன்கண்டா
யக்கரைமேலாடலுடையான்கண்டாயனலங்கையேந்தியவாதிகண்டா
யக்கொடரவமணிந்தான்கண்டாயடியார்கட்காரமுதமானான்கண்டாய்
மற்றிருந்தகங்கைச்சடையான்கண்டாய்மழபாடிமன்னுமணிளன்றனே. (உ)

நெற்றித்தனிக்கணுடையான்கண்டாய் கேரிழையோர்பாகமாய் நின்றான்
கண்டாய், பற்றிப்பாம்பாட்டும்படிறன்கண்டாய் பல்லூர்பலிதேர்பரமன்கண்
டாய், செற்றரிபுரமூன்றுஞ்செற்றான்கண்டாய் செழுமாமதிசென்னிவைத்தா
ன்கண்டாய், மற்றெருருகுற்ற மிலாதான்கண்டாய் மழபாடிமன்னு மணிளன்
றனே. (ங)

அலையார்ந்தபுனற்கங்கைச்சடையான்கண்டா யண்டத்துக்கப்பாலாய்நின்
றான்கண்டாய், கொலையானகூற்றங்குமைத்தான்கண்டாய் கொல்லேங்கைத்
தோலொன் றுடுத்தான்கண்டாய், சிலையாற்றிரிபுரங்கள் செற்றான்கண்டாய்
செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்,மலையார்மடந்தைமணிளன்கண்டாய்
மழபாடிமன்னுமணிளன்றனே. (ச)

உலந்தார்தமங்கமணிந்தான்கண்டாயுலகையோடின்னருள்கள் செய்தான்
கண்டாய், நலந்திகழுங்கொன்றைச்சடையான்கண்டாய் நால்வேதமாறங்கமா
னான்கண்டா, யுலந்தார்தலேகலனுக்கொண்டான்கண்டா யும்பரார்தங்கள்பெரு
மான்கண்டாய், மலர்ந்தார்திருவடியென்றலேமேல்வைத்தமழபாடிமன்னுமணி
ளன்றனே. (ஞ)

தாமரையான்றன்றலேயைச் சாய்த்தான்கண்டாய் தகவுடையார்நெஞ்சிரு
க்கைகொண்டான்கண்டாய், பூமலரானேத்தும்புனிதன்கண்டாய் புணர்ச்சிப்
பொருளாயினின்றான்கண்டா, யேமருவுவெஞ்சிலையொன்றேந்திகண்டா யீரு

ளார்ந்தகண்டத்திறைவன்கண்டாய், மாமருவுங்கலைகையிலேந்திகண்டாய் மழ
பாடிமன்னுமணிளன்ருனே. (சு)

நீராகிநெடுவரைகளானன்கண்டாய்நிழலராகிநீள்விசும்புமானன்கண்டாய்
பாராகிப்பலவுமேழானன்கண்டாய்பகலாகிவானகிதின்ருன்கண்டா
யாரேனுந்தன்னடியார்க்கன்பன்கண்டாய்பணுவாகியாதியாய்நின்ருன்கண்டாய்
வாராரார்ந்தவனமூலையாள்பங்கன்கண்டாய்மழபாடிமன்னுமணிளன்ருனே. (எ)

பொன்னியலுந்திருமேனியுடையான்கண்டாய் பூங்கொன்றைத்தாரோன்
றணிந்தான்கண்டாய், மின்னியலும்வார்சடையெம் பெருமான்கண்டாய் வே
முத்தினுரிவிரும்பிப்போர்த்தான்கண்டாய், தன்னியல்பார்மற்றெருவரில்லான்
கண்டாய் தாங்கரியசெந்தாளுந் நின்ருன்கண்டாய், மன்னியமங்கையோர்
கூறன்கண்டாய் மழபாடிமன்னு மணிளன்ருனே. (அ)

ஆலாலமுண்டுகந்த வாதிகண்டா யடையலர்தம்புரமூன்று மெய்தான்கண்
டாய், காலாலக்காலனையுங் காய்ந்தான்கண்டாய் கண்ணப்பர்க்கருள்செய்த
கானீகண்டாய், பாலாருமொழிமடவாள் பாகன்கண்டாய் பசுவேறிப் பலிதிரி
யும் பண்பன்கண்டாய், மாலாலுமறிவரிய மைந்தன்கண்டாய் மழபாடிமன்னு
மணிளன்ருனே. (கூ)

ஒருசுடராயுலகேழு மானன்கண்டா யோங்காரத் துட்பொருளாய் நின்
ருன்கண்டாய், விரிசுடராய்விளங்கொளியாய் நின்ருன்கண்டாய் * விழவெலி
யும்வேள்வெலியு மானன்கண்டா, யிருசுடர்மீதோடா விலங்கைக்கோனை
யீட்டியவிருபதுதோ ளிறுத்தான்கண்டாய், மருசுடரின்மாணிக்கக் சூன்று
கண்டாய் மழபாடிமன்னு மணிளன்ருனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்—வச்சிரத்தம்பேசுவரர், தேவியார்-அழகாம்பிகையம்மை.

திருமழபாடி—திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலையடுத்தபெருங்கடனஞ்சமுதாவுண்டு அமரர்கடந்தலைகாத்த வையர்
செம்பொற், சிலையெடுத்தமாகாகெருப்புக்கோத்தத்திரிபுரங்கடையிட்ட செல்
வர்போலும், கிலையடுத்தசும்பொன்னுன்முத்தாளீண்டிரைவயிறப்பலகையாற்
குவையார்த்துற்ற, மலையடுத்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றி
நைகின்றேனே. (க)

அறைகலைத்தகுழன்மொன்றைவீணையாழுமன்தரத்திற்கந்தருவமாரேத்த
மறைகலைத்தமந்திரமுநீருங்கொண்டுவழிபட்டார்வானளக்கொடுத்தியன்றே

* விழவொலியுமிழவொலியுமெனச் சிலபிரதியிலிருக்கின்றது.

கறைகலந்தபொழிற்சிக்கம்பமேயகனவயிரத்திரடோணேகலிசூழ்மாட
மறைகலந்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிஞைகின்றேனே. (எ)

உரங்கொடுக்குமிருண்மெய்யர் மூர்க்கர்பொல்லா வூத்தைதவாய்ச்சமணர்
தமையுறவாக்கொண்ட, பரங்கெடுத்திங்கடியேனையாண்டுகொண்டபவளத்தின்
நிரடோணபசும்பொன்முத்தே, புரங்கெடுத்தப்பொல்லாதகாமனுகம் பொடி
யாகவிழித்தருளிப் புவியோர்க்கென்றும், வரங்கொடுக்குமழபாடி வயிரத்
தூணே யென்றென்றேநானரற்றி ஞைகின்றேனே. (கூ)

ஊனிகந்தூணுறிகையர்குண்டர்பொல்லா வூத்தைவாய்ச்சமணருறவாகக்
கொண்டு, ஞானகஞ்சேர்ந்தள்ள வயிரத்தைநண்ணுநாயேனைப் பொருளாக
வாண்டுகொண்ட, மீனகஞ்சேர்வெள்ளநீர்விதியாற்சூடும் வேந்தனேவிண்ண
வர்தம்பெருமான்மேக, வானகஞ்சேர்மழபாடிவயிரத்தூணே யென்றென்றே
நானரற்றிஞைகின்றேனே. (சு)

ஞெமேற்றநான்முகன்றன்னலியுமற்றைத்திருமால்தன்செழுங்கலியும்பொன்
றச்சிந்தி, புரமேற்றவிரவிபற்றகர்த்தச்சோமனெளிர்கலிகள்படவுழக்கியுயிரை
நல்கி, கரையேற்றவிடையேறிநாகம்பூண்ட நம்பியையேமறைநான்கு மோல
மிட்டு, வரமேற்குமழபாடிவயிரத்தூணே யென்றென்றேநானரற்றி ஞைகின்
றேனே. (ஞ)

னெந்திருத்தஞ்சிறுபெரியார் குண்டர்தங்கள் செதுமதியார்தீவினைக்கே
விழுந்தேதன்றேடிப், புனந்திருத்தும்பொல்லாதபிண்டிபேணும்பொறியிலியேன்
றனைப்பொருளாவாண்டுகொண்டு, தனந்திருத்தமவர்நிறத்தையொழியப்பா
றிந்தியதயாமூலதன்மவழியெனக்குரல்கி, மனந்திருத்தமழபாடி வயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிஞைகின்றேனே. (சு)

சுழித்தணையாம்பிறவிவழித்தக்கரீக்குஞ் சுருள்சடையெம்பெருமானே
தூயதெண்ணீ, ரிழிப்பரியபசுபாசப்பிறப்பைரீக்குமென்றணையே யென்னு
டையபெம்மான்றம்மான், பழிப்பரியதிருமாலுமயனுங்காணப்பரியேசுருதி
மூடிக்கணியாய்வாய்த்த, வழித்தணையாமழபாடிவயிரத்தூணேயென்றென்றே
நானரற்றிஞைகின்றேனே. (எ, அ, கூ, கo)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம்-சo.

திருநெய்த்தானம்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வகையெலாமூடையாயுரீயேயென்றும்வான்கயிலீமேவினுய்ரீயேயென்று
மிகையெலாமிக்காயுரீயேயென்றும்வெண்காடுமேவினுய்ரீயேயென்றும்
பகையெலாந்தீர்த்தாண்டாய்ரீயேயென்றும்பாசூரமர்ந்தாயுரீயேயென்றுந்
திகையெலாந்தொழச்செல்வாய்ரீயேயென்றுதின்றநெய்த்தானுவென்னெஞ்சுளாயே. (க)

ஆர்த்தவெனக்கன் பனீயேயென் றுமாதிக்கயிலாயனீயேயென் றுங்
கூர்த்தகடமாடிநீயேயென் றுங்கோடிகாமெயகுழகாவென் றும்
பார்த்தற்கருள்செய்தாய்நீயேயென் றும்பழையனூர்மேவியபண்பாவென் றுங்
கீர்த்தன்சிவலோகனீயேயென் றுனின் றநெய்த்தானவென்னெஞ்சுளாயே. (உ)

அல்லாய்ப்பலானுய்நீயேயென் றுமாதிக்கயிலாயனீயேயென் றுங்
கல்லாலமர்த்தாயுநீயேயென் றுங்காளத்திக்கற்பகமுநீயேயென் றுஞ் [ன்றுஞ்
சொல்லாய்ப்பொருளானுய்நீயேயென் றுஞ்சோற்றுத்துறையுறைவாய்நீயேயெ
செல்வாய்த்திருவானுய்நீயேயென் றுனின் றநெய்த்தானவெனெஞ்சுளாயே ()

மின்னேரிடைபங்கனீயேயென் றும்வெண்காடுமேவினுய்நீயேயென் றும்
பொன்னேர்சடைமுடியாய்நீயேயென் றும்பூதகணநாதனீயேயென் றும்
என்னுயிரதத்தாய்நீயேயென் றுமெகம்பத்தென்னீசனீயேயென் றுங்
தென்னூர்ப்பதியுளாய்நீயேயென் றுனின் றநெய்த்தானவென்னெஞ்சுளாயே. ()

மூன்றியிருந்தாயுநீயேயென் றுமுன் கயிலேமேவினுய்நீயேயென் று
நான்றிக்கருள்செய்தாய்நீயேயென் றுநடமாடிகள்ளாறனீயேயென் றும்
பான்றிப்பரியாயுநீயேயென் றும்பைஞ்ஞீலிமேவினுய்நீயேயென் றுஞ்
சான்றிப்பரியாயுநீயேயென் றுனின் றநெய்த்தானவென்னெஞ்சுளாயே. (ஙு)

தக்காரடியார்க்குநீயேயென் றுந்தலையார்கயிலாயனீயேயென் று
மக்காரம்பூண்டாயுநீயேயென் றுமாக்கூறிற்றுன் றேனீயேயென் றும்
புக்காயவேழுலகுநீயேயென் றும்புள்ளிருக்கும்வேளூராய்நீயேயென் றுங்
தெக்காருமாகோணத்தானேயென் றுனின் றநெய்த்தானவென்னெஞ்சுளாயே.()

புகழும்பெருமையாய்நீயேயென் றும்பூங்கயிலேமேவினுய்நீயேயென் று
மிகழுந்தலேயேந்தினீயேயென் றுமிராமேச்சுரத்தின் பனீயேயென் றும்
அகமுமதினுடையாய்நீயேயென் றுமாலவாய்மேவினுய்நீயேயென் றுங்
திகழுமதிசூடிநீயேயென் றுனின் றநெய்த்தானவென்னெஞ்சுளாயே. (எ)

வானவர்க்குமூத்தினேயாய்நீயேயென் றும்வானக்கயிலாயனீயேயென் றுங்
கானநடமாடிநீயேயென் றுங்கடவூரில்வீரட்டனீயேயென் று
மூனூர்முடியறுத்தாய்நீயேயென் றுமொற்றியூராருராய்நீயேயென் றுங்
தேனுபமுதானுய்நீயேயென் றுனின் றநெய்த்தானவென்னெஞ்சுளாயே. (அ)

தந்தைதாயில்லாதாய்னீயேயென் றுந்தலையார்கயிலாயனீயேயென் று
மெந்தாயெம்பிரானுனுய்நீயேயென் றுமெகம்பத்தென்னீசனீயேயென் று
முந்தியமுக்கணுய்நீயேயென் றுமூவலூர்மேவினுய்நீயேயென் றுஞ்
சிந்தையாய்தேனூராய்நீயேயென் றுனின் றநெய்த்தானவென்னுஞ்சுளாயே. (கூ)

மறித்தான்வலிசெற்றுய்நீயேயென் றும்வான்கயிலேமேவினுய்நீயேயென் றும்
வெறித்தார்பிறப்பறுப்பாய்நீயேயென் றும்வீழிமிழலையாய்நீயேயென் றும்
அறத்தாயமுதீந்தாய்நீயேயென் றும்மாவார்க்குந்தாங்கொணாஞ்ச்முண்டு
பொறுத்தாய்புலீஞ்துநீயேயென் றுனின் றநெய்த்தானவென்னெஞ்சுளாயே.()

திருச்சிற்றம்பலம்.

திருநெய்த்தானம்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தானத்தகம்படியுளேவர்கின்று வேண்டிற்றுக்குறைமுடித்துவினைக்குக்கூடாம், இத்தானத்திருந்திங்ஙனுய்வானெண்ணுமிதனேயொழியியம்பக்கேளைநெஞ்சே, மைத்தானணிய னிபங்கன்வங்கம் வருதிரைநீர் நஞ்சுண்டகண்டன்மேய, நெய்த்தானனன்னகரென்றேத்திநின்று நினேயுமாகினேந்தக்காலுய்யலாமே. (க)

ஈண்டாவிரும்பிறவிதுறவாவாக்கையிதுகிங்கோமனிதியுண்டென்றுசொல்ல, வேண்டாவேநெஞ்சமேவிளம்பக்கேணீ விண்ணவர்தம்பெருமானுர்மண்ணிலெண்ணே, யாண்டானன்றருவரையாற்புரமூன்றெய்த வம்மானேயரியயனுங் காணவண்ண, நீண்டானுறைதுறைநெய்த்தானமென்றுநினேயுமாகினேந்தக்காலுய்யலாமே. (உ)

பரவிப்பலபலவுந்தேடியோடிப்பாழாங்குரம்பையிடைக்கிடந்துவாளாகுரவிக்குடிவாழ்க்கைவாழவெண்ணிக்குலேகைதவிர்நெஞ்சேகூறக்கேணீ பிரவிக்குலமுதலாவானேர்கூடியெண்ணிநந்தகோடியமராராய நிரவிக்கரியவனெய்த்தானமென்றுநினேயுமாகினேந்தக்காலுய்யலாமே. (ங)

அலேயார்வினத்திறஞ்சேராக்கையுள்ளே யகப்பட்டுளாசையெனும்பாசந்தன்னுட், டலேயாய்க்கடையாரும் வாழ்விலாழ்ந்துதளராது நெஞ்சமேயஞ்சவேண்டா, வினேயார் புனற்கொன்றையெறிநீர்த்திங்களிருஞ்சடைமேல்வைத்துகந்தானிமையோரேத்த, நினேயானுறைநிறைநெய்த்தானமென்றுநினேயுமாகினேந்தக்காலுய்யலாமே. (ச)

நினேத்தனேயோர்பொறையிலாவுயிர்போல்கூட்டைப் பொருளென்றுமிகவுன்னிமதியாலின்த,வினேத்துலகுமாளலாமென்றுபேசுமாங்காரத்தவிர்நெஞ்சேயமரர்க்காக, முனேத்தவரு மதில்மூன்றும் பொன்றவுன்று முடுகியவெஞ்சிலவ்வினேத்துச்செற்றீமூழ்க, நினேத்தபெருங்கருணேயனெய்த்தானமென்று நினேயுமாகினேந்தக்காலுய்யலாமே. (ஞ)

பிறைபடுமிவ்வுடல்வாழ்வை மெய்யென்றெண்ணி வினேயிலேகிடந்தழுந்தியவேனெஞ்சே, குறைவுடையார்மனத்துளான்குமரன்றுதைகூத்தாடுங்குணமுடையான்கொலேவேற்கையா, னறைகழலுன்றிருவடிமேற்சிலம்புமார்ப்பவுனிதலம் பெயரவருநட்டனின்ற, நிறைவுடையா னிடமாநெய்த்தானமென்றுநினேயுமாகினேந்தக்காலுய்யலாமே. (ஈ)

பேசப்பொருளலாப்பிறவிதன்னேப்பெரிதென்றுமனத்தால்வேண்டியீண்டுவாசக்குழன்மடவார்போகமென்னும்வலேப்பட்டுவீழாதேதவருகநெஞ்சேதூசக்கரியுரித்தரன்றாரூரடித்ததைத்தில்லைகுறுக்கைமார்பன்றெடரகில்லாநீசர்க்கரியவனெய்த்தானமென்றுநினேயுமாகினேந்தக்காலுய்யலாமே. (எ)

அஞ்சப்புலனிவற்று லாட்டவாட்டுண் டருகோய்க்கிடமாய வுடலின்ற
ன்மை, தஞ்சமெனக்கருதித் தாழெனெஞ்சே தாழக்கருதுதியே தன்னைச்
சோர, வஞ்சமனத்தவர்கள் காணவொண்ணு மணிகண்டன்வானவர் தம்பிரா
னென்றேத்து, நெஞ்சர்க்கினியவ னெய்த்தானமென்று நினையுமாறினைந்தக்கா
லுய்யலாமே. (அ)

பொருந்தாத வுடலகத்திற் புக்கவாவி போமா றறிந்தறிந்தே புலவாழ்
வன்னி, யிருந்தாங் கிடர்ப்படரீ வேண்டாநெஞ்சே யிமையவர்தம் பெருமா
னன் றுமையாளஞ்சக், கருந்தாண்மதகரியை வெருவச்சீறுங் கண்ணுதல்கண்
டமாடிக் கருதார்வேள்வி, நிரந்தரமா யினிதுறைநெய்த் தானமென்று நினை
யுமாறினைந்தக்கா லுய்யலாமே. (கூ)

உரித்தன்றனக்கிவ் வுடலின்றன்மை யுண்மையுரைத்தேன் விரதமெல்
லாந், தரித்துந்தவமுயன்றும் வாளாநெஞ்சே தம்மிடையிலில்லார்க் கொன்றல்
லாங்கன்ன, வெரித்தானனவுடையா னெண்டோளானே யெம்பெருமானென்
றேத்தா விலங்கைக்கோனை, நெரித்தானெய்த்தானமேவினனை நினையுமா
றினைந்தக்கா லுய்யலாமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-தெய்யாடியப்பர், தேவியார்-வாலாம்பிகையம்மை.

திருப்பூந்துருத்தி-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நில்லாதநீர்சடை மேனிற்பித்தானை நினையாவென் னெஞ்சை நினைவித்தா
னைக், கல்லாதனவெல்லாங் கற்பித்தானைக் காணுதனவெல்லாங் காட்டினானைச்,
சொல்லா தனவெல்லாஞ் சொல்லியென்னைத் தொடர்ந்திங் கடியேனையாளரக்
கொண்டு, பொல்லாவென்னெஞ்சுரித்த புனிதன்றன்னைப் புண்ணியனைப் பூந்து
ருத்திக் கண்டேனுனே. (க)

குற்றாலங்கோகரண மேவினானைக் கொடுங்கைக் கடுங்கூற்றைப் பாய்ந்
தான்றன்னை, யுற்றாலநஞ்சுண் டொடுக்கினானை யுனாரவென்னெஞ்சை யுணர்
வித்தானைப், பற்றாலின்கீழ்ங் கிருந்தான்றன்னைப் பண்ணார்ந்தவீணையின்ருன்
றன்னைப், புற்றாடரவார்த்த புனிதன்றன்னைப் புண்ணியனைப் பூந்துருத்திக்
கண்டேனுனே. (உ)

எனக்கென்றுமினியானை யெம்மான்றன்னை யெழிலாருமேகம்பமேயான்
றன்னை, மனக்கென்றும்வருவானை வஞ்சர்நெஞ்சிலில்லானைநின்றியூர்மேயான்
றன்னைத், தனக்கென்றுமடியேனே யாளாக்கொண்ட சங்கரனைச்சங்கவார்
றன்னைப், புனக்கொன்றைத்தாரணிந்த புனிதன்றன்னைப் பொய்யி
லியைப்பூந்துருத்திக் கண்டேனுனே. (ஙு)

வெறியார்மலர்க்கொன்றை சூடினானை வெள்ளானை வந்திறைஞ்சும் வெண்
காட்டானை, யறியாதடியேனகப்பட்டேனை யல்லற்கடலின்று மேறவாங்கி,

நெறிதர னிதுவென்று காட்டினானே நிச்சனலிடினிக ளுர்ப்பான்றன்னைப், பொறியா டரவார்த்த புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேனானே. (சு)

மிக்கானவெண்ணீறு சண்ணித்தானே விண்டார்புரமூன்றும் வேவ்நோக்கி, நக்கானநான்மறைகள் பாடினானே நல்லார்கள்பேணிப்பரவுகின்ற, தக்கானைத்தண்டாமரைமே லண்ணறனிகொண்டு மாத்திரைக்க ணுலகமெல்லாம், புக்கானைப் புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேனானே. (டு)

ஆர்த்தானைவாசுகியை யரைக்கோர்கச்சா வசைத்தானையழகாய பொன்னுர்மேனிப், பூத்தானத்தான்முடியைப் பொருந்தாவண்ணம் புணர்ந்தானைப் பூங்கேணியா னுடலம்வேவப், பார்த்தானைப்பரிந்தானைப் பனிநீர்க்கங்கைபடர் சடைமேற் பயின்றனைப் பதைப்பயானை, போர்த்தானைப் புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேனானே. (சு)

எரித்தானையெண்ணுர் புரங்கண்மூன்று மிமைப்பளவிற்பொடியாசு வெழிலார்மையா, லுரித்தானைமதகரியை யுற்றுப்பற்றி யுமையதனேக்கண்டஞ்சி நடுங்கக்கண்டு, சிரித்தானைச்சீராரந்த பூதஞ்சூழத் திருச்சடைமேற் றிங்களுடம்பாம்புரீரும், புரித்தானைப் புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேனானே. (எ)

வைத்தானைவானே ருலகமெல்லாம் வக்திறைஞ்சிமலர்கொண்டு நின்று போற்றும், வித்தானைவேண்டிற்றென் றீவான்றன்னை விண்ணவர்தம் பெரு மானை வினைகள்போக, வுய்த்தானை யொலிகங்கை சடைமேற்றருங்கி யொளித்தானை யொருபாகத் தமையோடாங்கே, பொய்த்தானைப் புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேனானே. (அ)

ஆண்டானைவானே ருலகமெல்லா மந்நாளறியாத தக்கன்வேள்வி, மீண்டானை விண்ணவர்களோடுங்கூடி விரைமலர்மே னுறைகின்முகனுமாலுக்கோ, நீண்டானெருப்புருவ மானான்றன்னை நிலையிலார் மும்மதிலும் வேவவில்லைப், பூண்டானைப் புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேனானே. (கூ)

மறுத்தானை மலைகோத்தங் கெடுத்தான்றன்னை மணிமுடியோ டிருபது தோளுணியக்காலா, லிறுத்தானை யெழுநரம்பி னிசைகேட்டானை யெண்டிசைக்குங்கண்ணனன் சிரமேலொன்றை, யறுத்தானை யமரர்களுக் கமுதீந்தானை பாவர்க்குந்தாங்கொணு நஞ்சமுண்டு, பொறுத்தானைப் புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேனானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-புஷ்பவனநாதர், தேவியார்-அழகார்ந்தாயியம்மை.

ஆ பதிகம் – சுசு.

திருச்சோற்றுத் துறை-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூத்தவனுயுலகுக்குமூன்றினனே முறைமையாலெல்லாம் படைக்கின்றனே, யேத்தவனுயேழுலகுமாயினனே யின்பனுய்த்தன்பங்களிகின்றனே, காத்தவனுயெல்லாந்தான்காண்கின்றனே கடுவினையேன்தீவினையைக் கண்டு போகத், தீர்த்தவனே திருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனே யுன்னபயநானே. (க)

தலையவனுயுலகுக்கோர் தன்மையானே தத்துவனுய்ச்சார்ந்தார்க்கின்னமுதானனே, நிலையவனுய்நின்னெப்பாரில்லாதானே நின்முனாக்கூற்றத்தைச் சீறிப்பாய்ந்த, கொலையவனேகொல்யானைத் தோன்மேலிட்ட கூற்றுவனே கொடிமதில்கண்மூன்றுமெய்த, சிலையவனேதிருச்சோற்றுத் துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயநானே. (உ)

முற்றுதபான்மதியஞ் சூடினனே முனைத்தெழுந்த கற்பகத்தின் கொழுந் தொப்பானே, யுற்றுரென்னுருவனராயுமில்லாதானே யுலகோம்புமொண்சுடரேயோதம்வேதங், கற்றுனையெல்லாக் கலைஞானமுங்கல்லாதென் தீவினை நோய்கண்டுபோகச், செற்றனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயநானே. (ங)

கண்ணவனுயுலகெலாங்காக்கின்றனே காலங்களுழிகண்டிருக்கின்றனே, விண்ணவனுய்விண்ணவர்க்கு மருள்செய்வானே வேதனுய்வேதம்விரித்திட்டானே, வெண்ணவனே வெண்ணீர்புரங்கண்மூன்று மெமையாமுனெரிகொளுவ நோக்கிநக்க, திண்ணவனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயநானே. (ச)

நம்பனேநான்மறைகளாயினனே நடமாடவல்லானேஞானக்கூத்தர், கம்பனேகச்சிமாகருளானே கடிமதில்கண்மூன்றினியும்பொடியாவெய்த, அம்பனேயளவிலாப்பெருமையானேயடியார்க்கட்காரமுதே யானேறேறுஞ், செம்பொனேதிருச்சோற்றுத் துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயநானே. (ஞ)

ஆர்ந்தவனேயுலகெலாநீயேயாகி யமைந்தவனேயளவிலாப் பெருமையானே, கூர்ந்தவனே குற்றமுமேயகூத்தர கொடுமூவிலையதோர் சூலமேந்திப், பேர்ந்தவனேபிரளயங்களெல்லாமாயபெம்மானென்றெப்போதும் பேசுகெஞ் சிற், சேர்ந்தவனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயநானே. (ட)

வானவனேவண்மை மன்னினனே மாமணிசேர்வாரூர்பெருமானீயே, கானவனுயேனத்தின்பின்சென்றுனேகடியவரணங்கண்மூன்றட்டானே, தானவனுத்தண்கயிலேமேவினனே தன்னெப்பாரில்லாதமங்கைக்கென்றுந், தேனவனே திருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயநானே. ()

தன்னவனுபுலகெலாந்தானேயாகித் தத்துவனுய்ச்சார்ந்தார்க்கின்முதா
னுனே, யென்னவனுபெயின்னிறைய மேவினுனே யீசனேபாசவினைகடீர்க்கு,
மன்னவனேமலேமங்கைபாகமாக வைத்தவனேவானேர்வணங்கும்பொன்னித்
தென்னவனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னப்ப
ரனே. (அ)

ஏறிந்தானேயெண்டிசைக்குங் கண்ணுனனே யேழுலகுமெல்லாமுன்னுய்
கின்றனே, யறிந்தார்தாமோரிருவரறியாவண்ண மாதியுமந்தமுமாகியங்கே,
பிறிந்தானேபிறரொருவரறியாவண்ணம் பெம்மானென் றெப்போதுமேத்து
நெஞ்சிற், செறிந்தானேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனே
யுன்னபரனே. (கூ)

மையனேயகண்டத்தாய்மாலுமற்றை வானவருமறியாத வண்ணச்சூலக்,
கையவனேகடியிலங்கைக்கோனேயன்று கால்விரலாற்கதிர்முடியுந்தோளுஞ்செ
ற்ற, மெய்யவனேயடியார்கள்வேண்டிற்றீயும் விண்ணவனேவிண்ணப்பங்கே
ட்டுநல்குஞ், செய்யவனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவ
னேயுன்னபரனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டோங்குசெங்கமலக்கழுநீர்மல்கு மதமத்தஞ்செஞ்சடைமேன் மதி
யஞ்சூடித், தண்டோள்களாயிரமும்வீசிநின்று திசைசேரநடமாடிச் சிவலோ
கனு, ருண்டாரஞ்சுலகுக்கோருறுதிவேண்டியொற்றியூர்மேயவொளி வண்ண
னுர், கண்டேனுன் கனவகத்திற்கண்டேற் கென்றன்கடும்பிணியுஞ்சுடுந்தொழி
லுங்கைவிட்டவே. (க)

ஆகத்தோர்பாம்பசைத்துவெள்ளேறேறி யணிகங்கைசெஞ்சடைமேலார்
க்கச்சூடிப், பாகத்தோர் பெண்ணுடையாராணுமாவர் பசுவேறியுழிதருமெம்
பரமயோகி, காமத்தாலங்கணீயான்றன்னீவீழக் கனலாவெரிவிழித்தகண்
மூன்றினு, ரோமத்தானன் மறைகளோதலோவாவொளிதிகழுமொற்றியூருறை
கின்றாரே. (உ)

வெள்ளத்தடஞ்சடைமேல்விரும்பிவைத்தீர் வெண்மதியும்பாம்புமுடனே
வைத்தீர், கள்ளத்தைமனத்தகத்தேதகாத் தவைத்தீர்கண்டார்க்குப்பொல்லாத
கண்டீரல்லே, கொள்ளத்தானிசைபாடிப்பலியுங்கொள்ளீர் கோளரவங்குளிர்
மதியுங்கொடியுங்காட்டி, யுள்ளத்தைகீர்கொண்டீரோதலோவா வொளிதிகழு
மொற்றியூருடையகோவே. (கூ)

நரையார்ந்தவிடையேறிநீறுபூசி நாகங்கச்சரைக்கார்த்தோர் தலேகையே
ந்தி, யுரையாவந்தில்புகுந்தபலிதான்வேண்ட வெம்மடிகளும்மூர்தா னேதோ
வென்ன, விரையாதேகேட்டியேல்வேற்கண்ணல்லாய் விடுங்கிலங்கணெடுங்கடலு
னின்றுதோன்றுந், திரைமோதக்கரையேறிச்சங்கமூருந் திருவொற்றியூரென்
ரூர்தியேவாறே. (ச)

மத்தமாகளியானே யுரிவைபோர்த்துவானகத்தார்தானகத்தராகிலின்று,
பித்தர்தாம்போலங்கோர்பெருமைபேசிப் பேதையரை யச்சுறுத்திப் பெயரக்
கண்டு, பத்தர்கடாம்பலருடனே கூடிப்பாடிப் பயின்றிருக்குமூரேதோபணியீ
ரென்ன, வொத்தமைந்த வுத்திரர ஊர்த்தமாக வொளிதிகழு மொற்றியூ
ரென்கின்றீரே. (சு)

கடியவிடைபேறிக்காளகண்டர்கலியோடுமழுவாளோர்கையிலேந்தி
யிடியபலிகொள்ளார்போவாரல்லரெல்லாந்தானிவ்வடிகள்பரென்பரே [ளே
வடிவுடையமங்கையுந் தாமுமெல்லாம்வருவாரையெதிர்கண்டோ மயிலாப்புள்
செடிபடுவெண்டலையொன்றேந்திவந் துதிருவொற்றியூர்புக்கார்தியவாறே. (சு)

வல்லராய்வானவர்க ளெல்லாங்கூடி வணங்குவார் வாழ்த்துவார் வந்து
நிற்பா, ரெல்லையெம்பெருமானைக் காணுமென்ன வெவ்வாற்று லெவ்வகை
யாற் காணமாட்டார், கல்லார்கணுன்மறையோர் கூடிநேடி நாமிருக்குமூர்
பணியீரடிகளேளென்ன, வொல்லைத்தான்றிரையேறி யோதமீளுமொளிதிகழு
மொற்றியூ ரென்கின்றீரே. (எ)

நிலைப்பாடேகான்கண்ட தேடிகளாய் நெருநலேற்பகலிங்கோ ரடிகள்
வந்து, கலைப்பாடுங்கண்மலருங் கலக்கநோக்கிக் கலந்துபலியிடுவே னெங்கும்
காணேன், சலப்பாடேயினியொருநாட் காண்பேனுகிற் றன்னுகத்தென்னு
மொடுங்கும்வண்ண, முலைப்பாடேபடத்தழுவிப் போகலொட்டே னெற்றியூ
ருறைந்திங்கே திரிவானேயே. (அ)

மண்ணல்லிவ்ணல்லவையமல்லைமலையல்லகடலல்லிவாயுவல்லை
யெண்ணல்லையெழுத்தல்லையெரியுமல்லியிரவல்லைபகலல்லையாவுமல்லை
பெண்ணல்லையாணல்லைபேடுமல்லைபிறிதல்லையானுமும்பெரியரய்நீயே
யுண்ணல்லிகல்லார்க்குத்தீயைபல்லியுணர்வரியவொற்றியூருடையகோவே. (சு)

மருவுற்றமலர்க்குழலிமடவாளஞ்ச மலைதளங்கத்தினைநடுங்கச்செறுத்த
நோக்கிச், செருவுற்ற வாளரக்கன் வலிதான்மாளத் திருவடியின் விரலொன்று
லலறவூன்றி, புருவொற்றியங்கிருவரோடிக்காண வோங்கினவவ்வெள்ளழலா
ரிக்கேவசுது, திருவொற்றியூர்நம்மூரென்றபோனர் செறிவளைகளொன்றென்
ருச்சென்றவாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்-சஞ்சி.

திருஆவடுதுறை-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பனேநால்வேதங்களைகண்டானேஞானப்பெருங்கடலேன்மைதன்னைக்,
கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக்கற்பகமாயடியார்கட் கருள்செய்வானைச்,
செம்பொன்னேப்பவளத்தைத் திரளுமுத்தைத் திங்கள்ஞாயிற்றைத்தீயைநீரை,

யம்பொன்னேயாவடுதண் டுறையுண்மேய வரனடியேயடிநாயே னடைந்துய்ந் தேனே. (க)

மின்னேன மின்னிடைச்சே ருருமினேன வெண்முகிலா யெழுந்துமழை பொழிவான்றன்னேத், தன்னேனத்தன்னெப்பா ரில்லாதானேத் தாயாகிப்பல் லுயிர்க்கோர் தந்தையாகி, யென்னேனயெந்தை பெருமான்றன்னே யிருகிலமு மண்டமுமாய்ச் செக்கர்வானே, யன்னேனேயாவடுதண் டுறையுண்மேய வரன டியேயடிநாயே னடைந்துய்ந்தேனே. (உ)

பத்தர்கள்சித்தத்தே பாவித்தானேப் பவளக்கொழுந்தினே மாணிக்கத் தின், ருறத்தினேத் தூநெறியாய் நின்ருன்றன்னேச் சொல்லுவார் சொற்பொரு ளின் ருற்றமாகி, வித்தினேமூளேக்கினேயை வேரைச்சேரை வினேவயத்தின்றன் சார்வை வெய்யதீர்க்கு, மத்தனேயாவடுதண்டுறையுண்மேய வரனடியேயடி நாயே னடைந்துய்ந்தேனே. (கூ)

பேணியநற் பிறைதவழ்செஞ்சடையினேப் பித்தராமடியார்க்கு முத்தி காட்டு, மேணியையிடர்க்கடலுட் சுழிக்கப்பட்டிங் கினேக்கின்றேற் கக்கரை க்கே யேறவாங்கு, நீணியைத்தெரண்டனேன் றாயசோதிச் சுலாவெண் குழையரனேச் சுடர்பொற்காசி, ஞணியையாவடுதண் டுறையுண்மேய வரனடி யேயடிநாயே னடைந்துய்ந்தேனே. (ச)

ஒருமணியையுலகுக்கோ ருறுதிதன்னே யுதயத்தினுச்சியை யுருமனு னேப், பருமணியைப்பாலோடஞ்சாடினேன்ப்பவித்திரனேப்பசுபதியைப்பவளக் குன்றைத், திருமணியைத்தித்திப்பைத்தேனதாகித்தீங்கரும்பினின்சுவையைத் தித்தியுஞ்சோதி, யருமணியை யாவடுதண் டுறையுண்மேய வரனடியேயடிநாயே னடைந்துய்ந்தேனே. (ஞ)

ஏற்ருனேயெண்டோ ளுடையான்றன்னே யெல்லில்நடமாட வல்லான்றன் னேக்,கூற்ருனேக்கூற்றமுதைத்தான்றன்னேக்குரைகடல்வாய்நஞ்சுண்டகண்டன் றன்னே, நீற்ருனேளரவொன் ருர்த்தான்றன்னே நீண்டசடைமுடிமே னீரர்ர் கங்கை, யாற்ருனேயாவடுதண்டுறையுண்மேயவரனடியேயடிநாயேனடைந்துய்ந் தேனே. (ரு)

கைம்மானமதகளிற்றையுரித்தான்றன்னேக் கடல்வரைவாளுகாசமானுன் றன்னேச், செம்மானப்பவளத்தைத் திகழுமுத்தைத் திங்களேநாயிற்றைத்தீயா னனே, யெம்மானேயென்மனமே கோயிலாக விருந்தானேயென்புருக்கு மடியார் தங்க, ளம்மானேயாவடுதண் டுறையுண்மேய வரனடியேயடிநாயேனடைந்துய்ந் தேனே. (எ)

மெய்யானேப்பொய்யரொடும்விரவாதானே வெள்ளலையைத்தண்ணிழலே வெக்கியேக்துங், கையானேக்காமனுடல்வேவக்காய்ந்த கண்ணுனேக்கண்மூன் றுடையான்றன்னேப், பையாடரவமதியுடனேவைத்தசடையானேப்பாய்புலித் தோலுடையான்றன்னே, யையானேயாவடுதண்டுறையுண்மேய வரனடியேயடி நாயேனடைந்துய்ந்தேனே. (அ)

வேண்டாமை வேண்டுவது மில்லான்றன்னை விசயனேமுன் னைசவித்த
வேடன்றன்னைத், தூண்டாமைச்சுடர்விடுநற் சோதியனைச் சூலப்படையா
னைக் காலன்வாணுன், மாண்டோடவுதைசெய்த மைந்தன்றன்னை மண்ணவ
ரும் விண்ணவரும் வணங்கியேத்தும், ஆண்டானையாவடிதண் டுறையுண்மேய
வரனடியேயடிநாயே னடைந்துய்ந்தேனே. (சு)

பந்தணவுமெல்விரல்வாள் பாகன்றன்னைப் பாடலோடாடல்பயின்றுன்றன்
னைக், கொந்தணவு நறுங்கொன்றை மாலையானைக் கோலமாலேமிடற்றுன் றன்
னைச், செந்தமிழோடாரியனைச் சிரியானைத் திருமார்பிற் புரிவெண்ணூ றிகழப்
பூண்ட, வந்தணனை யாவடிதண்டுறையுண்மேய வரனடியேயடிநாயே னடைந்
துய்ந்தேனே. (கo)

தரித்தானைத் தண்கடனஞ்சுண்டான்றன்னைத் தக்கன்றன் பெருவேள்வி
தகர்த்தான்றன்னைப், பிரித்தானைப் பிறைதவழ்சென் சடையினானைப் பெருவ
லியான் மலையெடுத்தவரக்கன்றன்னை, நெரித்தானை நேரிழையாள் பாகத்தானை
நீசனேனுடலுறநோயானநீர, வரித்தானை யாவடிதண்டுறையுண்மேய வரன
டிபேயடிநாயே னடைந்துய்ந்தேனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திரு ஆவடுதுறை—திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேயென்செல்வமே தேனேவானோர் செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற்
சோதியிக்க, வருவேயென்னுறவேயென்னூனே யூனின்னுள்ளமே யுள்ளத்தி
னுள்ளேநின்ற, கருவேயென்கற்பகமே கண்ணேகண்ணிற்கருமணியே மணி
யாடுபாவாய்காவா, யருவாயவல்வினேநோ யடையாவண்ணம் ஆவடுதண்டுறை
யுறையுமமரரேறே. (க)

மாற்றே னெழுத்தஞ்சுமென்ற ஞின்மறவேன் நிருவருள்கள் வஞ்சகெ
ஞ்சி, னேற்றேன்பிறதெய்வ மெண்ணுகாயே னெம்பெருமான் நிருவடியேயெ
ன்னினல்லான், மேற்றுனீசெய்வனகள்செய்யக்கண்டு வேதனைக்கேயிடங்கொ
டுத்தாளுநாளும், ஆற்றேனடியேனே யஞ்சலென்னு யாவடுதண்டுறையுறையு
மமரரேறே. (உ)

வரையார்மடமஞ்கைபங்காகங்கைமணவாளாவார்சடையாய்கின்றனும
மூரையாயுயிர்போகப்பெறுவேனுகி னுமதோய்வந்தெத்தனேயுமூற்றுலென்னே
கரையாநிற்பாந்திருகிக்கண்ணீர்மல்கிக்காதலித்துநின்கழலேயேத்தமன்பர்க்
கரசியாவடியேனேயஞ்சலென்னுயாவடுதண்டுறையுறையுமமரரேறே. (ரு)

சிலேத்தார்திரிபுரங்கடியில்வேவச்சிலவனேவித்தமையவனேயஞ்சநோக்கிக் [வே
கலித்தாங்கிரும்பிடிமேற் கைவைத்தோடுங் களிறுரித்தகங்காளா வெங்கள்கோ
நிலத்தாரவர்தமக்கேபோறையாய்கரைஞரில்லாவுயிரோம்புநீதானேஞனை
அலுத்தேனடியேனேயஞ்சலென்னுயாவடுத்ண்டுறையுறையுமமரரேறே. (எ)

நறுமாமலர்கொய்துநீரின்மூழ்கிநாடோறுநின்கழலேயேத்திவாழ்த்திக்
குறைவாதுன்பந்துறந்தேன்றன்னைச்சூழுமினிஞாழ்வினைவந்துற்றுலென்னே
புறவாகினவானவர்கள்முற்றும்வேண்டவொலிதிரைநீர்க்கடனஞ்சுண்டியகொண்ட
அறவாவடியேனேயஞ்சலென்னுயாவடுதண்டுறையுறையுமமரரேறே. (டு)

கோணாணனங்கத்தோண்மேற்கொண்டுகொழுமலரான்றன்சிரத்தைக்கையிலேந்திக்
காணுர்களிற்றுரிவைப்போர்வைமூடிக்கங்காளவேடராயெங்குஞ்செல்வீர்
நாணுருமக்கோர்வினைக்கேடனேனல்வினையுந்தீவினையுமெல்லாமுன்னே
யாணையடியேனேயஞ்சலென்னுயாவடுதண்டுறையுறையுமமரரேறே. (கூ)

உழையுரித்தமானுரிதோலாடையானே யுமையவடம்பெருமானே யிமை
யோரேறே, கழையிறுத்தகருங்கடனஞ் சுண்டகண்டா கயிலாயமலையானே
யுன்பாலன்பர், பிழைபொறுத்தியென்பதுவும்பெரியோய்கின்றன் கடனன்றே
பேரருளுன்பாலதன்றே, யுழையுறுத்தமாமயில்களாடுஞ்சோலை யாவடுதண்
டுறையுறையுமமரரேறே. (எ)

உலந்தார்தலைகலனுண்டுறைந்திவாளேருலகம்பலிதிரிவாயுன்பாலன்பு
கலந்தார்மனங்கவருங்காதலானேகனலாடுங்கையனேயையாமெய்யே
மலந்தாங்குயிர்ப்பிறவிமாயக்காயமயக்குளேவீழுந்தழுந்திநாளுநாளு
மலர்தேனடியேனேயஞ்சலென்னுயாவடுதண்டுறையுறையுமமரரேறே. (அ)

பல்லார்ந்தவெண்டலைகையிலேந்திப் பசுவேறியூருரன் பலிகொள்வானே,
கல்லீரார்ந்தமலைமகளுநீயுமெல்லாங் கரிகாட்டிலாட்டுகந்தீர்கருதீராகி, லெல்லாரு
மென்றன்னையிகழ்வர்போலு மேழையமண்குண்டர்சாக்கியர்களொன்றுக், கல்
லாதார்நிறத்தொழிந்தேனஞ்சலென்னுயாவடுதண்டுறையுறையுமமரரேறே. (ஃ)

துறந்தார்தந் தூநெறிக்கட் சென்றேனல்லேன் றுணைமாலை சூட்டகான்
முயேனல்லேன், பிறந்தேனினி நிருவருளே பேசினல்லாற் பேசாத நாளெல்
லாம்பிறவாநாளே, செறிந்தார்மதிலிலங்கைக்கோமான் றன்னைச் செவ்வரைக்கீ
முடர்த்தருளிச்செய்கையெல்லா, மறிந்தேனடியேனேயஞ்சலென்னு யாவடுதண்
டுறையுறையுமமரரேறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவலிவலம்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நல்லான்காணுன்மறைகளாயினுங்காணம்பன்காணணுகாதார் புரமூன்
றெய்த, வில்லான்காண் விண்ணவர்க்குமேலானுன்காண் மெல்லியலாள்பாகன்
காண்வேதவேள்விச், சொல்லான்காண் சுடர்மூன்றுமாயினுன்காண் டொண்
டாசிப்பணிவார்க்குத்தொல்வானீய, வல்லான்காண்வானவர்கள் வணங்கியேத்
தும் வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (க)

ஊனவன்காணுடறனக்கோ ருயிரானுன்காணுள்ளவன்கரணில்லவன்கா
ணூனமையாட்கென்றுந், தேனவன்காண் டிருவலவன்காண் டிசையானுன்காண்

ஊர்த்தன்காண்பார்த்தன்பணியைக்கண்ட, கானவன்காண் கடலவன்காண் மலையானன்காண் களியானையீருரிவைகதறப்போர்த்த், வானவன்காண்வான வர்கள்வணங்கியேத்தும்வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (உ)

*ஏயவன்கா னெல்லார்க்கு மியல்பானன்கா ணின்பன்காண் டுன்பங்களில் லாதான்காண், டாயவன்கா னுலகுக்கோர் தன்னெப்பில்லாத் தத்துவன்கா னுத்தமன்காண் டானேயெங்கு மாயவன்கா ணண்டத்துக் கப்பாலான்கா னகங்குழைந்து மெய்வருந்தி யழுவார்தங்கள், வாயவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (ஊ)

உய்த்தவன்கா னுடறனக்கோ ருயிரானன்கா ணெங்காத் தொருவன்கா னுலகுக்கெல்லாம், வித்தவன்காண் விண்பொழியு மழையானன்காண் வினைவ வன்காண் விரும்பாதார் நெஞ்சத்தென்றும், பொய்த்தவன்காண் பொழிலே ழுந் தாங்கினன்காண் புனலோடவளர்மதியும் பாம்புஞ்சென்னி, வைத்தவன் காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. (எ)

கூற்றவன்காண் குணமவன்காண் குறியானன்காண் குன்றங்களனைத்துங் கான் கோலமாய, நீற்றவன்கா னிழலவன்கா னெருப்பானன்கா ணிமிர்புன் சடைமுடிமே னீரார்கங்கை, யேற்றவன்கா ணேழுலகு மாயினன்கா னிமைப் பளவிற் காமனைமுன் பொடியாய்வீழ, மாற்றவன்காண் வானவர்கள்வணங்கி யேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (ஏ)

நிலையவன்காண் டோற்றவன்கா னிறையானன்கா னீரவன்காண் பாரவன்கா னூர்மூன்றெய்த, சிலையவன்காண் செய்யவாய்க் கரியகூற்றம் றேன் மொழியை யொருபாகஞ் சேர்த்தினன்காண், கலையவன்காண் காற்றவன்கா ணன்காலன்வீழக் கறுத்தவன்காண்கயிலாய மென்னுந்தெவ்வ, மலையவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான்கா ணவனென் மனத்து ளானே. (ஐ)

பெண்ணவன்கா ணணவன்காண் பெரியோர்க்கென்றும் பெரியவன்கா ணரியவன்கா ணயனனன்கா, ணெண்ணவன்கா ணெழுத்தவன்கா னின்பக் கேள்வி யிசையவன்கா னியலவன்கா னெல்லாங்கானுங், கண்ணவன்காண் கருத்தவன்காண் கழிந்தோர்செல்லுங் கதியவன்காண் மதியவன்காண் கட லேழ்சூழ்ந்த, மண்ணவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (ஒ)

முன்னவன்காண் பின்னவன்காண் மூவாமேனி முதல்வன்காண் முடிய வன்கா ணூன்றுசோதி, யன்னவன்கா ணடியார்க்கு மண்டத்தார்க்கு மணிய வன்காண் சேயவன்கா ணளவில்சோதி, பின்னவன்கா னுருமவன்காண்டிரு மால்பாகம் வேண்டினன்கா னீண்டுபுனற் கங்கைகென்று, மன்னவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான்கா ணவனென் மனத்து ளானே. (ஓ)

கெதியவன்காண் யாவர்க்கு நினையவொண்ணு நீதியன்காண் வேதியன் கா ணிணைவார்க்கென்றுங், கதியவன்காண் காரவன்காண் கனலானுன்காண் காலங்களுழியசக் கலந்துநின்ற, பதியவன்காண் பழமவன்கா னிரதத்தான் காண் பரம்போடுதிங்கள் பயிலவைத்த, மதியவன்காண்வானவர்கள் வணங்கி யேத்தும் வலிவலத்தான்காணவனென் மனத்துளானே. (சு)

பங்கயத்தின்மேலானும் பாலனுங் கிளையுலகளந்தபடியானும் பரவிக்காணுக், கங்கைவைத்த சென்னியரா ளளக்கமாட்டா வனலவன்கா ணலைகடல்சூ ழில ங்கைவேந்தன், கொங்கலர்த்த முடிநெரிய விரலாலூன்றுங் குழகன்காணழக கன்காண் கோலமாய, மங்கையர்க்கோர் கூறன்காண் வானேறேத்தும் வலிவல த்தான்காணவனென் மனத்துளானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்—மனத்துணைநாதர், தேவியார்—மாழையங்கண்ணியம்மை.

ஆக பதிகம்—சஅ.

திருக்கோகரணம்—திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

சந்திரனுந்தண்புனலுஞ் சந்தித்தான்காண் டாழ்சடையான்காண் சார்ந் தார்க்கமுதானுன்கா, னந்தரத்திலசுரர்புர மூன்றட்டான்கா னவ்வுருவிலவ் வுருவ மாயினுன்காண், பந்தரத்துகானம் மறைகள் பாடினுன்காண் பலபலவும் பாணி பயில்கின்றுன்காண், மந்திரத்தமறைப்பொருளு மாயினுன்காண் மாத வல்சூழ்கோகரண மன்னினுனே. (க)

தந்தவத்தான் றன்றலையைத் தாங்கினுன்காண் சாரணன்காண் சார்ந்தார் க்கின்னமு தானுன்காண், கெந்தத்தன்காண் கெடிலவீரட்டன்காண் கேடிலிகா ண்கெடுப்பார்மற் றில்லாதான்காண், வெந்தொத்தீமெய் பூசினுன்காண் வீரன்காண் வியன்கயிலே மேவினுன்காண், வந்தொத்த நெடுமாற்கு மறிவொ ணான்காண் மாகடல்சூழ் கோகரண மன்னினுனே. (உ)

தன்னூருவமாருக்குந் தாக்காதான்காண் டாழ்சடையெம் பெருமான்கா ண்டகார்க்குள்ளப், பொன்னூருவச்சோதிப்புன லாடினுன்காண் புராணன் காண் பூதங்களாயினுன்காண், மின்னூருவத்தண்ணிடையாள் பாகத்தான்காண் வேழத்தினிரிவெருவப் போர்த்தான்றுன்காண், மன்னூருவாய் மாமறைகளோ தினுன்காண் மாகடல்சூழ்கோகரண மன்னினுனே. (ஙு)

ஆறேறு செஞ்சடையெம் மாரூரன்கா ணன்பன்கா ணணிபழனமேயா ன்றுனகா, னீறேறுதிருமுழுவ மேனியான்கா னினுபன்கா னிகரொன்றுமில்லா தான்காண், கூறேறுகொடுமழுவாட் படையினுன்காண் கொக்கரையன்காண் குழுநற் பூதத்தான்காண், மாறுயமதில்மூன்று மாய்வித்தான்காண் மாகடல் சூழ்கோகரண மன்னினுனே. (ச)

சென்றச்சிலைவாங்கிச் சேர்வித்தான்காண் டியம்பகன்காண் டிரியும்புரங் கண்மூன்றும், பொன்றப்பொடியாக நோக்கினுன்காண் பூதன்காண் பூதப்

படையாளிகா, ணன்றப்பொழுதேயருள்செய்தான்கா ணனலாடிகாணடியார்க்
கமுதானுங்காண், மன்றன்மணங்கமழும் வார்சடையான்காண் மாகடல்சூழ்
கோகரணமன்னினனே. (நி)

பிறையோடுபெண்ணெருபால்வைத்தான்முன்காண் பேரவன்காண்பிறப்
பொன்றுமில்லாதான்காண், கறையோடுமணிமிடற்றுக்காபாலிகாண் கட்டங்
கன்காண்கையிற்கபாலமேந்திப், பறையோடுபல்கீதம்பாடினுன்கா ணுடினுன்
காண்பாணியாகின்று, மறையோடுமோகித்தசேட்டான்முன்காண் மாகடல்
சூழ்கோகரணமன்னினனே. (சு)

மின்னளக்தமேன்முகட்டின்மேலுற்றான்காண் விண்ணவர்தம்பெருமான்
காண்மேவிலெங்கு, முன்னளந்தமூவர்க்குமுதலானுன்காண் மூவிலைவேற்சூலத்
தெங்கோலத்தர்ன்கா, ணெண்ணளக்தென்சிக்தையேமேவினுன்கா னேவலன்
காணிமையோர்களேத்தின்று, மண்ணளந்தமாலறியாமாயத்தான்காண் மாக
டல்சூழ்கோகரணமன்னினனே. (எ)

பின்னுசடைமேற்பிறைசூடினுன்காண்பேரருளன்காண் பிறப்பொன்றில்
லாதான்காண், முன்னீபுலகுக்கு முன்னுன்காண் மூவெயிலுஞ் செற்றகந்த
முதல்வன்முன்கா, ணின்னவருவென்றறிவொணதான்முன்கா ணேழ்கடலு
மேழுலகுமாயினுன்காண், மன்னுமடந்தையோர் பாகத்தான்காண் மாகடல்
சூழ்கோகரணமன்னினனே. (அ)

வெட்டவெடித்தார்க்கோர் வெவ்வழலன்காண் வீரன்காண்வீரட்டமேவி
னுன்காண், பொட்டவனங்கனீயுநேரக்கினுன்காண் பூதன்காண்பூதப்படையி
னுன்காண், கட்டக்கடுவிஷங்கள்காத்தாள்வான்காண்கண்டன்காண்வண்டுண்ட
தொன்றையான்காண், வட்டமதிப்பாகஞ்சூடினுன்காண் மாகடல்சூழ்கோக
ரணமன்னினனே. (கூ)

கையார்கபிலேயெடுத்தான்றன்னைக் கால்விரலாற்றேரினேரியவுன்றினுன்
காண், மெய்யினரம்பிசையாற் கேட்பித்தாற்கு மீண்டேயவற்கருள்கணல்கி
னுன்காண், பொய்யர்மனத்துப் புறம்பாவான்காண் போர்ப்படையான்காண்
பொருவாரில்லாதான்காண், மைகொண்மணிமிடற்று வார்சடையான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினனே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

இது தஞ்சுவதேசத்திலுள்ளது. அத்தேசத்தில் இது ஒரேதலம்.
சுவாமிபெயர் – மாபலேசுவரர், தேவியார் – கோகரணாயகியம்மை.

திருவீழிமிழலை–திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

போராணையீருரிவைப்போர்வையானைப்புலியதனேயுடையாடைபோற்றினானை
பாராணைமதியானைப்பகலானைப்பல்லுயிர்ப்பாய்நெடுவெளியாய்ப்பரந்தநின்றப்
நீராணைக்காற்றுனைத்தீயானைநினையாதார்புரமெரியநினைந்தசெய்வத்
தேராணைத்திருவீழிமிழலையானைச்சேராதார்தீவெறிக்கேசேர்கின்றாரே. (க)

சவந்தாங்குமயானத்துச்சாம்பலென்பு தலையோடுமெயிர்க்கயிறுதரித்தான்
றன்னைப், பவந்தாங்குபாசுபதவேடத்தானைப்பண்டமரர் கொண்டுகெற்தவேள்
வியெல்லாங், கவர்ந்தானைக்கச்சியேகம்பன் றன்னைக் கழலடைந்தான்மேற்கறு
த்தகாலன்வீழச், சிவந்தானைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கே
சேர்கின்றாரே. (உ)

அன்றாலின்கீழிருந்தங்கறஞ்சொன்னானை யகத்தியனையுகப்பானையயன்மா
றேடா, தின்றாளைக்கிடந்தகடனஞ்சுண்டானை நேரிழையைக்கலக்கிருந்தேதுபுலன்
களோந்தும், வென்றானைமீயச்சூர்மேவினானை மெல்லியலாடவத்தினிறையளக்க
லுற்றுச், சென்றானைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்
றாரே. (கூ)

தூயானைச்சுடர்ப்பவளச்சோதியானைத் தோன்றியவெவ்வுயிர்க்குந் தீமை
யாய்கின்ற, தாயானைச்சக்கரமாற்கீந்தான்றன்னைச் சங்கரனைச்சந்தோகசாம
மோதம், வாயானைமந்திரிப்பார்மனத்துளானை வஞ்சனையாலஞ்செழுத்தும்
வழுத்துவார்க்குச், சேயானைத்திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே
சேர்கின்றாரே. (ச)

நற்றவத்தினல்லானைத்திதாய்வந்தஞ்சமுதுசெய்தானையமுதமுண்ட
மற்றமரருலந்தாலுமுலவாதானைவருகாலஞ்செல்காலம்வன்தகால [ன்றச்
முற்றவத்தையுணர்ந்தாருமுணரலாகா வொருசுடரையிருவிசும்பினூர்முன்றே
செற்றவனைத்திருவீழிமிழலையானைச்சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (ரு)

மைவானமிடற்றானையவ்வான்மின்போல்வளர்சடைமேன்மதியானைமழை
யாயெங்கும், பெய்வானைப்பிச்சாடலாடுவானைப் பிலாயபேய்க்கணங்களார்க்
கச்சூலம், பொய்வானைப்பொய்யிலாமெய்யன் றன்னைப் பூதலமுமண்டலமும்
பொருந்தும்வாழ்க்கை, செய்வானைத்திருவீழிமிழலையானைச் சேராத்தார்தீநெ
றிக்கேசேர்கின்றாரே. (சு)

மிக்கானைக்குறைந்தடைந்தார்மேவலானை வெவ்வேறுயிருமூன்றுசமயமா
கிப், புக்கானையெப்பொருட்கும்பொதுவானானைப் பொன்னுலகத்தலாபோற்
றும்பொருளுக்கெல்லாந், தக்கானைத்தானன்றிவேறொன்றில்லாத் தத்துவனைத்
தடவரையைநடவுசெய்த, திக்கானைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறி
க்கேசேர்கின்றாரே. (எ)

வானவர்கோன்றேரிலுறுதமைந்தன் றன்னை வளருளமுமறைக்காடுமன்
னினானை, யூனவனையுயிரவனையொருநாட்பார்த்த வுயர்தவத்தினிலையுமுறு
முச்சென்ற, கானவனைக்கயிலாயமேவினானைக் கங்கைசேர்சடையானைக் கலர்ச்
சார்க்கென்றும், தேனவனைத் திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே
சேர்கின்றாரே. (அ)

பரத்தானையிப்பக்கம் பலவானானைப் பசுபதியைப்பத்தர்க்கு முத்திகாட்
டும், வரத்தானைவணங்குவார்மனத்துளானை மாருதமாலெரிமூன்றுவாயம்பீச்
காஞ், சரத்தானைச் சரத்தையுன்றன் ருட்டேழ்வைத்த தபோதனனைச் சடாம

குடத்தணிந்தபைங்கட், சித்தானந்திருவீழிமிழலையானைச் சோராதசார்தீதெறி க்கே சேர்கின்றீரே. (கூ)

அறத்தானேயயன்றலைகளஞ்சிலொன்றை யஞ்சாதேவரையெடுத்த வரக் கன்றோள்க, ளிறத்தானேயெழுரம்பினிசைகேட்டானேயிக்துணைத் தேய்த்த தானேயிரவிதன்பற், பறித்தானேப்பகீரதற்காவானேர்வேண்டப் பரந்திழியும் புனற்கங்கைபனிபோலாக்கச், செறுத்தானந்திருவீழிமிழலையானைச் சோராதார் தீதெறிக்கேசேர்கின்றீரே. (கம)

திருச்சிற்றம்பலம்.

ஆகு பதிகம்-இ0.

திருவீழிமிழலை-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

சுயிலாயமலியுளார்காரோணத்தார்கந்தமாதனத்துளார்காளத்தியார் மயிலாடுதுறையுளார்மாகாளத்தார்வக்கரையார்சக்கரமாற்கீந்தார்வாய்க்த அயில்வாயசூலமுங்காபாலமுமமருந்திருக்கரத்தராரானேறேறி வெயிலாயசோதிவிளங்குநீற்றரீவீழிமிழலையேமேவினரே. (க)

பூதியணிபொன்னிறத்தர்பூணநூலர் பொங்கரவர்சங்கரர்வெண்குழையோர்கா தர் கேதிசரமேவினர்கேதாரத்தார்கெடிலவடவதிகைவீரட்டத்தார் டாதியரந்தீர்த்தனீயுய்யக்கொண்டார்மழபாடிமேயமணவாளனர் வேதிகுடியுளார்மீயச்சூரார்வீழிமிழலையேமேவினரே. (உ)

அண்ணமலையமர்ந்தாராரூருள்ளாரளப்பூராரந்தணர்கள் பாடக்கோயி லுண்ணிழிகையாருமையாளோடுமிமையோர்பெருமானுரொற்றியூரார் பெண்ணைகடத்தப்பெருந்துங்கனேமாடத்தார்கூடத்தார்பேராவூரார் விண்ணோர்களெல்லாம்விரும்பியேத்தவீழிமிழலையேமேவினரே. (கூ)

வெண்காட்டார் செங்காட்டங் குடியார்வெண்ணி கண்ணகீரார் வேட்கள த்தார்வேதகாவர், பண்காட்டும்வண்டார் பழனத்துளார் பராய்த்துறையார் சிராப்பள்ளியுளாரர்பண்டோர், வெண்கோட்டுக்கருங்களிற்றைப்பிளிறப்பற் றியுரித்தரிவையைபோர்த்தவிடலேவேடம், விண்கரடம்பிறைதுதலியஞ்சக்காட்டி வீழிமிழலையே மேவினரே. (ச)

புடைசூழ்ந்த பூதங்கள் வேதம்பாடப் புலியூர்ச்சிற் றம்பலத்தே நடமா டுவர், முடைசூழ்ந்தபுலித்தோலர் கலிக்கச்சிமேற்றளியுளார் குளிர்சோலே யேகம்பத்தார், கடைசூழ்ந்த பலிதேருங் கங்களனூர் கழுமலத்தார் செழு மலர்த்தார்க் குழலியோடும், விடைசூழ்ந்த வெல்கொடியர் மல்குசெல்வ வீழி மிழலையேமேவினரே. (ஞ)

வருத்தியுடையவடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வருத்திவைத்தமறுமைப்பணித்தால்வாழ்ந்துபோதீரே. (ச)

செந்தண்பவளக்கிகழுஞ்சோலையி தவோதிருவாரூ
ரெந்தமடிகேளிதவேயாமாறுமக்காட்பட்டோர்க்குச்
சந்தம்பலவும்பாடுமடியார்தங்கண்காணுது
வந்தெம்பெருமான்முறையோவென்றுரல்வாழ்ந்துபோதீரே. (ஞ)

நினைத்தாளன்னசெங்கூளைசேருந்திருவாரூர்ப்
புனைத்தார்கொன்றைப்பொன்போன்மாலைப்புரிபுன்சடையீரே
தனத்தாலின்றித்தாந்தாமெலிக்குதவக்கண்காணுது
மனத்தால்வாடியடியாரிருந்தால்வாழ்ந்துபோதீரே. (ரு)

ஆயம்பேடையடையுஞ்சோலையாரூரகத்தீரே
யேயெம்பெருமானிதவேயாமாறுமக்காட்பட்டோர்க்கு
மாயங்காட்டிப்பிறவிகாட்டிமறவாமனங்நாட்டிக்
காயங்காட்டிக்கண்ணீர்கொண்டால்வாழ்ந்துபோதீரே. (எ)

கழியாய்க்கடலாய்க்கலனுய்கிலனுய்க்கலந்தசொல்லாலி
யிழியாக்குலத்திற்பிறந்தோமும்மையிகழாதேத்தவோம்
பழிதானுவதறியீரடிகேள்பாடும்பத்தரோம்
வழிதான்காணுதலமந்திருந்தால்வாழ்ந்துபோதீரே. (அ)

பேயோடேனும்பிறிவொன்றின்னுதென்பர்பிறரெல்லாங்
காய்தான்வேண்டிற்கனிதானன்றொருருக்கொண்டக்கா
னுய்தான்போலுடுவேதிரிந்தமக்காட்பட்டோர்க்கு
வாய்தான்றிறவீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே. (கூ)

செருந்திச்செம்பொன்மலருஞ்சோலையி தவோதிருவாரூர்
பொருந்தித்திருமூலத்தானம்மேயிடமாக்கொண்டீரே
யிருந்தூனின்றுண்டிடந்தமும்மையிகழாதேத்தவோம்
வருந்திவந்தமக்கொன்றைதால்வாழ்ந்துபோதீரே. (கo)

காரூர்கண்டத்தெண்டோண்முக்கண்கலேகள்பலவாகி
யாரூர்த்திருமூலத்தானத்தேயடிப்பேராரூரன்
பாரூரியவெண்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

காஞ்சிபுரத்தில் ஆலந்தானெனும் பதிகமோதி ஒருகண்பெற்றும், இத்தலத்தி லிந்தப்பதிகமோதி மற்றொருகண்ணும் பெற்றது.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தூஷாயாதொண்டுசெய்வதுபடுதக்கன்
ஸாவாயேகண்டுகொண்டாரைவர்கச்கில்

நாவாயா லுன்னையேநல்லன சொல்லுவெற்
காவாவென் பரவையுண்மண்டளியம்மானே. (க)

பொன்னனே புலவர்க்குநின்புகழ்போற்றலாற்
றன்னனே தன்னைப்புகழ்ந்திடுத்தற்சோதி
மின்னனே செக்கர்வான த்திளாயி
றன்னனே பரவையுண்மண்டளியம்மானே. (உ)

நாமாரு னுன்னையேநல்லனசொல்லுவார்
போமாறென் புண்ணியா புண்ணியமானனே
பேய்மாறப்பிணம்பிடுகாடுகந்தாடுவாய்க்
காமாறென் பரவையுண்மண்டளியம்மானே. (ங)

நேரக்குவே னுன்னையேநல்லனநோக்காமைக்
காக்கின்றாய்கண்டுகொண்டாரைவர்காக்கிலும்
வாக்கென்னுமாலைகொண்டுன்னையென்மனத்
தார்க்கின்றேன் பரவையுண்மண்டளியம்மானே. (ச)

பஞ்சேருமெல்லடியாளையோர்பாகமாய்
நஞ்சேருநன்மணிகண்டமுடையானே
நெஞ்சேநின்னையேயுள்கிநின்வாரை
யஞ்சேலென் பரவையுண்மண்டளியம்மானே. (ஞ)

அம்மானையாகமசீலர்க்கருணல்கும்
பெம்மானேபேரருளாளன்பிடவூரன்
றம்மானேதண்டமிழ்நூற்புலவாணர்க்கோ
ரம்மானேபரவையுண்மண்டளியம்மானே. (சு)

விண்டானேமேலையார்மேலையார்மேலாய
வெண்டானேயெழுத்தொடுசொற்பொருளெல்லாமுன்
கண்டானேகண்டனைகொண்டிட்டுக்காட்டாயே
யுண்டானேபரவையுண்மண்டளியம்மானே. (எ)

காற்றுனேகார்முகில்போல்வதோர்கண்டத்தெங்
கூற்றனேகோல்வளையாளையோர்பாகமாய்
நீற்றனேநீள்சடைமேனிறையுள்ளதோ
ராற்றனேபரவையுண்மண்டளியம்மானே. (அ)

செடியேனஞ்செய்வினைநல்லனசெய்யாத
கடியேனன்கண்டதேகண்டதேகாமுறாங்
கொடியேனன்கூறுமாறுன்பணிகூறுத
வடியேனன் பரவையுண்மண்டளியம்மானே. (கூ)

கரந்தையும்வன்னியுமத்தமுங்கூவிளமும்
பரந்தசிர்ப்பரவையுண்மண்டளியம்மானே

நிர்ம்பியவூரனுரைத்தன பத்தினை
யிரும்புவார்மேலையர்மேலையார்மேலரே. (கம)

திருச்சிற்றம்பலம்.

திருநனிபள்ளி-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியன்ஞாலமையன்மாலறிதற்கரிய
சோதியன்சொற்பொருளாய்ச்சுருங்காமறைநான்கினையு
மோதியனும்பர்தங்கோனுலகத்தினுளெவ்வுயிர்க்கு
நாதியனம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே. (க)

உறவிலியூனமிலியுணர்ார்புரமூன்றெரியச்
செறுவிலிதன்னினைவார்வினையாயினதேய்க்கழிய
வறவிலகும்மருளான்மருளார்பொழில்வண்டறையு
நறைவிரிகொன்றையினண்ணுமூர்நனிபள்ளியதே. (உ)

வானுடையான்பெரியான்மனத்தாலுநினைப்பரியான்
ஆனிடையைந்தமர்ந்தானணுவாகியோர்தீயுருக்கொண்
டூனுடைவெண்டலைமொடுங்கிப்புகுந்தான்பரந்தா
னானுடைமாடெம்பிரானண்ணுமூர்நனிபள்ளியதே. (ங)

ஒடிடையன்கலனுவுடைகோவணவன்னுமையோர்
பாடுடையன்பலிதேர்தனும்பண்புடையன்பயிலக்
காடுடையன்னிடமாமலியேழுங்கருங்கடல்சூழ்
நாடுடைநம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே. (ச)

பண்ணற்கரியதொருபடையாழிதனைப்படைத்த
கண்ணற்கருள்புரிந்தான்கருதாதவர்வேள்வியவி
யுண்ணற்கிமையவரையுருண்டோடவுதைத்தகந்த
நண்ணற்கரியபிரானண்ணுமூர்நனிபள்ளியதே. (ஞ)

மல்கியசெஞ்சடைமேன்மதியும்மரவும்முடனே
புல்கியவரணெம்புனிதன்புரிநூல்விரலின்
மெல்கியவிற்றெழிலான்விருப்பன்பெரும்பார்த்தனுக்கு
நல்கியநம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே. (ஃ)

அங்கமோராறறைவையும்அருமாமறைவேள்விகளு
மெங்குமிருந்தந்தணரெரிமூன்றவையோம்புமிடம்
பங்கயமாமூசித்தாளுமைபங்கனுறைகோயில்
செங்கயல்பாயும்வயற்றிருநனிபள்ளியதே. (எ)

திங்கட்சூளுற்றெரியற்றிகழ்கண்ணியனண்ணியனுய்
நங்கட்பிணிகளீவானருமாமீருக்கேழ்பிறப்பு

மங்கத்திருவிரலாலடர்த்தான்வல்லரக்கனையு
ங்கட்கருளும்பிரானண்ணுமூர்நனிபள்ளியதே. (அ)

ஏனமருப்பினெடுமெழிலாமையும்பூண்டுகந்து
வானமதிரைமலியேலேயாவுலகத்தா
ஞானமிலர்காழிதன்னுளுயர்ஞானசம்பந்தர்க்கன்று
ஞானமருள்புரிந்தானண்ணுமூர்நனிபள்ளியதே. (ஆ)

காலமுகாள்கழியுங்நனிபள்ளிமனத்தினுள்கிக்
கோலமதாயவனேக்குளிர்ந்ரவலவுரன்சொன்ன
மாலைமகித்தரைப்பார்மண்மறந்துவானுலகிற்
சாலநல்லினமெய்தித்தவலோகத்திருப்பவமே. (கம)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நற்றுணையப்பர், தேவியார்-பர்வதராசபுத்திரி.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தண்ணியல்வெம்மையினுறையிற்கடைதோறும்பலி
பண்ணியமென்மொழியாரிடங்கொண்டுழல்பண்டரங்கன்
புண்ணியநான்மறையோர்முறையாலடிபோற்றிசைப்ப
நண்ணியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (க)

வலங்கிளர்மாதவஞ்செய்மலைமங்கையோர்பங்கினனுய்ச்
சலங்கிளர்கங்கைதங்கச்சடையொன்றிடையேதரித்தான்
பலங்கிளர்பைம்பொழிறண்பனிவெண்மதியைத்தடவ
நலங்கிளர்நன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (உ)

கச்சியனீன்கருப்பூரிருப்பன்கருதிக்கிவா
ருச்சியன்பிச்சையுண்ணியுலகங்களெல்லாமுடையா
னெச்சியம்பச்சிலையானுனைநீர்புனலாற்றெழுவார்
நச்சியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (ங)

பாடியநான்மறையான்படுபல்பிணக்காடரங்கா
வாடியமாகடனத்தானடிபோற்றியென்றன்பினராய்ச்
சூடியசெங்கையினுர்பலதோத்திரம்வாய்த்தசொல்லி
நாடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (ச)

பிலந்தருவாயினெடுபெரிதும்வலிபிக்குடைய
சலந்தருனைகமிருபிளவாக்கியசக்கரமுன்
னிலந்தருமாமகள்கோனெடுமாற்கருள்செய்தபிரா
னலந்தருநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (ஞ)

வெண்பொடிமேனியினுங்கருநீலமணிமிடற்றினும்
பெண்படிசெஞ்சடையான்பிரமன்சிரம்பிடுழித்தான்
பண்புடைநான்மறையோர்பயின்றேத்திப்பலகால்வணங்கு
நண்புடைநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (சு)

தொடைமலிகொன்றைதுன்றுசடையன்சுடர்வெண்மழுவாட்
படைமலிகையன்மெய்யிற்பகட்டருநிப்போர்வையினுன்
மடைமலிவண்கழலம்மலர்மேன்மடவன்னமன்னி
நடைமலிநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (எ)

குளிர்தருதிங்கள்கங்கைகுரவோடரக்கூவிளமூ
மிளிர்தருபுன்சடைமேலுடையான்விடையான்விரைசேர்
தளிர்தருகோங்குவேங்கைதடமாதவிசண்பகமு
நளிர்தருநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (அ)

சுமர்பயில்வெஞ்சுரத்தக்கடுங்கேழற்பின்கானவனு
யமர்பயில்வெய்தியருச்சுனற்கருள்செய்தபிரான்
றமர்பயிறண்விழவிற்றகுசைவர்தவத்தின்மிக்க
நமர்பயினன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (கூ)

கருவரைபோலரக்கன்கயிலம்மலிலெழக்கதற
ஒருவிரலாடலடர்த்தின்னருள்செய்தவுமாபதிதான்
திரைபெருபொன்னிகன்னீர்த்தலைவன்நிகழ்செம்பியர்கோ
னரபதிநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (கo)

தோடுயர்வெங்களிற்றுத்திகழ்கோச்செங்கணன்செய்கோயி
ணடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனைச்
சேடியல்சிங்கிதன்தைசடையன்றிருவாரூரன்
பாடியபத்தும்வல்லார்புகுவார்பரலோகத்துளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாகேச்சரம்–பண்–பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிவாணுதலாளுமையாளவள்பேழ்கணிக்க
நிறையணிநெஞ்சனுங்கலோமால்விடமுண்டதென்னே,
குறையணிகுல்லைமுல்லையணிந்தகுளிர்மாதவிமேற்
சிறையணிவண்டுகள்சேர்திருநாகேச்சரத்தரனே. (க)

அருந்தவமாமுனிவர்க்கருளாகியாலதன்கீ
ழிருந்தறமேபுரிதற்கியல்வாகியதென்னைகொலாங்

குருந்தயலேருரவம்மரவின்னெயிறேற்றரும்பச்
செருந்திசெம்பொன்மலருந்திருநாகேச்சரத்தானே. (உ)

பாலனதாருயிர்மேற்பரியாதபகைத்தெழுந்த
காலனைவீடுவித்தக்கருத்தாகியதென்னைகொலாங்
கோலமலர்குவளைக்கழுநீர்வயல்சூழ்கிடங்கிற்
சேலொடுவாளைகள்பாய்திருநாகேச்சரத்தானே. (ஊ)

குன்றமலைக்குமரிகொடியேரிடையாள்வெருவ
வென்றிமதகரியின்னுரிபோர்த்ததுமென்னைகொலோ
முன்றிலிளங்கமுகின்முதுபாளைமதவளைந்து
தென்றல்புகுந்தலவுந்திருநாகேச்சரத்தானே. (எ)

அரைவிரிகோவணத்தோடரவார்த்தொருகான்மறைதூ
ரைபெருகவுரைத்தன்றுகந்தருள்செய்ததென்னே
வரைதருமாமணியும்வரைச்சந்தகிலோடுமுந்தித்
திரைபொருதண்பழனத்திருநாகேச்சரத்தானே. (ஏ)

தங்கியமாதவத்தின்றழல்வேள்விபினின்றெழுந்த
சிங்கமுகீள்புலியுஞ்செழுமால்கரியோடலறப்
பொங்கியபோர்புரிந்துபிளந்தெரிபோர்த்ததென்னே
செங்கயல்பாய்கழனித்திருநாகேச்சரத்தானே. (ஐ)

நின்றவிம்மாதவத்தையொழிப்பான்சென்றணைந்துமிக்க
பொன்னியபூங்கணைவேள்பொடியாகவிழித்ததென்னே
பங்கயமாமலர்மேன்மதுவுண்டுவண்டேன்முரலச்
செங்கயல்பாய்வயல்சூழ்திருநாகேச்சரத்தானே. (ஒ)

வரியரகாணதாகமாமேருவில்லதாக
வரியனமுப்புரங்களையமாரமூட்டலென்னே
கிரிதருமல்லிகையும்மலர்ச்சண்பகமும்மன்னுந்து
திரிதருவண்டுபண்செய்திருநாகேச்சரத்தானே. (ஓ)

அங்கியல்யோகந்தன்னையழிப்பான்சென்றணைந்துமிக்க
பொன்னியபூங்கணைவேள்பொடியாகவிழித்தலென்னே
பங்கயமாமலர்மேன்மதுவுண்டுபண்வண்டறையச்
செங்கயனின்றுகளுந்திருநாகேச்சரத்தானே. (ஔ)

குண்டரைக்கூறையின்றித்திரியுஞ்சமணசாக்கியப்பேய்
மிண்டரைக்கண்டதன்மைவிரவாகியதென்னைகொலோ
தொண்டிரைத்தவணங்கித்தொழில்பூண்டடியார்பரவுந்
தெண்டிரைத்தண்வயல்சூழ்திருநாகேச்சரத்தானே. (கo)

கொங்கணைவண்டலர்த்தக்குயிலும்மகிலும்பயிலுந்
தெங்கணைபூம்பொழில்சூழ்திருநாகேச்சரத்தானே

வங்கமலிகடல்சூழ்வயனவலூர்ன்சொன்ன
பக்கமிற்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செண்பகாரணியேசுவரர், தேவியார்-குன்றமுலையம்மை.

திருநொடித்தான்மலை-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தானெனேமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனப்பெருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஆனுயிர்வேறுசெய்தானெடித்தான்மலையுத்தமனே. (க)

ஆனையுரித்தபகையடியேனெடுமீளக்கொல்லோ
வூனையுயிர்வெருட்டியொள்ளியானினைந்திருந்தேன்
வானமதித்தமரர்வலஞ்செய்தெனையேறவைக்க
வானையருள்புரிந்தரனெடித்தான்மலையுத்தமனே. (உ)

மன்னிரமொன்றறியேன்மனவாழ்க்கைமெய்ந்தடியேன்
சுன்தரவேடங்களாற்றுரிசேசெயுந்தொண்டனெனை
யன்தரமால்விசும்பிலழகானையருள்புரிந்த
தன்தரமேகெஞ்சமேநொடித்தான்மலையுத்தமனே. (ஙு)

வாழ்வையுகந்தநெஞ்சமடவார்தங்கள்வல்வினைப்பட்
டாழமுகந்தவென்னையதுமாற்றியமரரெல்லாஞ்
சூழவருள்புரிந்துதொண்டனேன்பரமல்லதொரு
வேழமருள்புரிந்தரனெடித்தான்மலையுத்தமனே. (ச)

மண்ணுலகிற்பிறந்துதும்மைவாழ்த்தும்வழியடியார்
பொன்னுலகம்பெறுதலறிண்டனேனின்முகண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள்விரும்பவெள்ளையானையின்மே
லென்னுடல்காட்டுவித்தானெடித்தான்மலையுத்தமனே. (ஞ)

அஞ்சினையொன்றியின்றுலர்கொண்டடிசேர்வதியா
வஞ்சனைசெய்மனமேவைவினவானரன்றொடர்முன்னே
தஞ்சமென்மீற்றுவித்துத்தொண்டனேன்பரமல்லதொரு
வெஞ்சினவானைதன்தானெடித்தான்மலையுத்தமனே. (ஞ)

நிலமிசைவிண்ணதிரநிலமெல்லுங்கிர்ந்தசைய
மலையிடையானையேறிவழிபடுவருவேனைநிரே

யலைகடலாலரையனலர்கொண்டுமுன்வந்திறைஞ்சும்
உலையமணியாதவண்ணமொடித்தான்மலையுத்தமனே (எ)

அரவெரலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்
விரவியவேதஒலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப
வரமலிவாணன்வந்துவழிதன்தனக்கேயுவதோர்
சிரமலியாணதக்தாளெடித்தான்மலையுத்தமனே. (ஏ)

இந்திரன்மால்பிரமன்னெழிலார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவெண்ணமத்தயானையருள்புரிந்து
மந்திரமாமுனிவரிவனெனவெம்பெருமா
னந்தமாரூரனென்றுளெடித்தான்மலையுத்தமனே. (கூ)

ஊழிதோறாழிமுற்றுமுயர்பொன்னெடித்தான்மலையைச்
சூழிசையின்கரும்பின்சுவைநாவலவூரன்சொன்ன
வேழிசையின்றமிழ்மாலைசைந்தேத்தியபத்தினையு
மாழிகடலரையாவஞ்சையப்பர்க்கறிவிப்பதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

நொடித்தான்மலையென்பது – கயிலைமலை.

ஆக பதிகம்–கoo.

வெள்ளிப்பாடலாகிய காரோணப்பதிகம் சில புத்தகத்தி லில்லாமையால் இதிற் பதிக்காமல் விடப்பட்டது.

நம்பியாரூரரென்னும்
சுந்தரமூர்த்திசுவாமிக ளருளிச்செய்த
தேவாரப்பதிகங்கள்
மு ற் றி ற் று.

அநுபந்தம்.

திருவகப்பாகத் திருவுள்ளக் கருத்து.

க. பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(பதப்பொருள்) பிரமம் – ஞானகாரமாகிய பராசத்தியை, புரத்துறை – அந்தப் பரிபூரணத்தை மிருதியாக வியக்கப்பட்டது, பெம்மான் – பெருமான், எம்மான் – எந்தப் பெரியோன் என்க.

(பொழிப்பு) ஞானகாரமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிருதியாகவியந்து அந்தப் பராசத்திக் கதிதமாகிய சுகமே வடிவாய் முதல் நடு இறுதி காணப்படாதவஸ்துவே எந்தப்பெரியோன்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(ப-ள்.) பிரமபுரத்து – மேல்நிலத்து, உறை – தண்ணீர், பெம் – விருப்பம், மான்–மான்போலும் விழியையுடையபெண், எம் – எம்முடைய, ஆன் – ஆன்மா என்க.

(பொ-பு.) மேல்நிலமாகிய ஆகாசத்தின்கண்ணே யோடாகின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், எம்மை நீங்காத நிலைமையையுடைய எமதுயிர்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(ப-ள்.) பிரம – பிரமத்தலம், புரம் – சரீரம், உறை – எண்ணுதல், பெம் – ஆசை, ஆன் – அமையாமை, எம்மான் – என்னே யொக்கவந்தவன் என்க.

(பொ-பு.) பிரமபுரப்திலே யெண்ணப்பட்ட என்னே முத்தியிலே விடுகைக்கு அமையாத விருப்பமுள்ளவனு மென்னே யொக்கவந்தவன்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(ப-ள்.) பிரமபுரத்துறை – பிரமபுரமென்கிற சோழிப்பதியிலே வீற்றிராகின்ற, பெம்மான் – கர்த்தாவானவன், எம்மான் – என்னுடைய சுவாமி என்க.

(பொ-பு.) பிரமபுரமென்கிற சோழிப்பதியிலே வீற்றிராகின்ற கர்த்தாவானவன் என்னுடைய சுவாமி, பெரியோனும் எனக்குயிரானவனும் என்னே யொக்கவந்தவனும் சோழிப்பதியில் வீற்றிருக்கும் சிவனெனக்கூட்டிப் பொருள்கொள்க.

உ. விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(ப-ள்.) விண்டு – மலை, அலர் – ஒலி, பொழில் – உலகம், அணிவு – அகப்படுத்தல், ஈண் – பெருமை, நுபுரம் – லெம்பு, தரன் – தரித்துள்ளவன் என்க.

(பொ-பு.) அஷ்டகுலபர்வதங்களும் ஒலிதிறந்த தரிசுமணியாகவும், அகிலலோகங்களேயும் உள்ளேயகப்படுத்தற் தன்மையவாயும், பெரிதாயுமுள்ள நிருச்சிலம்பினைத் தரித்துள்ளவன்,—நுபுரம் எனற்பாலது நுபுரம் எனக் குறுகின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(ப-ள்.) விண்டு – விஷ்ணு, அலர் – புறனுரை, பொழில் – அரசினிழல், அணி–பொருந்தி, வேணு – ஓர்பரம், புரத்து அரன் – புரத்தையரித்தவன் என்க.

(பொ-பு.) விஷ்ணுவின் புறனுரையாகிய சிவஜீவத்வத்தை அரசமர்த்தினிழலில் அவனுடனிருந்து விரும்பியுள்ள மும்மூர்த்திகளைச் சங்கரித்துள்ளவன்,—அண்ணியென்பாலது –அணியென இடைக்குறைந்து நின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(ப-ன்.) விண்தலர் – தேவர்கள், பொழில் – கற்பகப்பூஞ்சோலை, அணிவு – சூடுத எணு – எண்ணும், புரத்தரன் – தேவேந்திரன் என்க.

(பொ-பு.) தேவர்கள் கற்பகப்பூஞ்சோலை மலர்களால் அர்ச்சிக்கப் படுகில் தேவேந்திரனுடைய எணு-எனற்பாலது-எணு என நீண்டது. புரந்தரன் எனற்பாலது புரத்தரனென வலித்துகின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(ப-ன்.) விண்டு – இதழ்கள்விண்டு, அலர் – மலர்கின்ற, பொழில் அணி – சோலை சூழ்ந்த, வேணுபுரத்து அரன் – வேணுபுரமென்று மொருபெயருள்ள சோழிப்பதிக்குக் கர்த்தா என்க.

(பொ-பு.) இதழ்கள் விண்டுமலர்கின்ற சோலைசூழ்ந்த சோழிப்பதிக்குக் கர்த்தாவா யுள்ளவன்,—தேவேந்திரன் மூங்கில்வழியாகவந்து பூசித்ததால் வேணுபுரமென்னும் பெயர்பெற்றது,—ஏலம்பீனத் தரித்துள்ளவரும், மூப்புரத்தையெரித்தவரும், தேவேந் திரனுடைய சோலைசூழ்ந்த வேணுபுரத்தில் வீற்றிருக்கும் இறைவனெனக்கூட்டி யுரைத் துக்கொள்க.

கூ. புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(ப-ன்.) புண்டரிகத்தவன் – இதய கமலத்திலுள்ளவன், மேவியபுகலியே – எனக் கின்பந்தருவானுமாய் மீளாவழியாகிய புகலிடமாயு முள்ளவன் என்க.

(பொ-பு.) இதயகமலத்திலிருந் நிடையருத வானந்தம்பொழியப்பட் டென்னை மலபோதத்தில் தள்ளாமல் எனக்கடைக்கலப் பொருளாயுள்ளவன்.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(ப-ன்.) புண்டரிகம் – திரிபுண்டரம், தவன் – யிக்க பெருமையை யுடையவன், மேவிய – பொருந்திய, புகலி – சொல்லப்பட்டவன், ஏ – என்பதிற்றசை என்க.

(பொ-பு.) ஆன்மாக்களுக்கு இரைஷயாக முண்டம்போலிருந்த திருநீற்றை யணி யப்பட்ட யிக்க கருணையானவனே யான்பாடும் பாடலே யுவந்துள்ளவன்.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(ப-ன்.) புண்டரிகம் – புலி, தவன் – தவமுனி, மே – கூத்து, வியம் – பொன், பு- பொது, கலி – கற்றவன் என்க.

(பொ-பு.) புலிக்காலும், புலிக்கையும் பெற்றுள்ள வியாக்ரபாத முனிவருக்கு ஞானுனந்தமாகிய நாடகத்தைக் கனகசபையிலே யாடல்செய்யும் பரமரித்தையைக் கற்றுள்ளான். வியம் எனற்பாலது – வியவெனக் கடைகுறைந்து கின்றது.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(ப-ன்.) புண்டரிகத்தவன் – பிரமதேவன், மேவிய – தனது போதத்தாலே பணிய லுற்ற, புகலியே – புகலியென்னுஞ் சோழிப்பதியே என்க.

(பொ-பு.) கீழ்ச்சொன்ன லீலைகளெல்லாஞ்செய்கின்ற வென் தனதிச்சையால் பொருந்தியிருக்குமூர் பிரமாவானவன் பூசித்த புகலியென்னுந் திருப்பதி.

ச. வீளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(ப-ன்.) வீளம் – வீளாரம்பழத்தை, கொளி – கன்றுகுணிலாக எறிந்துகொண்டவனு கிய விஷ்ணு, தி – விட்டு வீளங்காகின்ற, கழ்தரு – நின்மலநீடிய,-எங்கு – எவ்விடத்தில், உருமேவினன் – தனது திருமேனியிலே மேவினன் என்க.

(பொ-பு.) கன்றுகுணிலாக எறிந்து வீளவீன் கனியைக்கொண்ட ஸ்ராணனைப் பிரகாசஞ்செய்யப்பட்டு நின்மலமாயிருக்துள்ள தன்து பெரியதிருமேனியிலே ஒன்று

ராகியாக வைத்துள்ளான் என்க. தீ எனற்பாலது – நி எனக்குறுகி நின்றது. கழுச்சு னற்பாலது – கழ்தரு என நின்றது.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(ப-ள்.) விலங்கு எனற்பாலது – விளங்குனவும், ஒலி எனற்பாலது – ஒளி எனவுந் சிரிந்து நின்றது. விலங்கு – மாறுபாடாய், ஒலி – கதறப்பட்ட பெளத்தனது தலையிலே, நி – அக்கினியைச்சொரிந்து, கழ்தரு – மிக்கபயத்தோடும் விழுகின்ற, எங்கு – ஒலிக் கும், உருமு – இடியை, எலினன் – விழும்படி எலினன் என்க.

(பொ-பு.) மாறுபாடாய்க் கதறப்பட்ட பௌத்தனது தலையிலே அக்கினியைச் சொரிந்து மிக்க பயத்தோடும் விழுகின்ற இடியை விழும்படியேவிப் பௌத்தரை வேரு த்தானுக் தானேயன்றீ யானன்குரும்.

தீ எனற்பாலது-நி எனவும், காழ்தரு எனற்பாலது – கழ்தரு எனவும், எங்கு எனற்பாலது – எங்கு எனவுங் குறுகின்றன.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(ப-ள்.) விள் – நீங்குதல், அங்கு – அவ்விடத்தில், ஒளிது – ஒள்ளியது, இகழ்தரு- இகழப்படும், எங்குரு – எம்முடையகுரு, மேவினன் – கலந்தனன் என்க.

(பொ-பு.) தனது பரிபூரணத்திலே தன்னேயிழந்து இரண்டாய் விகலமுருவித்தான் லிஷமாகச் அனுஷணப்பட்டு நிற்கின்ற ஈனக்கும் குருமூர்த்தியாய் வந்து என்பிறவியை யொழித்துத் தனது பேரின்பமாகிய பரிபூரணத்திலே எனதடிமை சூலையாக லிரண்டற வைத்தவன்.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(ப-ள்.) விளங்கும் ஒளி – எங்கும் பிரகாசமின்ற சோதி, திகழ்தரு – சிறத்தல், வெங்குரு – இயமனற் பூசிக்கப்பட்ட திருப்பதி, மேவினன் – விரும்பினன் என்க.

(பொ-பு.) சீழ்ச்சொல்லிப்போந்த செய்திகளெல்லாமுடைய னெத்தன்மையனே வெண்ணீல் எங்கும் பிரகாசியாகின்ற சோதியனுற் சிறக்கப்பட்டுள்ள இயமனுற் பூசிக்கப் பட்ட வெங்குருவென்னும் திருப்பதியை விரும்பியுள்ளான். வெங்குரு என்பதும் சோழி.

இ. சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(ப-ள்.) சுடர்மண் – சூடாரம்ண், இம் – ஈமம், ஆனி – ஆனப்பட்டவன், கைத் தோணி – போர்தொலைத்த தம்பைமாலை, புரத்து – நிரிபுரங்களேயும், அவன் – அவம் பட்டனுவன் என்க.

(பொ-பு.) சகிலமாகிய மயான்தை ஈடமாடி மிடமாகக்கொண்டும், மும்புரங் களேயும் ஈகைசெய்து சுடப்பட்ட வெற்றிப்போரையுடைய தம்பைமாலைக் கடவுள், சூடார் எனற்பாலது – சுடரெனவும், ஈமம் எனற்பாலது – இம் எனவும், குறுகின்றன. தரோணமெனற்பாலது – தோணியென மருவிற்று.

சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(ப-ள்.) சுடர்மணி – சூடாமணி, மாளி – மாலி, கைத்தோன் – தூதிக்கையினை யுடைய யானையை, நிபுரத்தவன் – வடிவில்லாமற்செய்தோன் என்க.

(பொ-பு.) என்னுச்சிக்குச் சூடாமணியுமாய் என்மேல் வைத்த மாலினையுடையனு மாய் யாகத்தின்கண் வந்தயானையை வடிவொழித்துப் போர்க்குச் தன்மையை யுடையவன்.

சூட்சிமணி யெனற்பாலது – சூடாரம்ணிஎனவும், மாலியென்றபாலது – மாளிஎனவும் தோல்லீனற்பாலது – தோணிஎனவும் நின்றன. மாலையுடையவன் – மாலி, தோல்-யானை.

சுடர்மணிமாளிகைத் தோரணிபுரத்தவன்.

(ப-ன்.) சுடர் – சூரியன். மணி – கழுவி, மாளி – கெட்டவன், கைத்தோணி – தெப்பம், புரத்தவன் – பூரத்தவன் என்க.

(பொ-பு.) சூரியனுடைய களங்கத்தைக் கழுவப்பட்ட சமுத்திரம்போன்ற சென னைக்கடலிலே நீற்பட்டமூழ்கிக்கெடாதின்ற ஆன்மாக்களுக்குக் கைப்பற்றிக் கரையே றுந் தெப்பமாகப் பிரணவமென்கிற மந்திரத்தை அவரது செவியின்கண்ணே யுண்டா க்காதின்றவன்.

மண்ணி என்பது – மணியென இடைகுறைத்து நின்றது. புரத்தவன் எனற்பாலது- புரத்தவன் என வலித்தல் விகாரமாயிற்று.

சுடர்மணிமாளிகைத் தோரணிபுரத்தவன்.

(ப-ன்.) சுடர் – விளக்கத்தையுடைய, மணி – நவரத்தினங்களாலே அலங்கரிக்கப் பட்ட, மாளிகை – மாளிகைகள்சூழ்ந்த, தோரணிபுரத்தவன் – திருத்தோணிபுரத்தின்கண் ணே வாழ்கின்றவன் என்க.

(பொ-பு.) விளக்கத்தையுடைய நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட மாளிகை சூழ்ந்த திருத்தோணிபுரத்திலே வீற்றிருக்குஞ் வென் இத்தன்மையன்.

சூ. பூசுரர்சேர்பூந்த ராயவன்பொன்னடி.

(ப-ன்.) பூ – பூமியிலுள்ளோர், சுரர் – தேவர்கள், சேர் – தோன்றுதல், பூ – இதய கமலம், தராயவன் – தரித்தவன், பொன் – பொலிவு, அடி – கண்ணுடி என்க.

(பொ-பு.) பூமியிலுள்ளாரையுஞ் தேவகணங்களா யுள்ளாரையுந் தன்து .காபிக்கம லத்திலே தோற்றுவிக்கப்பட்ட பிரமா விஷ்ணுவினது போதத்திலே கண்ணுடியும் நிழ லும்போலப் பிரதிவிம்பியாதின்றவன். ஆடி என்பது – அடியெனக் குறுகின்றது.

பூசுரர்சேர்பூந்த ராயவன்பொன்னடி.

(ப-ன்.) பூசுரர் – மலத்தைக்கழுவிய வெளுனிகள், சேர் – நிரட்சி, பூ – பொலிவு, தராய் – பெறப்பட்ட, அவன் – அக்கடவுள், பொன் – வனப்பு, கழ – நாடகமாட்ப்பட்ட வன் என்க.

(பொ-பு.) மலத்திரயங்களைக் கழுவப்பட்ட வெளுனிகள் கூட்டம் பொலிவு பெறத்தக்க வனப்பையுடைய ஆனந்தநிருத்தஞ் செய்தருள்பவன்.

பூசுரர்சேர்பூந்த ராயவன்பொன்னடி.

(ப-ன்.) பூசு – திருநீற்றையுத்தூளிக்கப்பட்ட, உரர் – மார்பையுடையவர், சேர்பு- அரிதல், ஊந்தராய் – தள்ளுதல், யவன் – யௌவனம், பொன் – அழகு, அடி – மூலம் என்க.

(பொ-பு.) சர்வாங்கமு முத்தூளனம்பண்ணின மார்பையுடைய வெளுனிகளும், புண்ணியப்பாவக் கட்டையிரித்து விசுவத்தைத் தள்ளப்பட்ட நிறப்பை யுடையருமா யிரா கின்றவர்களுக்கு மிகுதியான மூலமாயுள்ளவன். உந்தராய் என்பது – ஊந்தரா யென நீண்டது.

பூசுரர்சேர்பூந்த ராயவன்பொன்னடி.

(ப-ன்.) பூசுரர் – மறையோர், சேர் – நிரட்சி, பூந்தராயவன் – பூந்தராயென்னுந் திருப்பதியிலேயுள்ளவன், பொன்னடி – அழகிய திருவடித்தாமரை என்க.

(பொ-பு.) மறுலோ மறையோர் வாழ்கின்ற திருப்பூந்தராயென்னுந் திருப்பதி யின்கண் வீற்றிராகின்ற வெனத் அழகிய திருவடித்தாமரை யென்னே யாண்டிடுவதாக, பூந்தராயென்பதஞ் சோழி.

எ செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(ப-ள்.) செருக்கு – மயக்கம், வாய்ப்பு – மேலீடு, உடையான் – கேடுசெய்யான், சிரபுரம் – மேலாகிய இருப்பு, என்னில் – என்னுடையபோதமே என்க.

(பொ-பு.) தனது திருவடிப்பிரசாதமில்லாதார்க்கு மலமயக்கத்தின் மேலீட்டைக் கெடாத சிவனுக்கு விசுவாதீதமான இருப்பிடம் எனது தைனியமே.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(ப-ள்.) சேர் – சத்தாதிக ளஞ்சுஞ்சேரப்பட்ட, உக்கு – அத்தப்பூமி, வாய்ப்புடையான் – தன் வயினிடமாகவுள்ள விஷ்ணு, சிர் – சிறப்பு, அபுரம் – உயிர்போன கனேபரம், என்னில் – மேனிலே என்க.

(பொ-பு.) சத்தாதிக ளஞ்சுஞ் சேரப்பட்ட உலகத்தைத் தன் வாயினிடமாக வுடைய விஷ்ணுவின் கனேபரத்தைத் திருமேனியிலே தரித்துள்ளான். சேர் எனற் பாலது – சென் எனவும், சிர் எனற்பாலது – சிர் எனவுங் குறுகின்றன.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(ப-ள்.) செருக்கு – ஆத்தும விகாரமாகிய கர்வம், வாய் – இந்திரியம், புடையான் – இடத்தான், சிரம் – மேல், புரம் – சரீரம், என்னில் – சத்தியம் என்க.

(பொ-பு.) ஆத்துமவிகாரமாகிய கர்வத்தினுலே இந்திரியங்களுக்கு விடயமாகிய சுவர்க்கத்தி லிச்சையுடையானுக்கு அந்தச்சுவர்க்கம் மெய்யாகவிசேஷித்திருக்குமன்றே.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்:

(ப-ள்.) செருக்கு – இந்திரியயுத்தத்திற்கு, ஆய்ப்பு – இளைப்பு, உன்தையான் – உன்தைக்கப்பட்டான், சிரபுரமென்னில் – சிரபுரமென் றுரைசெய்தில் என்க.

(பொ-பு.) இந்திரிய வன்மையாகிய யுத்தத்துக்கு இளையாமல் அந்த இந்திரியமாகிய பாணங்கள் தனதறிவுக்குள் தைக்கப்பட்டான்.

(தா-ம்.) ஒருகாற் சிரபுரமென்று சொன்னவிடத்துப் பஞ்சேந்திரியங்களேயும் அவியப்பொருது சிவனுடைய திருவடியிலே அடையாளிற்பன் என்பதாம்.

அ. பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(ப-ள்.) பொன் – பொலிவு, கடி – கூத்துடையான், மாது – பத்திரகாளி, அவர்-பூதகணங்கள், சேர் – தங்குதல், புறவத்தவன்-சுடுகாட்டிலுள்ளவன் என்க.

(பொ-பு.) பொலிவினேயுடைய மாயாரிருத்தம் புரிகின்ற பத்திரகாளியும், பூதபசாசும் பொருந்திய மயானமே திருக்கோயிலாக வுள்ளவன்.

பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(ப-ள்.) பொன் – நாய்மை, அடி – வழி, மாதவர் – தபோதனர், சேர் – நிரட்சி, புறவம் – முல்லேநிலம், தவன் – தவம்புரிந்துள்ளான் என்க.

(பொ-பு.) சுத்தமான வழியைத்தரப்பட்ட மகா இருஷிகள் நிரண்டு தவம் பண்ணி நிற்கும் ஆணியத்தில் தனித்துத் தவம்புரியாநிற்குந் தபோதனன்.

பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(ப-ள்.) பொன் – இலக்குமி, அடி – ஆபரணத்தொகுதி, மாது அவர் – இருடி பத்தினிகள், சேர்புறவு – பிச்சையிடவத்தணேதல், அவத்தவன் – கலேசோர்தலேச் செய்த திருவாணி என்க.

(பொ-பு.) அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இலக்குமியையொத்த இருடிபத்தினிகள் பிச்சையிடவத்தணேயிடத்துத் தனக்குளள திருவாணத்தை அவர்களுக்கே கொடுத்தவன்.

பொன்னடிமாதவர் சேர்புறீவத்தவன்.

(ப-ன்.) பொன் – பொன்னாற் செய்யப்பட்ட பாடக நூபுர காலாழிகள் முதலியவு மிடப்பட்ட, அடி-பாதம், மாதவர்-கன்னியர், சேர் – இனமாய்வினையாதல், புறவத்த வன் – திருப்புறவமென்கின்ற திருப்பதியில் வாழ்கின்றவன் என்க.

(பொ-பு.) பொன்னாற் செய்யப்பட்ட பாடக நூபுராதிகளோப் பாதங்களிலே யணிந்துள்ள கன்னியர் திரண்டு வீணையாடும் புறவமென்னுங் திருப்பதியில் வாழ்கின்ற சிவன். புறவம் என்பதஞ் சோழி.

கூ. தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(ப-ன்.) தசமுகன் – தலையையுடையான், எரிதர-எரிவீச, ஊன்று – அழுத்து, சண்-வேகம், பையான் – படம்பொருந்திய பாம்பையுடையான் என்க.

(பொ-பு.) ஆத்மாக்களிடத்துக் கருணை பிறக்கு மிடமாயுள்ளவன் அக்கினிலீசப் பட்டுத் திருவரையிலே அழுந்தச்சாத்தியுள்ள விரிக்கபடத்தினையுடைய பாம்பை அரை ஞாணுக-வுடையான்,

தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(ப-ன்.) த – அதி, சமுகம் – நிரட்சி, நெரி – நேரானவன், தர – புலி, ஊன்-மாமி சம், தசை – ஆசை, அண்பையான் – விரித்ததுத்தான் என்க.

(பொ-பு.) எல்லாமிறந்து அந்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகிய குணிமமாயுள்ள பொருளைத் தோற்றுவித்துள்ளானுமாய்ப் புலியினது ஊன்பொருந்திய தோலாடையைத் திருவரையிலே விரித்துடுத்தவன். நேரி எனப்பாலது – நெரி எனக் குறுகின்றது. தரக்கு எனப்பாலது – தர எனக்குறைந்தது. தசை எனற்பாலது – தசு எனக் குறுகின்றது. பாயான் எனற்பாலது – பையனெனக்குறுகிப் போலியாயிற்று.

தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(ப-ன்.) தசம் – தைசதம், உக – கெட, நெரி – எதிர்ப்பட்டவன், தரம் – மேல், ஊன்-திருவுளத்தடைத்தல், து – விசேஷஞானமுள்ளவன், சண் – சட்சமயம், பையான் – பயனுள்ளவன் என்க.

(பொ-பு.) ஆத்மலிகாரமான அகங்காரம்போம்படி என்னறிவி லெதிர்ப்பட்டவன் கயிலாயமலையைத் திருவுள்ளத்தடைத் தெழுத்தருளியிருந்து ஆத்மாக்களே யிரக்கியா நின்ற விசேஷத்தை புடையவனென் றேத்தும் சட்சமயங்களுக்கும் அவரவர் கொண்ட பயனுள்ளவன். நேரி எனப்பாலது – நெரியெனக் குறுகின்றது.

தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(ப-ன்.) தசமுகன் – பத்தத் தலைகளையுடைய இராவணன், நெரிதர – முறிய, ஊன்று – அழுகிய, சண்பையான்-சண்பையென்னுந் திருப்பதியில் வீற்றிருப்பவன் என்க.

(பொ-பு.) பத்தத்தலையுள்ள இராவணன் முறியும்படி திருவிரலாலடர்த்தவன் யாரென்னில், சண்பையென்னுந் திருப்பதியிலே வீற்றிருக்குங் கடவுள்

கூ. காழியானய னுள்ளவாகாண்பரே.

(ப-ன்.) காழியான – நிலைபெற்ற நின்மலமான சித்தத்தையுடைய, யன் – பத்தரிடத்து, உள்ளவர் – சத்தியம், காண்பரே – நோக்குவர் என்க.

(பொ-பு.) நிலைபெற்றுநின்ற நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்தரிடத்துச் சத்தியப்பொருள்வீற்றுப்பொருட்டு ஞானநாட்டத்தினுலே அவர்களேக் கடாக்ஷிக்கின்றவன்.

காழியானய னுள்ளவாகாண்பரே.

(ப-ன்.) காழியான் – கனங்களுமுன்னவன், யனுள்ளவர் – ஞானக்கண்ணுள்ளவாறு, காண்பரே – நிலைமையாக நினைப்பரே என்க.

(பொ-பு.) திருமிடற்றிற் கனல்கமுடையானது கருணையினீன்த ஞானநாட்டத் தையுடைய சிவஞானிகள் சிவனுக்கிச்சை தன்னடியார்க்கே ஆங்காரத்தைத்திக்குமதே பணியெனத் தமதறிவிலே கருதாநிற்பர்.

காழியானய னுள்ளவராகாண்பரே.

(ப-ள்.) காழியான் – விஷ்ணு, அயன் – பிரமா, உள்ள – நினைக்க, ஆ – அதிசயம், கண் – கருதுதல், பரே – அன்னியம் என்க.

(பொ-பு.) விஷ்ணுவும் பிரமாவுந் திருமுடியுந் நிருவடியுங் காணும்பொருட்டு வராக மும் அன்னமுமாகிக்கருதி வடிவுகொண்டார் ஐயோ உள்ளபடி கருதிச் சிவனைப் பெரு மல் அவர் கருதிய தேதென்னில், அன்னியமேகண்டனர். கண் எனற்பாலது – காண் என நீண்டது.

காழியானய னுள்ளவராகாண்பரே.

(ப-ள்.) காழியான் – காழிப்பதியுள்ளான், அயன் – ஐயன், உள் – என்னறிவி லுண்டான, அவர் – ஆசை, காண்பரே – தரிசிப்பரே என்க.

(பொ-பு.) என்பொருட்டாற் காழியென்னுந் திருப்பதியைப் படைத்தானே என் னீயானே எனதாசையை நிச்சொன்ன விருவர்களும் தாங்கள் தேடுந் தேட்டப் பிறிவின் மய்க்கத்திலே தெட்டமழித்துத் தோன்றுதிற்பவனே தேடி மறத்தலொழிக் தெவ்வாறு காண்பர்.

கக. கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(ப-ள்.) கொச்சை – அறியாமையைப் பொருந்தியுள்ள ஆணவமலம், அண்ணலை-பொருந்துதலை, கூடகிலார்-மாறுபட்டார், உடல்-உடலாலே, மூடரே-மூடாரே என்க.

(பொ-பு.) ஆணவமலத்தோடு கூடியுள்ள மயக்கத்துடன் மாறுபட்டோர்கள் மாயா தனுவாலு மந்திரதனுவாலு மறைக்கப்படார்கள். மூடார் எனற்பாலது மூடர் எனக் குறுகினின்றது.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(ப-ள்.) கொச்சை – புலர்ஸ்நாற்றம், அண்ணல் – அணுகுதல், கூடகிலார் – மனம் பொருந்தமாட்டாதார், உடல் மூடரே – சரீரத்தைப் புதைப்பரே என்க.

(பொ-பு) புலர்ஸ்நாற்றத்தைப்பொருந்திய வழுக்கு மெய்யைப் பொய்யென்ற மனங் கொள்ளமாட்டாமல் அதுவே தமது நிலைபெற்ற வுருவாக நினைத்துத் துவராடையாலே யுடம்பைச் சூழப்பட்ட பௌத்தரும்.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(ப-ள்.) கொச்சையள்-பேதைத்தன்மையையுடையமச்சியகந்நிலை-புலப்படாதின்ற அவளது கலத்தைக்கருதி, கூடு – சரீரம், அகில் ஆர் – அகில்மணம்பொருந்திய, உடன்-அத்தன்மையாளுடன், மூடரே-மொய்க்குமாறு, பண்ணினது அதுபொருதுதல் என்க.

(பொ-பு.) பேதைத்தன்மையையுடைய மச்சியகந்தியினுடைய கலத்தைக்கொள்ளும் பொருட்டு அவளது சரீரமெல்லாம் சுகந்த மொய்க்கும்படி யவளுடனே பொருந்திய பராசரனுடைய மகா வீருடவத்து சிவனைப்பொருந்தி யருச்சிக்கப்படுதலால்.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(ப-ள்.) கொச்சை – கொச்சையாகிய பராசரன்பேராலுள்ள கொச்சையென்னுந் திருப்பதி, அண்ணலை – கர்த்தாவை, கூடகிலார் – சேர்ப்பீடமாட்டார், உன்தல் – உள்ளுதல், மூடரே – அந்தகாரநிறைந்த மோகத்தையுடையவரே என்க.

(பொ-பு.) பராசரமுனிவனைப் பூசிக்கப்பட்டு அவன்பெயரால் பெயர்பெற்றுள்ள கொச்சை நகரென்னுந் திருப்பதியிலே எழுந்தருளியிராகின்ற தலைமையோனே உள்ள படி. தரிசனம்பண்ணி வழிபடமாட்டார்களது தினவு எவ்வாறிருக்குமென்னில், மழைக் காலிருளும் வெளிதென இருண்ட மயக்கத்தையுடைய ஆணவமோகமாயிருக்கும்.

கஉ. கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை.

(ப-ள்.) கழுமல – மிருதிப்பட்டகுற்றம், அமுது – செலம், பதிக்க-வீளாவிக்க, ஊள்கி – உள்ளாகீ, கட்டு – வடிவாகக்கட்டெண்டல், உரை – தேய்தல் ஏன்க.

(பொ-பு.) மிகுதிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகைநீரின் கண் பதிந்து-வினைதற்குள்ள நீயமா யந்தக் கருப்பாசையு நீரின்கண்ணே சொமுதலாகிய அவயவமாகத்தோற்றிப் பூமியின்கண் செனித்துப் பரிணமித்துப் பின்பு தேய்ந்து மரிக்கின்ற சென்மத்தையும். பரிணமித்தல் – வேறுபடுதல்.

கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை.

(ப-ன்.) கழு – கழுவப்படும், மலம்உது – ஆணவமலமு மற்றதனுடன் சுட்டிச்சொல் லப்பட்ட மாயாமலத்தையுங் கன்மமலத்தையும், பதி – பாதி, கவுணி – உள்ளே அகப் படுத்திக் கவுளிகரித்துக்கொள்ளுதல், அன்கண் – ஆத்துமாவினிடத்து, தரை – இறைவர் என்க.

(பொ-பு.) மேற்சொல்லிப்போந்த சென்மத்தையுங் கழுவி மலத்திரயங்களோயுங் கழுவாரிற்கும். (என்றபதம்பிரிக்க. இனிச்சிவனது காமமுரைக்கற்பாற்று) தனது பாதியாயிய திருவருளிடேல என்னே யகப்படுத்திக் கவுளிகரித்துக்கொண் டந்த அருள்வழியாக எனதிடத்தி லிடையறாமல் வாழுந் தன்னே யெனக்குத்தந் தடிமை குலேயாம லெக்கண்ணும் விட்டு வீளங்குங் கர்த்தர். பாதி எனற்பாலது – பதியெனக் குறுகிநின்றது.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(ப-ள்.) கழும் – மயக்கம், அலம் – அலக்கண்படுதல், அமுது – அமுதம், பதி – கர்த்தர், க – சிரசு, உணியன் – உண்ணப்பட்டவர், ட்டு – வீளக்கம், உரை-பொன் என்க.

(பொ-பு.) மாயாமயக்கத்தின்கண்ணே மயங்கிப் பெத்தமுத்தி யிரண்டுந் தெரியாமல் நின்டாடப்பட்ட மலபோதர்க்கு அமுதம்போன்று அரிதாயுள்ளவனுமாய் விட்டு வீளங்கப்படாதின்ற பொன்னுருவையுடையவனுய்ச் சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிய பிரமனது சிரக்பாலத்திலே பிச்சைகொண்டு திருவும் கருணையாளனே.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(ப-ன்.) கழுமலமுதுபதி – மேற்சொன்னபதியின்கண், கவுணியன் – கவுணியகோத்திரத்துவந்த மறையோனுகிய யான், கட்டு – காட்டு, உரை – உரைப்பாக என்க.

(பொ-பு.) திருக்கழுமலமென்னும் மூவாப் பழங்கிழமைப் பன்னிரு பெயர்பெற்ற அனந்திழுமலமாகிய பதியிடத்தக் கவுணியகோத்திரத்திலே தோன்றப்பட்ட யான் நிலே திக்கப்படும் காட்டாகிய இப்பாடலேக் மேற்சொன்னவற்றிலு மலத்திரயங்களிலும் அழுந்தாதின்ற ஒருத்தராகிலும் பலராகிலும் உரைசெய்வார் உயர்ந்தாரோயாதலா லிப்பாட்டிலே யிடைவிடாம லுரைசெய்வீராக. காட்டு என்பது – கட்டெனக் குறுகிநின்றது.

திருச்சிற்றம்பலம்.

திருவெழுகூற்றிருக்கைத் திருவுள்ளக்கருத்து.

திருச்சிற்றம்பலம்.

ஒருருவாயினே–என்றது. எல்லாத்தத்துவங்களேயும் கடந்து வாக்குமனங்களுக்கு மெட்டாமலிருந்துள்ள தற்சுருபத்தான் பஞ்சகிர்த்தியங்களேயும் நிகழ்த்தவேண்டி னை நிச்சையா லெடுத்துக்கொண்டிருக்கும் நிருமேனியை என்றவாறு.

மானுங்காரத்தீரியல்பாய்–என்றது மானென்பது–சத்தி-யாங்காரத்தீரியல்பாய் தற் சத்தியைக்கொண்டு சர்வானுக்கிரகமான பஞ்சகிர்த்தியங்களே நடத்தவேண்டிச் சத்தி சிவமாகிய வீரண்டுருவரிரேனே என்றவாறு.

ஒரு–என்றது. அந்தச்சத்திபுடனே கூடி யொன்றுகின்றனே என்றவாறு.

வீண்முதல்பூதல மொன்றியலிருசுட ரும்பர்கன்பிறவும் படைத்தளித்தழிப்ப மும் மூர்த்திகளாயினே-என்றது. ஆகாசமுதலாகப் பூமியீறாகவுள்ள பஞ்சபூதங்களேயுஞ் சந்தி ராதித்தர்களேயுந் தேவர்களேயு மற்றமுமுள்ள ஆத்மாக்களேயும் படைக்கைக்கும், காக் கைக்கும், அழிக்கைக்கும், பிரமா-விஷ்ணு – ருத்திரரென்கின்ற திரிமூர்த்திகளுமாயினே என்றவாறு.

இருவரோடொருவனுகி நின்றனே–என்றது. பிரமாவையும் விஷ்ணுவையு மிடத்தி னும் வலத்தினும் அடக்கிக்கொண்டு ஏகமாய்த் திரிமூர்த்தியாகி நின்றனே என்றவாறு.

ஓரான்மீழ் லுன்கழலிரண்டு மூப்பொழுதேத்திய நால்வர்க் கொளிகெறி காட்டினே – என்றது விருஷ்டங்களுக்கெல்லாந் தலைமையாயிருப்பதொரு வடவிருக்ஷத்தி னீழலிலே யெழுந்தருளியிருந்து சின்னமுகிய ஸ்ரீபரதங்களே யுதய-மத்தியான-மத்தமனமென்கின்ற மூன்றுகாலமும் தோத்திரஞ்செய்யாகின்ற அகஸ்தியன்-புலத்தியன்-சனகன்-சனற்குமார னென்னும் நால்வகை யிருடிகளுக்குந் தற்சுருபமான திருமேனியைக் காட்டியருளினே என்றவாறு.

நாட்டமூன்றுக்கோட்டினே–என்றது. பிரமா முதலாயிருந்துள்ள ஆத்மாக்கள் ரூப மென்னும் புலனுலே சர்வ பதார்த்தங்களேயுங் காணுதபடியாலே சந்திராதித்தர்களேயு மக்கினியையு மூன்று கண்ணுகக் கொண்டருளி அர்த்தகாரமான விருளேயோட்டினே என்றவாறு.

இருதியாவமோடொருமதிருடினே – என்றது. பெரிதாகிய கங்கையையு மொப்பில் லாத பாம்பினேயு மொருகாலத்திலுமுதிராத பிறைக்கண்ணியையுஞ் சூடியருளினே என்றவாறு.

ஒருதாளீரயின்மூவிலைச்சூல நாற்கான்மான்மறியைத்தலே யாவமேந்தினே-என்றது. பிரணவமாயிருந்துள்ள ஒரு காம்பினேயும் ஈருகின்ற கூர்மையினேயும் பிரமா–விஷ்ணு–ருத்திரனென்கிற மூன்றிலையினேயுமுடையதொரு சூலத்தினேயும் இருக்கு-யசுர்-சாமம்-அதர்வணமென்கின்ற நாலுவேதங்களேயும் நாலுகாலாயிருந்துள்ளதொரு மான்கன்றினே யும், ஸ்ரீபஞ்சாட்சரங்களேயு மஞ்சுதலேயாகவுடையதொரு மகா காகத்தினேயும் அங்தக் களிலே தரித்தருளினே என்றவாறு.

காய்த்தாரல்வாய் மூம்மதத்திருடோகமே டொருகரியிடழித்தரித்தனே-என்றது. தன் னிழலைக் காயத்தக்க கோபத்தினேயும் தொங்கும் வீரியினேயு மிரண்டு கோம்பினேயுமு டையதொரு ஒப்பில்லாத ஆனேயினுடைய பெலத்தையெல்லாங் கெடுத்து உரித்துப் போர்த்தனே என்றவாறு.

அநுபந்தம்

ஒருதனுவிருகால் வளையவாங்கி மும்புரத்தோடு நாணிலமைந்தக் கொன்று தலித்தறு மவுணரை யறுத்தனே-என்றது. ஒப்பில்லாதபொன்மலையாகிய வில்லேயிருதலேயும் வளைய வாங்கி அஸ்திரத்தைத்தொடுத்து, மூன்று புராதிகளாகிய அவுணரை யறுத்தனே எ-து.

ஐம்புலகாலா மக்தக்கரண முக்குண பிருவளி யொருங்கியவாலே ரேத்த நின்றனே என்றது. சத்த-பரிசரூப-ரச-கந்தமெனப்பட்ட ஐம்புலங்களேயும், மனம்-புத்தி-யாங்கார-சித்தமென்கின்ற அந்தக்கரணங்கள் நான்கினேயும், ராசத-தாமத-சாத்துவித மென்கின்ற மூன்று குணங்களேயும், பிராணன்-அபானன்கின்ற வீரண்டு வாயுவையும், மூலாதாரத்திலே யொடுக்கிக்கொண்டு எகாக்கிரசித்தராயிருந்துள்ள தேவர்களேத்த நின்றனே என்றவாறு.

ஒருங்கியமனத்தோ டிருபிறப்போர்ந்து மும்பொழுது குறைமுடித்து நான்மறை யோதி ஐவகைவேள்வி யமைத்தாறங்க முதலெழுத்தோதி வரன்முறை பயின்றெழு வான்றனேவளர்க்கும் பிரமபுரம்பேணினே-என்றது. ஆகாரம்-சித்திரை-பயம்-மைதுன மிவற்றில் செல்லுகின்ற மனத்தைப் பரமேசுவனுடைய ஸ்ரீபாதங்களிலே யொருங்கி முன்பு தாம் மாதாவின் உதரத்திலேபிறந்த பிறப்பும், உபாயனத்தின்பின்பு உண்டான பிறப்புமாகிய இரண்டையும் விசாரித்து மூன்றசுத்தியும், செபதர்ப்பண-அனுட்டாலு-ஒமங்களேயுமுடித்து, இருக்கு-யசுர்-சாம-அதர்வணமென்கிற நாலுவேதங்களேயுமோதி, வெபூசை-குருபூசை-மகேசுவபூசை-பிராமணபோசனம் - அநிதி-புசிப்புள்ளின்றவைத்து வேள்வியுமுடித்து, ஏதல்-ஓதுவித்தல் - வேட்டல்-வேட்பித்தல் - ஈதல்-ஏற்றல் என்னு மாறங்கங்களேயும் ஈடத்தி இலைகளுக்கு முதலாயிருந்துள்ள பிராணவத்தையு மூச்சாகித்து தேவலோகத்திலுள்ள தேவர்களுக்கு மவிகொடுத்து மழையைப் பெய்விக்கும் பிராமணரிலே பூசிக்கப்பட்ட பிரமபுரமே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனே என்றவாறு. ஆறங்கமான-மந்திரம்-வியாகரணம்-நிகண்டு-சந்தோபிதம்-நிருத்தம்-சோதிடம் இவ்வாறு வழங்கப்படுகின்ற முறைமையொன்று.

அறபத்தமுரலும் வேணுபுரம்விரும்பினே-என்றது. அறுகாலுடைய வண்டுகளிசை பாடும் பொழில்சூழ்ந்த வேணுபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளினே னென்றவாறு. வேணுபுரமென்பதற்குக்காரணம்-வேணு என்பானெருரு இந்திரனுடன் கைகலகனெனி பானெருரு வசரன் வந்து யுத்தம்பண்ண வவனுடனேபொருது அபசெயப்பட்டுப் பிரம புரமென்னு முன்சொன்ன பதியிலேவந்து பரமேசுவரன் திருவடிகளிலே தம்பிரானே யடியேனுக் கமைத்தருளின சுவர்க்கலோகத்தைக் கைமுகன் சங்கரிக்க அவனுடன் யுத் தம்பண்ணி அபசெயப்பட்டுப் போந்தேனென்று விண்ணப்பஞ்செய்து பூசிக்கையாலே தம்பிரானுங் கணேசுரனைத் திருவுளத்தடைத்து வாராய் கணேசுரனே கைமுகன் வரப்சாதமுடையவன் ஒருவராலு மவனைச் செயிக்கப்போகாது நீயுமவன் வடிவாகச் சென்று உன்வலக்கொம்பை முறித்தெறிந்து அவனைக்கொன்று வேணுவென்கின்ற இந்திரனைச் சுவர்க்கலோகத்திலே குடிபுக விட்டுவாவென்று திருவுளம்பற்ற, கணே சுரனு மவன் வடிவாகச்சென்று தன்வலக்கொம்பை முறித்தெறிந்து அவனையுங் கொன்று வேணுவென்கின்றஇந்திரனையும் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட வுண்டான தென்க.

இகலியமைத்தணர் புகலியமர்ந்தனே-என்றது. தேவர்கள் முன்பு புகலிடமென்று புகுதலால் நிருப்புகலியென்பதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனே என்றவாறு. தேவலோகமான வமராபதியைச் சூரபத்மா வென்பானெரு வசரன்வந்து சங்காரம்பண்ண அவனுடனே தேவேந்திரன் முதலாயுள்ளார் பொருது அபசெயப்பட்டு யுத்தத்தை யொழித்து இனி நமக்குப் பரமேசுவரன் ஸ்ரீபாதமொழியபுகலிடமில்லையென்று வேணு புரத்திலேவந்து பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி வேலுலுண்டான நிலைனைய

வீண்ணப்பஞ்செய்து எங்களே ரக்ஷித்தருளவேண்டுமென்னப் பரமேசுவரனும் சுப்பிர மணியரைத் திருவுளத்தடைத்து வாராம் சுப்பிரமணியனே நீ ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமாய்ப் போய்ச் சூரபத்மாவையுஞ் செயித்துத் தேவலோகத்திலே தேவர்களேயும் குடிபுகுதலிட்டுவாவென வருகைகாரணம்.

பொங்குநீர்க்கடல்சூழ் வெங்குருவினங்கினே - என்றது. மிகவுங் கோபிக்கப்பட்ட சுடல்சூழ்ந்த வெங்குருவென்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனே என்றவாறு. லோகங்களுக்கெல்லாந் தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் என்னையொழித்து கர்த் தாவண்டோவென்று மனேகெர்வஞ் சொல்லுகையாலே பரமேசுவரனும் இவன் மகா கெர்வியாயிருந்தா னிவனுடைய கெர்வத்தை யடக்கவேண்டுமென்ற திருவுளத்தடைத் தருளீத் தேவர்க்குருவாகிய அதிகாரத்தை மாற்றியருளப் பயப்பட்டுப் புலியென் கின்ற திருப்புகியிலேபோய்ப் பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி அடியேன் செய்த அப ராதங்களேப் பொறுத்தருளி யடியேனே ரட்சித்தருளவேண்டுமென்ற விண்ணப்பஞ் செய் யத் தம்பிரானும் நீ மகாவேகியா யிருந்தாயென்ற திருவுள்ளமாய் முன்புபோலே தேவர் களுக்குக் குருவாகிய வதிகாரத்தையுங் கொடுத்த காரணத்தால் வெங்குரு என்கின்ற பெயருண்டாயது.

பாணிமூவுலகும் புதையமேல்மிதித்த தோணிபுரத்துறைக்கினே-என்றது. பாணி யென்கின்ற ஜலம்பிரளயமாய்ப் பூமி-அந்தர-சுவர்க்க மூன்றலோகங்களேயும் புதைப்ப அதைச் சங்காரம்பண்ணி யருளியதின்மேலே தோணிபோலமிதந்த வெங்குருவாகிய தோணிபுரமென்றதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனே என்றவாறு.

தொலேயாவிருநிதிவாய்ந்த பூந்தாராயேய்ந்தினே-என்றது. வேண்டிடுவே வேண்டி யதுகொடுத்தும் தொலேவறச் சங்கநிதி-பத்மநிதியென்று சொல்லப்பட்ட இரண்டு நிதி களும் சூவுந்தாராயும் பூகெய்கையாலே திருப்பூந்தாராயென்பப்பட்ட திருப்பதியிலே எழுந்தருளியிருந்தனே என்றவாறு. ஒருகாலத்தும் தொலேயாத வரத்தைப் பெறுவது காரணமாகத் திருத்தோணிபுரத்திலேவந்த தம்பிரானேப் பூசித்தவளி லுங்களுக்கு வேண்டுவ தென்னென்று கேட்டருள, தம்பிரானே அடியோங்களுக்கு எல்லாக் காலங் களுந் தொலேயாமல் கொடுக்கத்தக்க வரத்தைப் பிரசாதித்தருள வேண்டுமென்று விண் ணப்பஞ்செய்ய, அவ்வாறே தொலேயாத வரத்தையுங் கொடுத்தருளி மகாசங்காரத்தினுக் தம்மூடைய ஸ்ரீ அஸ்தங்களிலே தரித்தருளும் வரப்பிரசாதமும் கொடுத்தருளினதால் பூந்தாராயெனப் பெயருண்டாயது.

வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தினே-என்றது. வரத்தைத்தருவதான புரமென் றுணரத்தக்க சிரபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனே என்றவாறு-தேவர் களும்-பிரமா-விஷ்ணுக்களுமாகக்கூடி அபிரதத்தையுண்டாக்கித் தேவர்களே யிருத்தி விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்துக்கொண்டு வருகிறவேளேயில் ராகு கேது வென் கின்ற இரண்டு பாம்பும் கூடிக்கரந்திருந்து அமிர்தபானம் பண்ணுவதாக இருப்பது கண்டு விஷ்ணுபகவான் அமிர்தம்படைத்தலருகின்ற சட்டுவத்தைக்கொண்டு தலேயறவெட்டி னேர்ந்த துடலிழந்த காகபிரண்டும் கம்முடல்தரக்கடவான் பரமேசுவரனுழிய வேறே யில்லேயென்று திருப்பூந்தாராயிலே வந்த பரமேசுவரனே நோக்கி யிரண்டு சொல்களும் பூசித்தலால் சிரபுரமென்ற பெயருண்டாயது.

ஒருமலேயெடுத்த விருதிறலரக்கன் விறல்கெடுத்தருளினே - என்றது. பெருமை யுள்ளதுகியிராயமென்னும் பேரையுடைத்தாய் உனக்கே ஆலயமாயிருப்பதொரு வெள்ளி மலேயைப் பெயர்த்த பெரிய புசபெல்லுகொண்ட ராவணனுடைய கர்வத்தைக் கெடுத் தீருளினே என்றவாறு.

புறவம்புரிந்தனே-என்றது. பிரசாபதியென்கின்ற பிரமலிருஷி – கவுதம ரிஷியை நோக்கி நீஸ்திரீபோகத்தைக் கைவிடாமலிருக்கிறவனல்லவோவென்று ஆவிணிக்கையாலே, கவுதமரிஷியும் பிரசாபதிபவனேப்பார்த்து நீ புருவென்னும் ஒரு பகியாய் நரமாமிசம் புசிப்பாயாகவென்று சபிக்கப் பிரசாபதியும் ஒரு புருவாய்ப் போய்ப் பல விடத்தினும் நரமாமிசம் புசிக்கையிலே யொருநாள் மாமிசந் தேடிச் சோலவலயத்திலே யொரு ராசா தினசரிதனு யிருக்கிறவிடத்திலே யிந்தப் புருவாகிய ரிஷியும் போய், ராசாவைப் பார்த்து எனக்கு அதிக தாகமாயிருக்கின்றது சற்று நரமாமிசம் இடவல்லேயேவென்ன, ராசாவு முனக்கு எவ்வளவு மாமிசம் வேண்டுமென்னப் புருவு முன் சரீரத்திலே ஒன்றுபாதி தரவேண்டுமென்ன, ராசாவுந் தன் சரீரத்திலே யொன்று பாதி யரிந்திடப் புருவுக்கு நிறையப்போதாமல் சர்வமாமிசத்தையு மரிந்திட்டு ராசாவுஞ் சேரர்ந்து விழ, இந்தப் புருவாகிய பகியும் நமக்குத் தன்சரீரத்தை யரிந்திட்டுப் பிரழிப்பித்த ராசரு- சரீரம்பெறும்படி யெங்களேயென்று விசாரிக்குமளவில், பரமேசுவர ஞெழிய வேறில்லையென்று சிரபரத்திலேவந்து பரமேசுவரனே நோக்கி அர்ச்சிக்கப், பரமேசுவரனுங் கிருவுளத்தடைத்தருளித் தம்பிரானே யடியேன் தாகந்தீரத் தன் சரீரத்தை யரிந்திட்ட ராசாவுக்கு முன்புபோலே புடலும் பிரசாதித்து அடியேனுக்குமிச்சாபதோஷமீக்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய, ராசாவுக்குச் சரீரமுங் கொடுத்துப் புருவுக்கு வேண்டும் வரப்பிரசாதங்களேயும் பிரசாதித்துச் சாபதோஷமுமாற்றியருளிப் புருவும் பூசிக்கையாலே புறவமென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருக்கனே என்றவாறு.

மூன்நீர்த்தியின்ரே ஞன்முகனறியாப் பண்பொடுகின்றனே – என்றது. ஆற்றுநீர்-வேற்றுநீர் - ஊற்றுநீர் என்றுசொல்லப்பட்ட மூன்நீராகிய சமுத்திரத்திலேயு தயிலாகின்ற நாராயணனும் காலமுகத்தினேயுடைய பிரமாவு மடியு முடியுங் தேடற்கரித்தாய் நின்ற பண்பினேயுடையையா யெழுந்தருளி யிருக்கனே என்றவாறு.

சண்பையமர்ந்தனே–என்றது. ஆர்வாசமகாரிஷியாசிரமத்தே கிருஷ்ணவதாரத்திலுள்ள கோபாலப்பிள்ளைகளெல்லா மிந்த இருஷியை அசங்கித்துத் தங்களிலே யொருவனைக் கெர்ப்பிணியாகப் பாவித்துச்சென்று, இவள்பெறவது ஆணேபெண்ணேவென்ற அந்த இருஷியைக் கேட்கையாலே, அவர் கோபித்து இவள் பெறுவது ஆண் மல்ல பெண்ணுமல்ல உங்கள் வயிசத்தாரையெல்லாஞ் சங்காரிக்கைக்கு ஒரு இருப்புலக்கை பிறக்கக்கடவதென்று சபிக்கையாலே, அவன் வயிற்றிலிருந்த ஒரு இருப்புலக்கை விழ அந்தச் சேதியைக் கிருஷ்ணன்கேட்டுத், தார்வாசமகாரிஷி சாபல் கேவலமல்ல வென்று அந்த இருப்புலக்கையைப் பொடியாக அரவி, அந்தப் பொடியையுச் சமுத்திரத்திலேபோட, அரவதலுக்குப்பிடிபடாத ஒரு வேப்பம்விதைப் பிரமாணமுள்ளியரிசியை ஒருமீன் விழுங்கி, ஒரு வலேக்காரன் கையிலே யகப்பட்டது. அதின்வயிற்றில் கிடந்த இரும்புடன் தன்னும்புத் தலையிலே வைத்தான் மற்றஞ் சமுத்திரத்திற் போட்ட மிரும்புப்பொடிகளெல்லாம் அலேயுடனேவந்து கரைசேர்ந்து சண்பையாக மூனேத்தக் கதிராய் நின்றவிடத்திலே, கோபாலகுமாரர்கள் வீனேயாடி வருவோமென்று இரண்டு வகையாய்ப் பிரிந்துசென்ற அந்தச் சண்பைக்கதிரைப் பிடுங்கி யெறிந்துகொண்டு அதனுலே பட்டு விழுந்தார்கள். இதைக் கிருஷ்ணன்கேட்டு இதனுலே நமக்கு மரணமாயிருக்குமென்று விசாரித்து, ஆலின்மேலே யொரு இலையிலே யோகாசனமாக ஒருப்பாத்தை மடித்து, ஒரு பாதத்தைத் தாக்கி யமர்ந்திருக்கிறவிடத்திலே, அந்தமீன் வேடன் பகிசாலங்னேத்தேடி வருகிறபோது தாக்கியபாதத்தை யொரு கேம்பருந்திருக்கிறதாகப் பாலித்து அந்த அம்பைத் தொடுத்தெய்ய, கிருஷ்ணனும்பட்டுப் பரம்பதத்தை அடைந்தான். இந்தச் சாபதோஷம் தார்வாசமகாரிஷியைச் சென்று நலிஞ்சையாலே யிச்சாபதோஷத்தை நீக்கப் பரமேசுவரனே தாக்கி அர்ச்சிக்கப் பரமேசுவரனுந் திருவுளத்தடைத்தருளு, இருஷியுங் தெண்டம்பண்ணித் தம்பிரானே அடியேனுடைய சாபத்

தாலே திருஷ்ணனுடைய வமிசத்திலுள்ள கோபாலரெல்லாருஞ் சண்பைக் கதிர்களால் சங்காரப்படுகையாலே அந்தத்தோஷ மடியேனைவந்து நலியாதபடி திருவுளத்தடைத் தருளி ரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் தூர்வாசமகாரிஷிக்குச் சண்பைச் சாபத்தினுள்ள தோஷத்தைநீக்கிச் சண்பைமுனியென்கின்ற காமத்தையுந் தரித்தருளிச் சண்பையென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனை என்றவாறு.

ஐயுறுமமணரு மற்வகைத்தேரரு மூழியுமுணராக் காழியமர்ந்தனை – என்றது. வேதாகமபுராண சாத்திரங்களிலுள்ள பலத்தையில்லையென்று ஐயமுற்றிருக்கின்ற அமணரும், கைப்புப் -புளிப்புக்-கார்ப்புத்-துவர்ப்பு-கூர்ப்புத்-தித்திப்பு-என்கின்ற அறுவகை ரசங்களேபு முச்சிக்குமுன்னே புசிக்கிறதே பொருளென்றிருக்கிற புத்தரு மூழிகாலத்தே மறியாமல், மிகுவுங் காளிதமான விஷத்தையுடைய காளியென்கின்ற காகம் பூசிக்கையாலே சோழியென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனை என்றவாறு.

எச்சனேழிசையோன் கொச்சையை மெச்சினை-என்றது. குரல்–துத்தம்–கைக்கிளை-உழை–யிளி–விளரி-தாரம்–என்பதேழிசை. குரலாவது – சங்கத்தொனி, துத்தமாவது-ஆண்மீன்பிளிறு, கைக்கிளையாவது-குறிஞ்சியின்குரல், உழையாவது-மானின்குரல், இளியாவது-மயிலின்குரல், விளரியாவது-கடலோசை, தாரமாவது-காடையின் குரல், என்னும் நாதங்களேயுமெச்சினை, மகத்தான இருடிகள் எல்லாரினும் விருத்தராயுள்ள பராசரப் பிரமரிஷியானவர் மற்ற ரிஷிகளெல்லாரையும் நோக்கி நீங்கள் சமுசாரிகளாழிய வீரதத்தை யனுஷ்டிப்பாரில்லையென்று அவர்களைத் தனிக்க, அவர்களும் நீ மச்சகந்தியைப்புணர்ந்து மச்சகந்தமு முண்டாப்பற்றிவீடாம லனுபவிப்பாயென்று சபிக்கையாலே, அந்தச் சாபத்தின்படிபோய் மச்சகந்தியைப்புணர்ந்து அந்தத் தீங்கந்த மில்லாதபடி தூர்க்கந்தத்தை விலக்கி வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய தம்பிரானுமவனென்னை

அனேய தன்மையை யாதலின்–என்றது. அத்தன்மையாகிய வியல்பினை யுடை யாதலின் என்றவாறு.

நின்னே நிஞையவல்லவரில்லை நீணிலத்தே–என்றது. நின்னை நினைக்க வல்லார்களுக் குப் பிறப்பில்லை என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

உரை முற்றியது.

திருவெழுகூற்றிருக்கையில்-வெங்குருவினங்கினே என்பதற்கு தேவகுருவினால் பூசிக்கப்பட்டதென்று உரையிலிருக்கின்றது. கோழிப்புராணத்தில் - வெங்குருவான அத்தியாய்த்தில், அசுரகுரு பூசித்ததாக சொல்லப்பட்டின்றது. இங்ஙன மிருக்கின்றதை யால் உரைகாரர் புராணத்தின்படி யெழுதியிருந்தது பிற்கால மொன்றைப்பார்த் தொன்றெழுதினவர்களால் பிறழ்த்துவிட்டதோ யாதோ தெரியவில்லை.